
சாண்டில்யன்
பாரதி பதிப்பகம்
கடல் வேந்தன்

முதற் பதிப்பு : டிசம்பர், 1984
இரண்டாம் பதிப்பு : டிசம்பர், 1985
மூன்றாம் பதிப்பு : மார்ச், 1989
நான்காம் பதிப்பு : மே, 1993
Copyrights with the author

விலை: ரூ. 50-00

பதிப்புரை

பேராசிரியர் சாண்டில்யன் அவர்களால் எழுதப்பட்ட 'கடல் வேந்தன்' என்ற இந்த சரித்திர நாவல் 'தாய்' வார இதழில் தொடராக வெளிவந்தது.

சரித்திர நாவல்கள் எழுதுவதில் சாண்டில்யன் அவர்கள் வல்லாசர் என்று சொன்னால் மிகையாகாது. இந்த நாவல் பத்திரிகையில் வெளிவரும் சமயம் நான் வெளியிட வேண்டும் என்று கேட்டேன். மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டார்கள். என்னிடம் மிகுந்த அன்பு கொண்ட பேராசிரியர் அவர்கட்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தி. நகர்
27-12-84

தங்கள்
பழ. சிதம்பரம்
நிர்வாகி, பாரதி பதிப்பகம்

எஸ்.பி.எம். பைன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-600 005

முன்னுரை

'பதிற்றுப்பத்து' சங்க நூலை வைத்து கடற்கதை ஒன்றை எழுத வேண்டுமென்று நீண்ட நாட்களாக நண்பர்கள் பலர் என்னைத் தூண்டி வந்தார்கள். அந்தத் தூண்டலின் விளைவுதான் "கடல் வேந்தன்" கதை.

பதிற்றுப்பத்து நூலின் ஐந்தாம் பத்தை இயற்றிய பரணர்பெருமானின் இனிய கவிதையும் என்னைக் கவர்ந்தது. அதில் காணப்பட்ட கடற்பிறகோட்டிய செங்குட்டுவனும் என்னைக் கவர்ந்தான். பரணர் கவிதைக்கு அடிமையாகி தனது புதல்வனான குட்டுவன் சேரலையே பரணருக்கு பரிசலாகத் தந்துவிட்ட அந்த மாமன்னன் குணமும் என் மனத்தை ஈர்க்கவே, செங்குட்டுவனை வைத்தே கதை எழுதிவிட முடிவு செய்தேன். அதற்காக பதிற்றுப்பத்துக்கு புலியூர்க் கேசிகன் எழுதிய தெளிவுரையையும் படித்தேன். பேராசிரியர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் எழுதிய "பண்டை நாளைச் சேரமன்னர்கள்" என்ற வரலாற்று நூலையும் படித்தேன். இக்கதைக்கு வேண்டிய மூலதனம் இந்த இரண்டு நூல்களிலுமே கிடைத்துவிட்டன.

யவனரும் வடவரும் கூடி, பெரியதொரு கடற்படை கொண்டு போருக்கு வந்த வரலாற்றை ஔவை துரைசாமிப் பிள்ளையவர்கள் மிகத் தெளிவாக 'பண்டை நாளைச் சேர மன்னர்களின் வரலாற்'றில் 148ஆம் பக்கத்திலிருந்து 153ஆம் பக்கம் வரையில் விவரித்திருக்கிறார். பதிற்றுப்பத்து அகநானூறு பாடல்களையும் மேற்கோள் காட்டியிருக்கிறார்.

பதிற்றுப்பத்து 45, 46, 48 பாடல்களில் செங்குட்டுவன் கடலிற் கொண்ட வெற்றியும் அவன் வீரமும் சொல்லப்படுகிறது. 45ஆவது பாட்டில், "மேகங்கள் ஈர்த்ததாலே குறையாமலும், ஆற்று நீர் மிகுதியாகப் பாய்வதாலே கரை கடவாமலும் உள்ள கடலிடத்து வேல் படைக்கலங்களைச் சுழலுத்தி எதிரிக் கலங்களை எதிர்த்து அழித்தோர் உனக்கு, முன்னுமில்லை இன்றுமில்லை"யென பரணர்

செங்குட்டுவனைப் பாராட்டுகிறார். 46ஆவது பாட்டு "உடை நுரைப்பரப்பின் படுகடல் ஓட்டிய வெல்புகழ்க் குட்டுவன்" என்று பாராட்டுகிறது. 48 ஆவது பாட்டு "கடலொடு உழந்த பனித்துறைப் பரதவ" என்று சிலாகிக்கிறது.

தவிர முசிறியில் யவனர், அராபியர் குடியிருப்புகள் இருந்ததற்கு வரலாற்றுச் சான்றுகள் இருக்கின்றன.

இந்தக் குறிப்புகளை வைத்தே கடல் வேந்தன் கதை புனையப்பட்டிருக்கிறது. சுவைக்காக சில சலுகைகளை எடுத்துக் கொண்டிருக்கிறேன். தந்தையால் பரணர்க்கு தானமாகக் கொடுக்கப்பட்ட குட்டுவன்சேரலின் சினம், அதனால் அவன் கள்வனானது, பிறகு தந்தைக்கும் நாட்டுக்கும் உதவியது, இவை பதிற்றுப் பத்தில் கிடையாது. கடல்வேந்தனில் உண்டு. தந்தைக்கு இணையான வீரனாக அவன் சித்திரிக்கப்பட்டிருக்கிறான். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?

இந்தக் கதையில் அழும்பில்வேள், வில்லவன்கோதை* கவிஞர் பெருமான் சேரதூதன், பரணர் இவர்கள் எல்லாரும் வரலாற்றுப் பாத்திரங்கள். நிலக்கள்ளி, நற்கிள்ளி, கிளேஸியஸ், யூசப் முதலானோர் கற்பனைப் பாத்திரங்கள்.

இந்தக் கதையை மிகுந்த ஆர்வத்துடன் எழுதியிருக்கிறேன். கூடியவரையில் எந்தச் சுவையையும் குறைக்காமலே கதையைத் தொகுத்திருக்கிறேன். காதல் கட்டங்கள், போர்க்கட்டங்கள் எல்லாமே அந்தக் காலத்துக் சூழ்நிலைக்கு முரண்பாடாக இல்லாமல் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இதுவரை எனக்கு ஆதரவு தந்துவரும் தமிழ் மக்கள் இதற்கும் ஆதரவு தருவார்களென்று நிச்சயமாக நம்புகிறேன்.

'கடல் வேந்தன்' கதையை தொடர்கதையாக வெளியிட்ட 'தாய்' பத்திரிகை ஆசிரியர் திரு. வலம்புரிஜான அவர்களுக்கும், இதைப் புதுக வடிவில் வெளியிட முன் வந்த பாரதி பதிப்பக உரிமையாளர் திரு. பழ. சிதம்பரம் அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகும்.

—சாண்டில்யன்

1. அழையாமல் வந்தவன்

"இரும்பணை திரங்கப் பெரும் பெயர் ஒளிப்ப குன்று வர கூரச்சுடர் சினம் திகழ் அருவி அற்ற பெருவறல் காலையும் அருஞ்செலல் பேராற்று" என்று கவிஞர் பெருமான் பரணர் பதிற்றுப்பத்தில் பாடியபடி, பணையாகிய மூங்கில் காயவும், பெரிதாகப் பெய்ய வேண்டிய மழை ஒளிந்து கொள்ளவும் வறட்சியடைந்து, ஞாயிறு தனது சுடரால் சினம் கொண்டு பூமியைப் பொசுக்கிய காலத்தும் பெரும் நீர்ச் செலவை, அதாவது வெள்ளத்தை உடைய சேரநாட்டுப் பேரியாறு இரண்டாகப் பிரிந்து கடலில் கலக்கும் சிறப்பை எண்ணியும், அப்படிப் பிரிந்த இரு பிரிவில் ஒன்றான சுள்ளியாறு கடலில் பாயுமிடத்திலிருந்த முசிறியெனும் துறைமுக நகரின் பெருமையை நினைத்தும், அந்த நகரத்துக்குத் திடீரென ஏற்பட்ட சிறுமையைச் சிந்தித்தும், சித்தம் கலங்கிய சேரன் வருமானத்துறை அமைச்சர் அழும்பில்வேள் தமது எதிரே நின்ற தூதுவனான *சஞ்சயனை நோக்கி "சஞ்சயா! எத்தனையோ அரசர்களிடம் தூது சென்று பல மர்மங்களை அவிழ்த்திருக்கும் உனக்கு இந்த மர்மத்தை ஏன் அவிழ்க்க முடியவில்லை" என்று கேட்டார்.

சஞ்சலமென்பதைச் சிறிதளவும் அன்றுவரை அறியாதவனும், மாறு வேடங்களைப் புனைவதில் இணையற்றவனென்று பிரசித்தி அடைந்தவனுமான சஞ்சயன், வருமானத் துறை அமைச்சரின் கனைகளைச் சந்திக்க முடியாத

---

* சேரன் செங்குட்டுவனுடைய தூதுவர் சஞ்சயன் நீலன் எனும் இருவர்—அபிதான சிந்தாமணி பழைய பதிப்பு, பக்கம்—741

தால் அவர்கள் இருவரும் நின்றிருந்த முசிறித்துறை அரண்மனையின் மோட்டுவளைச் சித்திரங்களில் கண்களை ஓட்டினான். அவன் தனக்குப் பதில் சொல்லாமல் தாம் இருந்த உப்பரிகைக் கூடத்தின் கூரையை ஆராய்வதைக் கண்டதால் வெகுண்ட அமைச்சர் "சஞ்சயா! ஓவியத்தை ரசிக்க இது சமயமல்ல. நமது மானம் போய்க் கொண்டிருக்கிறது. கேட்டதற்கு பதில் சொல்" என்று வினவினார், சினம் சிறிது அதிகரித்ததைச் சொற்களின் ஒலியால் விளக்கி.

சஞ்சயன் மெல்ல அமைச்சர் பெருமானை நோக்கி, "இதில் சொல்ல வேண்டியது ஏதுமில்லை. இந்த மர்மம் என் சக்தியையும் மீறியதாக இருக்கிறது" என்றான்.

"உனது நண்பன் சகதூதன் நீலனை அனுப்பிப் பார்ப்பதுதானே?" என்று கேட்டார் அழும்பில்வேள்.

சஞ்சயன் சோகப் பெருமூச்சு விட்டான். "அவன் முயன்று கையை விரித்த பின்புதான் நான் சென்றேன் இந்த மர்மத்தை உடைக்க. ஆனால் என்னால் முடியவில்லை. அவன் எப்படி வருகிறான், எப்படிப் போகிறான், எங்கு போகிறான், என்பது பெரும் பயமாயிருக்கிறது" என்று சொன்னான் சேரதூதன் பெருமூச்சின் ஊடே.

அமைச்சர் அந்த உப்பரிகைக் கூடத்தில் சிறிது நேரம் உலாவிவிட்டு, அதன் ஒரு கோடிக்குச் சென்று உப்பரிகைத் தாழ்வாரத்தில் நின்று சற்று தூரத்தே தெரிந்த சுள்ளியாற்று சங்கமத் துறையைக் கவனித்து விட்டு. "சஞ்சயா! இப்படி வா" என்று சஞ்சயனையும் அழைத்தார். அவர் அழைப்பை ஏற்று அவரிருந்த இடத்தை அடைந்த சஞ்சயனிடம், "அதோ சுள்ளியாற்று சங்கமத் துறையைப்பார்! யவன நாட்டு மரக்கலங்கள் எத்தனை நிற்கின்றன? நமது நாட்டு மரக்கலங்களும், சோழ நாட்டு மரக்கலங்களும் துறைமுகத்தை எப்படி அடைத்துக் கொண்டிருக்கின்றன?" என்று கேட்டு, தமது கையால் துறைமுகத்தைச் சுட்டியும் காட்டினார்.

அன்று காலையில் முசிறித் துறைமுகத்தில் சுள்ளியாற்று சங்கமத்துறை, யாரையும் மயக்கும் யவன மங்கையரைப் போலக் காட்சியளித்தது. பெரிய நாவாய்கள் சிறிது தள்ளியே நின்றிருந்ததால் படகுகளின் மூலம் வணிகப் பொருள்கள் கரையை நோக்கி வந்து கொண்டிருந்தன. படகுகளைச் செலுத்தி வந்த யவனரும், தமிழக மாலுமிகளும் அரபுநாட்டு நீக்ரோக்களுமாகச் சேர்ந்து பலநிற மலர்களையுடைய கதம்பம் போல் காட்சியளித்தது. சங்கமத்துறை, எட்ட நின்ற நாவாய்கள் மீதும் நெருங்கி வந்த படகுகள் மீதும் சீறி எழுந்து தாக்கிய கடல் அலைகளின் உக்கிரம், மாற்றார் சேரநாட்டில் எச்சரிக்கையாயிருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது. படகுகள் வந்த இடத்தில் நின்றிருந்த கடற்கரைக் காவலர் அவற்றில் வந்த வணிகப் பொருள்களை இறக்கி எடுத்துச் செல்லும் மற்ற நாட்டாருக்கு சுங்கச்சாவடியிருக்கும் இடத்தைக் காட்டி அங்கு போகும்படி சாடையும்காட்டினர். இது தவிர கடற்கரையோரமாகப் பெரும் காவலும் இருந்தது. வீரர்கள் எங்கும் உலாவியும் கண்காணித்துக் கொண்டும் இருந்தனர்.

இவற்றையெல்லாம் கண்ட சஞ்சயன், "கடற்கரைக் காவல் பலமாகத்தானிருக்கிறது" என்று சொன்னான்.

"நேற்றுமுதல் காவலை இரட்டித்திருக்கிறேன். மரக்கலத் தலைவர்களையும் எச்சரித்திருக்கிறேன்" என்றார் அமைச்சர்.

"பலமான ஏற்பாடு" என்றான் சஞ்சயன்.

அழும்பில்வேள் முகத்தில் கடுமையைப் படரவிட்டுக் கொண்டு, "மண்ணாங்கட்டி ஏற்பாடு. இத்தனை தடையையும் அவன் கடந்து விடுகிறான். இதுவரை அவன் அடித்த கொள்ளையில் நமக்கு வருமான நஷ்டம் இரண்டு லட்சம்

ரோமாபுரி தங்க நாணயங்கள்" என்று சுட்டிக் காட்டினார். அவர் குரலில் ஏமாற்றம், வெறுப்பு, எரிச்சல் ஆகிய உணர்ச்சிகள் கலந்து ஒலித்தன.

"பெருநஷ்டம்" என்று ஒப்புக்கொண்டான் சஞ்சயன்.

"திருட்டுப் போவது எங்கு தெரியுமா?" என்று வினவினார் அமைச்சர்.

"அமைச்சர் சொன்னால் தெரிந்து கொள்கிறேன்" சஞ்சயன் அதிகப் பணிவைக் காட்டினான்.

பணிவு, அமைச்சருக்குத் திருப்தி அளிக்கவில்லை. "சொன்னால் தெரிந்து கொண்டுவிடுவாயா?" என்று ஏளனமாகக் கேட்டார்.

"சொன்னாலும் தெரியாத அளவுக்கு அடியவன் புத்தி மழுங்கிவிடவில்லை" என்று சஞ்சயனும் தனது சாமர்த்தியத்தைக் காட்டினான்.

அமைச்சர் சிறிது நேரம் மௌனம் சாதித்தார். "சுங்கச்சாவடியில் கிடைக்கும் பணம் எப்படி பொக்கிஷத்துக்குப் போகிறது?" என்று கேட்டார் சில விநாடிகளுக்குப் பிறகு.

"இரும்புப் பட்டயங்கள் அடிக்கப்பட்ட பெரிய மரப் பெட்டியில் பலமாக மூன்று பூட்டுகள் பூட்டி முத்திரை வைத்து, காவலருடன் போகிறது" என்றார் அமைச்சர்.

"ஆம்! தெரியும்."

"உனக்குத் தெரியாத ஒன்றிருக்கிறது."

"என்ன அமைச்சரே?"

"பெட்டி பூட்டியபடி முத்திரைகள் கலையாதபடி வந்து சேருகின்றன. உள்ளே பணம்மட்டும் இருப்பதில்லை. பெட்டி காலியாக இருக்கிறது."

இதைக் கேட்ட சஞ்சயன் வாயைப் பிளந்தான். "விந்தையாக இருக்கிறதே" என்று வியப்பு எல்லைமீறிய குரலில் பேசினான்.

"இதில் மாயாஜாலம் ஏதுமில்லை. பெட்டி எங்கோ வழியில் மாற்றப்படுகிறது" என்ற அமைச்சர், "எப்படி எங்கே மாற்றப்படுகிறது என்பது புரியவில்லை" என்று சொன்னார். "இந்த மர்மத்தை நானே உடைக்கத் தீர்மானித்து விட்டேன். இன்றிரவு முதல் ஜாமம் முடியும் சமயத்தில் இங்கு வா. இருவரும் போவோம்" என்று கூறினார்.

அத்துடன் விடைபெற்றுக் கொண்ட சஞ்சயன் அன்றிரவு முதல் ஜாமத்தின் இறுதியில் உப்பரிகைக் கூடத்துக் கதவைத் தட்டினான். கதவைத் திறந்தாள் ஒரு கட்டழகி. அவளை அதுவரை பார்த்திராத சஞ்சயன் "பெண்ணே! நீ யார்?" என்று வினவினான்.

அவள் பதிலேதும் சொல்லாமல் திரும்பி நடந்தாள். அவளைப் பின்பற்றிச் சென்ற சஞ்சயன் அவள் நடை அழகைப் பார்த்து பிரமித்தான். அவள் அழகிய கால்கள் தரையில் சிறிதும் ஒலி கிளப்பாமல் பரவிச் சென்றன. அதனால் அசைந்த அவள் பின்னெழில்கள் யாவரையும் உன்மத்தம் கொள்ளச் செய்யும் நிலையைச் சிருஷ்டித்தன. சிறுத்த இடைக்குக் கீழே அதிக பருமனில்லாமல் அளவோடு பருத்து, அளவோடு எழுந்திருந்த பின்னெழில்களின் அசைவு மிக லேசாயிருந்தது. பருவம் அவற்றைக் கெட்டிப் படுத்தியிருந்ததால், இடைக்கு மேலே எழுந்த அழகிய உடலின் முன்புறத்தில் முளைத்திருந்த மொட்டுகள் இரண்டும் அவள் மேலாடையை மீற முயன்று முடியாமல் தவித்தன. அவள் குழந்தை முகத்தில் பருவத்தின் எழிலெல்

லாம் விரவிக் கிடந்தது. கன்னங்களில் ஒரு புஷ்டி, கண்களின் மயக்கம், கூர்மை இரண்டு, தலையில் கருங்குழலின் அடர்த்தி, வளைந்த புருவங்களின் பூர்ண கருமை இவை அவளை தேவமங்கையாக ஆக்கியிருந்தன.

ஒய்யார நடை நடந்து உள்ளே சென்ற அவள் அமைச்சரை, "அப்பா!" என்றழைத்ததும் திடுக்கிட்டான் சஞ்சயன். அமைச்சருக்கு ஒரு பெண்ணிருப்பதை அன்று வரையில் அறியாத சஞ்சயன், காலையில் போலவே தாழ்வறையில் நின்றிருந்த அமைச்சரை நெருங்கி தலைதாழ்த்தி வணங்கினான்.

"சஞ்சயா! இவள் எனது இரண்டாவது மகள். இத்தனை நாள் சோழநாட்டில் என் மைத்துனன் வீட்டிலிருந்தாள்" என்று விளக்கிவிட்டு, "நிலக்கள்ளி! கதவைத் தாளிடு" என்றார்.

அவள் தாளிட்டுத் திரும்பியதும் அமைச்சர் தூதுவனை நோக்கி, "சஞ்சயா! கடல்வேந்தன் என்று சொல்லிக் கொண்டு நம்மைக் கொள்ளையடித்து வரும் இந்த அயோக்கியனை நாம் சீக்கிரம் பிடிக்காவிட்டால் சேர நாட்டுப் பொக்கிஷம் வெகுசீக்கிரம் துடைத்துப் போகும்!" என்றார்.

"பிடித்துவிடுவோம்" என்று பேருக்குச் சொன்னான் சஞ்சயன்.

"சாதாரண காரியமல்ல சஞ்சயா! மிகத் துணிவும் சாமர்த்தியமும் உள்ள ஒரு கொள்ளைக்காரனை நாம்பிடிக்க முயலுகிறோம் என்பதை நினைவில் வைத்துக் கொள். இது வரை திறமையான நமது காவற்படைக்கே கடுக்காய் கொடுத்து வருபவன் மிகுந்த விவேகியாயிருக்க வேண்டும்" என்றார் அமைச்சர்.

"ஆம்!" சஞ்சயன் ஏதோ பதில் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொன்னான்.

"ஆம். ஆம். என்ன ஆம்? அவனாக வந்து நமது கையில் விழமாட்டான்" என்று வெறுப்புடன் சொன்னார் அமைச்சர்.

அந்தச் சமயத்தில் உப்பரிகைக் கூடத்தின் கதவு தட்டப்படவே அமைச்சர் மகள் சென்று கதவைத் திறந்தாள். உள்ளே வந்த காவலன் ஒருவன் அமைச்சருக்குத் தலை வணங்கி "யாரோ ஒருவர் தங்களை அவசரமாகக் காண வேண்டுமாம்" என்று அறிவித்தான்.

"நாளைக் காலையில் வரச்சொல்" என்று அமைச்சர் வாசகத்தை முடிக்கு முன்பே, காவலன் சொன்னான் "நானே சொன்னேன், கேட்க மறுக்கிறார்" என்று.

"யாரது?" என்று வினவினார் அமைச்சர்.

அதிர்ச்சி தரும் பதிலைச் சொன்னான் காவலன். "பெயர் கடல் வேந்தனாம்" என்று அறிவித்தான். அவன் அறிவித்த அதே நேரத்தில் அவர்கள் பிடிக்கத் திட்டம் போட்டுக் கொண்டிருந்த மனிதனே உள்ளே நுழைந்தான்.

2. அத்தாட்சி

எந்தக் கொள்ளைக்காரனைப் பிடிக்கத்திட்டம் போட்டு அதற்காகப் புலனறிய சஞ்சயனுடன் சமுத்திரக்கரைக்குக் கிளம்பினாரோ, அந்தக் கொள்ளைக்காரன் தானே வலுவாகத் தம்மிடம் வந்ததை எண்ணியதால் அதிர்ச்சியின் அடிமையாக விளங்கினார் அமைச்சர் அழும்பில்வேள். அவர் அதிர்ச்சியைவிடப் பன்மடங்கு அதிக அதிர்ச்சியை அடைந்த சோ தூதனான சஞ்சயன், வருபவன் உண்மையாகக் கடல் வேந்தன் தானா அல்லது தங்களை ஏமாற்ற அவன் அனுப்பிய ஏதாவது ஒரு போலியா என்ற சந்தேகத்தில் ஈடுபட்டாலும் ஏதும் செய்ய இயலாதவனாய்ச் சிலையென நின்றுவிட்டான் பல விநாடிகள். இத்தனைக்கும் அமைச்சரின் மகளான நிலக்கள்ளி மட்டும் எந்தவித அதிர்ச்சிக்கோ, அச்சத்துக்கோ ஆளாகாமல் வந்தவனை எடைபோடுவதில் முனைந்து, அவன் மீது தனது அழகிய பெருவிழிகளைக் காட்டினாள்.

கடல்வேந்தனென்று தன்னை அறிவித்துவிட்டு உப்பரிகை அறையின் வாயிலைத் தாண்டி நடந்து வந்த அந்த மனிதன் எந்தவித சலனத்தையும் முகத்தில் காட்டாமலும், நடையில் சிறிதும் தளர்ச்சியைக் காட்டாமலும் சொந்த வீட்டில் நுழைபவன் போல் உள்ளே நடந்து வந்தான். அவனை ஊன்றிக் கவனித்த நிலக்கள்ளி அவன் நடையில் ஒரு திடமும், படைவீரர் அணிவகுப்பு நடை போல் ஒரு சீரும் இருப்பதையும், அவன் நடைக்குத் தகுந்தபடி அவன் குறுகிய இடை லேசாக நெளிந்ததையும் பார்த்தாள். அவன் இடை பெண்களின் இடையைப்போல் சிறுத்திருந்தாலும் நடையில் பெண்மை ஏதுமில்லையென்பதையும், அவன் நடை ஆண்மை மிக்கதாயிருந்ததையும், பாதங்கள் மிக உறுதியாகத் தரையில் ஊன்றியதையும்

பார்த்து, பெரிய வீரனொருவன் தங்கள் இல்லத்துள் நுழைந்து விட்டதை உணர்ந்து கொண்டாள். அவன் இடைக்கு மேலே தெரிந்த நெடிய உருவத்தின் மார்புப் பகுதி அதிகப் பருமனில்லாவிட்டாலும், இளைத்த நிலையிலும் எஃகு போல் கடினமாக இருந்ததையும், சற்றே நீண்டுவிட்ட கழுத்தின் மீதிருந்த தலையும், அதிக வலுவைக் காட்டியதையும் கண்டு அந்த மனிதனிடம் தனது தந்தையும் சஞ்சயனும் எச்சரிக்கையாயிருக்க வேண்டிய அவசியத்தையும் உணர்ந்தாள்.

இத்தனைக்கும் அந்த மனிதன் முகத்தில் அழகு என்பது அணுவளவுமில்லையென்பதோடு அது விகாரத்துக்கு ஓர் எடுத்துக் காட்டு என்பதையும் கவனித்தாள். முகத்தில் இரண்டு மூன்று இடங்களில் கோடுகளாக மடிந்திருந்த சதையும், தடித்த உதடுகளில் காணப்பட்ட குரூரமும் அவன் இதயமற்றவனென்பதற்கு சான்றாக இருந்ததையும் பார்த்த மந்திரி மகள், அவன் குரூரத்தின் சொரூபம் என்று தீர்மானித்தாள். அவன் முகத்தின் பொதுத் தோற்றத்திலிருந்து அவன் வாலிபனல்லவென்றும் நாற்பத்தி ஐந்து வயதைத் தாண்டியிருக்க வேண்டுமென்றும் முடிவுக்குவந்த நிலக்கள்ளி, அவன் கண்களின் கூர்மையையும் அவற்றில் பளிச்சிட்ட கடுமையையும் கண்டு அவன் எந்தப் பஞ்சமா பாதகத்துக்கும் அஞ்ச மாட்டான் என்று நினைக்கவே செய்தாள். அவன் புருவங்களும், கண் இமைகளும், வலிய கறுத்த உதடுகளின் மீதிருந்த மீசையும், செம்பட்டை நிறமாக இருந்ததையும் அதிகமாக முளைக்காமல் கத்தரிந்து விடப்பட்டிருந்த தலைக் குழலில் செம்பட்டையுடன் சிறிது நரையும் தலைகாட்டியதையும் கவனித்து, ஏற்கெனவே இருந்த கொடுமைத் தோற்றத்தை அவை அதிகப்படுத்தியதையும் உணர்ந்தாலும் நிலக்கள்ளி வெறுப்பைக் காட்டினாள் இல்லை. அவன் வந்ததும் அவன் உட்கார ஒரு மஞ்சத்தைச் சிறிது இழுத்துப் போட்டாள்.

அமைச்சரும் சஞ்சயனும் திக்பிரமையிலிருந்தபடியால் அவர்கள் ஏதும் பேசவில்லை. கடல் வேந்தனென்று சொல்லிக் கொண்டு வந்தவனின் கொடுமை முகத்தைப் பார்த்து அமைச்சர் சிறிது அச்சம் அடைந்தாலும் அதை வெளிக்குக் காட்டவில்லை. பல இடங்களுக்குத் தூது சென்று பல அபாயங்களைச் சந்தித்திருந்த சஞ்சயன் திக்பிரமை அடைந்தாலும் அச்சத்தை அடையாததால், வந்தவன் யாராயிருக்கும் என்ற ஆராய்ச்சியில் இறங்கினான். அவர்கள் மூவருடைய மனநிலையையும் வந்தவன் புரிந்து கொண்டிருக்க வேண்டும். நிலக்கள்ளி இழுத்து விட்ட மஞ்சத்தில் உட்காரு முன்பு அமைச்சருக்குத் தலை வணங்கிய அந்த மனிதன், "தாங்கள் நிற்கும்போது நான் உட்காருவது நாகரிகமல்ல" என்று கூறினான்.

அவன் நாகரிகத்தைப் பற்றிப் பேசியது அமைச்சர் பெருமானுக்கு மிக விசித்திரமாயிருக்கவே, "வேந்தர் முன்பு அமைச்சர் நிற்பதுதான் பண்பாடு" என்று மெதுவாக தைரியத்தை வரவழைத்துக் கொண்டு பேசினார்.

அந்த மனிதன் தனது சிவந்த இமைகளை மேலே தூக்கினான் ஒரு முறை. பிறகு நகைத்துவிட்டுச் சொன்னான், "அது நில வேந்தர் நாகரிகம். கடலின் வழி வேறு. அங்கு சகலமும் சமம். நிலத்தின் பாகுபாடுகளை, வித்தியாசங்களை நீர் அழித்து விடுகிறது" என்று சொல்லி விட்டு உட்காரவும் செய்த அந்த மனிதன், தனது கால்களை நன்றாக நீட்டிக் கொண்டு இடைக் கச்சையைச் சிறிது திருப்பி அதிலிருந்த வாளைத் தனக்கு முன்னால்கொண்டு வந்து, அதைத் தரையில் ஊன்றி அதன் பிடியை இரு கைகளாலும் பிடித்த வண்ணம் "நமது நாட்டில் பெண்களுக்கு புத்தியும் அதிகம். பண்பாடும் அதிகம்" என்று கூறிவிட்டு, "அமைச்சர் மகளே! உட்கார ஆசனமளித்ததற்கு நன்றி" என்று நிலக்கள்ளியை நோக்கித் தலையையும் தாழ்த்தினான்.

நிலக்கள்ளி தமது மகளென்பது அவனுக்கு எப்படித் தெரியுமென்று திகைத்த அமைச்சர், அவனுக்கு மேலும் என்ன தெரியுமென்பதை அறிய சஞ்சயனைக் காட்டி "இவர்...." என்று தொடங்கினார்.

அவர் தொடங்கிய வாசகத்தைக் கடல்வேந்தனே முடித்தான். "சஞ்சயன்—சேரமன்னனின் இரு தூதுவர்களில் ஒருவர்" என்று.

"இவள்...." எனது மகளைக் காட்டினார் அமைச்சர்.

"நிலக்கள்ளி, தங்கள் இரண்டாவது மகள், அறிவில் நிகரற்றவள். பரணரிடம் தமிழ் பயின்றவள். கவிதை இயற்றும் வலுவுடையவள்" என்று விடுவிடுவெனச் சொற்களை உதிர்த்தான் அந்த மனிதன்.

அமைச்சர் முகத்தில் வியப்பும், பயமும் ஒருங்கே விரிந்தன. "இவளை முன்பே உங்களுக்குத் தெரியுமா?" என்று வினவினார் உணர்ச்சி மிகுந்த குரலில்.

"இவள் பெயர் சேரநாட்டில் பிரசித்தி. இவளைப் பார்க்காதவரும், பார்த்து பிரமிக்காதவரும் வெகு சிலர். இவளை நீங்கள் அதிகமாக வெளியில் உலாவ விடுவதில்லையென்று கேள்வி. ஆனால் அமைச்சரே சந்திரனைச் சிறை செய்ய முடியுமா?" என்று வினவினான் அந்த மனிதன்.

இதைக் கேட்டதும் அமைச்சரின் வியப்பு அதிகப்பட்டதென்றால் சஞ்சயன் வியப்பு மிக அதிகமாயிற்று. "கடல் வேந்தரே!" என்று அழைத்தான் சஞ்சயன்.

"என்ன தூதுவரே?" என்று கடல் வேந்தன் வினவினான்

"நீர் கடல்வேந்தரென்று சொல்கிறீர்", என்று இழுத்தான் சஞ்சயன்.

"ஆம்." திட்டமாக வந்தது பதில்.

"அதற்கு அத்தாட்சி என்ன? மூன்றாவது மனிதன் ஏன் இந்த வேஷத்தைப் போடக்கூடாது?" என்று வினவினார் சஞ்சயன்.

இதைக் கேட்டுச் சிறிதும் சஞ்சலப்படவில்லை கடல் வேந்தன். "நியாயமான கேள்வி. அவசியமான கேள்வியும் கூட. இப்பொழுது நாடு இருக்கும் நிலையில் யாரும் எந்தப் பெயரை வைத்துக் கொள்ளலாம். பெயர் மாற்றம், ஆள் மாற்றம், ஏமாற்றம் எதிலும் ஈடுபடலாம்" என்று சொன்ன கடல்வேந்தன், சஞ்சயனையும், அமைச்சரையும் நோக்குவதைக் கைவிட்டு, எட்ட நின்று இந்த நாடகத்தைக் கவனித்துக் கொண்டிருந்த நிலக்கள்ளியை நோக்கி "நிலக்கள்ளி! இப்படி வா" என்று மிகச் சொந்தமாக அழைத்தான்.

அவள் அவனை நோக்கி நகருமுன்பாக அமைச்சரே நகர்ந்தார். 'கடல் வேந்தரே! வயது வந்த ஒரு பெண்ணை நீர் அழைப்பது பண்பாட்டுக்கு உகந்ததல்ல. சொல்ல வேண்டியதை என்னிடம் சொல்லுங்கள்" என்று கூறிய வண்ணம் அவனருகே வந்தார்.

கத்தியின் பிடியைப் பிடித்திருந்த கடல்வேந்தன் கைகள் கத்தியின் அடியை லேசாகத் தரையில் தேய்த்தன. "அமைச்சரே! அருகில் வர வேண்டாம். உமது மகள் வரட்டும்" என்றான். அவன் குரல் தரையில் இரும்பைக் கீறிய சப்தம் போல் காதில் விழுந்தது.

"அவளிடம் சொல்லக் கூடியதை என்னிடம் சொன்னாலென்ன?" என்று வினவினார் அமைச்சர்.

"உமது மகளிடம் நான் ஏதும் சொல்லப் போவதில்லை" என்று கூறிய கடல்வேந்தன் "நிலக்கள்ளி! இப்படி வா" என்று அழைத்தான் கடுமையான குரலில்.

நிலக்கள்ளியின் முகத்தில் திடீரென்று ஏதோ சந்தேகம் தோன்றினாலும் அதை அவள் வெளிக்குக் காட்டாமல் அவனருகில் வரவே செய்தாள். "கையைக் காட்டு பெண்ணே" என்றான் கடல் வேந்தன்.

அவள் தனது மலர்க் கைகள் இரண்டையும் பிரித்தாள். அதைச் சில விநாடிகள் உற்று நோக்கிய கடல் வேந்தன் தனது கச்சையிலிருந்து சிறு சீலை முடிப்பொன்றை எடுத்து அதன் வாய்க் கயிற்றை அவிழ்த்து அதைத் தலை கீழாகப் பிடித்து அதிலிருந்து சில நாணயங்களை அவள் கையில் கொட்டினான். சலசலவென்று உதிர்ந்த தங்க நாணயங்களைக் கண்டு பிரமித்த நிலக்கள்ளியை நோக்கி, "இவற்றில் ஒன்றை உன் தந்தையிடம் கொடு. மீதியை உனக்கு வைத்துக்கொள்" என்றான்.

விளக்கொளியில் பளபளத்த நாணயங்களை எட்ட இருந்து பார்த்ததாலேயே பிரமிப்பின் எல்லையை எய்திய அமைச்சர், கடல்வேந்தன் சொற்படி மகள் கொடுத்த நாணயத்தைக் கையில் வாங்கி இருமுறை திருப்பித் திருப்பிப் பார்த்ததும் விவரணத்துக்கும் அப்பாற்பட்ட உணர்ச்சிகளில் சிக்கிக்கொண்டார். "இனிச் சந்தேகமில்லை" என்று இரைந்தும் சொன்னார். அவர் குரல் லேசாக நடுங்கியது உணர்ச்சிப் பெருக்கால்.

அதுவரை வாளாவிருந்த சஞ்சயன் "எது சந்தேகமில்லை?" என்று வினவினான்.

"இவர்தான் கடல் வேந்தனென்பது நீ அத்தாட்சி கேட்டாய். இதோ இருக்கிறது அத்தாட்சி" என்றார் அமைச்சர் கையிலிருந்த நாணயத்தைக் காட்டி.

"அது எப்படி அத்தாட்சி?" என்று கேட்டான் சஞ்சயன்.

"திருட்டுப் போன பெட்டிகளில் இருந்த நாணயங்களில் இது ஒன்று..." என்றார் அமைச்சர்.

"மற்றும் சில நிலக்கள்ளியின் மலர்க் கரங்களில் இருக்கின்றன" என்றான் கடல்வேந்தன்.

புரிந்துகொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்த அமைச்சர் "கடல்வேந்தனே! கொள்ளையடித்த பெட்டிகளிரண்டையும் கொடுத்து விடு. உனக்கு அரசரிடம் மன்னிப்பு வாங்கித் தருகிறேன்" என்று ஆசை காட்டினார்.

கடல்வேந்தன் குரூரமாகப் புன்னகை செய்து "மன்னிப்பு யார் கேட்டது?" என்றான்.

அமைச்சர் தாம் நின்ற இடத்திலிருந்து சில அடிகள் நகர்ந்து "உனக்கு வேண்டியது மன்னிப்பா, சிறையா? சிந்தித்துச் சொல்" என்றார். இம்முறை அவர் குரல் திடமுடன் ஒலித்தது.

"இரண்டும் தேவையில்லை" என்ற கடல்வேந்தன், "ஓர் அனுமதி தேவை" என்றான்.

"என்ன அனுமதி?" என்று கேட்டார் அமைச்சர்.

"உமது மகளை அழைத்துச் செல்ல அனுமதி" என்று கடல்வேந்தன் சொன்னான்.

அதைக் கேட்டதும் சினத்தின் எல்லைக்குச் சென்ற சேரன் அமைச்சர் "யாரங்கே? இவனைச் சிறைசெய்யுங்கள்" என்று கூறி, கைகளைத் தட்டினார் பலமாக.

அடுத்த விநாடி அதிர்ச்சியடைந்தார். காவலர் யாரும் தலை காட்டவில்லை. ஏற்கெனவே கடல்வேந்தனை உள்ளே விட்ட காவலனும் மறைந்தான்.

கடல் வேந்தன் நிதானமாக எழுந்து நின்றான். "அமைச்சரே! உமது காவலர் உதவிக்கு வரும் நிலையில் இல்லை. ஆகையால் சொல்வதைக் கேளும். உமது மகளை அவள் நன்மையை முன்னிட்டே அழைத்துப் போகிறேன்" என்று கூறிவிட்டு "வா வா நிலக்கள்ளி" என்று அவளை அழைத்தான். அவள் வர இஷ்டப்படாததால் அவள் கையைப் பிடித்துச் சரசரவென்று இழுத்துக் கொண்டு செல்ல முயன்றான்.

அமைச்சரும், சஞ்சயனும் ஒரே சமயத்தில் தங்கள் வாட்களை உருவி அவனைத் தடுத்தனர். இரு வாட்களின் நுனிகளும் தன்னை நோக்கி மெல்ல வருவதைக் கண்ட கடல் வேந்தன் பெரிதாக நகைத்தான் ஒருமுறை. அந்த நகைப்பைத் தொடர்ந்து அவனது வாள் மின்னல் வேகத்தில் எழுந்து இருபக்கங்களில் சுழன்றது. அமைச்சர் வாளும் சஞ்சயன் வாளும் உப்பரிகை சாளர வழியாக வெளியே பறந்தன. அடுத்த விநாடி உப்பரிகை அறை விளக்கு அணைந்தது. எங்கும் அந்தகாரம் சூழ்ந்தது. அந்த இருட்டுக்குக் கண்கள் சரிப்படும் வரை பார்வையை இழந்த அமைச்சரும் சஞ்சயனும் நிதானித்தனர். கண்கள் சிறிது நிதானப்பட்டதும் சஞ்சயன் ஓடி இன்னொரு விளக்குடன் திரும்பி வந்தவன் திகைத்து நின்றான்.

அறையில் அமைச்சர் உட்பட யாருமே இல்லை. அவர்கள் மூவரும் போன சுவடும் தெரியவில்லை. ஆனால் கடல்வேந்தன் காட்டிய அத்தாட்சி, அதாவது பொன் நாணயம் ஒன்று மட்டும் தரையில் விழுந்து கிடந்தது,

□

3. மரக்கட்டிலில் மந்திரி மகள்

மந்திரி மாளிகையின் உப்பரிகையில் பக்கத்து அறைக்குச் சென்று கையிலொரு விளக்கை ஏந்தி வந்த சேர தூதுவனான சஞ்சயன், தாங்கள் ஏற்கெனவே இருந்த அறையில் யாருமில்லாததையும், மந்திரி உட்பட மூவரும் அந்தர்த்தானமாகி விட்டதையும் கண்டு முதலில் வியப்பின் வசப்பட்டானென்றாலும், கீழே கிடந்த ரோமாபுரி பொன் நாணயத்தைக் கண்டதும் பெரும் அதிர்ச்சிக்கும் சினத்துக்கும் ஆட்பட்டான். கடல் வேந்தனென்ற கொள்ளைக்காரன் தன்னை ஏளனம் செய்வதற்காகவே அந்தப் பொன் நாணயத்தை எறிந்து விட்டுப் போயிருக்கிறானென்பதை யும், அந்த நாணயத்தைக் கொண்டு தன்னைத் துப்பறியும் படி அறைகூவல் விடுத்திருக்கிறானென்பதையும் உணர்ந்து கொண்டதால் விளக்கைக் கீழே வைத்துவிட்டு அந்த நாணயத்தைக் கையில் எடுத்து இருமுறை திருப்பிப் பார்த்தான். ஆனால் இரு முறையிலும் ஏதும் விளங் காதது மட்டுமின்றி அந்த நாணயத்திலிருந்த ரோமாபுரி சர்வாதிகாரியின் உருவம் தன்னைப் பார்த்து நகைப்பதை யும் கண்டதால் சினம் தலைக்கேற அதை வெளியே விட்டு எறிந்துவிடலாமாவென்று சிந்தித்தவன் அது தேவை யில்லையென்று முடிவுக்கு வந்து நாணயத்தைத் தனது கச்சையில் பத்திரப்படுத்திக் கொண்டான். தான் பக்கத்து அறைக்குச் சென்று திரும்பிய குறுகிய காலத்தில் மந்திரி யையும் அவர் மகளையும் கடத்திச் செல்ல அந்தக் கொள்ளைக்காரனால் எப்படி முடிந்தது என்ற சிந்தனை யில் இறங்கி, படியில் இறங்கிச் செல்லும் கதவையும், மற்றும் இரு கோடிகளிலிருந்த அறைகளையும் சோதிக்க முற்பட்ட சேரதூதுவன், படிக்குச் செல்லும் அறைக் கதவின் இடுக்கில் ஒரு சிறு சீலை தொங்குவதைப் பார்த்து

அதை எடுத்துப் பிரித்தான். அதில் வில்லும் அம்பும் பொருந்திய சேரநாட்டு முத்திரை பொறிக்கப்பட்டிருந்த தையும் மேலே இரு வரிகள் எழுதப்பட்டிருந்ததையும் பார்த்த சஞ்சயன் "என்ன அயோக்கியன்!" என்று கடல் வேந்தனைத்தூற்றவும் செய்தான். "நிலக்கள்ளியையும் அவள் தந்தையையும் சந்திக்க கீழே இடப்பட்டுள்ள முத்திரை பொறித்த இல்லத்துக்குத் தனியாக வரவும். துணைக்கு யாரையும் அழைத்து வராதே" என்ற வரிகள் சீலை யில் எழுதப்பட்டிருந்தன.

அந்த இரண்டு வரிகளைப் படித்ததும் பெரிதும் திகிலடைந்தான் சஞ்சயன். அவன் குறித்த இல்லம் முகத் துவாரத்துக்கு அருகே சுள்ளியாற்றின் அக்கரையிலிருக்கிற தென்பதையும், அது கொள்ளைக்காரர் முகாமாக முசிறி வாசிகளால் கருதப்படுகிறதென்பதையும் அறிந்தே இருந்த சஞ்சயன், "பெரிய அபக்கியாதி உள்ள அந்த இல்லத் துக்கு மந்திரியையும் மந்திரி மகளையும் இவன் ஏன் அழைத்துச் செல்கிறான்?" என்று கடல் வேந்தனைச் சபிக்கவும் செய்தான்.

அத்துடன் அந்த பெரிய மாளிகையின் காவலர் யாரும் இந்த அமர்க்களத்தில் தலைகாட்டாதிருந்தது அவனுக்கு வியப்பாயிருக்கவே, "இந்த சனியன்கள் எங்கே சென்று விட்டனர்?" என்றும் சீறி மாடிப்படிகளில் தடதடவென்று இறங்கிச் சென்று கீழ்த்தளத்திலிருந்த காவற் கூடத்தை அடைந்ததும் திகைத்து நின்றான். காவற்கூடத்தின் கதவு பூட்டப்பட்டிருந்ததால் அதைத் திறக்க தனது கச்சையி லிருந்த குறுவாளை எடுத்து அதன் நுனியால் பூட்டை நெம்பி உடைத்து கதவை காலால் உதைத்துத் திறந்தான். உள்ளே கண்ட காட்சி பெரும் பிரமிப்பைத் தந்தது சேர தூதுவனுக்கு.

பத்து காவல் வீரர்கள் ஒரு கயிற்றைக் கொண்டு கட்டி உருட்டப்பட்டிருந்தனர். அவர்கள் வாயில் துணியும் நன்றாகத் திணிக்கப்பட்டிருந்தது. உள்ளே நுழைந்த சஞ்சயனை, கட்டுண்ட காவலர் பரிதாபக் கண்களால் பார்த்தனர். கட்டுகளை அவிழ்த்து விடும்படி சைகையும் செய்தனர். அவர்களைப் பற்றிய வெறுப்பு சஞ்சயனுக்கு அதிகமாயிருந்தாலும் அந்த சமயத்தில் தன் வெறுப்பையோ சினத்தையோ காட்டுவதில் அர்த்தமில்லையென்பதை உணர்ந்தபடியால், அவன் மிகத்துரிதமாக அவர்களின் கட்டுகளை அவிழ்த்துவிட்டான். கைகள் அவிழ்க்கப்பட்டதுமே கால் கட்டுகளையும், எல்லாரது உடலுக்கும் குறுக்கே ஓடிய கட்டையும் பிரித்துக் கொண்டதன்றி வாயிலிருந்த துணியையும் எடுத்துவிட்ட காவலர்கள், கை, கால்களில் சுரணை வரவழைத்துக் கொள்ள அவயவங்களை உதறிக் கொண்டனர். அவர்கள் தலைவன் இடுப்பையும் இருமுறை வளைத்து சொடுக்கு எடுத்துக் கொண்டான்.

மிகுந்த ஏளனத்துடன் அவர்களை நோக்கிய சஞ்சயன் "என்ன தேகப்பயிற்சி செய்து கொள்கிறீர்களா?" என்று வினவினான்.

அந்தக் கேள்வியால் அவர்கள் யாரும் வெட்கப்பட்டதாகத் தெரியவில்லை. அவர்கள் தலைவன் துணிவாகவே சஞ்சயனை நோக்கி "தலைவரே! தாங்கள் வராதிருந்தால் எங்கள் கதி என்னவாயிருக்குமோ தெரியவில்லை" என்று கூறியபடி மீண்டும் ஒரு முறை இடுப்பையும் வளைத்து தன்னைச் சரி செய்து கொண்டான்.

சஞ்சயன் எரிச்சல் அதிகமாகவே, "இன்னொரு முறை இடுப்பை வளைத்தால் அந்த இடுப்பை நானே முறித்துப் போடுவேன்" என்று சினந்து கூறினான் காவலர் தலைவனை நோக்கி.

"நன்று சொன்னீர்கள் தூதுவரே! இடுப்பை முறித்தால்கூட இதமாயிருக்கும் போல் தெரிகிறது. அந்த அயோக்கியன் என்னை என்ன செய்து விட்டானென்பது தெரியவில்லை" என்றான் காவலர் தலைவன்.

சஞ்சயன் மேற்கொண்டு உரையாடலை வளர்த்த விரும்பவில்லை. "என்ன நடந்தது?" என்று ஒரு கேள்வியை மட்டும் கேட்டான்.

"நான் இந்த அறையில் காவல் செய்து கொண்டிருந்த போது நீண்ட வாளைத் தரித்த ஒருவன் வந்தான், அதோ அந்த சாளரத்தின் மூலம். சாளரம் பின்னாலிருப்பதால் அவன் வந்ததை நான் கவனிக்கவில்லை. அவன் பூனை போல் சந்தடி செய்யாமல் சாளரத்திலிருந்து குதித்தபோது தான் நான் திரும்பினேன். அடுத்த விநாடி அவன் வாளின் நுனி என் கண்களின் முன்பு லேசாக அசைந்தது. "கண் வேண்டுமென்றால் கத்தாதே" என்று எச்சரிக்கை செய்து எனது கச்சையிலிருந்த வாளைத் தனது இடக் கையால் உருவிக் கொண்டான். அடுத்து உத்தரவிட்டான். 'இந்த மாளிகையின் உப்பரிகைப் படிகளைக் காவல் புரியும் ஆட்களை அழை' என்று. அப்படி உத்தரவிட்டவன், நான் வாயைத் திறக்கு முன்பாக அறைக் கதவின் தாளைத் திறந்து அதன் மறைவில் நின்று கொண்டான். என்னையும் வரும்படி சைகை செய்து என்னை தனக்கு முன்னால் நிறுத்தி 'கொஞ்சம் விஷமம் செய்தாலும் பிணமாகிவிடுவாய், ஆட்களைக் கூப்பிடு' என்றான். நான் ஆட்களை அழைக்க, அவர்கள் உள்ளேவந்ததும் அவன் கதவை மூடி என் நெஞ்சில் வாளின் நுனியை ஊன்றிய வண்ணம் 'அவர்கள் வாட்களை கீழே எறிந்து விடச்சொல்' என்றான். அவன் இஷ்டப்படி செய்வதைத் தவிர வேறு வழியில்லாததால் அப்படியே செய்தோம். அடுத்து என்னை ஒரு கயிற்றை எடுத்து ஆட்களைப்படுக்கச் சொல்லி பிணைக்கச் செய்தான். பிறகு அவர்களோடு என்னையும் பிணைத்து விறகுக்

கட்டு மாதிரி செய்து வாட்களை எங்கள் கைகளுக்கு எட்டா வண்ணம் காலால் உதைத்து எறிந்தான் ஒரு மூலைக்கு. பிறகு எனது மாற்று உடையை எடுத்துக் கிழித்து எங்கள் வாய்களில் துணியை அடைத்தான். பிறகு எனது கச்சையி லிருந்து அறைச் சாவியை எடுத்துக்கொண்டு கதவையும் பூட்டிச் சென்றான். நடந்தது இதுதான்" என்று காவலர் தலைவன் கதையைச் சொன்னான்.

சஞ்சயன் சிறிது சிந்தனையில் இறங்கி, "வந்தவனுக்கு இந்த மாளிகையின் காவல் முறை நன்றாகத் தெரிந்திருக் கிறது" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். இருப் பினும் ஒன்றும் விளங்கவில்லை சஞ்சயனுக்கு. "மந்திரியும் அவர் மகளும் சிறிதும் அரவம் செய்யாமல் அந்தக் கொள்ளைக்காரனுடன் எப்படிச் சென்றார்கள்?" என்று தன்னை வினவிக் கொண்டாலும் மேலும் காலம் கடத்த இஷ்டமில்லாமல், கடல்வேந்தன் கட்டளைப்படி சுள்ளி யாற்றை நோக்கிச் சென்றான். அப்புறம் நடந்த நிகழ்ச்சிகள் அவனுக்கு மிக விசித்திரமாயிருந்தன. ஆற்றங் கரைப் படகுத் துறையில் பல படகுகள் இருந்தபோதிலும் படகுக்காரர்கள் பலரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். ஒரே ஒரு படகுக்காரன் மட்டும் சிறு விளக்கு ஒன்றை வைத்துக் கொண்டு எதையோ படித்துக் கொண்டிருந்தான். அவனை அணுகிய சஞ்சயன், டேய்! என்ன படிக்கிறாய்?" என்று அதட்டலாகக் கேட்டவுடன் லேசாகத் தலையைத் தூக்கிய படகோட்டி புன்முறுவல் செய்து "சேர நாட்டில் படிப்புக்கும் தடை உண்டா?" என்று அலட்சியமாகக் கேட்டான்.

"கேட்டதற்கு பதில் சொல்" என்ற சஞ்சயனை நோக்கி கண்களை உயர்த்திய படகோட்டி, "உங்களுக்கு இலக்கிய அறிவு உண்டா?" என்று வினவினான்.

"அதைப்பற்றி இப்பொழுதென்ன?" என்ற சஞ்சயன் குரல் சீற்றத்துடன் ஒலித்தது.

"கவிதை படிக்கிறேன். மகா கவி பரணர் இயற்றியது" என்றான் படகோட்டி.

சேரமன்னனின் இணைபிரியா நண்பரும் சங்க கால சிறப்புக் கவியுமான பரணர் பேரைச் சொன்னவுடன் சிறிது தலைதாழ்த்தினான் சஞ்சயன். சொன்னவன் பட கோட்டியாயிருந்தாலும்கூட, அடுத்து கேட்டான். "பட கோட்டி! கவிதையைப் பிறகு படிக்கலாம். படகை விடுகிறாயா?" என்று.

"ஆகா விடுகிறேன்" என்ற படகோட்டி, "தூதுவரே! ரோமாபுரி பொன் நாணயம் கொண்டு வந்திருக்கிறீரா?" என்று கேள்வி கேட்டான்.

பேரதிர்ச்சி அடைந்த சஞ்சயன் அவன் கடல்வேந்தன் ஆளாயிருக்க வேண்டுமென்று தீர்மானித்து, அவனை சிறை செய்தாலென்ன என்று முதலில் நினைத்தாலும் அந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டு கச்சையிலிருந்த பொன் நாணயத்தை எடுத்து படகோட்டியிடம் நீட்டினான்.

படகோட்டி அந்த நாணயத்தை வாங்கி தனது கச்சையில் செருகிக் கொண்டு படகுக்கு அருகே நீரில் நின்று கொண்டிருந்த சஞ்சயனை நோக்கி, "தூதுவரே! ஏறுங்கள் படகில்" என்றான்.

சஞ்சயன் சந்தேகத்துடன் கேட்டான். "எங்கே போக?" என்று.

"விவ்லம்பு இலச்சினை இல்லத்திற்கு" என்று சகஜ மாகச் சொன்னான் படகோட்டி, சஞ்சயன் படகில் ஏறியதும் துடுப்புகளைக் கொண்டு படகைத் துழாவி செலுத்தினான்.

அன்றிரவு சுள்ளியாற்று சங்கமத் துறையில் அலைகள் அடுகமிருந்தால் உள்ளே புகுந்துவிட்ட கடல்நீர் சற்று அதிகமாகவே இருந்தது. காற்றும் விர்ரென்று பயங்கர மாக வீசி, அதில் படகு ஆடினாலும், படகோட்டி படகை அலட்சியமாக சற்று தூரம் சங்கமத்துறையை நோக்கிச் செலுத்தி பிறகு அதை எதிர்க் கரைக்குத் திருப்பினான். எதிர்க்கரையில் இருந்த பல இல்லங்களில் ஒன்றைக்கூட ஒட்டாமல் தன்னந்தனியே நின்ற வில்லம்பு இலச்சினை இல்லத்தின் முகப்பில் ஒரே ஒரு தனி விளக்கு மட்டும் சுடர் விட்டுக் கொண்டிருந்தது. அந்த இல்லத்தின் முகப்பில் காவல் ஏதுமில்லாததை கவனித்த சஞ்சயன், "இந்தத் திருடனுக்கு துணிவு மிக அதிகம். இவன் இங்கிருப்பது முன்னமே தெரிந்திருந்தால் அவனை எனது வீரர்களைக் கொண்டு என்றோ பிடித்திருப்பேனே! இவனிருப்பதை ஏன் என்று ஒற்றர் சொல்லவில்லை?" என்று வினா எழுப்பிய வண்ணம் படகு கரையோரமாக நின்றதும் படகிலிருந்து தரையில் குதித்தான். அவன் இறங்கியதும் அவனுடன் இறங்கி படகைத் தளையில் பிணைத்த அந்தப் படகோட்டி மீண்டும் படகில் உட்கார்ந்து பரணரின் கவிதையைப் படிக்கத் தொடங்கினான்.

அந்தப் படகோட்டியின் அலட்சியமும் அவன் எதைப் பற்றியும் சிந்திக்காமல் கவிதை படிக்கத் தொடங்கியதை யும் கண்டதால் மிகுந்த எரிச்சலுக்குள்ளானாலும், ஏதும் செய்ய இயலாத சஞ்சயன் எதிரே தெரிந்த கொள்ளையர் இல்லத்தை நோக்கி நடந்தான். அவன் அந்த இல்லத் தின் படிகளில் ஏறியதும் அதன் பெருவாயில் தானாகவே திறந்தது. கதவைத் திறந்த முரடன் ஒருவன் சஞ்சய னுக்குத் தலைவணங்கி "வேந்தர் அறை கோடியிலிருக் கிறது" என்று பணிவுடன் தெரிவிக்க, அந்த அறையை நோக்கி நடந்தான் சஞ்சயன். அந்த அறைக்கதவு திறந்தே இருந்ததால் உள்ளிருந்த விளக்கு வெளிச்சம் பட்டையாக விழுந்திருந்தது. அந்த வெளிச்சத்திற்கு

சற்று முன்னதாகவே நின்று உள்ளே எட்டிப் பார்த் தான் சஞ்சயன். அங்கிருந்த பஞ்சணையற்ற மரக்கட்டிலில் நிலக்கள்ளி சுரணையற்றுப் படுத்துக் கிடந்தாள். அவளை உற்று நோக்கிக் கொண்டு நின்றான் கடல்வேந்தன். அவனுக்குப் பக்கத்தில் கவலை தோய்ந்த முகத்துடன் அழும்பில்வேள் நின்றிருந்தார். அந்தக் கட்டிலின் மறு புறத்தில் நிலக்கள்ளியின் தலைமாட்டில் மற்றொரு மனிதர் நின்றிருந்தார் தலைகுனிந்த வண்ணம். அவர் சிறிது நேரத்திற்குப் பிறகு தலை நிமிர்ந்த போது அறை விளக் கின் வெளிச்சம் அவர் முகத்தின் மீது விழவே சஞ்சயன் மிதமிஞ்சிய வியப்புக்கும் அதிர்ச்சிக்கும் உள்ளாகி பிரமை பிடித்து சிலையென நின்றுவிட்டான் பல விநாடிகள். "இவரா! இவருக்கும் கொள்ளைக்காரருடன் பழக்கமா? அரசன் உப்பைத் தின்று..." என்று நினைப்பை ஓட்டியவன் மேலும் நினைக்கவும் சக்தியற்று கல்லாய்ச் சமைந்து விட்டான்.

□

4. அவன் என் மகன்!

வில் அம்பு இலச்சினை இல்லத்தின் கோடி அறை வாயிலுக்குச் சென்றதும்—உள்ளே நுழையாமல் வெளியிலேயே மறைந்து நின்ற சஞ்சயன், உள்ளிருந்த மரக்கட்டிலில் சுரணையற்றுப் படுத்திருந்த மந்திரி மகளின் தலைமாட்டில் நின்றிருந்த மனிதனைக் கண்டதும் பெரும் வியப்புக்கும், அச்சத்துக்கும், ஏன் வெறுப்புக்குங்கூட இலக்கானான் என்றால், அதற்குக் காரணம் இருக்கவே செய்தது. குனிந்த தலையை நிமிர்த்திய அந்த மனிதனின் முகத்தின் மீது விளக்கு வெளிச்சம் விழுந்ததும், அவர் சேர மன்னனின் மதிப்புக்கும், அன்புக்கும் உரிய பெரும் புலவர் பரணர் என்பதைக் கண்ட சஞ்சயன், "மன்னரின் உப்பைத் தின்ற இவருமா இந்தக் கொள்ளைக்காரனுடன் சேர்ந்திருக்கிறார்?" என்று தன்னுள் ஒரு வினாவையும் எழுப்பிக் கொண்டான்.

கொள்ளைக்காரன் வீட்டிலிருந்த அந்த சமயத்திலும் பரணர் எந்த மாறறுடையோ, வேடத்தையோ தரிக்கவில்லை. மன்னர் கொலுவுக்குச் செல்லும்போது அணியும் அரசாங்க உடையையே அணிந்திருந்தார். இமயத்தில் இலச்சினை பொறித்த செங்குட்டுவன் காசியிலிருந்து கொணர்ந்த பெரும் சரிகையுடைய காசிப்பட்டு பெரிதாக அவர் தலையில் முண்டாசாகச் சுற்றப்பட்டு பார்ப்பதற்கு மன்னர்களின் கிரீடம் போலவே காணப்பட்டது. அந்தச் சரிகை வட்டாவுக்குக் கீழே விரிந்த புலவரின் வயோதிகத்திலும் அழகு வாய்ந்த சீரிய நுதலின் குறுக்கே பட்டை தீட்டப்பட்ட முப்புரி சந்தனக் கீற்றுகளும், இடையே பெரிதாக வைக்கப்பட்ட கன்னிகோயில் குங்குமமும், அவரது வதனகம்பீரத்தைச் சற்று எடுப்பாகவே காட்டின. அதிகமாகவே

வளையா விட்டாலும் இரண்டொரு நரைகள் மட்டும் காணப்பட்ட நீண்ட புருவங்களும், கீழேயிருந்த அகன்ற பெரிய கண்களும், புருவங்களைச் சுளித்தபோது சந்தனக் கோடுகளை வெட்டி குறுக்கே விழுந்த திரைக்கோடுகள் இரண்டும் அவர் சீரிய சிந்தனைக்கு அத்தாட்சியாக விளங்கின. அவர் செவ்விய பரந்த உதடுகளும், அகன்ற வாயும் இரைந்து கவிபாடவே ஏற்பட்டன போல் தெரிந்தன. கைதேர்ந்த இயற்கை சிற்பியால் நன்றாக வழித்து விடப்பட்ட முகம் விளக்கொளியில் சிவப்பழமென ஜொலித்தது. இத்தனைக்கும் அந்த முகத்தில் சந்துஷ்டியை அடியோடு காணோம். துன்பத்தின் சாயையே அதிகமாகப் படர்ந்திருந்தது.

நீண்ட நேரம் நிலக்கள்ளியை உற்றுப் பார்த்துக் கொண்டு நின்ற பரணர், மெல்லத் தலைநிமிர்ந்து கடல் வேந்தன் மீது தமது கண்களை நாட்டி, "வேந்தா! இம்முறை நீ அத்து மீறி விட்டாய்" என்று சொன்னார் கடுமையான குரலில்.

கடல் வேந்தனும் தலைநிமிர்ந்து பரணரை நோக்கினான். "வேறு வழி ஏதுமில்லையே தந்தையே!" என்று சொல்லவும் செய்தான்.

பரணர் கடல் வேந்தனை சற்றுக் கடுமையாகவே பார்த்தார். "நிலக்கள்ளியைத் தூக்கி வந்ததைப் பற்றி உன்னைக் குறை கூறவில்லை" என்று சொற்களிலும் கடுமையைக் காட்டினார் கவி.

வெளியே மறைவில் நின்றிருந்த சேர தூதுவன் சஞ்சயன் "பெண்களைத் தூக்க ஆள் வைத்திருக்கிறாரா புலவர்?" என்று உள்ளூரச் சீறினான். "இந்தப் புலவரை எதற்காக மதிக்கிறார் மன்னர்?" என்றும் தன்னைக் கேட்டுக் கொண்டான்.

அப்படி அவன் சுய விசாரணை செய்து கொண்டிருக்கையில் அவனுக்கு அழைப்பு வந்தது புலவரிடமிருந்து.

"சஞ்சயா! இங்கு எந்த ரகசியமும் கிடையாது. உள்ளே தைரியமாக வரலாம்" என்று புலவர் அழைத்தார்.

சஞ்சயன் தனது மறைவிடத்திலிருந்து அறைக்குள் சென்று, "புலவரே!" என்று சிற்றத்துடன் அழைத்தான்.

"என்ன சஞ்சயா?" என்று ஏதும் நடக்காதது போல் வினவினார் பரணர்.

சஞ்சயன் உஷ்ணமாக விழிகளை பரணர் மீது நிலைக்க விட்டான். "தங்களை...." என்று ஏதோ சொல்ல முயன்றான்.

"சிறை செய்யத் துடிக்கிறாய்" என்று பரணரே வாசகத்தை முடித்தார்.

சஞ்சயன் குழம்பினான். "தாங்கள்..." என்று மீண்டும் தொடங்கவே "ராஜத் துரோகியென்று முடிவுகட்டியிருக்கிறாய்" என்று அவனது இரண்டாவது எண்ணத்துக்கும் சொற்களால் உருக்கொடுத்தார் புலவர்.

தான் நினைத்ததையெல்லாம் முன்கூட்டியே சொன்ன பரணருக்கு எந்த பதிலையும் சொல்ல முடியாத சஞ்சயன் "பரணரே! இன்று நீங்கள் கடல் வேந்தன் உடனிருக்கும் தைரியத்தில் எதை வேண்டுமானாலும் சொல்லலாம்: ஆனால் தனித்து நாம் சந்திக்கும் நேரமும்வரும்" என்று சொற்களில் வேகத்தைக் காட்டினான்.

பரணரின் பெருத்த உதடுகளில் புன்முறுவல் தவழ்ந்தது. "தனியாக யாராவது அகப்பட்டுக் கொண்டாலன்றி உன்னால் எதுவும் செய்யமுடியாது" என்றார் புன்முறுவலின் ஊடே.

"யார் சொன்னது அப்படி?" என்று முதலில் சொன்னதை மறந்து பேசினான் சஞ்சயன்.

"நீதானே சொன்னாய்" என்ற பரணர், "அதுவும் உன்னால் முடியாது சஞ்சயா! இந்த கடல் வேந்தன் மந்திரி மாளிகைக்குத் தனியாகத்தானே வந்தான். அவனை ஏன் பிடிக்கவில்லை?" என்றும் கேட்டார்.

சஞ்சயன் அதற்கு பதில் சொல்ல முடியாமல் தவித்தான். பரணரே பேசினார். "சஞ்சயா! கடல் வேந்தனைப் போன்ற வீரனைக் கண்டால் நடுங்குகிறாய். என்னைப் போல் ஆயுதமற்ற புலவர்கள் தனியாக சிக்கிக் கொண்டால் பிய்த்துவிடுவதாக மார் தட்டுகிறாய். சஞ்சயா! வீரர்களின் முறையல்ல இது" என்று.

அடுத்து அவர் சஞ்சயனை கவனிக்கவில்லை. மரக்கட்டிலில் கிடந்த நிலக்கள்ளியைக் கவனித்தார். "வேந்தா! அவளை முகர வைத்த துணியில் மயக்கப் பச்சிலை ரசத்தில் எத்தனை துளிகளைத் தெளித்திருந்தாய்?" என்று வினவினார்.

"பத்துத் துளிகள்" என்றான் கடல்வேந்தன்.

"சிறிது அதிகம், நான்கு துளிகளுக்கு மேல் ஊற்றியிருக்கக் கூடாது" என்றார் பரணர்.

"அங்கு போய் ஊற்றவில்லை, இங்கிருந்தே ஊற்றிச் சென்றேன். கச்சையில் திணித்தாலும் காற்றில் சில துளிகள் போய்விடுமென நினைத்தேன்" என்று சமாதானம் சொன்னான் கடல் வேந்தன்.

"அந்தப் பச்சிலைத் துளிகள் சீக்கிரத்தில் துணியிலிருந்து விலகாது. சரி அதனால் பாதகமில்லை" என்ற பரணர் "இவள் விழிக்க இன்னும் இரண்டு ஜாமம் பிடிக்கும். அதாவது காலையில்தான் விழிப்பாள்" என்று கூறி

"அதுவரை இவளை யாராவது பக்கத்திலிருந்து பார்த்துக் கொள்ள வேண்டும்" என்றும் சொன்னார்.

"நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றார் அழும்பில் வேள்.

பரணர் சிறிது சிந்தித்தார். "உங்களால் முடியாது அமைச்சரே! இவளுக்கு இப்பொழுது உடனடியாக சிறிது பால் புகட்ட வேண்டும். அடுத்து அரை ஜாமத்துக்கு ஒரு முறையாக இருமுறை நான் கொடுக்கும் மாற்று திரவத்தில் மும்மூன்று துளிகளை இவள் நாக்கில் தடவ வேண்டும். குழந்தையை மிக ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டும். கடல் வேந்தன் செய்த தவறை அவன்தான் தவிர்க்க வேண்டும். அவன் கவனிப்பான் உமது மகளை. அஞ்சவேண்டாம். காலையில் முன்னைவிட அதிக பலத்துடன் இவள் எழுந்திருப்பாள்" என்று தமது கருத்தைப் பட்டவர்த்தனமாகத் தெரிவித்தார்.

சேரனின் வருமானத்துறை அமைச்சரும், சேர தூதுவனும் அதற்கு சம்மதிக்கவில்லை. "கடல் வேந்தன் வாலிபன், அவளும் வயது வந்த பெண்" என்று சூசகமாகக் குறிப்பிட்டார் அமைச்சர்.

"தவிர கொள்ளைக்காரன்" என்றான் சஞ்சயன்.

"இருப்பினும் நெறி தவறாதவன்" என்று சஞ்சயனைக் கடிந்துகொண்ட புலவர் பரணர், "அமைச்சரே! கடல் வேந்தனைப் பற்றி கவலை வேண்டாம். கண்களை இமை காப்பது போல் உமது மகளைக் காப்பான். கடல்வேந்தன் கொள்ளைக்காரனென்று பிரசித்தி உண்டு. ஆனால் அவன் பெண்களைப் பிடித்ததாகவோ, கெடுத்தாகவோ பெயர் கிடையாது. கடம்பரிடமிருந்தும், யவனர்களிடமிருந்தும் பெண்களைக் காத்ததாகத்தான் பெயர் இருக்கிறது. ஆகையால் அவனிடம் உமது மகளை விட்டுச் செல்லுங்கள். அவள் நலனுக்கு நான் பொறுப்பாளி" என்றார்.

அமைச்சர் என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பினார். "இருவர் பருவமும்...." என்று சுட்டிக் காட்டினார்.

"பருவத்திலிருப்பவரெல்லாம் கெடுவதில்லை. பருவம் ஏறியவர்களெல்லாம் தூய்மையாக இருப்பதுமில்லை. நெறி அநேகமாகப் பிறவியில் விளைகிறது" என்றார் பரணர்.

"இவன் பிறவி எப்படியோ?" என்று அமைச்சர் கேட்டார்.

"இந்த நாட்டில் உயர்ந்த பிறவி இவன்தான்" பரணர் சொற்களில் திடமிருந்தது.

"வியப்பாயிருக்கிறது புலவரே! இவன் தொழிலுக்கும் நெறிக்கும் சம்பந்தமில்லையே!" அமைச்சர் கேள்வியிலும் உறுதியிருந்தது.

பரணர் முகம் சுளித்தார். "சந்தேகமிருந்தால் நாளை மன்னரையே கேட்டுப் பாரும்" என்றார்.

அதுவரை ஏதும் பேசாமல் நின்று கொண்டிருந்த கடல்வேந்தன் தனது முகத்தை அமைச்சரையும் சஞ்சயனையும் நோக்கித் திருப்பினான். சுடும் கண்களைக் கண்ட அமைச்சர் அஞ்சவில்லையானாலும் சஞ்சயன் கால் சிறிது ஆட்டம் கண்டது. "அமைச்சரே! புலவர் பெருமான் சொன்னதெல்லாம் உங்கள் மகளின் நன்மையைப் பொறுத்தது. ஆகையால் உடனடியாக உங்கள் மாளிகைக்கு திரும்பிச் செல்லுங்கள். வீணாகக் காலம் கடத்தாதீர்கள்" என்று கூறிவிட்டு, "யாரங்கே?" என்று குரல் கொடுத்தான்.

அடுத்த விநாடி எதிர் அறை திறக்கப்பட்டு ஒரு மூதாட்டி சிறிய மண்குவளையுடன் வெளியே வந்து கடல் வேந்தன் அறைக்குள் நுழைந்தாள். "பால் இதோ இருக்கிறது" என்று குவளையை நீட்டினாள்.

குவளையைக் கையில் வாங்கிக் கொண்ட கடல் வேந்தன் கட்டிலில் படுத்திருந்த அஞ்சுகத்தின் செம்பருத்தி இதழ்களைத் தனது விரல்களால் மெதுவாகத் திறந்து குவளையிலிருந்த பாலை மெதுவாகப் புகட்டினான். அவள் சிறிது சிரமப்பட்டே இரண்டு வாய் பாலை விழுங்கினாள். குவளையை மீண்டும் மூதாட்டியிடம் நீட்டிய கடல்வேந்தன் "இன்னும் அரைஜாமம் கழித்து பால் கொணர்ந்தால் போதும்" என்றான்.

அந்த இல்லத்தில் மூதாட்டியும் ஒருத்தி இருக்கிறாளென்பதைக் கண்ட அமைச்சருக்கு சிறிது தைரியமும், கடல் வேந்தனிடம் ஓரளவு நம்பிக்கையும் வந்ததால் அவர் அமைதிப்பெருமூச்சு விட்டார். ஆனால் அடுத்து அவன் இட்ட உத்தரவு அவரை அசர வைத்தது. "அமைச்சரே! சஞ்சயனை அழைத்துக் கொண்டு மாளிகைக்குச் செல்லுங்கள். நாளை இரவு உமது மகள் உம்மிடம் வந்து சேருவாள்" என்று கூறிவிட்டு, கட்டிலின் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டான்.

"சரியாக வருவாளென்பதற்கு யார் உத்தரவாதம்?" என்று கேட்டார் அமைச்சர்.

"கடல்வேந்தன் சொல்" என்றார் பரணர்.

"அது என்ன அவ்வளவு உறுதியானதா?" என்று கேட்டார் அமைச்சர்.

"இந்தச் சேர நாடே அவன் சொல்லை நம்புகிறது" என்றார் பரணர்.

அமைச்சர் நிதானத்தை இழந்தார். "உமக்கும் கடல் வேந்தனுக்கும் என்ன அப்படி நெருக்கமான உறவு?" என்றி கோபத்துடன் இரைந்தார்.

பரணர் கோபிக்கவில்லை. மிகுந்த நிதானத்துடன் அமைச்சருக்கு அதிர்ச்சி தரும் பதிலைச் சொன்னார். "அவன் என் மகன்" என்றார் பரணர்.

அமைச்சர் சிலையென நின்றார்.

□

5. அழைத்த இதழ்கள்...

கொள்ளைக்காரனான கடல் வேந்தனை, தமது மகன் என்று சேரனின் அரசவைப் புலவரான பரணர் உறவு கொண்டாடியது அமைச்சர் அழும்பில்வேளுக்கு அதிர்ச்சியைத் தந்ததா, வியப்பைத் தந்ததா, அவநம்பிக்கையைத் தந்ததா என்று நிர்ணயிக்க முடியாத நிலை அவர் முகத்தில் பரவி நின்றதால், அவர் உணர்ச்சிகளை மீட்க பரணரே மீண்டும் பேசத் தொடங்கி, "இச் செய்தி உமக்குப் புதிதாயிருக்கலாம், ஆனால் வஞ்சிமாநகர்வாசிகளுக்குப் புதிதல்ல" என்றார்.

அமைச்சர் அழும்பில்வேள் பரணரை உற்றுநோக்கி, "புலவரே! உமக்குக் குழந்தை ஏதும் கிடையாது என்றுதான் எனக்குக் கேள்வி" என்றார் பதிலுக்கு.

"ஆம்! எனக்குக் குழந்தை ஏதும் பிறக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் குழந்தையைப் பெற்றுத்தான் அடைய வேண்டுமென்ற நியதி இல்லை" என்றார் பரணர் தமது பெரிய சரிகை முண்டாசு தாங்கிய தலையை அசைத்து.

"தத்து எடுத்த பிள்ளையா? அப்படி சுவீகாரம் ஏதும் புலவர் இல்லத்தில் நடந்ததாகக் கேள்வியில்லையே" என்று அமைச்சர் மீண்டும் சந்தேகக் குரலில் கேட்டார்.

"பிள்ளையைத் தத்து எடுத்துத்தான் பெற வேண்டும் என்ற நியதியும் கிடையாது" என்று பரணர் உறுதியாகப் பேசினார்.

அழும்பில்வேள் முகத்தில் சந்தேகத்தின் சாயை பூர்ணமாக நிலவியது. புலவர் தம்மை ஏமாற்ற ஏதோ பேசுகிறார், ஏதோ முக்கிய விஷயத்தை மறைக்கப் பார்க்கிறார் என்று

நினைத்த அழும்பில்வேள், "மகனைப் பெற வேறு வழியும் இருக்கிறதா புலவரே?" என்று வினவினார், குரலில் சந்தேகம் அதிகமாக ஒலிக்க.

"இருக்கிறது" புலவர் பதில் திட்டமாக இருந்தது.

"அந்த வழியை நான் அறியலாமா?" என்று அமைச்சர் கேட்டார்.

"ஆகா! தாராளமாக அறியலாம்" என்ற பரணர் "பிள்ளையை தானம் வாங்கலாம்" என்று அறிவித்தார்.

அழும்பில்வேளின் முகத்தில் பிரமை அதிகமாகத் தட்டியது. "என்ன என்ன? பிள்ளை தானமா?" என்றுவினவினார் அமைச்சர்.

"ஆம்! இவனை தானம் வாங்கினேன். ஆனால் பெற்றிருந்தால்கூட இத்தனை அருமையான பிள்ளை எனக்குக் கிடைத்திருக்காது" என்ற பரணர், "அமைச்சரே! சம்ஸ்கிருதத்தில் யாரைப் பாராட்டலாம், யாரைப் பாராட்டக் கூடாது என்பதற்கு சுலோகம் இருக்கிறது. "நஸ்வ புத்ர கதாசன" என்று சொல்லுகிறது சுலோகம். அதாவது தனது மகனை தந்தை எப்பொழுதும் பாராட்டக்கூடாது என்பது அந்த வாக்கியத்தின் பொருள்" என்ற பரணர் முகத்தில் பெருமிதம் தெரிந்தது.

"அதனால்தானா கடல்வேந்தனை நீர் அதிகமாகப் பாராட்டவில்லை?" அமைச்சர் கேள்வியில் வெறுப்பு இருந்தது.

"ஆம்!"

"இல்லையேல் இன்னும் அதிகம் சொல்லியிருப்பீர்!"

"ஆம். சொல்வதற்கு எவ்வளவோ இருக்கிறது"

"நிரம்ப இருக்கிறதோ?"

"இருக்கிறது."

"கொள்ளை உள்படவா?" இகழ்ச்சியுடன் கேட்டார் அமைச்சர்,

பரணர் இதற்கு பதில்சொல்லவில்லை. ஏதோ சிந்தனையில் இறங்கினார். பதில் கடல்வேந்தனிடமிருந்தே வந்தது. "அழும்பில்வேள்! என்னைப் பற்றி நீங்களிருவரும் பேசுவது எனக்குச் சங்கடமாயிருக்கிறது. நீர் என்னைப் பற்றி எந்தக் கருத்தை வைத்திருந்தாலும் கவலையில்லை. உடனடியாகச் சஞ்சயனுடன் உமது மாளிகைக்குக் கிளம்பும்" என்று கடுமையான குரலில் சொன்னான். பிறகு பரணரை நோக்கி, "தந்தையே! நீங்களும் செல்லலாம்" என்றான். அதில் உத்தரவின் தோரணை இருந்தாலும் பணிவும் கலந்திருந்தது.

அழும்பில்வேள் நன்றாக நிமிர்ந்து நின்றார். "கடல் வேந்தனே! உன்னுடன் பருவ மங்கையான என் மகளை விட்டுப் போக முடியாது" என்றார் கம்பீரமான குரலில்.

'முடியாது." சஞ்சயனும் மந்திரிக்குத் தாளம் போட்டான்.

கடல்வேந்தன் சொன்னான்: "மூன்றாவது ஜாமம் நெருங்குகிறது. இன்னும் கொஞ்ச நேரம் இங்கிருந்தால் உங்களை நான்கூட காப்பாற்ற முடியாது" என்றான்.

"ஏன்?" என்று அமைச்சர் கேட்டார்.

"என் மாலுமிகள் வந்து விடுவார்கள்" என்று குறிப்பிட்டான் கடல்வேந்தன்.

"அப்படியானால் என் மகள் மட்டும் எப்படி உன் கொள்ளைக்.... இல்லை மாலுமிகளிடமிருந்து தப்புவாள்?" என்று வினவினார் அமைச்சர், சற்று தடுமாற்றத்துடன்.

கடல்வேந்தன் கட்டிலில் கிடந்த அழகுச் சிலையையும் பார்த்து மந்திரியையும் பார்த்தான். "அவளைக் காக்க என் கரம் இருக்கிறது" என்று சொன்னான் முடிவாக.

அமைச்சர் வெகுண்டார். "அந்தக் கரம் எங்களைக் காக்காதா?" என்று கேட்டார்.

"காக்க அவசியமில்லை" என்று கடல்வேந்தன் மற்ற மூவரையும் செல்லும்படிச் சைகை காட்டினான்.

பரணரே முதலில் கிளம்பினார். கிளம்பு முன்பு சொன்னார்: "மகனே! நான் சொன்னது நினைவிலிருக்கட்டும். இன்னும் ஒருமுறை மருந்து, ஒருமுறை பால் புகட்ட வேண்டும்" என்று கூறி கிளம்ப முற்பட்டார்.

"கவலை வேண்டாம் தந்தையே! நிலக்கள்ளி நாளைக் காலையில் புத்துயிரும் புதுத் தெம்பும் பெற்று எழுந்திருப்பாள்" என்று கடல்வேந்தன் சொன்னதும் பரணர் கிளம்பிச் சென்றார்.

ஆனால் அமைச்சர் மட்டும் இடித்த புளியைப் போல் நின்றார். சஞ்சயனும் இருந்த இடத்தைவிட்டு அகலவில்லை. பரணர் சென்ற பிறகு அவர்களைத் திரும்பிப் பார்க்கவும் முயலவில்லை. கடல்வேந்தன், கட்டிலில் கிடந்த கட்டழகியை உற்றுப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தான். அந்த வாலிப கொள்ளைக்காரன், அமைச்சருக்கும் சஞ்சயனுக்கும் அவன் முதுகுப் புறத்தைக் காட்டி உட்கார்ந்திருந்ததால், அவன் முதுகின் திடமும் ஒல்லியான சரீரப் பகுதி உருவிவிடப்பட்ட சாட்டையைப் போல் காட்சியளித்ததையும், நிலக்கள்ளியை கவனித்த அவன் சிறிதும் குனியாமல் நெட்டுத் குத்தாகவே உட்கார்ந்திருந்ததையும் கவனித்த அமைச்சர் அழும்பில்வேள், மிக பலசாலியும் உறுதியுமுள்ள ஒரு மனிதன் தன் பின்புறத்தில் நிற்பதைப் புரிந்து கொண்டார். அடுத்து தமது மாளிகையில் நடந்த நிகழ்ச்சிகளின் விவரங்களையும் எண்ணிப் பார்த்து, 'பலமும் உறுதியும் மட்டுமல்ல, கூர்மையான

அறிவையும் உடைய கடல்வேந்தன் எதையும் சாதிக்க வல்லவன்' என்று உள்ளூரச் சொல்லிக்கொண்டார்.

அமைச்சர் மாளிகை உப்பரிகைக்கூடத்தில் விளக்கை ஊதியவுடன் எதிரேயிருந்த நிலக்கள்ளியை அணுகி அவளது மூக்கில் ஏதோ ஒரு சிறு துணியை அழுத்தி அவளைச் சிறு குழந்தைபோல் தூக்கி கடல்வேந்தன் தோளில் போட்டுக் கொண்டதையும், ஒரு கையால் அவள் உடலைப் பிடித்துக் கொண்டு இன்னொரு கையால் தமது உடலில் குறுவாளை அழுத்தி பேசாமல் தொடரும்படி கூறியதையும் நினைத்துப் பார்த்தார். தமது காவலர் யாரும் அவனைத் தடுக்காததும் அவருக்குப் பெருவியப்பாயிருந்தது. இப்படி அமானுஷ்யமான வேலைகளைச் செய்யக் கூடியவனைப் பகைத்துக் கொள்வது உசிதமல்லவென்று நினைத்தாராயினாலும் மகளை அவனுடன் விட்டுச் செல்வதற்கு அவருக்கு மனம் வராததால் நின்ற இடத்திலேயே நின்றார்.

விநாடிகள் ஓடின. கடல்வேந்தன் ஒருமுறை கூட பின்னால் நின்ற இருவரையும் திரும்பிப் பார்க்கவில்லை. அரை ஜாமம் சென்றதும் மூதாட்டி திரும்பவும் பால் கொண்டு வந்தாள். மீண்டும் தனது கச்சையிலிருந்து பரணர் கொடுத்த மாற்று மருந்துத் துளிகளை நிலக்கள்ளியின் வாயைத் திறந்து நாக்கில் தடவினான் வேந்தன். பிறகு பாலையும் வலுக்கட்டாயமாகப் புகட்டினான். அப்படிப் புகட்டியபோது அவள் கன்னங்களில் சிறிது பால் வழிந்திருந்ததால், தனது அங்கியின் நுனியால் துடைத்தான்.

கட்டிலில் கிடந்த கட்டழகியின் எழில் வதனத்தில் வியர்வைத் துளிகள் அரும்பின. மூதாட்டியை ஒரு துணியைக் கொண்டு வரச்சொல்லி முக வியர்வையையும் துடைத்தான். அடுத்த அறையின் சாளரங்களைத் திறந்து

விட்டு சுள்ளியாற்றின் காற்று நிலக்கள்ளியின் அழகிய மேனியில் படும்படி செய்தான். அத்துடன் மூதாட்டியை விளித்து "அம்மா! ஒரு விசிறி கொண்டு வா" என்றான். அவள் கொணர்ந்த விசிறியால் அவள் முகத்தில் லேசாக விசிறவும் செய்தான்.

"நான் விசிறட்டுமா?" என்று கேட்டுக் கொண்டு முன்னே அடிவைத்தார் அமைச்சர்.

கடல்வேந்தன் பதிலேதும் சொல்லவில்லை. ஆனால் எதையோ உற்றுக் கேட்டான். அவன் உற்றுக்கேட்டதை அமைச்சரும் கேட்டார். ஆற்றங்கரையில் பலர் தட தடவென படகுகளிலிருந்து இறங்கும் ஒலிகள் கேட்டன. பிறகு பூர்ண குடியுடன் பலர் பாடுவதும் இரைச்சல் போடும் சத்தமும் கேட்டன. அமைச்சர் உள்ளூர நடுக்கம் கொண்டார். சஞ்சயனுக்குப் பிராணனே போய்விடும் போல் இருந்தது. அந்த ஒலிகள் வரவர தாங்களிருந்த இல்லத்தை நோக்கி வருவதையும் உணர்ந்த அமைச்சர், தலைக்கு மேல் வெள்ளம் போய்விட்டதை உணர்ந்தார்.

அதுவரை வாளாவிருந்த கடல்வேந்தன் மூதாட்டியை நோக்கி "அம்மா! இவர்களிருவரையும் ஓர் அறையில் வைத்துப்பூட்டிவிடு. இந்தக் கதவை சாத்திவிடு. மாலுமிகள் வந்தால் நான் களைத்து உறங்குவதாகவும் யாரும் என்னை எழுப்பக்கூடாதென்று உத்தரவென்றும் சொல்லிவிடு" என்று கூறினான்.

மூதாட்டி வெளியே சென்று இரு காவலருடன் திரும்பி வந்தாள். "நீங்களிருவரும் இவர்களுடன் செல்லுங்கள். உங்களுக்கு எந்தத் தீங்கும் வராது" என்றும் உத்தரவிடும் தோரணையில் கூறினாள்.

அமைச்சர் சஞ்சயனைப் பார்க்க சஞ்சயன் அமைச்சரைப் பார்த்தான். அவ்விருவரையும் பார்த்த மூதாட்டி "நிலைமை மீறுமுன் போய்விடுங்கள். மாலுமிகள் உங்களை

வெட்டிப் போடு முன் தப்புங்கள்" என்றாள் சற்று கடுமையாக. அமைச்சரும் சஞ்சயனும் காவலரைப் பின் தொடர அந்த அறைக்குப் பின்னாலிருந்த ஓர் உள்ளறையில் அடைக்கப்பட்டனர். அந்த அறை சிறியதாயிருந்தாலும் அங்கிருந்து அடுத்த அறையை கவனிக்கக் கதவில் ஒரு துவாரம் இருந்ததைக் கவனித்த அமைச்சர் சிறிது ஆறுதலடைந்து அந்த துவாரத்தின் மூலம் அடுத்த அறையை கவனிக்கலானார்.

ஆனால் அவர் கண்ட காட்சி அவர் திகிலைக் குறைக்கவில்லை. அதிகப்படுத்தவே செய்தது. மூதாட்டி கொடுத்த துணியால் கடல்வேந்தன் நிலக்கள்ளியின் முகத்தை இரு முறை துடைத்தான். பிறகு கழுத்தையும் அடுத்து அவள் மேலாடையை நீக்கி, மார்பையும் துடைத்தான். அமைச்சருக்குப் பிராணனே போய்விடும் போலிருந்தது. ஆனால் அடுத்து கடல்வேந்தன் அவள் மார்பின் மீது பழையபடி சேலையைப் பக்குவமாக மூடினான். கடைசியாக எழுந்து அறை வாயிற் படியிலிருந்து சுள்ளியாற்றங்கரையை நோக்கினான். பிறகு கதவைத் தாளிட்டுவிட்டு மீண்டும் கட்டிலின் பக்கத்தில் உட்கார்ந்து நிலக்கள்ளியின் அழகைப் பருகலானான். அவள் மூச்சில் இருந்த பழைய வேகம் மறைந்து விட்டதால் மூச்சு ஒரே சீராக வந்து கொண்டிருந்தது. அதனால் அவன் எழில் மார்பின் இரு மொட்டுகளின் முனைகளும் ஒரே சீராக எழுந்து தாழ்ந்து கொண்டிருந்தன. அப்பொழுது வந்த சுள்ளியாற்றின் பெருங்காற்று ஒன்று நிலக்கள்ளியின் மேல் சீலையை சற்றே விலக்க மொட்டுகளிரண்டும் கடல்வேந்தன் கண்களைக் குத்துவது போல் எழுந்தன. பிறகு இன்னொரு முறை வீசிய அதே காற்று அவள் மார்பை மூடியது. "சுள்ளியாறே! தாயே! உன் மகளைக் காக்க நீ இருக்கும் போது இவள் தந்தை ஏன் மன்றாடுகிறாள்?" என்று சற்று உரக்கவே கேட்டான் கடல்வேந்தன், அமைச்சர் காதில் படும்படியாக.

பிறகு நிலக்கள்ளியின் முகத்தை உற்று நோக்கினான். சுரணை மெல்ல வந்து கொண்டிருந்ததால் நிலக்கள்ளி தனது செம்பருத்தி இதழ்களைச் சிறிது மடித்தாள். அதைத் தனது விரல்களால் பிரித்த கடல்வேந்தன், சற்றே குனிந்தான் அவற்றை நோக்கி. அப்போது மெல்ல கண்களைத் திறந்த நிலக்கள்ளி, லேசாகப் புன்முறுவல் செய்தாள் கடல்வேந்தனை நோக்கி. பிறகு நடந்தது அமைச்சர் முற்றும் எதிர்பாராத நிகழ்ச்சி. அவர் மகள், ஏதுமறியாத பேதை என்று அவர் அதுவரை நினைத்திருந்த நிலக்கள்ளி, தனது கைகளை உயரத் தூக்கி அவன் கழுத்தை வளைத்தாள். தனது தலையையும் லேசாகத் தூக்கி "சுள்ளியாற்றுக் காற்று சுகமாயிருக்கிறது" என்றாள் தனது செவ்விய உதடுகளை விரித்து. அவள் உதடுகள் துடித்தன. லேசாக அசைந்தன. பாதி விரிந்தன. அத்தனையிலும் அழைப்பு இருந்தது, கடல்வேந்தனுக்கு.

□

6. யவனன் க்ளேஸியஸ்

கடல்வேந்தனை நோக்கி முகத்தை உயரத் தூக்கி செவ்விய தனது இதழ்களால் நிலக்கள்ளி அழைப்பையும் விடுத்தாளானாலும், அந்தக் கொள்ளைக்காரன் அவள் அழைப்பை ஏற்றானில்லை. அவள் கன்னத்தை மெதுவாகத் தடவிக் கொடுத்து கழுத்திலிருந்து அவளது கைகளையும் தூக்கிக் கட்டிலில் பழையபடி அவளைப் படுக்கவிட்டான். சுள்ளியாற்றுக் காற்றால் அலைந்து அவள் உடலின் பல பாகங்களையும் வெளிப்படுத்தியிருந்த சேலையையும் சரியாக இழுத்து விட்டு மூடினான். 'தனது மகள் வலிய அவன் கழுத்தை வளைத்து முகத்தைத் தூக்கியவுடனேயே கடல்வேந்தன் சரசத்தைத் துவக்கி விடுவானென்றும், நிலக்கள்ளியின் தூய்மையெல்லாம் பறந்துவிடுமென்றும் எதிர்பார்த்ததற்கு முற்றும் மாறாக நடந்த நிகழ்ச்சிகளைக் கண்ட அமைச்சர் அழும்பில்வேள் பெரும் வியப்பை அடைந்தார். கடல்வேந்தனைப் பற்றி உலாவும் நற்செய்திகளுக்கு நியாயமும் இருப்பதாக அந்தச் சமயத்தில் அவருக்குத் தோன்றியது. மேலும் அவர் கண்ட காட்சி அவரை வியப்புக்கு மட்டுமின்றி அச்சத்தையும் ஊட்டியதால் அவர் பெரிய மௌனியானார். ஏதோ கேட்க வாயெடுத்த சஞ்சயனையும் தமது ஒரே பார்வையால் அடக்கினார்.

வெளி அறையில் நிலக்கள்ளியை மீண்டும் பழையபடி படுக்க வைத்த கடல்வேந்தன், "நிலக்கள்ளி! அடுத்த உள்ளறையில் உன் தந்தையும் சஞ்சயனும் இருக்கிறார்கள்" என்று மெதுவாகக் கூறினான்.

"அப்படியா!" என்று அவள் கேட்டாள், அது ஏதோ சாதாரண சம்பவம் போல.

கடல்வேந்தன் அவளை நோக்கிப் புன்முறுவல் செய்து, 'நிலக்கள்ளி! அவர்களிருப்பது உனக்கு அச்சத்தை அளிக்கவில்லையா?" என்று வினவினான்.

நிலக்கள்ளியின் முகத்தில் மோகனச் சாயை ஒன்று படர்ந்தது. "உங்களுடனிருக்கும் போது எனக்கு யாரைப் பற்றியும் எதைப்பற்றியும் அச்சமேற்படுவது கிடையாது" என்றாள் இதழ்களில் இளமுறுவல் கூட்டி. "ஆமாம் தந்தையைத்தான் நீங்கள் என்னுடன் அழைத்து வந்தீர்கள். தூதர் எங்கு வந்தார்?" என்று வினவினாள் அவள்.

கடல் வேந்தன் லேசாக சிரித்தான். "சஞ்சயன் எப்படியும் என்னைக் கண்டுபிடிக்க முயலுவான் என்பது எனக்குத் தெரியும், உனக்கும் தெரியும். ஆகையால் அவனை அழைத்துவர எனது படகோட்டிகளில் ஒருவனை ஆற்றங் கரையில் இருக்கச் செய்தேன். நான் எதிர்பார்த்தபடிதான் எல்லாம் நடந்தது. அந்தப் படகோட்டி யார் தெரியுமா?" என்று சஞ்சயன் வந்ததற்குக் காரணமும் சொல்லி படகோட்டியைப் பற்றிய வினா ஒன்றையும் தொடுத்தான் வாலிப கொள்ளைக்காரன்.

நிலக்கள்ளி தனது அஞ்சன விழிகளை அகல விரித்து "யாரது?" என்று வினவினாள்.

"நம்முடன் பரணரிடம் தமிழ் படித்தானே நற்கிள்ளி, நினைவிருக்கிறதா உனக்கு?" என்று வேந்தன் வினவினான்.

"இருக்கிறது. பெரிய வாள் வீரன். சோழர் சொந்தக்காரன்." நிலக்கள்ளியின் சொற்களில் வியப்பு தெரிந்தது.

"இப்பொழுது கொள்ளைக்காரன். எனக்கு அடுத்தபடி மரக்கலத்தைச் செலுத்த வல்லவன் அவன் ஒருவன்தான். ஆனால் இன்னும் அவனுக்கு 'கவிதைப் பைத்தியம் போகவில்லை' வேந்தன் சொற்களில் ஏளனம் இருந்தது.

நிலக்கள்ளி இதழ்களைக் குவித்து விசாரித்தாள் அழகாக, "அவரை ஏன் ஏளனம் செய்கிறீர்கள்? உங்களுக்கில்லையா கவிதைப் பைத்தியம்? எந்த அபாயமிருந்தாலும் வாரத்திற்கு இருமுறையாவது நீங்கள் பரணரிடம் கவிதை படிக்கச் செல்வதில்லையா?" என்றாள் குவித்த இதழ்களால்.

அப்படி அவள் இதழ்களைக் குவித்துச் சொற்களைச் சொல்லியதால் சொற்கள் குழலிலிருந்து வரும் ஸ்வரங்களைப் போல் இன்பமாக ஒலித்தன. அதைக் கவனிக்கவே செய்த கடல்வேந்தன் திடீரென நிமிர்ந்து உட்கார்ந்து தூரத்திலிருந்து பெரிதாக வாசலுக்கு வந்துவிட்ட மாலுமிகளின் இரைச்சலைக் காதில் வாங்கினான், அவ்வளவுதான்! நிலக்கள்ளியைக் கட்டிலிலிருந்து தனது இருகைகளாலும் வாரியெடுத்தான். கட்டிலின் முகப்பில் உட்கார்ந்த வண்ணம் அவளைத் தனது மார்பை நோக்கி இழுத்து, ஆனால் புதையவிடாத நிலையில் நிறுத்தி, செவிகளைத் தீட்டிக் கொண்டான்.

நன்றாகக் குடித்து வெறிபிடித்த மாலுமிகள் அந்த இல்லத்தின் வாயிலிலே நின்று இரைந்தார்கள். யாருடனோ சண்டையும் போட்டார்கள். அவர்களைத் தடுத்து நின்றது தனது படகோட்டியே என்பதைக் குரலிலிருந்து நிர்ணயித்துக் கொண்ட கடல்வேந்தன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான். உள்ளே புக முயன்ற கொள்ளைக்கார மாலுமிகளை வாயிலிலேயே தடுத்து நின்ற நற்கிள்ளி "டேய் மடையர்களா! இப்பொழுது தலைவரைப் பார்க்க முடியாது. பார்த்தால் உங்கள் தலை போய் விடும்" என்று இரைந்து கூவியது உள்ளேயிருந்த கடல்வேந்தன் காதுகளில் நன்றாகவே விழுந்தது. இருப்பினும் நற்கிள்ளி நீண்ட நேரம் அவர்களைத் தடுத்து நிறுத்த முடியாதென்பதை கடல்வேந்தன் உணர்ந்தே இருந்ததால் "நிலக்கள்ளி! இப்பொழுது நாமிருக்கும் நிலையிலேயே இருக்க

வேண்டும். மாலுமிகள் உள்ளே நுழைந்தாலும் நீ இம்மி கூட அகலாதே'' என்று எச்சரித்தான்.

அவன் நினைத்தபடிதான் சகலமும் நடந்தது. வெளியே இருந்த மாலுமிகள் நற்கிள்ளியைப் பார்த்து, பெரிதாக நகைத்தார்கள், ''பாட்டுப் பாடும் நற்கிள்ளி'' என்று ஒரு மாலுமி பல்லவி எடுத்துப் பாட, அடுத்தவன் ''இடம் கொடடா கொஞ்சம் தள்ளி'' என்று பாடி முடித்தான். பல்லவியை அடுத்து அதே வரிகள் திரும்பத் திரும்பப் பாடப்பட்டன. அப்படி பாடிய வண்ணம் நற்கிள்ளியை திடீரெனச் சூழ்ந்து அவனைத் தலைக்குமேல் தூக்கிக் கொண்ட மாலுமிகள் அவனைச் சுழற்றி தூரத்தே எறிந்து விட்டு உள்ளே நுழைந்த போதும் பாடிக் கொண்டும், தாளம் போட்டுக் கொண்டும் வந்தனர். ஆனால் சட்டென்று அவர்கள் பாட்டும் நின்றது. தாளமும் நின்றது. கடல்வேந்தனிருந்த அறைக்கு வெளியே இருந்த மூதாட்டி அவர்களை அறைக்குள் செல்லாதபடி தடுத்து, ''உங்களுக்கு புத்தி கெட்டுவிட்டதா?'' என்று சீறினாள்.

அந்தக் கூட்டத்தின் முதலில் நின்ற யவனன், ''தலைவரைப் பார்க்க வேண்டும், அவசரம்'' என்றான்.

''அதற்கு வரும் முறை இதுதானா?'' என்று சீற்றத்துடன் கேட்டாள் மூதாட்டி.

''மாலுமிகள் குடித்து விட்டார்கள்'' யவனன் காரணம் சொன்னான்.

''குடித்தவர்களை இங்கு ஏன் அழைத்து வந்தாய்?'' மூதாட்டியின் குரல் அதிகாரத்துடன் ஒலித்தது.

''நான் அழைத்து வரவில்லை. நான் போகுமிடம் தெரிந்ததும் அவர்களே தொடர்ந்தார்கள்'' யவனன் குரலில் பணிவு சிறிது தெரிந்தது.

''நீ ஏன் தடுக்கவில்லை?'' மூதாட்டி வினவினாள் சீற்றத்துடன்.

''இந்த நிலையில் அவர்களை யாரும் தடை செய்ய முடியாதென்பது உங்களுக்கே தெரியும்'' என்றான் யவனன்.

அதுவரை வாளாவிருந்த மாலுமிகள் மீண்டும் பாட ஆரம்பித்தார்கள். ஒருவன் பெரிதாக ராகம் இழுத்தான். சிலர் சிரித்தார்கள். சிலர் அழுதார்கள். சிலர் பழைய பாட்டைத் தொடங்கினார்கள். இருவர் யவனனைப் பின்னாலிருந்து தள்ள அவன் மூதாட்டியின் மேல் விழப்போக மூதாட்டி சட்டென்று நகர்ந்துவிடவே, யவனன் அறைக் கதவில் முட்டிக் கொண்டான். அதன் விளைவாக சரியாகத் தாளிடாத அந்தக் கதவு சரேலெனத் திறந்தது.

உள்ளே தங்கள் கண் முன்பு எழுந்த காட்சியைக் கண்ட மாலுமிகள் திக்பிரமை கொண்டார்கள். மாலுமிகளால் தள்ளிவிடப்பட்ட யவனனும் எழுந்து நின்றான், நெட்டையாக. மாலுமிகள் திடீரென நகைத்தனர். இரைந்து ''தலைவரே தலைவரே'' பாட்டிசைத்தார்கள். தாளத்தைப் பெரிதாகவே போட்டார்கள். இருவர் குடிவெறியில் நாட்டியமாடவும் தொடங்கினார்கள்.

இத்தனைக்கும் கடல்வேந்தன் அவர்களைத் திரும்பியும் பார்க்கவில்லை. பின்னால் யவனன் நின்றிருந்தது எப்படியோ புரிந்தது அவனுக்கு. தனது கையில் ஏந்தி நின்ற ஏந்திழையைக் கீழே விடாமலேயே கேட்டான், ''கிளேஸியஸ்! இங்கென்ன வேலை உனக்கு?'' என்று.

''முக்கிய வேலை'' என்ற கிளேஸியஸ் விரைந்து நின்று தலை வணங்கினான் கடல்வேந்தன் முதுகுக்கு.

''இவர்களை ஏன் அழைத்து வந்தாய்?'' வேந்தனின் அடுத்த வேள்வியில் சொற்கள் சுடச்சுட சீறி வந்தன.

''நான் அழைத்து வரவில்லை.'' யவனின் குரலில் அச்சமிருந்தது.

"அவர்களாக வந்தார்களா?"

"ஆம்."

"நீ ஏன் தடுக்கவில்லை?"

"தடுக்க முடியவில்லை. சற்று முன்பு என்னையே கீழே தள்ளிவிட்டார்கள்."

"அதாவது உனக்கு தலைவனாயிருக்கத் தகுதியில்லை" என்ற கடல்வேந்தன் மெதுவாக நிலக்கள்ளியை கட்டிலில் படுக்க வைத்து கட்டில் முகப்பில் திரும்பி உட்கார்ந்து யவனன் மீதும், பின்னாலிருந்த மாலுமிகள் மீதும் தனது கண்களை ஓடவிட்டான். அந்தப் பார்வை மாலுமிகளின் குடி வெறியையும் உடைத்திருக்க வேண்டும். கூச்சலும், பாட்டும் மந்திரத்தால் அடங்கியவைபோல் அடங்கின.

"சரி! நீ வந்த வேலையைச் சொல்" என்று வினவினான் கடல்வேந்தன்.

யவனன் தனது கண்களை கட்டிலை நோக்கி ஓடவிட்டான். பிறகு கேட்டான், "இங்கேயே சொல்லலாமா?" என்று.

"சொல்லலாம் சுருக்கமாகச் சொல்" என்றான் கடல் வேந்தன்.

"இன்று நள்ளிரவில் சஞ்சயன் வீரர்கள் பத்துப் பேர் தங்கள் பெரியமரக்கலத்தில் நுழைந்துவிட்டார்கள்" என்று மேலும் சொல்ல பயந்து நிதானித்தான் யவனன்.

"சொல் மேலே," கட்டளை சுரீரெனப் பாய்ந்தது யவனன்மீது.

"நள்ளிரவில் வந்ததால் மாலுமிகள் சற்று அசிரத்தையாயிருந்து விட்டார்கள். ஆகவே அவர்கள், தங்கள் அறையில் நுழைந்து சோதனை போட்டார்கள். வெளியே வரும் போதுதான் பார்த்தோம்!"

"உம்"

"நால்வர் கொல்லப்பட்டார்கள். இருவர் சிக்கிக் கொண்டார்கள். நால்வர் கடலில் குதித்து ஓடிவிட்டார்கள். சிக்கியவர்களை, காரணத்தைக்கக் கவைத்தோம். அவர்கள் சொல்லித்தான் அவர்கள் சஞ்சயன் ஆட்களென்று தெரிந்து கொண்டோம். சஞ்சயனைப் பிடித்து வந்து சித்திரவதை செய்யத் துடிக்கிறார்கள் மாலுமிகள். அதனால்தான் குடித்துவிட்டு வந்திருக்கிறார்கள்."

"மேலே சொல்"

"அழும்பில்வேள் இருக்கிறாரல்லவா?"

"ஆம்"

"அவர் கழுத்தைத் திருகி கடற்கரைக் கழுகுகளுக்குப் போட வேண்டுமென்று மாலுமிகள் கூவுகிறார்கள்."

கடல்வேந்தன் கட்டிலின் முகப்பிலிருந்து எழுந்து நின்றான். "அமைச்சர் என்ன செய்தார்?" என்று கேட்டான் அமைதியாக.

"அவர்தான் சஞ்சயனைத் தூண்டியதாக மாலுமிகள் கருதுகிறார்கள். தங்களைப் பிடிக்க அவர் சபதம் செய்திருப்பதாகவும் முசிறியில் வதந்தி உலாவுகிறது" இதைச் சற்று சீற்றத்துடன் சொன்னான் யவனன்.

ஆறடி உயரத்துக்கு யவனனுக்கும் மேல் நின்ற கடல் வேந்தன் லேசாக நகைத்தான். "இம்மாதிரி விஷயங்களில் நீங்களே எத்தனை நாளாக முடிவெடுக்கிறீர்கள்?" என்று வினவினான் நகைப்பின் ஊடே.

யவனன் உடல் சிறிது நடுங்கியது, கடல்வேந்தன் கேள்வியால். "முடிவு யாரும் எடுக்கவில்லை தலைவரே! வதந்தியால் மாலுமிகள் கொதித்திருக்கிறார்கள். அந்த சமயத்தில் சஞ்சயன் ஆட்கள் நமது கப்பலுக்கு வந்தார்கள். இனி சஞ்சயனையும் அமைச்சரையும் உயிருடன் விட்டு வைப்பதில்லையென்று தீர்மானித்திருக்கிறார்கள்.

உங்கள் சம்மதம் பெறவே வந்திருக்கிறார்கள்'' என்று சமாளிக்கப் பார்த்தான் கிளேஸியஸ்.

கடல்வேந்தன் சற்றே திரும்பி கட்டிலைப் பார்த்தான். "இந்த கட்டிலிலிருப்பது யார் தெரியுமா உனக்கு?" என்று வினவினான் நிலக்கள்ளியை சுட்டிக்காட்டி.

"தெரியாது தலைவரே!" என்றான் யவனன்.

"அமைச்சரின் மகள். அவர் மாளிகையிலிருந்தே தூக்கி வந்திருக்கிறேன் இன்று. அமைச்சரைப் பழிவாங்க உங்களைப் போன்ற முட்டாள்களின் உதவி எனக்குத் தேவையில்லை. மடத்தனமாக நீங்கள் மந்திரி இல்லம் சென்றால் அங்கு சேரர் படைவீரர்களால் அழிக்கப்படுவீர்கள். நான் அழைத்துச் செல்லாத இடத்துக்கு, என் உத்தரவில்லாமல் யாரும் செல்ல முயலக்கூடாது. புரிகிறதா?" என்று பேசிய கடல்வேந்தன், "முதலில் இவர்களை அழைத்துச் செல். நாளை சந்திப்போம்'' என்று கையை வாசலை நோக்கிக் காட்டினான்.

யவனன் திரும்பினான். ஆனால் மாலுமிகள் அசையவில்லை. நகைத்தார்கள் பெரிதாக. கடல்வேந்தன் பார்வை உக்கிரமாயிற்று. "அடுத்தமுறை நகைப்பவன் நிற்கும் இடத்திலேயே பிணமாகி விடுவான்'. என்ற அவன் சொற்கள் உள்ளிருந்த உக்கிரத்தைப் பிரதிபலிக்கவில்லையானாலும் கடல்வேந்தன் எரிமலையின் நிலையில் இருப்பதை யவனன் உணர்ந்தான். அடுத்து என்ன நடக்குமென்பதை யாரும் ஊகிக்கு முன்பு கடல்வேந்தன், எதிரே நின்ற யவனனை இடித்துத் தள்ளிக் கொண்டு மாலுமிகள் கூட்டத்தில் நுழைந்து அவர்களில் ஒருவனைத் தூக்கி வாசலை நோக்கி வீசி எறிந்தான். அடுத்தவனும் அதே விதத்தில் வாசலை நோக்கிப் பறந்த பின்பு, "நான் நிதானம் தவறு முன்பு ஓடிவிடுங்கள்'' என்று சீறினான் கடல்வேந்தன். அடுத்து மாலுமிகள் முனகிக் கொண்டு வெளியேறத் தொடங்கினார்கள். யவனனும் அவர்களைத் தொடர்ந்தான். ஆனால் அவன் முகத்தில்

சந்தேகம் நிரம்பிக் கிடந்தது. கடல்வேந்தன் எதையோ மறைக்கப் பார்க்கிறானென்ற எண்ணம் அவன் மனத்தில் மீண்டும் எழுந்தது. அதனால் மெதுவாகவே நடந்தவன் வாயிலுக்கு வந்ததும் மாலுமிகளை அனுப்பிவிட்டு தான் மட்டும் அந்த இல்லத்தின் அருகிலிருந்த சிறு குடிசைக்குள் நுழைந்து இல்லத்தின் வாயில்மீதே கண் வைத்திருந்தான்.

யவனனும் மாலுமிகளும் சென்றதும் அமைச்சரும் சஞ்சயனும் உள்ளறையை விட்டு வெளியே வந்தனர். "நிலக்கள்ளி..." என்று தொடங்கினார் அமைச்சர்.

"நான் உங்கள் மாளிகையில் சொன்னபடி நாளை வந்து சேருவான்" என்றான் கடல்வேந்தன்.

"அதுவரை...." மென்று விழுங்கினார் மந்திரி.

"அவளுக்குஎந்த ஆபத்துமில்லை'' என்று கடல்வேந்தன் அவர்களை மீண்டும் அறைக்குள் செல்லப் பணித்தான். இம்முறை அமைச்சரும், தூதனும் எந்த ஆட்சேபணையும் கிளப்பாமல் உள்ளறைக்குச் சென்றார்கள்.

அடுத்து கடல்வேந்தன் மூதாட்டியை அழைத்து, "அம்மா! நிலக்கள்ளியைப் பார்த்துக்கொள். நான் மீண்டும் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு இல்லத்தின் வாயிலுக்கு வந்து இருபுறம் நோக்கினான் பக்கத்துக் குடிசையில் எரிந்த விளக்கிற்கு முன்னால் வாயில் வரை ஓர் உருவத்தின் நிழல் நீண்டு விழுந்ததைக் கவனித்தான். பிறகு சடசடவென்று படிகளில் இறங்கி, யவனன் இருந்த குடிசையை நோக்கிச் சென்றான். திடீரெனக் குடிசை முன்பு தோன்றிய கடல்வேந்தனைக் கண்ட யவனன் திகைப்புடனும் பிரமிப்புடனும் எழுந்தான்: கடல்வேந்தன் கண்களில் கொலைக்குறி துளிர்த்து சுடர்விடுவதைப் பார்த்தான். இனி விஷயம் தலைக்கு மேல் போய்விட்டதை உணர்ந்தான். அன்றுவரை கடல்வேந்தன் உத்தரவை மீறி யாரும் பிழைத்ததில்லை என்பதையறிந்திருந்ததால் தனது இடையிலிருந்த குறுவாளைக் கையில் எடுத்துக் கொண்டான்.

□

7. குறுவாளும் வரலாறும்

கடல்வேந்தனே ஆறடி உயரத்திற்கும் சற்று மேலாக இருந்தானென்றால், யவனனான க்ளேஸியஸ் அவனைவிடச் சற்று அதிக உயரமில்லாவிட்டாலும் உயரத்திற்குத் தேவையான அளவைவிட அதிகப் பருமனும் அவனுக்கு இருந்ததால், குறுவாளை எடுத்த வேகத்தில் அவனால் கடல்வேந்தன்மீது பாய முடியாததால் சிறிது நிதானமாகவே குடிசைக்குள் இருந்து வெளியே காலடி எடுத்து வைத்தான். அப்பொழுதுகூட அசையாத கடல்வேந்தன் நின்ற நிலையிலேயே சொன்னான், "க்ளேஸியஸ்! இன்று என்னைநோக்கிக் குறுவாளை எடுத்துவிட்டாய்" என்று.

"ஆம்! வேறு வழியில்லை" என்றான் யவனன்.

"என்னை நோக்கி வாளெடுத்தவர்கள்..." கடல்வேந்தன் வாசகத்தை முடிக்கவில்லை.

யவனனே முடித்தான், "...யாரும் பிழைத்ததில்லை" என்று.

"தெரிந்துமா உன் தலைவனை அழிக்க முயன்றாய்?" என்று கடல்வேந்தன் வினவினான்.

"தலைவரே! நீங்கள் மரக்கலத்திற்குப் போகச்சொல்லியும் நான் போகவில்லை. உங்களை வேவு பார்க்க இங்கு காத்திருந்தேன். அதற்கே நமது மரக்கலத்தில் பயங்கர தண்டனை உண்டு. உங்கள் நா அசைந்தால் மாலுமிகள் என்னை வெட்டி, கடல்கழுகுகளுக்கு இரையாகப் போட்டுவிடுவார்கள். அந்தப் பயங்கர சாவைவிட உங்கள் கையால் சாவது எனக்குப் பெருமை தரும். யாரும் எதிர்க்கத்

துணியாத கடல்வேந்தனையே க்ளேஸியஸ் எதிர்த்தான் என்று முசிறி யவனர் பேசுவார்கள்" என்று சொன்னான் க்ளேஸியஸ்.

கடல்வேந்தன் சிறிது நேரம் யவனனை உற்றுநோக்கிவிட்டு, "அந்தக் குறுவாளை இப்படிக் கொடு" என்று கையை நீட்டினான்.

பதில் ஏதும் பேசாமல் குறுவாளைக் கொடுத்த யவனனை, "சரி நீ போ மரக்கலத்திற்கு! நான் விடிந்ததும் வருகிறேன். இங்கு நடந்ததை யாரிடமும் சொல்ல அவசியமில்லை" என்ற வேந்தனை வியப்புடன் நோக்கினான் யவனன்.

பிறகு தலையை அசைத்துவிட்டு, "தலைவரே! என் குறுவாளும் நானும் பிரிந்ததை நமது மாலுமிகள் பார்த்ததில்லை. கைகால்கள் போல் என் உடலின் உறுப்புகளில் அதுவும் ஒன்று என நினைக்கிறார்கள். அது இல்லாது நான் போனால் சந்தேகப்படுவார்கள். காரணமும் கேட்பார்கள்" என்று தனது கஷ்டத்தை எடுத்துச் சொன்னான்.

யவனன் சொல்வதில் பொருளிருப்பதைக் கடல்வேந்தனும் புரிந்து கொண்டானாதலால் தனது கையில் இருந்த குறுவாளை இருமுறை திருப்பிப் பார்த்தான். அதன் பிடியிலிருந்த யவன நாட்டு வேலைப்பாடு அந்தச் சமயத்தில்கூட அவனைப் பிரமிக்க வைத்தது. பெரிய வல்லூறு போல் செதுக்கப்பட்டிருந்த அந்த அலங்காரப்பிடியில் வல்லூற்றின் கண்களில் மஞ்சள் வைரங்களும் புதைக்கப்பட்டிருந்ததால் சாட்சாத் வல்லூறே விழிப்பது போன்ற பிரமையை அளித்தது. அந்த வல்லூற்றின் இறகுகள் விரித்துக் கிடந்ததால் அந்தக் குறுவாளைக் கைப்பற்றுவதற்கும் வசதியாயிருந்தது. அந்தக் குறுவாளின்கைப்பிடி எப்பொழுதும் கடல்வேந்தனை

பிரமிப்புக்குள் ஆழ்த்தியிருந்தாலும், அதை அடைய அவன் பலமுறை ஆசைப்பட்டிருந்தாலும், அவன் யவன னிடம் தனது விருப்பத்தைத் தெரிவிக்கவில்லை. "இதே மாதிரி குறுவாள் யவனர் யாரிடமாவது இருந்தால் எனக்கு வாங்கிக் கொடு" என்று ஒருமுறை மட்டும் கேட்டிருந்தான் க்ளேஸியஸை. அதற்கு க்ளேஸியஸ் சொன்ன மறுமொழியும் அவனுக்கு நினைவிருந்தது. "தலை வரே! இம்மாதிரி குறுவாள் எந்த யவனனிடமும் இருக்க நியாயமில்லை. இது என் குடும்பத்தில் பல தலைமுறை களாக இருந்து வருகிறது. தகப்பன் இறுதி மூச்சை விடும்போது மகனிடம் கொடுப்பான். "இதைத் துறப்பதை விட நீ உயிரை விடுவது மேல்" என்ற கண்டிப்புடன் இதை மகனுக்குக் கொடுப்பது வழக்கம் எனக் கேட்டிருக்கிறேன். ஆகையால் இதைப்போல் இன்னொன்று கிடைக்காது" என்று யவனன் சொன்னதையும் நினைத்தான் கடல்வேந்தன்.

"சரி, இன்று எதற்காக இந்தக் குடிசையில் மறைந் தாய்?" என்று வினவினான் கடல்வேந்தன்.

க்ளேஸியஸ் உண்மையே பேசினான். "தலைவரே! நீங்கள் இதுவரை எங்களை ஏமாற்றியதில்லை" என்று தொடங்கினான்.

"ஆம்! என் வாழ்க்கையே ஆபத்தானது. அதில் பங்கு கொள்ளும் சகோதரர்களை எப்படி ஏமாற்ற முடியும்?" என்று கேட்டான் கடல்வேந்தன்.

யவனன் தலைவனைக் கூர்ந்து நோக்கினான், "இன்று நீங்கள் உண்மை பேசவில்லை" என்றும் சொன்னான் உறுதியாக.

"எதை மறைத்தேன்?" வேந்தன் கேள்வியில் சந்தேகம் ஒலித்தது.

"நீங்கள் இருந்த அறைக்கு உள்ளறையில் யாரோ இருந் தார்கள்..." க்ளேஸியஸ் முடிக்கவில்லை சொற்களை.

"எப்படித் தெரியும் உனக்கு?"

"தாங்களும் அமைச்சர் பெண்ணும் இருந்த நிலையில் கதவு தாழிடாதிருந்தது. நீங்கள் ஆடிய காதல் நாடகமும் எங்களைத் திருப்புவதற்காகத்தான். இதை நீங்கள் மறுக்க முடியுமா?"

"சொல் மேலே..."

"நீங்கள் உள்ளறையில் தங்க வைத்தவர்கள் புத்திசாலி களல்லர். உங்கள் நேர்மையில் அவர்களுக்கு நம்பிக்கையும் இல்லை. உள்ளறைக் கதவிலிருந்த துவாரம் அடைபட்டிருந் தது. அடைத்தது ஒரு கண்."

வேந்தன் புன்முறுவல் கொண்டு க்ளேஸியஸை அணுகி அவன் தோள்மீது கையை வைத்தான். "க்ளேஸியஸ்! சில சமயங்களில் நமக்காக உயிர்விடச் சித்தமாயிருப்பவர்களை யும் நாம் ஏமாற்ற வேண்டியிருக்கிறது. அந்த அறையில் இருந்தவர் ஒருவரல்ல, இருவர். அவர்கள் யாரென்பதை மாலுமிகள் அறிந்தால் அவர்கள் உயிரை நான்கூடக் காப் பாற்ற முடியாது. யாரென்று என்னை இப்பொழுது கேட் காதே. காலம் வரும்போது நீயே புரிந்து கொள்வாய். மரக் கலத்திற்குப் போ" என்று படகுத்துறையைக் காட்டினான் கடல்வேந்தன்.

"என் குறுவாள்?" க்ளேஸியஸ் கையை நீட்டினான்.

"நான் காலையில் மரக்கலத்திற்கு வரும்போது கொண்டு வருகிறேன். நான் உன்னை விரட்டியதற்கு அத்தாட்சி வேண்டாமா?" என்று வினவிய கடல்வேந்தன், மீண்டும் இல்லத்தின் உள்ளே சென்றான்.

அங்கு உள்ளறையைத் திறந்து கொண்டு அமைச்ச ரும் தூதுவரும் வெளியறைக்கு வந்து விட்டதையும் நிலக்கள்ளி கட்டிலின் ஒரு மூலையில் சுருண்டு உட்கார்ந்

திருப்பதையும் கவனித்தான். அதனால் வெதுண்ட உள்ளத்துடன், ''அமைச்சரே! உங்களை யார் வெளியே வரச் சொன்னது?'' என்று வினவினான்.

''சஞ்சயன்'' என்று தூதனைக் காட்டினார் அமைச்சர்.

''நான் சொல்கிறபடிதான் நீங்கள் கேட்கிறீர்களா?'' என்று சஞ்சயன் சீறினான், அமைச்சர் மீது.

''உள்ளறையிலிருந்து வெளியேவர நீதானே தூண்டினாய்?'' என்று அமைச்சர் கேட்டார்.

''தூண்டாமல் என்ன செய்வது? அவர்கள் திரும்புவதற்குள் ஓடவேண்டாமா?'' என்றான் சஞ்சயன்.

''எதற்கு ஓடவேண்டும்?'' என்று அமைச்சர் சீறினார்.

''தாமதித்தால்....'' சஞ்சயன் முடிக்கவில்லை சொற்களை.

''தாமதித்தால்?'' அமைச்சர் கேட்டார்.

''உங்கள் கழுத்தைத் திருகிக் கடற்கரைக் கழுகுகளுக்குப் போடுவதாகக் கொள்ளைக்கார மாலுமிகள் சொல்லவில்லையா?'' சஞ்சயன் வினவினான் எரிச்சலுடன். அமைச்சரின் கழுத்தையும் உற்று நோக்கினான்.

''என் கழுத்தைத் திருகினால் நீ எதற்குப் பயப்பட வேண்டும்?'' என்று அமைச்சர் சர்வ சாதாரணமாகக் கேட்டார்.

''உங்களையாவது கொல்வதாகத்தான் சொன்னார்கள்...''

''ஆம்.''

''என்னைச் சித்திரவதை செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். கொள்ளைக் கப்பல்களில் சித்திரவதையென்றால் என்ன தெரியுமா?''

''தெரியாது. அந்த அனுபவமில்லை இன்று வரை.''

சஞ்சயன் சினத்துடன் பார்த்தான் அமைச்சரை. அவருடைய விஷமப் பேச்சை அவன் ரசிக்கவில்லையென்பது அவன் முகபாவத்திலிருந்தே தெரிந்தது. ''நான் பார்த்திருக்கிறேன் ஒருமுறை. நினைப்பதற்கே பயமாயிருக்கிறது'' என்று சிந்தனைக்குப் பின் சொன்னான் சஞ்சயன்.

''அப்படி என்ன செய்து விடுவார்கள்?'' அமைச்சரின் ஆவல் அதிகமாயிருந்தது.

''மரக்கலத்தின் பாய்மரமொன்றில் கட்டிப் போடுவார்கள்...'' சஞ்சயன் தொடங்கினான்.

''அது சகஜம்'' என்றார் அமைச்சர்.

''கட்டியவனுக்கு உணவு கிடையாது'' என்றான் சஞ்சயன்.

''அதுவும் சகஜம். அன்னதானம் செய்வதற்கா சிறைப் பிடிக்கிறார்கள்?'' என்று அமைச்சர் வினவினார்.

''கைகால்களை நீங்கள் அசைக்க முடியாது...''

''அசைக்கும்படி கட்டுவானேன்?'' என்று அமைச்சர் கட்டின் அவசியத்தைத் தெளிவாக்கினார்.

''இப்படிக் கட்டிப் போடுபவர்கள் அநாதைகளென்றும் தங்களின் பிற்கால பட்சணமென்றும் கடல் நாரைகளுக்குக் கூடத் தெரியும்.''

"கடற் பறவைகளுக்கு இதுகூடத் தெரியுமா?"

"அவை கட்டியிருப்பவனைக் கொத்தும்...."

"கஷ்டம்தான்"

"கொத்தினால் ரத்தம் வரும்...."

"மனிதனைக் கொத்தினால் ரத்தம்வராமல் வேறென்ன வரும்?"

"அந்த ரத்தத்தை உறிஞ்ச சிறிய பறவைகள் சில வரும். அவை மாமிசப் பட்சிணிகள்."

"மாமிசப் பட்சிணிகளுக்குத்தான் ரத்தம் பிடிக்கும்" என்று அமைச்சர் சொன்னார்.

இப்படி அமைச்சர் ஒவ்வொன்றுக்கும் சமாதானம் சொல்லவே சீற்றமடைந்த சஞ்சயன், "விளையாட இது சமயமல்ல அமைச்சரே!" என்றான்.

"என் கழுத்தைத் திருகுவது விளையாட்டு விஷய மல்ல. அதற்காக நான் பிராணனைவிடத் தயாராயில்லை." என்ற அமைச்சர், "சஞ்சயா! பயத்தால் நாம் பிராணனை விடவேண்டாம். நாம் இனி மாளிகைக்குப் போவோம்" என்றும் சொன்னார். பிறகு கடல்வேந்தனை நோக்கித் திரும்பி, "நான் மகளை எப்பொழுது சந்திக்கலாம்" என்று கேட்டார்.

அமைச்சரின் துணிவையும் நிதானத்தையும் கண்ட கடல்வேந்தன் வியப்பு உச்சத்துக்குச் சென்றது. "இன்னும் சிறிது நேரத்தில் பொழுது விடியலாம். நாளை இரவு உமது மகள் மாளிகைக்கு வருவாள்" என்று கூறினான்.

"நாளை உன்னையும் எதிர்பார்க்கிறேன்" என்ற அமைச்சர், சஞ்சயனை, தம்மைத் தொடரும்படி கூறி வெளியேற முயன்றார். அப்பொழுதுதான் வேந்தன் கையி லிருந்த குறுவாளைப் பார்த்தார். அவர் முகத்தில் சொல்ல வொண்ணாத பிரமிப்பு விரிந்தது. "அது ஏது உனக்கு?" பிரமிப்பின் ஊடே வினவினார்.

"ஏன் இதில் என்ன விசேஷம்?" என்று கடல்வேந்தன் வினவினான், அவர் பிரமிப்புக்குக் காரணத்தை அறி யாமல்.

"அத்துடன் சேரநாட்டுச் சரித்திரம் கலந்திருக் கிறது" என்றார் அமைச்சர். பிறகு அதைக் கடல்வேந்த னிடமிருந்து வாங்கி இருமுறை திருப்பி ஊன்றிப் பார்த் தார். "ஆம், அதே குறுவாள்தான். சந்தேகமில்லை. இதைப் பெற மன்னர் எதை வேண்டுமானாலும் தருவார்" என்றும் கூறினார். பிறகு அதன் வரலாற்றையும் விவரிக்க லானார்.

□

8. குறுவாளின் கதை

ஆற்றுக்கு அக்கரையிலிருந்த தமது அரண்மனைக்குப் புறப்பட்டுவிட்ட அமைச்சர் அழும்பில்வேள், தனது கையிலிருந்த குறுவாளைக் கண்டதும் பிரமித்து நின்று அந்தக் குறுவாளைக் கையில் வாங்கித் திருப்பிப் பார்த்து, அந்தக் குறுவாளைப் பெற மன்னர் எது வேண்டுமானாலும் தருவார் என்று கூறியதும் வியப்படைந்த கடல்வேந்தன், "அப்பேர்ப்பட்ட மகிமை இதில் என்ன இருக்கிறது?" என்று வினவினான்.

அமைச்சர் அழும்பில்வேள் உடனடியாகப் பேசச் சிறிது தயங்கினாலும், பிறகு சமாளித்துக் கொண்டு, "ஏற்கெனவே சொன்னேன், இத்துடன் சேரநாட்டு வரலாறு கலந்திருக்கிறது என்று" என மீண்டும் கூறினார். அடுத்த கேள்வியைக் கடல்வேந்தன் தொடுக்கு முன்பே அந்தக் குறுவாளின் பிடியைத் திருப்பி கழுகின் விரிந்த சிறகுகளின் அடியைக் காட்டி, "இதைப் பார்" என்று கூறினார்.

கடல்வேந்தன் கழுகுச் சிறகுகளின் அடிப்பாகத்தைப் பார்த்தான். அதில் சில வரிகள் வெளிநாட்டு மொழி ஏதோ ஒன்றில் எழுதப்பட்டிருந்ததைக் கவனித்து, "ஆம். ஏதோ எழுதப்பட்டிருக்கிறது" என்று சொன்னான்.

அமைச்சர் ஆம் என்பதற்கு அறிகுறியாகத் தமது தலையை அசைத்தார். "அது என்ன மொழி தெரியுமா?" என்று வினவவும் செய்தார்.

"தெரியவில்லை" என்றான் கடல்வேந்தன்.

"இந்தக் குறுவாளை இதற்கு முன்பு நீ பார்த்ததில்லையா?" அமைச்சரின் கேள்வியில் வியப்பு ஒலித்தது.

குறுவாளைப் பார்த்திருக்கிறேன். இத்தனை கூர்ந்து கவனித்ததில்லை" அமைச்சர் இத்தனை கேள்விகள் எதற்காகக் கேட்கிறார் என்ற நினைப்பால் கடல்வேந்தன் சிறிது குழப்பமும் கொண்டான்.

"அமைச்சரே குறுவாளின் கதையை விளக்க முற்பட்டு, "வேந்தனே! இதன் சிறகுகளின் அடிப்புறத்திலிருப்பது கிரேக்க மொழி. இது சேர மன்னர் செங்குட்டுவனின் உயிரைக் காத்தது. பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவந்தான். ஆனால் இன்று நினைத்தாலும் உடல் சிலிர்க்கிறது. எனக்கு" என்றார். சிறிது நிதானித்துவிட்டு மேலும் சொன்னார். "கடல் வேந்தனே! சேர மன்னர் தோள்வலியும், வாள் வலியும் உலகம் அறிந்தவை. வடநாட்டு மன்னரையும் வெற்றிகொண்டு இமயத்திலோர் இலச்சினையும் பொறித்து வந்த சேர மன்னர் செங்குட்டுவர் அடிக்கடி கடல் புறமும் யவனர் சேரிக்கும் செல்வார். சேரர் தலைநகர் கருர் வஞ்சியானாலும் இந்த முசிறி மாநகரில் அவருக்கு ஒரு தனிப்பட்ட அன்பு உண்டு. சுள்ளியாற்று சங்கமத துறையில் நின்று எத்தனையோ முறை கடலை உற்றுப் பார்த்திருக்கிறார். அப்பொழுது பல முறை சேர நாட்டுப் படைத்தலைவர் வில்லவன்கோதையும் நானும் கேட்டிருக்கிறோம், மாமன்னரை, "இந்தக் கடலை ஏன் துருவிப் பார்க்கிறீர்கள்?" என்று. சேரர் பெருமான் ஒருநாள் பதில் சொன்னார். "இதற்கு அப்பால் யவன நாடு இருக்கிறது. அதைப் பற்றி வணிகர்கள் எல்லாரும் பெருமையாகப் பேசுகிறார்கள். அங்குள்ள செல்வம், வீரம் எல்லாவற்றையும் பாராட்டுகிறார்கள். அந்த நிலத்தை வெற்றி கொண்டால் என்ன என்று சிந்திக்கிறேன்" என்று.

"அது முடிகிற காரியமா?" என்று வில்லவன் கோதை கேட்டார்.

"மேதைக்கு முடியாதது எதுவுமில்லை. பேதைக்கு முடிந்தது எதுவுமில்லை" என்று மன்னர் சொன்னார். சேரமன்னர் மாமேதை. கருத்தை வைத்து ஒரு காரியத்தில் இறங்கிவிட்டால் அதை முடிக்காமல் விடமாட்டார். அன்று உருவான கரு, அந்த நோக்கம், மன்னர் மனத்தை விட்டு அகலவில்லை. அன்று முதல் அடிக்கடி யவனர் குடியிருப்புக்குச் செல்லத் தொடங்கினார். யாருக்கும் தெரியாமல் தனியாகவே சென்றார். இப்படிப் பல நாள்கள் கடந்தன. ஒரு நாள் சுள்ளியாற்றங்கரை அரண்மனை திரும்பியபோது ஒரு யவனச் சிறுவனைக் கைகளில் தூக்கி வந்தார். அவனை வாங்கிக் கொள்ள வந்த பணிமக்களை விலகும்படி சைகை செய்து தமது பள்ளியறைக்கு அவனைத் தூக்கிச் சென்றார். அவனுக்கு மன்னர் பிரானின் வைத்தியரே வைத்தியம் செய்தார். வைத்தியரை விசாரித்ததில், "யாரோ ஒரு யவனச் சிறுவன் முதுகில் பெரிய கத்திக்குத்து, குற்றுயிரும் குலை உயிருமாகக் கிடக்கிறான். மன்னர் மேல் வீசப்பட்ட குறுவாளை அவன் ஏற்று மன்னரைக் காப்பாற்றினானாம். வைத்தியம் செய்கிறேன்" என்று சொன்னார் வைத்தியர். அதற்குமேல் ஏதும் சொல்ல மறுத்தார். நாள்கள் ஓடின. இருமுறை வஞ்சித் தலைநகரிலிருந்து முக்கிய செய்திகள் வந்தன. அங்கிருந்த அமைச்சர்கள் மன்னரைத் திரும்பி வரும்படி விண்ணப்பித்துக் கொண்டார்கள். ஆனால், மன்னர் முசிறியை விட்டு நகரவில்லை. இரண்டு மாத காலம் அங்கிருந்தே அரசாங்க அலுவல்களைக் கவனித்தார். பரணரையும் அங்கு வரவழைத்துக் கொண்டார். யவனச் சிறுவன் காலாகாலத்தில் குணமடைந்தான். ஆனால் அவன் பகல் வேளைகளில் அரண்மனையை விட்டு வெளிவருவதில்லை. இரவில் மட்டும் மன்னருடன் படகில் சுள்ளியாற்றில் பயணம் செய்வான். அவன் மொத்தம் நான்கு மாதங்கள் அங்கு தங்கியிருந்தான். ஒரு நாள் அவன் திடீரென மறைந்துவிட்டான். அவனை வலை

போட்டுத் தேடினோம். கிடைக்கவில்லை. அவன் மறைந்த ஒரு வாரம் கழித்து, யாரோ ஓர் அயல்நாட்டு வணிகன் மன்னரைத் தேடிக் கொண்டு வந்தான். ஏதோ செய்தி சொன்னான். ஆனால், எங்களுக்கு அது என்ன என்பது புரியவில்லை. மன்னர் அவனைத் தனிமையில் சந்தித்தார். அவன் போன பிறகு என்னையும் வில்லவன் கோதையையும் அழைத்து இதே மாதிரி ஒரு குறுவாளை எங்களிடம் காட்டினார். அந்தக் குறுவாள் சுற்றப்பட்டு வந்த வெள்ளைச் சீலை ஒன்றையும் காட்டினார். சீலையில் ஒரு கடிதம் மிக நீளமாயிருந்தது. அதைக் காட்டிய மன்னர் சொன்னார், "இங்குள்ள யவனவர்களிடம் எச்சரிக்கையாயிருக்கும்படி கடிதத்தில் கண்டிருக்கிறது. இந்த எச்சரிக்கையை விடுத்திருப்பவன் அந்த யவனச் சிறுவன். அந்தக் குறுவாள் யவன ராஜகுடும்பத்தினுடையது என்று குறிப்பிட்டு, "இதே மாதிரி சித்திரத்தைச் சீலையில் தீட்டி வருபவனிடம் இந்தக் குறுவாளைக் கொடுத்து விடவும். அது போய்ச் சேர வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேரும் என்றும் எழுதியிருக்கிறான்" என்று விளக்கினார் மன்னர். வணிகனுக்கு நிரம்பப் பொருள் கொடுத்து அனுப்பினார். அடுத்து யவனர் சேரியிடம் அதிகக் கண்காணிப்பை ஏற்படுத்தினார். ஆனால் எதுவும் நிகழவில்லை. யவனர் சேரி அமைதியாகவே இருந்தது. அவர்களிடமிருந்து வியாபாரமும், சுங்க வரிப்பணமும் அதிகமாகவே வந்து கொண்டிருந்தன. அந்தக் குறுவாளை மன்னர் பத்திரமாக வைத்திருந்தார். ஒருநாள் சுள்ளியாற்றங்கரையிலிருந்து திரும்பிய போது இடையிலிருந்த அந்தக் குறுவாள் காணப்படவில்லை. அதற்குப் பதில் அவர் இடையில் அதே குறுவாளின் படம் வரையப்பட்ட சீலை மட்டும் இருந்தது. அரண்மனை திரும்பிய மன்னர் ஒரு குறிப்பிட்ட படகின் அடையாளத்தைச் சொல்லி, அதை மடக்கிக் கொணருமாறு ஆற்றங்கரைக் காவலருக்கு உத்தரவிட்டார். அவர் சொன்ன அடையாளமுள்ள படகு மாயமாய் மறைந்து விட்டது.

திரும்ப அது இந்தப் பிராயந்தியத்தில் காணப்படவில்லை. அந்தக் குறுவாளைத் திரும்பக் கொணருபவர்களுக்கு யவனர் பொற்காசுகளை நிரம்ப அளிப்பதாகப் பறைமூலம் அறிவித்தார். குறுவாளும் வரவில்லை. அதைப் பற்றிப் பிறகு எந்தச் செய்தியும் இல்லை. இப்பொழுது இருபது ஆண்டுகள் ஓடிவிட்டன. இதுவரை எந்தச் செய்தியும் கிடையாது. இன்றுதான் இதைப் பார்க்கிறேன்."

இத்துடன் கதையை முடித்த அமைச்சர், "இப்பொழுதுகூட இதை நீ என்னிடம் கொடுக்கலாம்" என்றார்.

"கொடுத்தால்?" கடல்வேந்தன் வினவினான்.

"அரசரிடம் பரிசு பெறலாம்" அமைச்சர் ஆசை காட்டினார்.

"அரசர் பரிசு கொடுக்கக்கூடிய நிலையில் இருக்கிறாரா?" கடல்வேந்தன் கேட்டான் ஏளனத்துடன்.

"ஏனில்லை?"

"அவருடைய பொருளையே அவரால் காப்பாற்ற முடியவில்லையே; அவருடைய இரண்டு பெட்டி வரிப்பணம் என்னிடமிருக்கிறதே."

"கொள்ளையடித்தாய்..."

"எப்படியோ என்னிடமிருக்கிறது" என்ற கடல்வேந்தன், "அமைச்சரே! கடல்வேந்தன் தனது நண்பர்களைக் கைவிட்டதாகச் சரித்திரமில்லை. இனியும் அது ஏற்படாது. இது எனது மரக்கலத் தலைவன் க்ளேனியஸுக்குச் சொந்தம். அவனிடம் திரும்பிப் போகும்" என்று திடமாகச் சொன்னான்.

மேற்கொண்டு ஏதும் பேசாமல் அழும்பில்வேள் சஞ்சயனுடன் தமது மாளிகைக்குக் கிளம்பினார். அவர் சென்றதும் கட்டிலின் மூலையில் உட்கார்ந்திருந்த நிலக்கள்ளியை நோக்கிய கடல்வேந்தன், "நிலக்கள்ளி! விசித்திரமான கதையல்லவா?" என வினவினான்.

"ஆம்" என்றாள் நிலக்கள்ளி. கட்டிலைவிட்டு இறங்கி கடல்வேந்தன் பக்கத்திலும் நின்று கொண்டாள்.

"இதற்கு முன்பு இந்தக் கதையைக் கேட்டிருக்கிறாயா?" என்று கடல்வேந்தன் நிலக்கள்ளியைக் கேட்டான்.

"நீங்கள்?" நிலக்கள்ளி திருப்பினாள் கேள்வியை.

"கேட்டதில்லை."

"உங்களைவிட எனக்கு வயது குறைவு. நான் எப்படி கேட்டிருக்க முடியும்?"

"அறிவு வயதைப் பொறுத்ததல்ல!"

"ஆனால் அனுபவம் வயதைப் பொறுத்தது. உங்களுக்கிருக்கும் அனுபவம் எனக்கு ஏது?" என்று வினவினாள் நிலக்கள்ளி.

அதற்கு மேல் உரையாடலை வளர்க்காத கடல்வேந்தன், "வா நிலக்கள்ளி" என்று அமைச்சர் மகளை அழைத்துக்கொண்டு புறப்பட்டான். புறப்பட்ட சமயத்தில் மூதாட்டியை நோக்கி, "அம்மா! இன்னும் மூன்று நாள்களுக்கு இந்த இல்லத்தை மூடிவிடு" என்று உத்தரவும் இட்டான்.

இல்லத்திலிருந்து கிளம்பி, சுள்ளியாற்றங்கரைக்கு வந்ததும் அங்கிருந்த படகு எதிலும் ஏறாமல் அதன் கரையோரமே மேற்கு நோக்கி நடந்தான், நிலக்கள்ளியின் கையைப் பற்றிய வண்ணம். சுள்ளியாறு, கடலுடன் கலக்கும் இடத்திற்கு வந்ததும் கடற்கரையில் இழுத்து விடப்பட்டிருந்த சிறுபடகு ஒன்றை மீண்டும் நீரில் தள்ளி, நிலக்கள்ளி ஏறியதும் தானும் ஏறி, படகைச் செலுத்தலானான். படகு கடலில் புகுந்த பின்பு கடற்கரையிலிருந்து அதிகம் விலகாமல் ஓரமாகவே சென்றது. சுமார் அரை ஜாமம் இப்படிப் பயணம் செய்தபிறகு

எட்ட இருந்த ஒரு மரக்கலத்தை நோக்கிச் சென்றது. அந்த மரக்கல நூலேணியில் முதலில் நிலக்கள்ளியை ஏற விட்ட கடல்வேந்தன் அவளைத் தொடர்ந்து தானும் ஏறினான்.

அவர்கள் தளத்தில் ஏறுவதற்கும் பொழுது புலருவதற்கும் சரியாயிருக்கவே தமிழக மாலுமிகள் வேட்டிகளை இறுக்கிக் கட்டியும், பிற நாட்டு மாலுமிகள் சராயைச் சுருட்டிவிட்டுக் கொண்டும், தளத்தைச் சுத்தம் செய்யலானார்கள். க்ளேஸியஸும் தனது அறையிலிருந்து வெளியே வந்து கப்பலை சாதாரண மாலுமிகளுடன் சேர்ந்து சுத்தம் செய்யத் தனது மேலங்கியைக் கழற்றி இடையில் கட்டிக் கொண்டு தளத்தைச் சுத்தம் செய்யக் குனிந்தான் துடைப்பத்துடன். அவன் முதுகைக் கவனித்த நிலக்கள்ளி பிரமித்தாள். அதில் ஒரு குறுவாள் பாய்ந்த தழும்பு பெரிதாகத் தெரிந்தது. அதை அடுத்து பச்சையும் குத்தப்பட்டிருந்தது. நிலக்கள்ளி கடல்வேந்தனை நோக்கினாள். அவன் முகம் கல்லாயிருந்தது. பதிலே சொல்லாமல் கடல்வேந்தன் அவள் கையைப் பிடித்து தரதரவென்று இழுத்துக் கொண்டு தனது அறைக்குச் சென்று விட்டான். நிலக்கள்ளி தரதரவென்று இழுக்கப்பட்ட சமயத்திலும் திரும்பித் திரும்பி க்ளேஸியஸின் முதுகைப் பார்த்துக் கொண்டே சென்றாள். அவளை அறைக்குள் அழைத்துச் சென்றதும் கதவை மூடிய கடல்வேந்தன், "இந்த மரக்கலத்தில் இருக்கும்வரை இன்று கண்டதை யாரிடமும் சொல்லாதே" என்று கண்டிப்பான குரலில் கூறினான்.

"கூறினால்?" நிமிர்ந்து நின்று இறுமாப்புடன் வினவினாள் நிலக்கள்ளி.

"உன் உயிர் அரைக்காசு பெறாது" என்றான் கடல்வேந்தன். அவன் முகத்தில் கவலை அதிகமாகப் படர்ந்திருந்தது.

□

9. துணைவன்

க்ளேஸியஸின் முதுகிலிருந்த கத்திக்குத்தையும், அதன் கீழ் வல்லூறின் சிறகுகளைப் போல் குத்தப்பட்ட பச்சையையும் கண்டதும் கடல்வேந்தன் முகம் கல்லாகி விட்டதையும், தன்னைத் தரதரவென்று அறைக்கு இழுத்துவந்து அறைக் கதவைச் சாத்தி, "இன்று கண்டதை யாரிடமும் சொல்லாதே!" என்று எச்சரித்ததையும், சொன்னால் தனது உயிர் அரைக்காசு பெறாதென்பதையும் அவன் உரைத்தபோது சொற்களிலும், முகத்திலும் விரிந்த கவலையையும் கண்ட நிலக்கள்ளி, மெதுவாகக் கேட்டாள்: "இது உங்கள் மரக்கலந்தானே?" என்று.

ஆமென்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்த கடல்வேந்தன், "இருந்தாலும் இங்குள்ள மாலுமிகள் கொள்ளைக்காரர்கள். வேறு ஒரு தலைவன் தங்களுக்கு அதிகக் கொள்ளையைச் சம்பாதிக்க முடியுமென்று நினைத்தால் பழைய தலைவனைக் கொல்லவும் துணிவார்கள்" என்ற கடல்வேந்தன், "என்னைப் பற்றி எனக்குக் கவலையில்லை. இவர்களை அடக்கவும், அவசியமானால் அழிக்கவும் எனக்கு வழி தெரியும். ஆனால் நீ இருப்பதில் இடைஞ்சல்கள் இருக்கின்றன" என்றான்.

நிலக்கள்ளி அந்த அறையின் சாத்திய கதவை நோக்கினாள் ஒரு விநாடி. பிறகு சென்று அதைத் தாழிட்டுத் திரும்பி வந்து, கடல்வேந்தன் திண்ணிய தோள்களின் மீது தனது கைகளை வைத்து அவனைக் கூர்ந்து நோக்கினாள். "நிலக்கள்ளி அபாயத்தைப் பற்றி அஞ்சுபவளென்று நினைக்கிறீர்களா?" என்று வினவினாள், அவன் கண்களுடன் தனது கண்களைக் கலந்து.

கடல்வேந்தனின் கண்கள் அவள் இதயத்தை ஊடுருவி விடுவன போல் அவள் கண்களை நோக்கின. 'இல்லை நிலக்கள்ளி! நான் அப்படி நினைக்கவில்லை. மரணத்தைச் சற்றும் இமை கொட்டாத துணிவுடன் வரவேற்பாய் என்பது எனக்குத் தெரியும். ஆனால் மரணத்தை விடக் கொடிய அபாயங்கள் இருக்கின்றன'' என்றான் கடல் வேந்தன்.

அவன் எதைக் குறிப்பிடுகிறானென்பதை நிலக்கள்ளி புரிந்து கொண்டதால் புன்னகை செய்தாள், ''வேந்தரே! இந்த நிலக்கள்ளியின் மீது இஷ்ட விரோதமாகக் கை வைக்கத் துணிபவன் இனிமேல்தான் பிறக்கவேண்டும். என்னைப் பற்றிக் கவலை வேண்டாம். ஆனால் க்ளேஸியஸின் முதுகின் காயத்தைக் கண்டதும் ஏன் அத்தனை கவலை கொண்டீர்கள்?'' என்று நிலக்கள்ளி வினவினாள். கடல்வேந்தன் அவள் இடையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போய் அங்கிருந்த பஞ்சணையில் உட்கார வைத்தான். பிறகு அந்த அறையில் குறுக்கும் நெடுக்குமாகச் சில விநாடிகள் தீவிர சிந்தனையுடன் உலாவினான். மீண்டும் உலாவலை நிறுத்தி அவள் எதிரில் வந்து நின்று கொண்டு, ''நிலக்கள்ளி! அமைச்சர் சொன்ன கதையை நீ கேட்டாயல்லவா?'' என்று வினவினான்.

''கேட்டேன்'' என்று சர்வசாதாரணமாகச் சொன்னாள் நிலக்கள்ளி.

''மன்னர் காப்பாற்றி அரண்மனையில் சிகிச்சை செய்த சிறுவனின் முதுகில் கத்திக்குத்து இருந்ததாக உன் தந்தை குறிப்பிட்டார்....'' என்று கடல்வேந்தன் வாசகத்தை முடிக்காமல் விட்டான்.

''ஆம். குறிப்பிட்டார்.''

''க்ளேஸியஸின் முதுகில் கத்திக்குத்து விழுந்த வடு இருக்கிறது.''

''ஆம். கவனித்தேன் அதையும்''

''அதன் கீழ் குறுவாளின் பிடியைப் போல பச்சையும் குத்தப்பட்டிருக்கிறது.''

''பார்த்தேன்.'' நிலக்கள்ளியின் பதிலில் ஏதோ ஒருவித சந்தேகம் ஒலித்தது.

கடல் வேந்தன் விளக்கினான் காரணத்தை. ''நேற்று வரை இந்தப் பச்சை குத்தப்படவில்லை, அவன் முதுகில்'' என்று கூறியவன் ''க்ளேஸியஸ் வேண்டுமென்றே இந்தப் பச்சையைக் குத்திக்கொண்டிருக்கிறான். அதற்காகவே அவன் மரக்கலத்தை விட்டு நேற்று கரைக்கு வந்திருக்கிறான். வேண்டுமென்றே இந்தப் பச்சையை இன்று என்னிடம் காட்டியிருக்கிறான். இதுவரை க்ளேஸியஸ் முதுகை யாரிடமும் காட்டியதில்லை. மேல் சட்டையில்லாமல் அவனை யாரும் பார்த்ததில்லை. மரக்கலத்தை அலம்பும் போதும் அவன் சிறு சராயுடன் மேல் அங்கியை அணிந்தே வருவான். இன்றுதான் கீழ் சராயை மட்டும் அணிந்து முதுகைக் காட்டியிருக்கிறான். இதற்கு என்ன காரணமென்று நினைக்கிறாய்?'' என்று விவரித்து ஒரு வினாவையும் தொடுத்தான்.

நிலக்கள்ளிக்குக் காரணம் புரிந்தே இருந்ததானாலும் முழு மர்மத்தையும் அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. ''நீங்கள் அவனை யாரென்று உணர்ந்து கொள்ள வேண்டுமென்பதற்காக அங்கியில்லாமல் தளத்தைச் சுத்தம் செய்ய முற்பட்டிருக்கிறான். மன்னரால் காப்பாற்றப்பட்டவன்தான் என்பதை உணர்த்த பச்சை குத்திக் கொண்டிருக்கலாம்'' என்றாள் நிலக்கள்ளி.

அவள் சொன்னது சரியென்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்துவிட்டு, ''சொன்ன காரணம் சரிதான். ஆனால் காரணம் அத்துடன் நிற்கவில்லை. இந்தா. இந்தக்

குறுவாளைச் சரியாகப் பார். சிறகின் கீழ் எழுதப்பட்டிருக்கும் வரிகளையும் படிக்க முடிந்தால் படி" என்று கூறி குறுவாளை நிலக்கள்ளியின் கையில் கொடுத்தான்.

குறுவாளை இருமுறை திருப்பிப் பார்த்தாள் நிலக்கள்ளி. ஏதும் புரியாததால் கடல்வேந்தனை நோக்கி, "நீங்களே சொல்லுங்கள்" என்றாள்.

"இந்தக் குறுவாள் யவனராஜ பரம்பரையைச் சேர்ந்தது. இவன் யார் என்ற குடும்ப விவரம் கிரேக்க மொழியில் எழுதப்பட்டிருக்கிறது" என்று விளக்கிய கடல் வேந்தன், "இவன் தான் யார் என்பதை இதுவரை என்னிடம் சொல்லவில்லை. ஆனால் இன்று சொல்கிறான், தான் யவனராஜ பரம்பரையைச் சேர்ந்தவன் என்பதையும் குறிப்பிடுகிறான். அது உண்மையானால் முசிறி கிரேக்கர்கள் அனைவரும் அவனது சொற்படி கேட்பார்கள். இந்த முசிறி மாநகரை அவர்கள் ஆக்ரமித்துக் கொள்ள முயன்றால், அவர்களை அணிவகுத்து நடத்த உரிமையுள்ளவன் க்ளேஸியஸ்தான்" என்றும் கூறினான்.

நிலக்கள்ளியின் முகத்தில் வியப்பும் கவலையும் ஓரளவு அச்சமும் விரிந்தது. "அப்படியானால் இந்த ஆபத்தைப் பற்றி மன்னருக்குத் தெரிவிக்க வேண்டாமா?" என்று வினவினாள் நிலக்கள்ளி கவலை நிரம்பிய குரலில்.

கடல்வேந்தன் அவள் கன்னங்களிரண்டையும் தனது கைகளால் பிடித்துக் கொண்டான். "நிலக்கள்ளி! மன்னரிடம் இதைத் தெரிவிப்பதில் பயனில்லை. இந்த ஆபத்து உண்மையானது என்பதை இமயத்தையே வெற்றி கொண்ட சேரமாமன்னர் நம்புவது கஷ்டம். அப்படியே நம்பினாலும், அதை அலட்சியம் செய்வது சகஜம். இதை நாமேதான் சமாளிக்க வேண்டும்" என்று கூறி, குனிந்து அவள் இதழ்களைத் தனது இதழ்களால் லேசாகத் தொட்ட கடல்வேந்தன், "நீ எதையும் காணாதது போல் நடந்து கொள்" என்று புத்தியும் சொல்லிவிட்டு, அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்று விட்டான்.

சற்று நேரத்திற்கெல்லாம் அவன் தளத்தில் நின்று மாலுமிகளை அதட்டும் சத்தம் பெரிதாகக் கேட்டது. அந்த சத்தத்தாலும், அதை அடுத்து மாலுமிகள் துரிதமாகத் தளத்தைச் சரசரவென்று துடைப்பத்தால் தேய்த்த ஒலியாலும், இத்தனைக்கும் இடையில் அலுவலின் போது மாலுமிகள் வழக்கமாகப் பாடும் ஓடப்பாட்டைத் தொடங்கியதால் ஒலித்த இசையாலும் அமர்க்களப்பட்ட தளத்தைப் பார்க்க அறை வாயிற்படியிலிருந்து நிலக்கள்ளி வெளியே எட்டிப் பார்த்தாள்.

அன்று காலைக் கதிரவன் வீசிய ஒளியால் மரக்கலம் மோகனாகாரமாகக் காட்சியளித்தது. சூரிய ஒளியில் பளபளத்த கழிவு நீர் அலைச்சலும், மாலுமிகள் உடல்களில் துளிர்த்த வியர்வைகளை ஊடுருவிய காலைச் சூரியன், கதிர்கள் விளைத்த பற்பல ஒளிப்பிரதிபிம்பங்களும், மரக்கலத்தின் நடுவிலிருந்த இரு பாய்மரச் சீலைகளில் தீட்டப்பட்டிருந்த சித்திரங்களும் தளத்தின் அழகைப் பலமடங்கு அதிகப்படுத்தியிருந்தன. நங்கூரத்தில் ஆடி நின்ற அந்த மரக்கலம் காலைக் காற்றின் விளைவாக லேசாக அசைந்ததுகூட கண்களையும் இதயத்தையும் பறிக்கும்படியாக அமைந்திருந்தது.

அந்த வெயிலில் தரைகளைக் கழுவிய மாலுமிகள் குனிந்து ஆடிப் பணி செய்த முறையிலும் ஓர் ஒழுங்கு இருந்தது. அவர்கள் உடல்களின் அசைவுகளில் ஒரு கட்டுப்பாடு இருந்தது. ஏதோ யந்திரங்கள் வேலை செய்வது போல் வேலையைத் தொடங்கிய மாலுமிகள், நேரம் ஏறஏறத் துரிதமாக வேலை செய்ததால் மிகத் துரிதமாக அவர்கள் உடல்கள் ஆடின. ஒரு கூட்டு நடனம் நடப்பது போன்ற பிரமையை அளித்தது நிலக்கள்ளிக்கு. ஆகவே அவள் கடல்வேந்தன் அறையிலிருந்து வெளியே வந்து பக்கப்புறமாக யார் கண்ணிலும் படாமல் நகர்ந்து மரக்கலத்தின் மேற்குப் பகுதியை அடைந்து பக்கப் பலகை

ஓரமாகவே நடந்து சென்றாள். அந்த மரக்கலத்தின் நடுவில் கடல்வேந்தன் அறைக்கு நேர்ப்புறக் கோடியில் ஒரு சிறு அறை இருந்தது. அந்த அறையின் கதவில் குறுவாளால் வெட்டப்பட்ட ஓர் உருவம் இருந்ததைக் கவனித்தாள் நிலக்கள்ளி. அந்த உருவம் கிட்டத்தட்ட க்ளேஸியஸின் முகத்தைப் போலிருக்கவே அது அவன் அறையாகத் தானிருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டவள், அறைக்கதவு பாதி திறந்திருந்தது கண்டு உள்ளே மெல்ல எட்டியும் பார்த்தாள். அடுத்து அவள் திகில் வசப்பட்டாள். "உள்ளே வரலாம்" என்று உள்ளிருந்து வந்தது க்ளேஸியஸின் குரல்.

அவன் எப்பொழுது தனது அலுவலை முடித்துக் கொண்டான் என்பது அவளுக்கு விளங்கவில்லையாதலால் அவள் உடனடியாக உள்ளே செல்லாமல் வாயிற்படியிலேயே நின்று, "மன்னிக்க வேண்டும். நீங்கள் உள்ளேயிருப்பதைப் பார்க்கவில்லை" என்று கூறிவிட்டுத் திரும்ப முயன்றாள்.

மீண்டும் க்ளேஸியஸின் குரல் ஒலித்தது, "இங்கு அச்சப்பட ஏதுமில்லை. தைரியமாக வாருங்கள். கப்பல் தலைவியாரை யாரும் எதுவும் செய்ய முடியாது" என்று.

உள்ளே நுழைந்த நிலக்கள்ளி அந்த அறைப் பலகைகளில் கத்தியால் பற்பல உருவங்கள் செதுக்கப்பட்டிருப்பதைக் கண்டாள். ஒரு பெண்ணின் பெரிய நிர்வாணப் படம் செதுக்கப்பட்டிருந்ததைக் கண்டு திரும்ப முயன்றவளை நோக்கி, "அம்மணி! அந்தப் படத்தில் தவறு ஏதுமில்லை. அது கிரேக்கர்களின் அழகுத் தெய்வமான வீனஸின் படம்" என்று விளக்கினான்.

"இருக்கட்டும். நான் வருகிறேன்" என்று கூறிவிட்டுத் துரிதமாக வெளியே சென்றுவிட காலை எடுத்து

வைத்தவள் சட்டென தானாகவே நின்றாள். அந்த அறையின் ஒரு புறத்தில் சேரன் செங்குட்டுவனின் உருவம் செதுக்கப்பட்டிருந்தது. அவன் காலடியில் ஒரு யவன மங்கை படுத்துக் கிடந்தாள். அவள் தலை மன்னன் திருவடிகளைத் தலையணையாகக் கொண்டிருந்தது.

அந்த இரு உருவங்களையும் மாறி மாறிக் கண் கொட்டாமல் பார்த்தாள் நிலக்கள்ளி. "சேர மன்னனுக்கு யவன நாட்டுக் காதலியும் இருந்திருக்கிறார்களா?" என்று மனத்துக்குள் கேட்டுக் கொண்டாள். இருப்பினும் ஏதும் அறியாதது போல், "அவர் யார்?" என்று வினவினாள்.

"படத்தில் நிற்பவர் என் தந்தை. அவர் காலடியில் கிடப்பவள் என் தாய்" என்று விளக்கிய க்ளேஸியஸ், தான் உட்கார்ந்திருந்த மஞ்சத்திலிருந்து எழுந்து வந்து நிலக்கள்ளி பக்கத்தில் நின்று கொண்டான். "அம்மணி! ஒன்று சொல்வேன் கேட்பீர்களா?" என்றான்,

"சொல்லுங்கள்" நிலக்கள்ளியின் குரல் வறண்டு கிடந்தது.

"இரவு வரை இந்த மரக்கலத்தில் இருக்க வேண்டாம். பிற்பகலிலேயே கரைக்குச் சென்று விடுங்கள்" என்ற க்ளேஸியஸின் குரலும் வறண்டிருந்தது.

"இதை வேந்தரிடம் சொல்லுங்கள்" என்ற நிலக்கள்ளி வாயிற்படியை நோக்கித் திரும்பினாள். மாலுமியொருவன் அங்கு அவளுக்குச் சிற்றுண்டி கொண்டு வந்திருந்தான். "இங்கேயே சாப்பிடுகிறீர்களா?" என்று வினவினான் அந்த மாலுமி.

"கோடிக்கே வருகிறேன்" என்ற நிலக்கள்ளி அவனுடன் மரக்கலத்தின் சுக்கான் இருந்த கோடியை அடைந்து தளத்தரையில் உட்கார்ந்து கொண்டாள். 'உங்களுடன்

தலைவரும் கலந்து கொள்வார்'' என்று கூறிய மாலுமி உணவுத் தட்டைக் கீழே வைத்துவிட்டுச் சென்றான். அடுத்த சில விநாடிகளில் கடல்வேந்தனும் அங்கு வந்து அவள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். அவனுக்கும் மாலுமி உணவைக் கொண்டு வரவே, அதை எடுத்துப் புசித்த வண்ணம் கடல்வேந்தன் அவளை நோக்கி,''உன்னை யார் அறையை விட்டு வெளியே வரச் சொன்னது?'' என்று வினவினான்.

''நான் இங்கு சிறையிலா இருக்கிறேன்?'' என்று கேட்டாள் நிலக்கள்ளி.

கடல்வேந்தன் அதற்குப் பதில் சொல்லவில்லை ''க்ளேஸியஸ் என்ன சொன்னான்?'' என்று வினவினான்.

''குறிப்பாக எதுவும் சொல்லவில்லை. என்னை இன்று பிற்பகலிலேயே கரைக்குச் செல்லும் படி சொன்னான்'' என்றாள் நிலக்கள்ளி.

கடல்வேந்தன் தலையை அசைத்தான். அவன் முகத்தில் ஏதோ ஒரு பயங்கரச் சாயை விரிந்தது. ''உணவு அருந்தியதும் அறைக்குப் போ. நான் அழைக்கும் வரை வெளியில் வராதே'' என்று கூறினான்.

அவன் சொன்ன வண்ணம் அறைக்குள் சென்றாள் நிலக்கள்ளி. அவன் இரவு மூண்டதும் அறைக்குள் வந்தான். ''நீ கிளம்பலாம், உன்னை இன்றிரவு ஒப்படைப்பதாக உன் தந்தையிடம் கூறியிருக்கிறேன்'' என்று சொன்னான்.

''நீங்கள் வரவில்லையா?'' என்று கேட்டாள் நிலக்கள்ளி,

''இல்லை''

''வேறு யார் எனக்குத் துணை?''

கடல் வேந்தன் நிதானமாகப் பதில் சொன்னான். ''க்ளேஸியஸ்'' என்று அவன் பதிலைத் தொடர்ந்து க்ளேயஸும் அறைக்குள் நுழைந்தான்.

□

10. சஞ்சயன் சாமர்த்தியம்

சேரன் செங்குட்டுவனைத் தனது தந்தையென்று அன்று பகலில் அறிவித்தவனும் யவனராஜ பரம்பரையைச் சேர்ந்தவனென்று கடல்வேந்தனால் நிர்ணயிக்கப்பட்டவனுமான க்ளேஸியஸ் அந்த இரவில் தனக்குத் துணை வருவானென்று கடல் வேந்தன் சொன்னதும் சொல்லாததுமாக அவனே அறைக்குள் நுழைந்ததைக் கண்ட நிலக்கள்ளியின் மனம் மாறுபட்ட உணர்ச்சி அலைகளால் தூக்கி எறியப்பட்டது. கடல்வேந்தனையே கொல்ல முயன்றவனும், மர்மமான வாழ்க்கைச் சரிதத்தைப் படைத்தவனுமான க்ளேஸியஸ் தான் போகும் வழியிலோ, அதற்கு அப்புறமோ தாறுமாறாக நடந்து கொண்டால் என்ன செய்வது என்ற பயம் நிலக்கள்ளிக்கு அடியோடு இல்லை. ஆனால் தன்னைச் சிறைபிடித்தோ, தன்னை உபயோகித்து வேந்தனுக்கு ஏதாவது ஊறு விளைவிக்கவோ க்ளேஸியஸ் எண்ணினால் என்ன செய்வது என்று சிந்தித்தாள். தவிர, தன்னை அவன் கொண்டு போய் விட்டுத் திரும்பமுடியாமல் தன் தந்தையோ, சேர நாட்டு வீரர்களோ அவனை மடக்கி விட்டால் கப்பலில் வேந்தன் கதி என்ன ஆகும்? தரையில் யவனர் சேரி கொதித்தெழுந்தால் பரிகாரம் எப்படி என்றெல்லாம் யோசித்தாள் நிலக்கள்ளி.

இத்தகைய எண்ணங்களால் அவள் வதனத்தில் படர்ந்த சிந்தனை மேகத்தைக் கண்ட கடல் வேந்தன் அவள் உள்ளத்தில் ஓடிய சந்தேகங்களைப் புரிந்து கொண்டதால் சொன்னான். ''நிலக்கள்ளி! க்ளேஸியஸைப் பற்றி எந்தவித சந்தேகமோ, கவலையோ வேண்டாம். துணிவில் என்னை மிஞ்சியவன். எந்த இக்கட்டிலும் வெளிவரும் சாமர்தியம் உடையவன். ஆகையால் அவனுடன்

நிர்ப்பயமாகப் போய் வா'' என்று. இதைச் சொன்ன கடல்வேந்தன் புன்முறுவல் செய்தான். ஆனால் க்ளேஸியஸின் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் இல்லை. அவன் வாயைத் திறக்கவும் இல்லை.

கடல் வேந்தனே மேலும் பேச முற்பட்டு'' க்ளேஸியஸ்! இந்த நிலக்கள்ளி எந்தவித கஷ்டத்துக்கும் ஆளாகாமல், அவள் தந்தையிடம் போய்ச் சேருவதைப் பொறுத்திருக்கிறது நமது நலன். ஆகையால் உன் கண்களைக் காக்கும் இமைகளைப் போல் இவளைப் பாதுகாத்து அழைத்துச் செல். நமது மரக்கலத்துக்கும் மாலுமிகளுக்கும் அதிகாரப் பூர்வமாக அபயம் அளிக்கப்படுமானால், சேர மன்னன் அரசுக்குப் பலமாக இது இயங்க முடியுமானால் நாளை இந்தத் துறைமுகத்துக்கு யவன நாட்டிலிருந்து வரும் கப்பலின் வணிகப் பொருள்கள் சூறையாடப்படமாட்டா, என்று உறுதி கூறிப் பார். அவர் நாம் கோரிய படி அத்தாட்சி பத்திரம் பொடுத்தால் அதை வாங்கி வா'' என்று கூறிவிட்டு, ''இந்தா உனது குறுவாள். இதன் மீது இவளை உன் உயிரைக் கொடுத்துப் பாதுகாப்பதாக சத்தியம் செய்'' என்று குறுவாளையும் க்ளேஸியஸிடம் நீட்டினான்.

தனது நீண்ட கரத்தால் அந்தக் குறுவாளை வாங்கிக் கொண்ட க்ளேஸியஸ் அதைத் தன் இதழ்களால் முத்தமிட்டு, இடையில் செருகிக் கொண்டு வேந்தனுக்கும் நிலக்கள்ளிக்கும் தலை வணங்கினான். ''வாருங்கள் தேவி!'' என்று நிலக்கள்ளியை அழைத்துவிட்டு, அந்த அறையை விட்டு வெளியேறினான். அடுத்த விநாடி அந்த அறை சாத்தப்பட்டதால் புன்முறுவல் கொண்டு அறை வாயிற்படியின் அருகிலேயே நின்றான்.

உள்ளே நிலக்கள்ளி கடல் வேந்தனின் அணைப்பிலிருந்தாள். ''நீங்கள் கேட்டபடி அவன் சத்தியமேதும் செய்யவில்லையே?'' என்று வினவினாள்.

''செய்தான் தேவி. குறுவாளை முத்தமிட்டு உனக்கும் எனக்கும் வணங்கவில்லையா அவன்?'' என்று கேட்டான் கடல்வேந்தன்.

''ஆம்'' என்றாள் நிலக்கள்ளி.

''அதுதான் அவர்கள் சத்தியம் செய்யும் முறை. ஒரு முறை இப்படி சத்தியம் செய்துவிட்டால் யவனர்கள் உயிர் போனாலும் அதிலிருந்து வழுவமாட்டார்கள். தைரியமாகப் போய் வா'' என்ற கடல்வேந்தன் ''நீ எங்கிருந்தாலும் நான் அருகிலிருப்பேன் என்பதை நினைவில் வைத்துக்கொள்'' என்று உற்சாகமும் ஊட்டினான்.

''எங்கிருந்தாலுமா?''

''ஆம்,''

''நீங்களென்ன ஆண்டவனா, எல்லா இடத்திலும் ஒரே நேரத்தில் இருக்க?''

''சில சமயங்களில் மனிதன் ஆண்டவனாக வேண்டியிருக்கிறது. நான் எங்கு தோன்றுவேன், எப்படி தோன்றுவேன் என்பதை யாராலும் கண்டுபிடிக்க முடியாது. உன் தந்தையின் மாளிகையில் நான் தோன்றவில்லையா?''

இதைக் கேட்ட இளநங்கை புன்முறுவல் செய்தாள். ''ஆம், ஆம் தோன்றினீர்கள், என்னை தூக்கிவரத் திட்டமிட்டு'' என்று சொன்னாள் புன்முறுவலின் ஊடே.

கடல்வேந்தன் ஒருமுறை அவளை இறுக அணைத்து. ''நிலக்கள்ளி! வாயிலில் யவனன் காத்திருக்கிறான். தாமதிக்காதே. அவன் ஏதாவது வித்தியாசமாகவும் நினைப்பான்'' என்று கூறிவிட்டு அறைக்கதவைத் திறந்து அவளுடன் வெளியே வந்து கிளேஸியஸிடம அவளை ஒப்படைத்தான்.

க்ளேஸியஸ் இருவருக்கும் தலைவணங்கி முன்னே நடந்தான். நிலக்கள்ளி மட்டும் அவனைப் பின்பற்றினாள். கடல்வேந்தன் அறை வாயிலிலேயே நகராமல் நின்றான். ஒரே ஒரு முறை திரும்பி கடல்வேந்தனைப் பார்த்த நிலக்கள்ளி க்ளேஸியஸைத் தொடர்ந்தாள். அவர்களிருவரும் மரக்கலச் சார்புப் பலகையை அடைந்ததும் க்ளேஸியஸ் அதைத் தாண்டி அங்கு பிணைத்திருந்த நூலேணியில் இறங்கினான் வேகமாக. இறங்கிக் கீழிருந்த படகொன்றில் குதித்து நூலேணியை அசைத்தான். நிலக்கள்ளி இறங்கலாமென்பதற்கு அடையாளமாக, நிலக்கள்ளி தனது ஆடையைச் சுருட்டி கால்களுக்கிடையில் திணித்து, திணித்த நிலைகளிலும் கால்கள் சிறிதும் புலப்படாதிருக்க சேலையைச் சுற்றிக் கப்பலின் சார்புப் பலகை மீது காலொன்றைப் போட்டு லாகவமாக நூலேணியில் கால் வைத்தாள். பிறகு சரசரவென்று நீண்ட நாளாக நூலேணியில் இறங்கிப் பழக்கப்பட்டவள் போல் இறங்கி படகில் க்ளேஸியஸின் பக்கத்தில் நின்றாள்.

அடுத்து க்ளேஸியஸ் துரிதமாக இயங்கி கப்பலிலிருந்து படகின் பிணைப்பை அவிழ்த்துத் துடுப்புகளை எடுத்துக் கொண்டான். படகின் நடுவில் உட்கார்ந்து துடுப்புகளை எடுத்துக் கொண்டான் துழாவ. நிலக்கள்ளியும் படகின் நடுவில் அவனிடமிருந்து சிறிது விலகி உட்கார்ந்து மரக்கலத்தையும் கடற்புறத்தையும் கவனித்தாள். கடலின் அகண்டமான பயங்கரமே அதற்கு ஒரு அழகை அளித்திருந்தது. இரண்டு சின்னஞ்சிறு விளக்குகளுடன் மட்டுமே நின்ற கடல்வேந்தன்—கப்பல் ஏதோ கடலுக்கு இரண்டு அணிகளை அளித்த பணிமகன் போல் காட்சியளித்தது. வானில் பளபளத்த விண்மீன்கள் ஆங்காங்கு கரையை நோக்கிச் சென்று கொண்டிருந்த படகுகளிலிருந்த விளக்குகளுடன் போட்டி போட்டன. இத்தனை விளக்குகளையும் கறுத்த பெரிய கடல் பகுதியையும் அவட்சியம் செய்வன போல் முசிறித் துறைமுக விளக்குகளும், அதற்கப்புறமிருந்த நகர்ப்புற விளக்குகளும் பிரகாசித்தன.

ஆனால் இரவு ஏறிவிட்டதன் காரணமாகத் துறைமுக விளக்குகள் ஒவ்வொன்றாக அணைக்கப்படவே மீதி விடப்பட்ட சில விளக்குகள் அளவு மீறி பிரகாசித்தன.

அந்த இரவிலும் சுள்ளியாற்றில் படகுகள் சில வந்து சுங்கத்துறையில் நிற்பதையும் பார்த்து நிலக்கள்ளி, 'சேர நாட்டுக்கு இணை ஏது?" என்று பெருமிதம் கொண்டாள். "இந்தச் சமயத்தில் இந்த க்ளேஸியஸுக்குப் பதில் வேந்தனிருந்தால் இயற்கை இன்பத்தை எப்படியெல்லாம் அனுபவிக்க முடியும்?' என்று எண்ணிப் பெருமூச்சும் விட்டாள்.

அவள் அசைவு ஒவ்வொன்றையும் பெருமூச்சையும் க்ளேஸ்யஸ் கண்டானானாலும் அவன் ஏதும் பேசவில்லை. முற்றும் பேசாமடந்தையாகி கர்மவீரன் போல் தன் கடமையிலேயே கண்ணும் கருத்துமாகப் படகைச் செலுத்தி கடற்கரைக்கு அதைக் கொண்டுவந்தான். கரையருகில் வந்ததும், தான் நீரில் குதித்துபடகின் முகப்புக் கயிறுகளைப் பற்றிப் படகை மறைவில் இழுத்துவிட்டான். அப்பொழுதும் அவன் பேசவில்லை. படகை விட்டு அவளே இறங்கினாள் கரையை அடைந்து விட்ட காரணத்தால்.

அவள் தரையில் இறங்கி நன்றாக நின்று தனது மேலாடையை இழுத்துவிட்டுத் தலையைக் கோதிக்கொண்டதும், அவன் சரேலென்று யந்திரம் போல் திரும்பிக் கடற்கரையில் நடக்கலானான். அவளும் அவனுடன் பேசாமல் பின் தொடர்ந்தாள். அவன் கடற்கரை மணலில் மெதுவாக நடந்து சென்றான். மணல் தாண்டியதும் முதல் நாள் கடல்வேந்தன் நடந்த சுள்ளியாற்றங் கரைப் பாதை ஓரமே நடந்தான். அவன் நடந்த இடம், திரும்பிய திசைகள் எல்லாமே நூற்றுக்கு நூறு கடல்வேந்தன் முறையாக இருக்கவே சிறிது நம்பிக்கையுடன் நடந்தாள் நிலக்கள்ளி. சிறிது தூரம் இப்படி நடந்ததும் அவன் சற்று வழியைவிட்டு விலகினான். வில்லம்பு இலச்சினை இல்லம் சற்று தூரத்தில் தெரிந்தவுடனேயே

அதை நோக்கிச் செல்லாமல் சுள்ளியாற்றங்கரையை அடுத்திருந்த ஒரு சிறு மணற்குன்றின்மீது நின்றான். அங்கிருந்தபடியே தனது குறுவாளை எடுத்து அந்த இருட்டில் வீசினான். 'இருட்டில் குறுவாள் எப்படித் தெரியப் போகிறது? யாருக்கு அடையாளம் காட்டுகிறான் க்ளேஸியஸ்?' என்று அவள் நினைத்திருந்த சமயத்தில், குறுவாள் பிடியிலிருந்த வல்லூறின் மாணிக்கக் கற்கள் இரண்டும் நெருப்புப் பொறிகளைப்போல் சுடர்விடுவதைக் கண்டாள். அதன் விளைவாகத் தூரத்திலிருந்து நதியின் குறுக்கே யாரோ இறங்குவதையும் ஒரு படகு அக்கரையிலிருந்து குறுக்கே வருவதையும் கவனித்தாள் நிலக்கள்ளி. படகும் வேகமாக ஊர்ந்து அந்த மணற்குன்றுக்கு முன்னாலிருந்த கரையில் ஒதுங்கியது. அதன் சிறு வெளிச்சத்தில் நற்கிள்ளி படகில் உட்கார்ந்திருப்பதைக் கண்ட நிலக்கள்ளி, 'எல்லாவற்றையும் கடல்வேந்தன் ஏற்பாட்டோடுதான் செய்திருக்கிறார்' என்பதைப் புரிந்து கொண்டாள். நற்கிள்ளியின் படகு வந்ததும் நிலக்கள்ளியை உடன் வரும்படி சைகை காட்டிய க்ளேஸியஸ் படகை நோக்கி நடந்தான். நிலக்கள்ளியும் அவனைப் பின்பற்றிச் சென்று அவனுடன் படகில் ஏறிக்கொள்ள, படகு அக்கரையை நோக்கி நகர்ந்தது. அன்று சுளியாற்றில் பிரவாகம் நிதானமாகவே இருந்தாலும் கடலில் அதிக அலைகள் எதிர்த்து வராததாலும் படகுப் பயணம் எந்தவித சிரமமுமில்லாமல் நடந்தது. அக்கரைக்கு வந்ததும் க்ளேஸியஸுடன் இறங்கிய நிலக்கள்ளி, நற்கிள்ளியும் படகைக் கரையில் இழுத்துவிட்டுத் தங்களுடன் இறங்குவதைக் கண்டாள். அன்று நற்கிள்ளி பாட்டு பாடாததையும், பூர்ண மௌனம் சாதித்ததையும் பார்த்த நிலக்கள்ளிக்கு அவன் போக்கு விசித்திரமாயிருந்தாலும் அவள் அவனை ஏதும் கேட்கவில்லை. அவனும் நிலக்கள்ளியைக் கண்டதாகவே காட்டிக் கொள்ளாமல் மற்ற இருவருடன் நடந்தான்.

க்ளேஸியஸும் நற்கிள்ளியும் தன்னை யவனர் சேரிக்கு அழைத்துச் செல்வதைக் கண்ட நிலக்கள்ளி 'என் தந்தையின் அரண்மனை இங்கு இல்லை" என்று முதல் முதலாகப் பேசினாள்.

"அஞ்சவேண்டாம் அமைச்சர் மகளே! அங்குதான் போகிறோம்" என்ற நற்கிள்ளி "இது சற்றே சுற்றுவழி" என்றான்.

"இப்படி ஏன் போகவேண்டும்?" எனக் கேட்ட நிலக்கள்ளி நின்ற இடத்தில் நின்றுவிட்டாள்.

"போனதும் காரணத்தை நீங்களே புரிந்து கொள்வீர்கள். பேசாமல் வாருங்கள்" என்று உத்தரவிட்ட நற்கிள்ளி மேலே நடந்தான். திரும்பிப் பாராமல் போய்க் கொண்டிருந்த க்ளேஸியஸைத் தொடர்ந்து

மேலும் பிடிவாதம் செய்வதில் பயனில்லை என்று அறிந்த நிலக்கள்ளி அவர்களைத் தொடர்ந்தாள். மறுபடியும் யவனர் சேரியில் சில வீதிகளைக் கடந்து ஒரு தென்னந் தோப்புக்குள் புகுந்த க்ளேஸியஸ் அந்தத் தோப்பைத் தாண்டியதும் அதன் முனையிலேயே நின்று அமைச்சர் அரண்மனையைக் கவனித்தான்.

அப்பொழுதுதான் அவர்கள் எச்சரிக்கைக்குக் காரணம் புரிந்தது நிலக்கள்ளிக்கு. அரண்மனையைச் சுற்றி பலமான காவலிருந்த அந்தக் காவலரை எச்சரித்த வண்ணம் சஞ்சயன் அரண்மனையைச் சுற்றி வந்து கொண்டிருந்தான்.

க்ளேஸியஸ் நகைத்தான் லேசாக. அந்த நகைப்பில் ஏளனமும் பயங்கரமும் கலந்திருந்தன. அடுத்து அவன் நற்கிள்ளியை நோக்கி, "நற்கிள்ளி! நீ இந்தத் தோப்பின் வடக்குக் கோடிக்குப் போய் அங்குள்ள முந்திரிக் கிளைகளை

பலமாக அசை. அங்கு சத்தத்தைக் கிளப்ப எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்'' என்று உத்தரவிட நற்கிள்ளி அங்கிருந்து அகன்றான். சிறிது நேரத்திற்கெல்லாம் முந்திரிக் கிளைகள் சத்தத்துடன் அசைந்தன. ஒரு கிளை உடைந்த சத்தமும் கேட்டது. காவலர் சிலர் அந்தத் திசையை நோக்கி ஓடினர்.

க்ளேஸியஸ் நிலக்கள்ளியைத் திரும்பி நோக்கி, ''நீங்கள் இந்தப்புறமாக ஓடி மாளிகைக்குள் நுழைந்து விடுங்கள். உங்கள் தந்தையைப் பார்க்கும்வரை இதை எடுக்க வேண்டாம்'' என்று கூறித் தன் மீதிருந்த பெரிய மாலுமி போர்வையொன்றை உதறி விரித்து அவள்மீது மூடினான்.

அவன் சொன்னபடி ஓடி மாளிகையில் புக முயன்ற நிலக்கள்ளியை சஞ்சயன் இறுகப் பிடித்துத் தனது குறு வாளை அவள் கழுத்தில் அழுத்தி ''பேசாமல் வா'' என்று கூறி அவளை இழுத்துக்கொண்டு அரண்மனைக்குள் சென் றான். அங்கிருந்த முகப்புக் கூடத்தில் அமைச்சர் அழும்பில் வேளே நின்றுகொண்டிருந்தார். ''அமைச்சரே! சஞ்சயன் திட்டமிட்டால் அது தவறாது. இதோ நீங்கள் எதிர்பார்த்த குற்றவாளி'' என்று கம்பீரமாகக் கூறி, நிலக்கள்ளியின் உடலை மூடியிருந்த போர்வையை எடுத்து ஜாலவித்தைக் காரன் மாம்பழச் செடியைக் காட்டுவதுபோல் காட்டி னான்.

செடிக்குப் பதில் தமது எதிரே நின்றகொடியைக் கண்ட அழும்பில்வேள் பெரிதாக நகைத்தார். நகைப்புக்குக் காரண மறியாத சஞ்சயன் திரும்பி நோக்கினான். அவன் முகத்தில் விரிந்தது ஏமாற்றமா? அதிர்ச்சியா? அசட்டுத்தனமா? விளங்கவில்லை அமைச்சருக்கு.

□

11. பரணர் இல்லம்

நிலக்கள்ளியின் மீது யவனனான க்ளேஸியஸ் போர்த்தி யிருந்த போர்வையை நீக்கி, ''இதோ உங்கள் எதிரி'' என்று கூறிய சஞ்சயன், அமைச்சர் நகைத்ததால் சட்டென்று திரும்பிப் பார்த்து, தான் பிடித்து வந்தது அமைச்சரின் மகளென்பதை உணர்ந்ததால் வியப்புக்கும், ஏமாற்றத் துக்கும், அதிர்ச்சிக்கும் உள்ளாகி சிலையென நின்றுவிட் டான் பல விநாடிகள்.

அவன் நிலையைக் கண்ட அமைச்சரே பேச முற்பட்டு, ''சஞ்சயா! எதிரியுடன் இவன் சார்ந்ததால் இவளும் எதிரி தான் நமக்கு. குற்றவாளியோடு சேர்ந்தவர்களையும் குற்ற வாளியென மதிக்கும்படிதான் நீதி சாத்திரமும் கூறுகிறது. ஆகையால் நீர் செய்ததில் தவறு ஏதுமில்லை. குற்ற வாளியின் தந்தையையும் சேர்த்துப் பிடிக்காததுதான் தவறு'' என்றார். அவர் குரலில் ஏளனம் நிரம்பிக் கிடப்ப தையும் முன்பு வெளிப்பட நகைத்த அமைச்சர் இப்பொழுது உள்ளூர நகைத்துக் கொண்டிருக்கிறாரென்பதையும் உணர்ந்த சஞ்சயன் பேசுவது இன்னதென்று தெரியாமல் நின்றான்.

அவன் மௌனத்தை அமைச்சர் பெரிதும் பயன்படுத்திக் கொண்டார். ''சஞ்சயா! என் மகள் கடல்வேந்தன் உயர மில்லையே. ஆனால், எதிரியைப் பிடிக்க முயன்ற துரிதத்தில் உயரத்தையோ, எதிரியின் திண்ணிய உடற்கட்டையோ பார்க்க அவகாசமிருந்திருக்காது'' என்று சஞ்சயன் சோத னைக்கு ஓர் ஆட்சேபணையும் தெரிவித்து, அதற்கு ஒரு சமாதானமும் தாமே சொன்னார்.

ஒவ்வொரு சொல்லிலும் அமைச்சர் தனது முட்டாள் தனத்தை எடுத்துக் காட்டுவது கண்ட சஞ்சயன், "குற்றம் சாட்டுவது எளிது. குற்றவாளியைக் கண்டு பிடிப்பதுதான் கஷ்டம்" என்று சொன்னான் வெறுப்புடன்.

"கஷ்டம் என்பது நமக்கு முன்னமே தெரிந்ததுதான். அது இப்பொழுது நிரூபிக்கப்பட்டு விட்டது. ஆனால் கடல் வேந்தனுக்கு வலை விரித்துப் பிடித்து விடுவதாகச் சபதம் செய்தது நாணல்ல" என்றார் அமைச்சர்.

சஞ்சயன் முகத்தில் சினம் லேசாகத் துளிர்த்தது. "ஆம் அமைச்சரே! எதிரியை நீர் பிடிப்பதோ, முடியாவிட்டால் பழியை ஏற்பதோ உமது கடமையல்ல...." என்று சினம் துளிர்த்த குரலில் பேசவும் செய்தான்.

அமைச்சர் ஒப்புக்கொண்டதற்கு அறிகுறியாக தலையை அசைத்து, "உண்மை சஞ்சயா! முடியாதைச் சாதிப்பதாக வீம்பு காட்டும் வழக்கம் எனக்குக் கிடையாது. பிறகு காரியம் முடியவில்லை என்று தெரிந்ததும் அதற்கு சப்பை கட்டும் வழக்கமும் எனக்குக் கிடையாது" என்று கூறியது மட்டுமின்றி, "அடுத்து நாம் செய்ய வேண்டியது என்ன?" என்று வினவினார்.

சஞ்சயன் முகத்தில் ஈயாடாவிட்டாலும் தான் செய்த ஏற்பாட்டின் அடுத்த பகுதியை அவருக்கு விளக்கினான். "கடல்வேந்தன் சிக்கிய அதே சமயத்தில் வில்லம்பு இலச்சினை இல்லத்தில் புகுந்து அங்கு யார் இருந்தாலும் சிறை செய்து வர வீரர்களை அனுப்பியிருக்கிறேன்" என்று கூறினான்.

"நன்று! நன்று!" என்று உற்சாகப்பட்ட அமைச்சர் "இவளைக்கொண்டுவிட வந்த கடல்வேந்தன் அங்கு இருந்தாலும் இருக்கக்கூடும்" என்றார். "அங்கு சென்ற வீரர்கள் வரட்டும். அதற்குள் இவளை என்ன செய்யலாம்? காவலில் வைக்கிறாயா!" என்று வினவிய அமைச்சர், 'எனது மகள் என்பதற்காக எந்தச் சலுகையோ அனுதாபமோ காட்ட வேண்டாம்" என்றும் சொன்னார்.

"உங்கள் மகளைக் காவலில் வைக்கும் அளவுக்கு நான் முட்டாளல்ல"—சஞ்சயன் பதிலில் எரிச்சலிருந்தது,

"அதில் அளவு வேறு இருக்கிறது போலிருக்கிறது?" என்று அவன் காதுபட முணுமுணுத்த அமைச்சர், "சஞ்சயா! இதில் முக்கிய பகுதியை மறந்துவிட்டாய்" என்றும் சுட்டிக் காட்டினார்.

முணுமுணுப்பால் தனது முட்டாள்தனத்தை உணர்ந்ததும் செய்த அமைச்சரிடம் பெரிதும் கோபம் கொண்ட சஞ்சயன், "அந்த முக்கிய பகுதி தங்களைப் போன்ற சிறந்த அறிவாளிக்குத்தான் புலனாகும். அது என்ன அமைச்சரே? எனக்குத் தெரியலாமா?" என்று கேட்டான்.

"உனக்குத் தெரிந்ததுதான் சஞ்சயா" என்றார் அமைச்சர்.

"எனக்குத் தெரிந்ததா?"

"ஆம்"

"எது அமைச்சரே?"

"கடல்வேந்தன் நிலக்கள்ளியை அழைத்துச் சென்ற போது வில்லம்பு இலச்சினை இல்லத்தில் என்ன சொன்னான்?"

"நினைப்பில்லை"

"எனது மகளை அவனே நேரில் கொண்டுவந்து விடுவதாகச் சொன்னான். வந்தானா?" இதைக் கேட்ட

அமைச்சர் சஞ்சயனை மட்டுமின்றி நிலக்கள்ளியையும் கூர்ந்து நோக்கினார்.

கடலில் விழுந்தவன் துரும்பையும் பிடித்துக் கொள்வது போல சஞ்சயன், அமைச்சர் கட்டிக்காட்டிய வேந்தன் தவறை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, "வரவில்லை. இத்தனை காவலிருக்கும்போது வர அவன் என்ன பைத்தியமா?" என்று கேட்டான். அப்படிக்கேட்ட போது அவன் பார்வையில் பாதி நிலக்கள்ளியின் மீது இருந்தது.

அதுவரை மௌனமாயிருந்த நிலக்கள்ளி புன்முறுவல் செய்தாள். சேர தூதனை நோக்கி, "தூதுவரே! கடல்வேந்தனைப் பிடிக்கமுடியாததற்கு ஏதோ ஒரு சாக்கைக் கண்டு பிடிக்கிறீர். அவர் என்னை அழைத்து வருவதாகச் சொன்னாரே, நீர் என்ன செய்தீர் பதிலுக்கு? முதலில் இந்த மாளிகையில் வந்தபோது பிடிக்கமுடியாத நீர், என்னுடன் வரும் வேந்தரைப் பிடிக்க வலைவிரித்தீர். அவரை கௌரவமாக வரவேற்பதை விட்டு மாளிகையைச் சுற்றிலும் ஆள்களை நிறுத்தினீர். இது எந்த நியாயத்தில் சேர்ந்தது?" என்று கேட்டாள் புன்முறுவலின் ஊடே.

"கொள்ளைக்காரனைப் பிடிப்பதில், வழி முறைகள் கிடையாது. அவையெல்லாம் தர்ம யுத்தத்துக்குத்தான். புலியைப் பிடிக்க வேண்டுமென்றால் போர் முரசா கொட்டுகிறோம்? தப்பட்டை அடித்து வலை விரித்துதான் பிடிக்கிறோம்" என்று சஞ்சயன் நிலக்கள்ளிக்குப் பதில் சொன்னான்.

நிலக்கள்ளி ஏளனப் புன்முறுவலொன்றை உதடுகளில் பரவவிட்டு, "அவர் புலி என்று ஒப்புக்கொள்கிறீர்களா?" என்று சொன்னாள் ஏளனம் குரலிலும் ஒலிக்க, "அப்பா! அவர் புலியானால் இவர் யார்?" என்று தந்தையை நோக்கி வினவினாள்.

அமைச்சர் சிறிதும் தயக்கமின்றிச் சொன்னார் "அவர் சிங்கமாயிருக்கும்" என்று.

"நீங்கள்?"

"அமைச்சருக்குத் தந்திரம் அவசியம்.."

"ஆகையால்..."

"நரியென்று வைத்துக்கொள்" என்ற அமைச்சர், "நாம் இப்படியே பேசிக்கொண்டு போனால் இந்த அரண்மனை மிருகக்காட்சி சாலையாகிவிடும்" என்றும் விளக்கினார் இடக்காக.

சஞ்சயன் மனநிலை சொல்லத் தரமில்லாததாய் இருந்தது. "அமைச்சரே! இன்று நான் தவறியது உண்மை ஆனால், அடுத்தமுறை தவறமாட்டேன்" என்றான் சற்றுத் திணறி.

"எந்த முயற்சிக்கும் மும்முறை அனுமதிப்பது சாத்திர சம்மதம்" என்றார் அமைச்சர்.

சஞ்சயன் கோபத்தின் எல்லைக்குச் சென்றதால் யாரிடம் பேசுகிறோமென்பதை அறியாமல், "உமது சாத்திரத்தைக் கொண்டுபோய் குப்பையில் கொட்டும்" என்று சீற்றம் நிரம்பிய குரலில் கூவினான்.

"அது கஷ்டமல்ல" என்றார் அமைச்சர்.

"எது?"

"சாத்திரத்தைக் குப்பையில் கொட்டுவது."

"ஏன் கஷ்டமில்லை?"

"முசிறியில் இப்பொழுது குப்பை அதிகமாயிருக்கிறது."

"என்னை அதிகமாக அவமதிக்க வேண்டாம். அமைச்சரே! வில்லம்பு இலச்சினை இல்லத்திலிருந்து எனது வீரர் வரும் நேரம் ஆகிவிட்டது. சற்றுப் பொறும் தெரியும்" என்றான்.

அவன் சொன்னதும் சொல்லாததுமாக இரண்டு வீரர்கள் உப்பரிகைக் கூடத்தில் நுழைந்தனர். "தூதர் பெருமானே! நீங்கள் சொன்னபடி வில்லம்பு இலச்சினை இல்லம் சென்றோம்...." என்று இழுத்தான் வீரர்களில் ஒருவன்.

"ஊம்" என்று மேலே சொல்லலாம் என்பதற்கு அறிகுறியாக 'உம்" காரம் கொட்டினான் சஞ்சயன்.

"இல்லம் பூட்டப்பட்டிருந்தது" என்றான் இன்னொரு வீரன்.

"அப்படியா!" என்ற சஞ்சயன் குரலில் ஏமாற்றமிருந்தது.

முதல் வீரன் தொடர்ந்தான். "ஆனால் பக்கத்துக் குடிசையில் சிலர் குடித்துவிட்டுச் சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள்" என்றான்.

"அதைப்பற்றி இப்பொழுது என்ன?"

"ஒன்றுமில்லை. அந்தக் கூட்டத்தில் ஒரு யவனன் இருந்தான், அவனை மற்றவர்கள் க்ளேஸியஸ் என்று அழைத்தார்கள்—"

இங்கு அமைச்சர் சிரத்தை காட்டினார். "அவனைப் பிடித்தீர்களா?" என்று கேட்டார்.

"இல்லை" என்றான் வீரன்.

"ஏன்?"

"கடல்வேந்தனைப் பிடிக்கத்தான் உத்தரவு. யவனனைப் பிடிக்க உத்தரவில்லை."

வீரன் சொல் கேட்ட சஞ்சயன் வெகுண்டான். "கடல்வேந்தன் நண்பனைப் பிடி என்று சொல்ல வேண்டுமா? உனக்காக யோசனை கிடையாதா?" என்று கேட்டான் சஞ்சயன் மிகுந்த கோபத்துடன்.

"தலைவர் உத்தரவை நிறைவேற்றுவதுதான் எந்த வீரன் கடமையும். அத்து மீறிப் போக அதிகாரம் கிடையாது. அப்படிப் பிடித்து வந்தாலும் "இவனை ஏன் பிடித்து வந்தாய்?" என்று நீங்கள் கேட்டால் நான் என்ன பதில் சொல்வேன்?" என்று வீரன் வினவினான்.

"அவன் சொல்வதில் பொருளிருக்கிறது" என்று அமைச்சரும் வீரனுக்கு ஒத்துப் பாடினார்.

இதனால் மனம் உடைந்த சஞ்சயன், "சரி நீங்கள் போகலாம்" என்று வீரர்களுக்கு விடை கொடுத்தான்.

வீரன் சிறிது தாமதித்தான். "ஏன் நிற்கிறாய், பனை மரம் மாதிரி?" என்று எரிந்து விழுந்தான் சஞ்சயன்.

வீரன் சங்கடத்தால் சிறிது அசைந்தான் நின்ற இடத்திலேயே. "நடந்தது முழுவதையும் கேட்கவில்லையே?" மீண்டும் தொடங்கினான்.

"முழுவதையும் சொல்லவில்லையா? சொல் சொல்" என்றான் சஞ்சயன்.

"தூதர் பெருமானே...." என்று தொடங்கினான் வீரன்.

"பெருமானிருக்கட்டும். சொல் விஷயத்தை."

"நாங்கள் அந்த யவனனைப் பிடிக்கவில்லையே தவிர அவன் உங்களுக்குச் செய்தி சொல்லி அனுப்பியிருக்கிறான்" என்றான் வீரன்.

இதனால் அமைச்சர், சஞ்சயன் இருவருமே அதிர்ச்சியடைந்தாலும், "இதை ஏன் இத்தனை நேரம் சொல்லவில்லை?" என்று அமைச்சரே கேட்டார்.

"சொல்ல எங்கு விட்டீர்கள்?" என்ற வீரன், "க்ளேஸியஸ் நாங்கள் திரும்ப முற்பட்டபோது குடிசையிலிருந்து வெளியே வந்து, "வீரனே! அமைச்சரை வருந்த வேண்டாமென்று சொல். உங்களை நம்பி வரும் வேந்தனை நீங்கள் தந்திரமாகப் பிடிக்க முயன்றதைவிடப் பேடித்தனம் வேறு எதுவுமில்லை என்று நான் சொன்னதாகச் சொல். கடல்வேந்தன் காதலியிடம் எந்தவித சினத்தையும் காட்ட வேண்டாமென்று சொல். எதற்கும் நிலக்கள்ளி பொறுப்பல்ல என்று தெரிவி" என்று கூறத் திரும்பக் குடிசையில் புக முயன்றவன், மீண்டும் குடிசை வாயிலில் நின்று திரும்பி, 'நிலக்கள்ளிக்கு எந்தக் கஷ்டம் நேர்ந்தாலும் இந்த முசிறி உடனடியாகச் சூறையாடப்படுமென்றும் சொல்' என்று சொல்லிவிட்டுச் சென்றான்" என்று வீரன் தனது தூதை முடித்தான்.

அமைச்சர் சிந்தையில் இறங்கினார். சஞ்சயனைப் போகச் சொல்லிவிட்டு மகளை நோக்கி, "மகளே! நீ சென்று படுத்துக் கொள். நாளை காலையில் வேலை இருக்கிறது" என்றார்.

"என்ன வேலை தந்தையே?" என்று கேட்டாள் நிலக்கள்ளி.

"நாம் பரணர் வீட்டுக்குப் போகிறோம், அவரை விசாரிக்க. கடல்வேந்தன் தமது மகன் என்று அவர் கூறவில்லையா?" என்று வினவினார்.

நிலக்கள்ளி ஏதோ ஆட்சேபனை செய்ய விரும்பியதை அவர் அனுமதிக்கவில்லை. மறுநாள் இருவரும் பரணர் வீட்டுக்குச் சென்றனர். அங்கு பரணர் கவிபாடிக்

கொண்டிருந்தார். அவர் படுக்கையில் ஒருவாலிபன் படுத்துக் கிடந்தான். சாட்சாத் கடல்வேந்தனைப் போலவே அவனிருந்ததால் அமைச்சர் வியப்பின் வசப்பட்டார். ஆனால், அவன் கடல்வேந்தனாயிருக்க முடியாது என்று தீர்மானித்தார். அவர் ஊகத்திற்கு, படுத்திருந்த அந்த வாலிபன் அத்தாட்சி கூட்டினான், அவன் கண்விழித்து அமைச்சரைப் பார்த்ததும் நடுங்கினான் ஒருமுறை. மறுபடியும் தலையணையில் முகத்தைப் புதைத்துப் படுத்துவிட்டான். அவன் உடல் அச்சத்தால் உதறியது. "பயப்படாதே அப்பா! அமைச்சர் நமக்கு வேண்டியவர். உன்னை எதுவும் செய்யமாட்டார்" என்று அவனுக்குத் தைரியம் சொன்னார் பரணர்.

□

12. அமைச்சரும் புலவரும்

சாட்சாத் கடல்வேந்தனைப் போலவே உடலமைப்புக் கொண்ட வாலிபனை அசப்பில் பார்த்ததும் முதலில் அதிர்ச்சியடைந்த அழும்பில்வேள், அவன் தம்மைப் பார்த்து நடுங்கியதையும், தலையணையில் முகத்தைப் புதைத்துப் படுத்துக் கொண்டதையும் கவனித்தால், அவன் அசகாய காரியங்களைச் செய்துள்ள கடல்வேந்தனாயிருக்க முடியாது என்ற முடிவுக்கு வந்தார். தவிர, "அமைச்சர் நமது நண்பர், உன்னை எதுவும் செய்யமாட்டார்" என்று புலவர் பரணர் அவனுக்குத் தைரியம் சொன்னதையும் கண்ட அமைச்சர், முதலில் ஏற்பட்ட சந்தேகத்தை அறவே விலக்கிக் கொண்டார். ஏதாவது கொஞ்சம்நஞ்சம் சந்தேகமிருந்தால் அதுவும் தீர்ந்துவிட்டது, அடுத்துச் சில நிமிடங்களில்.

பரணர், அந்த வாலிபன் பக்கத்தில் அமர்ந்து அவனை முதுகில் தடவிக்கொடுத்துத் தலையையும் ஓர் உலுப்பி உலுப்பி, "அப்பா! குட்டுவா! எழுந்திருடா கண்ணே!" என்று பரணர் அவனை எழுந்திருக்கச் செய்யவே, அவன் மெதுவாக எழுந்து படுக்கையில் உட்கார்ந்து கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டான். கடல்வேந்தன் உடற்கட்டு அவனுக்கிருந்தாலும், அதே வாளிப்பு இருந்தாலும் அவன் படுக்கையிலிருந்து எழுந்தபோதும், பல் துலக்கி முகம் கழுவ எழுந்து நடந்துசென்ற போதும் அவன் நடைக்கும், கடல்வேந்தன் நடைக்குமிருந்த மாறுபாட்டை அமைச்சர் கவனிக்கவே செய்தார். கடல்வேந்தனின் உறுதியான, ஒரே சீரான ராணுவ நடைக்கும் இந்தக் கோழையின் தடுமாற்ற நடைக்கும் அடியோடு சம்பந்தமில்லை என்பதை அமைச்சர் பார்த்

தார். தவிர அந்த வாலிபன் முகம் குழந்தை முகமாயிருந்ததையும், நாற்பது வயது மதிக்கத்தக்க கடல்வேந்தனின் முற்றிய முகமில்லாததையும், கடல்வேந்தன் முகத்திலிருந்த சதை மடிப்புகளும் ஒரு விகாரத்தன்மையும் இந்த வாலிபன் முகத்தில் இல்லாததையும் அழும்பில்வேள் கண்டார். இதைத் தவிர, கடல்வேந்தன் தலைக்குழல், புருவங்கள், சிறுமீசை அனைத்தும் செம்பட்டையாயிருந்ததையும் அவர் எண்ணிப் பார்த்து "இவன் தலைக்குழலும், புருவங்களும், மீசையும் மிகக் கருமையாய் இருக்கின்றன. பார்வையிலும் கனிவும் அச்சமும் இருக்கிறதே தவிர அந்தக் கடுமையில்லை", எனவும் சொல்லிக் கொண்டார்.

அவர் அப்படி அணு அணுவாகக் குட்டுவனை ஆராய்வதைப் பார்த்த பரணர் ஏதும் பேசவில்லை. நிலக்கள்ளியை மாத்திரம் பார்த்துப் புன்முறுவல் செய்தார். ஆராய்ச்சியை முடித்துக்கொண்ட அழும்பில்வேள் பரணர் புன்சிரிப்புக்குக் காரணம் புரியாததால் "ஏதோ மகிழ்ச்சிக்கான சம்பவம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது" என்றார். குரலில் அலுப்பைக் காட்டினார்.

கவிஞர் பெருமானான பரணர் தமது புன்முறுவலைச் சற்று அதிகமாக்கி, "அமைச்சர் போன்ற பெருமக்கள் அடிமையின் குடிசையை நாடி வருவது மகிழ்ச்சிக்குரிய விஷயமல்லவா?" என்று வினவினார்.

"ஆம்...ஆம். மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சிதான் என் வரவு!" என்ற அமைச்சர், "இங்கு மன்னரே வருவதாகக் கேள்வி, அப்படியிருக்க அமைச்சர் வருவதில் என்ன சிறப்பிருக்கிறது?" என்று வினவினார்.

பரணர் அமைச்சரை நிதானமான கண்களால் நோக்கினார். "மன்னர் வருவதில் அர்த்தமிருக்கிறது. இத்தனை நாளும் வராத அமைச்சர் வருவதுதான்

விந்தை" என்று கூறினார். அந்த விந்தையை முகத்தின் சாயையிலும் காட்டினார் கவிஞர்.

"மன்னர் வருவதில் அர்த்தமிருக்கிறதா?" என்று வியப்புடன் கேட்டார் அமைச்சர்.

பரணர் லேசாகத் தலையை அசைத்தார். "மன்னர் மாணாக்கராக வருகிறார், என்னிடம் தமிழ் படிக்க. அமைச்சர் எதற்காக வருகிறார்?" என்று வினவினார். கண்களில் ஒரு கேள்வியையும் தோற்றுவித்தார்.

அமைச்சருக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாததால், "ஏன் அமைச்சர் தமிழ் படிக்கவரக்கூடாதோ?" என்றொரு கேள்வியை வீசினார் சிறிது கோபத்துடன்.

"வரலாம். தமிழ் படித்தால் அறிவும் வளரும்" என்றார் பரணர்.

"நான் தமிழ் படிக்காததால் எனக்கு அறிவில்லை என்கிறீரா?" உஷ்ணத்துடன் கேட்டார் அமைச்சர்.

பரணர் புன்முறுவல் செய்தார் விஷமமாக. "அமைச்சர் சொற்களைக் கவனிக்கவேண்டும். தமிழ் படித்தால் அறிவு வளருமென்று சொன்னேனே தவிர, தங்களுக்கு அறிவில்லை என்று சொல்லவில்லை. அப்படிப் பார்த்தால் சிருஷ்டியில் யாருக்கு, எதற்கு அறிவில்லை? ஆடுமாடுகளுக்கு அறிவில்லையா? புரவிகளுக்கு அறிவில்லையா?" என்று வினவினார் கவிஞர்.

அமைச்சர் அழும்பில்வேன் தமது நிதானத்தை அடியோடு இழந்து, "என்னை ஆடு, மாடு என்கிறீரா?" என்று கேட்டார், சினம் குரலில் தெளிவாகத் தெரிய.

பெரும் புலவரான பரணர் சிறிதும் சலனப்படாமல் "அமைச்சரே! இந்த இல்லத்தில் சில பண்பாடுகளைக்

கடைப்பிடிக்கிறோம். உம்மை ஆடு, மாடு என்றழைக்கவில்லை. பொது அறிவைப் பற்றிச் சொன்னேன். உம்மைப் போன்ற விருந்தாளியை அவமதிக்கும் பழக்கம் இன்னும் வரவில்லை எனக்கு. சிருஷ்டியில் பிறக்கும் போது உயிரினங்கள் எல்லாவற்றுக்கும் அறிவு உண்டு. ஆனால் அறிவு வளர்ச்சி மனிதனுக்குக் கல்வி கற்றதால் ஏற்படுகிறது. அதுவும் தமிழ் படிப்பவனுக்கு அறிவு அதிகமாக ஏற்படுகிறது. கூர்மையாகவும் ஆகிறது. என்ன காரணம்? அறிவுச் செல்வங்களை, அறிவாற்றல்களை நமது பெரியவர்களெல்லாரும் தமிழ்க் கவிதைகள் மூலமும், தமிழ்ப் பெரும் காப்பியங்கள் மூலமும் திரட்டித் தந்திருக்கிறார்கள். அவற்றைப் படிக்கும் மனிதன் மற்ற மனிதர்களைவிட உயர்ந்தவனாகிறான். மற்றவர் இல்லங்களுக்குச் செல்லும்போது நண்பனாகவும் பண்போடும், நல்ல விஷயங்களை அறிந்து கொள்ளவும் செல்கிறான். நீர் அந்த மாதிரி ஏதாவது அறிய வந்திருந்தால் சொல்லுங்கள்" என்று கேட்டார்.

அவர் விளக்கமும், கேள்வியும் அமைச்சரைத் திக்குமுக்காட வைத்துவிட்டதால் பேசமுடியாமல் தவித்தார். அவர் சங்கடத்தைப் புரிந்து கொண்ட புலவர் நிலக்கள்ளியை நோக்கிக் கேட்டார், "அம்மா! அமைச்சர் பேசச் சங்கடப்படுகிறார். நீதான் சொல்லேன், அமைச்சர் எதற்கு இந்த அதிகாலையில் இக்குடிசைக்கு வந்தார்?" என்று.

அவள் ஏதோ சொல்ல முயன்ற சமயத்தில், காலைக் கடன்களை முடித்துக்கொண்டு நீராடி நெற்றியில் திலகமும் இட்டு வந்தான் அந்த வாலிபன். வந்தவன் அமைச்சரை நோக்கித் தலைவணங்கிவிட்டு நிலக்கள்ளியை நோக்கிப் புன்முறுவலும் செய்தான். பிறகு நேராக உள்ளே சென்று சில ஓலை நறுக்குகளை எடுத்து வந்து எழுத்தாணியால் ஏதோ எழுத ஆரம்பித்தான். அவன்

செயலைக்கண்ட அமைச்சர், "அப்பா! நீ என்ன எழுது கிறாய்!" என்று வினவினார்.

"கவிதை" என்று மிக இனிமையான குரலில் பதில் சொன்னான் அந்த வாலிபன்.

"உன் பெயர்?" ஆவலுடன் கேட்டார் அமைச்சர்.

அவன் பதில் அமைச்சரைத் தூக்கிவாரிப் போட்டது. "குட்டுவன்! குருநாதர் என்னை எழுப்பியபோது பெயர் சொல்லி அழைத்ததைக் கவனித்திருக்கலாமே" என்றான் அந்த வாலிபன்.

அவன் இப்படித் தம்மை மட்டந்தட்டியதைக் கவனித் தாலும் கவனிக்காதது போலவே நடந்து கொண்ட அமைச்சர், "நன்று! நன்று! குட்டுவன்! நல்ல பெயர். சிறிது செம்மையைச் சேர்த்துக் கொண்டால் செங்குட் டுவன் என்று நமது மன்னர் பெயரைப் போல் ஆகிவிடும்" என்றார் அமைச்சர்.

"இமயத்தில் இலச்சினை பொறித்த மன்னரெங்கே, நானெங்கே? இமயத்துக்கும், மடுவுக்குமுள்ள ஏற்றத் தாழ்வு மன்னருக்கும் எனக்கும்" என்று மிகுந்த பணிவைக் காட்டினான் குட்டுவன். மேற்கொண்டு உரையாடலில் சம் பந்தப்பட இஷ்டமில்லாமல் ஓலைச் சுவடிகளில் எழுத் தாணியை ஓட்டினான். இடையிடையே திருட்டுக் கண் களால் நிலக்கள்ளியை மட்டும் பார்த்தான். நிலக்கள்ளியும் அவன் கண்களைத் தனது கமலக் கண்களால் சந்தித்தாள். உதடுகளில் புன்முறுவலையும் படரவிட்டாள்.

இருவர் பார்வையையும் புன்முறுவலையும் கண்ட அமைச்சர், "நிலக்கள்ளி இவனை முன்பே உனக்குத் தெரி யுமா?" என்று வினவினார்.

"நாங்கள் இரண்டு பேரும் இங்கு தமிழ் படித்தோம்" என்றாள் நிலக்கள்ளி.

"கடல் வேந்தனும் இங்குதானே படித்தான்?"

"ஆம்"

"அவனிடமும் பரிச்சயம் இருக்கிறதா?"

"ஆம்"

"இன்னும் யார் யாருடன் பரிச்சயம் உனக்கு?"

"இங்கு தமிழ் படிக்கும் நல்லவர்கள் எல்லாருடனும் பழக்கம் உண்டு."

இந்தச் சமயத்தில் ஓர் அதிர்வேட்டை வெடித்தார் அழும்பில்வேள்.

"அப்படியானால் கடல்வேந்தனும் நல்லவனா?" என்று வினவினார்.

"மிகவும் நல்லவர்" என்ற நிலக்கள்ளி, "வேண்டு மானால் குருநாதரைக் கேளுங்கள்" என்றாள்.

"அவனைத்தான் குருநாதர் தமது மகன் என்று வில் லம்பு இலச்சினை இல்லத்தில் சொன்னாரே. அவனைப்பற்றி இவர் எப்படி தவறாக எதுவும் சொல்ல முடியும்?" என்று சீறிய அழும்பில்வேள், "சேரமானின் அவைக்களப் புலவரே! கேளும், நான் வந்த காரணத்தை. கடல்வேந்தன் இங்கிருந்தால் அவனைச் சிறை செய்து செல்லவும், இல்லாவிட்டால் அவனிருப்பிடம் அறிந்து செல்லவும் வந்திருக்கிறேன்" என்று பலத்த குரலில் அறிவித்தார்.

அதுவரை எட்ட இருந்த ஆசனத்தில் உட்கார்ந் திருந்த பரணர் எழுந்து நின்றார். கம்பீரமாக "இந்தக் குரலில் இங்கு பேச மன்னனும் அஞ்சுகிறான். கேவலம் அமைச்சரான நீர் சத்தம் போடுகிறீர். கடல்வேந்தன் மரக்கலம் எல்லார் கண்களிலும் படும்படியாக முகத் துவாரத்தில் நிற்கிறது. சாமர்த்தியமிருந்தால் அங்கு போய் அவனைப் பிடியும். சாமர்த்தியமில்லாவிட்டால் இன்றிரவு இங்கு வாரும், அவனைக் காட்டுகிறேன். இனி நீங்கள் செல்லலாம்" என்று வாசலைக் காட்டினார் தமது கையால்.

அமைச்சர் திகைத்து நின்றார். அந்த சமயத்தில் சுவடியில் எழுதிக் கொண்டிருந்த வாலிபன் களுக்கென்று நகைத்தான். அதனால் கோபம் அதிகமாகவே அழும்பில் வேள் புலவரைச் சுட்டுவிடுவது போலப் பார்த்து, "புலவரே! கடல்வேந்தன் தொள்ளைக்காரன். அவனுக்குப் புகலிடம் அளிப்பதே குற்றம். இரவு வருகிறேன். அவனைக் காட்டும். உமது குற்றத்திற்கு அதுதான் பரிகாரம்" என்று கூறிவிட்டு வெளியே நடந்தார். குருவை வணங்கிவிட்டு நிலக்கள்ளியும் நடந்தாள். அன்றிரவு அமைச்சர், பரணர் இல்லம் சென்றார். தனியாக அல்ல, சுமார் இருபது வீரர்களுடன் சென்றார், பரணர் வீட்டு மார்க்கத்தில் பல இடங்களில் அவர்களை மறைத்து வைத்தார். இப்படி தனக்கு விரிக்கப்பட்டிருந்த வலையை அறியாமலே கடல் வேந்தனும் அன்றிரவு புலவர் இல்லத்தை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

பரணர் வீட்டு வாயிலில் சிறு விளக்கு ஒன்று மட்டும் எரிந்து கொண்டிருந்ததால் உள்ளிருந்தவர்களையோ வெளியே இருந்தவர்களையோ நன்றாகப் பார்க்க முடிய வில்லை கடல்வேந்தனால். ஆகவே அவன்மிக அலட்சியமாக நடந்து வந்தான், பரணர் இல்லமிருந்த பாதையில். பாதைக்கு இருபுறத்திலுமிருந்த சிறு தோப்புகளில் மறைந்திருந்த வீரர்கள் யாரும் கண்ணுக்குத் தெரியாவிட் டாலும் கடல்வேந்தன் பார்வை ஏதோ ஒரு சமயத்தில் மட்டும் இருபுறமும் லேசாகப் பார்த்தது. அதன் விளை வாக அவன் இதழ்களிலும் புன்முறுவலொன்று படர்ந் தது. சதை மடித்த அவன் விகார முற்றல் முகம், அதிக விகாரமாகத் தெரிந்தது. அந்தப் புன்முறுவலின் விளைவாக புலவர் இல்லத்தை அணுக இருந்த சில அடிகளுக்கு முன்பே அவன் சட்டென்று நின்றான். அந்தச் சமயத்தில் இல்லத்துக்குள்ளிருந்த பரணர் ஏதோ சைகை செய்ய முற்படவே, சஞ்சயன் "உம்! ஜாக்கிரதை. உயிரின் மீது ஆசையிருந்தால் ஜாடை காட்டுவதோ குரல் கொடுப்

பதோ கூடாது. அவன் இங்கு வந்தபின் பேச நிரம்ப அவகாசம் இருக்கிறது" என்று எச்சரித்தான். அதையும் மீறிப் புலவர் ஓர் அடி முன்னேற முயன்றார். அதே சமயத் தில், புதரிலிருந்த இரு காவலர் உருவிய வாளுடன் கடல் வேந்தன் மீது பாய்ந்துவிட்டனர். மற்றொரு பக்கத்தின் புதரிலிருந்து ஈட்டிகள் இரண்டு வீசப்பட்டு 'விர்'ரென்று மந்திராஸ்திரம் போல் அவை அவன் மார்பை நோக்கி வந்தன. கடல்வேந்தன் ஆயுள் அத்துடன் முடிந்துவிட்ட தென்றே நினைத்தார் பரணர்.

□

13. சிறை வேந்தன்

படைத்தளபதி ஒருவன் தனது பாசறையை நோக்கி வருவது போல நிமிர்ந்த பார்வையுடனும், சீரான நடையுடனும் புலவர் இல்லம் நோக்கி நடந்து வந்த கடல் வேந்தன், பக்கத்துப் புதர்களிலிருந்து தன்மீது பாய்ந்து வந்த இரு வீரர்களையோ, மார்பை நோக்கிப் பாய்ந்த ஈட்டிகளையோ லட்சியம் செய்யாமல் மேலும் நடக்கவே செய்தான். அவன் மார்பு மீது பாய்ந்த இரு ஈட்டிகளும் செயலற்றுக் கீழே விழுந்த அதே சமயத்தில், இடையிலிருந்த தனது நீண்ட வாளை உருவாமல் இரு குறுவாள்களை மட்டும் எடுத்து, தன்மீது பாய முற்பட்ட இரு வீரர்களை நோக்கி எறிந்து விடவே, அவர்கள் இருவர் கைகளும் செயலற்று வாள்களும் கீழே விழுந்து, விபரீத ஒலிகளைப் பரப்பின. தன்மீது பாய்ந்து செயலற்று விழுந்த இருவேல்களையும் பாதையிலிருந்து காலால் ஒதுக்கித் தள்ளிய கடல் வேந்தன், எதிரி வீரர்களை நோக்கிச் சென்று, அவர்கள் கைகளில் தைத்துத் தொங்கிக் கொண்டிருந்த தனது இரு குறுவாள்களையும் பிடுங்கி, ரத்தத்தை அவர்கள் உடையிலேயே துடைத்து விட்டு, மீண்டும் அவற்றைத் தனது கச்சையில் செருகிக் கொண்டான். அடுத்து அந்த இரு வீரர்களையும் நோக்கி 'இன்னும் யாராவது இருக்கிறார்களா?'' என்று வினவவும் செய்தான்.

அவன் கேள்வி முடிவதற்குள்ளேயே பக்கத்துப் புதர்களிலிருந்து இன்னும் பத்துப் பேர் வெளியே வரவே தனது நீண்டவாளை எடுத்து உருவி அதன் கூர்மை பார்த்த கடல்வேந்தன், ''வீரர்கள் திருடர்கள் போல் பதுங்க வேண்டிய நிலைமை சேர நாட்டுக்கு வந்து விட்டதா?''

என்று வினவினான். ''சேர வீரர்களை வெட்டி வழக்கமில்லை எனக்கு. வேறு வழியில்லாவிட்டால் உங்களை வெட்டாமலும் இருக்க முடியாது. உங்களை அழைத்து வந்து பதுங்க வைத்தது யார்? அமைச்சரா? தூதுவனா?'' என்ற கேள்விகளையும் இரைந்து கேட்டான். இரவின் அமைதியில் அந்தச் சொற்கள் மிகத் தெளிவாகவும், பெரிதாகவும் கேட்டன புலவர் பெருமான் இல்லப் பகுதியில்.

கடல்வேந்தன் எழுப்பிய கேள்வியால் அவனை உடனடியாகத் தாக்க முயலாத வீரர்கள் பரணர் இல்லத்தை நோக்கினர். ஒருவன் மட்டும் சொன்னான். ''நீங்கள் சரணடைந்து விட்டால் நாங்கள் உங்களைத் தாக்க அவசியமில்லை'' என்று.

இதைக்கேட்ட கடல்வேந்தன், அந்தப் பகுதியே அதிரும்படியாக நகைத்தான். ''சரணடைவதா? எதற்கு? யாரிடம்?'' என்னும் சொற்களை வீசினான், அந்த நகைப்பின் ஊடே. அவன் நகைப்பு பயங்கரமாகவே இருக்கவே அவனுக்கு வெறி ஏதாவது பிடித்து விட்டதோ என்று நினைத்துத் திகிலடைந்த அழும்பில்வேள், பரணர் இல்லத்தின் வாயிலுக்கு வந்து நின்று, ''கடல் வேந்தனே!'' என்று இரைந்து அழைத்தார்.

அவர் தோன்றியதன் விளைவாகப் போரிடாமல் நின்று விட்ட அரசாங்க வீரர்களையும், அமைச்சரையும் நோக்கிய கடல்வேந்தன், ''அமைச்சர் பெருமானே! என்னைப் பிடிக்க என் தந்தையின் இல்லத்துக்கு வருவானேன்? கடலில் நிற்பது எனது ஒரே மரக்கலம். அங்கேயே வந்து பிடித்திருக்கலாம். அல்லது சேரநாட்டு மரக்கலங்கள் இரண்டை ஏவி என்னை மடக்கலாம்'' என்று விளக்கி மீண்டும் நகைத்தான் பழையபடி பயங்கரமாக.

''கொள்ளைக்காரனை எப்படிப் பிடிக்க வேண்டும் என்று எனக்கு நன்றாகத் தெரியும். பிடிக்கும் வழியைக்

கொள்ளைக்காரனிடமிருந்தே அறிய அவசியமில்லை'' என்று சற்று அதிகாரக் குரலிலேயே பேசினார் அமைச்சர்.

கடல்வேந்தன் சிறிது சிந்தித்தான். ''ஆம் அமைச்சரே! திருடனைப் பிடிக்க அமைச்சரும் திருட்டுத் தொழிலில் இறங்க வேண்டுமா?'' என்று வினவினான் சிந்தனைக்குப் பிறகு.

''நான் திருட்டுத் தொழிலில் இறங்கினேனா?''

''ஆம்.''

''எப்பொழுது?''

''இப்பொழுதுதான். என்னைப் பிடிக்க பல வீரர்களை திருடர்களைப்போல் வழியில் பதுக்கி வைத்திருக்கிறீர்கள். நீரும் திருடனைப்போல் என் இல்லத்தில் பதுங்கியிருக்கிறீர். அந்தக் கையாலாகாத சஞ்சயனும் இங்குதான் பதுங்கிக் கிடப்பான் என்று நினைக்கிறேன்.''

''சஞ்சயன் இங்கிருப்பது உனக்கு எப்படி தெரியும்?''

''இருளிருக்குமிடத்தில் பிசாசும் இருக்கும்''

இதைக் கேட்டதும் கோபங்கொண்ட அமைச்சர், ''யார் இருள்? யார் பிசாசு?'' என்று வினவினார் கோபக் குரலில்.

''அது உங்களுக்குள் தீர்மானமாக வேண்டிய விஷயம்'' என்ற வேந்தன் மறுபடியும் நகைத்தான்.

அந்தச் சமயத்தில் அமைச்சர் நின்றிருந்த வாயிலில் அவர் பக்கத்தில் தோன்றிய சஞ்சயன், ''வேந்தா! நான் தனியாக வரவில்லை...'' என்றான் சற்றே கடுமையான குரலில்.

''அந்தத் துணிவு உமக்கோ அமைச்சருக்கோ இல்லை என்பது எனக்குத் தெரியும்'' என்று ஏளனத்துடன் பேசினான் வேந்தன்.

''புலியைப் பிடிக்க பல ஆள்களுடன் செல்வது துணிவற்ற செய்கையல்ல'' என்று சுட்டிக் காட்டினான் சஞ்சயன்.

''புலியைப் பிடிக்க நரிகளுடன் செல்வது உசிதமல்ல என்பதை உணர்ந்திருக்க வேண்டும் தூதரே'' என்ற கடல் வேந்தன், வேகமாக முன்னேற முயன்றான். அவனைப் பத்து வாள்கள் தடுத்தன.

அந்த வாள்கள் தனது மார்பில் புதைந்த நிலையில் அவற்றையும் பார்த்து அமைச்சரையும், சேர தூதனையும் நோக்கி, ''உங்களுக்கு வேண்டியது சண்டையா சமாதானமா?'' என்று நிதானமாக, ஆனால் பெரிய குரலில் வினவினான் கடல்வேந்தன்.

''உன் மார்பில் பத்து வாள்கள் பதிந்திருக்கின்றன'' என்று சுட்டிக் காட்டினார் அமைச்சர்.

''பார்த்தேன். கேட்டதற்குப் பதில் சொல்லும்'' என்றான் வேந்தன்.

இப்படிக் கேட்டுக் கொண்டே சரேலென்று கீழே உட்கார்ந்து, வாள்களிலிருந்து தப்பி மீண்டு, அதே வேகத்தில் எழுந்து, வீரர்களை இடித்துத் தள்ளி, தனக்கும் இடம் செய்துகொண்ட கடல்வேந்தன், தனது வாளை வேகமாக வீசி எதிரிகளின் வாள்களைத் தடுத்தான். புயலே கத்தி வடிவமெடுத்து வந்துவிட்டது போன்ற பிரமையடைந்த வீரர்களில் நால்வரின் கையிலிருந்த வாள்கள் பறந்துவிடவே, அவர் கொடுத்த இடைவெளியில் புகுந்து வலக்கையில் வாளுடன், கீழே கிடந்த வேலொன்றையும் காலால் எடுத்து இடக்கையில் ஏந்திக்கொண்ட கடல் வேந்தன் வேல், வாள், இரண்டினாலும் ஒரே சமயத்தில் போராடினான்.

அவன் போர் முறையைக் கண்டு, "ஒரு மனிதன் இத்தனை பேரைச் சமாளிக்க முடியுமா?" என அமைச்சர் வியப்படைந்த சில விநாடிகளுக்குள்ளேயே வேந்தனைச் சூழ்ந்த இரு வீரர்கள் வேலுக்கும் இன்னும் இருவர் அவன் வாளுக்கும் இலக்காகிவிடவே அவர்களிடமிருந்து நீங்கி, ஒரே எட்டில் அமைச்சர் இருந்த இடத்தை அணுகிவிட்ட கடல்வேந்தன், "அமைச்சரே! உமதுவீரர்களை வாள்களைக் கீழே போடச் சொல்லுங்கள்" என்று கடுமையான குரலில் உத்தரவிட்டான்.

கடல்வேந்தன் கையிலிருந்த வேல் தமது கழுத்தைத் தடவிக் கொண்டிருந்ததைப் பார்த்த அமைச்சர், "வாள்களைக கீழே போடுங்கள்" என்று இரைந்து சீறினார்.

வீரர்கள் வாள்களை இழந்ததும் அமைச்சரை நோக்கிய கடல்வேந்தன், "அமைச்சரே! சஞ்சயனையும் இந்த வீரனையும் உமது மாளிகைக்கு அனுப்பிவிடும். உம்முடன் நான் வருகிறேன். என்னை நீங்கள் சிறையில் தள்ளிவிடலாம்" என்று கூறினான்.

அதைக் கேட்ட அமைச்சர் விழித்தார். சஞ்சயன் அதில் ஏதோ சூது இருப்பதாக நினைத்து, "வீரர்கள் போய்விட்டால் உன்னை எப்படிப் பிடிப்பது?" என்று கேட்டான்.

"வீரர்கள் இருந்தும் பிடிக்கவில்லை. இல்லாமல் பிடித்தால் உமக்கு கௌரவமில்லையா? கடல்வேந்தன் சொல்லில் நம்பிக்கையிருந்தால் வீரர்களை அனுப்பிவிடும். இல்லையேல் சம்பிரதாயம் உங்களை அழித்துவிடும்" என்றான் கடல்வேந்தன்.

"சம்பிரதாயமா?" வியப்புடன் வினவினாள் சஞ்சயன்.

"ஆம் தூதரே. நான் இன்று விடியற்காலையில் என் மரக்கலத்துக்குத் திரும்பவேண்டும். நான் அப்படித் திரும்பாவிடில் கொள்ளைக்காரர்கள் இன்று பகலிலேயே பல வேடங்களில் முசிறியில் புகுந்து என்னைத் தேடுவார்கள். இருப்பிடமறிந்தால் அந்த இடம் அன்றிரவு தாக்கப்படும். இது எங்கள் சம்பிரதாயம். விளைவு சற்று கசப்பானது. சொல்ல எனக்கிஷ்டமில்லை" என்றான் கடல் வேந்தன்.

அந்தச் சமயத்தில் பரணரும் குறுக்கிட்டு, "அமைச்சரே! வேந்தன் புத்திமதியை ஏற்றுக்கொள்ளும்" என்று தூண்டினார்.

அமைச்சர் சிந்தித்தார். சஞ்சயனையும் பார்த்தார் சங்கடத்துடன். கடைசியாக வீரர்களைத் திரும்பச்சொல்லி கட்டளையும் இட்டார். வீரர்கள் புதர்களிலிருந்தும் பரணர் இல்லத்திலிருந்தும் கிளம்பிச் சென்ற பிறகு கடல்வேந்தன் அமைச்சரை நோக்கி, "அமைச்சரே! நான் சற்று உறங்கிவிட்டு வருகிறேன். அதுவரை பொறுத்திருங்கள்" என்று கூறிவிட்டு உள்ளே போய்ப் படுத்து விட்டான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் உறங்குவதை ஒரே சீராக வந்த அவன் மூச்சிலிருந்து புரிந்துகொண்ட அமைச்சர் கூடத்திலிருந்த ஓர் ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். சஞ்சயன் மட்டும் விவரிக்க இயலாத கலக்கத்தால் அப்படியும் இப்படியுமாக அலைந்து கொண்டிருந்தான்.

பரணர் கூடத்தின் ஒரு மூலையிலிருந்த விளக்கடியில் உட்கார்ந்து நறுக்கு ஓலைகளை எடுத்து எழுத்தாணியால் எழுதலானார். 'இந்தச் சமயத்தில் எழுத்து என்ன வேண்டியிருக்கிறது?' என்று உள்ளூர அலுத்துக்கொண்ட அமைச்சர் அதைப் பற்றி கேட்கவும் செய்தார். "புலவரே! என்ன எழுதுகிறீர்?" என்று.

"புலவன் என்ன எழுதுவான்? கவிதைதான்" என்றார் பரணர்.

"கவிதை எழுத இதுவா சமயம்?" என்று வினவினார் அமைச்சர்.

"கவிதை எழுத சமயம் ஏது? தோன்றும்போதெல்லாம் எழுத வேண்டியதுதான்" என்ற பரணர் எழுத்தாணியை ஏட்டில் ஓட்டினார்.

"எழுத மனநிம்மதி வேண்டாமா?" என்று கேட்டார் அமைச்சர்.

"இப்பொழுது அமைதிக்கு என்ன குறைவு?" என்று புலவர் கேட்டார்.

"கடல்வேந்தனைப் பற்றி உமக்குக் கவலையில்லையா?"

"எதற்குக் கவலை?"

"நான் சிறைபிடித்துப் போகிறேனே?"

"அது உங்களுக்குள் ஏற்பட்ட ஒப்பந்தம். அவன் சிறைப்பட ஒப்புக்கொண்டான். நீர் சிறை செய்கிறீர். அது முடிந்த விஷயமாயிற்றே?" என்ற பரணர் மேலும் எழுதலானார்.

சில விநாடிகள் ஓடின. அமைச்சர் சங்கடத்துடன் உட்கார்ந்திருந்தவர் எழுந்து புலவர் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார். புலவர் எழுதுவதையும் பார்த்தார். பிரமித்தார். "புலவரே! இதென்ன நடக்காத காரியத்தை எழுதுகிறீர்?" என்று கேட்கவும் செய்தார்.

"எது நடக்காதது?"

"யவனரை மன்னர் விரட்டி விட்டதாக எழுதுகிறீரே?"

"இனிமேல் நடக்கும். கவிஞன் பார்வை எப்பொழுதும் முன்னால் ஓடும்."

"யவனர் வாளாவிருப்பார்களா?"

"யவனர் எழுந்தால் அடக்கப்படுவார்கள். அதை மன்னர் செய்து முடிப்பார். கடல்வேந்தனிருக்கும் வரை செங்குட்டுவன் கரம் வலுத்தே இருக்கும்" என்ற பரணர் மேலும் எழுதலானார்.

அமைச்சர் பெரும் குழப்பத்திலிருந்தார். அப்பொழுது கடல்வேந்தன் எழுந்து வந்தான் அறையிலிருந்து. "அப்பா!" என்று புலவரை அழைத்தான்.

"என்ன குழந்தாய்?" புலவர் சுவடியிலிருந்து கண்களை ஏறெடுத்து அவனை நோக்கினார்.

"க்ளேஸியஸ் வந்தால் என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாமென்று சொல்லி விடுங்கள்" என்று கூறிவிட்டு அமைச்சரிடம் தனது வாளை நீட்டி, "அமைச்சரே! வாரும் போகலாம்!" என்று தலைவணங்கினான்.

அமைச்சர், வேந்தன் வாளைப் பெற்றுக் கொண்டார். பிறகு சஞ்சயனை நோக்கி, "தூதரே! வேந்தனை எங்கு சிறை வைக்கலாம்?" என்று வினவினார்.

சஞ்சயன் பதில் சொல்லுமுன்பு கடல்வேந்தனே பதில் சொன்னான், "உமது மாளிகையில், நிலக்கள்ளியின் அறைக்கு அடுத்த அறையில்" என்று.

"நிலக்கள்ளிக்கும் நீ சிறையிருப்பதற்கும் என்ன சம்பந்தம்?" என்று வினவினார் அமைச்சர்.

"என்னைப் பிணைக்கக்கூடிய கயிறு அது ஒன்றுதான். வேறு எங்கு வைத்தாலும் தப்பி விடுவேன்" என்று சர்வ சாதாரணமாகப் பதில் சொன்னான் கடல்வேந்தன்.

இந்தச் சமயத்தில் பரணரும் இடை புகுந்து, "வேந்தன் சொல்கிறபடி செய்யும்" என்று யோசனை சொன்னார்.

"வேந்தன் என்ன என் விருந்தாளியா? சிறையல்லவா பிடிக்கிறேன்!" என்றார் அமைச்சர்.

"இரண்டும் ஒன்றுதான்" என்று அலட்சியமாகச் சொன்னார் பரணர்.

அமைச்சர் வேறு வழியின்றி கடல்வேந்தனும் சஞ்சயனும் பின்தொடர, தமது மாளிகை நோக்கி நடந்தார். கடல்வேந்தன் சொன்ன அறையில் வைத்து அவனைப் பூட்டினார். "கடல்வேந்தன் சிறை வேந்தன்" என்று உற்சாகமும் பட்டார். அந்த உற்சாகமும் ஒரே நாள்தான் நிலைத்தது.

□

14. சிறை இருந்தவன் ஏற்றம்

கடல்வேந்தனைப் பிடிக்க முயன்று தாம் அடைந்த தோல்வியாலும், அவனாகவே வலுவில் சிறைப்பட்டுத் தம்முடன் வந்த விசித்திரத்தாலும், பரணர் இல்லத்தின் முன்பு நடந்த சண்டையைப் பற்றிய வியப்பினாலும் அன்றிரவு முழுவதும் உறங்கவில்லை சேரன் அமைச்சரான அழும்பில்வேள். சுமார் பன்னிரண்டு படை வீரர்களை அவன் ஒருவனாகச் சமாளிப்பதையும், விரைந்து வந்து தமது கழுத்தில் வேலை ஊன்றித் தம்மைப் பணியவைத்ததையும் திரும்பத் திரும்ப எண்ணிப் பார்த்து, "இத்தனை வீரரால் இவனைப் பிடிக்க முடியவில்லை என்றால் வேறு எப்படித்தான் பிடிப்பது?" என்ற ஒரு கேள்வியையும் தம்முள் எழுப்பிக் கொண்டார் அமைச்சர். இத்தகைய தோல்வி மனப்பான்மையின் காரணமாக அவர் கோபம் சஞ்சயன்மீது திரும்பி, "இவன் என்ன பெரிய தூதன், தந்திரக்காரன்? ஒரு கொள்ளைக்காரனை, தன்னந்தனியாக வந்தவனைப் பிடிக்கமுடியாதவன் எதைக் கண்டுபிடிப்பான்? எதைத்தான் சாதிப்பான்?" என்று சீறிக் கொண்டார் உள்ளத்துள்.

இந்த யோசனைகளுடன் கடல்வேந்தன் போர் முறையும் அவருக்குப் பரம விசித்திரமாயிருந்தது. 'அவன் சண்டையிட்ட விதம் ஒருபுறமிருக்க, அவன்மீது மறைவிலிருந்து வீசிய வேல்கள் அவன் மார்பில் பாய்ந்து பயன் அற்று ஏன் வீழ்ந்தன? இதை நாளை அவனையே கேட்டு விடுகிறேன்" என்றும் சொல்லிக்கொண்டார். அத்துடன் ஒரு சந்தேகமும் எழுந்தது அழும்பில்வேள் மனத்தில். "இவன் எதற்காக நிலக்கள்ளியின் அறைக்குப் பக்கத்து

அறையில் சிறையிருக்க விரும்பினான்? என் மகள் இவனைத் தப்பவிட்டு விடுவாளோ? ஏன் கூடாது? வில்லம்பு இலச்சினை இல்லத்தில் எங்களை அனுப்பி விட்டு, இவனுடன் சென்றவள்தானே?'' என்றும் சிந்தனையில் இறங்கினார். இத்தகைய சந்தேகங்களாலும், ஆத்ம விசாரணையாலும் உறக்கம் வராததால் இரவு முழுவதும் விழித்துக்கொண்டே இருந்ததன் விளைவாகப் படுக்கையில் புரண்டபடி நேரத்தைச் செலவழித்து, விடிவதற்குக் கால் ஜாமம் இருக்கும் போதே படுக்கையை விட்டு எழுந்து, காலைக் கடன்களை முடித்துக் கொண்டு மாளிகைக் கூடத்தில் உலாவினார். உலாவிக்கொண்டே நிலக்கள்ளி அறையையும் கடல்வேந்தன் அறையையும் நெருங்கி ஊன்றிப் பார்த்தார். ஏதாவது அரவம் வருகிறதா என்று காதுகளைத் தீட்டிக் கொண்டு உற்றுக் கேட்கவும் செய்தார்.

இரண்டு அறைகளிலும் அரவம் அணுவளவும் கிடையாது. கடல்வேந்தனைக் காக்க வேண்டிய காவலர்களும் கீழே உட்கார்ந்து அறைக்கதவு மீது சாய்ந்து நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அமைச்சர் வரவினால் ஏற்பட்ட அவர் காலடி ஒலிகள்கூட அவர்களை எழுப்பவில்லை. அதனால் வெகுண்ட அமைச்சர் ஒரு காவலனைக் காலால் சீண்டவே அவன் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்து அவருக்குத் தலைவணங்கி, ''மாமன்னர் செங்குட்டுவர் வாழ்க! அமைச்சர் வாழ்க!'' என்று கட்டியம் சொன்னான்.

அமைச்சர் அவனையும் அவன் கூறிய கட்டியத்தால் விழித்துக்கொண்ட சக காவலனையும் இகழ்ச்சியுடன் பார்த்து, ''உங்களுக்குத் தெருக்கூத்தில் பழக்கமுண்டா?'' என்று வினவினார்.

காவலர்கள் மௌனமாக நின்றனர். அவரால் காலால் உதைக்கப்பட்ட காவலன் மட்டும் சிறிது நேரம் கழித்து,

''அமைச்சருக்குத் தெரியாததல்ல, ஆண்டுதோறும் இந்த ஊர் அம்மன் விழாவில் கூத்தாடுபவர் என் கோஷ்டியார் தான். அதில் நான் அரச வேடம் போடுவேன். தாங்களே பார்த்திருக்கிறீர்கள்....'' என்று இழுத்தான். தற்பெருமை பிடிபடாததால் தலையையும் குனிந்து கொண்டான்.

இதைக்கேட்ட அமைச்சர் சினம் ஆயிரம் மடங்கு அதிகமாகவே, ''நீ எப்பொழுது காவலன் வேடம் போட ஆரம்பித்தாய்?'' என்று கோபத்துடன் இகழ்ச்சி மரியாதையையும் காட்டினார்.

''தாங்கள் நியமித்தது முதல்'' என்றான் காவலன்.

''அப்படியா?'' அமைச்சர் சினம் அதிகமாயிற்று.

''ஆம்! அமைச்சர் பெருமானே!''

''அமைச்சரிடம் அரசர் காவலிருக்கக்கூடாது. இன்றிலிருந்து உம்மை வேலையிலிருந்து நீக்கி விட்டேன்.''

''அது வெறும் வேடம்''

''இதுவும் அப்படித்தான். நீ காவலா புரிகிறாய்? தூங்குவது காவலா?''

''இல்லை.''

''அப்படியானால் ஏன் தூங்கினாய்?''

''அவர் உத்தரவு?''

''யார் உத்தரவு?''

''கடல்வேந்தர் உத்தரவு.''

காவலர் சொற் கேட்ட அமைச்சர் பிரமித்தார்.

''என்ன உளறுகிறாய்?'' என்று சீறினார்.

இன்னொரு காவலன் முதல் காவலன் உதவிக்கு வந்து "அவர் உளறவில்லை. நாங்கள் காவல் புரிந்து கொண்டு அறை முன்பு நடமாடிக் கொண்டிருந்தோம். உள்ளே உறங்கிக் கொண்டிருந்த கடல்வேந்தர் வெளியே தலை நீட்டி, தான் இரண்டுநாள்களுக்குத் தப்பப் போவதில்லை யென்றும், எங்களை உறங்கும்படியும் சொன்னார். எங்கள் நடமாட்ட ஒலியால் அவர் தூங்குவது தடைப்படுவதாகச் சொன்னார். பிறகுதான் நாங்கள் கதவில் சாய்ந்து தூங்கி னோம்" என்று நடந்ததை விளக்கினான்.

அமைச்சருக்கு என்ன சொல்வதென்று விளங்காததால், "நீங்கள் சொல்வது நிஜமென்று எனக்கெப்படித் தெரியும்?" என்று பெரிதாகக் கேட்கவே, அதன் விளைவாகப் பக்கத்து அறை திறந்து நிலக்கள்ளி வெளியே வந்து, "அப்பா! ஏன் கூச்சல் போடுகிறீர்கள்? அவர் விழித்துக் கொள்ளப் போகிறார்" என்று கூறி வாயின்மீது கையை வைத்து எச்சரிக்கையும் செய்தாள்.

காவலர் மீதிருந்த கோபம் மகளின்மீது திரும்பவே "நிலக்கள்ளி!" என்று அதிகாரத்துடன் அழைத்தார் அமைச்சர்.

"உஸ்! உஸ்! இப்பொழுதுதானே சொன்னேன், இரையாதீர்கள் அப்பா" என்று மீண்டும் வாயைப் பொத்திக் காட்டினாள் நிலக்கள்ளி.

"இரைந்தாலென்ன? அவர் விழித்துக்கொண்டால் தானென்ன? என் தலையைத் திருகிவிடுவாரோ?" என்று கோபத்துடன் கேட்டார் அமைச்சர்.

"ஆம்!" என்றாள் நிலக்கள்ளி.

"என்ன ஆம்?" அமைச்சர் கோபம் எல்லை கடந்ததால் சத்தம் பலமாயிற்று.

"அரைத் தூக்கத்தில் எழுந்தால் வெறியுடன் வரு வார். அப்பொழுது அவர் என்ன செய்வார், ஏது செய் வார் என்று கூறமுடியாது" என்று கடல்வேந்தனின் குணாதிசயங்களை எடுத்துச் சொன்னாள் நிலக்கள்ளி.

அமைச்சர் அவளுக்குப் பதில் சொல்லாமல் அவளை உற்று நோக்கினார் பல விநாடிகள். பிறகு சாந்தமடைந்து, "நிலக்கள்ளி! இது என் அரண்மனையா? அவன் அரண் மனையா? இங்கு அவன் சிறைவாசியா? விருந்தாளியா?" என்று வினவினார் மிக மெதுவான குரலில்.

நிலக்கள்ளி சிந்தித்தாள் சில விநாடிகள். பிறகு அவள் பதில் சொன்ன போது அவள் குரலில் மென்மை இருந்தது. அவள் வதனம் கனிந்தும், குரல் குழைந்தும் இருந்தது. சொற்களில் ஓர் இனிமையும் ஒலித்தது. "தந்தையே! இது உங்கள் அரண்மனைதான். அவரும் உங்களிடம் சிறை யிருக்க ஒப்புக்கொண்டதால் சிறைவாசிதான். அடுத்த இரண்டு நாள்கள் சிறையிருக்க ஒப்புக் கொண்டிருக்கிறார். ஆகையால் கவலைப்படாதீர்கள்" என்று மெதுவாகவும் இனிமையான குரலிலும் சொன்னாள் மந்திரி மகள்.

"சிறையிருக்க ஒப்புக் கொண்டாரா? இல்லாவிட்டால் தப்பிவிடுவாரா? இங்கு எத்தனை வீரர்கள் இருக்கிறார்கள் தெரியுமா உனக்கு?" என்று அமைச்சர் வினவினார்.

இதற்கு நிலக்கள்ளி திட்டமாகவே பதில் சொன்னாள்: "ஆயிரம் வீரர்கள் இருந்தாலும் அவர் தப்ப இஷ்டப் பட்டால் நீங்கள் தடுக்க முடியாது" என்று. "அப்பா! ஏற்கனவே இந்த மாளிகையிலிருந்து அவர் தப்பிச் சென்றது உங்களுக்குத் தெரியாதா? என்னையும் அழைத்துச் சென்றதை மறந்துவிட்டீர்களா?" என்றும் வினவினாள் அவள் சொன்னது உண்மையென்று தெரிந்திருந்ததால் அமைச்சர் வீண்விவாதத்தில் இறங்கவில்லை. "இப்பொழுது என்ன செய்யச் சொல்லுகிறாய்?" என்று வினவினார் எரிச்சலுடன்.

"அவர் சிறையிருக்க ஒப்புக் கொண்டிருக்கிறார். ஆகையால் அதைப்பற்றி வீண் விவாதங்கள் கிளப்பாதீர்கள்" என்றாள் நிலக்கள்ளி.

"நிலக்கள்ளி! இவன் அரசாங்கப் பணப்பெட்டிகளைத் திருடியிருக்கிறான்" என்று நினைவுபடுத்தினார்.

"அதைத்தான் அவரே ஒப்புக்கொண்டாரே முதல் நாள் இரவில்" என்று கூறி அவன் கொள்ளைக்கு நியாயமும் கற்பித்தாள் நிலக்கள்ளி.

"அப்படியானால் குற்றத்துக்குத் தண்டனை கிடையாதா?"

"உண்டு. அவரையே கேளுங்கள், கொள்ளையடிக்கும் காரணத்தை."

"சரி சரி கேட்கிறேன்" என்று உறுமிய அமைச்சர் தமது அறையை நோக்கி நடந்தார். நிலக்கள்ளியையோ காவலர்களையோ திரும்பியும் பார்க்காமல்.

அமைச்சர் சென்றதும் அவர் மகளை நோக்கி ஒரு காவலன் கேட்டான், "அம்மணி! நாங்கள் காவல் புரிவதா வேண்டாமா?" என்று.

"வேண்டாம். நீங்கள் செல்லுங்கள் காவல் வீரர் கூடத்துக்கு" என்றாள் அவள்.

"இந்தக் கொள்ளைக்காரனை..." என்று தொடங்கிய வீரன் நிலக்கள்ளியின் வதனத்தில் விரிந்த சினத்தைக் கண்டு "கொள்ளைக்காரரை—" என்று மெல்ல விழுங்கினான்.

"நான் பார்த்துக் கொள்கிறேன். போய்விடுங்கள், வீணாக இரைச்சல் போடாதீர்கள்" என்று அவர்கள் செல்வதற்குப் படிகளைக் காட்டினாள்.

"அமைச்சருக்குப் பதில் சொல்வது யார்?" என்று வினவினான் ஒரு காவலன்.

"நான்" என்ற நிலக்கள்ளி கோப விழிகளை அவர்கள் மீது நாட்டினாள். அந்த ஒரு பார்வை காவலர்களைப் பறக்க வைத்தது.

பிறகு நிலக்கள்ளி நேராக நீராடும் அறை நோக்கி நடந்தாள். நீராடி தலை சீவி முடித்துச் சமையலறை சென்று காலை உணவு சித்தமாயிருக்கிறதா என்று பார்த்தாள். சித்தமாயிருப்பது தெரிந்ததால் சிறை அறைக்குச் சென்று கதவைத் தட்டினாள். "யாரது?" என்று எழுந்தது வேந்தன் குரல்.

"நான்தான். எழுந்திருங்கள். பொழுது விடிந்து ஒரு நாழிகை ஆகிவிட்டது" என்று நிலக்கள்ளி அதட்டினாள். மெல்லக் கதவைத் திறந்து தலையை நீட்டிய கடல்வேந்தன், "இதற்குள் என்ன அவசரம்!' என்று வினவினான்

"காலை உணவு சித்தமாயிருக்கின்றது" என்றாள். நிலக்கள்ளி.

கடல்வேந்தன் அவளைப் பின்பற்றி நடந்தான். நீராட அறைக்குச் சென்றதும் அங்கியையும், உள்ளங்கியையும் களைந்து நிலக்கள்ளியிடம் கொடுத்துவிட்டு நீராட முற்பட்டான். இரண்டு அங்கிகளையும் எடுத்துக்கொண்டு அவள் அவன் அறையை நோக்கி நடந்தாள். இந்த விந்தையைப் பார்த்துக் கொண்டிருந்த அமைச்சர் அவளைப் பின் தொடர்ந்தார்.

நிலக்கள்ளி, கடல்வேந்தன் அறையில் அங்கிகளைப் படுக்கை மீது வைத்தாள் ஒரு புறமாக. அந்த அங்கிகளைக்

கண்ட அமைச்சர் வியந்து உள்ளங்கையைத் தமது கை லெடுத்துப் பார்த்தார். அது முழுவதும் இரும்புக் கம்பி களால் பின்னப்பட்டிருந்தது. அது யவனர்கள் பாது காப்புக்கு அணியும் இரும்புச்சட்டை என்பதை உணர்ந்த அமைச்சர், முதல் இரவில் அவன் மீது தாக்கிய வேல்கள் செயலற்று விழுந்ததன் காரணத்தைப் புரிந்துகொண் டார். இன்னோர் அங்கி அவர் ஏற்கெனவே பார்த்தது தான். பெரிய தளபதிகள் போர்க்களங்களில் அணியும் அங்கி அது. அதன் கச்சையில் நான்கு குறுவாள்கள் இருப்பதைக் கவனித்தார் அமைச்சர், அவன் வாளைத் தாம் எடுத்துக் கொண்டதால் அது மட்டும் அங்கு இல்லை என்பதைப் புரிந்து கொண்ட அமைச்சருக்கு அவனைச் சிறைப் பிடித்தது சரிதானா என்ற சந்தேகமும் ஏற் பட்டது. அன்றே மன்னருக்கு இதுபற்றித் தெரிவிக்கத் தீர்மானித்தார்.

அந்தச் சமயத்தில் நீராடிவிட்டுச் சிறுதுணியை இடுப் பில் கட்டிவந்த கடல்வேந்தன் அமைச்சருக்குத் தலைவணங் கினான். அமைச்சர் அவனை நோக்கினார். அவன் தலைக்கு நீராடவில்லை என்பதையும், கழுத்துக்குக் கீழ்தான் குளித்திருக்கிறானென்பதையும் புரிந்து கொண்ட அமைச்சர் "வேந்தரே! தலைக்குத் தண்ணீர்விடும் பழக்கமில்லை போலிருக்கிறதே" என்று கேட்டார்.

"சில சமயங்களில் உண்டு," என்ற கடல்வேந்தன் "நிலக்கள்ளி! காலை உணவு கொண்டு வா" என்று உத்தர விட்டு உள்ளே சென்றுவிட்டான்.

அவன் உத்தரவை நிறைவேற்ற நிலக்கள்ளி விரைந் தாள். அமைச்சர் கலங்கி நின்றார். சிறையிலிருப்பவன் உத்தரவிடுவதும் அதை நிறைவேற்றத் தன் மகள் ஓடு வதும் பெருவிந்தையாயிருந்தது அவருக்கு, மகள் காலை

உணவுடன் திரும்பியதும் கேட்டார் அமைச்சர், "அம்மா! இவன் என்ன மருமகப் பிள்ளையா இந்த வீட்டுக்கு?" என்று.

"அந்தப் பாக்கியம் உங்களுக்கு ஏற்பட்டால் உங்களை விட அதிர்ஷ்டசாலி வேறு யார்கும் கிடையாது சேரநாட் டில்" என்ற நிலக்கள்ளி அவர் மீது புன்சிரிப்பொன்றை வீசிவிட்டு வேந்தன் சிறையிருந்த அறைக்குள் சென்று விட்டாள்;

அமைச்சர் ஏதும் பேசாமல் சிலையென நின்றார். 'கடல் வேந்தனே! நீ இந்த வீட்டு மருமகப்பிள்ளையா? பார்த்து விடுகிறேன் அதை" என்று சீறினார். அவர் உள்ளத்தில் பயங்கரத் திட்டமொன்று உருவாயிற்று அந்த சமயத்தில்,

○

15. நாத சொர்க்கம்

தானாகவே வலுவில் வந்து தம்மிடம் சிறைப்பட்டு, தமது பெண்ணின் அறைக்குப் பக்கத்து அறையில் தங்கித் தமது வீட்டு மருமகப்பிள்ளை போல சொந்தம் கொண்டாடிய கடல்வேந்தனை மீண்டும் தப்பவிட்டால், தமது பெயருக்குப் பெரும் மாசு ஏற்படும் என்பதை உணர்ந்த அமைச்சர் அழும்பில்வேள், அவனை நிரந்தரமாகச் சிறையில் அடைத்துவிட பயங்கரமான ஒரு திட்டத்தை தமது மனத்தில் சிருஷ்டித்துக் கொண்டார். முதல் நாள் ஏதும் நடக்காதது போலும் அவன் இஷ்டத்திற்குத் தாம் இணங்குவது போலும் நடித்து மூன்றாவது நாள் இரவில் அவனைக் கட்டிப் போட்டு, பொழுது விடிவதற்குள் தலை நகரான வஞ்சிமா நகருக்கு அனுப்பி விட்டால் கடல் வேந்தன் அத்தியாயம் முடிந்துவிடும் என்று திட்டமிட்டார், அமைச்சர் அழும்பில்வேள். ஒரு முறை அவன் வஞ்சிமாநகர் சிறையில் சிக்கிக் கொண்டால் படைப்புக் கடவுளான பிரமன் கூட அவனை மீட்க முடியாதென்பதை உணர்ந்துகொண்ட அமைச்சர், அன்று காலையில் அவன் நீராடியதிலிருந்து அவனுக்குச் சகல உபசாரங்களையும் செய்ய முற்பட்டார். ஆனால் தான் உபசரிக்க உபசரிக்க, கடல் வேந்தன் அடித்த அமர்க்களம் பொறுக்க முடியாதிருந்ததையும் கண்டு சில சமயங்களில் அமைச்சர் உக்கிர மூர்த்தியானாலும் ஏதும் செய்ய வகையின்றித் தம்மை அடக்கிக் கொண்டார்.

நிலக்கள்ளி அவனது அறையிலேயே அவனுக்குச் சிற்றுண்டி பரிமாறித் திரும்பியதும், "அம்மா! கடல்வேந்தன் எப்படி இருக்கிறார்?" என்று விசாரித்தார் அமைச்சர்.

"அவருக்கென்ன மருமகப்பிள்ளை மாதிரி அட்டகாசமாக இருக்கிறார்!" என்ற நிலக்கள்ளி, "அப்பா! நான் மறந்தே விட்டேன். நல்லதாக இரண்டு இளநீர் கொண்டு வரச் சொல்லுங்கள்" என்று கேட்டாள்.

அமைச்சர் முகத்தில் வியப்பைக் காட்டி "இளநீரா? இத்தனை காலையில் எதற்கு?" என்று விசாரித்தார்.

"அவர் காலை சிற்றுண்டிக்குப் பிறகு இளநீர்தான் சாப்பிடுவது வழக்கம்" என்றாள் நிலக்கள்ளி.

"அவர் உணவு முறைகள்கூட உனக்குப் பழக்கம் போலிருக்கிறது" என்று கேட்ட அமைச்சர் முகத்தில் சிறிது சினத்தைத் தோற்றுவித்துக் கொண்டார்.

"என்ன இப்படிக் கேட்கிறீர்கள்? அவர் தேவைகள் முழுவதும் எனக்குத் தெரியும்" என்று சொன்னாள் நிலக்கள்ளி. இதைச் சொன்னபோது அவள் குரலில் மென்மை இருந்தது.

அதைக் கவனித்த அழும்பில்வேளின் சினம் உள்ளூர அதிகப்பட்டாலும் அதை வெளியே காட்டவில்லை அவர். 'ஓகோ" என்று மட்டும் பதில் சொன்னார்.

தந்தை மனத்தில் ஏதோ விகல்ப எண்ணங்கள் ஓடுவதை நிலக்கள்ளி புரிந்துகொண்டதால், "என்ன ஓகோ?" என்று கேட்டாள்.

"நமது சிறைப் பறவையின் தேவைகள் எல்லாம் உனக்குத் தெரியும்? உம்" என்று முனகினார் அழும்பில்வேள்.

"ஆம்!" என்றாள் நிலக்கள்ளி. திடமாகத் தந்தையை நோக்கவும் செய்தாள்.

அவள் கண்களைச் சந்திக்க அஞ்சிய அமைச்சர், "அவர் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் முயலுவாய் போலிருக்கிறது" என்று வினவினார்.

"அதைவிட பாக்கியம் எனக்கு என்ன இருக்கிறது?" நிமிர்ந்து நின்று பதில் சொன்னாள் நிலக்கள்ளி.

ஆனால் மகளை நிமிர்ந்து பார்க்க முடியாத அழும்பில் வேள் "இல்லை, இல்லை, இது விசேஷமான பாக்கியம்" என்றார்.

அதற்கு மேல் ஏதும் பேசாமல் தமது அறையை நோக்கி நடந்து விட்டார். நிலக்கள்ளி அவர் போவதைப் பார்த்துப் புன்முறுவல் செய்து, "பாவம் தந்தை! எதை எதையோ கற்பனை செய்கிறார். வீண் கற்பனை தோல்விக்கு அஸ்திவாரம்" என்று கூறிவிட்டு, கடல்வேந்தனுக்கு உணவுத் தட்டுடன் உள்ளறைகளை நோக்கிச் சென்றாள். சிறிது நேரத்திற்கெல்லாம் உள்ளறையிலிருந்து கொடுவாளுடன் வெளியே வந்த ஒரு பணிமகன் வேகமாகப் படிகளில் இறங்கிச் செல்ல முயன்றான்.

"டேய்!" என்று அதட்டி அவனைத் தடுத்த அமைச்சர் "எங்கு போகிறாய்?" என்று வினவினார்.

"தோப்பிற்குப் போகிறேன்!" என்றான் பணிமகன்.

"கையில் கொடுவாளெதற்கு?" என்று கேட்டார் அமைச்சர்.

"இளநீர் சீவ" என்றான் பணிமகன்.

"இளநீர் சீவவா?" அமைச்சர் குரலில் சீற்றம் இருந்தது.

"ஆம்."

"யாருக்கு இளநீர்?"

"கடல்வேந்தருக்கு."

"கடல்வேந்தருக்கா, மரியாதை பலமாக இருக்கிறது?"

"மரியாதையாக நடக்க வேண்டுமென்பது உத்தரவு."

"யார் உத்தரவு?"

"நிலக்கள்ளியார் உத்தரவு" என்ற பணிமகன் அமைச்சருக்குத் தலைவணங்கி விட்டுப் படிகளில் இறங்கிச் சென்றான்.

அமைச்சருக்கு இந்தத் தடபுடல் அடியோடு பிடிக்காததால் தமது அறைக்குச் சென்று உட்கார்ந்து சிந்திக்கலானார். அவர் சிந்தனை தொடங்கிய சில நிமிஷங்களுக்கெல்லாம் திறந்த அவர் அறைக் கதவின் மூலம் சீவிய இரண்டு இளநீர்களைக் கையில் தாங்கிப் பணிமகன் செல்வதைக் கண்டார் அமைச்சர். அடுத்து, தமது மகள் பெரிய வெள்ளிக் கிண்ணமொன்றுடன் கடல்வேந்தன் அறையை நோக்கி நடப்பதைக் கண்டு அந்த வெள்ளிக் கிண்ணத்தில் இளநீர் இருப்பதைப் புரிந்து கொண்டார். அது மட்டுமல்ல அவர் புரிந்து கொண்டது, தாம் இஷ்டப்பட்டாலும், படாவிட்டாலும் கடல்வேந்தனுக்கு உபசாரம் தடபுடலாயிருக்குமென்பதை அமைச்சர் சந்தேகமறப் புரிந்து கொண்டதால் அதிகமாய்த் தமது வெறுப்பை வெளிக்குக் காட்டவில்லை.

அன்று நடுப்பகல் உணவும் கடல்வேந்தனுக்கு அவனது அறையிலேயே படைக்கப்பட்டது. அந்த உணவைத் தாங்கிய இரு பணிமக்கள் பின்தொடர நிலக்கள்ளி முன் சென்றதைக் கண்டார் அமைச்சர். கடல்வேந்தன் உணவையும் அந்த அறையிலேயே உண்டான். நிலக்கள்ளியே பரிமாறினாள்.

அமைச்சரின் அமைதி பறந்தது. மகளை அழைத்து, "நிலக்கள்ளி, அவருக்கு நீயே உணவு பரிமாறினாயா?" என்று வினவினார்.

"'ஆம்'' என்றாள் நிலக்கள்ளி.

"அவர் நம்முடன் நமது உணவு அறையில் சாப்பிட மாட்டாரோ?" இகழ்ச்சியாகக் கேட்டார் அமைச்சர்.

"மாட்டார்'' திட்டமாகப் பதில் சொன்னாள் நிலக்கள்ளி.

"ஏன்?''

"அவர் சொன்ன வார்த்தை மீறாதவர்.''

"என்ன சொல்லிவிட்டார்? எதை மீறவில்லை?''

"இரண்டு நாள்கள் உங்களிடம் சிறையிருப்பதாகச் சொல்லி இருக்கிறார். ஆகையால் அவசியமானாலன்றி இருக்கும் அறையை விட்டு நகர மாட்டார்.''

இந்த விந்தையைக் கேட்ட அமைச்சருக்கு சிரிப்பதா அழுவதா என்று விளங்கவில்லை. 'நிலக்கள்ளி!'' என்று உஷ்ணமாக அழைத்தார்.

"ஏன் தந்தையே?'' என்று சர்வ சாதாரணமாகக் கேட்டாள் அவள்.

"நீயும் அந்தக் கொள்ளைக்காரனும் என்னை என்ன வென்று நினைக்கிறீர்கள்?'' அமைச்சர் குரலில் சீற்றம் அதிகப்பட்டது.

"என்ன நினைக்கிறோம்?''

"முட்டாளென்று நினைக்கிறீர்கள்?''

"அப்படியொன்றுமில்லை.''

"என்ன ஒன்றுமில்லை? அவன் இங்கு சிறையிருப்பதாக பேர். ஆனால் என் மகள் அவனுக்கு உணவு பரிமாறுகிறாள். இளநீர் வெட்டிக் கொடுக்கிறாள்...''

அதனாலென்ன?''

"பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள்?''

"ஏதும் நினைக்கமாட்டார்கள். வீணாக மனத்தை அலட்டிக் கொள்ளாதீர்கள்.''

இதைச் சொன்ன நிலக்கள்ளி தனது அறையை நோக்கி நடந்தாள். "இருக்கட்டும். உங்கள் கொம்மாளத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கிறேன்'' என்று கருவிக் கொண்டார் அமைச்சர்.

அன்று பகல் முழுவதும் கடல்வேந்தனுக்கு நிலக்கள்ளி மட்டுமின்றி காவலர் அனைவருமே வேண்டிய உபசாரம் செய்தார்கள். அன்று மாலை நெருங்கியதும் அமைச்சர் தமது மாளிகையை விட்டுக் கிளம்பி இரண்டு மாளிகைகள் தள்ளியிருந்த சஞ்சயன் வீட்டுக்குச் சென்றார். அங்கு சஞ்சயனுடன் கடல்வேந்தனை ஒரு வழியாக ஒடுக்குவதைப் பற்றி ஆலோசனை செய்தார்! 'சஞ்சயா! இப்பொழுது அந்தக் கொள்ளைக்காரன் நம்மிடம் அகப்பட்டுக் கொண்டிருப்பதால்...'' என்று தொடங்கியவரை இடைமறிந்த சஞ்சயன், "அமைச்சரே எனக்கு ஒன்றும் விளங்கவில்லை'' என்றான்.

"என்ன சஞ்சயா!'' என்று வினவினார் அமைச்சர்.

சஞ்சயன் சிறிது சிந்தித்துவிட்டு "கடல்வேந்தன் நம்மிடம் அகப்பட்டுக் கொண்டிருக்கிறானா? நாம் அவனிடம் அகப்பட்டுக் கொண்டிருக்கிறோமா?'' என்று வினவினான்.

"எதுவும் நமது சாமர்த்தியத்தைப் பொறுத்தது'' என்றார் அமைச்சர்.

"நமக்கு சாமர்த்தியமிருக்கிறதா?'' என்று சஞ்சயன் வினவினான்.

"இல்லாமலா அவனைப் பிடித்திருக்கிறோம்!" என்று அமைச்சர் கேட்டார்.

"நாம் பிடிக்கவில்லை. அவனாக வந்தான் உமது மாளிகைக்கு. அது மட்டுமல்ல. அங்கு அவனுக்கு ராஜோபசாரம் நடக்கிறதாகக் கேள்வி" என்று சஞ்சயன் தனது அதிருப்தியைக் காட்டினான்.

அமைச்சர் சங்கடத்தால் தமது ஆசனத்தில் சிறிது அசைந்தார். "சஞ்சயா! கடல்வேந்தனை உண்மையாகப் பிடிக்க ஓர் ஏற்பாடு செய்திருக்கிறேன்" என்றார்.

"என்ன ஏற்பாடு அமைச்சரே?" என்று வினவினான் சஞ்சயன்,

அமைச்சர் மெல்லத் தொண்டையைக் கனைத்துக் கொண்டு "சஞ்சயா! இப்பொழுது கடல்வேந்தன் என் மாளிகை அறையில் தானிருக்கிறான். அவனைக் காவல் செய்ய இரு காவலரை நியமித்திருக்கிறேன். இன்று அவனைப் பற்றிக் கவலை இல்லை. நாளை இரவுக்குமேல் அவன் சிறையிருக்க மாட்டானாம். நாளைக்கு மறுநாள் விடியற்காலையில் புறப்பட்டுப் போய்விடுவானாம். ஆகையால் நாளை இரவில் அவனைக் கட்டி வஞ்சிக்கு அனுப்பி விட ஏற்பாடு செய்திருக்கிறேன். அதற்கு உனது உதவி வேண்டும்" என்று கூறினான்.

"உத்தரவிடுங்கள்"

"இந்தக் கடல்வேந்தன் சரியாக உறங்குவது கிடையாதென்று கேள்வி. சிறிது சத்தமிருந்தாலும் விழித்துக் கொள்வானாம்."

"அப்படித்தான் கேள்வி!"

"ஆகையால் அவனை நன்றாக உறங்கச் செய்ய வேண்டும்."

"அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?"

"நாளை இரவு நீ எனது மாளிகைக்கு வா. அவனுடன் நாம் மது அருந்துவோம். அவன் மதுவில் மருந்து கலந்திருக்கும். அதைக் குடித்தால் அவன் இரவு முழுவதும் மயக்கத்திலிருப்பான். பிடிப்பது சுலபம்."

இதைச் சொன்ன அமைச்சர், சஞ்சயனை உற்று நோக்கினார்.

அமைச்சரின் யோசனை சஞ்சயனுக்குப் பிடிக்கவில்லை. "இது ஆபத்து அமைச்சரே! வேந்தனுக்கு ஏதாவது துளி சந்தேகம் ஏற்பட்டாலும் நாம் ஒழிந்தோம்" என்று சஞ்சயன் கூறினான் அச்சத்துடன்

"மதுவைக் கொடுக்க நானிருக்கிறேன். அல்லது, எனது மகளின் கையால் கொடுக்கச் செய்கிறேன்" என்று தைரிய மூட்டினார் அமைச்சர்.

சஞ்சயன் வேண்டாவெறுப்பாக ஒப்புக் கொண்டான். அன்று முழுவதும் மிக உற்சாகத்தில் கழித்தார். அழும்பில் வேள். கடல்வேந்தனுக்குத் தாமே வேண்டிய உபசாரங்களைச் செய்தார் அடிக்கடி அவன் அறையில் உட்கார்ந்து கொண்டு கடல் கொள்ளைகளைப் பற்றிய விவரங்களைக் கேட்டார். அவன் விவரித்த விஷயங்களைக் கேட்டு மெய் சிலிர்த்தார்.

மெல்ல மெல்ல மறுநாள் இரவும் வந்தது. சஞ்சயனும் வந்து சேர்ந்தான். இருவரும் சேர்ந்தே கடல்வேந்தனை அவனது அறையில் சந்தித்தார்கள்.

இரவு சிறிது ஏறியதும் "உணவருந்துவோமா?" என்று அமைச்சர் விசாரித்தார்.

கடல்வேந்தன் புன்னகை செய்தான் நிலக்கள்ளியை நோக்கி, "நிலக்கள்ளி உன்னிடம் என்ன யாழ் இருக்கிறது?" என்று கேட்டான்.

"சகோட யாழ்" என்றாள் நிலக்கள்ளி.

"அதை எடுத்து வா" என்று சொன்ன கடல்வேந்தன் அவள் எடுத்து வந்ததும் கட்டிலில் அமர்ந்த வண்ணமே சுருதி கூட்டினான். பிறகு நிலக்கள்ளியை நோக்கி, 'பாடு நிலக்கள்ளி, நான் வாசிக்கிறேன்' என்றான் கடல்வேந்தன்.

"எதைப் பாடட்டும்?" என்று நிலக்கள்ளி கேட்டாள்.

"கடல் பாட்டு" என்றான் கடல்வேந்தன்.

"இப்பொழுது எதற்குப் பாட்டும் கூத்தும்? முதலில் உணவு அருந்துவோம்" என்றார் அமைச்சர்.

கடல்வேந்தன் சொன்னான்: "செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்" என்று. பிறகு சிறிதும் தாமதிக்காமல் கடல்பாட்டை யாழில் தொடங்கினான். நரம்புகளை மீட்டி, யாழின் சுருதியுடன் கலந்தது நிலக்கள்ளியின் இனிமைக்குரல். நாதசொர்க்கமொன்று அந்த அறையில் சிருஷ்டிக்கப்பட்டது.

□

16. யாழ் வேந்தன்

அவன் சிறையிருந்த அறையில் அவனுக்காகவே அமைச்சர் அழும்பில்வேள் கொண்டு வந்து போடச் செய்திருந்த ஒற்றைக் கட்டிலில் விரிக்கப்பட்டிருந்த பஞ்சணையில், சப்பளம் போட்டுக் கொண்டு மடியில் வண்டிச்சக்கரம் போல் காட்சியளித்த சகோட யாழைக் குத்திட்டு நிற்க வைத்து, ஒரு கையால் மேற்பகுதியைப் பிடித்து இன்னொரு கையால் யாழின் தந்திகளைச் சுண்டி, சுருதி சேர்த்தான் கடல்வேந்தன். அப்படி ஒவ்வொரு தந்தியையும் சுண்டிச் சுண்டி நாதத்தை எழுப்பி அதன் ஸ்வரங்களை மாறுபாடு ஏதுமின்றி ஒரே சுருதியில் சப்திக்க வைத்த கடல்வேந்தன், அதை வாசிக்க ஆரம்பிக்குமுன்பு அமைச்சருக்கு அதன் அமைப்பையும், தத்துவத்தையும், நாத விசேஷத்தையும் விளக்க முற்பட்டு, "அமைச்சர் பெருமானே! இந்த யாழின் சிறப்பு தங்களுக்குத் தெரியாததல்ல...." என்று தொடங்கினான்.

யாழைக் கேட்கும் மனநிலையில் இல்லாத அழும்பில் வேள், "எனக்கு யாழைப் பற்றி எதுவும் தெரியாது" என்று எரிச்சலுடன் பதில் சொன்னார்.

"அப்படியா!" என்று வியப்புடன் கேட்டான் கடல் வேந்தன்.

"ஆம். வேறு முக்கிய அரசாங்க அலுவல்கள் இருக்கின்றன. வீண் பொழுது போக்க அவகாசம் இல்லை" என்றார் அமைச்சர்.

"யாழை வாசிப்பதும், கேட்பதும் அத்தனை முக்கிய வேலை இல்லையென்கிறீர்?" என்று கடல்வேந்தன் மீண்டும் வினவினான்.

"ஆம்! இது சுத்த சோம்பேறிகளுக்காக ஏற்பட்டது" என்று அமைச்சர் சினந்து பதில் சொன்னார்.

கடல்வேந்தன் புன்முறுவல் செய்து சரேலென்று இரண்டு தந்திகளை விண்ணென்று இழுத்துவிட அதிர்ச்சியைத் தரும் இரண்டு ஸ்வரங்கள் யாழிலிருந்து கிளம்பவே ஆசனத்திலிருந்து துள்ளியெழுந்தார் அமைச்சர். "மார்த்தீரா அமைச்சரே! உம்மையும் துள்ளச் செய்கிறது சகோட யாழின் இரண்டே தந்திகள். ஆகையால் இது சோம்பேறியல்ல. இதை வாசிப்பவனும் சோம்பேறியல்ல. இது உம்மைத் துள்ளச் செய்யும். உறங்கவும் செய்யும். தனது இஷ்டப்படி உம்மை வளைக்க இந்த யாழினால் முடியும்" என்றும் சொன்னான் கடல்வேந்தன் புன்முறுவலின் ஊடே.

அவன் புன்முறுவலைக் கண்ட நிலக்கள்ளியும் புன்முறுவல் செய்தாள். அவனெதிரே தரையில் உட்கார்ந்த வண்ணம், "வேந்தரே! இந்த யாழின் தத்துவத்தைச் சிறிது விளக்கிச் சொன்னால் தந்தை புரிந்து கொள்வார்" என்றும் விண்ணப்பித்துக் கொண்டாள் மிகுந்த பணிவுடன்.

அமைச்சர் பொறுமை இழந்தார். "எனக்கு எந்த விளக்கமும் தேவையில்லை. நான் எதையும் புரிந்துகொள்ள இஷ்டப்படவுமில்லை" என்று சற்றுக் கடுப்புடன் சொல்லவும் செய்தார்.

"அப்பா!" என்று மெதுவாக அழைத்தாள் நிலக்கள்ளி.

"என்ன?" அப்பொழுதும் எரிச்சல் குறையாத குரலில் கேட்டார் அமைச்சர்.

"நீங்கள் எதையும் புரிந்துகொள்ள இஷ்டப்படாததால்தான் பல வினைகள் விளைந்திருக்கின்றன" என்ற நிலக்கள்ளி கடல்வேந்தனை நோக்கி, "அப்பா சற்றுப் பிடிவாதக்காரர். ஆகவே நீங்கள் விளக்குங்கள்" என்று பணிவன்புடன் கேட்டுக் கொண்டாள்.

கடல்வேந்தன் சகோட யாழின் மேற்புறத்திலிருந்து ஒரு தந்தியைச் சுண்டி சுரநாதத்தை எழுப்பினான். அது வெளியிட்ட நாதம் அழும்பில்வேளின் செவிக்குக்கூட பிருமானந்தமாயிருந்தது. அதற்குப் பிறகு இன்னும் இரண்டு தந்திகளைச் சுண்டி முதல் தந்தியின் நாதத்துடன் அவற்றின் ஒலிகளும் இழையச் செய்தான். அப்படி மீட்டியவண்ணமே பேசினான்: "அமைச்சரே! இந்த வீணை தமிழ் நாட்டு மரபுடையது. ஆகையால் மேலைநாட்டு வீணையைப்போல் நீளமாக சமைக்கப்படவில்லை. இந்தச் சகோட யாழில் நான் சுண்டி வெளிப்படுத்திய மூன்று ஸ்வரங்களை முறையே ஆதார ஷட்ஜமம், பஞ்சமம், மேல் ஷட்ஜமம் என்று வடநாட்டார் சொல்கிறார்கள். இந்த நமது யாழுக்கும் அவர்கள் யாழுக்கும் ஒரு வித்தியாசமுண்டு. இதனுடைய அமைப்பில் ஒவ்வொரு தந்தியும் ஒவ்வொரு ஸ்வரத்தோடு நூற்றுக்கணக்கான அனுஸ்வரங்களையும் இசைக்கும். உதாரணமாக இதைப்பாருங்கள் என்று ஒரு தந்தியை மீட்ட அது "உம்உம்உம்....உம்" என்று ஸ்வரத்தை நீட்டிக்கொண்டே சென்றது சில விநாடிகள். அதன் ஸ்வர தீர்க்கத்தில் மெய்மறந்து செயல்படாதிருந்த கடல்வேந்தன் மேலும் சொன்னான், "இந்த அனுஸ்வரங்கள் வேறெந்த யாழிலும் கிடையாது. மகர யாழில் கொஞ்சம் உண்டு. ஆனால் இவ்வளவு தீர்க்கமான நீண்ட ஒலி அலைகள் கிடையாது, தவிர இந்த யாழுக்குத் தனிப்பட்ட தத்துவமும் உண்டு" என்ற கடல்வேந்தன் மீண்டும் அதை மீட்டிக்கொண்டே சொன்னான்— "அமைச்சரே! இந்தச் சகோட யாழ் வாழ்க்கைத் தத்துவத்தை விளக்குகிறது. இதன் நடு அச்சுக்கு

நேர் குறுக்கில் சக்கர மரப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு பட்டையான பித்தளைகள் இந்த யாழின் மேல் பகுதியையும், கீழ்ப்பகுதியையும் பிரித்துக் காட்டுகின்றன. மேல் பகுதியில் இருக்கும் ஒலிகளெல்லாம் அநேகமாக மேல் ஸ்தாயிகள். நடுத்தந்தியான ஆதார ஷட்ஜமம் ஒன்றைத் தவிர மற்றவை எல்லாமே மேல் காலத்தில் ஒலிப்பவை. கீழ்ப்பகுதியிலுள்ள எல்லாத் தந்திகளும் கீழே அடித்தள ஒலியில் ரீங்காரமிடும். இந்தச் சகோட யாழின் மேல்புறமும் கீழ்ப்புறமும், மனித வாழ்க்கை சில சமயங்களில் மேல்நோக்கிப் போவதையும், சில சமயங்களில் கீழ்த்தளத்துக்கு வருவதையும் குறிக்கின்றன. இதன் அச்சு மனத்தைக் குறிக்கும். அது திடமாயிருக்கும் வரையில் இந்த யாழின் குணம் கெடாது. அந்த மாதிரி தான் மனித வாழ்க்கை உயர்வதாலும், கீழே வீழ்வதாலும் அவன் பாதிக்கப்படுவதில்லை.''

இங்கே சிறிது பேச்சை நிறுத்திய கடல்வேந்தன் சக்கரத்தின் கீழ்ப்பாதியின் தந்திகளைச் சீண்டினான். அவற்றின் கீழ் நாதத்திலும், அத்துடன் கரகரப்பாக ஒன்றிய ஒலியிலும் அதிக இன்பமிருந்தது. ''பார்த்தீரா அமைச்சரே! வாழ்க்கையில் கீழ்ப்பகுதிகளால் சுகம் கெடுவதில்லை'' என்று சுட்டிக்காட்டினான்.

பிறகு, ''நிலக்கள்ளி! சுருதியில் சேர்ந்துகொள்'' என்று கூறிவிட்டு, மேலும் கீழுமாகத் தந்திகளை மீட்டினான். நிலக்கள்ளி தனது சாரீரத்தை மெதுவாக வெளியிட்டுச் சுருதியில் கலந்தாள். யாழின் ஒலிகள் பலவும் அவள் சாரீரத்துடன் அநாயாசமாகக் கலந்தன. தேன் போன்ற அவள் சாரீரத்தின் குளுமை சகோட யாழின் தந்தி ஒலிகளோடு இணைந்ததால், அவள் சாரீரத் தேன்யாழ்களில் பாய்ந்ததால் அவர்கூட சிறிது மெய்மறந்தார்.

அந்தச் சமயத்தில் அந்த அறையில் பேச்சு நின்றது. யாழ் ஒலியும், நிலக்கள்ளியின் குரலொலியும் சேர்ந்து நாதசொர்க்கத்தைச் சிருஷ்டிக்கத் தொடங்கின. கட்டிலி

லிருந்த வேந்தனுக்கு நேர் எதிரில் தரையில் உட்கார்ந்திருந்த நிலக்கள்ளி, சகோட யாழின் தந்திகளிலும் அதை மீட்டிய கடல்வேந்தன் விரல்களிலும் கண்களைப் புதைத்து, தந்திகளின் நாதத்துக்கு ஏற்ப 'உம்' காரத்தால் நாதத்தின் இனிமையைப் பரப்பினாள். பிறகு கண்களை மூடிக் கொண்டு இதழ்களைச் சிறிது அகற்றிக் குரலை எழுப்பியும் அசைத்தும் கமகங்களைச் சிருஷ்டித்தாள்.

கடல்வேந்தன் அந்தச் சாரீர இனிமையில் கட்டுண்டு கண்களை மூடிக்கொண்டான். அவன் விரல்கள் நரம்புத் தந்திகளில் பரவிப்பரவி வேகமாக ஓடின. நிலக்கள்ளி கமக சாகரம். புதுப்புது ஸ்வரங்களை இணைத்து இணைத்துச் சிருஷ்டிக்கலாயிற்று. அவற்றுக்கு ஆதரவு தர, ஈடுகொடுக்க கடல் வேந்தன் விரல்கள் மிக வேகமாக சஞ்சரிக்கலாயின. இப்படி எது யாழ்ஒலி, எது நிலக்கள்ளியின் குரல் என்று பிரித்துப்பார்க்க முடியாத நிலையில் அவன் மெதுவாகச் சுருதியிலிருந்து விலகாமலே கடல் பாட்டைப் பாடச் சொன்னான்.

மெல்ல மெல்ல கடல் பாட்டை இசைத்தாள் அந்தக் காமவல்லி. ''கடலே கடலே நீ சொல்! என்ன பெருமூச்சு உனக்கு? காற்றா! உம்... உம் தவழட்டும் காற்று தவழட்டும். தாளமும் போடுகிறாயா, அலைக்கரங்கள் தாளம்! என்ன சப்தம் சப்தம்!'' இப்படிப் பாடிய அவள், கடல்வேந்தன் யாழின் நரம்புகளில் இசையுடன் தாளத்தையும் கிளப்புவதைப் பார்த்து அந்தத் தாளத்துக்கு சரியாக வர்ண மெட்டை மாற்றிப் பாடினாள். அவள் பாட்டும் அவன் யாழும் சேர்ந்து கடலையே சிருஷ்டித்தன. இழைந்தும் சுழலாடியும் ஒலித்த அனுஸ்வரங்கள், இடையிடையே 'டங்டங்' என்று ஒலித்த தாளவர்க்கம் எல்லாமாகச் சேர்ந்து அங்கு கடலின் சப்தங்களையும் சிருஷ்டித்தன. யாழின் தந்தி வேகம் அலைகளாக சப்திக்க, அதில் ஒளி

விடும் நீர்த்திவலைகளைப் போல அவன் சாரீரமும் ஒலி மிகுந்து சேர அறை முழுவதிலும் நாதம் நிரம்பி நின்றது.

அந்த நாதத்தில் கடலின் பல ஒலிகளும் இன்பமாகக் காதில் விழ, இடையே மகளின் இழை குரல் தனது இதயத்தை ஈர்க்க அமைச்சரும் கண்களை மூடினார். உணர்ச்சிகளைப் பரவசத்துக்குப் பறிகொடுத்தார். கடல்வேந்தன் வாசிப்பின் வேகம் அதிகரித்து, அதைவிட அதிகமாகப் புரண்ட நிலக்கள்ளியின் சாரீர பிருகாக்கள் அவர் இதயத்தைத் தட்டின. கடல்வேந்தன் வாசிப்பின் வேகம் உச்ச கட்டத்தை அடைந்தபோது அவர் உணர்வை முற்றிலும் இழந்தார்.

கடல்வேந்தன் மெல்ல மெல்ல வேகத்தைக் குறைத்தான். நிலக்கள்ளியும் இறங்கி வந்தாள். மந்தரஸ்தாயியில் யாழும், குரலும் கலந்து புது மந்திரத்தைச் சிருஷ்டித்தன. அவன் வாசிப்பு மெல்ல மெல்லக் குறைந்தது. அவன் தலை யாழின் மீது படுத்தது கட்டிலின் கீழே உட்கார்ந்த நிலக்கள்ளியின் தலை கட்டிலின் மீதிருந்த அவன் காலடியில் தவழ்ந்தது; படுத்தது. மெல்ல மெல்ல இறங்கிய இசையின் அமைதிக் காலம், உணர்வுகளை மெல்ல இறக்கியதால் ஏற்பட்ட மௌனநிலை! அது ஒரு தனி சொர்க்கப் மௌனத்தின் கீதம் அது. அப்பொழுது சில நரம்புத் தந்திகளின் அனுஸ்வரங்கள் "உம்...உம்....உம்" என்று நீண்டு சப்தித்து அடங்கிக் கொண்டிருந்தன. அமைச்சர் தம்மையும் அறியாமல் ஆசனத்தில் அப்படியே சாய்ந்து உறங்கி விட்டார். எத்தனை நேரம் அவர் உறங்கியிருப்பார்? அவருக்குத் தெரியாது. விழித்தபோது எதிரேயிருந்த கட்டிலில் கடல்வேந்தன் யாழின் மீது வைத்த தலை வைத்தபடி கண்களை மூடிக்கொண்டிருந்தான். நிலக்கள்ளி அவன் காலடியில் தலைவைத்து உறங்கிக் கொண்டிருந்தாள். அவள் கமல முகத்தில் ஆனந்தம் கலந்த ஓர் அமைதி

தெரிந்தது. அவன் முகம்! அதிலும் சாந்தி இருந்தது. அமைச்சர் அவர்கள் இருவரையும் கண்டார். அவர் மனத்திலும் சாந்தி நிரம்பி நின்றது.

மெல்ல எழுந்து வெளியே செல்ல முயன்றார். அப்பொழுது விழித்தன கடல்வேந்தன் கண்கள். "சற்றுப் பொறும்" என்று உதிர்ந்தன, மிகமெதுவான அவன் இதழ்ச் சொற்கள்.

திரும்பினார் அழும்பில்வேள் "என்னைக் கட்டி வஞ்சி நகர் அனுப்ப இதுதான் சமயம்" என்று மெதுவாகச் சொன்னான் கடல்வேந்தன்.

அழும்பில்வேள் ஒரு விநாடி சிந்தித்தார். "இந்த யாழ்வேந்தனை எப்படிப் பிடிப்பேன்?" என்று உள்ளூர சொல்லிக் கொண்டார் பிறகு தலையை ஆட்டிவிட்டுப் பதில் சொல்லாமல் சென்றுவிட்டார்,

○

17. மூடுவண்டி பயணம்

கடல்வேந்தனின் அறையை விட்டு வெளியே வந்த அமைச்சர் அழும்பில்வேள், அந்த அறையின் வாயிற்படி அருகில் நின்றிருந்த சஞ்சயன் மெதுவாகப் பின் தொடர்ந்தான். ஏதும் பேசாமலே அவரது அறைக்கு வந்துவிட்ட அமைச்சர் அவரது மஞ்சத்தில் அமர்ந்ததும் ''அமைச்சரே! தங்கள் திட்டம் தவிடு பொடியாகிவிட்டது போலிருக்கிறதே?" என்று துக்கம் விசாரித்தான் சஞ்சயன்.

அமைச்சர் பெருமான் அவனை எரித்து விடுவதுபோல் பார்த்தார் ''எனது திட்டமென்ன, நமது திட்டம் என்று சொல்'' என்று என்று சீறவும் செய்தார்.

சஞ்சயன் தனது இதழ்களில் புன்முறுவல் காட்டினான். ''திட்டத்தை வகுத்தது நானல்ல'' என்று அவன் பணிவுடன் தெரிவித்துக்கொண்டாலும், அந்தப் பணிவில் ஓர் இகழ்ச்சி கலந்திருந்ததை அழும்பில்வேள் கண்டார்.

அதனால் சினம் அவரையும் மீற, ''திட்டத்தை வகுக்காவிட்டாலும் ஒப்புக் கொண்டாயல்லவா?'' என்று வினவினார் சஞ்சயனை நோக்கி.

விஷமப் புன்முறுவல் சற்று அதிகமாகவே படர்ந்தது சஞ்சயன் இதழ்களில். ''பெரிய அதிகாரிகள் திட்டம் வகுத்தால், கீழ் அதிகாரி ஒப்புக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. திட்டம் வெற்றி பெற்றால் அது பெரிய அதிகாரியின் சாமர்த்தியம். தோற்றால் கீழ் அதிகாரியின் தவறு. இது அரச உலக வழக்கு'' என்று சுட்டிக்காட்டினான் சேரதூதன்.

அமைச்சர் தனது ஆசனத்தில் சங்கடத்துடன் அசைந்தார். ''தூதரே!'' என்று மரியாதையுடன் விளித்தார் சஞ்சயனை.

''அமைச்சர் பிரபு!'' என்று வணங்கிக் கேட்டான் சஞ்சயன்.

''திட்டம் யார் வகுத்தது, எப்படித் தவறியது என்பதை விவாதிப்பதால் கடல்வேந்தனைச் சிறை பிடிக்க முடியாது'' என்று சுட்டிக்காட்டினார் அமைச்சர்.

''முடியாது'' சஞ்சயனும் ஒப்புக்கொண்டான்.

''அடுத்துச் செய்யவேண்டியது என்ன என்பதைச் சிந்திப்பதுதான் விவேகம்.'' அமைச்சர் குரல் திடமாக இருந்தது.

''ஆம். ஆம். சந்தேகமில்லை'' சஞ்சயன் ஆமோதித்தான்.

''தூதரே!''

''ஸ்வாமி!''

''நமது திட்டப்படி கடல்வேந்தன் மதுவை அருந்தவில்லை.''

''இல்லை.''

''ஏன்?''

''எனக்குத் தெரியவில்லை.''

''உணவே அருந்தவில்லை அவன்.''

''ஆம்.''

''உணவு அருந்தினால்தான் மதுவை அருந்துவான்.''

''ஆம். ஆம். உணவருந்தாமல் மதுவை எப்படி அருந்துவான்?''

"எப்படி அருந்தச் சொல்வது என்று கேள்."

"எப்படி அருந்தச் சொல்வது?"

"முடியாதல்லவா?"

"முடியாது."

"மது அருந்தாவிட்டால் அவனை மயக்கமுறச் செய்ய முடியாது."

"எப்படி முடியும்? மதுவில்தானே மயக்க மருந்தைக் கலந்து வைத்திருக்கிறோம்?"

"இப்பொழுது நாம் என்ன செய்ய வேண்டும்?"

"சிந்திக்க வேண்டும்."

"சும்மா சிந்தித்துக் கொண்டே இருந்தால் திட்டம் எப்படி கைகூடும்!"

"கூடாது"

இதுவரை பொறுத்திருந்த அமைச்சர் அதிக சிற்றத்தை அடைந்து, "தூதரே!" என்று கோபத்துடன் அழைத்தார்.

"அமைச்சர் பெருமானே!" பணிவுடன் கேட்டான் சஞ்சயன்,

"நான் சொன்னதையெல்லாம் அப்படியே ஆமோதிக்கிறீர்?" என்று சுட்டிக்காட்டினார் அமைச்சர்.

"ஆம்" என்றான் சஞ்சயன்.

"எதிர்த்து ஒரு வார்த்தை சொல்லவில்லை" என்றார் அமைச்சர்.

"இல்லை."

"எத்தனை நாளாகத் தலையாட்டி பொம்மையானீர்?"

"இந்த உத்தியோகத்துக்கு வந்த நாளிலிருந்து."

"ஏன்?"

"சேவகன் உத்தியோகம் தலையாட்டுவதுதான். அப்பொழுதுதான் உத்தியோகம் நிலைக்கும்."

"சிந்தனை!"

"சேவகனுக்கு இருக்கக்கூடாது"

"இது..."

"அரசாங்க மரபு"

இதைக் கேட்டதும் ஆசனத்தைவிட்டு எழுந்த அழும்பில்வேள் "தூதரே! எதிலும்படாமல் பேசுகிறீர்! தப்புவதே உமது நோக்கமாயிருக்கிறது" என்றார்.

"நமது இருவர் நோக்கமும் அப்படித்தானிருக்கிறது" என்ற சஞ்சயன் அமைச்சரைக் கூர்ந்து நோக்கி "அமைச்சரே! நமது கையில் தன்னந்தனியாகக் கடல்வேந்தன் அகப்பட்டிருக்கும்போது அவனைச் சிறை செய்யாமல் அவனிடம் இசைவைக் கேட்பதும், இங்கு வந்து தனிமையில் அவனைப் பற்றி விவாதிப்பதிலுமே, அவனை நினைத்து நாம் நடுங்குகிறோம் என்பது புலனாகிறது. அவனைப் பிடிப்பதானால் இதுதான் சமயம். உத்தரவிட்டால் வீரர்களை அழைக்கிறேன்" என்று சொன்னான் திட்டவட்டமாக.

அமைச்சர் சிறிது சிந்தித்தார். "அவன் இரும்பச்சண்டையிட்டால்? விளைவு, புலவர் விடுதிக்கு அருகில் இருந்ததுபோல் ஏற்பட்டால்?" என்று வினவினார்.

"புலவர் விடுதிக்கு எதிரே நடந்தது திறந்த வெளிப் போர். அப்பொழுது அவன் இரும்புச்சட்டை வேறு

அணிந்திருந்தான். இப்பொழுது அப்படி ஏதுமில்லை. உத்தரவு கொடுங்கள், பிடித்து விடுகிறேன்'' என்றான்.

கடல்வேந்தனை அவனிஷ்டப்படாமல் பிடிக்க முடியுமென்ற துணிவு அப்பொழுதுமில்லை அமைச்சருக்கு. எப்படியும் பொறுப்பை சஞ்சயன் மீது தள்ளிவிட்டால் தமது உபத்திரவம் ஒழியுமென்று எண்ணி, 'சஞ்சயா!'' உன்னைப் போன்ற துணிவுள்ளவர் பத்துப் பேர் இங்கிருந்தால் இந்த முசிறியில் எனது நிர்வாகமே வேறுவிதமாயிருக்கும். சரி கடல்வேந்தனைச் சிறை செய். அவனைக் கட்டி வஞ்சி மாநகர் கொண்டு போ'' என்று உத்தரவிட்டார்.

சஞ்சயன் தலைவணங்கி அந்த அறையை விட்டு வெளியே சென்றதும், அந்த அறையில் அங்குமிங்கும் உலாவியபடி தமக்குத்தாமே பேசிக்கொண்டார் அமைச்சர். 'அவன் உணவருந்தினால் மது கொடுக்கலாமென்று நினைத்தேன். அவன் உணவருந்தாமல் யாழை வாசித்தான். யாழை வாசித்த பின்பாவது சாப்பிட வந்தானா? அந்தச் சனியன் பிடித்த சக்கரத்தின் மீதும், தந்திகள் மீதும் படுத்துத் தூங்கி விட்டான். சரி தூங்கித்தான் தொலைந்தானா? நான் வரும்போது விழித்துத் தன்னைக் கட்டி வஞ்சிநகர் அனுப்ப அதுதான் சமயம் என்று சொல்கிறான். அவன் உண்மையில் உறங்கினானா? தூக்கத்தில் உளறினானா? மறுபடியும் கண்களை மூடிவிட்டானே! அது கிடக்கட்டும். நான் இவனைப் பிடித்து வஞ்சிநகர் அனுப்ப முயன்றது இவனுக்கு எப்படித் தெரியும்? இவன் சோதிடனா அல்லது யக்ஷிணி உபாசகனா?' என்று தம்மைத் தாமே பலவிதமாகக் கேட்டுக்கொண்ட அமைச்சர், ''எப்படியும் சஞ்சயன் எதைச் சாதிக்கிறான் பார்ப்போம்'' என்று கருவிக் கொண்டார்.

அவரை விட்டு நீங்கிய பிறகு சஞ்சயன் நேராக கடல் வேந்தன் அறைக்குச் சென்றான். அங்கு முன்பு போலவே கடல்வேந்தன் சகோட யாழ் மீது படுத்திருந்தான்.

நிலக்கள்ளியும் அவன் காலடியில் கிடந்தாள், கண்களை மூடிய வண்ணம். அந்த நிலையை பல, விநாடிகள் பார்த்துக் கொண்டே நின்ற சஞ்சயன் மனத்தில் புதுத்திட்டமொன்று உருவாயிற்று. அதனால் சந்துஷ்டியின் எல்லையை எய்தினான் சஞ்சயன். கடல்வேந்தன் சொன்ன சொல்லை மீறாதவன் என்பதை நினைத்துப் பார்த்த சஞ்சயன். ''என்னைக் கட்டி வஞ்சிநகர் அனுப்ப இதுதான் சமயம்'' என்று கடல்வேந்தன் சொன்னதை எண்ணினான். ''ஆம்! ஆம்! அதுதான் வழி'' என்ற முடிவுக்கு வந்த சஞ்சயன் மெதுவாகக் ''கடல்வேந்தரே!'' என்று அழைத்தான்.

கடல்வேந்தன் கண்ணை லேசாகத் திறந்து சஞ்சயனை நோக்கினான், யாழின்மீது படுத்த நிலையிலிருந்து எழுந்திருக்காமலே. சஞ்சயனே இரண்டாம் முறையும் பேசினான், ''கடல்வேந்தரே! என்னை அமைச்சர் அனுப்பினார்'' என்று.

புரிந்ததற்கு அறிகுறியாக யாழின் மீது தலையைப் புரட்டிய கடல்வேந்தன் ''நன்று நன்று'' என்றான்.

அவன் தன்னைப் பரிகசிக்கிறானா? இல்லை. தான் சொன்னதைக் கேட்டதற்கு பதிலளிக்கிறானா? என்பதை அறியாத சஞ்சயன், ''தங்கள் உத்தரவை நிறைவேற்றச் சொன்னார் அமைச்சர்'' என்று மெதுவாகக் கூறினான்.

கடல்வேந்தன் தலையைச் சிறிது நிமிர்த்தி, ''நானா? உத்தரவிட்டேனா?'' என்று வியப்புடன் கேட்டான்.

''அப்படித்தான் அமைச்சர் சொன்னார்....'' இழுத்தான் சஞ்சயன்.

''என்ன சொன்னார்?'' கட்டிலில் எழுந்து உட்கார்ந்து கொண்டான் கடல்வேந்தன்.

"தங்களைக் கட்டி வஞ்சிக்கு அனுப்ப இதுதான் சமயம் என்று சொன்னதாகச் சொன்னார்...." என்று மீண்டும் சங்கடத்துடன் சொன்னான் சேரதூதன்.

"சொன்னது உண்மைதான்" கடல்வேந்தன் பதிலில் திட்டமிருந்தது.

"அப்படியானால்....?" என்று கேள்வி எழுப்பினான் சஞ்சயன்.

"நீங்கள் என்னைக் கட்டமுடியாது. கட்டும்படி உங்களிடம் நான் சொல்லவில்லை. சொன்னது அமைச்சருக்கு. அவரே வந்து கட்டட்டும்; என்னை வஞ்சி நகருக்குக் கொண்டு போகட்டும்" என்று கடல்வேந்தன் மெல்ல சகோட யாழை ஒருபுறமாக வைத்தான். பிறகு தனது காலடியில் படுத்திருந்த நிலக்கள்ளியின் தலையை மிக மெதுவாக அலுங்காமல் எடுத்துப் பஞ்சணையில் வைத்து விட்டுக் கீழே இறங்கி அவள் அழகிய உடலைத் தனது இரு கைகளாலும் அலுங்காமல் எடுத்துப் பஞ்சணை மீது கிடத்தினான்.

சஞ்சயன் ஏதோ பேச முயன்றான். பேச வேண்டாமென்று தனது கையை வாயில் வைத்துச் சைகை காட்டிய கடல்வேந்தன் மிக மெதுவாகச் சொன்னான். "நீர் போய் அமைச்சரை அழைத்து வாரும். பயணத்துக்கு நான் சித்தமாயிருக்கிறேன்" என்று.

சஞ்சயன் தலையசைத்து வெளியே நடந்ததும், கடல்வேந்தன் பஞ்சணையில் நிலக்கள்ளிக்கு அருகில் அமர்ந்த வண்ணம் அவள் மீது சாய்ந்து அவள் கன்னத்தில் தனது இதழ்களைப் புதைத்தான். "பாவம், மிகவும் அலுத்திருக்கிறாள். இசை அளித்த இன்ப நித்திரையில் இருக்கிறாள்" என்று தனக்குள் சொல்லிக் கொண்ட கடல்வேந்தன் தனது விரலிலிருந்து ஒரு பெரிய மோதிரத்தை எடுத்து அவள் விரலில் மெதுவாகப் போட்டான்.

பிறகு பயணத்துக்குச் சித்தமாகக் கட்டிலிலிருந்து எழுந்து நின்றான். அமைச்சருடன் சஞ்சயன் வந்ததும்

அவர்களை உள்ளே வரவேண்டாமென்று சைகை செய்து வெளியே வந்து அறைக்கதவை மிக மெதுவாகச் சாத்தினான். அடுத்து "வழி காட்டுங்கள்" என்று சொல்லி அவர்களைப் பின் தொடர்ந்தான்.

அமைச்சருக்கு ஏதும் புரியாததால் கனவில் நடப்பது போல நடந்தார். சஞ்சயன் முகத்தில் வெற்றிக் குறியுடன் நடந்தான். கீழிருந்த காவல் அறைக்கு வந்ததும், "இது சம்பிரதாயம்" என்று சொல்லி, கடல்வேந்தன் கைகளை ஓர் இரும்புச் சங்கிலியால் பிணைத்தான் சஞ்சயன். அரண்மனை வாயிலிலிருந்த மூடுவண்டியில் கடல்வேந்தனை ஏற்றவும் செய்தான்.

கடல்வேந்தன் எந்த எதிர்ப்பையும் காட்டவில்லை. கட்டிய கைகளுடன் தானாகவே தாவி வண்டியில் ஏறிக் கொண்டான். சஞ்சயன் சைகை செய்ய வண்டியின் புரவிகள் நகர்ந்தன. நான்கு புரவி வீரர்கள் உருவிய வாள்களுடன் வண்டியைச் சூழ்ந்து சென்றனர். கடைசியில் ஒரு புரவியில் சஞ்சயன் சென்றான்.

இந்த பவனியைப் பார்த்துக் கொண்டு வாயிற்படியில் நின்ற அமைச்சர் பெருமூச்சு விட்டார். காரணம் ஏதுமின்றி தலையையும் அசைத்தார். மூடுவண்டியில் கடல்வேந்தன் சென்றதைக் கவனித்தது அவர் மட்டுமல்ல, சுள்ளியாற்றங் கரையிலிருந்து வந்து கொண்டிருந்த நற்கிள்ளியும் கவனித்தான்.

□

18. வஞ்சியில் வேந்தன்

நான்காவது ஜாமத்தில் நகர்ந்துவிட்ட மூடுவண்டியில் நன்றாகக் கால்களை நீட்டிப் படுத்துக்கொண்ட கடல்வேந்தன், கைகளைப் பிணைத்திருந்த இரும்புச் சங்கிலியை ஒருமுறை உற்றுப் பார்த்து உதடுகளில் புன்முறுவல் ஒன்றையும் படரவிட்டுக் கொண்டான். "கையைப் பிணைத்த சஞ்சயன் கால்களை ஏன் பிணைக்கவில்லை?" என்ற வினா ஒன்றையும் மனதுக்குள் எழுப்பிக் கொண்டானானாலும் அதைப் பற்றி மேற்கொண்டு யோசிக்காமல், அமைச்சர் அரண்மனையில் விட்டுப்போன தூக்கத்தைத் தொடரத் தனது கண்களை மூடிக்கொண்டான். பாதையின் மேடுபள்ளங்களால் வண்டி சிறிது ஆட்டங்கண்டாலும் அதைப் பொருட்படுத்தாமல் உறங்கவும் முற்பட்டான்.

வண்டிக்குப் பின்னால் புரவியில் சென்ற சஞ்சயன் மனத்தில் பூர்ண திருப்தியும் பெருமையும் நிலவியிருந்தது. அமைச்சரால் சாதிக்க முடியாததைத் தான் சாதித்து விட்டதை நினைத்து மிகுந்த உற்சாகத்துடன், "இந்த யுக்தி ஏன் அமைச்சருக்குப் புலப்படவில்லை?" என்றும் தன்னைத்தானே விசாரித்துக்கொண்டான். "என்ன இருந்தாலும், அழும்பில்வேள் வருமானவரி அமைச்சர் தானே? படை இயக்குபவர் அல்லவே" என்று அவர் தோல்விக்குச் சமாதானமும் சொல்லிக்கொண்டான். "கடல்வேந்தனைக் கொண்டுபோய் வஞ்சியில் சேர்த்தால் தனக்கு எத்தனை புகழ் கிடைக்கும்? மன்னர் எவ்வளவு பாராட்டுவார்? மக்கள் எத்துணைக் குதூகலிப்பார்கள்?" என்று வரப்போகும் விருதுகளை எண்ணிப் பெருமகிழ்ச்சியும் கொண்டான். இப்படி நினைத்துக் கொண்டே சிறிது

தூரம் சென்றவன் மூடுவண்டியின் பின்திரையை நீக்கிக் கடல்வேந்தன் நிம்மதியாக உறங்குவதைக் கண்டு குதூகலத்தின் எல்லையையும் அடைந்தான்.

வஞ்சிமாநகர்ப் பயணம் அடுத்த பகல் முழுவதும் நடக்க அவசியமிருந்ததால் மதிய நேர உணவை இடையிலுள்ள சொக்கன் சத்திரத்தில் வைத்துக் கொள்வதென்று தீர்மானித்த சஞ்சயன், கடல்வேந்தனைப் பாதுகாப்பதற்கு அதைவிடச் சிறந்த இடம் கிடையாதென்ற முடிவுக்கு வந்தான். சொக்கன் சத்திரம் ஆன்பொருநை நதியின் ஆரம்பத்திலிருப்பதாலும் அங்கு அரசுக்காவலர் அதிகமாதலாலும் அங்கு மட்டும் போய்ச் சேர்ந்துவிட்டால் கடல்வேந்தன் தப்பிச் செல்ல முடியாதென்று திட்டமிட்டான் சஞ்சயன்.

அவன் எண்ணங்கள் முடிவதற்கும் மெல்லப் பொழுது புலருவதற்கும் நேரம் சரியாயிருக்கவே சஞ்சயன் மறுபடியும் மூடுவண்டியின் பின்திரையைத் திறந்து பார்த்தான். கடல்வேந்தன் அப்பொழுதும் கண் விழிக்கவில்லையாதலால் "கடல்வேந்தரே! கடல்வேந்தரே" என்று குரல் கொடுத்தான் சஞ்சயன்.

கடல்வேந்தன் தனது உடலை நன்றாக முறுக்கி, ஒருமுறை சோம்பல் முறித்துக் கண்களைத் திறக்காமலே கேட்டான் கரகரத்த குரலில், "என்ன?" என்று.

"பொழுது நன்றாக விடிந்துவிட்டது" என்று சஞ்சயன் சொன்னான் மரியாதை நிரம்பிய குரலில்.

"அதனாலென்ன?" கடல்வேந்தன் கண்களை நன்றாக விழித்து, சஞ்சயனை நோக்கிய வண்ணம் வினவினான்.

"மறுநாள் மன்னரிடம் தண்டனை பெறப்போகும் இந்தக் கொள்ளைக்காரனுக்கு என்ன துணிவு இருந்தால் இப்படிப் பேசுவான்?" என்று உள்ளூர எண்ணிய சஞ்சயன் "இங்கு நீங்கள் சிற்றுண்டி அருந்தினால்தானுண்டு.

இங்கிருந்து நாம் சுள்ளியாற்றிலிருந்து பிரிந்து செல்கிறோம்'' என்று கூறினான்.

''அதில் என்ன கஷ்டம்?'' படுத்தபடியே கேட்டான் கடல்வேந்தன்.

"எதில்?" என்று வினவினான் சஞ்சயன் குழப்பத்துடன்.

''சுள்ளியாறு நம்மிடமிருந்து பிரிவதில்''

"சுள்ளியாறு பிரியவில்லை. நாம்தான் பிரிந்து செல்கிறோம்''

''இரண்டும் ஒன்றுதான். அதற்கும் நாம் இங்கேயே இப்பொழுதே சிற்றுண்டி அருந்தவேண்டிய அவசியத்திற்கும் என்ன சம்பந்தம்?''

''இங்கு நீங்கள் நன்றாகப் பல்தேய்த்து முகம் கழுவி, வேண்டுமானால் நீராடவும் வசதி இருக்கிறது. தவிர அதோ இரண்டு புத்தமடங்களும் இருக்கின்றன. அவர்கள் உணவும் தருவார்கள்'' என்று விளக்கினான் சஞ்சயன்.

உண்மைக் காரணத்தைப் புரிந்து கொண்ட கடல்வேந்தன் எழுந்து உட்கார்ந்து நகைத்தான். ''ஏன் நகைக்கிறீர்கள் வேந்தரே?'' என்று சஞ்சயன் வினவினான்.

கடல்வேந்தன் சஞ்சயனை உற்றுநோக்கினான் தனது கழுகுக் கண்களால். ''சேர தூதரே! உமது சாமர்த்தியத்தைப் பாராட்டுகிறேன். ஆனால் அது திறமையுடன் சம்பந்தப்பட்டதில்லை" என்றான் கடல்வேந்தன் மீண்டும் நகைத்து.

''என்ன சொல்கிறீர் வேந்தரே?'' என்று வினவினான் சஞ்சயன்.

கடல்வேந்தன் சஞ்சயனை நோக்கி, தனது குரூரமான கண்களைச் சிமிட்டினான். ''தூதரே! இங்கு நீர் சிற்றுண்டியை முடிக்க நினைத்தது சுள்ளியாற்றிடமோ, என்னிடமோ உள்ள பாசத்தாலல்ல. நீர் சொன்ன புத்த மடங்களில் சேரநாட்டு வீரர்கள் நிரம்ப இருக்கிறார்கள். சேரமன்னர், புத்த, சமண மடங்களைப் பாதுகாக்க வீரர்களை நியமித்திருக்கிறார். நான் இறங்கி காலைக்கடன்களை முடிக்கத் தொடங்கியதும் அங்குள்ள வீரர்கள் இங்கு வருவார்கள். உமது வீரர்களுக்குத் துணையும் கிடைக்கும். உம்மிடமிருந்து நான் தப்பாதிருக்க உமக்குப் பக்கபலமும் இருக்கும். இந்த இடத்தை விட்டால் உமக்கு பாதுகாப்பான இடம் வேறில்லை, அடுத்த இரண்டு ஜாமங்களுக்கு'' என்று விளக்கிக் காட்டிய கடல்வேந்தன் ''சரி! கைச் சங்கிலியை அவிழ்த்து விடு. நான் காலைக் கடன்களை முடித்துக் கொள்கிறேன்'' என்று கூறவே சஞ்சயன் சந்தேகம் நிரம்பிய கண்களை அவன்மீது நிலைக்க விட்டான்.

அதைக் கடல்வேந்தனும் கவனிக்கவே செய்ததால் சிறிது சினத்தை முகத்தில் காட்டி, ''சேர தூதரே! ஒன்று நீர் நினைவில் வைத்துக் கொள்வது நல்லது. நீர் என்னைச் சிறைப்படுத்தியது எனது சம்மதத்தின் பேரில். நான் உம்முடன் வர ஒப்புக்கொண்ட வார்த்தையை நிலை நிறுத்துகிறேன். இல்லையேல் இப்பொழுதும் உம்மிடமிருந்து என்னால் தப்பிச் செல்ல இயலும். மரியாதையாகக் கைச்சங்கிலியை எடும். மீண்டும் பூட்டலாம்'' என்று கூறினான்.

வேந்தன் சொற்களில் தொனித்த உறுதியில் நிலை குலைந்து போன சஞ்சயன் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தான். சங்கிலியை அகற்ற அவன் அஞ்சினான். சங்கிலி அகன்றால் வேந்தனை வஞ்சிமாநகர் கொண்டு செல்வது முடியாத காரியம் என்ற எண்ணத்தால் அவன் முகத்தில் கிலி படர்ந்தது.

அந்தச் சமயத்தில் கடல்வேந்தனின் கடுமை முகத்தில் அதிகக் கடுமை ஏறியது. "என்னை நம்பவில்லையா சஞ்சயா? இதோ உன் சங்கிலி. பெற்றுக்கொள்" என்று கடல்வேந்தன் தனது கைகளை இருமுறை திருகவே சங்கிலிப் பிணைப்பு நெகிழ்ந்து விலகியது. சங்கிலியைத் தூக்கி சஞ்சயன் முகத்தை நோக்கி வீசிய கடல்வேந்தன் அவனைத் திரும்பியும் பாராமல் சுள்ளியாற்றுப் பிரவாகத்தை நோக்கி நடந்தான். அதில் இறங்கி அதன் கரையோரமாக இருந்த நுண்மணலால் பல் துலக்கி "சஞ்சயா! உன்னிடம் சிறிய துணி ஏதாவது இருக்கிறதா? இந்த ஆடையுடன் நான் குளிக்க முடியாது" என்றான்.

சஞ்சயன் தனது முகத்தை இருகைகளாலும் புதைத்துக் கொண்டிருந்தான். கடல்வேந்தன் வீசிய சங்கிலி அவன் நெற்றியிலும் ஒரு கண்ணிலும் பட்டு அதைக் கருக அடித்திருந்தது. மெல்லக் கைகளை நீக்கிக், கடல்வேந்தனைப் பார்த்த சஞ்சயன் "என்ன செய்துவிட்டாய் பார்?" என்று சொன்னான்.

"சங்கிலியை மெதுவாகத்தான் வீசினேன். காரணமாக்வே உன் கழுத்துக்குக் குறி வைக்கவில்லை. வைத்திருந்தால் நீ இத்தனை நேரம் பிணமாகத் தரையில் கிடப்பாய்" என்ற கடல்வேந்தன், "சஞ்சயா! என்னை வஞ்சி அழைத்துச்செல்ல நீ உன் திறமையின் மேலும் திருட்டுத் தனத்தின் மேலும் நம்பிக்கை வைப்பதைவிட என் வாக்கின் மேல் நம்பிக்கை வைப்பது நல்லது. என் உத்தரவுப்படி சங்கிலியை அவிழ்த்திருந்தால் இந்தக் காயம் உனக்கு ஏற்பட்டிருக்காது. சரி, சரி. புத்தமடாலயம் சென்று ஒரு துண்டு வாங்கிக் கொண்டுவா" என்று கம்பீரமான குரலில் உத்தரவும் இட்டான்.

ஆனால் அதற்குப் பணியவில்லை சஞ்சயன். பதில் பேசாமல் நின்ற நிலையில் அசைவற்று நின்றான். அப்பொழுது பௌத்த கீதமொன்று சுள்ளியாற்றின்

மேல் திசையில் கேட்டது. அங்கு கண்களை ஓட்டிய சஞ்சயன் படகு ஒன்று நீரை எதிர்த்து துழாவப்பட்டு வருவதையும், அதில் நான்கு புத்த துறவிகள் கிழக்குமுகமாக எழுந்து "புத்தம் சரணம் கச்சாமி" "சங்கம் சரணம் கச்சாமி" என்று துதிபாடுவதையும் கவனித்தான். அந்தப் படகு கடல்வேந்தன் அருகில் வந்ததும் கடல்வேந்தன் கைகளை நீட்டி, "பிட்சுக்களே, ஒரு துணி தாருங்கள்" என்று கூவ, ஒரு பிட்சு படகைத் துழாவியவனிடம் ஏதோ சைகை காட்டினார். அவன் படகிலிருந்து ஒரு காஷாயத்தை வீசினான் கரையை நோக்கி. அதைக் கையில் பிடித்து பிட்சுகளுக்குத் தலைவணங்கிய கடல்வேந்தன் நீரில் அழுந்தி கழுத்துவரை நீராடிவிட்டு காலைக் கதிரவனை நோக்கித் துதிகளிரண்டைப் பாடினான். பிறகு தரைக்கு வந்து ஈரக் காவி ஆடைகளைக் களைந்து பிழிந்து, மீண்டும் தனது உடைகளை அணிந்து வண்டியில் ஏறிக் கொண்டான். ஈரக் காவி ஆடையை வண்டி முகப்பில் திரைக்குப் பதில் தொங்கவிட்டு, "சஞ்சயா போகலாம்" என்றான்.

"சிற்றுண்டி?" சஞ்சயன் பக்தியுடன் வினவினான்.

"தேவையில்லை. எப்படியும் மாலையில் வஞ்சி போய் விடுவோம். அங்கு சாப்பிடுகிறேன்" என்று கூற மூடுவண்டி மீண்டும் விரைந்தது. அதற்குப் பிறகு எங்கும் நிற்கவில்லை வண்டி. சொக்கன் சத்திரத்தில் உணவருந்த வேந்தன் மறுத்ததால் வண்டி எங்கும் தங்காமல் விரைந்தது வஞ்சி நோக்கி.

மாலை நெருங்கும் சமயத்தில் வண்டி வஞ்சி நகரை எட்டவே காவல் செய்த வீரர்களில் ஒருவனை அழைத்து, "கடல்வேந்தர் பிடிபட்டதைப் படைத்தலைவர் வில்வன் கோதையிடம் தெரியப்படுத்து. அவர் மாளிகை முன்பாக இந்த வண்டி நிறுத்தப்படும். பிறகு கடல் வேந்தரைப் பாதுகாத்துச் சிறைக்கு அழைத்துச் செல்லுவது அவர் பொறுப்பு என்று சொல்" என்று தூதும் அனுப்பினான்.

விளக்கு வைக்கும் சமயத்தில் மூடுவண்டி சேரமன்னர் படைத்தலைவர் இல்லத்தின் முன்பு நின்றது. கடல்வேந்தன் பிடிபட்டதைக் கேள்விப்பட்ட வஞ்சிமாநகர் மக்கள் அவனைப் பார்க்கத் திரளாகக் கூடியிருந்தனர். வண்டி நின்றதும் அதைச் சேரவீரர் பலர் சூழ்ந்து கொண்டனர். வில்லவன்கோதை தமது மாளிகையிலிருந்து வெளிவந்து மூடுவண்டியை அணுகி, "கடல்வேந்தரே! உமது பயணம் முடிந்துவிட்டது. இறங்கி வாருங்கள்" என்று மிகுந்த பணிவுடன் அழைத்தான்.

வண்டிக்குள்ளிருந்து பதில் ஏதுமில்லை. மீண்டும் ஒரு முறை அழைத்தும் பதிலில்லாது போகவே, "சரி! திரையை விலக்கி இவனை இழுத்து வாருங்கள்" என்று வில்லவன் கோதை உத்தரவிட்டார். இரு வீரர் திரையை விலக்கினர். உடனே கூவினர் அதிர்ச்சியுடன் "படைத் தலைவரே!" என்று.

திரும்பி வண்டியை நோக்கி வந்த படைத்தலைவன் பிரமித்தான். சற்று எட்ட நின்ற சஞ்சயனை நோக்கி, "தூதரே! என்ன விளையாடுகிறீரா? இவர்தான் கடல் வேந்தனா?" என்று வினவினார், சினம் குரலில் பொறி பறக்க.

சஞ்சயனும் வண்டியின் உட்புறத்தை நோக்கினான். அவன் கண்களை அவனால் நம்பமுடியவில்லை. அதனால் பேசவும் முடியவில்லை. வாயடைத்து நின்றான். வண்டிக் குள்ளிருந்தவன் கடல்வேந்தனல்லன்!

□

19. கனவில் ஒருவன்

சேரன் தலைநகரான வஞ்சி அன்று கடல்வேந்தனை வரவேற்க விழாக்கோலம் பூண்டிருந்தது. நகரெங்கும் பெருவிளக்குகளும், பந்தங்களும் எரிந்து கொண்டிருந்தன. கடல்வேந்தனின் அதி சாகசச் செயல்கள் நகரெங்கும் பரவி இருந்தாலும், வீரத்திற்கு மதிப்புக் கொடுப்பது தமிழர்களின் நற்பண்பாதலாலும் பல இடங்களில் தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. அவன் வரும் அரசர்ங்க வண்டி எந்தப்புறம் வருமோவென்று தெரியாத தால் முசிறியிலிருந்து வஞ்சி மாநகரை அணுகும் மூன்று பாதைகளிலும் மக்கள் திரளாக நின்றிருந்தாலும், அவன் வந்த வண்டிச் சக்கரங்கள் உருளும் பாக்கியத்தைப் பிரதான அரண்மனை வீதியே பெற்றிருந்ததால் அங்கு மக்கள் கூட்டம் சிறிது அதிகமாக இருந்ததன்றி, வண்டி வரும் விஷயம் நகருக்குள் முன்னதாகவே பரவிவிட்டதால் மற்ற பெரு வீதிகளிலிருந்த கூட்டமும் பிரதான அரண்மனை வீதியை நோக்கி நகர்ந்தது. இதை முன்னதாக எதிர்பார்த்த வில்லவன்கோதை அரசு வீதியில் பலமான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்ததன் விளைவாக கூட்டம் வண்டியை நெருக்கியடித்துச் சூழ முடியா திருந்தது.

அந்தப் பெரும் கூட்டத்தை நோக்கிப் புன்முறுவல் கொண்ட வில்லவன்கோதை மிகுந்த உற்சாகத்துடன் மூடுவண்டியின் பின்புறமிருந்த காவித் திரையை நீக்கி உள் நோக்கியதும் பெரும் சினத்துக்குள்ளானார். "தூதரே! என்ன விளையாடுகிறீரா? இவன்தான் கடல்வேந்தனா?" என்று சிறி அதுவரை இருந்த புன்னகையைக் கோபதகை யாக மாற்றிக் கொண்டார்.

அவர் சொற்களையும் முக மாறுதலையும் கண்ட சஞ்சயனும் வண்டியின் உள்புறத்தை நோக்கிப் பேரதிர்ச்சியுற்று நின்றான். உள்ளே இருந்தது கடல்வேந்தனில்லை என்பதை அறிந்தவுடன் சஞ்சயனுக்குப் பிராணனே போய் விடும் போலிருந்தது. வில்லவன்கோதையை நோக்கி, "இந்தவண்டியில் கடல்வேந்தனைத்தான் ஏற்றியிருந்தேன்" என்று கெஞ்சினான்.

வில்லவன்கோதை வண்டிக்குள் மீண்டுமொருமுறை தனது கண்களை ஓட்டி "இவன்தான் கடல்வேந்தன் என்று சொல்கிறீரா?" என்று இகழ்ச்சியும், கடுமையும் இணைந்த குரலில் வினவினார். "தம்பீ; பயப்படாதே! இறங்கி வா" என்று பரிதாபம் நிறைந்த குரலில் வண்டிக்குள்ளிருந்தவனை அழைத்தார்.

வண்டியிலிருந்தவன் இறங்க மறுத்து வண்டியின் மூலையில் ஒடுங்கிக்கொண்டு "ஐயோ! என்னை ஒன்றும் செய்யாதீர்கள். நான் ஓடி விடுகிறேன்" என்றான் நடுங்கிய குரலில்.

"தம்பீ! உனக்கு எந்தத் தீங்கும் நேரிடாது. இறங்கி வா" என்று கையை நீட்டினார் வில்லவன்கோதை.

"ஐயோ! உங்களுக்குத் தெரியாது. தூதர் என்னைக் கொன்று விடுவார் என்று நடுங்கிய குரலில் சொன்னான் வண்டிக்குள்ளிருந்தவன்.

சஞ்சயனுக்கு கோபம் தலைக்கேறினாலும் அவன்ஏதும் செய்யவோ, பேசவோ இயலாமல் தவித்தான். அவனைச் சற்றே மிரண்ட விழிகளால் நோக்கிய போலி வேந்தன் வில்லவன்கோதை நீட்டிய கையைப் பிடித்துக் கொண்டு மெதுவாக இறங்கினான். அவனைக் கண்ட மக்கள் ஆரவாரித்தனர்.

வண்டியிலிருந்து இறங்கியவன் வாலிப வயதுடையவன். மிக அழகாயிருந்தான். ஆனால் பயங்கொள்ளித் தனம் அவன் முகபாவத்தில் தெளிவாய்த் தெரிந்தது. சாயல் சேரப் பேரரசரான செங்குட்டுவனை அப்படியே உரித்து

வைத்தது போலிருந்தது. அத்தனை பயத்திலும் அவன் சுற்றுமுற்றும் விழிகளை உலாவவிட்டு கூட்ட நின்ற கும்பலைப் பார்த்துப் பிரமித்தான். அவன் வஞ்சி மண்ணில் கால்களை ஊன்றி நின்றதும் சேரமான் படைத்தலைவரான வில்லவன்கோதை அவனை நோக்கி மெதுவாகத் தலை வணங்கினார்.

அவர் வணக்கத்திற்குக் காரணம் புரியாத வஞ்சி நகர்வாசிகள், "இவன் யாராயிருக்கும்?" என்று பேசிக் கொண்டதைக் காதில் வாங்கிய வில்லவன்கோதை "வஞ்சிப் பெருமக்களே! நீங்கள் இல்லம் செல்லலாம். இந்த வாலிபன் நமது மகாகவி பரணரின் புதல்வன். இவனும் கவி பாடுவான். எனது குருநாதரின் புதல்வன் என்பதற்காகத் தலைவணங்கினேன். நீங்களும் வணங்குங்கள்" என்று அவர்களுக்கு இரைந்தே பதில் சொன்னான். அவன் கட்டளைக்குச் செவிசாய்த்து மக்களும், காவல்வீரருங்கூடத் தலைவணங்கினர்.

"இனி நீங்கள் இல்லம் செல்லலாம்" என்று அடுத்த கட்டளையைப் பிறப்பித்தான் வில்லவன்கோதை.

மக்கள் மெதுவாக நகர்ந்தனர். போகும்போது சிலர் சஞ்சயனைப் பார்த்து நகைத்தார்கள். சஞ்சயன் தலை குனிந்து நின்றான் மக்களைப் பார்க்காமலே. 'வண்டிக் குள்ளிருந்த கடல்வேந்தன் எப்படி மாயமாய் மறைந்தான்?' என்ற கேள்வி அவன் மனத்தில் திரும்பத் திரும்ப எழுந்து கொண்டிருந்தது. அந்தக் குழப்பத்தில் திளைத்திருந்த காரணத்தால் கடைசியாக வில்லவன்கோதை அவனை அழைத்ததுகூடக் காதில் விழவில்லை சஞ்சயனுக்கு. "தூதரே!" என்று இரண்டாம்முறை சற்றுக் குரலை அழுத்திக் கொண்டு அழைத்த பிறகு விழித்துக்கொண்ட சஞ்சயன், கண்களை அவரை நோக்கி உயர்த்தி, "படைத் தலைவரே!" என்றான்.

"நீர் இன்று விளைவித்தது எத்தனை அவக்கேடு தெரியுமா?" என்று வினவினார் வில்லவன்கோதை.

"நான் வேண்டுமென்று எதுவும் செய்யவில்லை...." என்று இழுத்தான் சஞ்சயன்.

"வேண்டுமென்றோ, தெரியாமலோ வீரனான, கடல் வேந்தனுக்குப் பதில், கவிபாடும் இந்தப் பிள்ளையை அழைத்து வந்தீர். இந்த நிகழ்ச்சி இன்னும் சில நாள்களுக்குள் சோழ, பாண்டிய நாடுகளில் பரவும். சேர நாட்டைக் கண்டு தமிழகம் சிரிக்கும்" என்று குரலில் சிறிது உஷ்ணத்தைக் காட்டினார்.

சஞ்சயன் முகத்தில் அச்சம் தெரிந்தது. "வருந்துகிறேன் படைத்தலைவரே!" என்று கூறினான் சேர தூதன் வருத்தம் துள்ளிய குரலில்.

"உமது வருத்தம் இன்றைய அவப்பெயரை அழிக்காது" என்று சுட்டிக்காட்டினார் படைத் தலைவர்.

சஞ்சயன் ஏதோ சமாதானம் சொல்லமுயன்று 'கடல்' வேந்தனைப் பிடிப்பது அத்தனை சுலபமல்ல" என்று தொடங்கினான்.

அவன் பேச்சை இடைமறித்த வில்லவன்கோதை,"அது தெரிகிறது உமது சாதனையிலிருந்து" என்று இகழ்ச்சியுடன் கூறிவிட்டு, "வா தம்பி" என்று புலவர் மகனை அழைத்துக் கொண்டு தனது மாளிகைக்குள் நுழைந்து விட்டார்.

அவன் சென்றதைப் பார்த்துக்கொண்டே நின்ற சஞ்சயன் தனது கோபத்தைக் காவல் வீரர் மீதும், வண்டியோட்டியவன் மீதும் திருப்பி, "ஏன் நிற்கிறீர்கள்? எங்காவது செல்லுங்கள் எனது கண்களில் படாமல்.

டேய் வண்டி! வண்டியை எங்காவது மறைவில் கொண்டு போய் அவிழ்த்துவிடு" என்று கூவினான். வீரர்களின் புரவிகள் பறந்தன படை வீட்டை நோக்கி. வண்டியின் புரவிகளும் விரைந்தன. வண்டிக்காரன் சாட்டையடியால் சஞ்சயனும் தனது புரவியைப் படைவீட்டை நோக்கிச் செலுத்தினான். புரவிக் கொட்டடியில் அதைக் கட்டிய பிறகு தீர்க்காலோசனையுடன் வீரர்கள் தங்கும் படை வீட்டுக்குள் நுழைந்தான். வழக்கமாகத் தங்கும் அறைக்குள் சென்று கதவை மூடிப் படுத்தான். யாரும் தன்னைத் தொந்தரவு செய்ய வேண்டாமென்று படை வீட்டு நிர்வாகிக்கும் உத்தரவிட்டான்.

இரவு முற்றவில்லையாதலால், அப்பொழுதும் வஞ்சியின் வீதிகளில் மக்கள் நடமாட்டமிருந்தாலும், மனம் ஒரு நிலையில் இல்லாததாலும் உறக்கம் அவனை அணுக மறுத்தது. அன்றைய விபரீத நிகழ்ச்சிகள், ஏமாற்றம், படைத்தலைவர் பரிகாசம் எல்லாமே அவன் இதயத்தை சம்மட்டி கொண்டு அடித்துக் கொண்டிருந்தன. வெப்பம் சற்று அதிகமாயிருந்ததோ அல்லது மனத்தில் அல்லல்தான் வெப்பத்தை ஏற்படுத்தியதோ சொல்ல முடியாது. சஞ்சயன் திணறியும் பஞ்சணையில் புரண்டும் படுத்தான். பிறகு எழுந்து சிறிது நேரம் அங்குமிங்கும் நடமாடினான். கடைசியில் அறையின் சாளரக் கதவுகளைத் திறந்து வெளியே நோக்கினான்.

படைவீடு வஞ்சியைச் சூழ்ந்து சென்ற ஆற்றங்கரையில் சற்று மேடான இடத்தில் நிறுவப்பட்டிருந்ததால், ஊரின் பெருமாளிகைகள் நன்றாகவே தெரிந்தன தூதன் கண்களுக்கு. அந்த மாநகரை தூதன் நேசித்தான். அவன் பிறந்த இடமே அதுதான். அதன் கவர்ச்சி உலகத்தில் எந்த நாட்டின் தலைநகருக்கோ, புறநகரங்களுக்கோ இருக்க முடியாதென்ற திட்டமான எண்ணத்துடன் இருந்தான். ஆனால் அன்று அந்த நகரம் அவனைப்

பார்த்து நகைப்பது போலிருந்தது. தூர இருந்த மாளிகை தீபங்கள் அவனை நோக்கிக் கண்களைச் சிமிட்டின. அந்த மாநகரே தன்னை நோக்கி எள்ளி நகையாடுவதாக சஞ்சயன் நினைத்தான். அந்தச் சமயத்தில் அவன் கோபமெல்லாம் அமைச்சர் அழும்பிள்வேள் மீது திரும்பியது. அவர் பைத்தியக்கார யோசனையால்தான் இத்தனை மானக்கேடு தனக்கு ஏற்பட்டது என்று மன எரிச்சல் கொண்டான். தவிர, பரணர் பிள்ளை எப்படி வண்டியில் வந்தான் என்பதும் சஞ்சயனுக்குப் புரியாததால் ''இதில் புலவன் விஷமம் ஏதாவதிருக்குமோ?'' என்று எண்ணினான். ஏதும் புரியாததால் மீண்டும் பஞ்சணையில் படுத்தான். படுத்தும் சிந்தனை அவனை விட்டு நீங்கவில்லை.

மறுநாள் மன்னரைச் சந்திக்க நேருமோ? அவருக்கு என்ன பதில் சொல்வது? என்று சிந்தித்தான். அதனால் ஏற்பட்ட கிலியை அகற்றக் கண்களை மூடினான். நாளை பகிரங்கமாக மன்னர் தமது அவையில் தன்னை விசாரிப்பாரென்றும், அதற்குப் பிறகு தனது யோக்கியதை அம்பலத்திற்கு வந்துவிடுமென்றும் எண்ண எண்ண மார்பு 'திக், திக்' என்று அடித்துக் கொண்டது. அதனால் உடலும் குலுங்கியது. நேரம் ஓட ஓட சற்றுத் துணிவும் ஏற்பட்டது சேரதூதனுக்கு. எதிலும் வெற்றி தோல்வி சகஜம். இதற்காக நான் அஞ்சுவானேன் என்று தன்னைத் தைரியப் படுத்திக் கொள்ளவும் செய்தான்.

மெல்ல...மெல்ல உறக்கமும் அவனை ஓரளவு ஆட்கொண்டது. வஞ்சிநகர் முழுவதையுமே ஓரளவு அமைதி மூடிக்கொண்டது. சஞ்சயன் மிதமிஞ்சிய அதிர்ச்சியாலும், அதிர்ச்சி விளைவித்த களைப்பாலும் நன்றாக அயர்ந்து உறங்கினான். இடையிடையே உடல் தூக்கி வாரிப்போட்டுக் கண்களைத் திறந்த சமயத்தில் சாளரத்தை நோக்கினான். சாளரத்துக்கு வெளியே நீலவானத்

தில் விண்மீன்கள் மின்னின அவனைப் பரிகசிப்பது போல. சாளரத்தைப் பார்த்தால்தானே இந்தத் தொந்தரவு என்று மறுபுறம் திரும்பிப் படுத்தான் சஞ்சயன், அறைக் கதவை நோக்கி. மூன்றாம் ஜாமம் அடியெடுத்து வைத்ததும் உண்மையாகவே உறக்கம் அவனை ஆட்கொண்டது. கண்கள் தாமாகவே மூடின. கால்களை நன்றாக நீட்டி நித்திரை வயப்பட்டான்.

நீண்ட பூரவிப் பயணத்தின் விளைவாக அவன் கால்கள் மிகவும் வலித்தன. அவற்றை யாராவது பிடித்தால் என்ன என்று கனவில் வினவிக் கொண்டான். அந்தக் கனவுக்கு விடை கிடைத்தது. அவன் காலை மிக மெதுவாக யாரோ தொட்டார்கள். உறக்கத்தில், உறக்கம் அளித்த கனவில் மெதுவாக நகைத்தான் சஞ்சயன். ''எனக்கு யார் காலைப் பிடிப்பார்கள்? மென்னியைத்தான் பிடிப்பார்கள்'' என்று அவன் உதடுகள் முணுமுணுத்தன.

மறுபடியும் ஒருமுறை அவன் கால் சற்றுப் பலமாகவே அழுத்தப்பட்டது. சற்றே விழித்துக் கொண்ட சஞ்சயன் குறுவாளை எடுக்கக் கையைக் கொண்டு போனான், இடைக்கச்சைக்கு. கச்சையில் குறுவாளில்லை. சட்டென்று எழுந்திருக்க முயன்றான். மார்பை வலுவான கரம் ஒன்று அழுத்தியது. கண்களை நன்றாக விழித்தான் தூதன். அவன் காலடியில் கடல்வேந்தன் உட்கார்ந்திருந்தான். அதையும் கனவென்றே நினைத்தான் சஞ்சயன். ''சே! கனவிலும் இவன்தானா வரவேண்டும்?'' என்று எரிச்சலுடன் சொன்னான்.

அதைக் கேட்ட அந்தக் கனவு உருவம் நகைத்தது.

□

20. புதிய பயணி

வஞ்சி மாநகர் படைவீட்டில் தனிப்பட்ட தனது அறையில் உறங்கிக் கொண்டு, இல்லாத கனவுகளையெல்லாம் கண்டு கொண்டிருந்த சேரதூதனான சஞ்சயன், தனது மார்பை யாரோ பலமாக அழுத்துவதைக் கண்டு லேசாகக் கண்விழித்தபோது, பக்கத்தில் கடல்வேந்தன் உட்கார்ந்திருப்பதைக் கண்டு முதலில் பிரமையும், திகிலும் அடைந்தானானாலும் பிறகு அதைக் கனவென்றே நினைத்துக் கண்களை மூடினான். "சே! போயும் போயும் கனவிலும் இவன்தானா வரவேண்டும்?" என்று அலுத்தும் கொண்டான். இன்னொரு முறை அவன் உடலே வலுவான கரத்தால் அசைச்கப்பட்டதும் சஞ்சயன் கண்களை அகல விழித்து, தான் காண்பது கனவல்லவென்பதைப் புரிந்து கொண்டதால் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்திருக்க முயன்றான்.

கடல்வேந்தன் சேரதூதனை இகழ்ச்சி ததும்பிய கண்களால் நோக்கி, "எழுந்திருக்க நேரமிருக்கிறது. படுத்தபடி இருங்கள். முதலில் நாம் பேசுவோம்" என்று சொன்னான்.

அதனால் பஞ்சணையில் திரும்பி மல்லாந்துவிட்ட சஞ்சயன் "கடல்வேந்தரே!" என்று மெதுவாக அழைத்தான்.

"என்ன தூதரே?" என்று விசாரித்தான் கடல்வேந்தன்.

"நான் உம்மைச் சிறை செய்தது நிஜந்தானே?" என்று சேரதூதன் வினாவினான்.

"ஆம். நிஜந்தான்" என்று கடல்வேந்தன் ஒப்புக் கொண்டான்.

"வஞ்சிநகருக்கு உம்மைக் கொண்டு வந்தது?" சஞ்சயன் கேட்டான் ஆவலுடன்.

"அதுவும் உண்மைதான்" என்ற கடல்வேந்தன் இதழ்களில் இளநகை விரிந்தது.

"அப்படியானால் நீர் ஏன் வண்டியில் இல்லை?" அவன் கேள்வியில் கடல்வேந்தன் வண்டியில் இல்லாதது தவறு என்ற குற்றச்சாட்டு இருந்தது.

"எத்தனை நேரம் அந்த மூடு வண்டியில் உட்கார்ந்திருப்பது?" என்று கேட்டான் கடல்வேந்தன்.

"எப்படித் தப்பினீர்!"

"தப்பவில்லையே? இதோ வந்துவிட்டேனே."

"இப்பொழுது வந்து என்ன பயன்? என் மானம் போய்விட்டதே?"

"உமக்கு என்று மானம் இருந்தது? எப்பொழுது கடல்வேந்தனைப் போன்ற ஒரு கொள்ளைக்காரனை இரண்டு ஆண்டுகளாகப் பிடிக்கவில்லையோ அப்பொழுதே உமது மானமும், அந்தக் கையாலாகாத மந்திரியின் மானமும் போன மாதிரிதானே?"

சஞ்சயன் என்ன பதில் சொல்வதென்று விளங்காததால் விழித்தான். பிறகு பழைய கதையைக் கிளறுவது அநாவசியமென்று நினைத்து "இப்பொழுது என்ன செய்வதாக உத்தேசம்?" என்று கேட்டான் சஞ்சயன்.

கடல்வேந்தன், சஞ்சயன் படுக்கையிலிருந்து எழுந்து நின்றான். "எழுந்திரும் தூதரே!" என்று எழுந்திருக்கத் தூதனுக்குக் கட்டளையிட்டான்.

சஞ்சயனுக்கு ஏதும் புரியாததால் மிரள மிரள விழித்து "எதற்கு?" என்று வினவினான்.

"முசிறி செல்ல" கடல்வேந்தனின் பதில் சுருக்கமாக வந்தது.

சஞ்சயனுக்கு அவனது காதுகளையே நம்ப முடியாத தால் "என்ன? என்ன சொல்கிறீர்?" என்று வினவினான்.

கடல்வேந்தன் சஞ்சயனைச் சற்றுக் கடுமையாகப் பார்த்து "முசிறிக்குச் செல்ல வேண்டும். நேரமாகிறது. நாளைக்குள் நான் முசிறி செல்லாவிட்டால் விபரீத விளைவுகள் ஏற்படும். உடைகளை அணிந்து கொள்ளும்" என்று உத்தரவிட்டான்.

சஞ்சயன் வியப்புடன் நோக்கினான் வேந்தனை. "இந்த வஞ்சியிலிருந்து எப்படி வெளியேறுவதாக உத்தேசம்?" என்று வினவவும் செய்தான்.

"நாம் வந்த மூடுவண்டியில், வாசலில் வண்டி சித்தமாயிருக்கிறது" என்ற கடல்வேந்தன் "நேரம் அதிகமாகிறது. கிளம்பும்" என்று துரிதப்படுத்தினான்.

"வண்டி மேற்கு வாயிலில் மடக்கப்பட்டால்?" சஞ்சயன் கேள்வியில் சற்றுச் சபலம் இருந்தது, எப்படியும் கடல்வேந்தனை அச்சுறுத்தி நிறுத்திவிடலாமென்ற நினைப்பில்.

"யாரும் மடக்க மாட்டார்கள்" கடல்வேந்தன் திட்டமாகப் பதில் சொன்னான்.

"ஏன்?"

"வண்டியை ஓட்டப்போவது நீர்".

"நானா?"

"ஆம்".

"நான் வண்டிக்காரனல்லவே"

"பாதகமில்லை. அந்தப் புது உத்தியோகத்தை வகிக்கலாம்."

"எதற்காக வகிக்க வேண்டும்?"

"உமது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள" என்ற கடல் வேந்தன் "தூதரே! உமக்கு மூளை சிறிதேனும் கிடையாதென்பது எனக்குத் தெரியும் ஆகையால் விளக்கமாகச் சொல்கிறேன் கேளும். சேர தூதர் ஓட்டும் வண்டியைத் தடுக்க யாருக்கும் அதிகாரம் கிடையாது. சோதனை செய்வதற்கும் மன்னர் உத்தரவு தேவை. இந்த விவரங்கள் நீர் அறியாதவையல்ல. ஆகையால் நீர் கால தாமதம் செய்யாமல் கிளம்பும். இல்லையேல் உம்மைக் கட்டித் தூக்கி வண்டியில் போட்டுக் கொண்டு கிளம்புவேன். ஏதாவது திணறினாலோ, சத்தம் போட்டாலோ உம்மைக் கொன்று விடுவேன்" என்று தனது கைகளையும் நீட்டிக் காட்டினான்.

அந்த சமயத்தில் ஏற்கெனவே காயத்தழும்பிலிருந்த அவன் முகம் மிகவும் பயங்கரமாக மாறியது. சிவந்த அவன் முரட்டுத் தலைக்குழல் அதிக முரடாகத் தெரிந்தது. அவன் உதடுகள் உள்ளூரச் சிறிது மடிந்து உக்கிரத்தைத் தெளிவுபடுத்தின. இவற்றையெல்லாம் கண்ட சஞ்சயன் கடல் வேந்தனிடம் மேலும் சர்ச்சை செய்வதில் அர்த்தமில்லையென்பதைப் புரிந்து கொண்டு ஆடைகளை அணிந்து கொண்டான். கச்சையையும் இறுக்கிக் கட்டிக் கொண்டான். அந்தக் கச்சையில் தனது மடியிலிருந்து குறுவாளை எடுத்துச் செருகிய கடல்வேந்தன், "இதோ உமது ஆயுதம். வைத்துக் கொள்ளும்" என்று கூறிவிட்டு அறையின் கதவைத் திறந்து கொண்டு வெளியே நடந்தான். அவனைத் தொடர்ந்த சஞ்சயன் அறை வீட்டின் அந்தப் பகுதியில் காவலர் யாருமில்லாததைக் கண்டு வியந்தான். "எல்லாரும் எங்குதான் போயிருப்பார்கள்?" என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

அவன் மனத்திலோடிய எண்ணங்களைக் கடல்வேந்தன் புரிந்து கொண்டிருக்க வேண்டும். "காவலர், அரசர் உத்தரவுப்படி வில்லவன்கோதை வீட்டிற்குச் சென்றிருக்கிறார்கள்" என்று கூறினான்.

"இந்த வேளையில் அங்கு என்ன வேலை?" என்று சஞ்சயன் வினவினான்.

"கடல் வேந்தனைப் பாதுகாக்க காவலரை வரும்படி உத்தரவு வந்தது. போயிருக்கிறார்கள்" என்று கடல் வேந்தன் சர்வ சாதாரணமாகச் சொன்னான்.

"அந்த உத்தரவைக் கொண்டு வந்தது யார்?"

"நான்தான்"

"என்ன விளையாடுகிறீர்?"

"அதற்கு அவகாசமில்லை."

"சொன்னாலன்றி இந்த இடத்தைவிட்டு நகரமாட்டேன். யாரும் செய்யமுடியாதையெல்லாம் செய்கிறீர். நீர் என்ன மந்திரவாதியா?" என்று சீறிவிட்டு நின்ற இடத்திலேயே கல்லுப்பிள்ளையார் மாதிரி நின்றுவிட்டான் சஞ்சயன்.

சஞ்சயன் கேள்விக்குப் பதிலேதும் சொல்லவில்லை கடல் வேந்தன். தூதனை அப்படியே ஆட்டுக்குட்டியைத் தூக்குவதுபோல் அநாயாசமாகத் தூக்கிக் கொண்டு வாசலை நோக்கி விரைந்து அங்கிருந்த மூடுவண்டியின் முகப்பில் அவனை உட்கார வைத்தான். "இந்தாரும், இதோ சாட்டை. புரவிகளைத் தூண்டி ஓட்டும் வண்டியை" என்று உத்தரவிட்டுப் பின்னால் சென்று காவித் திரையை நீக்கி உள்ளே ஏறிக் கொண்டான்.

கையிலேந்திய சாட்டையுடனும் புரவிக் கடிவாளங்களுடனும் உட்கார்ந்திருந்த சஞ்சயன் புரவிகளை நகர்த்தவுமில்லை; சாட்டையை உபயோகிக்கவுமில்லை. அப்பொழுது வண்டிக்குள் இருந்த ஒருவன் அவன் காதில் சொன்னான். "தூதரே! வண்டியை ஓட்டும், அதுவும் துரிதமாக" என்றான்.

அப்பொழுதும் சஞ்சயன் சண்டித்தனம் செய்யவே அவன் முதுகில் குறுவாளொன்று லேசாக அழுத்தியது. "சிறிது தாமதித்தாலும் இக் குறுவாள் உமது ரத்தத்தைக் குடிக்கும்" என்றான் உள்ளிருந்தவன்.

அந்தக் குரல் தூதனுக்கு நன்றாகத் தெரிந்திருந்ததால் பிரமித்தான் சஞ்சயன். "இவனெப்படி இங்கு வந்தான்?" என்று தன்னுள் வினவிக் கொண்டான். ஆனால் தனது சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்து கொள்ள "நற்கிள்ளி! நீ எப்படி வந்தாய் இங்கே?" என்று வினவினான்.

"இந்த வண்டியை ஓட்டி வந்தேன்." நற்கிள்ளி மெல்ல நகைத்தான்.

"வண்டியை ஓட்ட வேறொருவனை நியமித்திருந்தேனே, அவன் என்ன ஆனான்?"

"முசிறியில் இருக்கிறான்."

"எப்பொழுது வண்டியை நீ ஓட்ட முற்பட்டாய்?"

"சுள்ளியாற்றில் வேந்தர் நீராடிய போது உங்கள் வண்டிக்காரன் வேடிக்கை பார்க்க ஆற்றுத்துறைக்கு வந்தான். பிறகு அலுப்பாய் அவன் ஆற்றில் நீந்த ஆரம்பித்தான். அவனுக்குப் பதில் நான் வண்டியில் ஏறிக் கொண்டேன்."

இதைக் கேட்ட சஞ்சயன் பிரமித்தான். நற்கிள்ளி தங்களைத் தொடர்ந்து வந்திருக்கிறானென்பதைப் புரிந்து கொண்டான். ஆற்றங்கரைக்கு வந்த வண்டிக்காரனை அவன்தான் ஆற்றில் தள்ளியிருக்க வேண்டுமென்பதும் அவனுக்கு சந்தேகமற விளங்கியது. ஆகவே கேட்டான் "வண்டிக்காரன் இறந்துவிட்டானா?" என்று.

"இல்லை. படகில் வந்த புத்தத் துறவிகள் அவன் ஆற்றில் இறங்குவதைப் பார்த்துவிட்டார்கள். ஆகையால் காப்பாற்றி இருப்பார்கள்" என்ற நற்கிள்ளி அதற்கு மேல் உரையாடலைத் தொடர இஷ்டப்படாமல் "தூதரே! வண்டியை ஓட்டு" என்று சொல்லி குறுவாளையும் முதுகிலிருந்து எடுத்துக் கழுத்தில் அழுத்தினான்.

மேற்கொண்டு எந்தத் தர்க்கத்திலும் இறங்காமல் கடிவாளத்தைத் தளர்த்தி இழுத்துவிட்டுச் சாட்டையால் புரவிகளை இரண்டு தட்டுத்தட்டி வண்டியை ஓடவிட்டான் சஞ்சயன். வண்டியும் மேல் திசையை நோக்கிச் சென்றது. அந்தப் பயணத்தில் பல விசித்திரங்கள் காத்திருந்தன சேர தூதனுக்கு.

வண்டியை மேலை வாயில் காவலர் தடுக்கவுமில்லை; சோதிக்கவுமில்லை. வண்டியை ஏதும் கேட்காமல், சஞ்சயனுக்குத் தலை தாழ்த்தி வெளியே செல்ல அனுமதித்தார்கள். இரவில் ஒரு ஜாமம் வண்டி பயணம் செய்ததும் சொக்கன் சத்திரத்துக்கு வந்து நின்றது. அந்தச் சத்திரத்து வாயிலில் சித்தமாக நின்றிருந்த ஒரு பயணி தலைமுதல் கால்வரை தனது உடலை மூடியிருந்தார். வண்டி வந்து நின்றதும் பின்புறம் சென்று ஏறிக் கொண்டார்.

"உம். விடுங்கள் வண்டியை" என்று ஊக்கினான் நற்கிள்ளி.

வண்டி ஓடியது. அதன் முன்புறமும் ஒரு துணிச்சீலையைக் கட்டிய நற்கிள்ளி அதற்கு வெளியே வந்து சஞ்சயனுடன் வண்டியின் முகப்பில் உட்கார்ந்து கொண்டான். சஞ்சயனுக்குத் தலைவெடித்துவிடும் போலிருந்ததால் "யார் இப்பொழுது வண்டியில் ஏறியது?" என்று வினவினான்.

"அதெல்லாம் பெரிய இடத்து விவகாரம். சும்மா வண்டியை ஓட்டும்" என்றான் நற்கிள்ளி.

ஆனால் சஞ்சயன் விடவில்லை. முன் திரையை அகற்றி உள்ளே பார்க்க முயன்றான். அவன் கை இரும்புக் கையால் பிடித்து முறுக்கப்பட்டது. 'ஐயோ" என்று அலறினான் சஞ்சயன்.

"போனால் போகிறான், விட்டு விடுங்கள். இந்த சஞ்சயன் பொல்லாதவனல்லன், அசடு" என்று புதுப்பயணி பரிந்து பேசினார்.

அந்தக் குரல் சஞ்சயனுக்கு மிகவும் பழக்கமானதால் அவன் பிரமை சொல்லத் தரமில்லாததாயிற்று. "இதென்ன மாயம்?" என்று தன்னைக் கேட்டுக்கொண்டான். "பயணி சொன்னதில் தவறில்லை. நான் அசடுதான். முட்டாள் தான்" என்று தன்னை வெறுத்தும் கொண்டான்.

□

21. சிருங்கார சிற்றரவங்கள்

சொக்கன் சத்திரத்தில் இரண்டாவது ஜாம ஆரம்பத்தில் தலையிலிருந்து கால்வரை தன்னைக் கறுப்புச் சீலையொன்றால் மறைத்துக் கொண்டு ஏறிய புதுப்பயணி யாராக இருக்கக்கூடும் என்பதை அறிய திரையை அகற்ற முயன்ற சஞ்சயன் கரம், பலமான ஒரு கரத்தால் இரும்புப் பிடியாக பிடிக்கப்பட்டதன் விளைவாக, வலி தாளாமல் அவன் முகம் சுளித்தானென்றால், கை முறுக்கப்பட்டதும் அலறவே செய்தான். இன்னும் ஒரு முறுக்கு முறுக்கினால் தனது முழங்கை எலும்பு உளுத்துப்போன மூங்கிலைப் போல் முற்றிலும் முறிந்துவிடும் என்பதை உணர்ந்ததால் பெரும் திகிலும் கொண்டான். ஆனால், அவனைக் காப்பாற்றத் தலையிட்ட புதுப்பயணி, "இவன் பொல்லாதவனல்லன், அசடுதான். விட்டு விடுங்கள்" என்று பரிந்து பேசியதும், பயணி சொன்னதை ஆமோதிக்கவே செய்தான் சேரதூதன்.

பேசிய பயணியின் குரலிலிருந்து, தனக்குப் பரிந்தவள் நிலக்கள்ளிதான் என்பதை உணர்ந்து கொண்ட சஞ்சயன், அவள் அந்த இரவில் சொக்கன் சத்திரத்தில் காத்திருக்க வேண்டிய அவசியமென்ன? நாங்கள் அந்தச் சமயத்தில் அங்கு வருவது அவளுக்கு எப்படித் தெரியும் என்றெல்லாம் கேள்விகளை எழுப்பிக் கொண்டானானாலும் விடையேதும் கிடைக்கவில்லை தூதனுக்கு.

விடை நிலக்கள்ளியிடமிருந்தும், கடல்வேந்தனிடமிருந்துமே வந்தது. திரையிலிருந்து சேரதூதன் கையை அகற்றி, திரையை நன்றாகத் தொங்கவிட்டு, அதை மீண்டும் திறக்காதிருக்க இரு முனைகளையும் அந்த வண்டியின் பக்கவிற்களில் செருகிவிட்ட கடல்வேந்தன், "நிலக்கள்ளி! சொன்னபடி சொக்கன் சத்திரத்தில் சித்தமாயிருந்து விட்டாயே?" என்று பாராட்டினான்.

"நீங்களும் சொன்னபடி சரியான காலத்துக்கு வந்து விட்டீர்கள். எப்படி வஞ்சியிலிருந்து தப்பினீர்கள்?" என்று வினவினான்.

கடல்வேந்தன் சிறிது நிதானித்து விட்டுச் சொன்னான். "நிலக்கள்ளி! உண்மையைச் சொன்னால் நீ நம்பமாட்டாய்! ஆனால் மன்னர்தான் என்னை விடுதலை செய்தார்" என்று.

"மன்னர் விடுதலை செய்தாரா? எப்படி? மன்னர் தானே உங்களைச் சிறை செய்ய உத்தரவிட்டிருந்தார்? உங்களைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்குப் பத்தாயிரம் பொன் வெகுமானம் என்று முரசும் கொட்டியிருக்கிறாரே" என்று வினவினாள் நிலக்கள்ளி.

"மன்னர் மனம் மாறியிருக்க வேண்டும்" என்று கடல்வேந்தன் பதில் சொன்னான்.

"எப்படி மாறும்?" வினவினாள் அந்தக் கன்னி.

"எப்படியோ தெரியாது. என்னைக் கண்டதும் காவலரைப் பார்த்துச் சீறினார் மன்னர், "இவனை யார் இங்கு கொண்டுவரச் சொன்னது?" என்று. "உன்னை யார் இங்கு வரச்சொன்னது?" என்று என்மீதும் சீறி விழுந்தார்..."

"விசித்திரமாயிருக்கிறதே?"

"எந்த விசித்திரமும் இல்லை இதில். நானாக வரவில்லையென்றும் என்னைப் பிடித்து வந்தார்களென்றும் சொன்னேன். எனக்கு விடுதலையளித்தால் நான் திருடிய இரண்டு பெட்டிப் பொன் நாணயங்களையும் அரசுக்குத் திருப்பிக் கொடுத்துவிடுவதாகச் சொன்னேன். இனிமேல் கொள்ளையடிப்பதில்லையென்றும் உறுதி கூறினேன். மன்னர் சம்மதித்து விடுதலையளித்தார்." இதைக் கூறிய கடல்வேந்தன் லேசாகப் பெருமூச்சுவிட்டு, "என் தொழில் போய்விட்டது" என்றும் வருத்தத்துடன் கூறினான்.

நிலக்கள்ளி நகைத்தாள் மெதுவாக. அவன் விரல்களுடன் தனது விரல்களை இணைத்தாள். "எந்தத் தொழில்? கொள்ளைத் தொழிலா!" என்று வினவவும் செய்தாள் நகைப்பின் ஊடே.

"ஆம்" என்றான் கடல்வேந்தன்.

"அது ஒரு தொழிலா?" என்று கேட்டாள் நிலக்கள்ளி.

"ஆம்"

"கண்ணியமான தொழிலா?"

"அவரவர்களுக்கு அவரவர் தொழில் கண்ணியமானது."

"மன்னர் இருக்கிறார். அரசியல் பணிசெய்யும் பெரு மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் தொழிலைப்போல் ஆகுமா உங்கள் தொழில்?"

"அரசியல் ஒன்றும் அப்படி கண்ணியமான தொழிலல்ல அங்கும் கொள்ளை நடக்கிறது உள்ளூர. அதற்குக் கண்ணியமான சட்டப்போர்வை போர்த்தப்படுகிறது. எனது கொள்ளை பகிரங்கம். சட்டப் போர்வை கிடையாது. வித்தியாசம் அவ்வளவுதான்."

"அரசிலிருப்பவர்கள் நாட்டு வருமானத்தை மக்கள் நலனுக்குச் செலவிடுகிறார்கள்.. நீங்கள்?"

"நானும் அப்படித்தான் கொள்ளையடிக்கும் பணத்தை ஏழைகளுக்குத் தருகிறேன். வேண்டுமானால் முசிறிவாசிகளைக் கேட்டுப் பார்" என்ற கடல்வேந்தன், "நிலக்கள்ளி! வீண் பேச்சு எதற்கு? சிறிது நேரமாவது உறங்கு" என்று அவளைப் படுக்கவைத்தான்.

படுத்தும் அவள் உறங்கவில்லை: "உம் பேசாமல் இருங்கள். கையை எடுங்கள்" என்றாள்.

கடல்வேந்தன் மெல்ல நகைத்தான். "கையை ஏன் எடுக்கச் சொல்கிறாய்? அது என்ன செய்கிறது உன்னை?" என்று வினவினான் நகைப்பின் ஊடே.

"என்ன செய்யவில்லை?" என்று முணுமுணுத்தாள் நிலக்கள்ளி.

அடுத்து வண்டிக்குள் மௌனம் நிலவியது சில விநாடிகள். மீண்டும் "உம்" என்ற ஒலி கிளப்பினாள் நிலக்கள்ளி.

"என்ன, உம்?" என்று முணுமுணுத்தான் கடல்வேந்தன். அவன் உள்ளே அசையும் ஒலி கேட்டது சேரதாதனுக்கு.

நிலக்கள்ளி வேகமாகத் திரும்பிப் படுத்து "ஏதாவது விஷமம் செய்தால் கையை உடைத்துவிடுவேன்" என்று எரிந்து விழுந்தாள்.

அந்த எரிச்சலில் ஒரு வேட்கையும் இருந்ததை சேரதாதன் புரிந்து கொண்டான். அதனால், அவன் பெரும் சங்கடத்துக்குள்ளாகி, பக்கத்தில் உட்கார்ந்திருந்த நற்கிள்ளியை நோக்கி, "நற்கிள்ளி! கேட்டாயா கதையை?" என்று மெதுவாக வினவினான்.

"இல்லை" என்றான் நற்கிள்ளி, எதிரே சாலையை நோக்கிய வண்ணம்.

"எதுவுமே கேட்கவில்லையா?"

"இல்லை."

"உனக்குக் காது இல்லையா?"

"இருக்கிறது."

"பின் எப்படி கேட்காமலிருக்க முடியும்?"

"என் காது..."

"உம்"?

"....கேட்கக்கூடியவிஷயங்களைத்தான் கேட்கும்.எனக்கு மூன்று காதுகள் உண்டு" என்றான் நற்கிள்ளி.

"மூன்று காதுகளா?" வியப்புடன் வினவினான்.

"ஆம், தூதரே! சாதாரண சமயத்தில் இரு காதுகள். நான் சம்பந்தப்படாத விஷயங்களில் 'கேட்காது' என்ற மூன்றாவது காதும் உண்டு. அறிவுள்ளவர்களுக்கு இந்த மூன்றாவது காது அவசியம்" என்ற நற்கிள்ளி நகைத்தான்.

தூதன் சினந்தான். "நற்கிள்ளி! நீ என்ன சிலேடை பாடும் புலவனென்று எண்ணமா?" என்று வினவினான்.

"எண்ணமா என்று கேட்பானேன். நான் தமிழன். சிலேடையும், நகைச்சுவையும் தமிழனுக்கு இயற்கையாகவே உண்டு" என்ற நற்கிள்ளி, "நாளை எனது படகுக்கு வாரும். கவி பாடிக் காட்டுகிறேன்" என்றும் கூறினான்.

அதுவரை நற்கிள்ளி சொன்னதையெல்லாம் பொறுமையாகக் கேட்ட சஞ்சயன், "நீர் கவிதான். கவி பாடுவீர்" என்று எரிச்சலுடன் சொன்னான்.

"இப்பொழுதாவது புரிந்து கொண்டீரா?" என்று நற்கிள்ளி வினவினான்.

"புரிந்து கொண்டேன். கவி கவிதை புனைவதோடு நிற்கமாட்டான். புனைந்த கவிதையைக் கேட்க ஆளைப் பிடிப்பான். அப்படி யாராவது சிக்கிக் கொண்டால், கவிதை வரி ஒவ்வொன்றையும் இரண்டு தடவை சொல்லி

பிராணனை வாங்குவான்" என்ற சஞ்சயன், "நற்கிள்ளி! கடல்வேந்தன் கையால் நான் செத்தாலும் சாவேனேதவிர, உன் கவிதையைக் கேட்டுப் பிராணனை விடமாட்டேன்" என்றான் தீர்மானமாக.

நற்கிள்ளி, திரும்பிச் சஞ்சயனை நோக்கி "தூதரே! உமக்கு இலக்கியச் சுவையில்லை" என்றான்.

சஞ்சயனும் சளைக்கவில்லை. "இல்லாததால் பிழைக்கிறேன். இருந்திருந்தால் தமிழ் நாட்டில் இருக்கிற ஒவ்வொரு கவியும் எனக்குப் பாடிக்காட்டி என்னைக் கொன்றிருப்பான்" என்று தனது இலக்கிய வெறுப்பை சஞ்சயன் காட்டினான்.

அதற்கு மேல் இருவரும் பேசவில்லை. அவர்கள் மௌனத்தை, உள்ளிருந்து எழுந்த சிருங்கார சிற்றரவங்கள் கலைத்துக் கொண்டிருந்தன. கடல்வேந்தன், நிலக்கள்ளியின் முதுகைத் தன்னை நோக்கித் திருப்பியபோது, சரசரவென்று அவள் ஆடை ஒலித்தது. அவன் குனிந்து தனது இதழ்களால் அவள் இதழ்களைத் தீண்டியபோது ஏற்பட்ட வழவழத்த ஒலியொன்று வண்டிச் சக்கர ஓட்டத்தின் ஒலியையும் சற்றே மிஞ்சிக்கொண்டது.

அவன் ஒரு கையால் அவள் முதுகை வருடினான், இடையில் தனது இன்னொரு கையைத் தவழவிட்டான். சற்று நேரத்திற்கெல்லாம் அந்தக் கைகள் இடம் மாறின. ஏதேதோ ஒலிகள், சிறு முனகல், காற்சிலம்பின் பரல்களின் ஒலி, கையொன்று இன்னொரு கையைப் பிடித்துத் தள்ளியதால் ஏற்பட்ட தட்டென்ற ஒலியொன்று, எல்லாமே வேட்கை விளையாட்டின் பூர்வங்களாகத் தெரிந்தன அதனுக்கு.

"உறக்கம் வருகிறது, பேசாமலிருங்கள்" என்று சற்று உரக்கவே நிலக்கள்ளி கடைசியாகச் சொன்ன சொற்கள்

தூதன் மனத்தை அலைக்கழித்திருக்க வேண்டும். அவன் நற்கிள்ளியைத் திரும்பி நோக்கி, "நற்கிள்ளி! இரண்டாம் ஜாமம் தாண்டிவிட்டது. இன்னும் ஒரு ஜாமமாவது நாம் தூங்க வேண்டாமா?" என்று கேட்டான்.

"யார் தடுத்தது உங்களை?" என்று நற்கிள்ளி கேட்டான்.

"இதைக் கேட்க வேறு வேண்டுமா?" என்று சஞ்சயன் பதிலுக்குக் கேட்டான்.

"தூங்கும் புரவிகளின் சேணத்தை என்னிடம் கொடு" என்று சேணத்தை வாங்கிக் கொண்டான் நற்கிள்ளி.

"தூதன் அலுப்பு மிகுதியால் வண்டியின் கூண்டின் பக்கமாகச் சாய்ந்து நித்திரை வயப்பட்டான். எத்தனை நேரம் அவன் உறங்கியிருப்பானோ அவனுக்கே தெரியாது. விழித்த போது முற்றும் புதிய சூழ்நிலையில் இருந்தான். அவனை இரு முரடர்கள் உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இவன் எப்படி இங்கு வந்தான்?" என்று ஒருவன் கேட்டான்.

"தெரியாது" என்றான் இன்னொருவன்.

"அப்படியானால் இவனை என்ன செய்வது?" என்று முதலில் பேசிய முரடன் கேட்டான்.

"அதுவும் தெரியாது" என்றான் இரண்டாமவன்.

"இவனை ஆற்றில் தூக்கிப் போட்டால் என்ன?"

"அது சரிப்பட்டு வராது."

"ஏன்?"

"நீந்தத் தெரிந்தால் தப்பிவிடலாம்" இதை மிகுந்த வருத்தத்துடன் சொன்னான் இரண்டாவது முரடன்.

□

22. அந்தரத்தில் ஒரு வாள்

வஞ்சியிலிருந்து வந்த வண்டியில் உறங்கிவிட்ட சேர தூதனான சஞ்சயன், லேசாகக் கண்விழித்தபோது எதிரே தெரிந்த இரண்டு முரட்டு உருவங்களைக் கண்டதும் கண்களை இறுக மூடிக்கொண்டாலும், அவர்கள் உரையாடல் காதில் விழவே ஓரளவு அச்சம் மட்டுமின்றி சீற்றமும் கொண்டான். அப்பொழுது தான் இருந்த இடம் வண்டியின் முகப்பு அல்லவென்பதையும் ஏதோ கடினமான தரையில் கிடத்தப்பட்டிருந்ததையும் உணர்ந்ததால், 'இங்கு எப்படி வந்தோம்? இந்த இடம் எது?' என சிந்திக்கத் தொடங்கியவன், அந்தச் சிந்தனையை மாற்றித் தன்னைக் கொல்லும் வழியைப்பற்றி விவாதிக்கும் அந்த முரடர்களை அரைக் கண்ணால் கவனிக்கலானான். இருவர் முகங்களும் மிகப் பெரிதாகவும், கரடு தட்டி இருந்ததையும் இருவருக்கும் பெரிய மீசையும், காதில் கம்பிக் குண்டலமும் இருந்ததையும், இருவரும் தலையில் முண்டாசு கட்டியிருந்ததையும் அறிந்த சஞ்சயன், இருவரும் கடலோடிகளென்பதைப் புரிந்து கொண்டாலும் அவர்கள் எதற்காகத் தன்னைக் கொல்ல முயலுகிறார்களென்பதைப் பற்றிச் சிந்திக்கலானான். ஆனால் இருவர் கண்களிலும் பிரதிபலித்த கொலைக்குறிப்பைக் கொண்டு அவர்கள் தன்னைக் கொல்லாமல் விடமாட்டார்களென்பதையும் புரிந்து கொண்டு தெய்வத்தைச் சிந்தையில் எண்ணினான்.

அந்தத் தெய்வ சிந்தனை அந்த முரடர்களின் மனத்தையும் மாற்றியிருக்க வேண்டும். அவர்களில் ஒருவன் மற்றவனை வினவினான், "இவனைக் கொல்லாமல் விட்டால் என்ன?" என்று.

மற்றவன், "மீண்டும் நேற்று மாதிரி நமது ரகசியப் பாசறையில் நுழைந்து விட்டால் என்ன செய்வது?" என்று கேட்டான்.

"இன்று காலைகூட இவன் சுயநினைவோடு வந்ததாகத் தெரியவில்லை" என்றான் முதல் முரடன்.

"ஆம்! தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்தான், கதவருகில் மூர்ச்சை போட்டு விழுந்தான்" என்று மற்றவன் பூர்த்தி செய்தான் நிகழ்ச்சியை.

"அதிகமாகக் குடித்துவிட்டு வந்திருப்பானோ?" முதல்வன் கேட்டான்.

"குடித்ததாகத் தெரிவில்லை. அவன் வாயில் குடி நாற்றமில்லை."

"பின் ஏன் தள்ளாடினான்?"

"யாரோ மயக்க மருந்தைப் புகட்டியிருக்கிறார்கள்."

"அப்படியானால் ஆற்றைக் கடந்து எப்படி வந்தான்? மயக்கத்திலிருப்பவன் படகைக்கூட விடமுடியாதே."

"உண்மை! இவன் படகில் வந்ததாகத் தெரியவில்லை. ஆற்றங்கரையில் சவம் போல் படுத்துக்கிடந்தான். பிறகு மெல்ல எழுந்தான், தள்ளாடினான், நடக்க ஆரம்பித்தான்..."

"பிறகு?"

"அவனை நான் தொடர்ந்தேன். நேராக இந்த இடத்தை நோக்கி நடந்துவந்தான். வந்து வாயிலில் விழுந்து விட்டான். பிறகுதான் வாயிற்கதவை நீ திறந்தாய்"

இந்த உரையாடலால், சஞ்சயன் தான் அங்கு வந்த விதத்தைப் புரிந்து கொண்டான். தன் வண்டியில் உறங்கிய பிறகு கடல்வேந்தனோ அல்லது நற்கிள்ளியோ தன்னை ஆற்றங்கரையில் தள்ளிவிட்டுப் போயிருக்க வேண்டுமென்பதை உணர்ந்தான். தன்னால் கை, கால்களை அசைக்க முடியவில்லையென்பதையும், தான் மிக பலவீனமாயிருப்பதையும் உணர்ந்து கொண்ட சஞ்சயன், "உம் உம்" என்று பெரிதும் வேதனைப்படுகிறவனைப் போல் இருமுறை முனகினான்.

அந்த முனகலைக் கேட்ட முதல் முரடன், "தம்பி! இவனுக்கு சுரணை வருகிற மாதிரி தெரிகிறது" என்றான்.

சஞ்சயன் சற்றே உடலை நெளிப்பதைப் பார்த்து, "ஆமாம்! அப்படித்தான் தெரிகிறது" என்றான் இரண்டாமவன்.

முதலாமவன் விளித்தான் மற்றவனை "தம்பி!" என்று.

"என்ன அண்ணே?" என்றான் மற்றவன்.

"இவன் தலையில் கட்டையால் ஓர் அடிபோட்டு மறுபடியும் உறங்கச் செய்யட்டுமா?" என்று முதல் முரடன் வினவினான்.

"வேண்டாம். பாவம். அப்படி இம்சை செய்து கொல்லக்கூடாது" என்று மற்றவன் ஜீவகாருண்யத்தைக் காட்டினான்.

"வேறு என்ன செய்யலாம்?" முதல்வன் வினாத் தொடுத்தான்.

"முதலில் நினைத்தது போல் ஆற்றில் தள்ளி விடலாம்."

"அதுவரை?"

"வாயில் துணியடைத்துக் கட்டிவிடுவோம்."

"அப்படியே நதியில் அமிழ்த்தி விடலாமென்கிறாயா!"

"ஆமாம்! அதுவும் முகத்துவாரத்தில் தள்ளிவிட்டால் சுறாக்கள் இவனைக் கடித்து விழுங்கிவிடும். இவன் பிணமும் கரையில் ஒதுங்காது. விசாரணைக்கும் இடமிருக்காது" என்று இரண்டாமவன் சொன்ன யோசனையைக் குதூகலத்துடன் வரவேற்றான் முதல்வன்.

"தம்பீ! நீ புத்திசாலி. முன் யோசனைக்காரன். பிணம் ஒதுங்கினால் விசாரணை வரும். விசாரணை வந்தால் நமது பாசறை மர்மம் தெரிந்தாலும் தெரியலாம். வீண் வம்பு எதற்கு? இவனைச் சுறாக்களுக்குப் பட்சணமாக்கி விடுவோம். ஒரு ஜீவனுக்கு உணவளித்த புண்ணியமும் நமக்கு வரும்" என்று இரண்டாமவன் சொல்ல "சரி இவன் வாயில் துணியை அடை. இன்றிரவு இவனை முகத்துவாரத்தில் தள்ளி விடுவோம்" என்று முதல்வன் முடிவு கூறினான்.

"இரவு வரை காத்திருக்க வேண்டுமா?" என்று இரண்டாமவன் கேட்டான்.

"விடிந்து விட்டது. இவனை நதியில் போடுவதை யாராவது பார்த்தாலும் தொந்தரவு. தவிர, இவனால் விசாரணை வந்து நமது பாசறை மர்மம் வெளியே தெரிந்தால் தலைவர் நம்மைக் கொன்றுவிடுவார். ஆகவே எதையும் இரவில் கவனித்துக் கொள்வோம். இவன் வாயில் துணியை அடைத்து அடுத்த அறையில் உருட்டிவிடுவோம்" என்று முதல்வன் சொல்ல, இரண்டாமவன் சேரதூதனைப் பிணைக்கும் பணியில் இறங்கினான்.

அவன் மார்புமீது ஏறி உட்கார்ந்து வாயில் துணியைத் துருத்தி அடைத்தான். பிறகு, வாய் வேறொரு துணியால் பலமாகக் கட்டப்பட்டது. கைகால்களும் பிணைக்கப்

பட்டன. அவர்கள் இருவரும் விளைவித்த இம்சையைத் தாங்க முடியாத சஞ்சயன் விழித்தான். திமிறினான். பெரும் முனகலாக முனகினான். ஆனால் அதையெல்லாம் லட்சியம்செய்யாத அந்தஇருமுரடர்களும் அவனைக் கட்டித் தூக்கிப் பக்கத்து அறைக்கு எடுத்துக்கொண்டு போய்த் தரையில் கிடத்தினார்கள். கிடத்திய பின் முதல் முரடன் சொன்னான். "டேய்! பேசாமல் படுத்திரு. நடுப்பகலுக்கு முன்பே உனக்கு உணவு தருகிறோம். நாங்கள் யாரையும் பட்டினி போட்டுக் கொல்ல மாட்டோம்" என்று சொல்லிவிட்டு, "இதோ கூரையைப் பார்" என்று கூரைக்காகக் கையை உயர்த்தியும் காட்டினான்.

மேலே இருந்த மெல்லிய கயிற்றில் கட்டிய பளபளவென்ற கத்தி தொங்கிக் கொண்டிருந்தது. மேலே இருந்த சிறு சாளரத்தின் மூலம் வந்த காற்றில் அதுலேசாக ஆடவும் செய்தது. அந்த மெல்லிய கயிறு அறுந்து கூர்மையான அந்த வாள் தன் கழுத்தின்மீது எந்த விநாடியிலும் விழலாமென்பதையும், அப்படி விழுந்தால் அதன் கூர்மை தனதுகழுத்தை அறுத்துவிடுமென்பதையும், உணர்ந்த சஞ்சயன் மிரண்ட விழிகளை இரு முரடர்கள்மீதும் திருப்பினான்.

முதல்முரடன் புன்முறுவல் செய்தான். "பயப்படாதே, அந்தக் கயிறு மெல்லியதானாலும் உறுதியுடையது, அறுந்துவிடாது. அப்படியே விழுந்தாலும் அது உனக்கு நல்லது. சுறாமீனுக்கு முழு நினைவுடன் இரையாவதைவிட இது வரவேற்கத் தக்க மரணம்" என்று கூறி அறைக் கதவைச் சாத்திக் கொண்டு இரண்டாவது முரடனுடன் வெளியே சென்று விட்டான்.

அந்த இரு கொலைகாரர்களும் சென்றதும் தானிருக்கும் இடத்தைப் பற்றியும், தனது நிலைபற்றியும் தெளிவாக சிந்திக்க முற்பட்டான் சஞ்சயன். அந்தச் சிந்தனைக்கு

உதவி செய்யக் கடலின் பேரலைகளின் ஓசை வெகு அருகில் கேட்டது சஞ்சயன் காதுகளில். அதனால்தான் மேலைக் கடலோரத்திலுள்ள ஏதோ ஒரு குடியிருப்பில் இருப்பதை யும், கிட்டத்தட்ட அந்த இடம் சுள்ளியாற்று முகத்துவாரத் தில் இருக்க வேண்டுமென்பதையும் உணர்ந்தான் சஞ்சயன். கடலோரத்தில் இருப்பவை ஒன்று யவனர் குடியிருப்பு என்பதையும், மற்றொன்று அராபியர் குடியிருப்பு என்பதை யும் ஊகித்துக் கொண்ட சஞ்சயன், "இரண்டு குடியிருப்பு களில் இது எது?" என்று தன்னைத்தானே வினவிக் கொண்டான். தன்னைப் பிணைத்த முரடர்களிருவரின் பயங்கர மீசையையும், காதணியையும், முண்டாசையும் எண்ணிப் பார்த்து 'அநேகமாக இது அராபியர் குடியிருப் பாகத்தான் இருக்க வேண்டும்' என்று தீர்மானமும் செய்து கொண்டான். 'அராபியரும், சேரர்களுக்கு நண்பர்கள் தானே?" அப்படியிருக்க என்னைக் கொல்ல இவர்கள் ஏன் முயற்சி செய்ய வேண்டும்?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

இப்படிச் சிந்தனையை வளர விட்டுக் கொண்ட சஞ்சயன், நேரம் வேகமாக ஓடுவதை அறிந்தான். பொழுது நன்றாக ஏறியதும் தானிருந்த வாயிலில் ஆள்கள் நடமாட்டம் அதிகமாகி விட்டதை உணர்ந்தான். தனது அறைக்கு வெளியே யார் யாரோ நடமாடுவதையும், திடீரெனச் சிரிப்பொலி பயங்கரமாகக் கேட்டதையும் எண்ணி, "எதற்காக நகைக்கிறார்கள்?" என்று வினவிக் கொண்டான். இடையிடையே கூரையை நோக்கித் தனது கழுத்துக்கு நேரில் தொங்கும் கூரிய பெருவாளையும் பார்த்துத் திகிலடைந்தான்.

நேரம் ஓடஓட அறைக்கு வெளியே கூச்சல் அதிகரித்தது. பலர் சேர்ந்து ஏதோ விவாதிப்பதும் தெரிந்தது. யாரோ ஒருவன் கேட்டான். "ஒற்றனா? நமது பாசறையிலா?" என்று.

"ஆம் எசமான்!" என்று ஒலித்தது முதல் முரடன் குரல்.

"இங்கு யாரும் அப்படி வர முடியாதே?" என்று வினவினான் எசமான் என அழைக்கப்பட்டவன்.

"தட்டுத்தடுமாறி நினைவிழந்து வந்து இங்கு விழுந்து விட்டான். நாங்கள் உள்ளே தூக்கி வந்தோம்" என்றான் முதல் முரடன்.

"எங்கிருந்து வந்தான்?" என எசமான் கேட்டான்.

"பாசறைக்கு நேர் எதிரில் உள்ள ஆற்றங்கரையி லிருந்து" என்றான் முதல் முரடன்.

"அவனை அங்கேயே ஏன் வெட்டிப் போடவில்லை?"

"ஏதோ உளறிக் கொண்டே வந்தான்."

"அதனால்?"

"அந்த உளறலில் தங்கள் பெயரும் இருந்தது."

எசமான் என்பவன் சிந்தித்தான் சில விநாடிகள். "என் பெயரையா உளறினான்?" என்று வினவினான் முடிவில்.

"ஆம் எசமான்!" திட்டமாயிருந்தது முதல் முரடன் பதில்.

"ஆம் எசமான்!" இரண்டாவது முரடனும் ஒப்புக் கொண்டான்.

"அப்படியானால் இவன் விவரமறியத்தான் வந்திருக் கிறான்."

"சந்தேகமில்லை எசமான்."

"அவன் எங்கே இப்பொழுது?"

"பக்கத்து அறையில் கிடத்தி இருக்கிறோம். வாயில் துணியடைக்கப்பட்டு, கைகால்கள் பிணைக்கப்பட்டு படுத் திருக்கிறான்."

"அதாவது.. ?"

"கத்திக்கு நேர் கீழே."

"பலே! பலே!" என்று உற்சாகப்பட்ட எசமான் "யவனர்களின் சூட்சும புத்தி இவர்களுக்குப் புரியட்டும். டெமாகிள்ஸ் ஸ்வோர்ட்! அதனடியில் இவன். அப்படி சாக வேண்டுமானால் இவன் கொடுத்து வைத்தவன்" என்று சஞ்சயன் விதியைப் பற்றிப் பாராட்டினான்.

அதைக் கேட்ட சஞ்சயன் மனம் கொதித்தான். சாவதில் கொடுத்து வைப்பது வேறு இருக்கிறதா?" என்று உள்ளூர வெறுத்தான்.

வெளியே மேலும் உரையாடல் தொடர்ந்தது. "டெமாகிள்ஸ் கத்தியால் இறக்க அவன் கொடுத்து வைத்திருக்க வேண்டும் எசமான்! ஆனால், அந்தப் பாக்கியம் இந்தத் தமிழனுக்குக் கிடைக்காது. கத்தியை மெல்லிய வலுவான கயிற்றால் கட்டியிருக்கிறேன். அறுந்து விழாது. அவனை அச்சுறுத்தவே அங்கு படுக்க வைத்திருக்கிறேன். இரவு ரகசியக் கூட்டம் முடிந்ததும் இவனைப் பரலோகம் அனுப்பி விடுகிறேன்" என்றான் முதல் முரடன்.

அத்துடன் உரையாடல் முடியுமென்று நினைத்த சஞ்சயன், திடீரென வியப்பின் வயப்பட்டான். "எங்கே அந்தப் புது ஒற்றன்?" என்று பலத்த குரலொன்று அதட்டலாகக் கேட்டது.

அந்தக் குரலைக் கேட்ட சஞ்சயன் பேரதிர்ச்சி அடைந்தான். அந்தக் குரல் யவனனான கிக்ளஸியஸின் குரல்! அந்தக் குரலைக் கேட்டதும் ஏதோ பெரிய விபரீதத்திற்கு வழிவகுக்கப்படுகிறது என்பதை சஞ்சயன் புரிந்து கொண்டான். அது என்ன என்பதை அன்றிரவில் அறிந்தபோது தானிருந்த நிலையில் நிகழவிருக்கும் பேராபத்தைத் தவிர்க்க என்ன செய்யலாம் என்று எண்ணினான் சஞ்சயன்.

□

23. யூசப்

கடல்வேந்தன், உப தளபதியும் யவனனுமான க்ளேஸியஸின் குரலைக் கேட்டதும் சஞ்சயன் வியப்பை மட்டுமின்றி அச்சத்தையும் அடைந்தான். கடல்வேந்தனின் அடக்கும் கரம் இல்லாதபோது க்ளேஸியஸ் எதையும் செய்யத் துணிவானென்பதை ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்த சேரதூதன், 'அராபியர் குடியிருப்பில் இவன் எப்படி வந்தான்? இவனுக்கும் அராபியர்களுக்கும் என்ன சம்பந்தம்?' என்று தனக்குள் கேள்விகளை எழுப்பிக் கொண்டாலும் அவற்றுக்கு விடை காண முயற்சி செய்யாமல் தான் யார் என்பதை அறிந்தால் க்ளேஸியஸ் தன்னைக் கொலை செய்ய விடமாட்டானென்பதை உறுதியாக நம்பியதால் ஓரளவு துணிவும் அடைந்தான். அந்தத் துணிவு எத்தனை அர்த்தமற்றது என்பதை அடுத்த சில நிமிடங்களில் புரிந்து கொண்டான். வெளியறையில் நின்ற க்ளேஸியஸ், "எங்கே அந்தப் புது ஒற்றன்?" என்று கேட்டதும் அல்லாமல், "யாரவன்?" என்றும் விசாரித்தான்.

"அவன் யாரென்று தெரியவில்லை" என்றான் முதலில் எசமான் என முரடர்களால் அழைக்கப்பட்டவன்.

"அப்படி விவரம் தெரியாதவனை இங்கு ஏன் சிறை வைத்தீர்கள்?" என்று க்ளேஸியஸ் வினவினான்.

"அவனை வேண்டுமென்று சிறை வைக்கவில்லை. அவனாக இங்கு வந்து மயக்கமாக விழுந்து விட்டான், ஆகவே அறையில் கிடத்திப் பூட்ட வேண்டியதாயிற்று" என எசமான் என்பவன் பதில் சொன்னான்.

"யூசப்! உன்னைப் புத்திசாலி என நினைத்தேன். யாரென்று தெரியவில்லையென்றால் அவனை ஆற்றில் தூக்கிப் போடுவதுதானே?" எனக் கேட்டான் க்ளேஸியஸ்.

"இருட்டினதும் போடலாமென்றிருந்தேன்" என யூசப் பதில் சொன்னான்.

"இருட்டாவிட்டால் என்ன? கோணியினால் கட்டிப் போட்டிருக்கலாமே?" என யோசனை சொன்னான் க்ளேஸியஸ்.

"போட்டிருக்கலாம். ஆனால் கோணியில் கட்டியதும் இவன் கை கால்களை ஆட்டினால், உடலை நெளித்தால் உயிருள்ளவனை ஆற்றில் போடுவது செம்படவருக்குத் தெரியும். அவர்கள் ஒருவேளை இவனை மீட்கலாம்" என்றான் யூசப்.

"இவனை இரண்டாக வெட்டிக் கட்டினால்?" என்றொரு கேள்வியை வீசினான் க்ளேஸியஸ்.

"அப்பொழுது நாம் செய்யும் கொலை வெளிப்படையாகத் தெரியும். விஷயம் விசாரணைக்கு வரும்" என்றான் யூசப்.

இதைக் கேட்டு சில விநாடிகள் சிந்தித்த க்ளேஸியஸ், "யூசப்! நீ சொல்வதும் சரி. புரட்சித்தறுவாயில் இந்தத் தொல்லை எதற்கு?" எனக் கூறிவிட்டு, "யவனர்களின் புது மரக்கலம் வந்துவிட்டது. அதில் நவீன யவனர் ஆயுதங்களும் வந்திருக்கின்றன. புது ஆயுதம் தரித்த யவனர்களும், இங்குள்ள அராபியர்களும் இணைந்தால் இந்த முசிறியைப் பிடிப்பது ரொம்ப சுலபம். அமாவாசை இருட்டில் அழும்பில்வேளின் அரண்மனையைச் சூறையாடி, சிறு படையையும் நிர்மூலமாக்கிவிட்டால் இந்த

முசிறி, யவனர்கள் வசமாகிவிடும். பிறகு அராபியருக்கு சுதந்திரமாக இருக்கவும் வாணிபம் செய்யவும் ஒரு பகுதியைத் தருவோம்" என்ற க்ளேஸியஸ், "எதற்கும் இந்த புது ஒற்றனைப் பார்க்கிறேன். எங்கே அவன்?" என்று கேட்டான்.

"அடுத்த அறையில்" என்ற யூசப், க்ளேஸியஸை சஞ்சயன் இருந்த அறைக்குள் அழைத்து வந்தான்.

க்ளேஸியஸ் உள்ளே வந்ததும் தனது விடுதலை நிச்சயமென்பதையும், புரட்சிக்கு வித்திடும் க்ளேஸியஸ் சேர தூதனான தன்னைக் கொல்ல அனுமதிக்க மாட்டானென்றும் நினைத்த சஞ்சயன் மெல்லக் கண்களை விழித்தான். உள்ளே வந்த க்ளேஸியஸ் சஞ்சயனை உற்று நோக்கி விட்டு யூசப்பைத் திரும்பிப் பார்த்தான், "இவன் யார்?" என்று எதுமறியாதவன் போல் வினவினான்.

சஞ்சயன் உள்ளம் கொதித்தது. 'அடப்பாவி! நான் யாரென்பது உனக்குத் தெரியாதா?' என்று உள்ளூர வினவி உடலையும் முறுக்கிக் கொண்டான்.

க்ளேஸியஸின் கேள்விக்கு யூசப் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. "இங்கு மயக்கமாய் வந்தபோது கூட உங்கள் பெயரையும் என் பெயரையும் உளறியதாகக் கேள்வி" என்றான் யூசப்.

க்ளேஸியஸ் சஞ்சயனை ஊன்றிக் கவனித்தான். அவன் கண்கள் ஈவிரக்கமற்று இருந்தன. "என் பெயரைச் சொன்னானா! எப்படித் தெரிந்தது இவனுக்கு என் பெயர்?" என்று விசாரித்தான்.

அந்த பெரிய புரட்டைக் கேட்டதும் சஞ்சயன் உள்ளம் வெடித்துவிடும் நிலைமைக்கு வந்தது. 'நான் மட்டும் இந்த ஆபத்திலிருந்து விடுதலையடைந்தால் உன்னை

வெட்டி கடற்கரைக் கழுகுகளுக்கு இரையாகப் போட்டு விடுவேன்'' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டு கண்களில் சீற்றத்தையும் காட்டினான்.

அந்தச் சீற்றத்தைக் காணவே செய்த க்ளேஸியஸ் குரூரமாகப் புன்முறுவல் செய்து ''இவன் கோபிக்கிறான்'' என்றான் யூசப்பை நோக்கி.

''மடியும் மாந்தர்க்கு சிந்தனைச் சுதந்திரம் உண்டு'' என்றான் யூசப்.

அதைக் கேட்ட க்ளேஸியஸ் அசுரச் சிரிப்பாகச் சிரித்தான். ''இவனை இன்றிரவு என் மரக்கலத்துக்கு அனுப்பிவிடு'' என்று சொன்னான் சிரிப்பின் ஊடே.

யூசப்பின் முகத்தில் சிந்தனைக் களை படர்ந்தது. ''தங்கள் மரக்கலமென்றால்?'' என்று விசாரித்தான்.

''யவனர் மரக்கலம்'' என்றான் க்ளேஸியஸ்.

''புதிதாக வந்திருக்கிறதே அதுவா?''

''ஆம்''

''தங்கள் முந்திய மரக்கலம்?''

''கடல்வேந்தன் மரக்கலமா?''

''ஆம்''

''அதில் நான் உபதலைவன் தானே?''

''இதில்?''

''தலைவன்''

''அப்படியா!'' என்று வியப்புடன் வினவினான் யூசப்.

''ஆம் யூசப்! இப்பொழுது எனக்குச் சுதந்திரமாக ஒரு மரக்கலம் இருக்கிறது. யவனர் மரக்கலம். சேரர் மரக்கலத்தில் இல்லாத பல வசதிகள் என் மரக்கலத்தில்

உண்டு. சித்திரவதைக்குப் புது யந்திரங்கள் இருக்கின்றன. அவற்றில் இவனை மாட்டி உருட்டினால் இங்குள்ள பாதுகாப்பு வசதிகள் அனைத்தையும் அறியலாம். சேரன் ரகசிய படைவீடுகளையும் அறியலாம்'' என்ற க்ளேஸியஸ் ''ஆகவே இவனைக் கொல்ல வேண்டாம். இரவில் மரக்கலத்துக்கு அனுப்பிவிடு'' என்று உத்தரவிட்டுச் சென்றான்.

அவன் சென்ற பிறகு சஞ்சயனைக் கவனித்த யூசப் ''அடே ஒற்றனே! உனக்கு அடிக்கிறதடா யோகம். யவனர் சக்கரத்தில் மாட்டப் போகிறாய். உன் எலும்புகள் அணு அணுவாய் முறிக்கப்படும். சுறாக்கள் கடித்துச் சாவதைவிட அந்த எலும்பு முறிக்கும் யந்திரம் அளிக்கும் இம்சை நரக வேதனை'' என்று கூறிவிட்டு, வெளியே சென்றான்.

பிறகு தனிமையில் விடப்பட்ட சஞ்சயன் அந்தரத்தில் தலைக்கு மேலே தொங்கிய வாளைப் பார்க்கவும் இஷ்டப்படவில்லை. 'அது விழுந்து கழுத்து அறுந்து சாவது யவன சக்கரச் சிகிச்சையைவிட எத்தனையோ மேல்' என்று நினைத்தான். சக்கரத்தை நினைத்த பீதியால் பெருமூச்சும் விட்டான்.

இரவு ஏறிக் கொண்டிருந்தது. தகுந்த காலத்தில் அவன் வாயிலிருந்த துணி எடுக்கப்பட்டு உணவும் அளிக்கப்பட்டது. அப்படி தன்னை தூக்கி வந்த முரடர்கள் வாய்த்துணியை எடுத்த நேரத்தில் அவன் கிடந்த இடத்துக்கு எதிரே யூசப் ஓர் ஆசனத்தில் அமர்ந்திருந்ததைக் கவனித்தான் சஞ்சயன். யூசப்பின் உத்தரவின் மேல் சஞ்சயனுக்கும் ஓர் ஆசனம் போடப்பட்டு அதில் கை,கால் கட்டுகளுடன் உட்கார வைக்கப்பட்டான் சஞ்சயன். பிறகு அவனுக்கு உணவு ஊட்டப்பட்டது. மெல்ல இருகவளங்களை அவன் அருந்தியதும், ''சிறிது மது கொடுங்கள்'' என்று உத்தரவிட்டான் யூசப். மதுவை அருந்தியதும்

"நீ யார்? எதற்காக என்னைக் கொல்லப் பார்க்கிறாய்? என்று சற்றுத் துணிவுடனேயே விசாரித்தான் சஞ்சயன்.

"நான் யாரென்பதைப் பற்றிக் கவலையில்லை. இந்த முரிறியில் சேரன் ரகசியமாக வைத்திருக்கும் சூறாவளிப் படை எங்கிருக்கிறது?" என்று கேட்டான் யூசப்.

"எனக்கெப்படித் தெரியும்?" என்று சஞ்சயன் கேட்டான்.

"உனக்குத் தெரியும்! க்ளேஸியஸிடம் சொல்வதைவிட என்னிடம் சொல்லிவிடுவது நல்லது" யூசப் இதைத் திட்டமாகச் சொன்னான்.

"என்ன நல்லது?"

"உன்னைக் காப்பாற்ற என்னால் முடியும்"

"சொல்லாவிட்டால்?"

"சொல்லாவிட்டால் உன்னைக் க்ளேஸியஸிடம் அனுப்பிவிடுவேன். அங்கு எப்படியும் ரகசியத்தைக் கக்கி விடுவாய்."

"என் வாயிலிருந்து ஒரு வார்த்தை கூட வராது. என் அரசனுக்கு நான் துரோகம் செய்ய மாட்டேன்" என்று அறிவித்தான் சஞ்சயன்.

யூசப் சிறிது சிந்தித்தான். பிறகு தன்னுடன் வந்திருந்த இரு முரடர்களையும் வெளியே செல்லும்படி கைகை செய்தான். அவர்கள் சென்றதும் கதவையும் சாத்திவிட்டுப் பழையபடி ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டு "இப்பொழுது நாம் தனிமையிலிருக்கிறோம். சொல்லிவிடு" என்று கேட்டான்.

"ராஜத்துரோகம் செய்வதைத் தனிமையில் செய்தாலென்ன, பகிரங்கமாகச் செய்தாலென்ன? என்னைச் சித்திரவதைக்கு அனுப்பிவிடு. எலும்பு முறிந்து சாவேன். ஆனால் அரசர் படை ரகசியத்தைச் சொல்ல மாட்டேன்" என்று திட்டமாக அறிவித்தான் சஞ்சயன்.

அதைக் கேட்ட யூசப் வெளியே சென்று சில நறுக்கு ஓலைகளையும், எழுத்தாணியையும் கொண்டு வந்து சஞ்சயன் கைக்கட்டுகளை அவிழ்த்து "சொல்ல வேண்டாம். எழுதிவிடு" என்றான்.

"எனக்கு எதுவும் தெரியாது" என்று ஒரே அடியாய் மறுத்தான் சேரதூதன்.

அடுத்து யூசப் சொன்ன வார்த்தைகள் பெரும் திகைப்பைத் தந்தன சஞ்சயனுக்கு. "சஞ்சயா! நீ யாரென்பது எனக்குத் தெரியும். நான் கேட்ட விவரங்களை எழுதிவிடு" என்றான்.

தன் பெயரை யூசப் உச்சரித்ததால் திகைத்த சஞ்சயன் கேட்டான், "நான் எழுதாவிட்டால்?" என்று.

"எழுத்தாணியால் உன் கண்களிரண்டையும் குத்தி எடுத்துவிடுவேன்" என்று சர்வ சாதாரணமாக அறிவித்தான் யூசப்.

□

24. யூசப்பின் தந்திரம்

அரபு நாட்டவனான யூசப் தன்னைப் பெயர் சொல்லி அழைத்ததையும், சேரர் படை ரகசியத்தைச் சொல்லுமாறு கேட்டதையும், எழுதியாவது கொடுக்கா விட்டால் எழுத்தாணியால் கண்களிரண்டையும் தோண்டி விடுவதாகப் பயமுறுத்தியதையும் நினைத்த சஞ்சயன் அச்சத்தின் உச்சத்தை அடைந்தான். 'உயிர் போனால் பாதகமில்லை. கதை அத்துடன் முடிந்துவிடும். ஆனால் கண் போய்க் குருடனாகக் காலம் கழிக்க வேண்டுமே' என்ற எண்ணத்தால் பதறிய சேரதூதன் "சரி யூசப்! நீங்கள் சொன்னபடி படை ரகசியத்தை எழுதிக் கொடுக்கிறேனென்று வைத்துக் கொள். எழுதி வாங்கிக் கொண்டு என்னை க்ளேயஸிடம் அனுப்பமாட்டாயென்பது என்ன நிச்சயம்?" என்று வினவினான்.

யூசப் தனது தாடியைச் சிறிது தடவிக் கொண்டு, புன்முறுவல் செய்தான். "ரகசியத்தை நான் அறிந்தபின் க்ளேஸியஸிடம் உன்னை அனுப்ப அவசியமென்ன? எனக்குக் கிடைத்த ரகசியத்தை க்ளேஸியஸிடம் பங்கு போட்டுக் கொள்வதில் என்ன பயனிருக்கிறது?" என்று வினவவும் செய்தான்.

சஞ்சயன் சிந்தித்தான் சில விநாடிகள். பிறகு கேட்டான்: "இந்த ரகசியத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வதாக உத்தேசம்?" என்று.

"இந்த முசிறியைப் பங்கு போட்டுக் கொள்வதில் வியாபாரம் பேசுவேன். ரகசியத்தை அறிந்ததால் என்கை ஓங்கி நிற்கும்" என்று விளக்கினான் யூசப்.

இதைக் கேட்ட சஞ்சயன் மிகவும் வியப்படைந்தான். திருட்டுக்குள் இன்னொரு திருட்டும், வஞ்சகமும் கலந்திருப்பதைக் கண்டு "திருடர் கதி என்றைக்கும் இதுதான்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டு, வாய்விட்டுப் பேசத் தொடங்கி, "சரி யூசப்! ரகசியத்தை எழுதித் தருகிறேன், ஆனால் என்னை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்" என்று ஒரு நிபந்தனையும் போட்டான்.

"அப்படியே" என்று யூசப் ஒப்புக் கொண்டான்.

"விடுதலை செய்வதாகப் பிரமாணம் செய்வாயா?"

"ஆகா! எத்தனை பிரமாணம் வேண்டுமானாலும் செய்கிறேன்."

"எத்தனை பிரமாணங்கள் வேண்டுமானாலும் செய்வாயா?"

"ஆம்"

"அப்படியானால் பிரமாணத்தில் உனக்கு நம்பிக்கையில்லையா?"

"இல்லை" என்று திட்டமாக அறிவித்த யூசப், தனது ஆசனத்தை விட்டு எழுந்து அந்த அறையில் இப்படியும் அப்படியும் உலவினான் சில விநாடிகள். பிறகு சஞ்சயன் எதிரே நின்று சொன்னான், "சஞ்சயா! நான் சொல்வதை நிதானமாகக் கேள். யவனனான க்ளேஸியஸ், முசிறியை யவனர் துறைமுகமாக ஆக்கத் தீர்மானித்திருக்கிறான். அதற்கு நாங்கள் ஒப்பவில்லை. மற்றவர்களுக்கு ஆசையிருப்பதுபோல் அராபியர்களுக்கும் ஆசை உண்டு. நாங்கள் இதை ஆக்ரமிக்க விரும்பவில்லை. ஆனால் முழு வாணிபமும் எங்களிடமிருக்க வேண்டுமென்று நினைக்கிறோம். யவனர்கள் சூழ்ச்சிகளை முறியடித்தால்தான் அது முடியும். அத்துடன் சேரர் கையும் சிறிது பலவீனப்பட்டால் நாங்கள் சேரருடன் வாணிபம் பேசுவோம். சேர சாம்ராஜ்யத்தில் யவனர் குடியிருப்பு போன்ற ஒரு

கூட்டம் ராஜ்யத்தைக் கவர்ந்து பிழைக்க முடியாது. ஆனால் சூறையாடலாம். இங்குள்ள செல்வத்தையெல்லாம் ஏற்றிக்கொண்டு சொந்த நாடு செல்லலாம். யவனர்கள் தாங்கள் எங்கு உறைகிறார்களோ அந்த நாட்டுடன் இணையாதவர்கள். அராபியர் அப்படியல்ல. உறையும் நாடு அவர்கள் நாடு. அதில் ஒரு பகுதியிலாவது ஆதிக்கம் பெற விரும்புவார்கள். யவனர் இருக்கும் வரை நாங்கள் ஏதும் செய்ய முடியாது. நீ ரகசியத்தைச் சொன்னால் அதை மாற்றி க்ளேஸியஸிடம் சொல்லி அவனை சேரர் தூக்குமேடைக்கு அனுப்பிவிடுவேன். அப்புறம் இங்கு நான் வைத்தது சட்டம், அழும்பில்வேள்கூட இங்கு இருக்க வேண்டாம். வஞ்சிக்குப் போகலாம்."

இப்படி தன்னுடைய திட்டத்தை விளக்கியதும் சஞ்சயன் உள்ளூர பிரமித்தான். 'க்ளேஸியஸைவிட இந்த அராபியன் பெரிய நுழை நரி' என்று மனத்துள் சொல்லிக் கொண்டான். க்ளேஸியஸ் எதிர்பார்க்கும் கடல்வெற்றி நிறைவேறுவது குதிரைக் கொம்பானாலும் அராபியன் முசிறியின் வாணிப ஆதிக்கத்தையும், அதன் மூலம் அரசியல் ஆதிக்கத்தையும் அடைவது பிரமாதமல்ல என்று நினைத்தான். ஆனால் இத்தனையிலும் இன்னொரு யோசனையும் தோன்றியது அவனுக்கு. "இவர்கள் கடல்வேந்தன் ஒருவன் இருக்கிறானென்பதைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லையே. அவனை எப்படி சரிக்கட்டுவதாக உத்தேசம்? முசிறியின் கடல்மன்னனாக இருக்கும் வேந்தனை உதாசீனம் செய்து எந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும்?' என்று உள்ளூர வினா எழுப்பிக் கொண்டான்.

யூசப் தனது பெரிய கண்களால் நகைத்தான். சஞ்சயனை நோக்கி, "சஞ்சயா! கடல்வேந்தனைப் பற்றிக் கவலைப்படாதே! இதே நேரத்தில் அவன் யவனர்

மரக்கலத்தைப் பார்வையிட்டுக் கொண்டிருக்கிறான். அங்கிருந்து திரும்புவது துர்லபம்" என்றும் சொன்னான்;

இதைக் கேட்டதும் தலையில் இடி விழுந்தது போன்ற உணர்ச்சியை அடைந்த சஞ்சயன், "யூசப் என் கைகளை அவிழ்க்கச் சொல். ஓலையையும் எழுத்தாணியையும் எடு" என்றான்.

யூசப்பின் உத்தரவின்மேல் சஞ்சயன் கைகள் அவிழ்த்து விடப்பட்டன. கால்களும் சுதந்திரம் பெற்றன. எழுத்தாணியை எடுத்துக்கொண்டு சஞ்சயன் ஓலையில் வரிகளைப் பொறிக்கலானான். சில வரிகளை எழுதிக் குறிப்புக் கோடுகளையும் வரைந்தான். பிறகு யூசப்பை அழைத்து "இப்படி வா யூசப்! இதை நன்றாகக் கவனி. வஞ்சியிலிருந்து வரும் நெடுஞ்சாலையை அடுத்து ஒரு சிறு குறுக்குப் பாதை வருகிறது. அது ஒரு மலைக்காட்டுக்கு அழைத்துச் செல்லும். அந்த மலைக்காட்டில் சேரர் புரவிப்படை இருக்கிறது. அதிலிருந்து வலப்புறம் திரும்பினால் இன்னொரு பாதை போகும். அதன் முடிவில் சேரர் யந்திரப்படை இருக்கிறது. இரண்டிலும் வீரர் அதிகமில்லை. சுமார் ஆயிரம் பேருக்குள் தானிருக்கிறார்கள். ஆனால், எண்ணிக்கையை நினைத்து மகிழ்ந்து விடாதே. அங்கிருக்கும் ஒவ்வொரு வீரனும் பத்து வீரர்களுக்குச் சமம். அங்குள்ள யந்திரங்கள் ஒரு படையை அழிக்கும்" என்று விளக்கினான்: "இந்தக் கோடுகள் பாதைகளைக் குறிக்கின்றன. இந்தப் புள்ளிகள் பாசறைகள் இருக்கும் இடத்தைச் சுட்டிக்காட்டுகின்றன" என்றும் சொன்னான்.

யூசப்பின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. "சஞ்சயா! உன் அறிவைப் பாராட்டுகிறேன். நீ படைகளின் இடத்தைச் சொன்னதால் எந்த ஆபத்தும் கிடையாது. இதை மாற்றி நானே எழுதி க்ளேஸியஸை என் வலையில் சிக்க வைக்கிறேன். பிறகு அவனையும் யவனரையும் இங்கிருந்து ஏற்றுமதி செய்வது ஒரு பிரமாதமல்ல. அவனைக்கொள்ளை

யடிக்க விடுகிறேன் நான். அதில் பங்கு வாங்கிக் கொள்கிறேன்'' என்று கூறினான் மகிழ்ச்சி நிரம்பிய குரலில்.

அடுத்துக் குரல் கொடுத்தான், ''யாரங்கே?'' என்று இரண்டு முரடர்களும் உள்ளே வந்ததும், ''இவருடைய கால்களை மட்டும் கட்டுங்கள். கைகளைக் கட்ட வேண்டாம்'' என்று.

''ஏனிப்படி?'' என்று கேட்டான் சஞ்சயன்.

''கைகள் ரகசியத்தை எழுதி உதவியிருக்கின்றன. கால்கள் என்ன உதவி செய்தன?'' என்று யூசப் வினவி பெரிதாக நகைத்தான்.

''நீ இஷ்டப்பட்டால் கால்களும் உதவி செய்திருக்கும்'' என்றான் சஞ்சயன் கபடமாக.

''எப்படி?'' யூசப் வினவினான்.

''வழியை நானே காட்டியிருப்பேன்.''

''உம், இதுவும் நல்லதுதான். ஆனால் எனக்கு வேண்டாம். அதை க்ளேஸியஸுக்குக் காட்டு!''

''க்ளேஸியஸுக்கா?''

''ஆம்.''

''அவனுக்கா நான் வழிகாட்ட வேண்டும்?''

''அவள்தானே இந்தப் படைகளைத் தாக்கப் போகிறான்.''

''வாணிபம் பேசப் போவதாகச் சொன்னாயே?''

''அதற்கும் உன்னை க்ளேஸியஸிடம் அனுப்புவதற்கும் எந்த சம்பந்தமுமில்லை. உன்னை ஒப்படைப்பதற்கு முன்பாக வியாபாரம் பேசுவேன்'' என்ற யூசப், சஞ்சயன் கால்களைக் கட்டச் செய்தான். பிறகு எழுந்து ''நாளை விடியற்காலையில் நீ க்ளேஸியஸின் கப்பலுக்குப் பயணமாகிறாய்'' என்று சொன்னான்.

''நீ கொடுத்த வாக்குறுதி?''

''நிலை நிறுத்துகிறேன்.''

''எப்படி?''

''உன்னைக் கடற்கரை முகப்பில் அவிழ்த்து சுதந்திரமாக விட்டு விடுவேன். பிறகு தப்புவது உன் சாமர்த்தியம், கண் குத்தி பாம்பு போல் உன் வரவை க்ளேஸியஸ் பார்த்துக் கொண்டிருப்பான்'' என்ற யூசப் பெரிதாக நகைத்தான்.

அதே இரவில் நடுநிசியில் யவனரின் மரக்கலத்தின் நூலேணியில் கடல் வேந்தன் ஏறிக்கொண்டிருந்தான். வாயில் குறுவாளைக் கவ்விக் கொண்டிருந்தான். சிறிது நேரத்துக்கொரு முறை தளத்தை அண்ணாந்து பார்த்து நூலேணியில் ஏறினான். நூலேணியின் உச்சியை அடைந்ததும் இருகைகள் அவன் கைகளுக்குப் பிடி கொடுக்க, ஏறித் தளத்தில் குதித்தான் கடல்வேந்தன்.

□

25. இன்னும் ஒருவன்

யவனர் மரக்கலத்தின் மத்தியில் தெரிந்த ஒரு சிறு விளக்கைத் தவிர வேறு விளக்குகள் ஏதும் ஏற்றப்படாத தால் அந்த மரக்கலத்தின் தளத்தில் இருள் பெரிதும் அடர்ந்து கிடப்பதைக் கவனித்த கடல்வேந்தன் திருப் திக்கு அறிகுறியாகத் தலையை அசைத்துத் தனக்குக் கை கொடுத்த நிலக்கள்ளியை நோக்கி, "நிலக்கள்ளி! நீ இந்த மரக்கலத்தில் தைரியமாக உலாவலாம். மாலுமிகள் எல் லாருமே கரைக்குப் போய்விட்டார்கள். அப்படியே யாராவது நாலைந்துபேர் இருந்தாலும் அவர்களைச் சமாளிப்பது கஷ்டமில்லை" என்று சொன்னான்.

அவன் பக்கத்தில் நின்றிருந்த நிலக்கள்ளி, "மிக விந்தையாயிருக்கிறது. இத்தனை பெரிய மரக்கலத்தை அனாதரவாக விட்டு எல்லா மாலுமிகளுமா கரைக்குச் சென்றிருப்பார்கள்? நம்புவது கஷ்டமாயிருக்கிறதே" என்றாள் மெதுவாக.

"இன்றிரவு கரையிலுள்ள யவனர்சேரியில் யவனர் ரகசியக் கூட்டம் ஒன்று நடக்கிறது. அதற்கு எல்லாரும் போயிருக்கிறார்கள். இந்த மரக்கலம் போர் மரக்கலம் என்பதே மறைக்கப்பட்டு ஏதோ வாணிபத்துக்குப் பொருள் கொணர்ந்திருக்கும் வணிக மரக்கலமாக அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த மரக்கலத்தின் தலைவன் இதை வணிக மரக்கலமென்று நிரூபிக்கப் பல வணிகப் பொருள்களை உன் தந்தைக்கு இன்று பரிசாகக் கொடுத்திருக்கிறான். இந்த மரக்கலம் நான்கு நாள்கள் இங்கிருந்து வியாபாரம் நடத்த உன் தந்தையும் அனுமதித் திருக்கிறார்." என்று கூறிய கடல் வேந்தன் "இன்னும் இரண்டு நாள்களில் முசிறித் துறைமுகத்தில் இன்னும் இரு மரக்கலங்களை எதிர்பார்க்கிறேன்" என்றும் சொன்னான்.

நிலக்கள்ளி தளத்தைச் சுற்றுமுற்றும் நோக்கினாள். தளத்தில் பாய் தளர்த்தப்பட்ட வெறும் பாய்மரங்களும், அத்தியாவசியமான இரண்டு ஈட்டி வீசும் பொறிகளும் தவிர வேறெதுவும் காணாததைக் கண்டு வியந்து, "இந்த மரக்கலத்தில் தாக்கும் சாதனங்கள் ஏதுமில்லையே? இதை வைத்துக்கொண்டு முசிறியை எப்படிப் பிடிக்க முடியும்?" என்று வினவினாள்.

கடல்வேந்தன் அவள் இடையில் கையைச் செலுத்தித் தன்னிடம் இழுத்துக் கொண்டான். "மேல் தளத்தில் தான் சாதனங்கள் இல்லை. நடுத்தளத்தில் இருக்கின்றன. காட்டுகிறேன்" என்று சொன்ன கடல்வேந்தன், "முதலில் இந்தக் கப்பல் தலைவன் அறையை ஆராய்வோம்" என்று கூறி அணைத்த வண்ணமே அவளை அழைத்துச் சென்றான் கப்பலின் நடு அறையை நோக்கி.

நிலக்கள்ளியும் ஓசைப்படாமல் காலை அடிமேலடி வைத்துப் பூனை போல் நடந்தாள். கடல்வேந்தன் அவளை விட மெதுவாக நடக்கத் தொடங்கி, கப்பலின் ஓரமாகவே சென்று விளக்கின் வெளிச்சம் விழுந்த ஓரிரு இடங்களில் அவளையும் உட்கார வைத்து, தானும் உட்கார்ந்து இருட்டிருந்த இடங்களில் எழுந்து நடந்தான். அந்த மரக்கலத்தின் நடுவிலிருந்த அறையில் வெளிச்சம் தெரிந்தது. அதன் வாயிலில் இரண்டு மாலுமிகள் உட்கார்ந்து ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் சொற்கள் குளறி வந்ததால் இருவரும் குடித்திருக்கிறார் களென்பதைப் புரிந்துகொண்ட கடல்வேந்தன் "நிலக் கள்ளி! இவர்களே குடித்திருப்பதால் எந்தவித அபாயத் தையோ, எதிர்ப்பையோ அவர்கள் எதிர்பார்க்கவில்லை யென்பது தெரிகிறது. நீ இப்படியே இந்த இருளில் மறைந்திரு. நான் அடித்தளம் வரை போய் வருகிறேன்" என்று கூறிவிட்டு அவள் தடை செய்யுமுன்பு இருளில் மறைந்து விட்டான்.

திடுக்கிடும் உள்ளத்துடன் தளத்தின் மூலையில் நின்றிருந்த நிலக்கள்ளி தனக்கேற்பட்ட துணிவைப்பற்றி வியந்தாள். "எதற்கும் அஞ்சும் எனக்கு இத்தனை துணிவு எங்கிருந்து வந்தது?" என்று தன்னைத்தானே வினவிக் கொண்டாள். "என்ன செய்வது? கொள்ளைக்காரன் மனைவியின் மாங்கல்யத்துக்கு என்றும் ஆபத்துதான். பிசாசுக்கு வாழ்க்கைப்பட்டால் புளியமரத்தில் ஏறு என்று ஒரு பழமொழி இருக்கிறது. நான் புளியமரத்தில் ஏறவில்லை. எதிரி மரக்கலத்தில் ஏறியிருக்கிறேன்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள். தனக்கு ஏற்பட்ட இத்தனை நெஞ்சுரத்திற்கும் கடல்வேந்தன் தான் காரணம் என்றும் எண்ணமிட்டதாலும், சற்றுமுன்பு அவன் தனது இடையை இழுத்து அணைத்துக் கொண்டதாலும், இன்ப ரேகை ஒன்றும் அவள் முகத்தில் பரவலாயிற்று. யவனர் மரக்கலத்தின் தளத்தில் பேராபத்தில் நின்றுகொண்டிருந்த அந்தச் சமயத்திலும் கடல்வேந்தனின் துணிகரச் செயல்களில் தான் பங்கு கொண்ட சமயங்களையும், அந்தச் சமயங்களில் ஆபத்துடன் கலந்த இன்ப நிகழ்ச்சிகளையும் எண்ணி மகிழ்ந்தாள். சுத்த பயங்கொள்ளியாயிருந்த தன்னை, எத்தனை வீராங்கனையாக ஆக்கி விட்டார் கடல் வேந்தன் என்று எண்ணமிட்டதால் சிறிது பெரு மிதமும் அடைந்தாள்.

அவள் எண்ணங்கள் இப்படிச் சுழன்று கொண்டு இருந்த சமயத்தில், தளத்தின் ஒரு பக்கத்திலிருந்து நுழைவாயில் மூலமாகக் கடல்வேந்தன் ஏறி, அவளிருந்த இடம் வந்து, "நிலக்கள்ளி! இனி யாரும் நம்மைத் தடை செய்ய மாட்டார்கள். வா, தலைவன் அறைக்குச் செல்வோம்" என்று அவளைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு தளத்தின் மத்தியிலிருந்த அறையை நோக்கி நடந்தான். அந்த அறைக்கு வந்ததும், "நிலக்கள்ளி! நீ முன்னால் சென்று குடித்திருக்கும் இரு காவலர்களிடம்

பேச்சுக்கொடு. தலைவனைப் பார்க்க வந்திருப்பதாகச் சொல். அவர்கள் ஏதாவது கேட்டால், பதில் சொல்லாமல் திரும்பி, இந்த இடத்தை நோக்கி நடந்து வா" என்று சொன்னான்.

கடல்வேந்தன் எதைச் சொன்னாலும் காரணம் கேட்டறியாத நிலக்கள்ளி, இரு காவலரையும் நோக்கிச் சென்றாள். அவர்களைத் தாண்டி, அவள் அறையில் நுழைவதாகப் பாசாங்கு செய்ததும், "நில்! யார் நீ?" என்று கேட்டுக் கொண்டு எழுந்தான் ஒரு காவலன். அப்படிக் கேட்டபோதும் குடிவெறியில் தள்ளாடினான்.

அதற்குள் எழுந்த இன்னொரு காவலன், அறை வாயிற்படியைப் பிடித்து நிதானித்துக் கொண்டு, நிலக்கள்ளியை உற்று நோக்கி, "டேய் இது ஒரு பெண்" என்று உளறினான் தனது சக காவலனை நோக்கி.

மெல்ல நகைத்தாள் நிலக்கள்ளி. "இதைக் கண்டு பிடிக்க இத்தனை நாழியாயிற்றா? அடுத்து நான் யாரென்று கேட்பாய்?" என்று நகைப்பின் ஊடே கேட்டாள்.

முதல் காவலன் அவளை அணுகி உற்றுப் பார்த்து, "ஆம். அதையும் சொல். நீ யாரென்று தெரியவில்லை" என்றான்.

"வழியை விடு. நான் உன் தலைவன் அறைக்குள் போகிறேன், அவர் வந்ததும் விசாரித்துக் கொள்" என்று கூறி நாணப் புன்னகையும் செய்தாள்.

முதல் குடியன் சற்றுத் தள்ளாடி, "அப்படியா சமாசாரம்?" என்று குடிவெறியிலும் இடக்காகக் கேட்டான்.

"அதைப் பற்றி நீ கேட்க வேண்டிய அவசியமில்லை" என்று மிரட்டினாள் நிலக்கள்ளி.

"வேண்டியதில்லை, வேண்டியதில்லை" என்று உளறினான் இரண்டாவது குடியன்.

"உன் பெயரை மாத்திரம் சொல்லிவிடு. நீ போகலாம்" என்றான் முதல் காவலன்.

நிலக்கள்ளி சிறிது சிந்திப்பது போல் பாவனை செய்து "பெயரைச் சொன்னால் ரகசியமாக வைத்துக் கொள்வாயா?" என்று வினவினாள்.

"என்னிடமிருக்கும் ரகசியம் வெளியே போகாது. இங்கேயே இருக்கும்" என்று தனது மார்பைத் தட்டிக் காட்டினான் காவலன்.

"அப்படியானால் இப்படி தனியாக வா" என்று அவனை அழைத்துத் திரும்பி நடந்தாள் கடல்வேந்தனிருந்த மறைவை நோக்கி.

"அவன் மட்டும் என்ன உசத்தி? நானும் வருவேன்" என்று இரண்டாவது காவலனும் தொடர்ந்தான்.

இருவரையும் கப்பலில் இருண்ட பகுதிக்கு அழைத்து வந்ததும் தனக்கு வெகு அருகில் அழைத்து நிலக்கள்ளி "குனியுங்கள், உற்றுக் கேளுங்கள். கேட்பதை ரகசியமாக வைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறி அவர்களைக் குனிய வைத்தாள். "நான் யாரென்று தெரியாது உங்களுக்கு? நான்தான் மந்திரிமகள்" என்றாள்.

குனிந்த முதல் காவலன், "மந்திரி மகளா! அவளுக்கு இந்த இரவில் இங்கென்ன வேலை?" என்று சீற முயன்று தள்ளாடினான்.

"இது வெறும் கதையடா, இவள் வந்த காரியம் வேறு" என்று கூறி நிலக்கள்ளி மீது கையொன்றை வைக்க முயன்றான் இரண்டாவது காவலன்.

நீண்ட கை அவளை அணுகவில்லை. பொட்டில் இறங்கிய குறுவாளின் பிடி அவனைக் கீழே சரியவிட்டது. இன்னொருவன் தனது சகாவுக்கு நேர்ந்த கதியைப் பார்க்கத் திரும்பியதும் அவன் தலையிலும் பேரிடி இறங்கியது போன்ற பிரமையை அடைந்தான். அடுத்து அவனும் சாய்ந்தான் தளத்தில்.

"இனி இவர்களைப் பற்றிக் கவலைவேண்டாம், வா." என்று நிலக்கள்ளியை அழைத்துக் கொண்டு கப்பல் தலைவன் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டான். "நிலக்கள்ளி! இந்த அறையில் இக்கப்பல் வந்திருக்கும் காரணத்தைத் தேடப் போகிறேன். நீ கப்பல் தலைவன் ஆசனத்தில் உட்கார்ந்துகொள். கையில் உன் குறுவாளை எடுத்துக்கொள். திடும் பிரவேசமாக யார் நுழைந்தாலும் அவர்களைக் கொன்று விடு" என்று கூறி விட்டு ஒரு நிமிடம் வெளியே சென்று திரும்பினான்.

அவன் வெளியே சென்றதும் கப்பல் தலைவன் ஆசனத்தில் அமர்ந்து கொண்ட நிலக்கள்ளி கையில் தனது குறுவாளையும் ஏந்திக்கொண்டாள். வெளியே ஏதோ மடக்கென்று சத்தம் ஒன்று கேட்கவே அது என்னவாயிருக்கும் என்று அவள் எண்ணமிட்டபோது, தாழ்ப்பாளும் பூட்டுமாக உள்ளே நுழைந்த கடல்வேந்தன் தாழ்ப்பாளையும், பூட்டையும் அறை மூலையில் வைத்தான்.

"தாழ்ப்பாளை உடைத்துவிட்டீர்களா?" என்று வினவினாள் நிலக்கள்ளி.

"ஆம், நாம் இந்த அறையைச் சோதித்துக் கொண்டிருக்கையில் யாரும் நம்மை வைந்து வெளியில் பூட்டி விட முடியாது" என்ற கடல்வேந்தன், அறைக் கதவைச் சாத்தி விட்டு, அந்த அறைக்கு அப்பாலிருந்த உள்ளறையை நோக்கி நடந்தான்.

நீண்ட நேரம் அவன் வெளிவராததால் கவலை அடைந்த நிலக்கள்ளி தனது ஆசனத்தை விட்டு எழுந்து உள்ளறையை நோக்கி நடந்து வெளியிலிருந்த வண்ணமே உள்ளே நோக்கினாள்.

அறை முழுவதையும் சின்னாபின்னப் படுத்தியிருந்தான் கடல்வேந்தன். அறையிலிருந்த ஒரு மரப்பெட்டி திறந்திருந்தது. அதிலிருந்த ஆடைகள் வெளியே போடப்பட்டிருந்தன. மற்ற உல்லாசப் பொருள்கள் அனைத்தையும் எடுத்து வெளியே போட்டிருந்த கடல்வேந்தன் ஒரு சீலையை மட்டும் மிகுந்த அக்கறையுடன் மடித்துக்கொண்டிருந்தான். அவள் உள்ளே தலை நீட்டியதும், "வந்த வேலை முடிந்துவிட்டது. வா போவோம்" என்று கூறி கிளம்பச் சித்தமாயிருந்த சமயத்தில் முன் அறைக்கு வெளியே யாரோ திடமாக நடந்து வரும் காலடிச் சத்தம் கேட்டதால் உள்ளறைக் கதவை லேசாகச் சாத்தினான் கடல்வேந்தன்.

நடந்து வந்தவன் உள்ளே நுழைந்து விளக்கு வெளிச்சத்தில் நின்றான். உள்ளறையிலிருந்து அவனைப் பார்த்த கடல்வேந்தன் வியப்பு எல்லை மீறியது. "இவனும் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறானா?" என்று வியப்புடன் உள்ளூர வினவிக்கொண்ட கடல்வேந்தன், உள்ளறையில் அசைவற்று நின்றான்.

வந்த மனிதனும் அறையைச் சுற்றுமுற்றும் நோக்கி விட்டு உள்ளறையை நோக்கி வந்தான்.

□

26. நற்கிள்ளியின் இசை

அந்த நடுநிசியில் யவனர் மரக்கலத் தலைவன் அறையில் கடல்வேந்தன் யாரை எதிர்பார்த்திருந்தாலும் கண்டிப்பாக அராபியனான யூசப்பை எதிர்பார்க்காததால் "இவனும் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறானா?" என்று உள்ளூர வினவிக்கொண்டு பெரிதும் வியப்பு அடைந்த சமயத்தில், யூசப் உள்ளறையை நோக்கி வரவே சட்டென்று நிலக்கள்ளியையும் இழுத்துக்கொண்டு உள்ளறைக் கதவில் பின்புறம் மறைந்து கொண்டான். உள்ளறையில் யாரும் இல்லையென்ற நினைப்பில் அதை நோக்கி வந்து கதவையும் பாதியளவு திறந்து எட்டிப்பார்த்த யூசப், அங்கிருந்த களேபரத்தைப் பார்த்து, "எனக்கு முன்பு வேறு யாரோ ஒருவனும் இங்கு வந்திருக்கிறான்" என்று சற்று இரைந்தே சொல்லி உள்ளேயிருந்த பெரிய மரப் பெட்டியை வெளியிலிருந்தே நோக்கினான். மரப்பெட்டி வாயைப் பிளந்து கொண்டு கிடப்பதையும், கிட்டத்தட்ட அதிலிருந்த பொருள்கள் எல்லாமே வெளியே சிதறுண்டு கிடப்பதையும் நோக்கி, "நான் தேடவந்ததைத்தான் முன் வந்தவனும் தேடியிருக்கிறான்" என்று நினைத்த வண்ணம் உள்ளே காலடி எடுத்து வைத்துப் பெட்டியிடம் சென்றான்.

அறைக்கதவு ஒருபாதி திறந்திருந்தாலும், வெளியறை வெளிச்சம் அந்தப்பாதியில் விழுந்திருந்தாலும் திறந்த கதவுக்குப் பின்னாலிருந்த மறுபாதியில் இருட்டே அடித்துக் கிடந்ததன் விளைவாக நிலக்கள்ளியை அணைத்த வண்ணம் கடல்வேந்தன் மூச்சுப் பேச்சின்றி நின்றிருந்ததால் அவர்களிருப்பதை அறவே அறியாத யூசப் பெட்டிக்குள் குனிந்து நோக்கினான். அதிலிருந்து இரண்டொரு துணிகளையும், கிரேக்க நாட்டுக் குறுவாள்களையும் எடுத்துக் கீழேபோட்ட

யூசப் மீண்டும் பெட்டிக்குள் தலையைவிட்டு ஆராய்ந்த போது அந்த அறைக்கதவு மெதுவாக சாத்தப்படுவதை உணர்ந்தான். அதனால் "யாரது?" என்று கேட்டு இடையில் இருந்த குறுவாளை எடுக்கப் போனவன், தனது கை மிகுந்த முரட்டுக் கையொன்றால் பிடிக்கப்பட்டதையும் உணர்ந்து, இருமுறை முனகினான். மூன்றாம் முறை முனகவில்லை, கடல்வேந்தனின் குறுவாள் அவன் தலையில் இறங்கி விட்டதன் விளைவாக.

அடுத்து, கடல்வேந்தன் துரிதமாகச் செயல்பட்டானான். பெட்டிக்குள் தலை தொங்கிக் கிடந்த யூசப்பை பெட்டிக்குள்ளேயே திணித்து வெளியேயிருந்த துணிகளையும் அவன் மீது திணித்தான். பிறகு நிலக்கள்ளியை நோக்கி, "வா போகலாம்" என்று அழைக்க, நிலக்கள்ளி கேட்டாள், "இவனைப் பெட்டிக்குள் வைத்துப்பூட்டி விட்டாலென்ன?" என்று.

"அப்படிச் செய்தால் இவன் செத்து விடுவான். செத்தவன் பின்னால் நமக்குச் சாட்சி சொல்ல மாட்டான். வேறு செய்திகளையும் சொல்ல மாட்டான்" என்ற கடல் வேந்தன், "வா போகலாம்" என்று அவளைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வேகமாகத் தளத்தின் குறுக்கே நடந்து ஆகாயத்தைக் கவனித்தான். "நிலக்கள்ளி! நான் எதிர்பார்த்ததைவிட அதிக நேரமாகி விட்டது. க்ளேஸியஸ் வருவதற்குள் போய்விடுவோம்" என்று சொல்லிக்கொண்டு மரக்கலத்தின் பக்கப்பலகைக்கு வந்து நூலேணியில் முதலில் நிலக்கள்ளியை இறக்கினான். அவள் சமுத்திர ஜலமட்டத்தை அடைந்ததும் எட்ட ஒரு படகு துரிதமாக வருவதைக் கண்டு தானும் துரிதமாக இறங்கிக் கீழிருந்த படகில் நிலக்கள்ளியுடன் ஏற, படகை நற்கிள்ளி வேகமாகச் செலுத்தினான், சிறிது தூரத்தில் நின்றிருந்த கடல்வேந்தன் மரக்கலத்தை நோக்கி.

கடல்வேந்தன் தனது மரக்கலத்தின் அருகில் வந்ததும் அதில் நிலக்கள்ளியையும் ஏறச்சொல்லித் தானும் ஏறினான் அவளுடன். நற்கிள்ளியை நோக்கி, "நற்கிள்ளி! அதோ வரும் படகில் க்ளேஸியஸ் வருகிறான். அவனுடன் எத்தனை பேர் வருகிறார்கள்? யார் யார் வருகிறார்கள்? என்பதைப் புலனறிந்து வா" என்று கூறி, மரக்கலத்தில் ஏறிவிட்டான். நற்கிள்ளியும் உடனடியாகத் தனது படகைத் திருப்பிக் கொண்டு சுள்ளியாற்று முகத்துவாரத்தை நோக்கிச் செலுத்தினான். முகத்துவாரத்தை அடைந்ததும் இடது கரையில் படகைத் தரையில் இழுத்து முனையில் பிணைத்து விட்டு, சிறு விளக்கொன்றையும் ஏற்றிக்கொண்டு படகுக்குள் அரைவாசி படுத்த வண்ணம் ஓலைச்சுவடி ஒன்றை எடுத்து மெதுவாகப் படிக்கவும் பாடவும் முற்பட்டான்.

அப்போது மூன்றாம் ஜாமம் தொடங்கிவிட்டதாலும், அதுவரை மெதுவாக எழுந்த அலைகள் அதிகமாக எழுந்து இரைந்ததாலும் அவற்றின் ஓசையையே சுருதியாக வைத்துக்கொண்டு பூபாளராகத்தில் மெல்லப் பாட்டை இசைத்தான் நற்கிள்ளி. "பாட்டுக்கு என் கை ஏட்டைப் பார்; கீதத்துக்கு என் குரல் நாதம் பார்" என்று பாடினான். அத்துடன் நிற்கவில்லை அவன். "கடல்நிலைக்கு அலையைப் பார்; கடவுளை அறிய அதன் பெரு ஓசையைப் பார்" என்று கவிதையும் அவனே வடித்துச் சற்று இரைந்தே படித்தான் சுவடியை. இடையிடையே பாட்டை நிறுத்தி, எட்ட யவன மரக்கலத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்த படகையும் பார்த்தான்.

படகு வேகமாக விரைந்தது. அது யவன மரக்கலத்தை அணுகியதும் அதிலிருந்த நூலேணியை ஆட்டிய ஒருவன், மேற்புறம் நோக்கி ஏதோ குரல் கொடுத்தான். பதில் ஏதும் இல்லாது போகவே விரைந்து ஏறினான் நூலேணியில். சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு பந்தத்தைக் கொளுத்திக்கொண்டு வந்த அந்த யவனன் முகம்

அத்தனை தூரத்திலும் பந்த ஒளியில் நன்றாகவே தெரிந்தது. அவனை முதலில் கணக்கெடுத்த நற்கிள்ளி மற்றும் அறுவர் அந்தப் படகிலிருந்து நூலேணியில் தொடர்ந்து ஏறியதையும், கடைசியாக க்ளேஸியஸ் ஏறியதையும் கவனித்தான். க்ளேஸியஸை எதிர்பார்த்த நற்கிள்ளி அத்துடன் ஏழு பேர் என்று முடிவு கட்டி ஓலைச் சுவடிமீது கண்களை மீண்டும் நாட்ட முயன்ற சமயத்தில் மற்றொரு படகும் அந்த மரக்கலத்தை நோக்கி விரைந்தது. அந்தப் படகு, நூலேணியை அணுகியதும் அதிலிருந்து நல்ல உயரமும் பருமனும் உள்ள ஒரு யவனன் எழுந்ததையும், அவள் நூலேணியில் ஏறுவதற்கு மற்றுமிரு யவனர்கள் கைலாகு கொடுத்ததையும் கவனித்த நற்கிள்ளி; 'இவன் யாரோ பெரிய மனிதனாயிருக்க வேண்டும்' என்று ஊகித்தான். அவன் நூலேணியில் ஏறித் தளத்தில் ஏறப் போன சமயத்தில் அவன் முகத்துக்குக் குறுக்கே வெட்டுக் காயமொன்று இருந்ததையும், அந்த வெட்டுக்காயம் பந்தத்தின் வெளிச்சத்தில் பயங்கரமாகத் தெரிந்ததையும் கவனித்தான். அவனை எங்கும் பார்த்ததாக நற்கிள்ளிக்கு நினைவில்லாததால் அவன் ஒரு வேளை யவன மரக்கலத்தின் தலைவனாயிருக்கலாம் என்ற முடிவுக்கு வந்தான். பிறகு தனது படகின் விளக்கை அணைத்துவிட்டு ஓலைச் சுவடியையும் கட்டிவிட்டுப் படகில் கால்களை நீட்டிப் படுத்தான். ஆனால் உறக்கம் வரவில்லை நற்கிள்ளிக்கு. ஆகாயத்தை நோக்கி விண்மீன்களைக் கணக்கிட்ட வண்ணம் படுத்துக் கிடந்தான். சுக்கிரனும் மெல்ல மெல்ல உதயமானான்: குரு மறைந்தான்.

விண்மீன்களின் இந்த விசித்திரத்தைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்த சமயத்தில் தூரத்தில் யாரோ மூவர் வருவதைக் கண்ட நற்கிள்ளி மூச்சு பேச்சு காட்டாமல் படகில் கிடந்தான்.

வந்த மூவரில் இருவர் அராபிய அடிமைகள். அவர்களை இழுத்து வந்தவன் யாரென்று இருட்டில் புரியவில்லை

யாகையால் உற்றுக் கவனித்த வண்ணம் இருந்தான் நற்கிள்ளி. இழுத்து வரப்பட்டவன் மணலில் தள்ளப்பட்டான் வேகமாக. பிறர் யவனர் கப்பலை நோக்கி விளக்கொன்றை ஆட்டிவிட்டுச் சென்றார்கள். அந்த விளக்கின் ஒளிக்குப் பதில் ஒளி தெரிந்தது. யவனர் மரக்கலத்திலிருந்து இழுத்துவந்து தள்ளப்பட்டவனை யாரோ ஒருவர் சுட்டிக்காட்டி ஏதோ சொல்ல, யவன மரக்கலத்திலிருந்து இருவர் மீண்டும் நூலேணியில் இறங்கினார்கள். படகு ஒன்றை எடுத்துக்கொண்டு கரையை நோக்கி வரவும் முற்பட்டார்கள்.

இழுத்து வந்து வீழ்த்தப்பட்டவன் விளக்கு சமிக்ஞைகளையும், படகு வர முற்பட்டதையும் கவனித்திருக்க வேண்டும். எழுந்து வேகமாக ஓடத்தொடங்கினான். ஓடத் தொடங்கியவன் நேராக நற்கிள்ளியின் படகை நோக்கி ஓடிவந்து படகுக்கு அடியில் பதுங்கினான். படகுக்கு அருகில் வந்ததும், அவன் யாரென்பதைப் புரிந்து கொண்ட நற்கிள்ளி, "சீக்கிரம் எழுந்து படகுக்குள் படுத்துவிடு" என்று துரிதமாகக் கூறியதன்றி ஒரு கையைக் கொடுத்து, இவனை இழுத்துத் தனக்கருகில் படகுக்குள் தள்ளிக்கொண்டான். பிறகு ஒரு பெரிய சீலையால் அவனைப் போர்த்தவும் செய்தான். மீண்டும் தனது விளக்கை ஏற்றி ஏடுகளைப் புரட்டவும், பாடவும் தொடங்கினான்.

யவனர் மரக்கலத்திலிருந்து வந்த இருவர் கரையை அடைந்ததும் நாற்புறமும் நோக்கினார்கள். "இங்கு யாரையும் காணோம்" என்றான் ஒருவன். "அப்படியானால் யூசப் பொய் சொல்லியிருக்கிறான்" என்றான் இன்னொருவன்.

"விளக்கு அடையாளம் காட்டினார்களே" என்று வினவினான் முதல்வன்.

"நம்மை மோசம் செய்வதற்காக இருக்கும்" என்றான் இன்னொருவன்.

"இதற்கு நமது தலைவர் யூசப்பை லேசில் விடமாட்டார்" என்றான் முதல்வன்.

"மரக்கலத்தில் கட்டித் தோலை உரித்துவிடுவார்" என்றான் இன்னொருவன்.

அந்தச் சமயத்தில் நற்கிள்ளியின் படகைப் பார்த்த அந்த இருவரும், "எதற்கும் அதோ அந்தப் படகோட்டியைக் கேட்போம்" என்று படகை நோக்கி வந்தார்கள்.

அவர்கள் வருவதைப் பார்த்த நற்கிள்ளி மெதுவாகக் காதல் பாட்டு ஒன்றை இசைத்தான். வந்த இருவரும் அவன் பாடுவதைக் கேட்டு எரிச்சல் கொள்ள ஒருவன் கேட்டான், "இப்பொழுது எதற்காகப் பாடுகிறாய்?" என்று.

"நீ யார் அதைக் கேட்க?" என்றான் நற்கிள்ளி.

"பார்த்தால் தெரியவில்லையா? நாங்கள் யவனர்" என்றான் ஒரு யவனன்.

"உன் மாதிரி யவனர் இங்கு பல பேர் இருக்கிறார்கள்" என்று அசட்டையாகக் கூறிவிட்டு, கீழே சீலைக்கடியில் படுத்திருந்தவனைச் சுட்டிக்காட்டி, "என் மனைவி எழுந்து விடுவாள், கூச்சலிடாதே. மெதுவாகப் பேசு" என்றான்.

"உன் மனைவிக்கு இங்கு என்ன வேலை?" என்று ஒரு யவனன் கேட்டான்.

"என் மனைவிக்கு என் படகில் என்ன வேலையா? வேறு எங்கு இருக்கும் வேலை அவளுக்கு?" என்ற நற்கிள்ளி "யவனா! மரியாதையாகப் போய்விடு. என் பாட்டுக்குக் குறுக்கே வராதே" என்று கூறிவிட்டு, மீண்டும் பாடத் தொடங்கி படகிலிருந்தவன் மீது ஒரு கையையும் போட்டு அணைத்தான்.

யவனர் இருவரும் சிறிது தயங்கினர்.... "ஏ, படகோட்டி! இங்கு யாராவது வந்ததைப் பார்த்தாயா?" என்று ஒருவன் கேட்டான்.

"யாரையும் நான்பார்க்கவில்லை. என் மனைவி அருகில் இருக்கும்போது நான் வேறு எந்தப் பெண்ணையும் பார்ப்பதில்லை" என்றான் நற்கிள்ளி.

"வந்தது பெண்ணல்ல" ஒரு யவனன் சொன்னான்.

"பின்?"

"ஆண்?"

"ஆணை எதற்காக நான் பார்க்கவேண்டும்?"

அதற்கு மேல் அவனை ஏதும் கேட்காத முதல் யவனன், "இவனைக் கேட்பதில் ஏதும் பயனில்லை. வா தேடுவோம். அவன் எங்கும் மறைந்திருக்க முடியாது" என்று கூற இருவரும் நடந்தனர் மீண்டும், எதிரே தெரிந்த குடியிருப்புகளை நோக்கி. நற்கிள்ளி மீண்டும் பாட்டைத் தொடங்கினான். அவன் இசைக்கு உதயகாலப் பட்சிகள் சுருதி கூட்டின.

□

27. கடலைப் பார்

உதயகாலப் பட்சிகள் கூவி, உதயத்துக்கு முன்பாகக் கருக்கல் ஏற்பட்டதும், படகில் படுத்துக் கிடந்தவன் மீதிருந்த சிலையை விலக்கி, "சேர தூதரே! படுத்தது போதும் எழுந்திரும்" என்று நற்கிள்ளி சொன்னதும், படகில் முடங்கிப் படுத்திருந்த சஞ்சயன் முக்கி முனகிக் கொண்டு எழுந்திருந்து உட்கார்ந்தான், சில விநாடிகள். பிறகு படகை விட்டு இறங்கி மணலில் நின்று கைகால்களை உதைத்துப் பிடிப்புகளை உதற முயன்றான். இப்படி இருமுறை அவன் கால்களை உதறி, கைகளையும் உதறியதைப் பார்த்த நற்கிள்ளி, "தூதரே! நீர் பரதநாட்டியம் கற்றுக்கொள்ள வேண்டியவர். அந்தத் தொழிலுக்குப் போயிருந்தால் இப்பொழுதிருப்பதை விட நல்ல வெற்றிகரமான வாழ்க்கை கிடைத்திருக்கும்" என்று கூறி ஏளனப் புன்முறுவல் செய்தான்.

நற்கிள்ளியின் நகைச்சுவையை ரசிக்க முடியாத சஞ்சயன், "நீ அராபியரிடம் அகப்பட்டு உன் தலைமீது பெரிய வாளும் கட்டப்பட்டிருந்தால் நீ இப்படிப் பேச மாட்டாய்" என்று கூறினான். குரலில் எரிச்சலையும் காட்டினான்.

"நீர் எதற்காக அராபியரிடம் மாட்டிக் கொண்டீர்?" என்று நற்கிள்ளி கேட்டான்.

"ஆசையாயிருந்தது, மாட்டிக் கொண்டேன்" என்று எரிந்து விழுந்தான் சஞ்சயன். அத்துடன் கேட்டான்: "யவனர்களிடம் என்னை உன் மனைவியென்று ஏன் பொய் சொன்னாய்? எதற்காக என்னை அணைத்தாய்?" என்று.

"உம்மை யாரென்று சொல்லியிருந்தால் இப்பொழுது உம்மிடம் பேசவும், உமது அறிவற்ற கேள்விகளுக்குப் பதில் சொல்லவும் அவசியமிருந்திருக்காது. கட்டியணைத்தது ஆசையால் என்று நினைக்கிறீரா? என் தலையெழுத்து" என்று நொந்து கொண்டான் நற்கிள்ளி.

சஞ்சயனுக்குக் கோபம் அதிகமாயிற்று. "எனக்கு முட்டாள் பட்டம் கட்ட நீர் யார்? என்னை மனைவி என்று அழைக்கவும் உமக்கு யார் அதிகாரம் கொடுத்தது?" என்று கேட்ட சஞ்சயன், "அரச தூதனை அவமதித்தால் சேர நாட்டில் என்ன தண்டனை தெரியுமா?" என்று வினவினான். "இப்பொழுது நான் முசிறிக்குள் போய் அமைச்சரிடம் சொன்னால் சிறிது நேரத்தில் நீர் சிறைப்படுவீர்" என்றும் சொன்னான் சஞ்சயன்.

"முடிந்தால் பாரும்" என்ற நற்கிள்ளி நகைத்தான்.

"முடியாமலென்ன?"

"அதோ இன்னும் யவனர்கள் நடமாடுகிறார்கள். உம்மைக் கண்டால் விடமாட்டார்கள். விட்டால்தான் நீர் முசிறிக்குள் போகலாம். விடாவிட்டால் நீர் போகக்கூடிய இடம் வேறு."

"எந்த இடம்?"

"புண்ணியம் செய்திருந்தால் சொர்க்கம். பாவம் செய்திருந்தால் நரகம். நீர் ஆயுள் பூராவும் சொல்லியிருக்கும் பொய்களுக்கு, எமன், உமது நாக்கில் காய்ச்சின இரும்பை வைத்துச் சுடுவான்."

இதைக் கேட்ட சஞ்சயனுக்கு உண்மையாகவே பீதி வரவே, "நற்கிள்ளி!" என்று பரிதாபத்துடன் அழைத்தான்.

"என்ன தூதரே?" என்று கேட்டான் நற்கிள்ளி. இகழ்ச்சி நகை உதடுகளில் விரிய.

"நான் பொய் சொன்னதெல்லாம் கடமைக்காக, நாட்டு நன்மையை முன்னிட்டு, கடமைக்காகப் பொய் சொல்லலாம்" என்று தர்மத்தைச் சொன்னான் சஞ்சயன்.

"இப்பொழுது எந்த நாட்டு நன்மைக்காக அராபியரிடம் போய் வந்தீர்?" என்று நற்கிள்ளி கேட்டான்.

"நானாகப் போகவில்லை. அவர்களாகத்தான் பிடித்துக் கொண்டு போனார்கள்."

"அப்படியா?"

"ஆம்!"

"பிடித்து என்ன செய்தார்கள்?"

"அதை நான் கடல்வேந்தனிடந்தான் சொல்ல முடியும்."

"ஏன், மந்திரியிடம் சொன்னால் என்ன?"

"பயனில்லை. கடல்வேந்தனை நான் உடனடியாகப் பார்க்க வேண்டும்" என்றான் சேரதூதன்.

"இதை ஏன் முன்பே சொல்லவில்லை?" என்ற நற்கிள்ளி, "சரி, பழையபடி படகில், படுத்துக் கொள்ளும்" என்று கூறினான்.

"எதற்குப் படுக்கவேண்டும்?" என்று தூதன் கேட்டான்.

"படகிலிருப்பது நீர் என்று தெரிந்தால் எந்த அராபியப் படகும், யவனர் படகும் என்னை மடக்கும், அல்லது படகை நோக்கிக் குறுவாள் வீசப்படும். அது

உமது மேல் பாய்ந்தால் எனக்கு ஆட்சேபணையில்லை. என் மேல் பாய்வதை நான் விரும்பவில்லை" என்ற நற்கிள்ளி, "சரி, சரி படும்" என்று துரிதப்படுத்த சஞ்சயன் பழையபடி ஏறிப் படுத்தான்.

நற்கிள்ளி படகைத் தளையிலிருந்து அவிழ்த்துக் கடலுக்குள் இழுத்துவிட்டுத் தானும் ஏறித் துடுப்புகளைத் துழாவலானான். அன்று அலை சற்று மந்தமாகவே இருந்ததால் அதிக சிரமம் இல்லாமலே படகைச் செலுத்திய நற்கிள்ளி, சுமார் இரண்டு நாழிகைகளுக்குள் கடல்வேந்தன் மரக்கலத்துக்கு வந்து சேர்ந்தான். அவன் வருவதை முன்னதாகவே பார்த்துவிட்ட கடல்வேந்தன் மாலுமிகள் நூலேணியை அவிழ்த்துவிட, நற்கிள்ளி ஏறித் தளத்தில் குதித்தான். "படகிலிருக்கும் இன்னொருவரையும் ஏற்றி விடுங்கள்" என்று மாலுமியொருவனுக்கு உத்தரவிட, சஞ்சயனும் ஏறிவர மாலுமி அனுமதித்தான்.

மரக்கலத்தில் ஏறியதும் சஞ்சயன் தாமதிக்காமல் கடல்வேந்தன் அறைக்குச் சென்று கதவைத் தட்டினான். கதவைத் திறந்த நிலக்கள்ளி, "என்ன வேண்டும்?" என்று வினவினாள்.

சஞ்சயன் முகத்தில் வெறுப்பின் சாயை படர்ந்தது. "கடல்வேந்தனுடன் இரவு முழுவதும் இவள் தனித்து இருந்திருக்க வேண்டும்" என்ற நினைப்பு அவனுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியதால், "உங்கள் துணைவரைப் பார்க்க வேண்டும்" என்றான்.

நிலக்கள்ளி சினத்துக்குப் பதில் வெறுப்பைக் காட்டினாள். "யார் என் துணைவர்?" என்றும் வினவினாள்.

"கடல்வேந்தன்" என்றான் சஞ்சயன்.

"அவரை நாங்கள் துணைவர் என்று அழைப்பதில்லை. தலைவர் என்று அழைக்கிறோம்" என்றாள் நிலக்கள்ளி.

"தலைவர் என்று அழைக்க வேண்டுமா?"

"ஆம்!"

"அழைக்கா விட்டால்?"

"தெரிந்துகொள்ள வேண்டுமா?"

"ஆம்!"

நிலக்கள்ளி எட்ட நின்ற நற்கிள்ளியை நோக்கி "இவர் தலைவரை 'தலைவர்' என்று அழைக்க மாட்டாராம்' என்று கூறினாள்.

அடுத்த நிமிடம், இரண்டு மாலுமிகள் சஞ்சயனை நோக்கி வந்து அவனைத் தரதரவென்று இழுத்துச் கொண்டு போனார்கள். "பாய்மரத்தில் கட்டிவையுங்கள்" என்று நிலக்கள்ளி உத்தரவிட்டு மீண்டும் உள்ளே சென்று விட்டாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அந்த அறையிலிருந்து வெளியேவந்த கடல்வேந்தன் நேராகப் பாய்மரத்தண்டி விடம் சென்று "சஞ்சயா! நீ என்ன செய்தாய்? உன்னை ஏன் கட்டியிருக்கிறார்கள்?" என்று சர்வசாதாரணமாக விசாரித்தான்.

"நான் ஏதும் செய்யவில்லை. தலைவன் என்று உன்னை அழைக்க மறுத்தேன்!"

"ஏன்?"

"எனக்குத் தலைவர் மன்னர் ஒருவர்தான்"

"அப்படியானால் மன்னர் உன்னைக் காப்பாற்றட்டும்" என்று கூறிய கடல்வேந்தன் இரண்டு மாலுமிகளை நோக்கி, "இவரைத் தூக்கிக் கடலில் எறிந்துவிடுங்கள்" என்று கூறி விட்டு அறையை நோக்கி நடந்தான்.

"கடல்வேந்தரே! தலைவரே!", என்று கத்தினான் சஞ்சயன்.

"அவன் கூச்சலை லட்சியம் செய்யாத மாலுமிகள் இருவர் அவன் கட்டுகளை அவிழ்த்துத் தரதரவென்று கப்பல் பக்கத்தை நோக்கி இழுத்துச் சென்றார்கள். "தலைவரே! நான் சொல்வதைக் கேளும். முக்கியமான செய்தி. இந்த முசிறியின் நலமே அதைப் பொறுத்திருக்கிறது" என்று கூவினான் சஞ்சயன்.

அவன் கூக்குரலைக் கேட்டதால் கடல்வேந்தன் மாலுமிகளை நோக்கி, "அவரை விட்டு விடுங்கள். இங்கு வரட்டும்" என்று கட்டளையிட மாலுமிகள் சஞ்சயனை விட்டார்கள்.

சஞ்சயன் கடல்வேந்தன் நின்றிருந்த இடத்தை நோக்கி சிரமப்பட்டு நடந்தான். "உள்ளே வா சஞ்சயா!" என்று கூறிய கடல்வேந்தன் அறைக்குள் சென்றான்.

அவனைத் தொடர்ந்து அறைக்குள் சென்ற சஞ்சயன், அந்த அறை இருந்த கோலத்தை நோக்கி வியந்தான். ஒருவர் படுக்கும் படியான சிறுகட்டில், பெரிய மரப் பெட்டி. அதன் பக்கத்தில் இன்னொரு பெரிய மரப் பெட்டி, அதன்மீது எழுதும் கருவிகள் இவை தானிருந்தன. இரண்டாவது உயரமான பெட்டி மீதிருந்த சீலைகளிலிருந்து கடல்வேந்தன் எதையோ எழுதிக் கொண்டிருக்கிறானென்பதைச் சஞ்சயன் புரிந்துகொண்டான்.

சஞ்சயன் உள்ளே வந்ததும் அவனைச் சிறிய பெட்டிமீது உட்காரச் சொல்லிவிட்டு எதிரே நின்றுகொண்ட கடல் வேந்தன் "சொல் சஞ்சயா" என்றான்.

சஞ்சயன் சற்று சங்கடப்பட்டான், கடல்வேந்தன் தன்னை மரியாதையில்லாமல் அழைத்ததால். இருந்தாலும் அதைப்பற்றி கவலைப்படாமல் தான் யூசப்பிடம் சிக்கியது, க்ளேஸியஸ் அங்கு வந்தது, பிறகு யூசப்பிடம் சேரர் படையிருக்கும் இடங்களை எழுதிக் கொடுத்தது எல்லாவற்றையும் மிக விவரமாகச் சொன்னான்.

அவன் எதிரே குத்துக்கல் போல் நின்றிருந்த கடல் வேந்தன் தீவிர சிந்தனை வயப்பட்டான். "நிலக்கள்ளி! இவரை அழைத்துப் போய் க்ளேஸியஸின் அறையில் தங்க வை. அது இப்பொழுது காலியாகத்தானிருக்கும். பகலில் பேசுவோம்" என்று அழைத்துக் கொண்டு வெளியே சென்றாள். க்ளேஸியஸின் அறைக்கு வந்ததும் வெளியில் நின்று, "உள்ளே செல்லுங்கள் தூதரே! உமது சௌகரியங்கள் அனைத்தும் கவனிக்கப்படும்" என்று கூறிவிட்டு மீண்டும் கடல்வேந்தன் அறையை நோக்கிச் சென்று விட்டாள்.

நிலக்கள்ளி சொன்னபடி சஞ்சயனுக்கு சகல வசதிகளும் அளிக்கப்பட்டன. நீராட வசதியளித்து நீராடிய பின் மாற்றுடையும் கொடுத்தார்கள். மாற்றுடை மிக விலை உயர்ந்ததாயிருந்ததைக் கண்ட சஞ்சயன், "எல்லாம் திருட்டுச் சொத்து" என்று உடையை வெறுத்தாலும் அதை அணிந்து கொண்டான். காலத்தில் அவனுக்கு உணவு பரிமாறப்பட்டது. மாலைவரை அவனை யாரும் ஏனென்று கேட்கவில்லை. மாலை நெருங்கியதும் நிலக்கள்ளி வந்து அவனைக் கடல்வேந்தன் அறைக்கு அழைத்துப் போனாள்.

அறைக்குள்ளே கடல்வேந்தன் கையிலொரு முத்திரையிட்ட குழலுடன் நின்றிருந்தான். சஞ்சயனிடம் அதை நீட்டி, "இதை மன்னருக்கு அனுப்பிவிடும்" என்றான்.

சஞ்சயன் வியப்பினால் வாயைப் பிளந்தான். "மன்னருக்கா?" என்றும் வினவினான்.

"ஆம்!" திட்டமாக வந்தது கடல்வேந்தன் பதில்.

சஞ்சயனுக்கு ஏதும் புரியவில்லை. தொடர்ந்து மன்னரின் பொக்கிஷ வண்டிகளைக் கொள்ளையிட்டு வரும் கடல்வேந்தன், மன்னருக்குச் செய்தி அனுப்புவது பரம வித்தையாயிருந்தாலும், சமீபத்தில் தலைநகரில் நடந்த

சம்பவங்களை நினைத்து தனக்கும் விளங்காத ஏதோமர்மம் இதில் இருக்கிறது என்று புரிந்து கொண்டதால் "சித்தம்" என்று ஓலையை வாங்கிக் கொண்டான் சஞ்சயன்.

"இதைத் தவிர வேறு ஏதாவது செய்தி உண்டா?" என்று சஞ்சயன் கேட்டான்.

"மன்னருக்கு இல்லை. இன்னும் ஒரு வாரத்துக்கு நிலக்கள்ளி என்னுடன் இருப்பாள் என்று அமைச்சரிடம் சொல்லுங்கள்" என்றான் கடல்வேந்தன்.

சஞ்சயனுக்கு வியப்பு தாங்கவில்லை. "உங்களிடமா?" என்று கேட்டான், வியப்பு குரலிலும் விரிய.

"ஆம்" உறுதியுடன் உதிர்ந்தன சொற்கள், கடல் வேந்தன் உதடுகளிலிருந்து.

"அமைச்சர்..." என்று இழுத்தான் சஞ்சயன்.

"ஆட்சேபிக்க மாட்டார்" என்று கூறிய கடல்வேந்தன் அவன் செல்லலாம் என்பதற்கு அறிகுறியாகக் கையை அசைத்தான்.

வியப்பு தலைக்குமேல் ஓடிவிட்ட நிலையில் சஞ்சயன் தனது அறைக்குத் திரும்பினான். அன்றிரவு இரு மாலுமிகள் வந்து அவனை அழைத்துப்போய்க் கரையில் விட்டார்கள். சிறிதும் தாமதம் செய்யாமல் அமைச்சர் மாளிகையை நாடிய சஞ்சயன், அழும்பில்வேளிடம் செய்தியைச் சொன்னான். அமைச்சர் அதை சர்வ சாதாரணமாகக் கேட்டுக் கொண்டார். "ஒரு வாரமா?" என்றும் வினவி, "ஆகும் ஆகும்" என்றார்.

சஞ்சயனுக்கு ஏதுமே விளங்கவில்லை. வியப்பு அவன் முகத்தில் தாண்டவமாடியது. அதைக் கவனிக்கவே செய்த அமைச்சர், "தூதரே! நாளைக் காலையில் இங்கிருந்தே கடலைப் பாரும்" என்றார்.

காலையில் கடலைப் பார்த்தான் சஞ்சயன். அவன் வியப்பு எல்லை மீறியது.

□

28. கடல்வேந்தன் ஓலை

அமைச்சர் அழும்பில்வேள் சொன்னபடி காலையில் கடலை நோக்கியே சேர தூதனான சஞ்சயன் வியப்பின் எல்லையை அடைந்தானென்றால், அதற்குக் காரணம் இருக்கவே செய்தது. கடல்வேந்தன் மரக்கலம் கடலில் காணாதது தவிர வேறு மூன்று மரக்கலங்கள் பழைய யவன மரக்கலத்துக்கு அண்மையில் நின்று கொண்டிருந்தன. அவற்றிலிருந்து சில படகுகள் வந்து போய்க் கொண்டும், வணிகப் பொருள்களை இறக்கிக் கொண்டுமிருந்தன. அந்த வணிகக் கப்பல்களைப் பற்றி அக்கறை கொள்ளாத சஞ்சயன் அந்த மரக்கலங்களைப் பார்த்த வண்ணம் தன்னுடன் மாளிகை உப்பரிகையில் நின்று கொண்டிருந்த அமைச்சரை நோக்கி "கடல்வேந்தன் கப்பல் என்ன ஆயிற்று?" என்று வினவினான்.

"உமக்கு எவ்வளவு தெரியுமோ அதைப்பற்றி அவ்வளவு தான் எனக்கும் தெரியும். அதை நங்கூரமெடுத்து எங்கோ செலுத்தியிருக்கிறான் கடல்வேந்தன். நிலக்கள்ளி ஒரு வாரம் தன்னுடன் இருப்பாள் என்று அவன் சொல்லியனுப்பியதைப் பார்த்தால் அவன் கப்பல் ஒரு வாரத்துக்கு இங்கு தலை காட்டாது என்று தெரிகிறது" என்று பதில் சொன்னார் அமைச்சர் அழும்பில்வேள்

அமைச்சர் பதில் சஞ்சயனுக்கு மிக விசித்திரமாயிருந்தது. தமது மகள் இன்னோர் ஆடவனுடன் தனித்து ஒரு வாரம் கப்பலில் போகிறாளென்பதைப் பற்றி சிறிதளவும் சவலை கொள்ளாமல் அமைச்சர் சர்வ சாதாரணமாக இருப்பதைப் பற்றிச் சற்று எரிச்சலும் அடைந்த சஞ்சயன்

"அமைச்சரே! கோபித்துக் கொள்ளக் கூடாது. நிலக்கள்ளி கடல்வேந்தனுடன் ஒரு வாரம் தனியாகக் கப்பலில் போவது உசிதமா?" என்று வினவினான்.

"ஏன் போனாலென்ன?" என்று அமைச்சர் கேட்டார், குரலில் சிறிதும் சலனமில்லாமலே.

"நிலக்கள்ளி குழந்தையல்ல..." சஞ்சயன் வாசகத்தை முடிக்கவில்லை.

"யார் சொன்னது குழந்தையென்று?" என்று எதிர்க் கேள்வி போட்டார் அமைச்சர்.

"வயது வந்த பெண்."

"ஆமாம்."

"கடல்வேந்தனும் வாலிபன்."

"சரி"

"பஞ்சையும் நெருப்பையும் இப்படி சேர்த்து வைப்பது சரியா?"

இதைக் கேட்ட அமைச்சர் நகைத்தார். "தூதரே! இப்பொழுதுதானா அவர்கள் சேர்ந்திருக்கிறார்கள்? பரணரிடம் இருவரும் சேர்ந்தே கல்வி பயின்றார்கள். வில்லம்பு இலச்சினை இல்லத்தில் அவள் அடிக்கடி காணப்பட்டாள். அது மட்டுமா? வஞ்சியிலிருந்து அவளும் வேந்தனும் சேர்ந்து வரவில்லையா?" என்று சொற்களை அடுக்கித் தமது மகள் கடல்வேந்தனுடனிருந்த சமயங்களையும் அத்தாட்சி காட்டினார்.

இதைக் கேட்ட சஞ்சயன் பதில் சொல்ல முடியாமல் சங்கடப்பட்டான் "இதையெல்லாம் நாம் அனுமதிக்கலாமா!" என்று வினவினான் தயங்கிய குரலில்.

"நம் அனுமதியைக் கேட்டது யார்? முதல்நாளில் கடல்வேந்தன் இந்த என் மாளிகைக்கு வந்தானே. அவனை நாம் சிறை செய்ய முடிந்ததா? கொள்ளையடித்தானே மன்னரின் பொக்கிஷப் பெட்டிகளை; அதையாவது தடுக்க நம்மால் முடிந்ததா? சரி எல்லாம் கிடக்கட்டும். வஞ்சியிலிருந்து தப்பி வந்தானே, அது எப்படி? யோசித்தீரா?" என்று கேள்விகளை அடுக்கினார் அமைச்சர்.

"எனக்கு ஏதும் புரியவில்லை அமைச்சரே!" என்று ஒப்புக்கொண்டான் சஞ்சயன்.

"எனக்கே மனம் குழம்பியதாலும், நிலக்கள்ளி அவனுடன் தங்கிய பிறகும் தூய்மையுடன் திரும்பி வந்ததாலும், கடல்வேந்தனைப் பற்றி நாம் அறியாத பல விஷயங்கள் இருக்கின்றனவென்பதை நான் புரிந்து கொண்டேன். போதாக்குறைக்கு கொள்ளைக்காரனான அவன் இப்பொழுது அரசருக்கே ஓலை எழுதுகிறான். இதற்கு என்ன சொல்கிறீர்?" என்று விசாரித்தார் அழும்பில்வேள்.

சஞ்சயன் குழம்பினான். "ஆமாம். அரசருக்கே ஓலை அனுப்புகிறான்" என்றான் சஞ்சயனும் குழப்பத்துடன்.

"தூதரே....!" என்று மெல்ல அழைத்தார் அமைச்சர்.

"சொல்லுங்கள் அமைச்சரே!" என்றான் சஞ்சயன்.

"வஞ்சியிலிருந்து அவன் தப்பி வந்த பிறகு உம்மைக் காணவில்லையே? எங்கு போனீர்?" என்று வினவினார் அழும்பில்வேள்.

"என்னை அந்தக் கொள்ளைக்காரன் நதிக்கு அக்கரையில் தள்ளிவிட்டுப் போய்விட்டான். நான் சிக்கிக் கொண்டேன், யவனரிடமும் அராபியரிடமும்" என்ற சஞ்சயன், நடந்த கதையை விவரமாகச் சொன்னான்.

"உம்மைக் கடல்வேந்தனா அக்கரையில் விட்டான்?" என்று வினவினார் அமைச்சர்.

"வண்டியில் நான் நன்றாக உறங்கி விட்டேன். எனக்கு ஏதோ மயக்க மருந்தைக் கொடுத்திருக்கிறார்கள் அந்த நற்கிள்ளியும் கடல்வேந்தனும். பிறகு எனக்கு எதுவும் தெரியாது. சுரணை வந்தபோது நான் அராபியர் வசமிருந்தேன்," என்றான் சஞ்சயன்.

இந்தச் செய்தி அமைச்சரையே குழப்பியதால் சிந்தனையில் இறங்கினார். "கடல்வேந்தன் உம்மை எதிரிகளிடம் பிடித்துக் கொடுக்க மாட்டானே. அப்படியே கொடுத்தாலும் அவனது பாதுகாப்புக் கரம் உமது பக்கம் எப்பொழுதுமிருக்குமே!" என்று ஏதோ தாமாகப் பேசிக் கொண்டார். பிறகு சொன்னார் "தூதரே! இதில் நாம் அறியாத பல விஷயங்கள் இருக்கின்றன. இந்த ரகசியச் சிக்கலை மன்னர்தான் அவிழ்க்க முடியும்" என்று. "எதற்கும் கடல்வேந்தன் ஓலையுடன் இன்றே புறப்படும் வஞ்சிக்கு" என்றும் கூறினார்.

அத்துடன் அவர்கள் உரையாடல் நின்றது. சஞ்சயன் நீராடி உணவருந்தி புறப்படத் தீர்மானித்து அதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்யலானான். கதிரவன் உதயமாகி எட்டு நாழிகைகளுக்கெல்லாம் உணவை முடித்துக்கொண்ட சஞ்சயன் அமைச்சரைச் சந்தித்து, மேஜையில் இட்டு முத்திரையும் வைத்திருந்த ஓலையை வாங்கிக்கொண்டு "அமைச்சரே! நான் மன்னரிடம் சொல்ல வேண்டியது ஏதாவது உண்டா?" என்று வினவினான்.

"நடந்ததை அப்படியே சொல்லும்" என்றார் அமைச்சர்.

"அப்படியே சொன்னால் மன்னருக்கு என் மீது கேவலமான அபிப்பிராயம் ஏற்படுமே?" என்று சஞ்சயன் கேட்டான்.

"எப்படியும் பிரமாதமான அபிப்பிராயம் நம் இருவர் மீதும் மன்னருக்கு இருக்க முடியாது. இங்கு நடந்த கொள்ளை எதையும் தடுக்க உம்மாலோ என்னாலோ முடியவில்லை. இனிமேல் நம்மைப் பற்றிப் புது அபிப்பிராயம் எதுவும் ஏற்பட அவசியமில்லை'" என்ற அமைச்சர் "சரி புறப்படும். வாயிலில் வண்டி சித்தமாயிருக்கிறது" என்றார்.

அந்தச் சமயத்தில் அவர்கள் இருந்த அறைக்கு வெளியிலிருந்து ஒரு குரல் எழுந்தது, "தூதர் எங்கே போகிறார்?" என்று.

இருவரும் திரும்பிப் பார்க்க வாயிற்படியில் புலவர் பரணர் நின்றிருந்தார். பரணரைக் கண்டதும் இருவருக்குமே வெறுப்பாயிருந்தாலும் அதைச் சொற்களால் தெரியப்படுத்தினான் சஞ்சயன். "பரணரே! போகும் போது எங்கே போகிறாயென்று கேட்கலாமா?" என்று வினவினான்.

பரணர் இகழ்ச்சி நகை கொண்டார். "ஏன் எங்காவது பெண் பார்க்கப் போகிறீரா?" என்றும் கேட்டார், இகழ்ச்சி குரலிலும் தெரிய.

"பெண் பார்ப்பதற்குத்தான் சகுனம் பார்க்க வேண்டுமா? வேறு முக்கிய விஷயம் ஏதும் உலகில் கிடையாதா?" என்று சஞ்சயன் கேட்டான்.

"ஏனில்லை? அரச காரியமாயிருந்தால் அது முக்கியம்" என்றார் பரணர்.

இந்தப் பதில் இருவருக்குமே தூக்கிப் போட்டதால் "அரச காரியமா?" என்று ஒரே சமயத்தில் இருவரும் கேட்டார்கள்.

"ஆம் தூதரே! உமது கையில் இருக்கும் குழலைப் பார்த்தால் அரச காரியமாகத் தெரிகிறது" என்ற பரணர் "தூதர் அரச காரியமாகப் போவதில் விசித்திரமேதுமில்லையே" என்றும் சொன்னார்.

அமைச்சரின் வியப்பு எல்லை மீறியது. "பரணரே! இந்த மாதிரி பல குழல்களை நான் ஒவ்வொரு நாளும் அனுப்புகிறேன்..." என்று விளக்கினார்.

"அதில் அரச காரியமும் உண்டு. அதுவும் இம்மாதிரி குழல் அரசரின் தனிப் பார்வைக்கே ஏற்பட்டது" என்றார் பரணர். அதைக் கேட்டுப் பிரமித்த மற்ற இருவரையும் நோக்கி "இதில் பிரமிக்க ஏதுமில்லை. அரசவையில் பல ஆண்டுகள் இருந்திருக்கிறேன். அவருக்கு வரும் குழல்களையும் பார்த்திருக்கிறேன்" என்றும் கூறினார்.

சஞ்சயன் ஏதோ சொல்ல முயலவே "தூதரே! நாம் வீண் காலம் கடத்த வேண்டாம். நானும் வஞ்சிக்குப் போக வேண்டியிருக்கிறது. உமக்கு ஆட்சேபணையில்லையென்றால் உம்முடன் நானும் வருகிறேன்" என்றார் பரணர்.

அமைச்சர் பரணரை நோக்கிக் கேட்டார், "தங்களுக்குத்தான் அரசர் தனிரதம், காவல் வீரர், இத்தனையும் அளித்திருக்கிறாரே?" என்று.

"ஆம்."

"அதில் போகலாமே!"

"அரசாங்க அலுவல்களுக்கு, விழாக் காலங்களுக்கு அவற்றை உபயோகப்படுத்துகிறேன். ஏழைப் புலவன் அலைந்துப் போக இந்தப் படாடோபங்கள் தேவையில்லை.

தூதரோடு நானும் அவர் வண்டியில் ஒட்டிக் கொள்கிறேன். ஆட்சேபனையில்லையே!"

ஆட்சேபிப்பதால் பயனில்லை என்பதை இருவருமே புரிந்து கொண்டதால் பரணரையும் அழைத்துச் செல்ல சஞ்சயன் சம்மதித்தான். பரணரையும் தமது வண்டியில் ஏற்றிக் கொண்டு புறப்படவும் செய்தான். பயணத்தைத் துரிதமாகவும் செய்தான். வண்டியில் ஏறிய பிறகு பரணர் ஏதும் பேசவில்லை. நீண்ட நேரம் சிந்தனையில் அடிக்கடி ஆழ்ந்தார். சிந்தனையில் ஆழாத சமயங்களில் பாட்டுகளையும் பாடினார். சில சமயங்களில் தமது மடியிலிருந்து ஓலைச் சுவடியையும் எழுத்தாணியையும் எடுத்து வேகமாக எழுதவும் முற்பட்டார்.

அவர் போக்கு சஞ்சயனுக்கு முற்றிலும் பிடிக்கவில்லையென்றாலும் அவனால் எதுவும் செய்ய முடியாததாலும், பேச்சுக் கொடுத்தாலும் பரணர் சிந்தனையில் ஆழ்ந்து பதில் சொல்லாததாலும் அவன் பேசுவதையும் நிறுத்திக்கொண்டு, இப்படிப் பயணம் செய்து மறுநாள் காலை வஞ்சியைச் சேர்ந்த தூதன், வண்டியை நேராக மன்னர் அரண்மனையை நோக்கிச் செலுத்தினான்.

அரண்மனையின் ஆரம்ப வாயிலிலேயே வண்டியிலிருந்து இறங்கிவிட்ட பரணர் அவனை மேற்கொண்டு செல்லுமாறு பணித்துப் பக்கத்திலிருந்த விடுதியொன்றில் புகுந்தார். சஞ்சயன் அரண்மனை பிரதான வாசலுக்குச் சென்று வண்டியைக் காவலரிடம் ஒப்படைத்து மன்னரைக் காணவேண்டுமென்று காவலரிடம் சொல்ல, காவலர் அவனை அரண்மனை பிரதம நிர்வாகியிடம் அழைத்துச் சென்றனர். பிரதம நிர்வாகி மன்னர் அவனை மாலைதான் பார்க்க முடியுமென்று சொன்னதையும் கேட்காமல் சஞ்சயன் "செய்தி முக்கியம்" என்றான்.

"என்ன முக்கியமென்றாலும் இப்பொழுது மன்னரைப் பார்க்க முடியாது" என்று திட்டமாகச் சொன்ன நிர்வாகி "தூதர்கள் விடுதியில் தங்கி இரும். மன்னர் உம்மைப் பார்க்க சம்மதிக்கும் சமயத்தில் சொல்லியனுப்புகிறேன்" என்றார்.

"கடல்வேந்தனிடமிருந்து ஓலை கொண்டு வந்திருக்கிறேன்" என்றான் தூதன் எரிச்சலுடன்.

இதைக் கேட்ட நிர்வாகி துள்ளி எழுந்தார். "இதை என் முன்னமே சொல்லவில்லை? இரும். மன்னரிடம் கேட்டு வருகிறேன்" என்று அரண்மனைக்குள் விரைந்தார். சில நிமிடங்களில் திரும்பி வந்து "உள்ளே செல்லுங்கள். மன்னர் இப்பொழுதே உம்மைச் சந்திப்பார்" என்று கூற சஞ்சயன் அரண்மனைக்குள் நுழைந்தான்.

அரண்மனையில் அந்தரங்க அறையில் அவனைக் காண மன்னர் சித்தமாயிருந்தார். சஞ்சயன் உள்ளே நுழைந்ததும் அரியணை மஞ்சத்தில் அமர்ந்திருந்த மன்னர் தமது கையை நீட்டி "கொடும் ஓலையை" என்றார்.

□

29. மன்னனும் மாசறக் கற்றோனும்

கடல்வேந்தனிடமிருந்து ஓலை கொண்டு வந்திருப்ப தாக அறிவித்ததும் அரண்மனை பிரதம நிர்வாகி துள்ளி எழுந்து மன்னரிடம் ஓடியதையும், மாலையில்தான் பார்க்க முடியுமென்று நினைத்த மன்னரையும் தான் உடனடியாகப் பார்க்க முடிந்ததையும் நினைத்துப் பார்த்து 'கடல்வேந்தன் பெயருக்கு மிதமிஞ்சிய மதிப்பு இருக்கத்தான் செய்கிறது' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்ட சஞ்சயன், மன்னரிடம் ஓலையைக் கொடுத்ததும் மன்னர் சொல்லக்கூடிய பதிலை எதிர்பார்த்து நின்றான். இமயத்தில் இலச்சினை பொறித்த வனும் கஞ்சா நெஞ்சனென்றும், மகாவீரனென்றும் மாற்றாராலும் மிகவும் பாராட்டப்பட்டவனுமான சேரன் செங்குட்டுவன், குழலிலிருந்த முத்திரைகளை உடைத்து உள்ளிருந்த ஓலையை நிதானமாகப் படித்தான். அதை ஒரு முறைக்கு இருமுறை ஆழ்ந்து படித்த செங்குட்டுவன் சில நிமிடங்களில் தீவிர சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். கடைசி யாகத் தூதனை நோக்கி, "கடல்வேந்தன் இப்பொழுது எங்கிருக்கிறான்?" என்று வினவினான்.

சஞ்சயன் "தெரியாது மன்னவா" என்று உண்மையைச் சொன்னான்.

மன்னனின் புருவங்கள் வியப்புக்கு அறிகுறியாகச் சற்று மேலே எழுந்து இறங்கின. "தெரியாதா?" என்று மன்னர் கேட்ட கேள்வியிலும் வியப்பு ஒலித்தது.

"தெரியாது" மீண்டும் அதே பதிலைச் சொன்னான் சஞ்சயன்.

"இந்த ஓலையை யார் கொடுத்தது உம்மிடம்?" மன்னன் மீண்டும் கேட்டான் சிந்தனை வயப்பட்டு.

"கடல்வேந்தன்தான்" என்றான் சஞ்சயன்.

"எப்பொழுது?"

"நேற்றுக்கு முந்திய இரவு"

"எங்கு சந்தித்தீர் கடல்வேந்தனை?"

"அவனது கப்பலில்"

"அங்கு ஏன் போனீர்?"

"நானாகப் போகவில்லை. அழைத்துச் செல்லப்பட்டேன்." இதைக் கேட்ட மன்னன் மீண்டும் சிந்தனையில் இறங்கினான். கடைசியாகச் சொன்னான்: "நீர் தூதர் விடுதியில் இரும். மாலை சந்திக்கிறேன்" என்று பேட்டி முடிந்துவிட்டதற்கு அறிகுறியாக ஆசனத்திலிருந்து எழுந் திருக்கவும் செய்தான்.

அத்துடன் அரண்மனையை விட்டு வெளியே வந்த சஞ்சயனை நோக்கிப் புலவர் பரணர் விரைந்துவந்து கொண் டிருந்தார். "என்ன சஞ்சயா! மன்னரைப் பார்த்து விட் டாயா?" என்று வினவினார்.

"பார்த்துவிட்டேன்"

"ஓலையைக் கொடுத்து விட்டாயா?"

"அதற்குத்தானே மன்னரைப் பார்த்தேன்."

"ஓகோ!" என்று புன்முறுவல்செய்த பரணர் "மன்னர் என்ன சொன்னார்?" என்றும் வினவினார்.

"எதைச் சொல்லியிருந்தாலும் உம்மிடம் சொல்வதற் கில்லை" என்று சற்றுக் கடுமையாகவே பதில் சொன்னான் சஞ்சயன்.

அதைக் கேட்டுப் புலவர் எந்தவித அதிர்ச்சியோ, ஆத்திரமோ கொள்ளவில்லை. "சரி பிறகு சந்திப்போம்" என்று கூறிவிட்டு அரண்மனைக்குள் நுழைந்தார். அவரைப் பிரதம நிர்வாகி எதிர்கொண்டு உள்ளே அழைத்துச் சென்றான். மன்னர் இருக்கும் அறையைச் சுட்டிக்காட்ட அந்த அறைக்குள் சென்ற பரணர், மிகுந்த சிந்தனையுடன் மன்னன் அறையில் குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டிருந்ததைப் பார்த்து ஏதும் பேசாமல் ஒரு விநாடி நின்றார். பிறகு "மன்னா! நீ நீடூழி வாழி! உன் செங்கோல் நாற்றிசையும் ஓங்கட்டும்" என்று வாழ்த்து கூறினார்.

அப்பொழுதுதான் புலவர் வந்திருப்பதை உணர்ந்த செங்குட்டுவன் திரும்பிப் பார்த்துப் புலவருக்குத் தலை வணங்கினான். "இப்படி அமரவேண்டும்" என்று எதிரேயிருந்த மஞ்சமொன்றையும் காட்டினான்.

அதில் அமர்ந்து கொண்ட புலவர் "மன்னா! நீயும் உட்கார்" என்று சொல்லியும் செங்குட்டுவன் கேட்டானில்லை. "புலவரே! உமக்கு முன் நான் நிற்பதே எனக்குப் பெருமை" என்றான்.

அதற்கு மேல் மன்னனை வற்புறுத்தாத பரணர், "மன்னா! சஞ்சயன் செய்தி கொண்டு வந்தானா?" என்று கேட்டார்.

"கொண்டு வந்தான்" என்ற மன்னவன், "புலவரே! தங்களுக்கு ஏதாவது செய்தி உண்டா?" என்று வினவினான்.

புலவர் தமது மடியில் மிக மெல்லியதாக மடிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த ஓர் ஓலையை எடுத்துக்கொடுத்தார். மன்னன் அதைப் பிரித்து அதிலிருந்த வரிகளை மெதுவாகப் படித்தான். "இந்தச் செய்தி சஞ்சயன் கொண்டுவந்த செய்தியை உறுதிப்படுத்துகிறது" என்று கூறிவிட்டு "புலவரே! கடல்வேந்தன் உம்மைக் கடைசியாக எப்பொழுது பார்த்தான்?" என்று வினவினான்.

"ஒரு வாரத்திற்கு முன்பு" என்றார் பரணர்.

"இந்த ஓலை உமக்கு எப்பொழுது வந்தது?" என்று மன்னன் விசாரித்தான்.

"மூந்தாநாளிரவு. அப்பொழுதான் சஞ்சயனுக்கும் ஓலை கிடைத்திருக்க வேண்டும்" என்றார் புலவர்.

ஆமென்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் செங்குட்டுவன். "இரண்டு ஓலைகளிலும் ஒரே விஷயந்தான் இருக்கிறது. ஒன்று கிடைக்காவிட்டாலும் இன்னொன்று கிடைக்க கடல்வேந்தன் ஏற்பாடு செய்திருக்கிறான்" என்று சொன்ன மன்னன், "புலவரே! யார் இந்த யூசப்?" என்று வினவினான்.

"அராபியர் குடியிருப்புகளின் தலைவன்" என்றார் பரணர்.

"அவன் யவனர்களுடன் சேரக்கூடும் என்று கடல் வேந்தன் எழுதியிருக்கிறானே" என்றான் மன்னன்.

"அப்படி ஒரு வதந்தி இருந்தது. ஆனால் இரண்டு நாள்களாக யூசப்பைக் காணவில்லை. க்ளேஸியஸ் மட்டும் யவனர்களை அடிக்கடி அழைத்துப் போகிறான், தவிர, முசிறி துறைமுகத்தில் இப்பொழுது யவன மரக்கலங்கள் நான்கு நிற்கின்றன" என்ற பரணரின் குரலில் கவலை தெரிந்தது.

"எந்த மாதிரி மரக்கலங்கள்?" அரசன் கேள்வியை வீசினான் சிறிதும் பதற்றமில்லாத குரலில்.

"பார்ப்பதற்கு வணிக மரக்கலங்கள். வணிகப் பொருள் ஏறும் துறைமுகத்துக்குள் வருகின்றன. ஆனால் அவற்றின் தோற்றம் வேறு, உண்மை வேறு. பெரும் போர்க்கலங்களாக இருக்க வேண்டும்" என்ற பரணரின் குரலில் கவலை இருந்தது.

மன்னன் முகத்தில் எந்தவிதக் கவலைக்குறியும் இல்லை. "கடல் போருக்கு நான் அஞ்சுவேனென்று யவனர் நினைக்கிறார்களா?" என்று கேட்டான் ஏதோ சாதாரண விஷயத்தைப் பிரஸ்தாபிப்பவன் போல.

"அப்படித்தானிருக்கும்" என்ற பரணர், "உன்னை வடநாட்டாரே சரியாக எடை போடவில்லையே, மேல் நாட்டவரான யவனர்களா எடை போட முடியும்?" என்று கேட்டார்.

இந்தக் கேள்வி மன்னனுக்குத் திருப்தியளித்திருக்க வேண்டும். செங்குட்டுவனின் அழகிய வீரமுகத்தில் மகிழ்ச்சிச் சாயை விரிந்தது. உதடுகளிலும் புன்சிரிப்பு தலைகாட்டியது. அந்த மகிழ்ச்சி குரலிலும் ஒலிக்கப் பேசினான் மன்னன்— "பரணர் பெருமானே! உமது சீடனை நீர் மெச்சுவது நல்லதல்ல. அதிகமாகப் புகழ்ந்தால் நான் நிதானமிழந்து விடுவேன். உங்கள் அடிமையை அதிகமாகப் பாராட்டாதீர்கள்" என்று.

புலவர் மஞ்சத்தில் லேசாக அசைந்து, "மன்னா! நீ தமிழகத்துக்கு ஓர் அணிகலன். உன்னை நான் பாராட்ட இஷ்டப்படவில்லை. உண்மையைச் சொன்னேன். தவிர, நீ அடிமை என்று சொல்லிக் கொள்ளாதே. மாற்றரசர்கள் எல்லாரும் உனக்கு அடிமை" என்று சொன்னார்.

புரவலன், புலவரை நோக்கித் தலை வணங்கினான். "பரணர் பெருமானே! மாற்றரசர் எனக்கு அடிமைகளாகலாம். ஆனால், மாசறக் கற்றோரான தங்களுக்கு மன்னன் அடிமை. இது தமிழுலகம் ஒப்புக்கொள்ளும் ஓர் உண்மை" என்றான்.

புலவர் மகிழ்ச்சியுடன் மன்னன் சொல்லை ஏற்றுக் கொண்டு, "உன்னிஷ்டம் மன்னா!" என்று கூறிவிட்டு, "எனக்கு என்ன கட்டளை? இந்த ஓலைக்கு என்ன பதில்?" என்று கேட்டார்.

செங்குட்டுவன் வதனத்தில் சிரிய சிந்தனைச் சாயை படர்ந்தது. இருப்பினும் சில நிமிடங்களுக்கெல்லாம் ஒரு முடிவுக்கு வந்து விட்ட மன்னன், "கடல் வேந்தனுக்குப் பதில் எழுதித் தருகிறேன். அதை எடுத்துக் கொண்டு நீர் தொண்டித் துறைமுகம் செல்லும். இன்னொரு கடிதம் அமைச்சர் அழும்பில்வேளுக்கு எழுதித் தருகிறேன். அதைச் சஞ்சயன் எடுத்துச் செல்லட்டும்" என்று கூறினான்.

"தொண்டிக்கா! எதற்கு?" என்று கேட்டார் புலவர்.

"அங்குதான் கடல்வேந்தன் இருக்கிறான்." மன்னன் திட்டவட்டமாகச் சொன்னான்.

"எப்படித் தெரியும் உனக்கு?" என்று பரணர் கேட்டார்.

"அவன் வழக்கமாகச் செல்லும் லட்சத் தீவுகளில் ஏதாவது ஒன்றுக்கு அவன் சென்றிருந்தால்?" என்றும் தொடர்ந்து வினவினார்.

"லட்சத்தீவு. கடல் கொள்ளைக்காரர்கள் இருக்கிறார்கள். ஆனால், கடல்வேந்தன் சாதாரண கொள்ளைக்காரன் அல்லவென்பது உமக்கும் தெரியும், எனக்கும் தெரியும். என்ன கொள்ளையடித்தாலும் தர்மத்திற்குப் பற்றுடையவன். அது அவன் ரத்தத்திலிருக்கிறது" என்றான் மன்னவன்.

"ஆம், ஆம் ரத்தத்திலிருக்கிறது" என்று ஒப்புக் கொண்டார் பரணர்.

"ஆகவே, முசிறி யவனர் புரட்சியை எதிர்பார்க்கும் சந்தர்ப்பத்தில் அவன் நாட்டு மேற்குக் கரையைவிட்டு அகலமாட்டான். தவிர, சஞ்சயன் ஓலையில் என்னையும் முசிறிக்கு வரும்படி எழுதியிருக்கிறான்" என்றான் மன்னன்.

"உன்னையா! எதற்கு மன்னா?" என்று வியப்புடன் புலவர் கேட்டார்.

"தெரியவில்லை. ஆனால், வஞ்சிப் பாதையிலுள்ள மலைக்காடுகளில் பாசறை அமைத்துத் தங்கும்படி சொல்லியிருக்கிறான்" என்றான் மன்னன்.

புலவர் சிற்றத்தைக் காட்டினார். "உனக்குத் தங்குமிடத்தைச் சொன்னானா? உனக்கு உத்தரவிட இவன் யார்? நேற்றைய சிறு பயல்' என்று உக்கிரமாகப் பேசினார்.

"எல்லாம் நாட்டு நன்மைக்குத்தான் சொல்லியிருப்பான்" என்ற மன்னன், அதற்குமேல் பேச்சை வளர்க்காமல், "புலவரே! நீங்கள் நீராடி உணவருந்துங்கள். சற்றுப் பயண அலுப்பை நீக்கப் படுத்துக் கொள்ளுங்கள். மாலை சந்திப்போம்" என்றான்.

மன்னன் கூறியது போல் நீராடி அறுசுவை உணவு உண்டு, தமக்கு அளிக்கப்பட்ட தனி அறைக்குச் சென்றார். அங்கிருந்த பஞ்சணையில் படுக்கவில்லை. தமது ஓலைச் சுவடிகளை எடுத்து ஏதோ எழுதலானார். எழுதி முடித்து ஒரு பணியாளனை அழைத்து, அதற்கு முத்திரையும் வைக்கச் சொன்னார். பிறகு படுத்து ஏதோ யோசனையில் ஆழ்ந்தார்.

அன்று மாலை விளக்கு வைத்த பின்பு, மன்னன் அறைக்கு அழைக்கப்பட்டார். அங்கு சஞ்சயனும் காத்திருந்தான். இருவரிடமும், இரு ஓலைகளைக் கொடுத்த மன்னன், "சஞ்சயா! நீ சென்று அதை, அமைச்சரிடம் கொடு" என்றான்.

"புலவர்?" என்று கேட்டான் சஞ்சயன்.

"இப்பொழுது வரவில்லை' பிறகு அனுப்புகிறேன்" என்று முடிவாகக் கூறிவிட, சஞ்சயன் புறப்பட்டான்.

அவன் சென்ற பின்பு, தமது கையிலிருந்த குழலை சுவனித்த புலவர், தனது மடியிலிருந்து முத்திரையிட்ட ஓலை நறுக்குகளை மன்னரிடம் கொடுத்தார். முத்திரையைப்

பிரித்து ஓலைகளைப் படித்த செங்குட்டுவன், "முடிவை முன்னதாகச் சொல்லி விட்டீர்களே?" என்று கேட்டான்.

"புலவன் கவிதையில் தவறு இருக்காது" என்றார் புலவர்.

அடுத்து மன்னனும், மாசறக் கற்றோனும் ஒருவரையொருவர் நோக்கிக் கொண்டனர், அர்த்த புஷ்டியுடன். "நாளைக் காலையில் நீங்கள் கிளம்பலாம்" என்றான் மன்னன்.

அன்றைக்கு இரண்டு நாள் கழித்து, மன்னன் ஓலையைப் படித்த அமைச்சர் அழும்பில்வேள், திக்பிரமை பிடித்து நின்றார். "மன்னனுக்குப் பைத்தியமேதும் இல்லையே?" என்று சஞ்சயனை விசாரிக்கவும் செய்தார்.

□

30. கடற்படைத் தலைவன்

மன்னன் அனுப்பிய ஓலையின் முத்திரைகளை உடைத்து அதைப் படித்த அழும்பில்வேள் அதிர்ச்சியடைந்து "மன்னனுக்குப் பைத்தியம் ஏதுமில்லையே?" என்று கேள்வி எழுப்பியதும் சஞ்சயன் அமைச்சரை வியப்பு ததும்பிய விழிகளுடன் நோக்கினான். மன்னனைப் பற்றி அப்படித் துணிகரமாகப் பேசிய அழும்பில்வேளின் சித்த ஸ்வாதீனத்தைப் பற்றியே அவன் சந்தேகப்பட்டாலும் அதைப்பற்றிக் கேள்வி எழுப்பாமல் அமைச்சரின் கேள்விக்கே அவன் பதில் சொன்னான், "எனக்குத் தெரிந்த வரை மன்னருக்கு அப்படியொரு நிலை ஏற்படவில்லை" என்று.

அழும்பில்வேள் அப்பொழுதும் விடவில்லை. "இந்த ஓலையில் என்ன எழுதி இருக்கிறது தெரியுமா?" என்று வினவினார் சேரதூதனை நோக்கி.

"தெரியாது. முத்திரைகளை உடைத்து மன்னர் ஓலைகளைப் படிக்கும் பழக்கம் இன்னும் வரவில்லை எனக்கு" என்று இடக்காகப் பதில் சொன்னான் சஞ்சயன்.

மந்திரியின் புத்தியிருந்த நிலையில் அவர் சஞ்சயன் இடக்கைக் கவனிக்காமல், "அப்படியானால் இந்த ஓலையை இப்பொழுது படி" என்று ஓலையைச் சஞ்சயனிடம் கொடுத்தார்.

சஞ்சயன் மன்னர் ஓலையைக் கையில் வாங்கி அதில் இருந்த வரிகளில் கண்களை ஓட்டினான். படிக்கப் படிக்கக் கண்களில் பிரமை அதிகப்படவே மிகுந்த அதிர்ச்சியடைந்து, "அமைச்சரே!" என்று அச்சம் மிகுந்த குரலில் அழைத்தான்.

"என்ன தூதரே!" அமைச்சர் குழப்பத்துடன் கேட்டார்.

"இந்த ஓலையில் கண்டுள்ளபடி நடந்தால்..." சொற்களை முடிக்கவில்லை சஞ்சயன்.

அமைச்சர் இடைபுகுந்து வாசகத்தை முடித்தார், "முசிறி, யவனர் வாயில் பலாச்சுளைபோல் விழுந்து விடும்" என்று.

ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்த சஞ்சயன் "யவனர்கள் இஷ்டப்படி நடமாட அதிகாரம் கொடுக்கும்படி மன்னர் கூறியிருக்கிறார்" என்றான்.

"ஆம். படைகள் அவர்களைத் தடைசெய்ய வேண்டாமென்றும், சற்று அத்து மீறினாலும் சகித்துக்கொள்ளும்படியும் கூறியிருக்கிறார் மன்னர்" என்றார் அமைச்சர்.

"அத்துமீறி என்றால் என்ன என்பதை விளக்கவில்லை மன்னர்" என்று சஞ்சயன் குறிப்பிட்டான்.

"அதை நாம் தான் நிர்ணயம் செய்யவேண்டும். இங்கு மன்னர் அதிகாரம் குலையாதிருக்கும் வரை யவனர் எது செய்தாலும் நாம் எதிர்ப்பதற்கில்லை" என்று தமது அதிகார வரையறை என்ன என்பதை விளக்கினார் அமைச்சர்.

"அதாவது?"

"க்ளேஸியஸும், அவன் சகாக்களும் ஆற்றங்கரைக்கு இப்புறம் வரக்கூடாதென்ற தடை இருக்கிறது. அந்தத் தடையை நீக்கலாம். அவர்கள் இங்கு வந்து வாணிபம் செய்யவும் அனுமதிக்கலாம். ஆனால், படை

வீடுகளுக்குள் நுழைய முயன்றால் தடுப்போம்" என்ற அமைச்சர், "இதெல்லாம் எனக்கு அச்சமளிக்கவில்லை, வஞ்சிப் பாதையிலிருந்து மலைக்காட்டுப் பாசறைகளை அதிகமாக வலுப்படுத்த வேண்டாமென்று மன்னர் எழுதியிருப்பதற்குத்தான் எனக்குக் காரணம் புரியவில்லை. முசிறியின் பாதுகாப்புக்கு ஒரே இடம் மலைக்காட்டுப் பாசறை. அதுவும் பலவீனப்பட்டால் முசிறியை யாரும் விழுங்கிவிட முடியும்" என்று கவலை தெரிவித்தார்.

சஞ்சயனுக்கும் அந்தக் கவலை உண்டென்றாலும் அதைப் பற்றி அவன் ஏதும் சொல்லவில்லை. தங்களிருவருக்கும் தெரியாத ஆழமான திட்டம் ஏதோ உருவாகிறதென்பதை ஊகித்துக் கொண்டான் சஞ்சயன்.

அப்பொழுது அமைச்சர் திடீரெனக் கேட்டார் "ஆமாம். உம்முடன் வந்த புலவர் எங்கே?" என்று.

"அவர் வஞ்சியிலேயே தங்கி விட்டார்"

"மன்னன் ஆணையின் மேலா?"

"ஆம்"

அறிவாளியான அமைச்சர் அழும்பில்வேள், மன்னன் புலவரைத் தம்முடன் இருத்திக் கொண்டதிலும் ஏதோ காரணமிருக்க வேண்டுமென்பதைப் புரிந்து கொண்டார். எனினும் அதன் மர்மம் புரியாததால் சற்றுக் குழம்பவே செய்தார்.

இந்த குழப்பம் அமைச்சருக்கு மட்டும் ஏற்படவில்லை. அரசன் ஓலையைத் தொண்டிக்கு எடுத்துச் சென்ற புலவரான பரணருக்கும் ஏற்பட்டது. மேற்றிசைத் துறைமுகங்

களில் மிகவும் முக்கியமென்று கருதப்பட்ட தொண்டித் துறைமுகத்தை அடைந்த புலவர், அங்கிருந்த நிலைகண்டு பெருவியப்படைந்தார். மிகவும் கட்டுத் திட்டமுள்ள அந்தத் துறைமுகத்தின் தெருக்களில் கடல்வேந்தன் மாலுமிகள் இஷ்டப்படி உலாவிக் கொண்டிருந்தனர். அவர்களைத் துறைமுகக் காவலரோ, இதர நகரக் காவலரோ தடை செய்யவில்லை. அந்தஅராஜக நிலையைக் கவனித்துக் கொண்டு துறைமுகப் பெருங்காவலரின் மாளிகையை அடைந்த புலவர். தமது வருகையை அறிவிக்க, துறைமுகத் தலைவன், மாளிகையிலிருந்து ஓடோடி வந்து புலவரை வணங்கி உள்ளே அழைத்துச் சென்றான். உள்ளேயிருந்த ஒரு பெரிய அறையைத் திறந்து விட்டு "இது மன்னர் தங்கும் அறை. தாங்கள் தாங்கலாம்" என்று அவரை அங்கு தங்க வைத்த துறைமுகத் தலைவன் வந்த காரியத்தை வினவும் முறையில், "புலவர் பெருமான் ஆணைக்குக் காத்திருக்கிறேன்" என்றான்.

புலவர் ஏதும் பேசவில்லை. மடியிலிருந்த ஓலையை எடுத்துத் தலைவனிடம் கொடுத்தார். ஓலையின் முத்திரைகளை உடைத்து ஓலையைக் கண்களில் ஒற்றிக்கொண்டு அதிலிருந்த செய்தியைப் படித்த துறைமுகத் தலைவன் இருமுறை ஓலையைத் திருப்பிப் பார்த்தான், பிறகு புலவரை நோக்கி, "புலவரே! இதை நீரும் படியும்" என்று புலவரிடம் ஓலையைக் கொடுத்தான்.

புலவர் அதைப் படித்ததும் பெரிதும் குழம்பினார். "துறைமுகத் தலைவரே! இந்த ஓலைப்படி கடல்வேந்தன் இந்தத் துறைமுகத்தின் தலைவனாகிறான்" என்று சொன்னார், குழப்பம் குரலிலும் தெரிய.

"ஆம்" என்றான் தலைவன் சர்வ சாதாரணமாக,

"உனக்கு இதில் ஏதும் ஆட்சேபனை இல்லையா?" என்று புலவர் கேட்டார்.

"இல்லை."

"ஏன்?"

"இந்த ஓலையில்லாமலே கடல்வேந்தனும், அவனது மாலுமிகளுந்தான் இந்த துறைமுகத்தை இப்பொழுது ஆளுகிறார்கள்."

"எப்படி ஆளமுடியும்? ஒரு கொள்ளைக்காரன் இஷ்டமா நமது துறைமுக நிர்வாகம்?" என்று கேட்டார் புலவர்.

தலைவன் ஒரு விநாடி புலவரின் கண்களுடன் தனது விழிகளைக் கலந்தான். "புலவரே! நிர்வாகம் இப்பொழுதும் என் கையில் இல்லை. மூன்று நாள்களுக்கு முன்பு அவன் மரக்கலம் திடீரென இந்தத் துறைமுகத்துக்குள் நுழைந்தது. அதைத் தடுக்க நமது மரக்கலங்கள் இரண்டு, நங்கூரமெடுத்தன. அவை செயல்படுவதற்குள் அவை இரண்டுக்கும் நடுவில் கடல்வேந்தன் மரக்கலம் வந்து நின்று கொண்டது. அதன் பாய்கள் வேகத்துடன் இறக்கப்பட்டன. அதன் பக்கப் பலகைகள் இரண்டிலும் வில்லேந்திய அவன் மாலுமிகள் அம்புகளை அமைத்து நாண்களை இழுத்து நின்றனர். அதுதவிர, பெரும் யந்திரமொன்று நான்கு வேல்களை ஒரே சமயத்தில் தாங்கித் திரும்பிக் கொண்டிருந்தது.

அந்தச் சமயத்தில் அந்த மரக்கலத்தின் பெரிய பாய் மரத்தின் உச்சியிலிருந்த தட்டில் ஏறி நின்றிருந்தான். கடல்வேந்தன், துறைமுகத்தை, ஒருமுறை கண்களைச் சுழற்றிப் பார்வையிட்டான். பிறகு பெரிய ஊதுகுழலை ஊதி, "எந்த மரக்கலம் அனசந்தாலும் அவை அழிக்கப்படும். இந்தத் துறைமுகம் என் கைவசத்திலிருக்கிறது. யாராவது போய் இந்தத் துறைமுகத் தலைவனை வரச் சொல்லுங்கள்" என்று அதிகாரத்துடன் அறிவித்தான்.

"இதை எனது துறைமுகக் காவலர் ஓடி வந்து சொல்ல, நான் விரைந்தேன் துறைமுகத்துக்கு. கடல் வேந்தனைச் சந்தித்து எச்சரித்து விடுவதென்று ஒரு படகை எடுத்துக்கொண்டு கடல்வேந்தன் மரக்கலத்துக்குச் சென்றேன். என்னை அவன் வரவேற்கச் சித்தமாயிருந்திருக்கவேண்டும். நான் அந்த மரக்கலத்தை அணுகியதும், நூலேணி தொங்க விடப்பட்டது.

அதில் ஏறித் தளத்தை அடைந்ததும் இரு மாலுமிகள் எனக்குக் கைகொடுத்துத் தூக்கி விட்டுக் கடல் வேந்தன் அறைக்கு அழைத்துச் சென்றார்கள்.

"அந்த அறைக்குள் நுழைந்ததும் திடுக்கிட்டேன். அங்கு கடல்வேந்தன் புன்முறுவலுடன் என்னை வரவேற்றான். அந்த அறை மூலையில் ஓர் அழகி உட்கார்ந்து ஒரு சீலையில் ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள். கடல் வேந்தன் நான் அமர ஆசனம் ஒன்றைக் காட்டினான். நான் நின்று கொண்டேயிருந்தேன். அந்தப் பெண்ணை எனக்கு அறிமுகப்படுத்தினான். 'இவள் நிலக்கள்ளி. அமைச்சர் அழும்பில்வேளின் மகள்' என்று. நான் பிரமித்தேன், மந்திரி மகள் எப்படி இந்தக் கொள்ளைக்காரனுடன் வரமுடியுமென்று. ஆனால் அவள் எந்தக் குழப்பத்தையும் காட்டவில்லை. எழுந்து சீலையைக் கடல் வேந்தனிடம் கொடுத்தாள். அதில் எழுதப்பட்டிருந்ததைப் படித்துக் கடல்வேந்தன் 'சரியாக இருக்கிறது' என்று கூறிவிட்டுத் 'துறைமுகத் தலைவரே! இதில் தங்கள் கையொப்பத்தை இடும்' என்றான்.

"அந்தச் சீலையைப் படித்தேன். அதில் இந்தத் துறைமுகத்தில் எதுவும் செய்ய நான் அதிகாரமளிப்பதாகக் கண்டிருந்தது. 'இதில் நான் கையெழுத்திட மறுத்தால் என்ன செய்வீர்கள்?' என்று கேட்டேன். 'இன்று மாலைக்குள் தொண்டி நகர் சூறையாடப்படும்' என்று சர்வ சாதாரணமாகக் கூறினான் கடல்வேந்தன்.

"அதுவரை வாளாவிருந்த அந்தப் பெண்ணும் 'அவர் கூறியபடி செய்யுங்கள். நகரத்துக்கு நல்லது' என்றாள். அங்கிருந்த சூழ்நிலையைக் கவனித்தேன். துறைமுக நன்மையை முன்னிட்டுக் கையொப்பமிட்டேன். அதைப் பறையறைவித்து நகர மக்களுக்கு அறிவித்தேன். முதலில் நகர மக்கள் அஞ்சினார்கள். ஆனால் பிறகு அவர்களே இந்தக் கொள்ளைக்காரனைப் பாராட்டினார்கள். அவன் மாலுமிகள், பண்டங்களை நிரம்ப வாங்கித் தங்கள் கப்பலுக்குக் கொண்டு போனார்கள். வேண்டியதற்கு மேல் வணிகருக்குப் பணம் கொடுத்தார்கள். கொள்ளைத் தங்கம் தொண்டியில் பெரிதும் நடமாடியது. இதனால் மக்கள் அவனைத் தெய்வமாகப் பாவிக்கிறார்கள்" என்ற தலைவன், தனது உரையைச் சற்று நிறுத்தினான்.

"இப்பொழுது மன்னரின் ஓலை கடல்வேந்தனை இந்தத் துறைமுக அதிகாரியாக நியமிக்கிறது. அவன் சொற்படி நடக்கவும் உனக்கு உத்தரவிடுகிறது" என்றார் புலவர்.

"அது மட்டுமல்ல. சேரர் கடற்படைக்கு அவனைத் தலைவனாகவும் நியமிக்கிறது. இதோ பாருங்கள்" என்று ஓலையின் அடிக்குறிப்பைக் காட்டினான் துறைமுகத் தலைவன்.

அடுத்து புலவர் முகத்தில் பெருமகிழ்ச்சி விரிந்தது. "கடல்வேந்தன், சேரக் கடற்படைத் தலைவன். நல்லது, நல்லது! சேர நாடு காப்பாற்றப்பட்டது" என்று குதூகலத்துடன் சொன்னார். அத்துடன், "தலைவரே! கடல்வேந்தனை இங்கு அழைத்து வாரும்" என்று உத்தரவிட்டார்.

"இந்த ஓலையை அவனிடம் கொடுத்து நான் அழைப்பதாகத் தெரிவியும்" என்றார்.

"அப்பொழுது வருவானா?"

"வருவான்"

"ஏன்?"

"அவன் என் மகன்" என்றார் புலவர்.

துறைமுகத் தலைவன் முகத்தில் விரிந்தது அதிர்ச்சியா? அல்லது வேறு ஏதாவது உணர்ச்சியா? புரியவில்லை, தலைவனுக்கு. பெரும் விசித்திரம் என்று எண்ணினான் உள்ளூர. அதைவிட இன்னும் பெரிய விசித்திரம் அன்று மாலை நிகழ்ந்தது.

□

31. அசைந்த கன்னம்! விசித்திர விலாசம்

அன்று பகல் புலவர் உத்தரவுப்படி கடல்வேந்தனை அவனது மரக்கலத்தில் சந்தித்துப் புலவரின் அழைப்பை அவனுக்கு அறிவித்ததும், கடல்வேந்தன் புலவர் உத்தரவைச் சிரம் தாழ்த்தி அங்கீகரித்தான். "மரக்கலத்தில் சில சில்லறை வேலைகள் இருக்கின்றன. அவற்றைச் சீர் செய்து விட்டு மாலை வருவதாகப் புலவரிடம் தெரிவியுங்கள்" என்று கூறிய கடல்வேந்தன், சிறிது சிந்தித்து விட்டு "தலைவரே! என்னுடன் நிலக்கள்ளியும் வருவதைப் பற்றித் தங்களுக்கு ஆட்சேபனையில்லையே?" என்றும் கேட்டான்.

துறைமுகத் தலைவன் முகத்தில் வியப்பைப் படர விட்டுக் கொண்டான். "சேரமன்னரின் கடற்படைத் தலைவர் வருவதையோ, அவரைச் சேர்ந்தவர்கள் வருவதையோ நான் எப்படி ஆட்சேபிக்க முடியும்?" என்று வினவினான் அவன், குரலிலும் வியப்பு ஒலிக்க.

"ஆட்சேபனையில்லை என்பது ஒன்று. அன்புடன் அழைப்பது வேறொன்று" என்று சுட்டிக்காட்டினான் கடல் வேந்தன்.

"நான் சம்பந்தப்பட்ட வரையில் தங்களை அழைப்பதில் புலவரின் ஆணையும், என் அன்பும் இரண்டுமே கலந்திருக்கிறது. தங்களைப் போன்ற ஒரு மகாவீரர் எனது இல்லத்துக்கு விஜயம் செய்வதை நான் பெருமையாகக் கருதுகிறேன்" என்று பதில் சொன்னான் துறைமுகத் தலைவன்.

அந்தப் பதிலில், மேலுக்கு அன்பு குழைந்தாலும், உள்ளூர உதறல் இருப்பதைக் கவனித்த கடல்வேந்தன் புன்முறுவல் கொண்டு, "மாலை கண்டிப்பாய் வருகிறேன், அந்த கட்டளையையும், தங்கள் அன்பையும் அனுபவிக்க" என்று சொல்லி அவன் போவதற்கு அனுமதி கொடுத்தான்.

அந்தக் கப்பலிலிருந்து தப்பினால் போதுமென்று நினைத்த துறைமுகத் தலைவன் வெகுவேகமாக நூலேணியில் இறங்கி கீழிருந்த படகைத் தானே துடுப்புகளால் துழாவிக்கொண்டு கரை சேர்ந்தான். புலவரை உடனடியாகச் சந்தித்துக் கடல்வேந்தன் பதிலையும் தெரிவிக்கவே புலவர் மிகுந்த உற்சாகப்பட்டு, "ஆயிரம் பேர் இருந்தாலும் கடல்வேந்தனுக்கு இணை யார் இருக்க முடியும்?" என்று வினவியதன்றி, "துறைமுகத் தலைவரே! நன்று செய்தீர்! உமது தூது பயன் அளித்திருக்கிறது. இன்றிரவு கடல்வேந்தன் நம்முடன் உணவருந்துவான். அதற்கு ஏற்பாடு செய்யும். மன்னனுக்கு அளிக்கப்படும் விருந்துக்கு இது சிறிதளவும் குறைந்திருக்கக் கூடாது" என்றும் கூறினார்.

துறைமுகத் தலைவன் அவர் அறையிலிருந்து மிகுந்த சிந்தனையுடன் வெளியேறினான்: "இந்தப் புலவர் என்ன செய்கிறார் என்பது எனக்கு விளங்கவில்லை. நான் என்ன பிரமாத தூது சென்று விட்டேன்? என்ன பிரமாத வெற்றியடைந்து விட்டேன்? இவர் அழைப்பைத் தெரிவித்தேன். அந்தக் கொள்ளைக்காரன் ஒப்புக் கொண்டான். இவ்வளவுதானே?" என்று தன்னைக் கேட்டுக்கொண்டான். கடல்வேந்தன் வந்த நாளாய் எல்லாமே விசித்திரமாக நடப்பதை எண்ணிப் பார்த்தான். இதில் ஏதோ ஒரு மர்மம் இருப்பதை தான் உணர்ந்தாலும் அது என்னவென்பது அவனுக்கு விளங்காததால், குழம்பிய மனத்துடன் அன்று பகலைக் கழித்தான். மாலையில் கடல்

வேந்தனை எதிர்கொள்ள சகல ஏற்பாடுகளையும் செய்யத் தொடங்கினான்.

துறைமுக நகரின் முகப்பிலுள்ள படகு தங்கும் கரையில் சேர வீரர்களை நிற்க வைத்தான். கரை முகப்பிலிருந்த தளைகளில் பிணைக்கப்பட்டிருந்த சாதாரணப் படகுகள் அகற்றப்பட்டு, கடல்வேந்தன் படகை மட்டும் பிணைக்க ஏற்பாடு செய்திருந்தான். அவன் உத்தரவுப்படி அவன் மாளிகையும் விழாக்கோலம் பூண்டது. பற்பல விதமான விளக்குகள் துடைக்கப்பட்டு எண்ணெய் திரி இடப்பட்டு, மாலை வந்ததும் ஏற்ற சித்தம் செய்யப்பட்டன.

ஆனால், அத்தனை ஏற்பாடுகளுக்கும் தகுந்தவன் என்ற முறையில் கடல்வேந்தன் அன்று மாலை துறைமுகக் கரையில் வந்து இறங்கினான். சேரர்கள் கடற்படைத் தலைவனுக்கு ஏற்பட்ட உடைகளை அணிந்தும், காலுக்கு மட்டும் அராபியச் சராய் அணிந்தும், இடையில் தனது பெரிய வாளைத் தொங்கவிட்டுக் கொண்டும் கரையில் குதித்துத் தன்னுடன் வந்த நிலக்கள்ளியைக் கைகொடுத்துத் தூக்கி விட்டான்.

நிலக்கள்ளி அன்று பெரிய அரசகுமாரி போல் காணப்பட்டாள். அவள் இடையில் சோழநாட்டுச் சரிகை வேலைப்பாடமைந்த அழகிய நீலப்பட்டுச் சேலை காணப்பட்டதால், படகிலிருந்து கடல்வேந்தன் கையைப் பற்றி ஏறிய அவள், கடலிலிருந்து எழுந்த தேவதை போல் காணப்பட்டாள். அவள் குழல் எடுத்து முன்புறம் கொண்டையிடப்பட்டு ஒரு முத்துச்சரத்தால் பிணைக்கப்பட்டிருந்தது. மார்புக்கச்சையை மறைக்க முயன்று மேற்புறம் மூடியிருந்த மெல்லிய மேலாடை மார்புக்கு ஒரு தனி அழகைக் கொடுத்திருந்தது. அவள் கழுத்திலாடிய நவரத்தின மாலை விலைமதிக்க முடியாதிருந்தது. அதன் மாணிக்க முகப்பு மிகவும் உயர்ந்ததுதான். ஆனால், அவள் இதழ்ச் சிவப்புடன் அதனால் போட்டிபோட முடியவில்லை.

இப்படி கரையேறி வந்த இருவரையும் துறைமுகத் தலைவன் தலைதாழ்த்தி வரவேற்றான், "தாங்கள் நகரத்துக்கு வரவேணும்" என்று முகமனும் கூறினான். வணக்கத்துக்குப் பதில் வணக்கம் செய்யத் தலைதாழ்த்திய கடல்வேந்தன் "தலைவரே! தங்கள் விருந்தினரை வரவேற்கும் முறையிலேயே சேரநாட்டுப் பண்பு இருக்கிறது" என்று அவனும் பதில் சொல்லிவிட்டு நடக்கத் தொடங்கினான்.

"தங்களை அழைத்துச் செல்ல ரதம் வந்திருக்கிறது" என்று எட்ட நின்றிருந்த இரட்டைப் புரவி ரதத்தைக் காட்டினான் துறைமுகத் தலைவன்.

அதைச் சிறிது நேரம் கூர்ந்து நோக்கிய கடல்வேந்தன், "இந்த ரதத்தை எங்கு கொள்ளையடித்தீர்?" என்று வினவினான்.

துறைமுகத் தலைவன் முகத்தில் அதிர்ச்சி தெரிந்தது. "கொள்ளையடித்தேனா?" என்று பதிலிலும் அதிர்ச்சியைக் காட்டினான்.

நிலக்கள்ளி நகைத்தாள். "தவறாக நினைக்காதீர்கள் துறைமுகத் தலைவரே! கொள்ளைக்காரருக்கு என்ன வேடம் போட்டாலும் சுயபுத்தி போகாது. இவரைப் போல் எல்லாரும் கொள்ளையால்தான் எல்லாவற்றையும் சம்பாதிப்பதாக நினைக்கிறார்" என்று சமாதானம் சொன்னாள்.

கடல்வேந்தன் அவளைத் திரும்பி நோக்கி, "நிலக்கள்ளி! நான் கொள்ளையடிக்காவிட்டால் இந்தச் சேலை, அந்த முத்துச் சரம், இந்த நவரத்னமாலை எல்லாம் உனக்கு எப்படி கிடைக்கும்?" என்று வினவினான்.

நிலக்கள்ளி முறுவல் கொண்டு, "கொள்ளையடித்தது இவற்றை மாத்திரந்தானா?" என்று கேட்டு ரதத்தில் சென்று ஏறிப் புரவியின் கடிவாளங்களைக் கையில் ஏந்திக் கொண்டாள். அவள் பின்னால் கடல்வேந்தனும் ஏறி ரதம் பறந்தது ஊருக்குள்.

அவள் பேச்சையும், தனக்கு சொல்லக்கூட இல்லாமல் இருவரும் ரதத்தில் பறந்து விட்டதையும் பார்த்த துறைமுகத் தலைவன் பக்கத்திலிருந்த காவலன் புரவி யொன்றை வாங்கிக்கொண்டு, தன் மாளிகை நோக்கி விரைந்தான். அவன் மாளிகையை அடையுமுன்பு புலவர் அறையில் கடல்வேந்தனும், நிலக்கள்ளியும் பேசிக் கொண்டிருந்தார்கள். அவன் வந்ததும் "தலைவரே! நீரும் அமரும். முக்கிய விஷயங்களைப் பற்றிப் பேசுகிறோம்" என்று அவனையும் உட்காரப் பணித்தார் புலவர்,

அவன் அமர்ந்ததும் புலவர், சொன்னார் "சேரநாட்டுத் துறைமுகங்களுக்கு முன்பிருந்த பாதுகாப்பு இப்பொழுதில்லை" என்று.

துறைமுகத் தலைவனுக்கு ஏதும் விளங்காததால். "அப்படியொன்றும் ஆபத்தில்லையே" என்றான்.

"தொண்டியில் முன்பு இருந்த யவனர் குடியிருப்பில் எத்தனை பேர் இருந்தார்கள்?" என்று புலவர் கேட்டார்.

"மிஞ்சினால் இருநூறு குடும்பங்கள் ஆரம்பத்தில் இருந்தன" என்று பதில் கூறினான் தலைவன்.

"இப்பொழுது?" புலவர் கேட்டார்.

"இரண்டு மடங்கு இருக்கும்," என்றான் தலைவன். இதை எதற்காக புலவர் விசாரிக்கிறார் என்பதை அறியாமல்.

"இரண்டு மடங்கில் இப்பொழுது எவ்வளவு பேர் இருப்பார்கள்?" புலவர் மீண்டும் கேட்டார்.

"சொல்ல முடியாது. இங்குள்ள யவனர்கள் அடிக்கடி வாணிபத்துக்காக முசிறி போகிறார்கள். திரும்பவும் வருகிறார்கள்," என்றான் துறைமுகத் தலைவன்.

கடல்வேந்தனும் நிலக்கள்ளியும் பரஸ்பரம் திடீரெனப் பார்த்துக் கொண்டார்கள். அதை அடுத்து நிலக்கள்ளி கேட்டாள், "தலைவரே! இங்கு சமீபத்தில் முசிறியிலிருந்து யாராவது வந்தார்களா?" என்று.

"யாரோ கிளேஸியஸாம். நல்ல மாலுமியாம். அவன் வந்தான். இங்குள்ள சிலரைப் படகுகளில் அழைத்துச் சென்றான்" தலைவன் இதை சர்வசாதாரணமாகக் கூறினான்.

"அவன் தனியாகவா வந்தான்?" என்று வேந்தன் வினவினான்.

"யாரோ யூசப்பாம். அராபியன் மாதிரி இருக்கிறான். இருவரும் வந்து உணவுப் பொருள்களை ஏராளமாக வாங்கிச் சென்றதாக நமது ஒற்றர்கள் சொன்னார்கள்" என்றான் தலைவன்.

"அவர்களை நீங்கள் விசாரிக்கவில்லையா?" என்று வேந்தன் கேட்டான்.

"இல்லை. இங்கு வாணிபம் செய்யும் யாவருக்கும் தடை கிடையாது. தடை கூடாதென்பது மன்னர் கட்டளை."

"சரி. க்ளேஸியஸும், அராபியனும் உணவுப் பொருள்களைத் தவிர வேறு ஏதாவது வாங்கினார்களா?"

"இல்லை."

அத்துடன் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்த கடல் வேந்தன், "சரி, நாம் விருந்து அறைக்குப் போவோம்." என்று சொல்ல, எல்லாரும் விருந்து மண்டபம் சென்றார்கள். கடல்வேந்தன் விருந்தை மிகவும் சுவைத்து உண்டான். கடின பதார்த்தங்களை அனாயாசமாகக் கடித்தான்.

துறைமுகத் தலைவன் சரியாகச் சாப்பிடவில்லை. கடல்வேந்தன் சாப்பிடுவதையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். உணவருந்தி முடிந்த பிறகு கடல்

வேந்தன் புலவரை நோக்கி, "புலவர் பெருமானே! என்னை அழைத்த காரணம் என்ன?" என்று வினவினான்.

"ஒன்றுமில்லை, பார்த்து நாளாயிற்றே என்றுதான் அழைத்தேன். தவிர, நீ கொள்ளைக்காரனாயிருந்து கடற்படைத் தலைவனாக மாறிவிட்டாய். இந்தப்புதுப்பதவியில் நீ ஒட்டுகிறாயா என்று பார்க்கவும் அழைத்தேன்." என்றார்.

புறப்படும் சமயத்தில் கடல்வேந்தன் புலவரை நோக்கி, "நீங்கள் என்று புறப்படுகிறீர்கள் முசிறிக்கு?" என்று கேட்டான்.

"நாளை காலையில்" என்றார் புலவர்.

"இன்னும் இரண்டு நாள் தங்கிச் செல்லலாமே" என்றான் துறைமுகத் தலைவன்.

"வந்தவேலை முடிந்துவிட்டது. இனித் தாமதிக்க இயலாது" என்றார் புலவர்.

கடல்வேந்தன் தனது மரக்கலத்துக்குப் போகத் திரும்பியவன் எதையோ நினைத்துக்கொண்டு, "புலவரே! முசிறியின் எல்லையில் படைத்தளம் இருக்கிறதல்லவா?"

"ஆம்" என்றார் புலவர்.

"அங்கு ஒருநாள் தங்கும். மறுநாள் இரவு அங்கு ஒரு பெரியவர் வருவார். அவரிடம் இந்த ஓலையைக் கொடுங்கள்" என்றான்.

தலையை அசைத்தார் புலவர். ஓலையிலிருந்த விலாசத்தைப் பார்த்தார். விலாசம் "புலவர் தங்கோ! பிரதமை 45 பூசம்" என்றிருந்தது.

அந்த விலாசத்தை உரக்கவே படித்தார் புலவர், "இது விலாசமா?" என்றும் வினவினார்.

"ஆம்" என்ற கடல்வேந்தன் நகைத்தான் கன்னங்கள் அசைய. அதைக் கண்ட துறைமுகத் தலைவன் பேரதிர்ச்சியடைந்தான். அதைக் கவனிக்கவே செய்தாள் நிலக்கள்ளி, அதற்கு மேல் அங்கு தாமதிக்க இஷ்டப்படாமல், "சரி....சரி, நேரமாகிறது, வாருங்கள்" என்று கடல்வேந்தனை கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வாயிலுக்குச் சென்று அங்கிருந்த ரதத்தில் ஏறினாள். கடல்வேந்தனும் ஏற, புரவிகள் பறந்தன. கடலோரம் வந்ததும் படகைத் துழாவி மரக்கலம் வந்து சேர்ந்த நிலக்கள்ளி தனது அறையை அடைந்ததும், "உங்களை யார் சிரிக்கச் சொன்னது?" என்று சீறினாள். அதுடன் அவன் கன்னத்தைத் தனது இரு கைகளாலும் இருமுறை அசைத்துத் தனது கன்னமொன்றால் அவன் கன்னமொன்றை இழைத்தாள்.

கடல்வேந்தன் முகத்தில் காதல் விரியவில்லை. சந்தேகமும் அதிர்ச்சியுமே விரிந்தன. "அவன் கண்டு கொண்டானா?" என்று மட்டும் கேட்டான்.

ஆமென்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தாள் நிலக்கள்ளி.

□

32. கடற் கள்ளி

கடல்வேந்தன் மரக்கலத்து அறையில், "உங்களை யார் சிரிக்கச் சொன்னது?" என்று அவனைக் கடிந்து கொண்டு அவனது கன்னத்துடன் தனது கன்னத்தை வைத்து இழைத்த நிலக்கள்ளி சற்று விலகி நின்று அவன் முகத்தை ஏறிட்டு நோக்கினாள். அந்த சமயத்தில் வேந்தனுக்கு ஏதோ சந்தேகம் விரிந்ததால், "அவன் கண்டு கொண்டானா?" என்று மட்டும் கேட்டான் குரலில் சந்தேகத்துடன் சிறிது அதிர்ச்சியும் கலந்து ஒலிக்க.

அவன் முகத்தில் துலங்கிய உணர்ச்சிகளைக் கண்ட நிலக்கள்ளி லேசாக நகைத்து "உலகத்தை அதிர்ச்சியுறச் செய்யும் கடல்வேந்தருக்கும் அதிர்ச்சியை அளிக்கும் சந்தர்ப்பங்கள் உண்டு என்பதை இன்றுதான் கண்டேன்" என்றாள். அத்துடன் வெளியே செல்லத் திரும்பினாள்.

அவளுக்கு முன்பு சென்று கதவைத் தாளிட்டுவிட்ட கடல்வேந்தன் 'இரு அவசரப்படாதே" என்று தடுத்தான் அவளை. அத்துடன் அவள் முதுகைப் பிடித்து அறைக் கோடியிலிருந்த மஞ்சத்துக்கும் அழைத்து வந்தான்.

அவன் வலிமையான கை அவள் பஞ்சு முதுகில் ஏதோ உலக்கை போல் கடினத்துடன் விழுந்து கிடந்தது. அவன் வலுவையும், அவன் தன்னைப் பற்றி இழுத்த காரணத்தையும், தனக்கு வெகு அருகில் அவன் அறை மூலையிலிருந்த கட்டில் மீதன்பட்டதையும் கவனித்த நிலக்கள்ளி, "ஆமாம், இங்கு நான் எதற்காக இருக்க வேண்டும்? இங்கு என்ன வேலை எனக்கு?" என்று போலி உஷ்ணம் ஒலித்த குரலில் வினவினாள்.

"வேலை இருக்கிறது. சொல்கிறேன். உட்கார்ந்து கொள்" என்று கட்டிலில் அவளை உட்கார வைத்தான் கடல்வேந்தன். அவனும் கூட உட்கார்ந்து தனது இடக் கையால் அவள் கழுத்தை வளைத்து தனது தோளில் சாத்திக் கொண்டான்.

"வேலையைச் சொல்லுங்கள்" என்று கேட்டாள் நிலக்கள்ளி. சொற்களை அதிகாரமாகத்தான் உதிர்க்க முயன்றாள், ஆனால் அவற்றில் அதிகாரத்தைவிட சங்கடம் நிரம்பி நின்றது.

அதைக் கவனிக்கவே செய்த கடல்வேந்தன் அவள் கழுத்தை அணைத்த கையை அகற்றாமலே, "நிலக்கள்ளி! என்ன அவசரம்? சிறிதுநேரம் கழித்துத் தான் சொல்கிறேனே" என்றான்.

"இப்பொழுதே இரண்டாம் ஜாமம் வந்துவிட்டது" என்று சுட்டிக் காட்டிய நிலக்கள்ளி, அவனது வலக்கை தனது இடையின் முன்பக்கத்தில் ஊர்வதைக் கண்டதும் அதைத் தன் கைகளால் பிடித்து நிறுத்தினாள். "கொஞ்சம் நிதானமிருக்கட்டும்" என்றும் எச்சரித்தாள்.

கடல்வேந்தன் தன் கையைத் தேக்கிய பூங்கரங்களை நோக்கினான். பிறகு பூவைப் போலவே மிருதுவான அவள் கன்னங்களை நோக்கினான். பிறகு அவள் கன்னமொன்றில் தனது கன்னத்தால் இழைத்து கன்னத்தை லேசாகத் திருப்பி அவள் உதடுகளைத் தனது உதடுகளால் தீண்டினான்.

அவன் வலிய உதடுகள் தனது உதடுகளைத் தீண்டியதால் சற்றே உணர்ச்சி வசப்பட்ட நிலக்கள்ளி, 'வேந்தரே! உங்கள் நேர்மையை இந்த மாக்கலத்து மாலுமிகள் நம்புகிறார்கள். என் தந்தையும் நம்புகிறார். கடல்வேந்தன் கொள்ளைக்காரனெனினும் நேர்மிதவறாதவன் என்ற பெயர்

இருக்கிறது. அது தவிர, நீங்கள் எனக்களித்த உறுதியும், ஏன் உங்கள் சபதமும் இருக்கிறது. இவற்றையெல்லாம் பெண்ணாசையால் காற்றில் விடாதீர்கள்'' என்றாள், வேட்கையும், கடமையும் கலந்து ஒலித்த குரலில்.

கடல்வேந்தன் கண்களில் விவரம் புரியாத ஒளி ஒன்று தோன்றியது. ''நீ சொன்னதற்கெல்லாம் முரணாக என்ன நடந்துவிட்டது?'' என்று வினவினான்.

''எதுவும் நடக்கவில்லை'' என்று கூறிய நிலக்கள்ளி, தனது கழுத்தைச் சுற்றியிருந்த அவன் கையை நீக்கிவிட்டு மெல்ல அவன் மடியில் சாய்ந்து தனது மலர்க் கண்களை அவனை நோக்கி நிமிர்த்தினாள். ''நடப்பது நமதிஷ்டம்; நினைப்பது பிறர் இஷ்டம்'' என்ற நிலக்கள்ளி தனது பாதி உடலை அவன் உரத்த மடியில் திருப்பினாள் லேசாக.

கடல்வேந்தன் அவள் முகத்தைப் பார்த்தான். பிறகு அவள் உடல் மடியில் திரும்பியதால் தன்னை நோக்கி முறைத்த மொட்டுகளை நோக்கினான். உள்ளே அவள் இதயம் வேகமாக அடித்துக் கொண்டதால் அந்த மொட்டுகள் அசைந்த அழகையும் கவனித்தான். அதன் விளைவாக தனக்குத் தானே ஏற்படுத்திக் கொண்ட கட்டுப்பாட்டையும் மீறி அவள் மார்பில் தனது முகத்தைப் பதித்தான் சில விநாடிகள். பிறகு லேசாக முகத்தை நிமிர்த்தி, ''என்ன புதிர் போடுகிறாய் நிலக்கள்ளி!'' என்றும் கேட்டான்.

நிலக்கள்ளி அவனது கைகளுடன் தனது கைகளைப் பின்னிக் கொண்டாள். ''நான் சொன்னதில் புதிர் ஏதுமில்லை. இத்தனை நாள் இரவு மூண்டதும் என்னை எனது அறைக்கு அனுப்பி விடுவீர்கள். அதனால் என்னை சாதாரண மாலுமியாக மட்டும் நடத்துவதாக மற்ற மாலுமிகள் நினைத்தார்கள். இன்று இரண்டாம் ஜாமத்தில் உங்கள் அறையில் தனித்திருக்கிறேன். எப்படி இருக்கிறேன் என்பதை நீங்களே பார்க்கிறீர்கள். இதைப்பற்றி மாலுமிகள் என்ன நினைப்பார்கள்?'' என்று வினவினாள்.

அவன் அவள் மலர்முகத்தை நோக்கி நன்றாகக் குனிந்தான் மீண்டும். ''என்ன நினைப்பார்கள்?'' என்று கேட்டான்.

''உங்கள் நேர்மையை நினைத்து நகைப்பார்கள். என்னைப் பற்றி அவர்கள் நினைக்கக்கூடியது ஒன்றுதான்'' என்ற நிலக்கள்ளி பேச்சைப் பாதியில் நிறுத்தினாள்.

கடல்வேந்தன், அவள் கன்னத்துடன் தனது கன்னத்தை வைத்து நன்றாக இழைத்தான். பிறகு மடியில் கிடந்த அவளைத் தூக்கிக் கட்டிலில் நன்றாகக் கிடத்தி அவள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு தனது கையொன்றை அவள் உடலுக்குக் குறுக்கே போட்டான். அந்த நிலையில் அவளை நோக்கி, ''நிலக்கள்ளி! யார் எதை நினைத்தாலென்ன? நமக்கென்று ஒரு கொள்கை கிடையாதா?'' என்று கேட்டு அவள் உடலை குறுக்கே விழுந்த கையால் இறுக்கினான்.

அதைக் கவனித்த நிலக்கள்ளி லேசாக நகைத்தாள். ''கொள்கை திவ்யமாக இருக்கிறது'' என்று சொன்னாள்.

''ஏன் நமது கொள்கைக்கு என்ன?'' என்று கடல்வேந்தன் மீண்டும் வினவினான்.

''அறைக்குப் போகத் திரும்பியவளை இழுத்து வந்து கட்டிலில் உட்கார வைத்தீர்கள். இப்பொழுது படுக்க வைத்திருக்கிறீர்கள்...அடுத்து...''

''அடுத்து?''

''உங்கள் பித்தம் எந்த நிலைக்குப் போகுமோ?''

இதைக் கேட்ட கடல்வேந்தன் அவளை நோக்கிக் குனிந்து ''அடுத்த நிலை என்ன? எந்த நிலையைச் சொல்கிறாய்?'' என்று மெதுவாக வினவினான்.

நிலக்கள்ளி உணர்ச்சி மிகுதியால் கண்களை மூடிக் கொண்டாள். "சொல்லத் தேவையில்லை" என்றாள் செவ்விய உதடுகளை மெதுவாக அசைத்து.

"சொல்லத் தேவையில்லையா?" வேந்தன் உணர்ச்சி கொந்தளித்த குரலில் கேட்டான்.

"சொல்லத் தேவையுமில்லை, சொல்லித் தெரிவதுமில்லை."

"விளங்கவில்லை"

"வாழ்க்கையில் போதிக்கப்படுவது சிலதான்."

"மற்றவை?"

"பிறக்கும் போதே பிறக்கின்றது. வளரும்போது வளர்கிறது. இணையும்போது இணைகிறது. இதற்குப் பாடம் சொல்ல எத்தப் புலவரும் வேண்டாம்."

"இதற்குப் புலவரே கிடையாதா?"

"உண்டு."

"யார் அவர்?"

"இயற்கை என்பவர்"

இப்படிப் பேசிய நிலக்கள்ளி சற்றே புரண்டு படுத்தாள், கட்டிலில். அதனால் எழுந்தஒரு புறத்துப் பின்னழகு மிகப் பெரிதாகத் தெரிந்தது, கடல் வேந்தன் கண்களுக்கு. அதன்மேல் முகத்தை வைத்த கடல்வேந்தன், "அடீ நிலக் கள்ளி! நீ மிகப் பொல்லாதவள்" என்றான்.

உணர்ச்சிகள் முற்றிவிட்டதால் அவளும் சுயநிலை இழந்தாள். மரியாதையைக் கைவிட்டுப் பேசினாள். "கொள்ளைக்காரனே! நீ மட்டும்என்னவாம்? என்உடலை மட்டுமன்றி, உணர்ச்சிகளையும் புரட்டுகிறாயே, அயோக்

கியனே! கொடியவனே! என்னை ஏன் கொடுமைப் படுத்துகிறாய்?" என்று கேட்டு சரேலெனத் திரும்பி அவன் தலையைத் தனது கைகளால் தனது பின்னெழில் மேடையிலிருந்து முன்புற மடிக்குப் புரட்டினாள்.

கடல்வேந்தன் உணர்ச்சிகளும் காற்றில் பறந்தன. "அடீ! நிலக்கள்ளி! நீ நிலத்தில் மட்டுமல்ல கள்ளி, கடலிலும் கள்ளிதான். கடற்கள்ளி! கடல்வேந்தனையே மயக்கிய உன்னைத் தண்டிக்காமல் விடுவது தவறு" என்று மல்லாந்த நிலையில் திண்மையான அவள் தொடைகள் சமைத்த மடியில் தலையைப் புரட்டிப் பேசினான்.

அவள் பேசவில்லை. அவன் கையொன்றை எடுத்துத் தன் இடையில் வைத்து அழுத்திக் கொண்டாள். "வேந்தா!" என்று மெதுவாக அழைத்தாள்.

அவன், அவள் மடியிலிருந்து மெல்ல எழுந்து, அவள் மீது ஊர்ந்து, காதருகில் உதடுகளைக் கொணர்ந்து, "என்னடீ?" என்று கேட்டான்.

நிலக்கள்ளியின் கண்கள் மூடிக்கிடந்தன. "வரவர அடீ பட்டம் அதிகமாகிறது" என்று முணுமுணுத்தாள்.

"நீ என் அடிமைதானே! எப்படி அழைத்தால் என்ன?" என்று அவன் கேட்டான் அவள் காதுக்கருகில்.

அவளும் கேட்டாள் மெதுவாக, "யார் யாருக்கு அடிமை?" என்று.

"காட்டுகிறேன் பார்" என்று சொல்லி எழுந்த கடல் வேந்தன் அவளை மீண்டும் உற்று நோக்கினான்.

அறை விளக்கில் அலைந்த ஆடைகளுடன் அவள் தெய்வமோகினி போல் மிக அழகாகக் கட்டிலில் கிடந்தாள். சாளரத்தின் மூலம் திடீரென அடித்த கடல்

காற்று அவள் மேலாடையை விலக்கியதைக்கூட அவள் லட்சியம் செய்யவில்லை. அவள் பக்கத்தில் அமர்ந்த கடல்வேந்தன் அவள் கால்களைப் பற்றிப் பிடித்தான். நிலக்கள்ளி நகைத்து, "யார், யாருக்கு அடிமை?" என்று கேட்டாள்.

"நான் தான் உனக்கு அடிமை" என்று கடல்வேந்தன் அவள் கால்களைப் பற்றியவண்ணம், அவள் அணிந்திருந்த நீலநிறச் சேலையுடன் விளையாட ஆரம்பித்தான்.

"உம்" எச்சரித்தாள் நிலக்கள்ளி, "கையை எடுங்கள்" என்றும் சீறினாள்.

அவன் கையை எடுத்து அவள் உடலைத் தனது இருகைகளாலும் தூக்கி தனது மடியில் கிடத்திக் கொண்டான். "அடுத்து என்ன?" என்றும் கேட்டான்.

"அவனை அனுப்புங்கள்," என்றாள் நிலக்கள்ளி.

"நான் வேண்டாமா?" என்று கடல்வேந்தன் கேட்டான்.

"வேண்டும்"

"அவன்?"

"அவனும் வேண்டும்"

"இரண்டு பேருமா?"

"ஆம்."

இதைக் கேட்ட கடல்வேந்தன் "அடீ! கடற்கள்ளி! இருவருமா வேண்டும் உனக்கு? உன்னை என்ன செய்கிறேன் பார்." என்று கூறி கதவிடம் சென்று நீண்ட நேரம் நின்றான். பிறகு பரமவேகத்துடன் திரும்பக் கட்டிலுக்கு வந்தான். அவன் அசுரவேகம் அவளுக்கு அச்சத்தை அளித்தது. ஆனால், அச்சம் தவிடு பொடியாகும் நிலை அது. விரகம் பூர்ணமாகத் தலையெடுத்த நேரம் அது. அடுத்து நடந்தது..... ஊகத்துக்கு அப்பாற்பட்டது.

□

33. வம்பு உலகம்

பண்புள்ள மனிதனுக்கும், பண்பில்லா மனிதனுக்கும் ஒரு வித்தியாசமுண்டு. பண்பில்லாதவன், உணர்ச்சிகள் மேம்படும்போது அவற்றின் வேகத்துக்கு இடங் கொடுத்து அவற்றுடனேயே சென்று அழிந்துவிடுகிறான். பண்புள்ளவன், உணர்ச்சிகள் உந்தும்போது சற்றே திகானிக்கிறான். அவற்றைத் தன்வசமாக்கிக் கொள்கிறான். அதனால் அவன் கடமையிலிருந்தோ, கண்ணியத்திலிருந்தோ சிறிதும் தவறுவதில்லை. பண்பே உருவான கடல்வேந்தன், கதவைத் தாளிட்டு வேகமாகக் கட்டிலை நோக்கி வந்தபோது நிலக்கள்ளியும் அவனை வரவேற்கச் சித்தமாயிருந்தாள். விரகம் அவளைப் பூர்ணமாக ஆட்கொண்டிருந்தது. கொழு கொம்பை நாடி, கொடி செல்வது இயற்கை. ஆனால், கொழுகொம்பு கொடியை நாடி வருமா? அத்தகைய விநோத நிலை ஏற்பட்டால் கொடி அதன்மீது தொத்தி ஏறிப் படராதிருக்கத்தான் முடியுமா?

கடல்வேந்தன் கதவைத் தாளிட்டதுமே கட்டிலில் ஒருக்களித்த நிலையிலிருந்து மல்லாந்து படுத்த நிலக்கள்ளி தனது கைகளால் அவனை வளைக்கச் சித்தமாயிருந்தாள். அந்த வேளையில் அவள் தந்தையை மறந்தாள். சமூகத்தை மறந்தாள். கடல் வேந்தனைத் தவிர மற்ற எல்லாவற்றையுமே மறந்தாள். அப்படி இருந்தவளை நோக்கி வேகமாக வந்த கடல் வேந்தன் கட்டிலை அணுகியதும் சட்டென்று நின்றான். அவன் ஏதோ சிந்தனை வயப்பட்டுவிட்டதை அவன் முகம் தெளிவாகக் காட்டியது. அப்படி சிந்தித்த அவன் தன் வேகத்தையெல்லாம் உதறித் தலையை இருமுறை ஆட்டிக் கொண்டான். பிறகு கட்டிலின்

முகப்பில் உட்கார்ந்து கொண்டு, கட்டிலில் கிடந்த கட்டழகியை நோக்கினான். அவள் அழகெல்லாம் திரண்டு விகசித்த புஷ்பம் போல் கிடந்தாள்.

அவள் நெற்றிமீது கையை வைத்த கடல்வேந்தன் மிக மெதுவாக, உணர்ச்சி குறைந்த குரலில் கேட்டான், "நேரம் என்ன இருக்கும் நிலக்கள்ளி?" என்று

அவள் மல்லாந்து கிடந்த நிலையில் புன்முறுவல் கொண்டாள். "நேரத்துக்கு என்ன வந்துவிட்டது இப்பொழுது?" என்று கேட்டாள்.

கடல்வேந்தன் கை அவள் நெற்றியிலிருந்து கன்னத்துக்கு வந்து அதைத் தடவலாயிற்று. அப்படி தடவிக் கொண்டே சொன்னான், "இரண்டாவது ஜாமத்தில் பாதி தாண்டியிருக்கும் போல் தெரிகிறது" என்று.

நிலக்கள்ளி மல்லாந்த நிலையிலிருந்து சிறிது புரண்டு தனது கையொன்றை அவனது இடையில் செலுத்தினாள். "தாண்டியிருந்தால் என்ன?" என்று கேட்டாள்.

"தாண்டியிருந்தால் நீ உன் அறைக்குப் போகவேண்டும்" என்றான் கடல்வேந்தன்.

"எது என் அறை?" என்று கேட்ட நிலக்கள்ளி நகைத்தாள்.

கடல்வேந்தன் நகைக்கவுமில்லை. அவளைப் பார்க்கவுமில்லை. கூரை மீது கண்களை ஓட்டிய வண்ணம், "உப தலைவன் அறை. முன்பு க்ளேஸியஸ் இருந்தானே, அந்த அறையைத்தானே உனக்குக் கொடுத்தேன்?" என்று கேட்டான்.

நிலக்கள்ளி மீண்டும் நகைத்தாள். "ஐயா வேந்தரே!" என்று மரியாதையாக அழைக்கவும் செய்தாள்.

"என்ன உபதலைவி?"

"நேற்றுவரை கிளேஸியஸின் அறைதான் என் அறை."

"இன்று முதல்?"

"இந்த அறைதான் எனக்கும். தலைவன் இருக்கும் அறையில்தானே தலைவியும் இருப்பாள்?" இதைத் திட்டமாகச் சொன்னாள் நிலக்கள்ளி.

கடல்வேந்தன் பெருமூச்செறிந்து, "நிலக்கள்ளி" என்று கடுமையாக அழைத்தான்.

"என்ன?" அவளும் குரலில் சற்றுக் கடுமையைக் காட்டினான்.

"நீ இன்னும் தலைவியாகவில்லை."

"யார் சொன்னது?"

"நான் சொல்கிறேன். நீ உப தலைவிதான்."

"ஓ! கப்பல் பதவியைச் சொல்கிறீர்களா?"

"வேறெந்தப் பதவி இருக்கிறது இங்கே?"

"காதலின் பதவி இல்லையா?"

"காதலின் பதவியா?"

"ஆம். அது தருவது தலைவியின் பதவி. தலைவனுக்கு தலைவி உண்டு, இலக்கியம் கண்ட உண்மை இது."

கடல்வேந்தன் இதற்குப் பதில் சொல்ல முடியாமல் திணறினான். "நமக்கு இன்னும் திருமணமாகவில்லை" என்று மெல்லச் சுட்டிக் காட்டினான்.

"ஆக, எத்தனை நேரம் ஆகும்?" என்று கேட்ட நிலக்கள்ளி, அவன் இடையை நன்றாக இறுக்கிப் பிடித்தாள்.

கடல்வேந்தன் கூரையிலிருந்து கண்களைக் கட்டிலுக்குத் திருப்பினான். சற்றுத் திரும்பியும் உட்கார்ந்து "உனக்குப் பைத்தியம் ஏதும் இல்லையே?" என்று நிலக்கள்ளியை நோக்கிக் கேட்டான்.

நிலக்கள்ளி கட்டில் முகப்பில் உட்கார்ந்த கடல் வேந்தனைத் தன்னை நோக்கி இழுத்து, "அப்படி என்ன திடீர் சந்தேகம் வந்துவிட்டது?" என்று வினவினாள்.

"திருமணமாக எத்தனை நேரமாகும் என்று கேட்டாய். திருமணத்துக்கு நாள், நட்சத்திரம் பார்க்க வேண்டாமா? மற்ற ஏற்பாடுகள் செய்ய வேண்டாமா?" என்று கடல்வேந்தன் கேட்டான்.

நிலக்கள்ளி அவனை வலிய இரு கைகளாலும்பிணைத்த வண்ணம் "நீங்கள் என்ன சாதி?" என்று கேட்டாள்.

"சாதியில் எனக்கு நம்பிக்கை இல்லை" என்றான் கடல்வேந்தன்.

"அப்படியானால் திருமணம் என்று தனிச் சடங்கு தேவையில்லை" என்ற நிலக்கள்ளி அவன் கழுத்தை இரு கைகளாலும் இழுத்துத் தன் கன்னத்தோடு அவன் கன்னத்தை வைத்துக் கொண்டாள்.

அவள் வாதத்தை எதிர்க்க முடியாததால் இனபேதத்தில் இறங்கிய கடல்வேந்தன், "நான் க்ஷத்திரியன்" என்று சொன்னான்.

"அப்படியானால் திருமணத்துக்கு நாள் தேவையில்லை. க்ஷத்திரியர்களுக்கு காந்தர்வ விவாகம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது."

எதற்கும் நிலக்கள்ளி ஒரு பதில் வைத்திருப்பதைக் கண்ட கடல்வேந்தன் வீண் சர்ச்சையை விட்டு, உள்ள நிலைக்குத் திரும்பி, "நிலக்கள்ளி! நீ சொல்வதெல்லாம் வாதத்திற்கு சரி. ஆனால் நான் உன்னைத் தனியாக

அழைத்து வந்த போது உன்னை மாசு மரு இல்லாமல் திரும்ப உன் தந்தையிடம் சேர்த்து விடுவதாக சபதம் செய்தேன். அதிலிருந்து நான் தவறுவது உன் குடும்பத்துக்கும், என் குடும்பத்துக்கும் துரோகம் செய்வதாகும். தவிர, நான் உன்னை இரவு முழுவதும் இங்கு நிறுத்திக் கொண்டால் மாலுமிகள் என்ன நினைப்பார்கள்?" என்று கேட்டான்.

நிலக்கள்ளி மெதுவாக நகைத்தாள். "வேந்தரே! உமக்குச் சிறிது அறிவு இருக்குமென்று நினைத்தேன்" என்றாள்.

"இப்பொழுது இல்லையென்று நினைக்கிறாயா?" என்று வினவினான் வேந்தன்.

"ஆம். சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் என்னை இந்த அறையில் இத்தனை நேரம் வைத்துக் கொண்டிருப்பதைப் பற்றி மாலுமிகள் என்ன நினைப்பார்கள்? தவம் செய்கிறீர்கள் என்று நினைப்பார்களா?" என்று வினவிய நிலக்கள்ளி, "வேந்தரே! வீண் சிந்தனைகளை விடும்" என்றுகூறி விட்டு அவனை மெதுவாகத் தன் மீது சாய்த்துக் கொண்டாள். கட்டிலின் முகப்பிலிருந்து திடீரென சாய்க்கப்பட்ட கடல் வேந்தன் நிலைகுலைந்தான். அவள் சற்று நகர்ந்து கொண்டு இடம் விட்டாலும், அவன் உடலில் பாதி அவள் மீதே இருந்தது. அந்த உடலின் பகுதிகளின் மீது அவள் புஷ்பங்கள் யுரண்டன. கன்னமலர் கன்னத்தோடும், மார்புப் பங்கயங்கள் மார்போடும் இணைந்ததால் மீண்டும் உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்த கடல் வேந்தன், அவளை ஒரு கையால் அணைத்தான். அவன் உறுதியெல்லாம் அகன்றது. பண்பாட்டு நினைப்பெல்லாம் பறந்தது. அவன் ஒரு கை அவளை அணைத்துத் தூக்க இன்னொரு கை அவள் பூவுடலெங்கும் அலைந்தது.

உவகையின் உச்சியிலிருந்தாள் மந்திரி மகள். அவள் உணர்ச்சி அடிக்கடி பெருமூச்சாக வந்து கொண்டிருந்தது. கைகள் கடல்வேந்தனைச் சுற்றிக் கிடந்தன.

இதழ்கள், அவன் இதழ்களைக் கடித்தன, அவள் கையொன்று அவன் கன்னத்தைப் பிடித்துப் பலமாக இழுத்தது. "கன்னத்தை நிமிண்டட்டுமா?" என்று கேட்ட நிலக்கள்ளி, சட்டென்று எச்சரிக்கை அடைந்து, அவன் இதழ்களிலிருந்து தனது இதழை மீட்டுக்கொண்டு அவன் முகத்தை உற்று நோக்கினாள். "வர வர இது நகர்ந்து விடுகிறது" என்று கன்னத்தைச் சுட்டிக் காட்டினாள்.

அதைக் கேட்டதும் கடல்வேந்தன் வேகமாக எழுந்தான். அந்த அறை மூலையில் ஒரு தகளியை நோக்கிச் சென்று அதில் தன் முகத்தை ஆராய்ந்தான். பிறகு திருப்தியடைந்தவனாகத் திரும்பி, "சரியாகத்தானிருக்கிறது நிலக்கள்ளி! அதை நாளை சரிப்படுத்தி விடுகிறேன்" என்று கூறினான். அப்படிக் கூறிவிட்டுத் திரும்பியவன் கட்டிலிலிருந்த நிலக்கள்ளியைத் தனது இரு கைகளாலும் தூக்கி எடுத்துக் கொண்டு, "நிலக்கள்ளி! நாம் இன்னும் சிலநாள்கள் பொறுக்கத்தான் வேண்டும். கண்களை மூடிக் கொள்" என்றான்.

"கண்ணை மூடுவானேன்?"

"மாலுமிகள் தவறாக நினைக்காதிருக்க."

"பூனை கண்ணை மூடினால் உலகம் அஸ்தமித்து விடுமா?"

"மூடிக் கொள்ளேன்" என்று கடல்வேந்தன் வலியுறுத்த, அவள் கண்ணை மூடிக்கொண்டாள். அவளைக் கைகளில் தாங்கிய வண்ணம் கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றான். சற்று எட்ட காவலிருந்த மாலுமியை அழைத்து, "உபதளபதி மூர்ச்சையாயிருக்கிறார். ஒரு பந்தத்தை எடுத்துவா. அவர்கள் அறையில் விட்டு வருவோம்" என்று கூறி மாலுமி பந்தம் காட்ட நிலக்கள்ளியை கிளேஸியஸின் அறைக்கு எடுத்துச் சென்று படுக்க வைத்தான்.

"தலைவரே! உபதளபதியாருக்கு சிகிச்சை ஏதாவது செய்ய வேண்டுமா?" என்று கேட்டான் மாலுமி.

"நானே செய்துவிட்டேன். நீ போ. நான் வருகிறேன்" என்று கூற மாலுமி நடந்தான்.

அவன் சென்றதும், "சிகிச்சை முடிந்து விட்டதா?" என்று கேட்டாள் நிலக்கள்ளி.

"முக்கால்வாசி முடிந்துவிட்டது. மீதியை அப்புறம் முடிப்போம்" என்று கூறி அவளை ஒருமுறை அணைத்து வெளியேறிய கடல்வேந்தன், மரக்கலப் பலகையில் சாய்ந்து இரு மாலுமிகள் கடலைப் பார்த்துக் கொண்டு மெதுவாகப் பேசிக் கொண்டிருந்ததைக் கவனித்தான். மாலுமிகளுள் ஒருவன் சொன்னான். "சிகிச்சையாவது, மண்ணாங்கட்டியாவது, சுத்தப் பொய்" என்று.

"பெரிய இடத்து விவகாரம் இப்படிதான்" என்றான் இன்னொருவன்.

அதைக் கேட்டு முறுவல் கொண்ட வேந்தன், "ஊரார் உலகம் யாரையும் விடாது" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு, தனது அறையை நோக்கி நடந்தான்.

□

34. மந்திராலோசனை

கிளேஸியஸின் பழைய அறையில் நிலக்கள்ளியை விட்டு தனது அறைக்கு வந்த பின்பும், கடல்வேந்தன் உறக்கம் பிடிக்காமல் கட்டிலில் படுத்துக் கூரையை நோக்கி ஏதோ சிந்தனை வயப்பட்டிருந்தான். தான் மட்டும் இஷ்டப் பட்டிருந்தால் நிலக்கள்ளியை இன்று பூர்ணமாக அடைந்திருக்க முடியும் என்று நினைத்த கடல்வேந்தன், 'ஏன் அப்படி அடையவில்லை? காரணம் கோழைத்தனமா?' என்று தன்னைத்தானே வினவிக் கொண்டான். 'இல்லை, காரணம், கோழத்தனமல்ல. சேர வம்சத்தின் நெறியின் பலம் என்னைக் கட்டுப்படுத்தி விட்டது. கடைசி நிமிஷத்தில் எனக்கு மயக்கத்தை நீக்கி, சுய உணர்வை அளித்துவிட்டது' என்று சமாதானமும் செய்து கொண்டான். இருப்பினும், அத்தனை நேரம் அந்த அழகியை அணைத்தது முதலிய புற இன்பங்களையெல்லாம் நினைத்துப் புள காங்கிதமே அடைந்தான். அந்த நினைப்பிலேயே உறங்கி விட்டவன் காலையில் நீண்ட நேரம் எழுந்திருக்கவேயில்லை. நிலக்கள்ளி வந்து கதவைத் தட்டிய பிறகுதான் சிறிது சுரணையைக் காட்டி, "யாரது?" என்று அதட்டலாக வினவினான்.

பதில் நிலக்கள்ளியிடமிருந்து வரவில்லை. அவள் கண்ணைக் காட்ட, பக்கத்திலிருந்து மாலுமியே பேசினான். "உபதளபதியார் வந்திருக்கிறார்கள்" என்று.

அப்பொழுதும் தூக்கம் முழுதும் கலையாத கடல் வேந்தன், "யாரது உபதளபதி? அப்புறம் வரச்சொல்" என்று கூறிவிட்டு, திரும்பவும் கட்டிலில் குப்புறப்படுத்து தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

கதவுக்கு வெளியே நின்ற நிலக்கள்ளி, "கும்பகர்ணரே எழுந்திரும். இல்லாவிட்டால்..." என்று சினத்தைக் குரலில் காட்டினாள் நிலக்கள்ளி.

"இல்லாவிட்டால் என்ன செய்துவிடுவாய்?" என்று உள்ளிருந்தே சீறினான் கடல்வேந்தன்.

"போர்க்கோடாரியைக் கொண்டு கதவைப் பிளந்து விடுவேன்" என்ற நிலக்கள்ளி, இன்னொரு முறை கதவைப் பலமாகவே தட்டினாள். கதவை நெருங்கி நின்று, தன்னால் அதை ஒரு முறை இடிக்கவும் செய்தாள். அந்த சமயத்தில் முக்கி முனகிக்கொண்டு கட்டிலிலிருந்து எழுந்து வந்த கடல்வேந்தன் திடீரெனக் கதவைத் திறக்கவே, உட்புறமாக விழவும் இருந்தாள்.

அவளை விழாமல் கட்டிப்பிடித்துக் கொண்ட கடல் வேந்தன், "உபதளபதி' தாங்கள் கதவை அணைத்தாற் போல் நின்றிருக்கக்கூடாது" என்று கூறிப் புன்முறுவலும் செய்தான்.

அப்பொழுதும் அவன் தன்னை விடாததையும், அணைத்த வண்ணமே நின்றதையும், அதைப் பார்த்த ஒரு மாலுமிகள் புன்முறுவல் செய்து தலையை வேறுபுறம் திருப்பிக் கொண்டதையும் கவனித்த நிலக்கள்ளி, "தளபதி! உங்களைப் பார்த்து மாலுமிகள் சிரிக்கிறார்கள்" என்றாள் கோபத்துடன். அவன் பிடியிலிருந்து விடுபடவும் முயன்றாள்.

கடல்வேந்தன் அவள் சொற்களைக் கேட்டான். அந்த நிலைமையையும் கவனித்தான். "நம்மை என்று சொல்லுங்கள் உபதளபதி" என்று உத்தியோக முறையைக் மீறாது பேசவும் செய்தான்.

"நம்மையா?" வியப்புடன் அவனை நோக்கி வினவினாள் நிலக்கள்ளி.

"ஆமாம்."

"என்னைப் பார்த்து எதற்காக நகைக்க வேண்டும்?"

"நாமிருக்கும் நிலையில் நம்மைப் பிரித்து நினைக்கவோ நகைக்கவோ முடியாது."

"ஏன்?"

"நாம் ஒரு புதுமை."

"புதுமை என்ன இதில்?"

"இதுவரை பெண் உபதளபதி எந்த மரக்கலத்திலும் கிடையாது. இங்கு நீ இருக்கிறாய். தவிர, எந்தத் தளபதியும் உபதளபதியை அணைத்துக் கொண்டதும் கிடையாது" என்று கூறி நகைத்தான் கடல்வேந்தன்.

அவன் நகைத்ததால் சீற்றமும், மாலுமிகள் தங்களை அரைகுறையாகப் பார்த்துப் பார்த்துத் திரும்பிக் கொண்டதால் சங்கடமும் அடைந்த நிலக்கள்ளி, அவனிடமிருந்து திமிறிக் கொண்டு அறைக்குள்ளே நுழைந்து விட்டாள். நுழைந்ததும், திரும்பி, "அறையை நான் சரி செய்கிறேன். நீங்கள் சென்று நீராடி வாருங்கள்" என்று கூறினாள். சொன்னதோடு நில்லாமல், உள்ளேயிருந்த ஒரு பெரிய துண்டையும் எடுத்து அவன் தோளின்மீது விழும்படியாக விட்டெறிந்து, அவனை வெளியே தள்ளிக் கதவையும் மூடிவிட்டாள்.

பலவந்தமாக வெளியே அனுப்பப்பட்ட கடல் வேந்தன், நீராட அறையை நோக்கி நடந்தான். அவன் குறிப்பை அறிந்த மாலுமிகள், அவனுக்கு முன்பாக அந்த அறைக்கு ஓடி நீராட நன்னீர்க் குடங்களை எடுத்து வந்தார்கள். பல்துலக்கி, முகம் கழுவி, நன்றாக நீராடிய கடல்வேந்தன், துண்டை மட்டும் இடையில் கட்டிக் கொண்டு கப்பலின் தளத்தில் நடந்து சென்றான்.

அவன் துண்டு மட்டும் கட்டி காலைக்காற்றில் பறந்த குழல்களுடனும், வெயில் கிளம்பிவிட்டதால் அது பட்டு பளபளத்த வஜ்ர தேகத்துடனும், இரும்புத் தூண்கள் போன்ற உலக்கைக் கால்களுடனும் வருவதை தளபதி அறைவாயிலிருந்தே கவனித்த நிலக்கள்ளி, அவன் முரட்டு அழகையும், அனாயாச நடையையும் கண்டு பிரமித்தாள். அவன் எடுத்து வைத்த ஒவ்வோர் அடியிலும் பௌருஷம் ஒளிவிடுவதைக் கண்டு, அப்பேர்ப்பட்டவன் தன்னிடம் மையல் கொண்டதை எண்ணிப் பெருமை முகத்தில் நிலவ, பெருமிதம் இதழ்களில் உலாவ அழகிய புன்சிரிப்புடன் அவனைப் பார்த்துக்கொண்டே இருந்தாள். அவன் அறைக்கு வந்ததும், அவன் உள்ளே செல்ல வழிவிட்டு விலகி நின்றாள். உள்ளே சென்றதும், தானும் உள்ளே சென்று கதவைத் தாளிடவும் செய்தாள்.

அறையிலிருந்த நிலையைப் பார்த்து, கடல்வேந்தன் பிரமிப்பின் எல்லையை அடைந்தான். கட்டிலின் பஞ்சணை நன்றாகச் சுருட்டப்பட்டிருந்தது. அவனது புத்துடைகள் சீராக மடிக்கப்பட்டு, தனியாக ஓர் ஆசனத்தின்மீது வைக்கப்பட்டும், அவன் தலை சீவி, முகம் துடைத்துத் திலகமிடுவதற்கு வேண்டிய அலங்காரப் பொருள்களும், தகளியும் சித்தமாக எடுத்து வைக்கப்பட்டும் இருந்ததையும் கவனித்த கடல்வேந்தன், 'புருஷன் வாழ்வுக்குப் பெண்ணின் உதவி எத்தனை அவசியம்' என்பதைப் புரிந்து கொண்டான். அந்த நினைப்பினால் ஏற்பட்ட திருப்தியினால் வேகமாகப் புத்தாடை புனைந்து, திலகமும் இட்டுக் கொண்டதும், நிலக்கள்ளி அவன் ஈரத்துண்டை எடுத்துக் கொண்டு வெளியே சென்று, அதைப் பிழிந்து கொடியொன்றில் உலர்த்தி வந்தாள்.

உள்ளே வந்த நிலக்கள்ளியைக் கேட்டான் கடல்வேந்தன், "இதெல்லாம் பணிமகளின் வேலையல்லவா?" என்று.

"ஆம்" என்றாள் நிலக்கள்ளி.

"அப்படியானால், துணி உலர்த்தும் வேலையை நீ ஏன் செய்ய வேண்டும்?" என்று மறுபடியும் கேள்வியைத் தொடுத்தான் கடல்வேந்தன்.

"உங்களுக்கு நான்தான் பணியாள்" என்று நிலக்கள்ளி சொன்னாள்.

"நீ உபதளபதி" என்று சுட்டிக் காட்டினான் கடல்வேந்தன்.

"ஆம். இப்பொழுது" என்ற நிலக்கள்ளி முறுவல் கொண்டாள்.

"என்ன சொல்கிறாய் உபதளபதி?" கடல்வேந்தன் வினவினான்.

"நேற்றிரவு நீங்கள் என்னை உபதளபதியைப் போல்வா நடத்தினீர்கள்?" என்று கேட்ட நிலக்கள்ளி, சற்றுப் பெரிதாகவே நகைத்தாள்.

அவன் முகத்தில் வேட்கையின் சாயை படர்ந்தது "சரி கதவைச் சாத்து" என்று உத்தரவிட்டான்.

"எதற்கு?" என்று வினவினாள் அவள்.

"மந்திராலோசனை நடத்தப் போகிறேன்" என்றான் கடல்வேந்தன்.

"அப்படியானால் சரி" என்ற நிலக்கள்ளி, வெளியே எட்டிப் பார்த்து, பாய்மரங்களின் அடியில் நின்ற இருவரை வரும்படி குரல் கொடுத்தாள். கடல்வேந்தன், அவளைத் தடுக்க முயன்றும் முடியாததால், "அவர்கள் எதற்கு?" என்று கேட்டான்.

"இந்த மரக்கலம் போரில் இறங்கும்போது இதைத் திசை திருப்ப வேண்டியவர் சுக்கான் பிடிப்பவர்; மற்றொருவர் உங்கள் உத்தரவுப்படி மாலுமிகளை இயக்க அம்பு

களையும், வேல்களையும் வீசும் கடமையைச் செய்பவர்" என்று கூறினாள். அவள் அழைப்பை ஏற்று அறைக்கு வந்த இருவரையும், ஆசனங்களில் உட்கார வைத்து அறைக் கதவை மூடினாள். "தளபதி மந்திராலோசனை செய்ய உங்களை வரவழைத்தார்" என்றும் கூறினாள்.

கடல்வேந்தன் திறமையையும், அவன் திடீரென்று கணம் மாறும் தன்மையையும் அன்றுதான் புரிந்து கொண்டாள் நிலக்கள்ளி. அவர்கள் எதிரே கடல்வேந்தன் கட்டிலில் உட்கார்ந்ததும், சுருட்டி வைக்கப்பட்டிருந்த படுக்கைமீது உட்கார்ந்தாள் நிலக்கள்ளி. கடல்வேந்தன் கண்கள், அவளை நோக்கிக் கடுமையுடன் இருந்தன. "உபதளபதி உட்கார வேண்டிய இடமோ, முறையோ இதுவல்ல" என்ற அவன் சொற்களிலும் அதிகாரம் இருந்தது.

நிலக்கள்ளி வியப்பின் வயப்பட்டாள். திடீரென்று கடல்வேந்தன் முகபாவமும் பேச்சும் மாறிவிட்டதைக் கண்டு குழப்பமும் அடைந்தாள். அந்தக் குழப்பத்தைக் கலைக்கவே செய்த கடல்வேந்தன், "உபதளபதி! அதோ அந்த ஆசனத்தில் அமருங்கள், கடற்பகுதியிலும் நிர்வாக திறமைகள் உண்டு" என்று தூர இருந்த ஓர் ஆசனத்தைச் சுட்டிக்காட்டினான்.

பிரமை பிடித்த இதயத்துடன் அவன் காட்டிய ஆசனத்தில் நிலக்கள்ளி உட்கார்ந்ததும், கடல்வேந்தன் மற்ற இரு மரக்கல அதிகாரிகளையும் நோக்கி, "கடல் வீரர்களே! இந்தக் கூட்டத்தை நான் பிற்பகல் கூட்டுவதாக இருந்தேன். உபதளபதி சற்று அவசரப்பட்டு விட்டார்கள். இருப்பினும் பாதகமில்லை" என்று தொடங்கி, பிரித்துக்கொண்டு பேச முற்பட்டான். "நாம் இங்கு வந்து இந்த வாரத்துக்கு மேல் ஆகிவிட்டது. உபதளபதியை அவரது தந்தையிடம் ஒரு வாரத்தில் ஒப்படைப்பதாகச் செய்தி அனுப்பியிருந்தேன். அந்தக் கெடு தாண்டிப் போகவிட்டது. இருப்பினும், அதிக காலம் கடத்துவது

தவறு. கெடுவை மாற்றியோ, மீறியோ கடல்வேந்தன் நடந்து கொண்டது கிடையாது. நாளை இங்கிருந்து நாம் நங்கூரம் எடுத்துச் செல்கிறோம். வந்தபோது தனியாக வந்தோம். போகும்போது தனியாகப் போகமாட்டோம். இந்தத் துறைமுகத்திலுள்ள மரக்கலங்களில் மூன்று நம்முடன் வரும். இந்த நான்கு மரக்கலங்களையும் நிர்வகிப்பதும், இந்தத் தலைமை மரக்கலத்தின் சைகைகளை அறிந்து, அவற்றை நடத்த நமது முறைகளை அந்த மரக்கலங்களின் தலைவர்களுக்குப் போதிப்பதும் நமது கடமையாகும்'' என்று சொல்லி மற்றவர்களை நோக்கினான்.

கப்பலைத் திசை திருப்பும் மாலுமி கேட்டான். ''மற்ற மரக்கலங்களின் தளபதிகள் நாங்கள் சொல்வதைக் கேட்பார்களா?'' என்று.

''கேட்பார்கள்'' உறுதியுடன் சொன்னான் கடல் வேந்தன்.

''கேட்காமலிருக்க முடியாது. சேரநாட்டு கடற்படைக்கு கடல்வேந்தனைத் தலைவராக மன்னர் நியமித்திருக்கிறார்'' என்று பெருமையுடன் சொன்னாள் நிலக்கள்ளி.

இந்தச் செய்தியால் அதிர்ச்சியடைந்த இரு மாலுமிகளும், ''அப்படியா?'' என்று வினவினார்கள்.

''ஆம். அந்தச் சுமையை என்மீது திணித்திருக்கிறார் சேரர் பெருமான்'' என்று சொன்ன கடல்வேந்தன் ''கடல் வீரர்களே! இன்று மற்ற மரக்கலங்களின் தலைவர்களையும், துறைமுகத் தலைவனையும் இங்கு வரவழைக்கிறேன். பிற்பகல் இங்கு அவர்கள் நம்மையும், நாம் அவர்களையும் புரிந்து கொள்ளவும் வசதியளிக்க இங்கு கூடுவோம்'' என்று கூறி, அவர்கள் போகலாமென்பதற்கு அறிகுறியாகக் கடல்வேந்தன் கட்டிலிலிருந்து எழுந்தான். அவர்கள் சென்றதும் நிலக்கள்ளியிடம் ஓர்

ஓலை எழுதிக் கொடுத்து, ''நீ போய் துறைமுகத் தலைவனிடம் இதைக் கொடுத்து, மற்ற மரக்கலத் தலைவர்களுடன் பிற்பகல் இங்கு வரச்சொல்'' என்று உத்தரவிட்டான். நிலக்கள்ளி சிறிதும் தாமதியாமல் கரைக்குச் சென்றாள்.

அன்று பிற்பகல் கடல்வேந்தன் உத்தரவுப்படி, அந்த மரக்கலத்தில் கூட்டம் நடந்தது. மற்ற மூன்று தலைவர்களுக்கும் தனது மரக்கலத்தை அவர்கள் தொடர்ந்து வர வேண்டிய முறைகளை எடுத்துரைத்த கடல்வேந்தன், ''நாளைக்காலையில் நாம் தொண்டித் துறைமுகத்திலிருந்து புறப்படுகிறோம்'' என்றான்.

மற்ற மரக்கலத் தலைவர்களில் சற்று முதியவனாகக் காணப்பட்ட ஒருவன் கேட்டான். ''எந்த இடத்துக்கு?'' என்று.

''கடல்வேந்தன் உத்தரவுக்கு இதுவரை யாரும் காரணம் கேட்டது கிடையாது. போகும் திசை, இடம் எதையுமே கேட்டது கிடையாது. கேட்டு, பதவியில் அடுத்த விநாடி இருந்தவர்களும் கிடையாது; இது நினைவிருக்கட்டும். உங்கள் மூன்று கப்பல்களுக்கு நமது சைகைகளை சொல்லிக் கொடுக்க, எனது இந்த இரு அதிகாரிகளும் உபதளபதியும் வருவார்கள்.'' இதைச் சர்வசாதாரணமாகச் சொன்னான் கடல்வேந்தன். ஆனால் அந்த சாதாரணத்துக்குள் உறுதி பூர்ணமாக ஊடுருவி இருந்ததை மற்ற மரக்கலத் தளபதிகள் உணர்ந்தார்கள். கடைசியாகத் துறைமுகத் தலைவனை நோக்கிய கடல்வேந்தன், ''தலைவரே! நாளைக் காலையில் நான் பயணமாகிறேன், தொண்டியைக் காத்து நிற்க இங்குள்ள நான்கு மரக்கலங்களில் ஒன்றை மட்டும் விட்டுப் போகிறேன். மற்ற மூன்றும் என்னுடன் வரும்'' என்று தெரிவித்தான்.

துறைமுகத் தலைவன் தலைவணங்கி விடைபெற்றுச் சென்றான். மறுநாள் விடியற்காலையில், தன்னுடன் புறப்பட வேண்டிய மற்ற மூன்று மரக்கலங்களுக்கும் நிலக்கள்ளியையும், மற்ற இரு அதிகாரிகளையும், அனுப்பி வைத்தான். நிலக்கள்ளியை, அனுப்பும் முன்பு அவளுடன் நீண்டநேரம் பேசினான். அவளுக்குப் போக விடை கொடுத்ததும், அவளுக்கு நூலேணியை அவனே இறக்கி விட்டு, "சொன்னதை நினைவில் வைத்துக்கொள். மிகுந்த எச்சரிக்கையுடன் இரு" என்று எச்சரித்து அனுப்பினான்.

வெள்ளி முளைத்ததும் கடல்வேந்தன் மரக்கலம் நங்கூரமெடுத்து, தொண்டித் துறைமுகத்தை விட்டு வெளியே ஊர்ந்தது. மற்ற மூன்று மரக்கலங்களும் அதைத் தொடர்ந்தன. தளத்திலேயே நின்றுகொண்டிருந்த கடல் வேந்தன் தன்னைத் தொடர்ந்து வந்த மற்ற மூன்று மரக்கலங்களையும் உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்தான். அவன் முகத்தில் என்ன காரணத்தினாலோ, சந்தேகம் விரவிக் கிடந்தது.

□

35. குருட்டு அதிர்ஷ்டம்

நிலக்கள்ளியைத் தனது சிறு கடற்படையின் உபதளபதியாக்கிவிட்ட கடல்வேந்தனுக்கு, அவள் அந்தப் பதவியை எத்தனை தூரம் நிர்வகிக்க முடியும் என்பதில் மட்டும் சந்தேகம் இருந்தது. மரக்கலத்தின் சூட்சுமங்கள் அவளுக்கு முழுவது தெரியுமே தவிர, போர்க் காலங்களில் மரக்கலங்களை இயக்கவும் போரின் திருப்பத்துக்குத் தகுந்தபடி மரக்கலத்தைத் திருப்பவும், முன்னேறச் செய்யவும் அவளுக்குப் பயிற்சி கிடையாதென்பதை அவன் முற்றும் உணர்ந்தேயிருந்தான். அப்படி போர் அனுபவமில்லாத ஒருத்திக்கு மற்ற மரக்கல மாலுமிகள் எத்தனை தூரம் மதிப்பு தருவார்கள், எத்தனை தூரம் அவள் சொற்படி நடப்பார்கள் என்பதும் சந்தேகமாயிருந்தது கடல்வேந்தனுக்கு. கடற்போரில் தனக்கு அடுத்தபடி கப்பலை நடத்த கிளேஸியஸுக்குத்தான் அவன் பயிற்சியளித்தானே தவிர, வேறு யாருக்கும் பயிற்சி அளிக்காததால், கிளேஸியஸின் இடத்தை நிலக்கள்ளி எத்தனை தூரம் நிரப்புவாள் என்றும் சந்தேகப்பட்டான்.

ஆனால், அந்த சந்தேகம் எதுவும் நிலக்கள்ளிக்கு இல்லை. தனக்கு அளிக்கப்பட்ட கப்பலுக்குச் சென்றதும் அந்தக் கப்பலின் தலைவரான முதியவரைத் தனது அறைக்கு அழைத்தாள். அறைக்குள் மிக அலட்சியமாக அமர்ந்த முதியவரின் மனவெறுப்பை உணர்ந்ததால் நிலக்கள்ளி, "பெரியவரே! இப்படி அமருங்கள்" என்று அவர் அருக்கமாக உட்காரும் ஆசனத்தையே சுட்டிக்காட்டினாள், தான் அந்த அறைக் கட்டிலில் உட்கார்ந்தபடி.

முதியவர் உள்ளே நுழைந்ததும் உபதளபதிக்குத் தலைவணங்கினாலும், உபதளபதி சுட்டிக்காட்டிய ஆசனத்தில் அமரவில்லை. "கட்டளை எதுவாயிருந்தாலும் உபதளபதி சொல்லலாம். நிறைவேற்ற சித்தமாயிருக்கிறேன்" என்று நின்று கொண்டே பதில் சொன்னார்.

"முதலில் உங்கள் ஆசனத்தில் உட்காருங்கள். பிறகு பேசுவோம்" என்றாள் நிலக்கள்ளி, மரியாதை தொனித்த குரலில்.

"அந்த ஆசனம் இப்பொழுது என்னுடையதல்ல. உபதளபதிதான் அதில் அமரலாம்" என்றார் முதியவர்.

நிலக்கள்ளி அவரை அன்புடன் உற்று நோக்கினாள். "பெரியவரே! சற்று முன்பு நான் எந்தக் கட்டளையிட்டாலும் நிறைவேற்றுவதாக நீங்கள் சொல்லவில்லையா?"

"ஆம். சொன்னேன்" முதியவர் குரலில் உற்சாகமில்லை. கடமை உணர்ச்சி மட்டும் இருந்தது.

"அப்படியானால் ஆசனத்தில் அமரும். இது என் கட்டளை" என்றாள் நிலக்கள்ளி.

அதற்குப் பிறகு உட்கார்ந்த முதியவரை நோக்கி, "பெரியவரே! உங்கள் அளவுக்கு எனக்கு மரக்கலப் பயிற்சி கிடையாது. கடல்வேந்தர் ஓரளவு சொல்லிக் கொடுத்திருக்கிறாரே தவிர, போர் வந்தால் இதை இயக்க என்னால் முடியாது. நான் உபதளபதி பதவியை ஏற்றதற்குக் காரணம், கடல்வேந்தன் செய்யும் சைகைகள், போர்க் குறிகள் உங்களுக்குத் தெரியாதென்பதுதான். சாதாரண போர் நியதிகளை ஒரு கொள்ளைக்காரர் தமக்கு வைத்துக் கொள்ள முடியாதென்பதைத் தாங்களும் ஒப்புக் கொள்வீர்கள்" என்று நிலக்கள்ளி சொன்னாள்.

மனம் திறந்து அவள் பேசிய பேச்சு, அவள் அடக்கம் மீண்டும் முதியவரைக் கொள்ளை கொள்ளவே. "உபதளபதி! உங்களுக்கு எந்தக் கவலையும் வேண்டாம். நாளை முதல் நீங்கள் சைகைகளைச் சொல்லுங்கள். மாலுமிகளுக்கு அவற்றில் நானே பயிற்சி அளித்து விடுகிறேன்" என்று சொல்லி விடைபெற்றார்.

மறுநாள் முதல் முதியவரும் நிலக்கள்ளியும் சேர்ந்தே மாலுமிகளை அந்தந்த இடங்களில் சந்தித்து, புதுப் போர் முறைகளை எடுத்துரைத்தார்கள். கடல்வேந்தன் கப்பலிலிருந்து வரும் சைகைகள் எப்படியிருக்கும், அவற்றை எப்படி பொருள் கொள்ள வேண்டும் என்பதெல்லாம் மாலுமிகளுக்கு விளக்கப்பட்டன. மற்ற மரக்கலத் தலைவர்களும், முதியவர் தமது மரக்கலத்திலிருந்து காட்டிக்கொடுத்த சைகைகளைப் புரிந்து கொள்ளவே, நிலக்கள்ளி நிம்மதி அடைந்தாள்.

நிம்மதி அடைந்தது நிலக்கள்ளி மட்டுமல்ல, கடல் வேந்தனும் நிம்மதியடைந்தான். முதிய மாலுமி நிலக்கள்ளியைப் பின்பற்றி அவர் தளத்தில் உலாவுவதையும், நிலக்கள்ளி சொன்னதையெல்லாம் அவர் தலைவணங்கி ஏற்று மற்ற மாலுமிகளுக்கு உத்தரவிட்டு வந்ததையும் கவனித்த கடல் வேந்தன், "நிலக்கள்ளிக்கு யாரையும் மயக்கும் சக்தி இருக்கிறது; நல்ல வேளை அந்த மரக்கலத் தலைவனுக்கு வயதாகி விட்டது. இல்லாவிட்டால் எனக்குப் போட்டியாக வந்து முளைப்பான்" என்று உள்ளூரச் சிரித்துக் கொண்டான். அப்படி நிம்மதி அடைந்து விட்டதால் சிறிதும் கவலையின்றி மரக்கலத்தை இயக்கினான்.

முசிறிக்கும், தொண்டிக்கும் தூரம் அதிகமில்லை யென்றாலும், இரண்டு நாள் கழித்தும் முசிறியை அடைய வில்லை. கடல்வேந்தன் மரக்கலம் வேறு எந்த திசை யிலோ போய்க் கொண்டிருந்தது. முதியவர்கூட அதைக்

கவனித்து, "உபதளபதி! தலைவர் கப்பல் திசைமாறுச் செல்வது போல் தெரிகிறதே" என்றார்.

"ஆம்" என்று ஒப்புக்கொண்டாள் நிலக்கள்ளி.

"காரணம்?" என்று வினவினார் முதியவர்.

"தெரியவில்லை. ஆனால் காரணமில்லாமல் கப்பலைக் செலுத்த மாட்டார் கடல்வேந்தர்" இதை உறுதியுடன் சொன்னாள் நிலக்கள்ளி.

"அது உண்மை" என்று முதியவரும் ஒப்புக்கொண்டார். ஆனால், இப்படி கரையிலிருந்து நீண்ட தூரம் கப்பலைச் செலுத்த வேண்டியதற்கு முகாந்திரம் எதுவுமில்லை என்று திட்டமாக நம்பினார். அவர் நம்பிக்கைக்கு ஆதாரமிருப்பதை நிலக்கள்ளி ஒப்புக் கொண்டாலும், கடல்வேந்தன் காரணமில்லாமல் எதையும் செய்யமாட்டாரென்ற உறுதியால் அவள் ஏதும் பதில் சொல்லவில்லை. உற்ற சமயத்தில் கடல்வேந்தனிடமிருந்தே அதற்குப் பதில் கிடைக்கும் என்று நம்பினாள்.

அந்த நம்பிக்கை வீண்போகவில்லை. இரண்டு நாள் கழித்து காலையில் தனது மரக்கலத்தின் பாய்களை இறக்கி, நங்கூரத்தையும் பாய்ச்சிய கடல்வேந்தன், உபதளபதியையும், மற்ற மரக்கலத் தலைவர்களையும் தனது மரக்கலத்துக்கு வர உத்தரவிட்டான். நிலக்கள்ளி, முதியவர் உட்பட மற்ற மரக்கலத் தலைவர்களும் படகுகளை இறக்கி அவன் மரக்கலத்தை அடையவே, அவர்களைத் தளத்திலேயே வரவேற்ற கடல் வேந்தன், "தலைவர்களே! உபதளபதி நமது போர்ச்சைகைகளை உங்களுக்குப் போதித்திருப்பாரென்று நம்புகிறேன்" என்று உரையாடலைத் தொடங்கினான்.

ஆமாமென்பதற்கு அறிகுறியாக மற்ற மரக்கலத் தலைவர்கள் தலையசைத்தார்கள். "நல்லது! நாம் போரிட அவசியமிருக்குமோ இருக்காதோ தெரியாது. ஆனால், என்னைக் கடற்படைத் தலைவனாக்கியதிலிருந்து மன்னர் போரை எதிர்பார்க்கிறார் என்பது தெளிவதாகத் தெரிகிறது" என்றும் பேச்சைத் தொடர்ந்தான்.

"அப்படித்தானிருக்க வேண்டும்" என்றார் முதியவர்.

"காரணம் என்ன முதியவரே? தங்களைப் போன்ற அனுபவம் மிக்க கடற்படை மாலுமிகள் இருக்கும்போது ஒரு கொள்ளைக்காரனை ஏன் தலைவனாக நியமிக்க வேண்டும் மன்னர்?" என்று வினவினான் கடல்வேந்தன்.

"எங்களுக்கு சாமர்த்தியம் போதாதென்று மன்னர் எண்ணியிருக்கலாம்" என்றார் முதியவர்.

கடல்வேந்தன் அவரை உற்று நோக்கி, "காரணம் அதுவாயிருக்க முடியாது" என்றான்.

"வேறென்னவாயிருக்கும்?" என்று முதியவர் கேட்டார்.

"அவர் எதிர்பார்க்கும் போரை, சம்பிரதாய முறையில் வெற்றி கொள்ள முடியாதென்று நினைத்திருக்க வேண்டும் மன்னர். ஆகையால், வேறுமுறைகளைக் கையாளும் கொள்ளைக்காரனதான் நிலைமையைச் சமாளிக்க முடியும் என்று எண்ணியிருக்க வேண்டும்" என்ற கடல்வேந்தன், மேற்கொண்டு விவாதத்தை வளர்த்தாமல், "நாம் இப்பொழுது முசிறியையும் தாண்டி வடமேற்கில் இருக்கிறோம்" என்று நிலைமையை எடுத்துச் சொன்னான்.

"ஆம்" என்றார் முதியவர்.

"ஆகவே, முசிறியை மேற்குத் திசையிலிருந்து நாடி வரும் மரக்கலம் எதுவானாலும் நம்மைத் தாண்டித்தான்

செல்ல வேண்டும்'' என்ற கடல்வேந்தன், நிலக்கள்ளியை உற்று நோக்கினான்.

'அப்படி ஏதாவது மரக்கலத்தை எதிர்பார்க்கிறீர்களா?'' என்று நிலக்கள்ளி கேட்டாள்.

''இல்லை. எதிர்பார்க்கவில்லை, முசிறிக்கு ஆபத்தை விளைவிக்க இப்பொழுது அங்குள்ள மூன்று மரக்கலங்களே போதும். எச்சரிக்கையாக நாம் இந்தப் பகுதியில் உலாவுவோம். எந்த மரக்கலமாவது வந்தால் அதை அழிப்போம். இல்லையேல், நாளைக்கு மறுநாள் முசிறி துறைமுகத்தில் நுழைவோம்'' என்று கூறிய கடல்வேந்தன், ''உபதளபதி! எனது மரக்கலத்தை அனுசரித்து உன் ஆணையின் கீழ் மூன்று மரக்கலங்களும் இயங்கட்டும். என்னைப் பின்பற்றி வரவேண்டும். சற்றுத் தள்ளித் தள்ளி மொத்தமாகப் பார்ப்பதற்கு விசிறிபோல் வரட்டும்'' என்று உத்தரவும் இட்டான்.

நிலக்கள்ளி அவனை பிரமையுடன் பார்த்தாள் ''அர்த்த சந்திர வியூகமாக வரச் சொல்லுகிறீர்களா?'' என்றும் கேட்டாள்.

''ஆம்'' என்ற கடல்வேந்தனும், அவளை வியப்புத் ததும்பிய விழிகளால் நோக்கி, ''மர்க்கல சாஸ்திரமும் படித்திருக்கிறாயா நிலக்கள்ளி?'' என்று வினவினான் மன நெகிழ்ச்சியால், அவள் உபதளபதி என்பதை மறந்து.

''படித்திருக்கிறேன்'' என்ற நிலக்கள்ளி தலைகுனிந்து தளத்தின் பலகையை நோக்கினாள். அத்துடன் சொன்னாள், ''நாம் விசிறிபோல் முசிறி துறைமுகத்தில் நுழைந்தால், அங்குள்ள மற்ற மரக்கலங்கள் நம்மிடம்சிறைப்படும்.'' என்று.

முதியவர் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டார். ''உபதளபதி! உங்கள் வயதுக்கு உங்கள் கடற்போர் அறிவு மிக அதிகம். கடல்வேந்தன் மனத்தையும், முன் கூட்டிப் புரிந்து கொண்டீர்கள்'' என்று பாராட்டவும் செய்தார்.

'என் மனத்தை இவள் எப்பொழுதோ புரிந்து கொண்டாள்' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்ட கடல் வேந்தன், முதியவருக்கும் மற்றோருக்கும் போக விடை கொடுத்தான். ''உபதளபதி பின்னால் வருவாள்'' என்றும் அறிவித்தான்.

''நானும் போகிறேன். இங்கு என்ன வேலை எனக்கு?'' என்று வினவினாள் நிலக்கள்ளி.

''இருக்கிறது. சொல்கிறேன்'' என்றான் கடல் வேந்தன்.

மற்ற மரக்கலத் தலைவர்கள் சென்ற பிறகு தளபதி, உபதளபதியை அழைத்துக்கொண்டு தமது அறைக்குச் சென்றார், கதவும் மூடப்பட்டது.

அதைப் பார்த்த ஒரு மாலுமி, ''கதவை ஏன் சாத்த வேண்டும்?' என்று இன்னொரு மாலுமியைக் கேட்டான்.

''மந்திராலோசனை'' என்று இகழ்ச்சியாகச் சொன்னான் இன்னொரு மாலுமி. மூவரும் மூடிய கதவை நோக்கி மெதுவாக நகைத்தார்கள்.

ஆனால், தளபதி அறைக்குள்ளே நடந்தது அவர்கள் அறிந்ததல்ல. நிலக்கள்ளியின் போர் அறிவை எடை போட்டுக் கொண்டிருந்தான் கடல்வேந்தன். அவள் அறிவின் நுட்பமும் கடல்வேந்தனையே அதிரவைத்தது. ''நிலக்கள்ளி! உன்னை உபதளபதியாக்கியது தவறு. தளபதியாகவே நீ செயல்பட முடியும்': என்ற கடல் வேந்தன், ''உன் காதலை நான் பெற்றது எனது அதிர்ஷ்டம். சில பேருக்குக் குருட்டு அதிர்ஷ்டம் அடிப்பது உண்டு. அந்த வர்க்கத்தில் சேர்ந்தவன் நான்'' என்றும் அவளைப் பாராட்டினான்.

இத்தனைக்கும் அவளைத் தொடவும் இல்லை அவன். அவளே, அவனை நோக்கி வந்து, தனது இரு கைகளையும் அவன் கழுத்தில் போட்டு வளைத்து, தனது இதழ்களை அவனது இதழ்களுடன் வலியப் பொருத்தினாள்.

□

36. கடலரசி வெட்கங்கெட்டவள்

நமது வேதாந்திகளும் சரி, கவிஞர்களும் சரி, பேரின்பம் எத்தன்மையது என்பதை உணர்த்த சிற்றின்பத்தையே வழிகாட்டியாகக் கொண்டார்கள். மனிதனுடைய ஐந்து புலன்களும் ஒருங்கே ஒரு நிலையில் பொருந்துவது சிற்றின்பம் ஒன்றில் மட்டுந்தான் என்ற காரணத்தால், அதைக் காட்டிப் பேரின்பத்துக்குப் புலன்களைத் திருப்பலாம்; நிலைக்கச் செய்யலாம் என்று தீர்மானித்தார்கள். ஆகையால் நாயக, நாயகி பாவம் என்ற தத்துவத்தைச் சிருஷ்டித்தார்கள். பேரின்பம் எத்தன்மையது? இறைவனிடம் நாம் அடையும் சுகம் எப்பேர்ப்பட்டது? என்று கூற, "இளமுலைமானார் வலியவணைத்த சுகம் போலே" என்று அருணகிரிநாதரும் தமது பஞ்சரத்தினத் திருப்புகழில் பாடினார். அந்தப் பாட்டுக்கு ஓர் உதாரணமாக அன்று திகழ்ந்தான் கடல்வேந்தன்.

சற்று விலகியே நின்ற அவனைக் கழுத்தைத் தனது கைகளால் வளைத்து மார்பை நோக்கி இழுத்து நிலக்கள்ளி வலிய அணைத்துக் கொண்டதும், தனது உறுதியெல்லாம் குலைந்து விட்டதைப் புரிந்து கொண்டான் மகாவீரனான கடல்வேந்தன். நிலக்கள்ளியின் பனித்த மார்பில் அணைக்கப்பட்ட தலையை அந்த இடத்திலிருந்து விடுவித்துக் கொள்ளவும் சக்தியற்றவனாகி விட்டபடியால் அவள் இழுத்த இழுப்புக்கெல்லாம் இசையவே செய்தான். அவன் தலையை மார்பில் கடுமையாக அணைத்துக்கொண்ட நிலக்கள்ளி, அவனை லேசாகக் கட்டிலை நோக்கித் தள்ளி இழுத்துச் சென்றாள். தனது உடலை அவன் உடலோடு பொருத்தியவண்ணம

கட்டிலை அடைந்ததும் பஞ்சணையில் அவனைச் சாய்த்து அவளும் சாய்ந்து விடவே அதுவரை வாளாவிருந்த அவன் வலிய கரங்களும் அவள் முதுகில் தவழத் தொடங்கின. இடைச் சேலையை சிறிது நெகிழ்த்தவும் முற்பட்டன. எதையும் அவன் எதிர்க்காதது மட்டுமல்ல, அவன் கைகளின் கோரிக்கைகளுக்கும், ஆராய்ச்சிக்கும் உதவியும் செய்தான். அவன் கை சில சமயங்களில் இடம் தெரியாமல் தடுமாறியபோது தனது கையொன்றால் அதைப் பிடித்து வழிகாட்டினாள். அவள் கால்களுக்குக் கீழே அகப்பட்டுக் கொண்டிருந்த அவன் கால்களிலொன்று தன்னை விடுவித்துக் கொண்டு மேலெழும்ப முற்பட்டபோது தனது கால்களைச் சிறிது விலக்கி அதற்கு இடமும் கொடுத்தாள். அந்தக் கால் மேல் புறமாக வந்து, அந்த எழில் மேடையில் தவழ்ந்தபோது அவள், இன்பம் அளித்த இம்சையால் சிறிது முனகவும் செய்தாள். அந்த முனகல் அவள் இச்சை வேகத்தை உச்சிக்குக் கொண்டு போயிருக்கவேண்டும். அந்த விநாடி அவள் உடலின் முழு அழுத்தம் கடல்வேந்தன் மீது விழுந்தது.

கடல்வேந்தன் புலன்கள் அவள் உடலைத் தவிர வேறெதிலும் ஈடுபடும் சக்தியை இழந்தன. சாளரத்துக்கு வெளியே 'ஹோ'வென்ற அலை ஓசையைக் காது வாங்கவில்லை. அவன் கட்டிலுக்கு மேலிருந்த கூரையில் தீட்டியிருந்த ஓவியங்களைப் பார்க்க முடியவில்லை அவன் கண்ணால். புத்தி அவள் அவயவ லக்ஷணங்களைத் தவிர வேறெதையும் சிந்திக்க மறுத்தது. இதயம் அவள் இதயத்தோடு கலந்துவிட அவள் இதய ஒலியுடன் சேர்ந்து ஒலித்தது, துரிதமாக ஓடியது. மூச்சு பெரிதாக வந்தது. வேறு எதுமில்லை. இப்படி எல்லாப் புலன்களையும் அவள் அழகின் மீதே நிலைக்க விட்டதால் சொர்க்கம் என்பது தனியாக ஏதுமில்லை என்ற முடிவுக்கு வந்த கடல்வேந்தன், தன் மீது படுத்திருந்த மலர் மேனியை மீண்டும் தழுவினான். சில இடங்களை முரட்டுத்தனமாக வருடினான்.

தன்னால் எத்தனை இம்சையை விளைவிக்க முடியுமோ அத்தனையையும் விளைவித்தான்.

நிலக்கள்ளிக்கு அத்தனை இம்சையும் வேண்டியிருந்தது. உண்மையில் ஆண்கள் அளிக்கும் இம்சைக்குப் பெயர்தான் சுகம் என்று அவள் தீர்மானித்தாள். தனது முரட்டுத் தனத்தையும் காட்டினாள். அவன் இதழ்களைப் பற்றியிருந்த தனது இதழ்களை லேசாக விலக்கி, அவன் கீழ் உதட்டைப் பற்களால் லேசாகக் கவ்வினாள். அவன் பற்களும் பதிலளிக்கத் தொடங்கி அவள் இதழைச் சற்று வலிக்கும் படியாகவே பற்றியதன்றி, நாவும் அவள் நாவுடன் உறவு கொண்டாடியது. அவன் உடல் சற்று நிமிர்ந்து கைகள் அவள் பூவுடலைப் பக்கவாட்டில் புரட்டிக் கொண்டது. அப்படி புரட்டி அவன் உடலும் திரும்பவே அக்கம் பக்கமாக இணைந்த இருவர் உடல்களும் அப்படி நெருங்கியே கிடந்தன பல விநாடிகள். நெருங்கிக் கிடந்த வேயன்றிச் செயல்படாமல் இருக்கவில்லை.

அவள் கையொன்று எழுந்து அவன் குழல்களைக் கலைத்தது. பிறகு அவள் முகம் அவன் மார்பில் புதைய கண்கள் மூடிக்கொண்டன. மூடிய கண்கள் உணர்ச்சிகளை விழிக்கச் செய்து விட்டதால் அவள் கால்கள் அவன் கால்களிடையே பாய்ந்தன. அவற்றைத் தனது கால்களால் அழுத்திய கடல்வேந்தன், மெல்ல அவள் முதுகில் கையைச் செலுத்தி மார்புக் கச்சையை அவிழ்க்கத் தொடங்கினான். அது அவிழ்ந்ததும் உணர்ச்சிகளின் நெகிழ்ச்சி எல்லை மீறியது. கரை உடைந்தது. பிறகு ஏதேதோ அற்புதங்கள்! புலன்களின் தாண்டவம்! ஐக்கியம்! இது சிற்றின்பமா? பேரின்பமா? விளக்கமுடியாத தத்துவம். இதுதான் பேரின்பம் என்று கடல்வேந்தன் தனக்கு விளக்கம் தந்து கொண்டான். காலச்சக்கரம் கழன்று காலையையும் மெதுவாகத் தோற்றுவிக்கத் தொடங்கியது.

அந்த உணர்வு வந்ததும் கடல்வேந்தன் துரிதமாக எழுந்தான். "நிலக்கள்ளி! எழுந்திரு உன் மரக்கலத்துக்குப் போகவேண்டும்" என்றான்.

பஞ்சணையில் படுத்தபடி அந்தப் பஞ்சவர்ணக்கிளி தனது இதழ்களை விரித்துப் புன்முறுவல் காட்டினாள். சிறிது தலையைத் தூக்கித் தனது உடலைக் கவனித்தாள். அலங்கோல நிலையைக் கண்டாள். விலகிக் கிடந்த தனது அழகிடங்களைக் கண்டாள். அவற்றைக் கண்டதில் இன்பமும் எய்தியதால் "வேந்தரே!" என்று கடல்வேந்தனை அழைக்கவும் செய்தாள்.

"ஏன்?" என்று வினவினான் கடல்வேந்தன்.

"சற்றுத் தகளியை எடுத்து வாருங்கள்" என்றாள் நிலக்கள்ளி.

"எதற்காக?"

"இதென்ன கேள்வி? சீக்கிரம் கொண்டு வாருங்கள்" என்று அதட்டினாள் நிலக்கள்ளி.

அதற்குமேல் ஏதும் பேசாத கடல்வேந்தன், தகளியைக் கொண்டு வந்து அவள் கையில் கொடுக்கப் போனான். "வேண்டாம். நீங்களே காட்டுங்கள்" என்ற நிலக்கள்ளி, அதில் தனது முகத்தைக் கவனித்தாள். உதட்டில் சிறிது காயம் இருந்தது. கன்னத்திலும் ஓரிடம் சிவந்து கிடந்தது. அவற்றைக் கண்டு தனது புன்முறுவலை மேலும் விகசித்துக் கொண்ட நிலக்கள்ளி, "அதை வைத்துவிட்டு வாருங்கள்" என்று உத்தரவிட, அப்படியே செய்து விட்டு வெளியே செல்ல முற்பட்ட அவனை, "அதற்குள் கதவைத் திறக்க வேண்டாம். இப்படி வாருங்கள்" என்றாள்.

அவன் நின்றபடி ஏதோ சிந்தித்துத் தலையை அர்த்தமில்லாமல் அசைத்துக் கொண்டான். பிறகு கட்டிலை நோக்கி வந்து அவள் அருகில் நின்று கொண்டு, "இப்பொழுது என்ன செய்யவேண்டும்?" என்று வினவினான் மூர்க்கத்தனமாக.

அவள் மெல்ல நகைத்துவிட்டு, "செய்ததைச் சீர்திருத்த வேண்டும்" என்று கூறி, கலைந்து கிடந்த தனது சேலையைக் காட்டினாள்.

அவனும் நகைத்துவிட்டு, அவள் சேலையைச் சரி செய்து இடுப்பில் முடிச்சும் போட்டான். "இனி நீ எழுந்திருக்கலாம்" என்றான். "கடல் வேந்தன் இந்த நிலைக்கு வந்து விட்டான்" என்றும் சொன்னான்.

அவள் தனது பெரு விழிகளை அவன் மீது திருப்பி "எந்த நிலைக்கு?" என்று கேட்டாள்.

"போரில் வேலைப் பிடித்த கை, இப்பொழுது சேலையைக் கட்டுகிறது. நாணை இழுத்து முடிபோட்டு வில்லை வளைத்த கை, இப்பொழுது வேறு முடிச்சுப் போடுகிறது" என்றான் கடல்வேந்தன்.

அவனை அன்புடன் நோக்கிய நிலக்கள்ளி மெல்ல எழுந்து தலையைக் கோதிவிட்டு மேலாடையையும் போர்த்திக்கொண்டு அவனருகே வந்து, அவன் தோளின் மீது தனது கையொன்றைப் போட்டுக் கொண்டு "பாவம்!" என்று அவனை அனுதாபத்துடன் நோக்கினாள்.

அவன் கைகள் அவளை அணைத்தன. "வேடிக்கைக்குச் சொன்னேன் நிலக்கள்ளி! உனக்குப் பணிவிடை செய்வதில் எனக்குள்ள வேகம் போரில் கிடையாது" என்று கூறினான். பிறகு சாளரத்துக்கு வெளியே நோக்கினான்.

காலை நேரக் கடல் பார்ப்பதற்குப் பரம ரம்மியமாயிருந்தது. தூரத்தே வானம் கடல் மட்டத்தைத் தொட்டுக் கொண்டிருந்தது. அதை அவளுக்கும் காட்டிய வேந்தன் "நிலக்கள்ளி! நீயும், நானும் வானத்தையும், கடலையும் போலத்தான்" என்று கூறினான்.

நிலக்கள்ளி இயற்கையின் அந்த அழகைப் பார்த்து உணர்ச்சி அலைகளில் சுழன்றாள். "என்னைக் கடலரசிக்கு உவமையாகச் சொல்லாதீர்கள்" என்றாள்.

"ஏன்?" குழப்பத்துடன் வினவினான் கடல்வேந்தன்.

"அதோ பாருங்கள். வானம் திடமாக நிற்கிறது. இவள் தான் தனது அலைக்கரங்களை உயர்த்தி உயர்த்தி, வானத்தை இழுக்க முயலுகிறாள். கடலரசி வெட்கம் கெட்டவள்" என்றாள் நிலக்கள்ளி.

"நிலக்கள்ளி!" மெதுவாக அழைத்தான் கடல்வேந்தன்.

"என்ன என் வேந்தரே!" என்றாள் நிலக்கள்ளி.

"பிறர் குற்றத்தையே நாம் கவனிக்கிறோம்."

"அதாவது...?"

"...நம் குற்றத்தை மறந்து விடுகிறோம்"

"புரியும்படி சொல்லுங்கள்."

"நேற்று இரவு அதோ அந்த அலைகளைப் போல் இருகரங்கள் எழுந்து என் கழுத்தையும் வளைத்தன...." இதை முடிக்கவில்லை அவன். "அப்படியா சமாசாரம்" என்று சீறிய நிலக்கள்ளி தனது இருகைகளாலும், அவனைப் பிடித்துத் தள்ளிக்கொண்டே போய் அறைக்கு வெளியே தள்ளி, கதவையும் தாளிட்டாள்.

வேகமாகத் தள்ளப்பட்டதால் படி தடுக்கிக் கீழே விழுந்துவிட இருந்த கடல்வேந்தன், சமாளித்துத் தளத்தில் உட்கார்ந்து கொண்டான். அவன் விழுந்ததைப் பார்த்து, ஓடிவந்த ஒரு மாலுமி, "எசமான்! ஏன்? படி தடுக்கி விட்டதா?" என்று வினவினான்.

"இல்லை. புயலடித்தது" என்று கூறிய கடல்வேந்தன் எழுந்து, "உபதளபதி செல்ல ஒரு படகு சித்தமாகட்டும்" என்றான்.

"உத்தரவு" என்றான் மாலுமி.

"இன்று மாலை நமது மரக்கலங்கள் நகரும். அதையும் அறிவித்துவிடு நமது மாலுமிகளுக்கு" என்று உத்தரவிட்டு நீராடும் அறையை நோக்கி வேகமாக நடந்தான்.

□

37. வேந்தன் சோதிடம்

முசிறியில் தமது மாளிகையிலிருந்து கடலையும், அதை அடுத்திருந்த முசிறியின் நிலப்பகுதியையும் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த அமைச்சர் அழும்பில்வேளின் முகத்தில் கவலையும், கலக்கமும் கலந்த உணர்ச்சிகள் தாண்டவமாடிக் கொண்டிருந்தன. இத்தனைக்கும் எதிரேயிருந்த கடல் அந்த மாலை வேளையில் ரம்மியமாகத்தான் இருந்தது. அதில் அக்கினிப்பிண்டம் போல் மூழ்கிக் கொண்டிருந்த மாலைக் கதிரவன் நிலப்பகுதியைப் பொன்மயமாக அடித்துக் கொண்டிருந்த காட்சி, யார் மனத்தையும் மயக்கும்படியாகவே இருந்தது. கடலை அடுத்திருந்த யவனர் சேரியும், சற்றுத் தென்புறத்திலிருந்த அராபியர் குடியிருப்பும் சிறிய வீடுகளையும், குடிசைகளையுமே கொண்டதாயிருந்தாலும், கதிரவன் பூசிய பொன் மெருகால் அவை பெரும் அழகைப் பெற்றிருந்தன. கடலுக்குள் புகுந்த சுள்ளியாற்று நீர்கூட பொன்னிறம் பெற்றதால் அதன் சிற்றலைகள் தங்கப் பாளங்களைப்போல் எழுந்து, வீழ்ந்து கொண்டு, ஏதோ ஜால வித்தை காட்டிக் கொண்டிருந்தன. இத்தனை அழகையும் அமைச்சர் பார்த்தும், அதை ரசிக்கும் நிலையில் இல்லை அவர் மனம். சில நாள்களாக சஞ்சயன் கொண்டு வந்த செய்திகளிலிருந்து, யவனர் குடியிருப்பிலிருந்தும், அராபியர் குடியிருப்பிலிருந்தும் எந்த நேரமும் புரட்சி கிளம்பலாம் என எதிர்பார்த்த அழும்பில்வேள், அப்படி புரட்சி ஏற்படும் பட்சத்தில் தமது சிறுபடையைக் கொண்டு அதைச் சமா

ளிப்பது கடினம் என்பதைப் புரிந்து கொண்டிருந்தார். அதைப்பற்றி மன்னருக்கு அனுப்பிய செய்திக்கு அன்று வரை பதிலேதும் கிடைக்காதது, அவர் கவலையை உச்ச நிலைக்குக் கொண்டு போயிருந்தது.

இத்தகைய மனநிலையிலிருந்த அழும்பில்வேளைப் பின்னாலிருந்து அணுகிய சேர தூதுவனான சஞ்சயன், "அமைச்சர் அதிகக் கவலையுடனிருப்பதாகத் தெரிகிறது" என்றான் மெதுவான குரலில்.

அமைச்சர் சற்றே தலையைத் திருப்பி சஞ்சயனை நோக்கி, "நீர் சில நாள்களாக அடுத்தடுத்துக் கொண்டு வந்த செய்திகளைக் கேட்டு, கவலையுடனில்லாமல் வேறு எப்படி இருப்பேனென்று எதிர்பார்க்கிறீர்?" என்று உஷ்ணத்துடன் கேட்டார்.

"செய்திகளைக் கொண்டு வருவது என் கடமை...." என்று சஞ்சயன் இழுத்தான்.

"அவற்றைச் சமாளிப்பது என் கடமையாகும்?" என்று எரிச்சலுடன் பதில் சொன்னார் அமைச்சர்.

சஞ்சயன் மெல்ல இளநகை பூத்தான். "தாங்கள் அமைச்சரல்லவா? தாங்கள் பிரச்னைகளைச் சமாளிக்காமல் வேறு யார் சமாளிப்பார்கள்?" என்று வினவினான் சஞ்சயன் புன்முறுவலின் ஊடே.

அமைச்சர் முகத்தில் கடுமை அதிகமாயிருந்தது. "இந்தப் பதவியை வேண்டுமானால் உமக்குக் கொடுத்து விடுகிறேன். வரப்போகும் புயலை நீர்தான் சமாளித்துப் பாருமே" என்று கூறினார் கடுமையைச் சொற்களிலும் காட்டி.

"நெருக்கடி வரும்போது பதவியைத் துறப்பது யாருக்கும் எளிது" என்றான் சஞ்சயன்,

இதற்குப் பதில் சொல்லவில்லை அமைச்சர். "சரி, சரி, இன்றைக்கு என்னதான் சமாசாரம் கொண்டு வந்திருக்கிறீர்?" என்று எரிச்சலுடன் கேட்டார் அமைச்சர்.

சஞ்சயன் முகத்தில் கவலை தெரிந்தது. "அதிகமாகப் போனால் இன்னும் இரண்டு நாள்களுக்குள் கிளேஸியஸ் தலைமையில் யவனர்கள் முசிறியின் துறைமுகத்தைக் கைப்பற்றலாம். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைப் பூர்த்தி செய்துவிட்டான்" என்றான் சஞ்சயன்.

"என்ன ஏற்பாடுகளோ?" என்று கேட்ட அமைச்சர் திரும்பி தாழ்வறைக் கைப்பிடிச் சுவரில் சாய்ந்து கொண்டார்.

"யவனர்கள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு பிரிவு கடலைப் பாதுகாக்கும். இரண்டாவது பிரிவு நமது மாளிகைப்பகுதியை நோக்கி வரும்" என்ற சஞ்சயன் நிதானித்தான்.

"உம். மேலே சொல்லும்" என்றார் அமைச்சர்.

சஞ்சயன் அமைச்சரை உற்று நோக்கிவிட்டு, "நமது யவனர் குடியிருப்பில் எத்தனை குடிமக்கள் இருந்தார்கள்?" என்று கேட்டான்.

"ஏழாயிரம் பேர்" என்றார் அமைச்சர்.

"இப்பொழுது இன்னும் மூவாயிரம் பேர். அக்கம் பக்கத்துப் பகுதிகளிலிருந்து வந்திருக்கிறார்கள். ஆக பத்தாயிரம் பேர் இருக்கிறார்கள். இவர்களுடன் ஐயாயிரம் பேர் அராபியர்களும் வந்திருக்கிறார்கள்."

"அதாவது மொத்தம் பதினாயிரம் பேர்."

"ஆம்."

இவர்களுடன் யவனர் மரக்கலங்களில் மட்டும் மூவாயிரம் மாலுமிகள் வந்திருக்கிறார்கள். கடல் போரில் இணையற்றவர்கள்'''

''நல்லது''

''எது நல்லது?''

''கடல்வேந்தன் இல்லாதபோது யவனர் போர்க் கலங்களும், மாலுமிகளும் நமது கடல் வாயிலை அடைத்து நிற்பது...'' என்ற அமைச்சர், ''இந்தச் சமயத்தில் இந்தக் கடல்வேந்தன் எங்கு தொலைந்தான்?'' என்று அலுத்துக் கொண்டார்.

''யார் கண்டது?''

''என் பெண்ணை வேறு அழைத்துப் போயிருக்கிறான். ஒரு வாரத்துக்குள் திருப்பி அனுப்புவதாகச் சொன்னான். வாரம் ஒன்றாயிற்று'' என்றார் அமைச்சர்.

'வந்துவிடுவான்'' என்ற சஞ்சயன் சமாதானம் சொன்னான்.

''நீர் என்ன குடுகுடுப்பைக்காரனா, எனக்கு இஷ்ட மானதைச் சொல்ல? வயது வந்த பெண்ணை அழைத்துப் போயிருக்கிறான். யாரும் கேட்பாரில்லை'' என்று வேதனைப்பட்டுக் கொண்டார் அமைச்சர்.

அமைச்சரே கேட்காதபோது, மற்றவர்களை அவர் குறை சொன்னதை சஞ்சயனால் ஜீரணிக்க முடியவில்லை யென்றாலும், அதைப்பற்றி அவன கேட்காமல், ''கடல் வேந்தன் நாணயஸ்தன், நிலக்கள்ளியும் சாதாரணப் பெண் அல்ல. அவளுக்கு எந்தத் தீங்கும் நேராது. கவலை வேண்டாம்'' என்று சமாதானம் சொன்னான்.

அத்துடன் அந்தப் பேச்சை விட்ட அழும்பில்வேள், ''சஞ்சயரே! நாளைக்கே யவனர்கள் புரட்சி செய்தால் அவர்களைத் தடுக்க நம்மிடமிருக்கும் இந்தத் துறைமுகப் படை போதாது. நீர் எதற்கும் வஞ்சியின் சாலையில் இருக் கும் தளத்துக்குச் சென்று, ஒரு பகுதியை இங்கு அனுப்பச் சொல்லும்'' என்று கூறியதன்றி, ''வாரும் ஓலை எழுதித் தருகிறேன்'' என்று தமது அறைக்குச் சஞ்சயனையும் அழைத்துக்கொண்டு சென்றார். அங்கிருந்த மஞ்சத்தில் உட்கார்ந்து வஞ்சி சாலை ரகசியப்படைத் தளபதிக்கு ஓர் ஓலையும் எழுதி, ஓலையில் தமது சேர இலச்சினையை யும் பொறித்தார். ''அங்குள்ள படையின் ஒரு பகுதி நாளை மாலைக்குள் துறைமுகப் பகுதிக்கு வரட்டும். நீரும் இங் குள்ள நிலையை வற்புறுத்திச் சொல்லும் படைத்தலை வனுக்கு'' என்றும் சொன்னார்.

அன்று இரவின் ஆரம்பத்திலேயே புறப்பட்ட சஞ்சயன், நள்ளிரவுக்கு முன்பாகவே படைத்தளத்தை அடைந்தான். படைத்தளம், மலையின் மறைவுகளிலும், மலையை அடுத்த காட்டுப் பகுதியிலும் சின்னஞ்சிறு குடிசைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அவற்றின் வழியே சென்று, அந்தப் படைகளுக்கு நடுவில் அமைக்கப் பட்டிருந்த நாலைந்து கல் கட்டடங்களில் ஒன்றின் முன்பு நின்ற சஞ்சயன், அங்கிருந்த காவல் வீரனை நோக்கி, ''படைத் தலைவரை உடனடியாகப் பார்க்கவேண்டுமென்று சொல்'' என்றான்.

''இப்பொழுது யாரையும் பார்க்க முடியாது'' என்று காவலனே பதில் சொல்லி விட்டான்.

''அமைச்சர் அழும்பில்வேளிடமிருந்து வருகிறேன்'' சஞ்சயன் கனத்துடன் கூறினான்.

''யாரிடமிருந்து வந்தாலும் உள்ளே போக முடியாது. முடியுமிருந்தால் கொடுங்கள். நான் எடுத்துச் செல் கிறேன்'' என்று கையை நீட்டினான்.

"யாரிடமும் கொடுக்க முடியாது" உறுதியாகச் சொன்னான் சஞ்சயன்.

"என்னிடம் கூடவா?" என்று உள்ளிருந்து வந்த குரலை அடுத்து, குரலுக்குடையவரும் வெளியே வந்தார்.

புலவரை அங்கு முற்றும் எதிர்பாராத சஞ்சயன், "புலவர் பெருமானே! இது ரகசிய ஓலை. யாரிடமும் கொடுப்பதற்கில்லை" என்று கூறினான்.

"உங்கள் இஷ்டம்" என்று சொன்ன புலவர், மீண்டும் உள்ளே சென்றுவிட்டார்.

அவர் சென்ற சில நிமிடங்களுக்கெல்லாம் சேரர் படைத்தலைவரான வில்லன் கோதை வெளியே வந்தார்.

"சரி. ஓலையைக் கொடும்" என்று கையை நீட்டினார்.

சஞ்சயன் ஒரு விநாடி சிந்தித்தான். சேரர் தரைப் படைகளுக்கெல்லாம் வில்லவன் கோதை தலைவராதலால் அந்த சிறு தளத்தின் தலைவர் பார்க்கக்கூடிய ஓலையை அவர் பார்க்கலாம் என்று தீர்மானித்தான் சஞ்சயன். ஓலையை அவரிடம் கொடுத்தான்.

அந்த ஓலையை எடுத்துக்கொண்டு உள்ளே சென்ற வில்லவன் கோதை, நீண்ட நேரம் வெளியே வராததால் சஞ்சயன் எதிரேயிருந்த ஒரு மரத்தின் அடியில் உட்கார்ந்து கொண்டான். முசிறியில் புரட்சி ஏற்படக்கூடிய நிலையில் வில்லவன்கோதை, புலவர், காவலன் எல்லாரும் அலட்சியம் காட்டியதை நினைக்க பெரும் விந்தையாயிருந்தது சஞ்சயனுக்கு. அதைவிட விந்தையாயிருந்தது ஒரு நாழிகை கழித்து வந்து வில்லவன்கோதை சொன்ன செய்தி. அந்தப் படைவீட்டின் வாசலுக்கு வந்ததும் எட்ட இருந்த மரத்தடியில் உட்கார்ந்திருந்த சஞ்சயனை அழைத்து, "தூதரே! இதோ பதில் எழுதியிருக்கிறேன். எடுத்துச் செல்லும்" என்று ஓலையைக் கொடுத்தார்.

சஞ்சயன் அதற்கு மேல் அங்கு நிற்கவில்லை. தனது புரவியில் ஏறிக்கொண்டு பறந்தான் முசிறியை நோக்கி. அவன் அமைச்சர் மாளிகையை அடைந்தபோது நடுநிசி தாண்டியிருந்தாலும், அமைச்சர் எழுந்து வந்து சஞ்சயனிடமிருந்து ஓலையைப் பெற்றுக்கொண்டு, "சஞ்சயரே! வாரும். ஓலையைப் படிப்போம்" என்று சஞ்சயனையும் தமது அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்த விளக்கைத் தூண்டி, ஓலையைப் படித்தவர் தலைமேல் கையை வைத்துக்கொண்டார்.

"என்ன அமைச்சரே?" என்று அனுதாபத்துடன் கேட்டான் சஞ்சயன்.

"அமைச்சர் குட்டிச் சுவராகப் போனார்" என்ற அமைச்சர் அழும்பில்வேள் "ஓலையை நீரே படியும்" என்று சஞ்சயனிடம் கொடுத்தார்.

சஞ்சயனும் ஓலையை வாங்கிப் படித்துத் திக்பிரமை அடைந்தான். "தளத்திலிருந்து படையில் பாதியை மன்னருக்கு அனுப்பும்படி மன்னர் செய்தி அனுப்பினாராம். இவரிருந்தவர்கள் அரசர் உத்தரவுப்படி பாதிப்படையை அனுப்பி விட்டார்களாம்."

"இனி அந்தத் தளமும் புரட்சிக்காரர்களால் குறைபடப்படும்" என்ற அமைச்சர், "இந்த சமயத்தில் அந்தச் சனியன் பிடித்த கடல் வேந்தனாவது இருந்தால் நமக்குத் தைரியமாயிருக்கும்" என்று சற்று உரக்கவே சொன்னார்.

அறைக்கு வெளியே ஒரு நகைப்பொலி கேட்டதுமாலில் விளக்கை ஏந்தி வெளியே வந்த அமைச்சர், கடல் வேந்தன் ஆஜானுபாகுவாகத் தாழ்வரையில் நிற்பதைக் கண்டார். அதனால் சிறிது துணிவு வரவே, "கடல் வேந்தரே! உமக்கு ஆயுசு நூறு" என்று ஆசீர்வாதம் செய்தார்.

"நன்றி" என்ற கடல்வேந்தன், "அமைச்சரே! இன்று அமாவாசை" என்றான்.

"ஆம்" என்றார் அமைச்சர், அன்று திதி எதுவா யிருந்தால் என்ன என்ற எண்ணத்தால்.

"நாளைக்குப் பிரதமை" என்றான் மீண்டும் கடல் வேந்தன்.

"ஆம்" என்றார் அமைச்சர்.

"நக்ஷத்திரம் பூசம்" என்று கடல்வேந்தன் கூறினான்.

"வேந்தரே!" அமைச்சர் குரல் ஒலித்தது எரிச்சலுடன்.

"என்ன?"

"நீர் என்ன சோதிடரா?"

"அதுவும் தெரியும்!"

"நாள் கிழமைக்கு என்ன வந்து விட்டது இப் பொழுது?"

கடல்வேந்தன் சிந்திக்காமலே பேசினான். "நாளை பூசம் உச்சமாகத் தெரியும்போது முசிறி புரட்சியில் சிக்கும். கடலிலிருந்தும், நிலத்திலிருந்தும் யவனர் தாக்குதல் நடக்கும். அதற்குச் சித்தமாயிரும்" என்று கூறிவிட்டு, அந்த இடத்திலிருந்து வேகமாக வெளியேறி விட்டான் கடல்வேந்தன்.

அமைச்சரின் கோபம் எல்லை கடந்தது. "வந்தான், சோதிடம் சொன்னான், போனான். புரட்சியை எதிர்க்க வழி சொல்லவில்லை-வழி சொன்னாலும் உதவிக்கு வரப் படை கிடையாது" என்று அவர் சீறினார். "சஞ்சயரே! உமக்கு லவலேசமாவது புத்தியிருக்கிறதா?" என்று தூதன் மேல் எரிந்து விழுந்தார்.

□

38. குட்டுவன் வந்தான்

கடல்வேந்தன் அவசர அவசரமாக வந்து முசிறியில் புரட்சி ஏற்படப் போவதை அறிவித்துவிட்டு பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யத் தம்மை உத்தரவிட்டுச் சென்றதை நினைக்க ஆத்திரம் ஆத்திரமாக வந்தது அமைச்சர் அழும் பிள்ளைக்கு, இத்தனைக்கும் அவன் அழைத்துப் போன பெண் மகளைப் பற்றி அவன் ஒரு வார்த்தை கூடச் சொல் லாமல் போய்விட்டதை நினைத்த அமைச்சரின் சினம் உச்சத்துக்குச் சென்றதாலும், அதைக்காட்ட அங்கு கடல் வேந்தன் இல்லாததாலும் சினத்தை சஞ்சயன் மீது திருப்பி எரிந்து விழுந்து, "உமக்குப் புத்தி ஏதேனும் இருக் கிறதா?" என்று கேட்டார்.

இந்த நிலையில் எரிகிற கொள்ளியை ஏறத்தள்ளுவது போல் சிறிது நகைச்சுவையைக் காட்டத் தொடங்கிய சஞ்சயன் "இருக்கிறது?" என்றான்.

அமைச்சர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. இவர் எந்த நகைச்சுவையையும் ரசிக்கும் மனநிலையில் இல்லை. "என்ன இருக்கிறது" என்று வினவினார் எரிச்சல் தீராத குரலில்.

"புத்தி" என்றான் சஞ்சயன்.

"உமக்கா?"

"ஆம். என்னைப்பற்றித்தானே கேட்டீர்கள்?"

"ஆம். புத்தி இருப்பதற்கு என்ன அடையாளம்?"

"இன்னும் இரண்டு நாள் விவகாரங்கள் இப்பவே எனக்கு தெரியும்."

"என்ன தெரியும்?"

"பைத்தியம் பிடித்துவிடும். புத்தி இருப்பதற்கு அதை விட வேறு அத்தாட்சி கிடையாது."

"உமக்குப் பிடிப்பதற்கு முன்னால் எனக்குப் பிடித்து விடும் போலிருக்கிறது."

"பிடித்தால் நல்லது."

"நல்லதா?"

"ஆம். மன்னர் நம்மிடமிருந்து பொறுப்பை நீக்கி விடுவார்."

"அது நல்லதாக்கும்?"

"சந்தேகமென்ன? பொறுப்பில்லாவிட்டால் பிரச்சனை களும் இல்லை. பிரச்சனைகள் இல்லாவிட்டால் புத்திக் குழப்பமில்லை, நிம்மதியாக வாழலாம்" இதைச் சொன்ன சஞ்சயன் நிம்மதியாகக் காலை நீட்டிக்கொண்டு தனது ஆசனத்தில் அமர்ந்தான்.

அமைச்சருக்கு என்ன பேசுவதென்று தெரியவில்லை. சஞ்சயன் தனது நிரர்தரவான நிலைகண்டு பரிகசிக்கிறான் என்பதை மட்டும் புரிந்து கொண்டதால் தலையில் இரு கைகளையும் வைத்துக் கொண்டு தாமும் ஆசனத்தில் சாய்ந்தார். அப்பொழுது அவர்கள் இருந்த இடத்தை நோக்கி கீழிருந்து தாழ்வறைக்கு வரும் மாடிப்படிகளில் யாரோ ஏறிவரும் சத்தம் கேட்டது. அதைக் கேட்டதும் அமைச்சர், தூதர் இருவருமே சுறுசுறுப்பைக் காட்டி நிமிர்ந்து உட்கார்ந்தார்கள். படிகளில் ஏறிவந்தவன் படிகளின் முகப்பிலேயே நின்று, "உள்ளே வரலாமா?" என்று இனிய குரலில் கேட்டான்.

"வரலாம்" என்று அமைச்சர் அனுமதிக் குரல் கொடுத்ததும் அந்த மனிதன் உள்ளே நுழைந்தான். வந்த வாலிபன் புலவர் மகன் குட்டுவன் என்பதை

அறிந்ததும், "இந்தச் சமயத்தில் இந்த பயங்கொள்ளி [illegible]தான் மீதி" என்று உள்ளூர வந்தவனை சபித்த அமைச்சர், அவன் தாழ்வறைக்குள் வந்ததும் அவன் உட்கார ஓர் ஆசனத்தைக் காட்டினார். அந்த ஆசனத்தில் அவன் உட்கார்ந்ததும் "நீங்கள் அமரத் தகுந்த ஆசனம் அது" என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

"முதன் முதலில் வீரனான கடல்வேந்தன் இந்த மாளி[illegible]க்கு வந்தபோது அவன் அமர்ந்த ஆசனம் அதுதான்" என்று சஞ்சயன் விளக்கினான்.

"என் அண்ணன் ஆசனமா?" என்று வியப்பும் ஆவலும் [illegible] தொனியில் வினவினான் குட்டுவன்.

"ஆம், வீரமுள்ள யாரும் அதில் அமரலாம்" என்றார் அமைச்சர்.

குட்டுவன் தனது அழகிய விழிகளை மற்ற இருவர் [illegible] நிலைக்கவிட்டான் "அப்படியானால் நீங்கள் இரு[illegible] ஏன் அதில் உட்காரவில்லை?" என்றும் வினவினான்.

சஞ்சயன் இளநகை கொண்டான். "அத்தனை வீரம் [illegible] இருவருக்கும் கிடையாது" என்றான் இகழ்ச்சி [illegible] குரலில்.

குட்டுவன் நகைத்தான். தனது அழகிய விழிகளை [illegible] மீது திருப்பி "வருந்தத்தக்கது" என்றான் [illegible] உடனே.

"ஏன்?" என்று கேட்டார் அமைச்சர்.

"அமைச்சரும் தூதரும் ஆண்மையற்று இருப்பது" [illegible] குட்டுவன்.

"தாங்கள் எப்படியோ?" என்று அமைச்சர் கேட்டார். பல சமயங்களில் குட்டுவன் நடுங்கியதைப் பார்த்திருந்த காரணத்தால்.

குட்டுவன் அமைச்சரைக் கம்பீரமாக நோக்கி விட்டு அந்த ஆசனத்தில் சென்று அமர்ந்தான்; அமர்ந்து ஒரு முறை அசைந்தான். "இதில் போடப்பட்டுள்ள முதுகு அணை கெட்டியாயிருக்கிறது, மிருதுவாயில்லை" என்று குற்றம் சாட்டினான்.

"வீரர்கள் அமரும் ஆசனமல்லவா?" என்றார் அமைச்சர்.

"ஆம். வீரன் மனம் போல் கெட்டியாகத்தானிருக்க வேண்டும். ஆனால், எனக்கு இந்தக் கெட்டி போதாது!" என்று அலுப்புடன் பேசினான் குட்டுவன்.

"ஏன்?" அமைச்சர் வினவினார் எரிச்சலுடன்.

"என் மனம் இரும்பு."

"ஆகையால்?"

"இரும்பாசனத்தை விரும்புகிறேன். கொண்டு வாரும் அமைச்சரே" என்று சற்றுக் கடுமையுடன் கூறினான்.

அமைச்சர் குட்டுவனைச் சந்தேகப் பார்வையாகப் பார்த்தார். பிறகு சஞ்சயனை நோக்கி "இவருக்கு...?" என்று இழுத்தார்.

"புத்தி இருக்கிறது" என்றான் சஞ்சயன்.

"இல்லாவிட்டால்...." அமைச்சர் மீண்டும் இழுத்தார் சொற்களை.

"இந்த நிலை ஏற்பட நியாயமில்லை" என்றான் சஞ்சயன்.

இந்தச் சமயத்தில் குட்டுவன் சற்றுப் பெரிதாகவே சிரித்தான். "அமைச்சரே! என்னைப் பைத்தியமென்று நினைக்கிறீர். தூதரும் நினைக்கிறார். அப்படியானால் நீங்கள் இருவரும் எனது சகோதரர்கள்..." என்றான் சிரிப்பின் ஊடே.

"எங்களுக்குப் பைத்தியம் ஏதும் இல்லை" என்றார் அமைச்சர் கடுப்பாக.

"எந்தப் பைத்தியமும் இப்படித்தான் பேசும்" என்றான் குட்டுவன், "சரி பேச்சை வளர்த்துவானேன், எனது உப தலைவனைக் கூப்பிடுங்கள்" என்று ஆணையிட்டான்.

அமைச்சருக்குக் கொஞ்சநஞ்சமிருந்த சந்தேகமும் தீர்ந்துவிட்டது. சஞ்சயனைப் பார்த்தார் சங்கடத்துடன். சஞ்சயனும் ஏதும் தெரியாமல் விழித்தான். அவர்கள் நடத்தையைப் பார்த்த குட்டுவன் "என் அடிமைகளான நீங்கள் இருவரும் எனது கட்டளையை ஏற்காததால் தானே அழைக்கிறேன்" என்று சினத்துடன் கூறிவிட்டு, "உபதலைவரே! வாரும் உள்ளே" என்று இரைந்து கூவினான்.

மாடிப்படியில் தடதடவென யாரோ ஏறிவரும் சத்தம் கேட்டது. அப்படி ஏறிவந்தவன் மாடிப்படிகளின் கீழ்ப்படிக்கு வந்ததும், "அங்கேயே நில்லும்" என்று கூவினான் குட்டுவன்.

வந்தவன் நின்றுவிட்டான், குட்டுவன் ஆணைப்படி. அதிர்ந்து குட்டுவன் "சரி பாடும்" என்றான்.

அமைச்சர் முகத்தில் கிலி பிறந்தது. "சஞ்சயரே! இது முழுகிவிட்டது. பரணர் வளர்ப்புப் பிள்ளை மன்னரின் மூத்தமகன், பைத்தியமாகி விட்டான். வாரும் அவனைப் பிடித்துக்கொள்வோம்" என்று கூறிக் கொண்டே குட்டுவனை நோக்கி நடந்தவர் சட்டென்று

நின்று விட்டார். மாடி உச்சிப்படியிலிருந்து யாரோ பாடத் தொடங்கினார்கள். பாடியவன் கணீரெனப் பாடினான். "புலவர் புதல்வனே, புரவலன் அளித்த சேயே, முசிறியின் படைத்தலைவா, போற்றி போற்றி" என்று நன்றாக இசைத்துக்கொண்டே உள்ளே நுழைந்தவனைக் கண்ட அமைச்சர், சஞ்சயன் இருவருமே திடுக்கிட்டனர்.

அவர்கள் திகைப்பைப் பார்த்தாலும் பார்க்காதவன் போலவே பாடிக் கொண்டு உள்ளே நுழைந்த நற்கிள்ளி குட்டுவனுக்குத் தலைவணங்கி நின்றான். அந்த விநோதத்தைப் பார்த்த அமைச்சர், "நற்கிள்ளி! நீ எங்கு வந்தாய் இந்த நேரத்தில்?" என்று வினவினார்.

"முசிறியின் தரைப்படைத் தலைவர் ஆணைப்படி வந்தேன்" என்றான் நற்கிள்ளி.

"இப்பொழுது பாடியது?" அமைச்சர் கேட்டார்.

"அவர் ஆணையால்!" இதைத் திட்டமாகச் சொன்னான் நற்கிள்ளி.

"இவர்..." என்று இழுத்தார் அமைச்சர்.

"நமக்கெல்லாம் தலைவர், நாளை புரட்சியை அடக்கப் போகும் மகாவீரர்" என்றான் நற்கிள்ளி.

"இவரா?" வாயைப் பிளந்தான் சஞ்சயன்.

"ஆம். இவரேதான்" நற்கிள்ளியின் குரல் சந்தேகம் ஏதுமின்றி ஒலித்தது.

அந்தச் சமயத்தில் குட்டுவன் குரல் பலமாக ஒலித்தது, "நற்கிள்ளி! இவர்கள் எனது வீரத்தில் சந்தேகப்படுவதாகத் தெரிகிறது" என்று.

"ஆம்." நற்கிள்ளி பயபக்தியுடன் பேசினான்.

"அப்படியானால், எனது சக்தியைக் காட்ட வேண்டியதுதான்."

"வேண்டாம், வேண்டாம், மன்னித்து விடுங்கள். இவர்கள் உங்களைப் புரிந்து கொள்ளவில்லை."

அடுத்து நிகழ்ந்தது விசித்திர சம்பவம். "புரிய வைக்கிறேன்" என்று கருவிக் கொண்டு, ஆசனத்திலிருந்து எழுந்த குட்டுவன் அமைச்சரை இரண்டெட்டில் அடைந்து அவரைத் தனது இரு கைகளாலும் தூக்கித் தனது தலைக்குமேல் பிடித்துக் கொண்டான். ஒருமுறை அவரைத் தாங்கியபடி சுற்றினான். "இவரை வெளியே எறிந்து விடட்டுமா?" என்றும் கேட்டான் வெறி ஒலித்த குரலில்.

"பைத்தியங்களுக்குப் பலம் அதிகம்" என்று உள்ளூர சொல்லிக் கொண்டே சஞ்சயன் பின்னால் நகர ஆரம்பித்தான்.

"நற்கிள்ளி! படிக்கதவைத் தாளிடு. இவரை அனுப்பி விட்டு அவனைக் கவனிக்கிறேன்" என்ற குட்டுவன், அமைச்சரைத் தாங்கிய வண்ணம் கைப்பிடியை நோக்கிச் சென்று வெளியே எட்டிப்பார்த்தான். தலைகவிழ்ந்த நிலையில் அமைச்சரும் பார்த்தார். கீழே கிடுகிடுபாதாளம். 'அங்கு எறியப்பட்டால் ஆற்றில் கரைக்கத் தனது எலும்புகூடக் கிடைக்காது' என்ற நினைப்பால் "வேண்டாம் வேந்தே! மன்னித்து விடுங்கள்" என்று அலறினார் அமைச்சர் அழும்பில்வேள்.

அந்த அலறலுக்குப் பிறகு சிறிது சமாதானமடைந்த குட்டுவன் அமைச்சரைக் கீழே இறக்கி விட்டான். "நற்கிள்ளி! இனி இவரிடம் ஓலையைக் கொடுக்கலாம்" என்று குட்டுவன் உத்தரவிட, மடியிலிருந்த ஓலையை எடுத்து அமைச்சரிடம் கொடுத்தான் நற்கிள்ளி.

அமைச்சர் உடலும், உள்ளமும் ஆடியிருந்ததால் நடுங்கும் கரங்களுடன் ஓலையை வாங்கிப் பிரித்து அதைப் படித்தார். அடுத்து அவர் தள்ளாடிய கால்களுடன் கீழிறங்கி வந்த குட்டுவன் முன் மண்டியிட்டு உட்கார்ந்து தலைவணங்கினார். சஞ்சயன் பிரமை பிடித்து நின்றான்.

□

39. குட்டுவன் தலைமை

நற்கிள்ளி கொடுத்த ஓலையைப் படித்தவுடன் அமைச்சர் குணம் அடியோடு மாறிவிட்டதையும், அதுவரை குட்டுவனைப் பற்றி அலட்சியமாகப் பேசிக்கொண்டிருந்தவர் அவன் முன்பு மண்டியிட்டு வணங்கியதையும் கண்ட சேரதூதனுக்கு எதுவுமே விளங்காததால் பிரமை பிடித்து நின்று கொண்டே இருந்தான். அடுத்து எழுந்த அமைச்சரின் சொற்கள் அவனை இந்த உலகத்துக்கு இழுத்தன. "தூதுவரே! வணங்கும் நமது தலைவரை" என்று உத்தரவிட்டு எழுந்தவர், குட்டுவன் திருவடிகளைக் கையால் சுட்டிக் காட்டினார் சஞ்சயனுக்கு. அப்படியும் சஞ்சயன் இருந்த இடத்தை விட்டு அசையாததால், கையிலிருந்த ஓலையை அவனிடம் கொடுத்துப் "படித்துப் பாரும்" என்றார்.

சஞ்சயன் கையில் ஓலையை வாங்கிப் படித்தான். அதில் கண்டிருந்த செய்தி அவனைத் திகைக்க வைத்தது. "இதைக் கொண்டுவரும் குட்டுவன் முசிறியின் தரைப் படைகளுக்குத் தலைவனாக நியமிக்கப்பட்டிருக்கிறான். அவன் கட்டளைகளை நமது கட்டளையாக நினைத்து அனைவரும் நிறைவேற்ற வேண்டியது" என்றிருந்தது ஓலையில். அதில் மன்னரே கையெழுத்திட்டிருந்தார். ஓலையை ஒருமுறைக்கு இருமுறையாகப் படித்த சஞ்சயன் அதிலிருந்த கையொப்பத்தையும் சோதித்தான். ஏதோ முக்கிய காலங்களில் மிகப் பெரிய நிகழ்ச்சிகளுக்கு மட்டுமே மன்னர் கையெழுத்திடுவது வழக்கமாதலால், இந்தச் சிறிய நியமனத்துக்கு அரசர் ஏன் கையெழுத்திட்டார் என்பது விளங்கவில்லை தூதனுக்கு. ஆகவே, அது அரசர் கையெழுத்துத்தானா என்பதை நிர்ணயித்துக்

கொள்ள ஒருமுறைக்கு இருமுறையாகக் கையெழுத்தைப் பார்த்து, "ஆம். மன்னர் கையெழுத்துத்தான், சந்தேகமில்லை" என்று உள்ளூரச் சொல்லிக்கொண்டான்.

சஞ்சயன் மனத்திலோடிய எண்ணங்களைக் குட்டுவன் புரிந்து கொண்டிருக்க வேண்டும். ஆகவே கேட்டான் நற்கிள்ளியை நோக்கி, "உபதலைவரே! தூதர் சந்தேகப்படுகிறாரா?" என்று.

நற்கிள்ளி தூதனை நோக்கித் திரும்பி, "தூதரே! சந்தேகப்படுகிறீரா?" என்று வினவினான்.

"எதைப்பற்றி?" என்று சஞ்சயன் கேட்டான்.

"எதைப்பற்றி என்று கேட்கிறார்?" என்று வினவினான் நற்கிள்ளி, குட்டுவனை நோக்கி.

"ஓலையிலிருக்கும் கையெழுத்தைப் பற்றி. நாம் தங்களைக் கையெழுத்து போட்டிருப்பதாக நினைக்கிறார். அப்படி நினைப்பதற்கே தண்டனை உண்டு" என்றான் குட்டுவன்.

இதைக் கேட்டதும் சஞ்சயன் நடுங்கினான். "இல்லை இல்லை, அப்படி நினைக்கவில்லை" என்றும் சொன்னான் நடுங்கும் குரலில்:

"அப்படியானால் ஓலையை எதற்காக திரும்பத் திரும்பப் பார்த்தீர்?" என்று குட்டுவன் கேட்டான்.

"விளக்கு வெளிச்சம் போதவில்லை" என்று சாக்கு சொன்னான் சஞ்சயன்.

"போதவில்லை என்றால் விளக்கை நீர் ஏன் தூண்டவில்லை?" என்று குட்டுவன் கேட்டான் அதிகாரக் குரலில்.

"தோன்றவில்லை", சஞ்சயன் ஏதோ சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொன்னான்.

அடுத்து குட்டுவன், நற்கிள்ளியை நோக்கி, "உப தலைவரே! இவருக்குத் தோன்றவில்லை" என்றான்.

"அவரே ஒப்புக்கொள்கிறார்" என்றான் நற்கிள்ளி.

"எதுவும் தோன்றாத புத்தி எதற்கு உபயோகம்?"

"எதற்கும் உபயோகமில்லை."

"நாளை போர் வந்தால்?"

"இவர் புத்தி வேலை செய்யாது."

"கை, கால்?"

"என்றுமே வேலை செய்ததில்லை."

"சரி! அப்படியானால், தூதரைச் சிறையில் அடைத்து வையும்" என்று குட்டுவன் உத்தரவிட்டான்.

சேரதூதன் குட்டுவன் கால்களில் விழுந்தான். "மன்னிக்க வேண்டும் படைத்தலைவரே" என்று கெஞ்சினான்.

குட்டுவன், நற்கிள்ளியை நோக்கித் திரும்பி, "இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?" என்று வினவினான்.

"சரணாகதி செய்பவர்களை மன்னிப்பது இந்த மண்ணின் இயல்பு" என்றான் நற்கிள்ளி.

"சரி எழுந்திரும். உம்மை மன்னித்தோம்" என்று கூறிய குட்டுவன் அமைச்சரை நோக்கி, "அமைச்சரே! நாளை புரட்சி ஏற்பட்டால் அதை அடக்க நம்மிடம் போதிய படை இருக்கிறதா?" என்று வினவினான்.

"இல்லை" இதைத் திட்டமாகச் சொன்னார் அமைச்சர்.

"அப்படியானால் மந்திராலோசனையில் இறங்குவோம்" என்று கூறிய குட்டுவன், அங்கிருந்த ஆசனத்தில் நன்றாகச் சாய்ந்து கொண்டான். மற்றவர்களையும் தனக்கெதிரே உட்கார வைத்தான் "இனிக் கிளர்ச்சியை அடக்கும் முறைகளை யோசிப்போம்" என்று கூறினான்.

எல்லாரும் அமர்ந்ததும் அமைச்சர் சொன்னார். "படைத்தலைவரே! யவனர்களிடம் பத்தாயிரம் பேர் கை தேர்ந்த வீரர்கள் இருக்கிறார்கள்" என்று.

"அதைப்பற்றி நமக்கென்ன கலவலை?" என்று குட்டுவன் கேட்டான்.

"நம்மிடம் ஐயாயிரம் பேர் கூடக் கிடையாது" என்றார் அமைச்சர்.

"நல்ல வீரர்களாயிருந்தால் பத்தாயிரம் பேரை அடக்க ஐயாயிரம் பேர் அதிகம்" என்ற குட்டுவன், "மூவாயிரம் பேர் போதும், மீதி இரண்டாயிரம் பேரை நாளைக்கு நமது வஞ்சிப்பாலைப் பாசறைக்கு அனுப்பி விடுவோம்" என்றான்.

அமைச்சருக்குத் தூக்கிவாரிப் போட்டது. மீதி மூவாயிரம் பேர் முசிறியை ஒருநாளும் காக்க முடியாது என்பதை உணர்ந்ததால், "படைத்தலைவரே! யவனர் சிறந்த வீரர்கள்" என்று இழுத்தார்.

"யவன வீரத்துக்குச் சேரநாட்டு வீரம் குறைந்ததா?" சீற்றத்துடன் கேட்டான் குட்டுவன்.

"இல்லை. ஆனால்..." என்றார் அமைச்சர்.

"சேரநாட்டு வீரத்தில் உமக்கு நம்பிக்கையில்லை, அமைச்சரே! சேரநாட்டு மண்ணே போராடும், இந்த

மண்ணில் வீரர்களே பிறக்கிறார்கள். உதாரணத்துக்கு என்னையே பாரும்" என்றான் குட்டுவன்.

அமைச்சருக்கு அழுவதா, சிரிப்பதா என்று தெரிய வில்லை. அதைத் தவிர வேறொரு விஷயமும் வியப்பை அளித்தது, அவருக்கு. சமீப காலம்வரை பயங்கொள்ளி யாயிருந்த குட்டுவன் எப்படிப் போருக்குத் துணிந்தான் என்பது தெரியவில்லை அவருக்கு. அதைத் தவிர, தம்மை அவன் இரு கைகளாலும் தூக்கிச் சுழற்றியதை நினைத்து "இத்தனைபலம் இவனுக்கு எப்பொழுது வந்தது?" என்று தம்மைத் தாமே கேட்டுக் கொள்ளவும் செய்தார்.

இப்படி சிந்தனை வயப்பட்டிருந்த அவரை நோக்கிய குட்டுவன், "சிந்தனை செய்கிறீரா! நல்லது நல்லது" என்று சிலாகித்தான்.

"ஆம், சிந்தனை செய்கிறேன்" என்றார் அமைச்சர் எரிச்சலுடன்.

"இப்பொழுது மந்திராலோசனை செய்கிறோம். அதற்குச் சிந்தனை நல்லது" என்றான் குட்டுவன்.

அமைச்சர் சிந்தனையிலிறங்குவதையும் விட்டார். குட்டுவனை நோக்கி, "மீதி மூவாயிரம் பேரால் முசிறியைக் காப்பாற்ற முடியுமென்று நினைக்கிறீர்களா?" என்று வினவினார்.

"எனக்கு இதுவே அதிகம். ஆனால் படைகளை நடத்தப் போகிறவர் அபிப்பிராயம் எப்படியோ?" என்றான் குட்டுவன்.

"படைகளை நடத்தப் போவது வேறொருவரா?" அமைச்சர் வினவினார் வியப்புடன்.

"சந்தேகமென்ன? இந்தச் சிறு போரை நடத்த [illegible]ணைப் போன்ற படைத்தலைவன் வேண்டுமா?" என்று [illegible]ட்டான் குட்டுவன்.

மெல்ல மெல்ல குட்டுவன் சுயரூபம் வெளிவருவ[illegible] நினைத்த அமைச்சர், "வேண்டாம். வேண்டாம்" [illegible] ஒப்புக்கொண்டு, "வேறு யார் படையை நடத்தப் [illegible]வது?" என்றும் வினவினார்.

"எனது உபதலைவன் நற்கிள்ளி" என்று அசட்டை[illegible] பதில் சொல்லி ஆசனத்தில் நன்றாகச் சாய்ந்து [illegible]ண்டான் குட்டுவன்.

இதைக் கேட்டதும் நற்கிள்ளி ஆசனத்திலிருந்து [illegible], குட்டுவனுக்குத் தலைவணங்கி, "தங்கள் உப [illegible]யானதே எனக்கு பாக்கியம். தவிர, தங்கள் [illegible]யாகப் படைகளை நடத்துவது அதைவிடச் [illegible] பாக்கியம் இந்த முசிறியைப் பிடிக்க இனி [illegible]லும் முடியாது" என்று வீராவேசத்துடன் பேசவும் [illegible]ன்.

அமைச்சர் அழும்பில்வேள் இந்த நாடகத்தைக்கண்டு [illegible] உச்சிக்குச் சென்றார், 'இது மந்திராலோசனை [illegible], ஏதோ பைத்தியக்கார நாடகம்" என்று உள்ளூர [illegible] விழுந்து கொண்டார்.

"நற்கிள்ளி!" என்று தொடங்கினார் அமைச்சர்.

"அவரைப் பட்டப்பெயரால் அழையும் என்றான [illegible]ன்.

"முசிறிப் படையின் உபதலைவரே!" என்று தொடங்கிய [illegible], "மூவாயிரம் பேரையும் தற்காப்புக்கு எப்படிப் [illegible]த்தப் போகிறீர் என்பதை நான் அறியலாமா?" [illegible]ட்டார்.

நற்கிள்ளி நகைத்தான் மெதுவாக, "தற்காப்பு எதற்கு? முன்னே சென்று தாக்குவோம்" என்று கூறினான் நகைப்பின் ஊடே.

"மூவாயிரம் பேரை மட்டுமே கொண்டு பத்தாயிரம் பேருடன் மோதுவீரா?" என்று கேட்டார் அமைச்சர்.

"ஆம். அப்பொழுதுதான் நான் யாரென்பது புரியும்" என்றான் நற்கிள்ளி.

கடல்வேந்தனுடன் நீண்ட நாள் பழகிய நற்கிள்ளி இத்தனை முட்டாளாக இருப்பானென்று அமைச்சர் நினைக்காததால், என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தார். மூவாயிரம் பேரை கிளேஸியஸ் கண்ணிமைக்கும் நேரத்தில் முடித்து விடுவான் என்பது அவருக்குத் தெரிந்திருந்ததால், முசிறியின் கதியை நினைத்துக் கலங்கினார். ஆனால், மன்னர் ஓலையின் காரணமாக அவர் எதுவும் சொல்லவோ, செய்யவோ முடியாமலே தவித்தார். எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தது போல பேசினான் குட்டுவன். "நான் இங்கு படைத் தலைவனாகி விட்டதை அனைவருக்கும் அறிவித்து விடுங்கள். நாளை ஓர் ஓலை தருகிறேன். அதை கிளேஸியஸிடம் அனுப்பி விடுங்கள்" என்று கூறினான்.

"ஓலையை யார் மூலம் அனுப்பட்டும்?" என்று கேட்டார் அமைச்சர்.

"சந்தேகமென்ன? சேர தூதர் தான் ஓலையை எடுத்துச் செல்ல வேண்டும்" என்ற குட்டுவன், எழுது கருவிகளைக் கொண்டு வரச்சொல்லி அங்கேயே ஓர் ஓலையை எழுதி அமைச்சரிடம் கொடுத்தான். "நாளை காலையில் இது போய்ச் சேரட்டும் கிளேஸியஸிடம்" என்று கூறி விட்டு "நற்கிள்ளி! வா. நாம் போவோம் எனக்கு உறக்கம் வருகிறது" என்றான்!

அவனுக்கும், நற்கிள்ளிக்கும் ஓர் அறையை அமைச்சர் காட்டவே, உடனே இருவரும் சென்று அதில் படுத்துக் கொண்டனர். அமைச்சர் சஞ்சயனிடம் ஓலையைக் கொடுத்துவிட்டு, தமது சயன அறைக்குச் சென்றார். எல்லாரும் சென்றதும் சஞ்சயன் மெதுவாகக் குட்டுவன் ஓலையைப் பிரித்துப் படித்தான். படித்ததும் பெரும் திகைப்பு முகத்தில் விரிய, அதிர்ச்சியுற்று அங்கிருந்த ஆசனத்தில் உட்கார்ந்து விட்டான். அந்த ஓலையைத் தான் கொண்டு சென்றால் க்ளேஸியஸ் தன்னை அங்கேயே வெட்டிப் போட்டு விடுவான் என்று உணர்ந்து கொண்டான். அந்த ஓலையில் "கிளேஸியஸ்! உடனடியாகச் சரணடைந்துவிடு. உன் யவனர்களை மரக்கலங்களில் ஏற்றி உன் நாட்டுக்கு அனுப்பிவிடு. இல்லையேல் நீங்கள் நிர்மூலம் செய்யப்படுவீர்கள்—குட்டுவன்" என்று எழுதியிருந்தது.

"இந்த ஓலையைக் கொண்டு சென்றால் கிளேஸியஸ் கொன்றுவிடுவான். தூது போகாவிட்டால் குட்டுவன் சிறையில் தள்ளுவான். இதென்ன தர்ம சங்கடம்" என்று சஞ்சயன் தன் தலைவிதியை நொந்துகொண்டான். எதற்கும் விடிந்தால் பதில் கிடைக்கும் என்றும் எண்ணினான். விடிந்து கிடைத்த பதில் அதிக அதிர்ச்சியை விளைவித்தது. சஞ்சயன், அமைச்சர் இருவருமே திகைத்தார்கள், என்ன செய்வதென்று புரியாமல். மறுநாள் காலை குட்டுவனை மாளிகையில் காணவில்லை. நற்கிள்ளியை விசாரித்தார் அவனுக்கும் ஏதும் தெரியவில்லை. ஆனால் ஒன்று சொன்னான் நற்கிள்ளி. "காலையில் அந்த ஓலையை நிச்சயமும் கிளேஸியஸிடம் ஒப்படைக்கச் சொன்னார் படைத்தலைவர். கிளேஸியஸை வில்லம்பு இலச்சினை இல்லாமல் பார்க்கலாமென்றும் தெரிவித்தார்" என்று கூறினான்.

"வில்லம்பு இலச்சினை இல்லத்திலா!" என்று வினவினார் அமைச்சர் வியப்புடன்.

"ஆம்"

"அது நம்மைச் சேர்ந்ததல்லவா?"

"நேற்றுவரை."

"இன்று?"

"கிளேஸியஸின் கைக்கு மாறி விட்டதாம்" என்றான் நற்கிள்ளி.

"அதாவது...." என்று இழுத்தார் அமைச்சர்.

"...போரின் பூர்வாங்கம்" என்றான் நற்கிள்ளி. அமைச்சருக்குத் தலையில் இடி இறங்கியது போலிருந்தது. மறுநாள் மற்றும் பல இடிகள் இறங்கலாயின. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் குட்டுவன் தனது கைவரிசையைக் காட்டினான். 'குட்டுவன் தலைமை குடிநாசம்' என்று சபித்தார் அமைச்சர்.

□

40. தூதின் பயன்

முசிறி தரைப்படையின் தலைமைப் பதவிக்கு மன்னரால் தலைவனாக நியமிக்கப்பட்ட குட்டுவன், முதல் நாள் இரவில் இட்ட உத்தரவுகளைக் கேட்டு கதிகலங்கி விருந்த அமைச்சர் அழும்பில்வேள், மறுநாள் கிடைத்த செய்திகளால் பேரதிர்ச்சியடைந்தார். முசிறியிலிருந்து ஐயாயிரம் வீரர்களில் இரண்டாயிரம் பேரை மறுநாள் காலையிலேயே வஞ்சிநகர்ப் பாதைப் பாசறைக்கு குட்டுவன் அனுப்பிவிட்டான் என்ற செய்தியைக் கேட்டதும் "கெட்டது குடி" என்று தமக்குள் சொல்லிக்கொண்டார் அமைச்சர். இரண்டாயிரம் வீரர்களை அனுப்பத் தமக்கு முதல்நாள் உத்தரவிட்ட குட்டுவன் மறுநாள் காலையில் அந்த உத்தரவை, தானே நிறைவேற்றிவிட்ட துரிதத்தை நினைத்து, குட்டுவன் தம்மை நம்பவில்லையென்பதைப் புரிந்து கொண்டதாலும், படை பலம் மிகவும் பலவீனப்பட்டு விட்டதாலும் ஏதும் சொல்லவோ, செய்யவோ இயலாமல் தவித்தார் அமைச்சர். குட்டுவனுடைய முட்டாள்தனமான உத்தரவை மறுநாள் மன்னருக்கோ அல்லது வஞ்சிநகர்ப் பாதைப் பாசறையிலிருந்த வில்லவன் கோதைக்கோ தெரிவித்து அதை மாற்றலாமென்று எண்ணியிருந்த அமைச்சரின் திட்டத்தில் குட்டுவன் முதல் கட்டளை மண்ணைப் போட்டுவிடவே, தாம் மீதும் அமைச்சராயிருப்பது உசிதமா? என்றும் நினைத்தார் அமைச்சர்.

அவர் இந்தவித யோசனைகளில் சிக்கித் தடுமாறிக் கொண்டிருக்கையில் சஞ்சயன் வேறு அவரிடம் வந்து தன் வயிற்றெரிச்சலைக் கிளறலானான். "அமைச்சர் பெருமானே!" என்றழைத்த சஞ்சயனை மிகுந்த உக்கிரத்துடன் விழித்துப் பார்த்த அமைச்சர், 'என்ன தூதர் பெருமானே?" என்று பதிலுக்குக் கேட்டார்.

"நான் கிளேஸியைப் பார்க்க வேண்டியதுதானா?" என்று தூதன் வினவினான்.

அத்தனை கோபத்திலும் இளநகை கொண்ட அமைச்சர், "பார்க்காமல் ஓலையை எப்படிக் கொடுப்பீர்?" என்று கேட்டார்.

தூதன் அடுத்த கேள்வியை வீசினான். "கொடுத்த பின்பு நான் உயிருடன் திரும்ப முடியுமா?" என்று.

"அப்படி எந்தக் கட்டாயமும் இல்லை" என்றார் அமைச்சர்.

"செத்தால் சாகட்டுமென்கிறீரா?" என்று எரிச்சலுடன் கேட்டான் சஞ்சயன்.

"அப்படி நான் எதுவும் சொல்லவில்லை" அமைச்சர் பதில் திட்டமாயிருந்தது.

"இந்த உத்தரவுக்கு வேறு என்ன அர்த்தம்?" என்று கேட்டான் சஞ்சயன்.

"உத்தரவிட்டது நானல்ல" என்றார் அமைச்சர்.

"அமைச்சரே!" சஞ்சயன் குரல் கோபத்துடன் ஒலித்தது.

"என்ன தூதரே?"

"கடமையிலிருந்து நழுவப் பார்க்கிறீர்...."

"இல்லை?"

"என்ன இல்லை?"

"எது கடமை என்பதே எனக்குப் புரியவில்லை."

"என்னதான் புரிகிறது உமக்கு?"

"எதுவுமே புரியவில்லை."

இதைக் கேட்டதும் சினத்தின் உச்சிக்குச் சென்ற சஞ்சயன், "எதுவும் புரியாவிட்டால் ஏன் இன்னும் அமைச்சராயிருக்கிறீர்?" என்று வினவினான்.

அமைச்சரும் சளைக்காமல் பதில் சொன்னார். "இந்த அரிய பதவியை விட வழியில்லாததால்" என்று. மேலும் தொடர்ந்த அமைச்சர், "தூதரே! இந்த நிமிஷமே இந்தப் பதவியை நீர் ஏற்றுக் கொள்ளும். நான் வேலையிலிருந்து விலக மன்னருக்கு விண்ணப்பம் எழுதித் தருகிறேன். ஆனால் இப்பொழுது நாம் குட்டுவன் சொல்வதைக் கேட்பதைத் தவிர வேறெதையும் செய்ய முடியாது. இதை நீர் புரிந்து கொள்வது நல்லது. உமக்கு ஏதாவது சந்தேகமிருந்தால் முசிறிப்படை உபதலைவரைக் கேளும்" என்றார்.

"ஆம். ஆம். அதுதான் நல்லது. எந்தச் சந்தேகத்தையும் என்னைக் கேட்கலாம்" என்று கூறிக்கொண்டு அந்த இடத்திற்கு நற்கிள்ளி வந்து சேர்ந்தான்.

அவனை நோக்கி வணங்கும் தோரணையில் தலை தாழ்த்தி சஞ்சயன், "படைத்தலைவர் இப்பொழுது எங்கே?" என்று வினவினான்.

"தெரியாது" என்றான் நற்கிள்ளி.

சஞ்சயன் வியப்பின் எல்லையை எய்தினான். "தெரியாமலா அவர் உத்தரவுகளை எப்படி நிறைவேற்ற முடியும்?" என்று கேட்டான் வியப்பு ஒலித்த குரலில்.

"உத்தரவை நிறைவேற்ற அவர் எதற்கு?" என்று நற்கிள்ளி "இன்னும் ஏன் இங்கே இருக்கிறீர்?" என்றும் வினவினான்.

"வேறெங்கு இருப்பது?" என்று சஞ்சயன் கேட்டான்.

"வில்லம்பு இலச்சினை இல்லத்தில்?" நற்கிள்ளி இதைச் சாதாரணமாகச் சொன்னான்.

"அங்கு என்ன வேலை எனக்கு?" சஞ்சயன் கேள்வியில் பீதி இருந்தது.

"படைத்தலைவர் இன்னும் ஓலையைக் கொடுக்க வில்லையா கிளேஸியஸிடம்?" நற்கிள்ளி கேள்வியில் சிறிது சினத்தைக் காட்டினான்.

"இல்லை."

"ஏன்?"

"இனிமேல் தான் போக வேண்டும்"

"இப்பொழுது விடிந்து ஐந்து நாழிகைக்கு மேல் ஓடிவிட்டன."

"இதோ கிளம்பப் போகிறேன்."

"இது வெறும் பிரதிக்கினை அல்ல, இதோ செய்வேன், செய்து விடுவேன் என்று சொல்லிக் கொண்டிருக்க, சீக்கிரம் கிளம்பும். இல்லையேல்..." வாசகத்தை முடிக்க வில்லை நற்கிள்ளி.

"இல்லையேல்?...." துணிவுடன் கேட்டான் சஞ்சயன்.

"உம்மைச் சிறை செய்து விடுவேன்" என்றான் நற்கிள்ளி.

"அப்படியே செய்யுங்கள். கிளேஸியஸிடம் சென்று உயிர் விடுவதைவிட நமது சிறையில் உயிருடனிருப்பது

சாலச் சிறந்தது" என்ற சஞ்சயனின் சபலத்தைச் சட்டென்று உடைத்த நற்கிள்ளி, "உங்களைச் சிறை செய்து இங்கு வைக்க மாட்டேன். உங்கள் கை கால்களைக் கட்டி எறிந்து பாசறை முன்பு எறிந்து விடுவேன். இது குட்டுவன் கத்தரவு" என்று விளக்கினான்.

அப்பொழுது பிரச்னையெல்லாம் எங்கு சாவது என்பது தான் என்பதைப் புரிந்து கொண்ட சஞ்சயன் "அப்படி யானால் நான் கிளேஸியஸின் கையாலேயே சாகிறேன். அவனாவது புத்திசாலி" என்று கூறிவிட்டு அமைச்சர் மாளிகையை விட்டுக் கிளம்பினான். தூதன் கிளம்பிய சமயத்தில் அவன் வயிற்றெரிச்சலை மேலும் கொட்டிக் கொள்ள "நீரும் புத்திசாலி. உமக்கு சமுத்திரம் முழங்கால்" என்று கூறினான் நற்கிள்ளி.

படிகளில் இறங்க முற்பட்ட சஞ்சயன் "சமுத்திரம் முழங்காலா" என்று வியப்புடன் வினவினான்.

"சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால் என்பது தமிழ்ப் பழமொழி. இது உமக்குத் தெரியவில்லை யென்றால் நீர் தமிழனல்ல" என்று சிந்தனை செய்ததோடு நகைக்கவும் செய்தான் நற்கிள்ளி.

இத்தகைய விருதுகளைப் பெற்றுக் கொண்டும், இகழுரைகளையும் கேட்டுக் கொண்டும் இடித்த புளி யாகக் நின்றிருந்த அமைச்சரை நோக்கி, சீற்றம் மிகுந்த பார்வையை வீசிவிட்டுப் படிகளில் இறங்கிச் சென்றான் சஞ்சயன். அமைச்சர் மாளிகையிலிருந்து கீழிறங்கியதி லிருந்து முசிறி அடியோடு மாறியிருந்தாலும் அது வெளிக்குத் தெரியாததைக் கவனித்து "முசிறிக்குப் புறை யேறியிருக்கிறது. வெளிக்குத்தான் தெரியவில்லை" என்று எண்ணினான். அவன் மாளிகையிலிருந்து இறங்கிய பிறகு மக்கள் இயல்பாக வாழ்க்கை நடத்துவதைக் கண்டான். சிலர் வண்டிகளைக் கட்டிக்கொண்டு

மூட்டை முடிச்சுகளுடன் வெளியூர்களுக்குச் செல்வதை யும் பார்த்தான். எங்கும் அமைதியே குடிகொண் டிருந்தது. எங்கும் துரிதமோ, போர் எப்பொழுது தொடங்கக்கூடும் என்ற பீதியோ இல்லை. சுள்ளியாற்றுக்கு அக்கரையில் யவனர் நடமாட்டம் இருந்தும் அளவு மீறிய பாதுகாப்போ, ஆயுத வண்டிகளோ தென்படவில்லை. சுள்ளியாற்றுப் படகுகளும் சாதாரணமாகவே போய் வந்து கொண்டிருந்தன.

இந்த நிலையால் சிறிது துணிவடைந்த சஞ்சயன் ஒரு படகிலேறி அக்கரைக்குச் சென்றான். அங்கிருந்து மெது வாக நடந்து வில்லம்பு இலச்சினை இல்லத்தை அடைந் தான். அங்கு மட்டும் வாசலில் சிறிது பாதுகாப்பு இருந்தது. யவன வீரர் நால்வர் அதைக் காத்து நின்றனர். சஞ்சயன் அந்த இல்லத்து வாயிலை அடைந்ததும் யவனக் காவலர்கள் அவனை நிறுத்தி "யாரைப் பார்க்க வேண்டும்?" என்று வினவினார்கள்.

"யவனர் தலைவரை" என்றான் சஞ்சயன்.

"யாரது யவனர் தலைவர்?" என்று ஒரு காவலன் கேட்டான்.

"கிளேஸியஸ்" என்ற சஞ்சயனைக் காவலரில் ஒருவன் உற்று நோக்கினான். "அவர் தலைவராக்கப்பட்டது உனக் கெப்படி தெரியும்?" என்று வினவினான்.

"கேள்விப்பட்டேன்" என்றான் சஞ்சயன்.

இதைக் கேட்ட காவலன் பெரிதாக நகைத்தான். பிறகு விசாரித்தான் சிரிப்பை அடக்கிக்கொண்டு, "எங்கு கேள்விப்பட்டாய்?" என்று.

"சொல்ல அவசியமில்லை" என்றான் சஞ்சயன்.

"உன்னை உள்ளேவிடவும் அவசியமில்லை" என்றான் காவலன்.

"நான் கிளேஸியஸை அவசரமாகப் பார்க்க வேண்டும்" என்று வலியுறுத்தினான் சஞ்சயன்.

காவலன் சிறிது சிந்தித்துவிட்டு "இவனை உள்ளே அனுப்பலாமா?" என்று இன்னொரு காவலனைக் கேட் டான்.

"அதைத் தலைவரையே கேட்டுவிடு" என்றான் இன்னொரு வீரன்.

முதலில் சஞ்சயனுடன் உரையாடியவன், "சரி. தலைவர் அனுமதி கேட்டு வருகிறேன். உன் பெயர் என்ன சொல்?" என்று வினவினான்.

"சஞ்சயன்" என்று தூதன் பெயரைச் சொன்னதும் "அடடா! இதை ஏன் முன்னமே சொல்லவில்லை?" என்று கேட்ட வீரன் உள்ளே ஓடினான். சிறிது நேரத்திற்கெல் லாம் திரும்பி வந்து "சேரதூதரே! வாருங்கள். தலைவர் காத்திருக்கிறார்" என்று சஞ்சயனை மரியாதையுடன் உள்ளே அழைத்துச் சென்றான்.

வில்லம்பு இலச்சினை இல்லத்தில், கடல்வேந்தன் தங்கி வைத்துக்கொண்டிருந்த இரண்டாவது அறையில் கிளேஸியஸ் சஞ்சயனை வரவேற்றான். அந்தச் சமயத்தில் அங்கு வேறு இரு யவனரும் இருந்தனர். அவர்கள் அணிந்திருந்த படாடோபமான ஆடையிலிருந்தும் பெரிய தோள்களிலிருந்தும் அவர்களும் முக்கியஸ்தர்களென்பதை சஞ்சயன் புரிந்து கொண்டான். தவிர கிளேஸியஸும் அன்று வாளையும் பட்டினால் செய்யப்பட்ட சிவப்பு நிறச் சட்டையையும் அணிந்திருந்தான். சற்று எட்ட ஒரு ஆசனத்தில் வைக்கப்பட்டிருந்த ஒரு தலையணை மகுடம் போலிருந்ததால் அதற்கும் கிளேஸி யஸுக்கும் ஏதோ சம்பந்தமிருக்க வேண்டுமென்று சஞ்சயன் நிர்மானித்தான்.

அவன் கண்கள் சென்ற இடங்களைக் கவனித்த கிளேஸியஸ் புன்முறுவல் கொண்டு "அது கிரேக்க நாட்டுப் படைத்தலைவர்கள் தரிக்கும் மகுடம். முசிறியின் யவனர்கள் என்னைத் தலைவனாக்கிய பிறகு அதை எனக்குக் கொடுத்தார்கள்" என்று கூறினான். பிறகு கேட்டான் "தூதரே! உமது தூது ஓலை எங்கே? கொடும்" என்று.

"அப்படி திட்டமான அலுவலாக நான் வரவில்லை" என்று பொய் சொன்னான் சஞ்சயன்.

கிளேஸியஸின் முகத்தில் புன்முறுவல் அதிகமாகப் படர்ந்தது. "தூதராக வராவிட்டால் ஒற்றனாக வந்திருக்க வேண்டும். அப்படி ஒற்றனாக வந்திருந்தால் உம்மை உடனடியாகத் தூக்கிலிடுவதைத் தவிர வேறு வழியில்லை" என்றான் புன்முறுவலின் ஊடே.

இதைக் கேட்டதும், திகிலின் வசப்பட்ட சஞ்சயன், "இல்லை தூது இருக்கிறது" என்று தன்னை சமாளித்துக் கொண்டு கச்சையிலிருந்த ஓலையை எடுத்துக் கொடுத்தான்.

அதைப் படித்தவுடன் கிளேஸியஸ் பெரிதும் வெகுண்டான். அவன் புன்சிரிப்பு முகத்தில் உறைந்தது. ஒரே எட்டில் சஞ்சயனை அணுகி, "உண்மையைச் சொல்லும். இப்பொழுது கடல்வேந்தன் எங்கே?" என்று கேட்டு சஞ்சயன் தோள்களைப் பிடித்து உலுக்கினான்.

"தெரியாது" என்றான் சஞ்சயன் ஏதும் புரியாமல்.

"தெரியாவிட்டால் தூக்கிலாடு" என்று கூவிய கிளேஸியஸ் "டேய் யாரங்கே? இந்தத் தூதனைச் சிறையில் தள்ளு" என்று உத்தரவும் இட்டான்.

அடுத்து சஞ்சயன் மீது பாய்ந்த இரு யவன வீரர், தூதனை முரட்டுத்தனமாகப் பிடித்து இழுத்துச் செல்லலாயினர். சஞ்சயன், "பொறு கிளேஸியஸ் பொறு" என்று கூவினான்.

□

41. பறந்த வாள்

குட்டுவன் கொடுத்த ஓலையைப் படித்ததும் பெரிதும் வெகுண்டு தன்னை நாடி வந்து தனது தோள்களைப் பிடித்துக் குலுக்கி "இப்பொழுது கடல்வேந்தன் எங்கே?" என்று கொந்தளித்த குரலில் விசாரித்த கிளேஸியஸைப் பார்த்த சஞ்சயன், ஓலையில் தனக்குப் புரியாத செய்தி ஏதோ இருக்கிறதென்பதைப் புரிந்து கொண்டான். ஆகவே உண்மையையே சொன்னான், "எனக்குத் தெரியாது" என்று. அந்தப் பதில் கிளேஸியஸுக்குத் திருப்தியளிக்காததால், "அப்படியானால் தூக்கிலாடு" என்று சீறியதையும், அவன் கட்டளையை நிறைவேற்ற இரு யவனர்கள் தன்னை இழுத்துச் சென்றதையும் கவனித்த சஞ்சயன், "கிளேஸியஸ் பொறு பொறு" என்று பெரிதாகக் கூவினான்.

அதன் விளைவாக சஞ்சயனைத் திரும்ப அழைத்து வர யவனர்களுக்கு உத்தரவிட்ட கிளேஸியஸ், சஞ்சயன் தனக்கு எதிரே நிறுத்தப்பட்டதும் "சரி, இப்பொழுது உண்மையைச் சொல்" என்றான்.

சஞ்சயன் மெல்லத் தன்னைச் சமாளித்துக்கொண்டு, "கிளேஸியஸ்! பெரும் பதவியை அடைந்திருக்கிறாய். தலைமைப் பதவியிலிருப்பவர்களுக்கு நிதானம் வேண்டும். கேள், உண்மையைச் சொல்கிறேன். இந்த ஓலையை எழுதியது கடல்வேந்தனல்ல" என்று தன்னைத் திடப்படுத்திக் கொண்டு சற்று உறுதியுடன் பேசினான்.

கிளேஸியஸின் முகத்தில் இகழ்ச்சிச் சாயை மலர்ந்தது. "சஞ்சயா! யாரிடம் ஏமாற்றப் பார்க்கிறாய்? இத்தனை நாள் கடல்வேந்தனுடன் பழகிய எனக்கு, அவர் கையெழுத்துத் தெரியாதென்று நினைக்கிறாயா?" என்று வினவினான்.

சஞ்சயன் முகத்தில் சிறிது சஞ்சலம் நிலவியது. "ஓலையிலிருப்பது கடல்வேந்தன் கையெழுத்தைப் போலிருக்கலாம். ஆனால் ஓலை எழுதியது அவரில்லை" என்று சொன்னான் சஞ்சயன், சஞ்சலத்தை உதறிக்கொண்டு திடமான குரலில்.

கிளேஸியஸ் சஞ்சயனைச் சந்தேகப் பார்வையாகப் பார்த்தான். "வேறு யார் எழுதியது?" என்று விசாரித்தான் சந்தேகத்துடன்.

"குட்டுவன்" என்று தயக்கமின்றிப் பதில் சொன்னான் சஞ்சயன்.

நம்பிக்கையற்ற பார்வை கிளேஸியஸின் கண்களில் விரிந்தது. "யார்? அந்தப் புலவர் பிள்ளையா?" என்று கேட்டான், குரலிலும் சந்தேகம் ஒலிக்க.

"ஆம்" சஞ்சயன் சளைக்காமல் பதில் சொன்னான்.

"அவன் எதற்காக எனக்கு இந்த ஓலை அனுப்புகிறான்?" கிளேஸியஸின் கேள்வியில் வியப்பு இருந்தது.

"அவர்தான் இப்பொழுது முசிறி தரைப்படையின் தலைவர்." சஞ்சயன் குரலில் மரியாதை நிரம்பி வழிந்தது.

"என்னது!" கிளேஸியஸின் குரலில் நம்பிக்கை என்ற அம்சம் லவலேசமும் இல்லை.

"ஆம். அவர்தான் தலைவர்."

"அந்தக் கோழையா?"

"இப்பொழுது கோழையல்ல"

"திடீரென்று துணிவு எப்படி வரும்?"

"அசட்டுத் துணிச்சல் யாருக்கும் வரலாம்"

"ஆம் ஆம். வரலாம் வரலாம்" என்று சொன்ன கிளேஸியஸ், "இவனை யார் தலைவராக நியமித்தது? அமைச்சரா?" என்று கேட்டான்.

"இல்லை, அரசரே நியமித்திருக்கிறார்" என்று சொன்னான்.

சேர மன்னனை நன்றாக அறிந்திருந்த கிளேஸியஸ், "ஒருகாலும் மன்னர் இந்தப் பைத்தியத்தை நியமித்திருக்க மாட்டார்" என்றான்.

"ஓலையை நானே பார்த்தேன்" சஞ்சயன் திட்டமாகச் சொன்னான்.

"கையெழுத்து மன்னருடையதுதானா?"

"கிளேஸியஸ்! உங்களுக்கு வர வர கையெழுத்து சந்தேகம் வருகிறது. காரணம் எனக்குப் புரியவில்லை. ஆனால், கையெழுத்து மன்னருடையதுதான்" என்றான் சஞ்சயன்.

கிளேஸியஸ் அதிகமாகக் குழம்பினான். மன்னர் இப்படியொரு காரியத்தைச் செய்திருப்பாரென்று அவனால் நம்ப முடியவில்லை. இதில் ஏதோ பெரும் புரட்டு இருக்கிறதென்பதைப் புரிந்து கொண்டான் கிளேஸியஸ். ஆகவே அதைப் பற்றி அறிய மறுபடியும் பேச்சுக் கொடுக்கத் தொடங்கி, "குட்டுவன் எப்பொழுது பதவி ஏற்றான்?" என்று வினவினான்.

"நேற்று. உடனடியாக உத்தரவுகளைப் பிறப்பிக்கவும் செய்தார் குட்டுவர்" என்று பதில் சொன்னான் சஞ்சயன்.

"என்ன உத்தரவுகளோ?"

"முதலில் உமக்கு ஓலை கொடுத்தார். அடுத்து தரைப் படையில் ஒரு பகுதியை வஞ்சிநகர்ப் பாதைப் பாசறைக்கு அனுப்பிவிட்டார்."

இதைக் கேட்ட கிளேஸியஸின் கண்களில் விவரிக்க இயலாத ஒரு விபரீத ஒளி பிறந்தது. "என்ன! என்ன! இன்னொருமுறை சொல்லும்" என்று அவசரமாகக் கேட்டான்.

"முசிறி தரைப் படையின் ஒரு பகுதி வஞ்சிநகர்ப் பாதைப் பாசறைக்கு அனுப்பப்பட்டுவிட்டது" என்று சஞ்சயன் மீண்டும் சொன்னான்.

"ஏன்?" என்று கேட்டான் கிளேஸியஸ்.

"காரணம் தெரியாது. நடந்தது அதுதான். ஆனால், குட்டுவர் யவனர்களைச் சமாளிக்க மூவாயிரம் பேருக்கு மேல் தேவையில்லை என்று அபிப்பிராயப்படுகிறார்" என்று விளக்கினான் சஞ்சயன்.

கிளேஸியஸின் முகத்தில் கவலை படர்ந்தது. "ஆமாம், யவனர் இப்பொழுது என்ன செய்து விட்டார்கள், அவர்களைச் சமாளிக்க?" என்று வினவினான் கவலை குரலிலும் தெரிய.

சஞ்சயன் கிளேஸியஸின் தந்திரத்தை உணர்ந்தேயிருந்ததால் அவனிடமிருந்தே விஷயத்தை வரவழைக்க "யவனர் புரட்சி செய்யப்போவதாகக் கேள்வி" என்றான்.

கிளேஸியஸின் முகத்தில் அதிர்ச்சி தெரிந்தது "யார் சொன்னது?" என்று கேட்டான் அதிர்ச்சி குரலில் தெரிய.

"குட்டுவ மகாப் பிரபு" என்றான் சஞ்சயன் வேண்டுமென்றே.

"அவர் மகாப் பிரபுவாகி விட்டாரா?"

"ஆம்!"

"சரி புரட்சிக்கு யார் தலைவனாம்?"

"நீங்கள் தான் என்று சொல்லி இந்த ஓலையை என்னிடம் கொடுத்தார்."

கிளேஸியஸ் தனது ஆசனத்திலிருந்து எழுந்து 'உம், உம்' என்று உறுமினான் "சஞ்சயரே! இது சுத்தப்பொய்" என்று கூறினான்.

"பொய்யாயிருந்தால் நல்லதுதான்" என்றான் சஞ்சயன்.

"எனக்கு வாழ்வு கொடுத்தவரே சேர மன்னர் செங்குட்டுவர்தான். அவருக்கு எதிராக நான் புரட்சி செய்வேனா?" என்று கேட்டான் கிளேஸியஸ்.

"மாட்டீர், யவனர் தலைவரே!" என்றான் சஞ்சயன்.

"இன்னொரு முறை என்னைத் தலைவரே என்று கூப்பிட்டால் உமது பல்லை உடைத்து விடுவேன்" என்று சீறினான் கிளேஸியன்.

"பல் போனால் பாதகமில்லை. முன் தடவை போல் என்னைப் படுக்க வைத்துக் கூரையில் எனக்கு நேரே கயிறைக் கட்டாதிருந்தால் சரிதான்" என்றான் சஞ்சயன்.

"ஓ அதுவா!" என்று கேட்டு கிளேஸியஸ் நகைத்தான்.

"அதேதான்"

"அது இன்னும் நினைவிருக்கிறதா?"

"எப்படி மறக்க முடியும்? அப்பொழுது உமக்குக் [illegible] பார்வை கூடச் சரியில்லை?"

"எனக்குப் பார்வை சரியில்லையா?"

"ஆமாம். என்னை யாரென்று தெரியாதென்று சொன்னீர்."

கிளேஸியஸ் நகைத்து, "அது ஒரு நாடகம். ஆனால் நீர்தான் தப்பிவிட்டீரே" என்றான்.

"ஆம்." என்றான் சஞ்சயன்.

"இப்பொழுது தப்ப அவசியமில்லை."

"ஏன்?"

"உம்மை நான் சிறை செய்யப் போவதில்லை,"

"ஏன்? ஒரு வழியாக..."

"....கொல்லவும் போவதில்லை."

"வேறு என்ன செய்ய உத்தேசம்?"

"உம்மை எனது தூதனாக்கிக் கொள்கிறேன். நான் ஒரு பதில் ஓலை தருகிறேன். அதைக் குட்டுவனிடம் கொடுத்து விடும்" என்றான் கிளேஸியஸ்.

"ஆகா அப்படியே" என்றான் சஞ்சயன் தனக்கும் ஏதோ அதிர்ஷ்டம் அடிக்கிறதென்பதை உணர்ந்து கொண்டான்.

அந்த இடத்திலிருந்தபடியே கிளேஸியஸ் ஓலையை எழுதி "இதைக் குட்டுவனிடம் கொடும்" என்றான்.

பதில் சொல்லாமல் ஓலையை வாங்கிக் கொண்ட சஞ்சயன் ஆற்றங்கரை வரையில் கொண்டு விடும்படி இரு யவனர்களுக்கு உத்தரவிட அவர்களைப் பின்பற்றிச் சென்றான் சஞ்சயன். ஆற்றங்கரையை அடைந்ததும் அங்கொரு படகிலேறி மறுகரை அடைந்து அமைச்சர்

மாளிகைக்கு வந்த சஞ்சயனுக்கு அங்கு மீண்டும் அதிர்ச்சி காத்திருந்தது. அங்கிருந்த பெரிய அறையில் குட்டுவன் கோலாகலமாக அமர்ந்திருந்தான். நற்கிள்ளி அவனுக்குப் பக்கத்தில் நின்ற வண்ணம் அடிக்கடி குனிந்து குனிந்து அவன் சொல்வதைக் கேட்டுத் தலை ஆட்டிக் கொண்டிருந்தான். சஞ்சயன் சிறிது நேரம் எட்ட நின்று குட்டுவன் தன்னைப் பார்த்ததும் தலைவணங்கி "முசிறிப் படைத்தலைவர் வாழ்க" என்று விருது கூறினான்.

குட்டுவன் சஞ்சயனிடம் நேரிடையாகப் பேசவில்லை. நற்கிள்ளியை நோக்கி "உபதலைவரே? தூதர் என்ன சொல்கிறார் கேளும்" என்றான்.

நற்கிள்ளி "தூதரே! எங்கு வந்தீர்? என்ன செய்தி?" என்று கேட்டான்.

சஞ்சயன் ஒரு விநாடிதான் தாமதித்தான் பதில் சொல்ல. அதற்குள் குட்டுவன் சொன்னான். "நற்கிள்ளி! கிளேஸியஸ் நமக்கு அனுப்பியிருக்கும் ஓலையை வாங்கும்" என்று.

நற்கிள்ளி பதுமையைப் போல் கையை நீட்டினான். ஓலையை உடனடியாகக் கொடுக்கவில்லை சஞ்சயன். "ஓலை...." என்று இழுத்தான்.

"நமக்குத் தெரியும் உபதலைவரே! வாங்கும் ஓலையை" என்று கடுமையாக உத்தரவிட்டான் குட்டுவன்.

அதற்குப் பின்பும் தாமதிப்பதற்குக் காரணமில்லை யென்று உணர்ந்த சஞ்சயன் கச்சையிலிருந்து ஓலையை எடுத்து நீட்டினான். அதை வாங்கிய நற்கிள்ளி அதைப் பிரித்துப் படித்தான். அவன் முகத்தில் கோபம் எல்லை கடந்து பிறந்தது. "அயோக்கியன்! பரம அயோக்கியன்" என்று கூறினான் நற்கிள்ளி.

"என்ன எழுதியிருக்கிறான் தம்பி கிளேஸியஸ்?" என்று குட்டுவன் கேட்டான்.

"உங்களை அவன் புரிந்து கொண்டு விட்டானாம்..." என்றான் நற்கிள்ளி.

"நல்லது."

"நீங்கள் யாரென்பது அவனுக்குத் தெரியுமாம்"

"நல்லது நல்லது"

"உங்களுக்குத் துணிவிருந்தால் தனியாகப் போருக்கு அழைக்கிறான்"

"சாலச் சிறந்தது! சாலச் சிறந்தது"

"அடுத்து..." நற்கிள்ளி சிறிது தயங்கினான்.

"அடுத்து என்ன எழுதியிருக்கிறான்?" என்று குட்டுவன் வினவினான்.

"நீங்கள் போலியாம்."

"அப்படியா எழுதியிருக்கிறான்?"

"இந்த ஓலையில் அப்படித்தான் எழுதியிருக்கிறான்?"

"உண்மையாகவா?"

"ஆம். தலைவரே!"

"இப்படி நம்மை அவமானப்படுத்தும் ஓலையைக் கொண்டு வந்த சஞ்சயனை என்ன செய்யலாம்?"

"எதை வேண்டுமானாலும் செய்யலாம்?"

அந்த இருவர் உரையாடலைக் கேட்ட சஞ்சயன் "இதென்ன அநியாயம்? அவன் கொடுத்த ஓலையைக் கொண்டு வந்தேன். அவனிஷ்டப்படி கொடுத்தேன்" என்றான்.

குட்டுவன் சஞ்சயனை நோக்கினான். "அவன் விஷம் கொடுத்தாலும் கொண்டுவந்து எனக்குக் கொடுப்பீரா?" என்று வினவவும் செய்தான்.

"உவமை சரியில்லை. ஓலை எப்படி விஷமாகும்?" என்று வினவினான் சஞ்சயன்.

"இந்த ஓலை விஷம். என்னை அவமானப்படுத்தும் விஷம். இதை எழுதியவன், கொண்டு வந்தவன், இருவருக்குமே தண்டனை உண்டு. இன்று அவனைத் தனிப் போரில் சந்தித்துக் கொன்று விடுகிறேன். உம்மை அதிக மாகத் தண்டிப்பதற்கில்லை. சிறையில் மட்டும் தள்ளு கிறேன். நற்கிள்ளி! தூதரைச் சிறையில் தள்ளு!" என்று உத்தரவிட்டான் குட்டுவன்.

சஞ்சயனை நற்கிள்ளி கையைப் பிடித்து இழுத்தான். சஞ்சயன் அமைச்சரை நோக்கி, "இந்த அநியாயத்திற்குப் பரிகாரமில்லையா?" என்று கூவினான்.

அப்பொழுது குட்டுவன் எழுந்தான். "நற்கிள்ளி! இவனைச் சிறையில் தள்ளவேண்டாம். கிளேஸியஸுக்கு பதில் இவனை தனிப்போரில் சந்தித்துக் கொன்றுவிடு கிறேன்" என்று கூறித் தனது வாளை எடுத்துக் கொண்டான்.

சஞ்சயன் முகம் மலர்ந்தது. "இந்த கோழைக்குத் தகுந்த படிப்பினை கற்பிக்கிறேன்" என்று உள்ளூரக் கருவிக் கொண்டு தானும் ஒரு வாளை எடுத்துக் கொண்டான்.

குட்டுவன் வாளைப்பிடித்த முறையிலிருந்தே அவனுக் கும் வாட்போருக்கும் சம்பந்தமில்லை என்பதைப் புரிந்து கொண்ட சஞ்சயன், "வாளை அப்படிப் பிடிக்கக்கூடாது" என்றான்.

"வேறு எப்படிப் பிடிக்க வேண்டும்?" என்று குட்டுவன் வினவினான். "இப்படி" என்று தனது வாளைப்பிடித்து காட்டினான். அடுத்த விநாடி மந்திரத்தால் ஏவப்பட்டது போல் சஞ்சயன் வாள் ஆகாயத்தில் பறந்தது.

□

42. உள்ளே இருந்த நிலை

சஞ்சயன் வாள் அவன் கையை விட்டுப் பறந்து சற்று எட்ட விழுந்து அழும்பில்வேளின் மாடி முழுதும் பேரொலி கிளப்பியதன் விளைவாக சஞ்சயன் மட்டுமின்றி அழும்பில்வேளும் பேரதிர்ச்சிக்கு உள்ளானார். வாளைச் சரியாகப் பிடிக்காமல் வக்கிரமாகக் கையில் பிடித்த குட்டுவன், சஞ்சயன் வாளை நிமிட நேரத்தில் தட்டிப் பறக்க விட்டதைக்கண்ட அழும்பில்வேள் சில விநாடிகள் அதிர்ச்சி வசப்பட்டு நின்று விட்டாலும் பிறகு சுரணை வரப்பெற்று "விசித்திரம் விசித்திரம்" என்ற சொற்களை உதிர்த்தார்.

அதைக் கேட்ட குட்டுவன் நற்கிள்ளியை நோக்கி "நற்கிள்ளி! இதிலென்ன விசித்திரம் இருக்கிறது? அமைச்சர் எனக்குப் போரிடத் தெரியாதென்று நினைக்கிறாரா?" என்று வினவினான்.

"அப்படித்தானிருக்க வேண்டும்" என்றான் நற்கிள்ளி.

அதன் விளைவாகக் குட்டுவன் அமைச்சர் மீது குரூரம் நிறைந்த பார்வையைப் படரவிட்டதும், "இல்லை இல்லை. நான் அப்படி நினைக்கவில்லை" என்று அவசரம் அவசரமாக நற்கிள்ளியின் பேச்சுக்கு மறுப்பு விடுத்தார் அமைச்சர்.

"அப்படி நினைக்கவில்லையாம்" என்று நற்கிள்ளி தெரிவித்தான் குட்டுவனை நோக்கி.

"அப்படியானால் விசித்திரம் என்று ஏன் கூவினார்? விசாரி" என்றான் குட்டுவன்.

"ஏன் விசித்திரம் என்று கூவினீர் என்று தலைவர் விசாரிக்கிறார்" என்று நற்கிள்ளி அமைச்சரை நோக்கி வினவினான்.

"இந்த மாதிரி ஒரு போர்முறையை நான் கண்ட நினைவு. அதனால் சொன்னேன்" என்றார் அமைச்சர்.

"இந்தப் புதிய போர் முறையை அமைச்சர் பார்த்த நினைவையாம்" என்று குட்டுவனுக்குத் தெரியப்படுத்தினான் நற்கிள்ளி.

இப்படி குட்டுவன் தன்னிடம் நேரிடையாகப் பேசாமல் நற்கிள்ளி மூலம் பேசுவதைக் கண்ட அமைச்சர் "தரைப்படைத் தலைவரே! என்னிடம் நேரில் தாங்களே பேசினால் என்ன?" என்று வினவினார்.

அதற்கு நேரிடையாகவே பதில் சொன்ன குட்டுவன் "சரி வாளை எடுத்துக்கொள்ளும்" என்றான்.

"நானா! நானா வாளை எடுத்துக் கொள்ள வேண்டும்?" என்று வியப்புடன் வினவினார் அமைச்சர்.

"ஆமாம். நீர்தான்" குட்டுவன் குரல் ஆணை போல் ஒலித்தது.

"எதற்கு?"

"உமக்குப் புதுமுறை வாட் பயிற்சியளிக்கிறேன்"

"இப்பொழுது எதற்கு எனக்கு வாட் பயிற்சி?"

"இங்கு போர் ஏற்படப் போவதால் அதில் நீர் ஒழுங்காகப் போரிட."

அதைக்கேட்ட அமைச்சர் பெரிதும் மலைத்தார். "இன்னியில் நான் புதுமுறையில் வாள் சுழற்றக் கற்றுக்

கொண்டு எந்த நிமிடத்திலும் எந்த நாழிகையிலும் தொடங்கவிருக்கும் போரில் கலந்து கொள்ள முடியுமா?'' என்று வினவினார்.

'முடியும். ஆசான் நானிருக்கிறேன்'' என்ற குட்டுவன் தனது வாளை மறுபடியும் வக்கிரமாகத் திருப்பிப் பிடித்தான்.

அமைச்சரும் வேறு வழியின்றி தமது வாளை எடுத்துக் கொண்டார். அடுத்த விநாடி அவர் வாள் குட்டுவன் வாளுடன் மோதியதே தவிர கையிலிருந்து பறக்கவுமில்லை. மீளவுமில்லை. அவன் வாளுடன் இணைந்து 'சர்சர்' என்று ஒலியையே கிளப்பியது. அமைச்சர் என்ன முயன்றும் தமது வாளைக் குட்டுவன் வாளிடமிருந்து பிரிக்க முடியவில்லை. திரும்பத்திரும்ப வக்கிரமாகப் பிடிக்கப் பட்ட குட்டுவன் வாள், அமைச்சரின் வாளைத் தன்னிடமிருந்து, பிரியவிடாமல் தடுத்து உராய்ந்து கொண்டிருந்தது அதிலிருந்து விடுபட அமைச்சர் பின்னடைந்தும், தாவியும், குதித்தும் முயற்சி செய்தார். அதைக்கண்டு நகைத்தான் குட்டுவன். ''அமைச்சரே! நீர் நாட்டியம் கற்றிருந்தால் பெரிய கலைஞராகப் பெயர் எடுத்திருப்பீர். உமது தலையெழுத்து உம்மால் நிர்வகிக்க முடியாத அமைச்சர் வேலைக்கு வந்துவிட்டீர்'' என்று நகைப்பின் ஊடே கூறிய குட்டுவன், தனது வாட்பிடியை அவரது வாளின் பிடிக்கு அருகில் கொண்டு இணைத்து தனது இடக் கையால் அவர் வலது மணிக்கட்டைப் பிடித்து உதற, அமைச்சரின் வாள் கீழே 'இளாங்' என்ற சத்தத்துடன் விழுந்தது. அதைக் காலால் உதைத்து தூரத்தள்ளிய குட்டுவன், ''அமைச்சரே! எனது வாள் திறமையில் உமக்கு இப்பொழுதாவது நம்பிக்கை வருகிறதா?'' என்று வினவினான்.

அமைச்சர் ஏதுசொல்வதென்று தெரியாமல் விழித்தார். ''குட்டுவரே! இத்தனை நாள் இந்தப் போர்த்

திறமையை ஏன் மறைத்து வைத்தீர்கள்?'' என்று வியப்பும், அதிர்ச்சியும் கலந்த குரலில் வினவவும் செய்தார்.

குட்டுவன் தனது வாளை உறையில் போட்டுக் கொண்டு, ''எனக்குக் கவிதையில்தான் நம்பிக்கை, போரில் அல்ல. மன்னர் வற்புறுத்தலாலும், வேந்தன் கவியாகச் சிக்கிக் கொள்ளப் போகிறானே என்ற கருணையாலும் வாளை ஏந்தியிருக்கிறேன். இந்தப் போர் முடிந்ததும் வாளைப் பழையபடி பூசையில் வைத்து விடுவேன்'' என்று விளக்கினான்.

அமைச்சருக்கும் சஞ்சயனுக்கும் என்ன பேசுவதென்றே தெரியவில்லை. ''கடல்வேந்தனைக் காக்க இன்னொருவன் தேவையா?'' என்று அமைச்சர் உள்ளூரக் கேட்டுக் கொண்டாலும் அதை வெளியில் சொல்ல அஞ்சினார்.

அப்பொழுதுதான் மற்றோர் இடி அவர் தலையில் இறங்கியது. ''அமைச்சரே! இப்பொழுது எனது வாட்போர் முறையில் உமக்கு நம்பிக்கை வந்துவிட்டதால் கிரேக்கிளேஸியஸிடம் தூது செல்லும்'' என்ற குட்டுவன் சொற்கள் நெருப்புத் துண்டமென அழும்பில்வேளின் காதில் விழுந்தன.

''நானா? தூது போவதா?'' என்று வினவினார் அமைச்சர்.

''ஆம். தாங்கள்தான்'' என்ற குட்டுவன் ''கிளேஸியஸை இன்று இரவு மூண்டதும் சுள்ளியாற்று வடகரைக்கு வரச்சொல்லும்'' என்றான். அவன் குரலில் ஆணை ஒலித்தது.

''நான் அமைச்சன். தூதனல்ல'' என்று சுட்டிக்காட்டி னார் அழும்பில்வேள்.

''இப்பொழுது தூதராகி விட்டீர்'' என்றான் குட்டுவன்.

"அதற்கு மன்னர் உத்தரவு வேண்டும். என் பதவியை யாரும் மாற்றமுடியாது" இதைக் கம்பீரமாக நிமிர்ந்து நின்று சொன்னார் அமைச்சர்.

குட்டுவன் நற்கிள்ளியை நோக்கித் திரும்பி "நற்கிள்ளி! மன்னரின் இரண்டாவது ஓலையை அமைச்சரிடம் கொடு" என்று உத்தரவிட மடியிலிருந்த ஓர் ஓலையை எடுத்து அமைச்சரிடம் நற்கிள்ளி நீட்டினான்.

அந்த ஓலையின் முத்திரையை உடைத்து ஓலையைப் படித்த அமைச்சர் தமது கண்களையே நம்பாமல் சிலை யென நின்றார். "முசிறிக்கு ஆபத்தான நிலை ஏற்பட்டிருப் பதாலும், சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி நம்மால் உத்தரவு களைப் பிறப்பிக்க முடியாதாகையாலும் நமக்குப் பதில் தரைப்படைத் தலைவர் குட்டுவரே உத்தரவுகளைப் பிறப் பிப்பார். அவர் உத்தரவை மீறுவது நமது உத்தரவை மீறு வதாகும்" என்று ஓலையில் கண்டிருந்தது. அடியில் மன்னர் கையொப்பமிட்டிருந்தார்.

அதைப் படித்த அமைச்சரை நோக்கி, "அமைச்சரே! இப்பொழுது என்ன சொல்கிறீர்?" என்று குட்டுவன் எச்சரித்தான்.

"தங்கள் சித்தம்" என்றார் அமைச்சர்.

"இந்த நிமிடம் முதல் நீங்கள் தூதர்" என்றான் குட்டுவன்.

"அப்படியானால் அமைச்சர் உத்தியோகம்?"

"இந்தப் போர் முடியும் வரையில் அந்த உத்தி யோகத்துக்கு அவசியமில்லை, பிறகு பார்த்துக் கொள் வோம்" என்ற குட்டுவன், "நற்கிள்ளி! அமைச்சருடன் நீயும் போய் வா. இரவின் ஆரம்பத்தில் கிளேஸியஸை ஆற்றங்கரைக்கு அழைத்துவா" என்றான் குட்டுவன்.

நற்கிள்ளி உடன் வருவதால் அமைச்சர் சிறிது துணி வடைந்தாலும் கிளேஸியஸை நினைத்தால் பெரிதும் அச்சமும் அடைந்து பயணமானார். அவர் கிளம்பிய சமயத்தில் மாலை முற்றிக் கொண்டிருந்தது. கடலின் கொந்தளிப்பு அதிகமாகி இருந்ததால் அதன் அலைகள் சுள்ளியாற்றுக்குள்ளும் புகுந்து நீரை அதிகமாக்கி நதியை சற்று பயங்கரமாக அடித்திருந்தது. அது எதையும் பார்க்காமல் நற்கிள்ளி அமைச்சரை அழைத்துச் சென்றான். படகொன்றில் அவரை ஏற்றிக்கொண்டு அக்கரை அடைந்து வில்லம்பு இலச்சினை இல்லத்தை நோக்கிச் சென்றான்.

சுள்ளியாற்று வடகரை மெல்ல மெல்ல மாறுபடத் தொடங்கியது. யவனர்கள் கூட்டம் கூட்டமாக நடமாட முற்பட்டனர். எதிர்க்கரையிலிருந்த அராபியர் குடிசை களிலும் அளவுக்கதிகமான நடவடிக்கை தெரிந்தது. ஆபத்து சிறுகச் சிறுக முற்றுவதை உணர்ந்த அமைச்சர் ஏதும் பேசாமல் நடந்தார். வில்லம்பு இலச்சினை இல்லத் தின் முகப்பில் காவல் பலமாக இருந்தது. ஆனால் அமைச் சரைக் கண்டதும் அந்தக் கூட்டம் வழிவிட்டது. அந்த வழியில் புகுந்து சென்ற அமைச்சர் உள் அறைக்கதவின் முன்பு வந்ததும் சற்று நின்றார். "நற்கிள்ளி! நான் வந்திருப்பதை அறிவி" என்று தமக்குப் பின்னால் நின்றி ருந்த நற்கிள்ளியை நோக்கிக் கூறினார்.

கதவைத்தட்ட நற்கிள்ளி ஓர் அடி எடுத்து வைத்தவன் சட்டென்று நின்றான். உள்ளே கேட்ட குரல் நற்கிள் ளியை அயர வைத்தது. அந்தக் குரல் அமைச்சர் காதிலும் விழவே அமைச்சர் முகம் பேயறைந்தது போல் மாறியது.

"கிளேஸியஸ்! இப்பொழுதும் குடிமுழுகிப் போய் விடவில்லை. அவரிடம் சரணடைந்துவிடு. நீ பிழைக் லாம்" என்ற குரல் நிலக்கள்ளியின் குரல். அதில் அதிகாரம், அநுதாபம் இரண்டும் கலந்தே இருந்தது.

அடுத்து கிளேஸியஸின் குரல் பயங்கரமாக ஒலித்தது, "யாரங்கே? இவளைப் பிடித்துக் கட்டுங்கள்" என்று. அடுத்த நிமிடம் வெளியிலிருந்த இரண்டு யவன வீரர்கள் அமைச்சரையும், நற்கிள்ளியையும் தள்ளிக்கொண்டு அறைக் கதவைத் திறக்க முயன்றனர். ஆனால் கதவு தானாகவே திறந்தது படீரென்று. உள்ளிருந்த நிலைமை அமைச்சர் எதிர்பார்த்தது போல் இல்லை. முற்றும் மாறுபட்ட நிலையை அமைச்சர் மட்டுமல்லாமல் நற்கிள்ளியும், யவனருங்கூட கண்டனர்.

கிளேஸியஸ் தரையில் கிடந்தான். அவன் கழுத்தில் நிலக்கள்ளியின் வாள் ஊன்றி இருந்தது.

□

43. சங்கு ஒலி

வில்லம்பு இலச்சினை இல்லத்தின் முகப்பு அறைக்குள்ளே இருந்த நிலை அமைச்சரையும், நற்கிள்ளியையும் மட்டுமின்றி, கிளேஸியஸ் உத்தரவுப்படி உள்ளே நுழைந்த இரு யவனரையும் அதிர்ச்சியடையச் செய்ததால் அவர்கள் செயல்பட முடியாமல் நின்றுவிட்டனர். வாளின் நுனியை கிளேஸியஸின் கழுத்தில் ஊன்றியபடியே உறுதியான குரலில் சொன்னாள் நிலக்கள்ளி, "யாராவது சிறிது அசைந்தாலும் கிளேஸியஸின் வாழ்க்கை இன்றுடன் முடிந்துவிடும்" என்று. அத்துடன் மீண்டும் கிளேஸியஸின் கழுத்தில் வாளின் நுனியைச் சிறிது அதிகமாகவே அழுத்தி "பதில் என்ன கிளேஸியஸ்? சண்டையா? சமாதானமா?" என்று வினவினாள்.

கிளேஸியஸின் முகத்தில் அந்த அபாய நிலையிலும் அச்சம் சிறிதுமில்லை. அவன் பதில் சொன்னபோது குரலும் திடமாகவே இருந்தது. "என்னை நீ கொன்று போட்டாலும் சண்டை நிற்காது. யவனர்களுக்கு ஒரு தனி நிலம் வேண்டும். அதைச் சம்பாதிக்க நான் தீர்மானம் செய்துவிட்டேன். என்னைக் கொன்றால் அடுத்த யவனர் அணியின் தலைவனொருவன் இருக்கிறான் என் பதவியை ஏற்க. இந்தப் புரட்சி இவிடமேல் நிற்காது. இங்குள்ள யவனர் கூட்டம் மட்டுமல்ல புரட்சியில் ஈடுபடப்போவது, மறிறிக்கு வடபுறத்திலிருக்கும் சேரநாட்டுப் பகைவர் பலரும் இந்தப் புரட்சியில் ஈடுபடுகிறார்கள். அவர்கள் படையின் ஒரு பகுதி தரையிலும், இன்னொரு பகுதி

கடலிலும் ஊடுருவச் சித்தமாயிருக்கின்றன. ஆகையால் இந்த சுதந்திரப் போரை இனி நிறுத்த முடியாது'' என்றான் கிளேஸியஸ்.

இதைக்கேட்ட நிலக்கள்ளி மெல்ல நகைத்தாள். ''கடல்வேந்தரை நீ இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. தவிர உன்னை வளர்த்த இந்த நாட்டில், உனக்குப் புகலிடம் கொடுத்த சேரமன்னன் நிலத்தின் ஒரு பகுதியை யவன அரசாக்க நீ முயல்வது ராஜ துரோகம் மட்டுமல்ல, நன்றிகெட்ட செய்கையும்கூட. உன்னையும் உன் யவனர்களையும் உங்களுக்கு உதவ வந்திருக்கும் மற்ற இந்நாட்டுக் குறுநில மன்னர் படைகளையும் ஒழித்துக்கட்ட கடல் வேந்தர் சித்தமாயிருக்கிறார். ஆனால், உன்னிடமுள்ள பாசத்தால், வீண் அழிவையும், ரத்தம் சிந்துவதையும் தவிர்க்கும் நோக்கத்தால் உன்னிடம் என்னைத் தூது அனுப்பினார். உன் கடைசி எண்ணந்தான் என்ன?'' என்று வினவினாள் நகைப்பின் ஊடே.

ஆனால், கிளேஸியஸின் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் இல்லை. ''நான் போருக்குச் சித்தமாயிருக்கிறேன் நிலக்கள்ளி! அதுவும் நீ காலம் கடந்து வந்திருக்கிறாய், சமாதானம் பேச. இப்பொழுது எந்த விநாடியிலும் போர் தொடங்கலாம். அதில் நீ சிக்குமுன்பு கடல்வேந்தனிடம் சென்றுவிடு. உன்னை யாரும் தடைசெய்ய மாட்டார்கள்'' என்றான் வறண்ட குரலில்.

அதுவரை வாளாவிருந்த அமைச்சர், ''கிளேஸியஸ்! உனக்கு நானும் ஒரு செய்தி கொண்டு வந்திருக்கிறேன்'' என்றார் மெதுவாக.

நிலக்கள்ளி சற்றே திரும்பித் தனது தந்தையை நோக்கினாள். ''நீங்கள் எதற்காக இங்கு வந்தீர்கள்?'' என்று சினத்துடன் வினவினாள்.

தமது பெண்ணே தம்மைப் பார்த்து அதிகாரத்துடனும் சினத்துடனும் பேசுவதைக் கண்ட அமைச்சரும் சினத்தின் வயப்பட்டு, ''நீ என் மகள் என்பதை நினைவில் வைத்துக்கொள்'' என்று சீறிவிட்டு, ''கிளேஸியஸ்! இந்தப் போரைத் தவிர்க்கத் தரைப்படைத் தலைவர் இஷ்டப்படுகிறார். அதற்காக செய்தியும் அனுப்பியிருக்கிறார்'' என்றார் துணிவை வரவழைத்துக் கொண்டு.

''யாரது தரைப்படைத் தலைவர்?'' இகழ்ச்சி நிரம்பிய குரலில் வந்தது கிளேஸியஸின் கேள்வி.

''குட்டுவ மகாப்பிரபு'' என்றார் அமைச்சர்.

''என்ன செய்தி?''

''உங்களை இன்றிரவு தனியாக வாட்போரில் சந்திக்க விரும்புகிறார்.''

''எதற்காக?''

''உங்கள் இருவரில் ஒருவர் மாண்டு விட்டால் இந்தப் போர் நடக்காது என்று நினைக்கிறார்.''

''கடல்வேந்தர் எங்கே போய்விட்டார்? அவரால் போரை நடத்த முடியாதா?''

இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாததால் விழித்தார் அமைச்சர். ''நற்கிள்ளி! இதற்கு என்ன பதில்?'' என்று வினவினார் பக்கத்தில் நின்றிருந்த நற்கிள்ளியை நோக்கி.

''குட்டுவரைத்தான் கேட்க வேண்டும்'' என்றான் நற்கிள்ளி. அதே சமயத்தில் நற்கிள்ளியின் கண்கள் நிலக்கள்ளியின் கண்களுடன் ஒரு விநாடி கலந்து மீண்டன.

அதைக் கவனிக்காத அமைச்சர் "அப்படியானால் குட்டுவரைப் போய்க் கேட்டு வாரும்" என்று யோசனை சொன்னார்.

"எப்படிப் போவது?"

"வாயில் வழியாக."

"அங்கு யவனர் காவல் இருக்கிறதே!"

"அவர்கள் நம்மை உள்ளே விடவில்லையா?"

"ஆம், விட்டார்கள்."

"வெளியே போவதை மட்டும் ஏன் தடை செய்ய வேண்டும்?"

"போய்ப் பார்த்தால்தான் தெரிய வேண்டும்" என்று நற்கிள்ளி சொன்னதும் நிலக்கள்ளி நகைத்தாள். அதுவரை கிளேஸியஸின் கழுத்தில் ஊன்றியிருந்த கத்தியையும் நீக்கி, "எழுந்திரு கிளேஸியஸ்" என்றாள்.

கிளேஸியஸ் மிக நிதானமாக எழுந்தான். அவன் எழுந்ததும் நிலக்கள்ளியை அணுகப் போன இரு யவனர்களையும் நோக்கி, "வெளியே செல்லுங்கள்" என்று உத்தரவிட்டான்.

"நிலக்கள்ளியைப் பிடித்துக் கட்ட உத்தரவிட்டீர்களே..." என்று ஒரு யவனன் இழுத்தான்.

"உத்தரவை மாற்றிவிட்டேன். போங்கள். இவர்கள் யார் வெளியே சென்றாலும் தடை செய்யவேண்டாம் என்று மற்ற காவலர்களுக்கும் சொல்லிவிடு" என்றும் உத்தரவிட்டான்.

"உன் பதில் இதுதானா கிளேஸியஸ்?" என்று கடைசி முறையாகக் கேட்டாள் நிலக்கள்ளி.

"ஆம் நிலக்கள்ளி! யவனர் சுதந்திரப் போரை என்னால் நிறுத்த முடியாது" என்று திட்டமாகக் கூறினான் கிளேஸியஸ்.

அதற்குப் பின்பு நிலக்கள்ளி அங்கு நிற்கவில்லை. வாளை உருவிப் பிடித்தபடி தந்தை மீது ஒரு பார்வையை வீசிவிட்டு வெளியே சென்றாள். அவள் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த கிளேஸியஸ் அமைச்சரைப் பார்த்து, "அமைச்சரே! போவது யார் தெரியுமா?" என்று வினவினான்.

"தெரியாமலென்ன? என் மகள்" என்றார் அமைச்சர்.

"அதுதான் உமக்குத் தெரியும். நிலக்கள்ளி இப்பொழுது உமது மகள் மட்டுமல்ல, கடல்வேந்தன் மனைவி. அது மட்டுமல்ல. சேரர் கடற்படையில் உபதளபதி" என்றும் தெரிவித்தான் கிளேஸியஸ். "அமைச்சரே! சோழியான உமது வயிற்றில் இத்தகைய வீராங்கனை எப்படிப் பிறந்தாள்?" என்றும் வினவினான்.

அமைச்சரின் கோபம் எல்லை கடந்தது. "கிளேஸியஸ்! பேசுவதை யோசித்துப் பேசு" என்றார் கோபம் குரலில் மிதமிஞ்சி ஒலிக்க.

அதற்கு கிளேஸியஸ் பதில் சொல்லுமுன்பு நற்கிள்ளி பதில் சொன்னான், "கிளேஸியஸ் யோசித்துத்தான் பேசி விருக்கிறான்" என்று.

"நற்கிள்ளி!" சினம் மிகுந்த விழிகளை நற்கிள்ளி மீது இருப்பினார் அமைச்சர்.

"என்ன அமைச்சரே?"

"நீயும் கிளேஸியஸிடம் சேர்ந்து கொள்கிறாயா?"

"எதிரியுடன் எப்படி சேர முடியும்?"

"என்னைக் கோழையென்று கிளேஸியஸ் சொன்னான்."

"சொல்லிவிட்டுப் போகிறான்"

"அதற்கு நான் பதில் சொல்லியாக வேண்டும்"

"முடியாது."

"ஏன்?"

"நீர் இப்பொழுது அமைச்சரல்ல, தூதர். ஆகையால் சண்டையிட முடியாது."

இதை ஒப்புக்கொண்ட அமைச்சர், "கிளேஸியஸ்! எனது தூதுக்கு பதில் என்ன?" என்று வினவினார்.

கிளேஸியஸ் சிறிது சிந்தித்தான். "குட்டுவரிடம் நான் போரிட முடியாது என்று சொல்லுங்கள்" என்றான் சிந்தனைக்குப் பிறகு.

"ஏன்?" என்று விசாரித்தார் அமைச்சர்.

"காரணம் அவருக்குத் தெரியும். அவரை நான் பணிந்ததாகச் சொல்லும்" என்றான் கிளேஸியஸ்.

"பணிந்ததாகவா?" அமைச்சர் குரலில் வியப்பு ஒலித்தது.

"ஆம்" கிளேஸியஸ் தயக்கமின்றிப் பேசினான்.

"என்னைக் கோழை என்றாயே?" என்று கேட்டார் அமைச்சர்.

"உண்மையைச் சொன்னேன்" என்றான் கிளேஸியஸ்.

"குட்டுவரைப் போரில் தனியாகச் சந்திக்க மறுக்கும் நீ மட்டும் என்னவாம்?" என்று அமைச்சர் வினவினார்.

"அவருக்குத் தெரியும்" என்றான் கிளேஸியஸ்.

"யாருக்கு?"

"என் குருநாதருக்கு."

"குருநாதரா!"

"ஆம். குட்டுவர் எனது குருநாதர்."

இதைக் கேட்ட அமைச்சர் வியப்பின் எல்லையை எய்தினார். "உமக்கு அவர் எப்படி குருநாதர்?" என்று விசாரித்தார்.

"போர் முறைகளை எனக்குச் சொல்லிக் கொடுத்தவரே அவர்தான். நான் தனி நபர் போரை மறுப்பதாகச் சொல்லும். அவர் புரிந்து கொள்வார். அது மட்டுமல்ல, பிரதமை, பூசம் 45 என்றும் சொல்லும்" என்றும் கூறிய கிளேஸியஸ் அவர்களிருவரையும் இல்லத்துக்கு வெளியே தானே அழைத்து வந்து அவர்களை வெளியே விட்டு உள்ளே சென்றான்.

அமைச்சர் மனத்தில் ஆயிரம் கேள்விகள் எழுந்து குழப்பின. அதைவிடக் குழப்பமளித்தது குட்டுவன் செயல். கிளேஸியஸின் பதிலை அவர் குட்டுவனிடம் சொன்னதும், குட்டுவன் மாடித்தாழ்வறைக் கோடிக்குள் சென்று ஆகா

யத்தைக் கவனித்தான். "நற்கிள்ளி! புறப்படு" என்று துரிதமாகக் கூறிவிட்டு, படிகளில் இறங்கி கீழே ஓடினான். அதே ஓட்டத்துடன் சுள்ளியாற்றுக் கரைக்கு வந்ததும் நற்கிள்ளியிடம் அங்கிருந்த படகோட்டியிடமிருந்து ஒரு சங்கை வாங்கிக் கொடுத்து, "பலமாக ஊது" என்று உத்தரவிட்டான்.

சங்கை பலமாக ஊதினான் நற்கிள்ளி. அதன் ஒலி மிக விபரீதமாக முசிறியைச் சூழ்ந்து கொள்ளவே, முசிறியின் இல்லங்களிலிருந்து மக்கள் கூட்டம் கூட்டமாக வெளியே வந்தார்கள். முசிறியின் பிரதான வாசலிலிருந்த முரசுகள் பலமாக ஒலித்தன. எங்கும் பேரிரைச்சல் உண்டாயிற்று. அடுத்து அங்கு நிற்கவில்லை குட்டுவன். "நற்கிள்ளி! நான் சொன்னபடி நட!" என்று கூறிவிட்டுப் படகொன்றை எடுத்துக்கொண்டு துடுப்புகளை வேகமாகத் துழாவிக் கொண்டு சுள்ளியாற்றின் சங்கமத்தை நோக்கி விரைந்தான்.

□

44. போர்க் கீதம்

அமைச்சர் அழும்பில்வேள் தமது மாளிகையின் மாடித் தாழ்வறையில் அங்குமிங்கும் நடமாடிக் கொண்டும், அவ்வப்போழுது நின்று தலையை ஆட்டிக் கொண்டும் [illegible] சூழப்பத்திலிருந்தார். அமைச்சரான தமக்குத் தெரியாமல் ஏதேதோ விவகாரங்கள் முசிறியில் நடப்பதை [illegible] தாம் அமைச்சர் பதவியை மேலும் ஏற்றிருப்பது [illegible] என்ற கேள்வியை தம்முள் எழுப்பிக்கொண்டார். [illegible] புரட்சி ஏற்படுமென்று அவர் அறிந்திருந்தாலும், [illegible] ஏற்படும், எப்படி ஏற்படும் என்பதையெல் [illegible] அவர் முற்றிலும் அறியாதிருந்ததாலும், அமைச்சரான [illegible] புறக்கணித்துப் புதிய தரைப்படைத் தலைவரை [illegible] நியமித்துவிட்டதாலும், மன்னருக்குத் தம்மீது [illegible] நம்பிக்கை இருக்கமுடியாது என்று தீர்மானித்துக் [illegible]டார். அப்படி நம்பிக்கையில்லாதபோது தம்மை [illegible] விட்டு நீக்கவில்லை என்று ஒரு வினாவையும் [illegible] எழுப்பிக் கொண்டார்.

இத்தனைக்கும் மேலாகத் தமது மகள் வில்லம்பு இலச் [illegible] தம்மைக் துரும்புபோல் நடத்தியதையும், [illegible] ஏற்கனவே கடல்வேந்தனை விவாகம் செய்து [illegible]விட்டதாகக் கிளேஸியஸ் தமக்குச் சொல்லும் [illegible] தான் இருந்ததையும் எண்ணி, "என் மகளே [illegible] பொருட்படுத்தாதபோது வேறு யார் எனக்கு [illegible] அளிப்பார்கள்?" என்றும் கேட்டுக்கொண்டு [illegible]ச்சிறிந்தார். அவர் திணறும் நிலையையும், நடந்த

போது அவர் கால்கள் பாவினவேயன்றி மனம் எங்கோ ஓடிக்கொண்டிருந்ததையும் அமைச்சர் முகத்தின் கலக்கத்திலிருந்தே புரிந்து கொண்ட தூதுவனான சஞ்சயன், "அமைச்சரே!" என்று மெதுவாகக் குரல் கொடுத்தான்.

அமைச்சர் தமது குழம்பிய முகத்தை சற்றே திருப்பித் தூதரைக் கவனித்தார். "அமைச்சருக்கு என்ன இப்பொழுது?" என்று எரிந்து விழுந்தார் சஞ்சயன் மீது.

"கவலை அதிகமாக இருப்பதாகத் தெரிகிறது" என்றான் சஞ்சயன்.

"பெரிய ஆராய்ச்சி" என்று எரிச்சலும் இளக்காரமும் கலந்த குரலில் பதில் சொன்னார் அமைச்சர்.

"பெரிய ஆராய்ச்சியோ, சிறிய ஆராய்ச்சியோ, உள்ள நிலையை எடுத்துரைப்பது எனது பொறுப்பாகிறது" என்று சஞ்சயன் பணிவுடன் சொன்னான்.

"உள்ள நிலையா?" இகழ்ச்சியுடன் கேட்டார் அமைச்சர்.

"ஆம் அமைச்சரே!" என்றான் சஞ்சயன்.

"சொல்லும்"

"தங்கள் துக்கத்திற்குக் காரணமிருக்கிறது."

"அப்படியா?"

"ஆம்."

"மகிழ்ச்சி?"

"மகிழ்ச்சி இருக்க முடியாது. முகத்தில் அப்படி மகிழ்ச்சியும் காணோம்."

"தூதரே!"

"அமைச்சர் பிரானே!"

"ஒருப்படியாக ஏதாவது சொல்ல இருந்தால் சொல்லும். இல்லையேல் என் பிராணனை வாங்க வேண்டாம். போய்விடும்" என்று சினத்துடன் சொற்களை உதிர்த்தார் அமைச்சர்.

சஞ்சயன் சிறிது தயங்கினான். "அமைச்சர் பிரானே!" என்று மீண்டும் தொடங்கி "முசிறியில் தங்களுக்குத் தெரியாமலே முக்கிய காரியங்கள் நடைபெறுகின்றன. உங்களுக்குத் தெரியாமல் தரைப்படைத் தலைவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவரையும் காணோம் இப்பொழுது. மேலும் இப்பொழுது வெடிக்கும் நிலையிலிருக்கிறது. புரட்சி ஒரு விநாடியிலும் ஏற்படலாம். அதற்கு நாம் செய்ய வேண்டியது என்ன?" என்று கேட்டான் சஞ்சயன்.

அமைச்சர் தமது கண்களைச் சிறிது உயர்த்தி சஞ்சயனை நோக்கினார். "செய்ய வேண்டியது என்ன என்பது உமக்குப் புரியவில்லையா?" என்று வினவினார்.

"புரியவில்லை" என்று சஞ்சயன் அடக்கத்துடன் சொன்னான்.

"நாம் செய்ய வேண்டியது கையைக் கட்டிக்கொண்டு பேசாமல் உட்கார்ந்திருக்க வேண்டியது" என்று கூறிய அமைச்சர், "தூதரே! இந்த முசிறியை ஆபத்து அணுகியது எனக்குத் தெரியும். புரட்சி ஏற்படப் போவதும் தெரியும். கடல் மூலமாகவும், தரை மூலமாகவும் வருமென்பதும் எனக்குத் தெரிந்ததுதான். ஆனால் நமக்கு எந்தக் கப்பலையும் கிடையாது. கடலைப் பாதுகாக்கக்

கொள்ளைக்காரனான கடல் வேந்தனை அரசர் நியமித்திருக்கிறார். தரைப்படைகளுக்குப் புலவர் மகன் தலைவனாக்கப்பட்டிருக்கிறான். நாம் உதவாக்கரை என்பது மன்னர் எண்ணம். ஆகையால் நமக்கென்று தனிக்கடமை கிடையாது. ஆனால் ஒரு பொறுப்பு இருக்கிறது'' என்ற அமைச்சர் இந்த இடத்தில் பேச்சைச் சிறிது நிறுத்தினார்.

சஞ்சயன் சந்தேகத்துடன் பார்த்தான் அமைச்சரை. "அது என்ன பொறுப்போ?'' என்று கேட்டான்.

"புரட்சி ஏற்பட்டால் நமது உயிரைக் காப்பாற்றிக் கொள்வது'' என்று கூறி அமைச்சர் சிரித்தார் வாய்விட்டு. அந்தச் சிரிப்பில் வயிற்றெரிச்சலும் கடுமையும் கலந்திருந்தன.

அதைக் கவனிக்கவே செய்த சஞ்சயன், ஏதோ பதில் சொல்லத் தொடங்கிய சமயத்தில்தான் சங்கொலி பலமாக ஒலித்தது ஆற்றங்கரைப் பகுதியில். அதையொட்டி முரசும் பயங்கர ஓசையை எங்கும் எழுப்பியது. இவற்றைத் தொடர்ந்து ஆங்காங்கு இரைச்சலும் கேட்கவே சஞ்சயன் தாழ்வறையின் கைப்பிடிச் சுவரை நோக்கி ஓடி வெளியே பார்த்தான். சுள்ளியாற்றுப் பகுதியில் மக்கள் கூட்டங் கூட்டமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். பலர் பந்தங்களை ஏந்தியிருந்தார்கள். கூச்சல் எங்கும் மிக அதிகமாயிருந்தது. அதே சமயத்தில் ஆற்றுக்கு அக்கரையில் துண்டு துண்டாக ஆங்காங்கு நடந்த கூட்டம் ஒரே சீராக ஒன்று சேரத் தொடங்கியது. அப்படி சேர்ந்த யவனர் படை, பெரும் யந்திரம் நகருவது போல் சுள்ளியாற்றை நோக்கி வந்து கொண்டிருந்தது. அத்தனை நாளாகப் புரட்சி வரும், புரட்சி வரும் என்று சொல்லிக் கொண்டிருந்தது. அன்று நிஜமாகவே உருவெடுத்து விட்டதைப் புரிந்து கொண்ட சஞ்சயன், "அமைச்சரே! இப்படி வாருங்கள். இந்தப் பிரளயத்தைக் கவனியுங்கள்'' என்று அவசரமாக அழைத்தான்.

அமைச்சரும், சஞ்சயனிருந்த இடத்துக்குச் சென்று வெளியே கவனித்தார். சுள்ளியாற்றுக்கு இருபுறத்திலும் ஆம்பல் அதிகமிருந்தாலும், இக்கரையில், அதாவது நமது மாளிகைப் பகுதியில் வெறும் கூட்டமே இருந்ததையும், எதிர்க் கரையில் யவனர் கூட்டம் மட்டும் படையாகத் திரண்டு வந்ததையும் அமைச்சர் கண்டார். அதன் விளைவு என்னவென்பது அமைச்சருக்குத் திட்டமாகத் தெரிந்தது. முசிறியின் சாதாரண மக்கள், படைப்பயிற்சி இல்லாதவர்கள். போர்ப் பயிற்சியுள்ள யவனர்களுடன் மோதினால் விளையக்கூடிய விபரீதத்தை உணர்ந்த அமைச்சர், சட்டென்று உட்புறம் ஓடி, தமது வாளை அணிந்து கொண்டு திரும்பினார். சஞ்சயனும், அவர் உத்தரவுப்படி வாளை அணிந்து கொண்டதும், "சஞ்சயரே! நீர் கீழே சென்று நமது காவலர் தலைவனை உடனடியாக அழைத்து வரும்'' என்று உத்தரவிட்டார்.

கீழே ஓடிய சஞ்சயன் போன வேகத்தில் திரும்பி வந்து "அமைச்சரே! கீழே காவலர் தலைவன் இல்லை'' என்று அறிவித்தான்.

"எங்கே போய் விட்டானாம்?''

"தெரியாது''

"அடுத்தவனைக் காவலர் தலைவனாக நியமிப்பது தானே!''

"அடுத்தவனும் இல்லை.''

"வேறு...''

"யாருமே இல்லை'' என்ற சஞ்சயன் "அமைச்சரே! நாம் மட்டும் இங்கிருக்க வேண்டுமா?'' என்று வினவினான்.

"வேண்டியதில்லை. வாருங்கள் புறப்படுவோம்" என்று அமைச்சர் கூறியதும், சஞ்சயன் தடதடவென்று படிகளில் இறங்க முற்பட்டான்.

வாளை உருவிக்கொண்டு அவனைப் பின்பற்றிச் சென்ற அமைச்சர் தமது மாளிகைக்கு வெளியே இருந்த சூன்ய நிலையைக் கண்டார். வாயிலில் யாருமே இல்லை. அது மட்டுமல்ல, வாயிலிலிருந்து கண்ணுக்கெட்டிய தூரம் வரை மனித சஞ்சாரத்தைக் காணோம்.

"எல்லாரும் கடற்புறமோ ஆற்றங்கரைப் பக்கமோ போயிருப்பதாகத் தெரிகிறது. அங்கு போய்ப் பார்ப்போம்" என்று கூறிவிட்டு சஞ்சயன் தொடர, வேகமாக நடந்தார் ஆற்றங்கரையை நோக்கி.

ஆற்றங்கரையில் மனித நடமாட்டம் ஏராளமாக இருந்தது. யாரிடமும் எந்த ஆயுதமும் இல்லாவிட்டாலும் சாதாரண மனிதர்கள் படைகளைப்போல் அணிவகுத்துச் சென்று கொண்டிருந்தார்கள். ஆற்றங்கரையோரமாகச் சென்ற அந்த அணிவகுத்த கும்பல், யவனர்கள் படை அக்கரையில் காட்சியளித்த உடனேயே சட்டென்று நின்றது. அந்தக் கும்பலில் ஒருவன் கையிலிருந்த தாரையைத் தூக்கிப்பிடித்து ஊதினான் ஒருமுறை. அந்த மனிதக் கூட்டம் திடீரென்று ஐந்தாகப் பிளந்து ஏதோ புதிய தொரு வியூகம் போல் நின்றது. பிறகு ஆற்றங்கரை ஓரமே வளைந்து வளைந்து சென்றது.

அந்த வியூகத்தைக் கண்டு பிரமித்தார் அமைச்சர். இத்தகைய வியூகத்தைச் சாதாரண மக்கள் வகுக்க முடியாதென்பதையும், போரில் கைதேர்ந்த தலைவனால் தான் செய்ய முடியுமென்பதையும் புரிந்துகொண்ட அமைச்சர் அவன் யாராயிருக்கும் என்பதைப் பற்றிச் சிந்திக்கலானார். அது மட்டுமல்ல அவர் சிந்தித்தது. சாதாரண மக்களைப் போர் அனுபவமில்லாதவர்களை

[illegible] வியூகம் ஏற்படுத்துவதில் பயனென்ன இருக்க[illegible] என்றும் தம்மைக் கேட்டுக் கொண்டு விடை [illegible]காமல் திணறினார். ஆனால் கூட்டத்திலிருந்த [illegible] யாரும் அமைச்சரையோ, சஞ்சயனையோ கவனித் [illegible]வில்லை. பெரிய கடல்முதலை போல் காட்சியளித்த [illegible] வியூகம் மீண்டும் ஊர்ந்தது சுள்ளியாற்றின் தென் [illegible]. வடகரையில் யவனர் படை பெரிய யந்திரம் [illegible] ஊர்ந்து வந்தது. திடீரென்று ஓரிடத்தில் வந்ததும் [illegible] மண்டியிட்டுத் தங்கள் பட்டையான கத்தி [illegible] தலைக்கு மேலே சுழற்றினார்கள். அவர்கள் [illegible] கவசங்களும் கையிலிருந்த பட்டையான வாள் [illegible] தென்கரையிலிருந்த முசிறிக் குடிமக்கள் கைகளி[illegible] [illegible]களில் பளபளத்தன. எதிர்க்கரை யவனர்கள் [illegible] மெல்ல மெல்ல கரையின் ஜலப்பகுதிக்கு [illegible] தொடங்கினார்கள். அப்பொழுது சுள்ளியாற்று முகத் [illegible]லிருந்து ஒரு பெரும் படகு வந்துகொண் [illegible] அதைச் செலுத்தி வந்த நற்கிள்ளி பெரிதாகப் [illegible]னான். அந்த அமர்க்களமான போர் நிலையில், [illegible] எழுந்து நதிக்குள் புகுந்த நற்கிள்ளியின் படகை [illegible] இழுத்து வந்த சூழ்நிலையில், திடீரென வேக [illegible] கடலிலிருந்து எழுந்த காற்றில், நற்கிள்ளியின் [illegible] பெரிதாக எல்லார் காதிலும் விழுந்தது. நற்கிள்ளி [illegible] ஸ்தாயிக்கு எழுந்து சுழன்றது. அவன் பாடியது [illegible]தம். அதைத் தொடர்ந்து நிகழ்ந்தன புதிய [illegible]கள்.

□

45. மூன்று ஜ்வாலைகள்

சுள்ளியாற்றின் தென்கரையில் ஊர்ந்த மக்கள் படைத்த முதலை வியூகம், எதிர்க்கரையில் அணிவகுத்து முட்டுப் பாறைபோல் ஒரே சீராக இணைந்துவிட்ட யவனர் படை நின்றதும் தானும் நின்றுவிட்டது. அந்த சமயத்தில் நற்கிள்ளி இசைத்த போர்க் கீதத்தை அந்த வியூகமும் இசைக்கத் தொடங்கியது. "பிரதமை பூசம் பூசம், வந்தது யவனர் நாசம் நாசம்" என்று நற்கிள்ளி பாடிய வரிகளை சுமார் மூவாயிரம் பேர் கொண்ட அந்த முதலை வியூகம் வாங்கிப் பாடவே, போர்க்கீதத்தின் ஒலி கடலிலிருந்து ஆற்றினுள் புகுந்த கடலலைகளின் ஓசையைவிட மிக அதிகமானதால் கடல் அலை ஆற்றங்கரைகளில் மோதியபோது ஏற்பட்ட "சர் சர் சளுக் சளுக்" என்ற ஒலிகள் நற்கிள்ளியின் கீதத்துக்குத் தாளம் போடுவது போன்ற பிரமையை ஏற்படுத்தியது. அக்கரையிலிருந்த யவனர்கள் இந்தக் கீதத்தைக் கேட்டதும் மண்டியிட்டு வாள்களை உயர்த்திக் கொண்டு ஆற்றைக் கடக்க படகுகளில் ஏற முற்பட்டதும், தென்கரையிலிருந்த முதலை சற்றே தலையைத் திருப்பி நின்றது. அதுவரை மெதுவாக ஊர்ந்து முதலை வியூகத்தில் சென்ற முசிறியின் சாதாரண மக்கள் தங்கள் உடல்கள் மீது போர்த்தியிருந்த போர்வைகளை நீக்கி ஆற்றில் எறிந்து விடவே, அந்தப் போர்வைகளுக்குள் ளிருந்து கவசமும் ஆயுதங்களும் தரித்த வீரர்கள் வெளிப் பட்டதைக் கண்ட அமைச்சர், பெரும் பிரமிப்பை அடைந்து பக்கத்தில் வந்து கொண்டிருந்த சஞ்சயனை நோக்கி "தூதரே! பார்த்தீரா? இது சாதாரண மக்கள் கூட்டமல்ல, படை" என்றார்.

"ஆம் சாதாரண மக்கள் உருவத்தில் வந்த சைன்யம்" என்றான் சஞ்சயன்.

"இதை நாம் எதிர்பார்த்தோமோ?" என்று அமைச்சர் வினவினார்.

"எதைத்தான் எதிர்பார்த்தோம், இதை எதிர்பார்க்க?" என்று கேட்டான் சஞ்சயன்.

"இப்பொழுது நமது கடமை என்ன?" என்று அமைச்சர் வினவினார்.

"என்னைக் கேளுங்கள்! மிகவும் விஷயம் தெரிந்தவன்" என்ற சஞ்சயன், தனது இடையிலிருந்த வாளை உருவிக் கொண்டான்.

அமைச்சர் ஏற்கெனவே வாளை உருவிப் பிடித்திருந்ததால் இருவரும் வியூகத்தில் கலந்து கொள்ள முயன்றனர். "தூரர் வியூகத்தில் புக முயல்வது?" என்று கடுமையாக விசாரித்தான் ஒருவன்.

"இவர் அமைச்சர் அழும்பில்வேள்" என்ற சஞ்சயன், "தான் சேர மன்னர் தூதுவன் சஞ்சயன்" என்று அமைச்சரையும் அறிமுகப்படுத்தி, தன்னையும் அறிமுகப்படுத்திக் கொண்டான்.

கேள்வி கேட்ட வீரன் சிறிது சிந்தித்தான். "சரி வியூகத்துக்குள் வாருங்கள். மற்றவர்கள் இயங்குகிறபடி நீங்களும் இயங்குங்கள்" என்று உத்தரவிட்டுத் தனது இடத்தில் நின்று கொண்டான்.

சேனையர் படை ஆற்றுப்படகுகளில் இயங்க முயன்றதும் [illegible] பெருதியிலிருந்து வந்த நற்கிள்ளி படகிலிருந்தபடியே [illegible] எடுத்து மும்முறை ஊதினான், இடைவெளி

விட்டு விட்டு. ஒவ்வோர் ஊதலுக்கும் ஒவ்வொருவிதமாக அசைந்தது முதலை வியூகம். முதலில் சங்கு ஒலித்ததும் அக்கரையை நோக்கித் திரும்பியது. இரண்டாவது முறை ஒலித்ததும் மண்டியிட்டு வியூகத்தின் வீரர்கள் தங்கள் விற்களைத் தரையில் ஊன்றினார்கள். மூன்றாவது முறை சங்கு ஒலித்ததும் அம்புகள் பறந்தன. அக்கரையிலிருந்த எதிரிகளை நோக்கிச் சேரர் படையின் அம்புகள் பெருத்த சேதத்தை விளைவித்தாலும் யவனர் லட்சியம் செய்யாமல் ஆற்றுப் படகுகளைச் செலுத்திய வண்ணம் வேகமாக வந்தனர். எதிரிகளின் அம்புகளிலிருந்து தப்ப அடிக்கடி படகில் படுத்து துடுப்புகளைத் துழாவி வந்தனர். இக்கரையை அடைந்ததும் சாரி சாரியாகக் கரையில் ஏறி வியூகத்தைப் பிளக்க முற்பட்டனர். எதிரி கைகலக்கும் தூரத்தில் வந்ததும் வியூகத்திலிருந்து வீரர்கள் விற்களைத் தோளில் மாட்டிக் கொண்டு வாள்களை உருவிப் போரிட்டனர்.

இப்படி யவனரும் முசிறி காலாட்படையும் கை கலந்த சமயத்தில் இன்னும் தெற்கே பலமான ஓசை கேட்டது. அங்கு அராபியர்கள் அணிவகுத்து வலப் புறமாகச் செல்வதைப் பார்த்த அழும்பில்வேள் "தூதுவரே! நீர் இங்கிருக்க வேண்டாம். வேகமாகப் புரவியில் சென்று அரபுக் குடியிருப்பும் புரட்சி செய்வதாக வஞ்சிப் பாசறையிலிருக்கும் சேரநாட்டுப் படைத் தலைவர் வில்லவன் கோதையிடம் சொல்லும்" என்று கூற, தூதன் பறந்தான் அவ்விடத்தை விட்டு.

இக்கரையில் யவனர்—முசிறிப் படையினர் போர் மும்முரமாக நடந்து கொண்டிருக்கையில், கடற்புரத்தில் பெரிய வெடிகள் கேட்டன. இதுவரை கடலில் நங்கூரம் பாய்ச்சி நின்ற யவனர் மரக்கலங்கள் மூன்றும் கடலுக்குள் பாய்விரித்து ஓடின. வேறு இரண்டு பெரிய போர்க் கலங்கள் வடக்கிலிருந்து இவற்றுடன்சேர்ந்து கொண்டன.

அந்த ஐந்து மரக்கலங்களும் வரிசையாகக் கடலில் அணிமுந்து கடற் கரையை யாரும் அணுகவொட்டாமல் சுவர்போல் அடைத்துக் கொண்டன.

வியூகத்தின் ஒரு பகுதியிலிருந்து அந்தப் போர்க் கலங்களைக் கண்ட அமைச்சர், கடற்புறமிருந்து யாரும் வருவதோ, கடற்புறமாகத் தப்புவதோ முடியாத காரியமென்று நிர்மானித்தார். திடீரென்று அந்த மரக்கலங்களிலிருந்த பொறிகளால் வீசப்பட்ட பெரும் எரி பந்தங்கள் சுள்ளியாற்றுத் தென்கரையை நோக்கிச் சீறி வந்தாலும், சரேலென்று அவை கடற்புறம் போய் விழுந்தன.

அந்தப் போர்க்கலங்கள் இப்படிப் பந்தங்களை வீசிக் கொண்டே கடலில் சஞ்சரித்ததும் அவற்றை எதிர்நோக்கி வேறு நான்கு மரக்கலங்கள் எங்கிருந்தோ வந்து கொண்டிருந்தன. அவற்றிலொன்றில் நின்றிருந்த கடல்வேந்தன் ஆகாயத்தைப் பார்த்துப் பக்கத்தில் நின்றிருந்த நிலக்கள்ளியையும் பார்த்தான். "நிலக்கள்ளி! அதோ பார், பூசம் வானில் கொத்தாகச் சுடர்விடுகிறது அக்கக் கடரோடு நாம் அளிக்கும் சுடர்களும் எதிரிகளுக்குத் தீ வைக்கட்டும்" என்று கூறிவிட்டு "இங்கே வா" என்று அவளைத் தனது அறைக்கு அழைத்துச் சென்று அறைக்கதவைச் சாத்தித் தாளிட்டான். பிறகு முரட்டுத்தனமாக அவளை அணைத்து அவள் மலரிய உதட்டைக் கவ்வினான் தனது பற்களால். பிறகு தனது மார்புமீது அழுந்திக்கிடந்த அவள் மார்பு எழில் அழிக்கவும், அடக்கவும் முயன்று தனது மார்புடன் அதனை இறுக்கினான்.

ஈரும்புகளை முறித்துவிடுவதுபோல் அவன் அணைத்த அணைப்பினால் மூச்சுத்திணறிய நிலக்கள்ளி தனது விருப்பமின்மையையும் காட்டி "இன்னும் சிறிது இறுக்கி...." என்று அவள் இதயத்தோடு பேசுவது போல் முணு

முணுத்தாள். அதனால் கடல்வேந்தன் உணர்ச்சி வேகம் அதிகப்படவே அவன் சொன்னான் — "உன் இதயத்துடன் என்னால் பேச முடியும் நிலக்கள்ளி! ஆனால் உன் இதயத்துக்கும் எனக்கும் இடையில் இரண்டு விம்மும் தடைகளிருக்கின்றனவே. அவற்றைத் தண்டித்தாலென்ன?" என்று கூறி அவற்றை தண்டிக்க கையையும் முகத்தையும் கொண்டு போனான். அந்தச் சமயத்தில் கப்பல் பெரிதாக ஒருமுறை ஆடவே இருவரும் பக்கத்திலிருந்த பஞ்சணையில் விழுந்தார்கள்.

வெளியே போர் நிகழ முற்பட்டுவிட்ட அந்த நிலையிலும் தனது மனத்தை ஏற்கனவே கொள்ளைகொண்ட அந்தக் கொள்ளைக்காரன் வெறியைக் கண்டு நகைத்தாள் நிலக்கள்ளி. அவள் அடுத்தமுறை நகைக்காதபடி தனது வெறிபிடித்த உதடுகளால் அவள் உதடுகளை மூடினான் கடல்வேந்தன்.

"போ..." என்று முணுமுணுத்தாள் அவள்.

"நாம் தேவையில்லை அதற்கு; நாமில்லாவிட்டாலும் நடக்கத் திட்டம் சிறிதும் பலவீனமின்றித் தீட்டியிருக்கிறேன்" என்ற கடல்வேந்தன், அவளைத் தனது உடலால் மறைத்தான், "இப்படித்தான் எதிரிகள் படையும் இருக்குமிடம் தெரியாமல் மறைக்கப்படும். விடியும் நேரத்துக்குள் எதிரிகள் முறியடிக்கப்படுவார்கள். முதலில் அவர்களுக்குத் தரையில் தோல்வி. அடுத்துக் கடலில் தோல்வி. கடலில் அவர்களை மாமன்னரான செங்குட்டுவரே விரட்டுவார். ஏன் தெரியுமா?" என்று வினவினான்.

"ஏன்?" என்று ஏதோ கேட்க வேண்டுமென்பதற்காகக் கேட்ட நிலக்கள்ளி, அவனது கைகள் தனது உடலின் நாலா பக்கங்களிலும் நுழைய முயல்வதை உணர்ந்தாள்.

[illegible]ந்தும் தடுத்தாளில்லை. நெகிழ்ந்தும் வளைந்தும் [illegible] கொடுத்தாள்.

கடல்வேந்தன் விசாரித்தான் "பரணர், மன்னருக்கு [illegible] பதவி அளித்திருக்கிறார். யவனர் சேஷ்டையை [illegible] அறிந்து கடலில் அவர்களை மன்னர் விரட்டு[illegible] என்று கவிபாடியிருக்கிறார். அதை நான் நிலைநிறுத்த [illegible]ம். மன்னர், கடல் பிறகோட்டிய செங்குட்டுவன் [illegible] வரலாற்றில் விளங்குவார்" என்று கூறிக்கொண்டே [illegible] வாரி எடுத்தான். வெளியே மரக்கலங்கள் இயங்[illegible] விட்டன. கடல்வேந்தனும் நிலக்கள்ளியும் [illegible] வந்தபோது கடற்போர் மூண்டிருந்தது. கடல் [illegible] தனது தளத்திலிருந்து போரை மிகுந்த திருப்தி[illegible] கவனித்துக் கொண்டிருந்தான் கப்பல்கள் அவ்வப் [illegible] கறுன்றதும், வேல்களையும் தீப்பந்தங்களையும் [illegible]க் கொண்டு விசிறியதையும் கண்ட கடல் [illegible] "நிலக்கள்ளி! எந்தப் போரிலும் முன்னதாக [illegible] பலாபலமறிந்து நாம் வகுக்கும் திட்டந் தான் [illegible]" என்றான். அந்தச் சமயத்தில் யவனர் கப்பல்கள் [illegible] பாய் தீப்பிடித்ததால் ஏற்பட்ட குழப்பமும், [illegible] கடல் வேந்தன் உதடுகளில் சிறிது புன்முறுவலை [illegible]த்தன. "நிலக்கள்ளி! எதிரி கப்பல் ஆடை இழந்து [illegible] பார்" என்று கூறினான் பக்கத்தில் நின்ற நலக்[illegible] நோக்கி.

நிலக்கள்ளியின் முகத்தில் வெட்கமும், வேட்கையும் [illegible] தோன்றின. "உங்களுக்கு எப்பொழுதும் நி[illegible]தான்" என்று கடிந்து கொண்டாலும் அவள் [illegible] எத்தனை உவகை கொண்டாளென்பதை [illegible] நிரூபித்தது.

[illegible] பிறகு கடல்வேந்தன் பேசவில்லை. கரையில் [illegible] போரையும், கடற்போரையும் மட்டும் கவனித்துக்

கொண்டிருந்தான். சுமார் அரை ஜாமம் கழித்துக் கரைப்புறத்தில் தூரத்தே பெரிய நெருப்பு ஒன்று தோன்றவே "நிலக்கள்ளி! வஞ்சிப் பாதையிலும் போர் மூண்டு விட்டது. இனி நாமிருவரும் போரில் இறங்க வேண்டியது தான். நீ போய் உன் போருடையை அணிந்து வா" என்றான்.

அவன் ஆணைப்படி நிலக்கள்ளி அவன் அறைக்குச் சென்றதும் அவனும் அவளைத் தொடர்ந்தான். தான் ஆடை களைய முற்பட்ட நேரத்தில் கடல்வேந்தன் உள்ளே வந்ததைக் கண்ட நிலக்கள்ளி "எங்கே வந்தீர்கள்?" என்று சீறினாள்.

"சேரநாட்டுக்கு ஒரு வீராங்கனையைச் சிருஷ்டிக்கப் போகிறேன்" என்று கூறிக்கொண்டு கட்டில் மேலிருந்த போருடையை அவளுக்குத் தானே அணிவித்தான். பிறகு அவள் தோள்களைப் பிடித்து எட்ட நிற்க வைத்து "இந்த உடை உனக்கு எத்தனை பொருத்தமாயிருக்கிறது!" என்று சிலாகித்து, "உபதளபதி! வாருங்கள்" என்று உத்தியோக முறையிலும் அழைத்து அவள் இடையில் தனது இடக் கையைச் சுற்றி அவளை அழைத்து வந்தான் தளத்துக்கு. தளத்தில் நின்று போர்க்கலங்களை ஒருமுறை கவனித்துவிட்டு "உபதளபதிக்கு ஒரு படகு சித்தமாகட்டும்" என்றான்.

படகு சித்தமானதும் அவளைப் படகில் தானே இறக்கிவிட்டு 'நிலக்கள்ளி! அபாயத்தை நோக்கிச் செல்கிறாய். இன்னும் கால் ஜாமத்திற்குள் போர் கடுமையாகி விடும். நான் சொல்வதை நினைவில் வைத்துக்கொள். ஏதாவது சந்தேகம் வந்தால் இந்தக் கப்பலைக் கவனி.

நான் செய்யும் சைகையை அனுசரித்து உன் மரக்கலங்களை இயக்கு" என்றுகூறி அவள் கையைத் தனது கையால் சிறிது அழுத்திக் கொடுத்தான்.

நிலக்கள்ளி படகில் விரைந்தாள், சற்று எட்ட இருந்த மரக்கலத்தை நோக்கி, தனது தளத்தில் நின்ற வண்ணம் நிலக்கள்ளியின் படகைக் கவனித்துக் கொண்டே இருந்தான் கடல்வேந்தன். பிறகு கரையை நோக்கி கண்களை ஓட்டினான்.

கரைப்போர் மிகக் கடுமையாக நடந்துகொண்டிருந்தது. மூன்று இடங்கள் எரிந்து கொண்டிருந்தன. அந்த மூன்று அக்னி ஜ்வாலைகளும் வானத்தை எட்டிப் பிடிக்க முயல்வன போல் தீ நாக்குகளை நீட்டலாயின.

"நான்காவது ஜ்வாலையைக் கடலில் நான் சிருஷ்டிக்க வேண்டும்" என்று கூறிக்கொண்டே தனது மரக்கலத்தின் தளங்களை நெருங்கினான் கடல்வேந்தன். அவன் நெருங்குவதைச் சற்று எட்ட இருந்த இன்னொரு மரக்கலத்திலிருந்து நிலக்கள்ளியின் கவனித்துக் கொண்டிருந்தான்.

□

46. செங்குட்டுவன் தோற்றம்

கடல்வேந்தன் நிலக்கள்ளியைப் படகில் இறக்கி விட்டு தனது மரக்கலத்தின் பாய்களை நோக்கிச் சென்றதை யவனர்களின் பிரதான மரக்கலத்திலிருந்து கவனித்த கிளேஸியஸ், பக்கத்தில் ராட்சஸன் போல் பிரமாண்டமாக நின்றிருந்த தலைவனை நோக்கி, "இனிக் கடலில் பயங்கர மாகப் போர் மூளும், நீங்களும் எதிரியைச் சமாளிக்கச் சித்தம் செய்து கொள்ளுங்கள்" என்று எச்சரித்தான்.

அந்த எச்சரிக்கையை அசட்டையாக ஏற்றுக் கொண்ட யவனர் பிரதான மரக்கலத்தலைவன், "புதிதாகச் சேர்ந் திருக்கும் இரண்டு இந்த நாட்டுப் போர்க் கலங்களின் திறமை பற்றி எனக்கு அதிகம் தெரியாது. ஆனால் எனது மரக்கலங்கள் பெரும் போர்களைக் கண்டவை. யந்திர வசதி களைக் கொண்டவை" என்று பதிலிலும் அசட்டை காட்டினான்.

கிளேஸியஸின் முகத்தில் கவலை தெரிந்தது. "பல போர்களைக் கண்டிருப்பது வேறு; இங்கு கடல் வேந்தரைச் சந்திப்பது வேறு" என்று எரிச்சலுடன் பதில் சொன்னான் கிளேஸியஸ்.

அதைக் கேட்ட யவனர் கடற்படைத் தலைவன், "உங்கள் கடல்வேந்தன் என்ன ஆகாயத்திலிருந்து குதித் தவனா?" என்று விசாரித்தான்.

அவன் விசாரித்த அதே நேரத்தில், கடல்வேந்தன் சுழற் [illegible]லிருந்து வீசப்பட்ட ஒரு பெரிய பந்தம் நெருப்பைக் [illegible]கொண்டு யவனர் மரக்கலத்தின் பாயை நோக்கிச் சீறி [illegible]. அதைத் தடுக்கவும் பாய்களைக் காப்பாற்றவும் [illegible] மாலுமிகளை ஏவிய யவனர் போர்க்கலத் தலைவனை [illegible] கிளேஸியஸ், "ஆகாயத்திலிருந்து கடல்வேந்தர் [illegible]விட்டாலும் அவரது தீப்பந்தங்கள் குதிக்கும்", [illegible] காட்டியதன்றி, "யவனர் கடற்படைத் தலை[illegible] ஏற்கெனவே நமது மரக்கலங்களின் பாய் ஒன்றில் தீப் [illegible]தால் கப்பல்களைக் காப்பாற்றுவது கடினம். எதிரியைக் [illegible] ஏடை போடவேண்டாம்" என்று கூறிவிட்டு, [illegible] தரைப் படையைக் கவனிக்கப் போகிறேன். இங்கு [illegible] கவனித்துக் கொள்ளுங்கள். அவ்வப்பொழுது தரையி[illegible] நான் செய்யும் சைகைகளைக் கவனித்து இயக் [illegible]" என்று உத்தரவிட்டுப் படகொன்றில் இறங்கிக் [illegible]ரைப் பக்கம் விரைந்தான்.

[illegible] கரையை அடைந்தபோது யவனர் குடிகளுக்கும், [illegible]களுக்கும் பல இடங்களில் போர் நடந்து கொண் [illegible] முதலில் வந்த முதலை வியூகம் பல பகுதிகளாகப் [illegible] இக்கரையிலுள்ள யவனருடனும், அக்கரையில் ஏறி [illegible] யவனருடனும் கைகலந்து போராடுவதைக்கண்டான்.

[illegible] கிளேஸியஸ் பக்கத்திலிருந்த தனது இருப்பிடத் [illegible] கேடயமும் வாளும் தாங்கிப் போருக்குத் தலைமை [illegible]தான். தோளில் மாட்டிக் கொண்டிருந்த பெரிய [illegible] எடுத்து ஊதி, "பிரிந்து இடம் கொடுக்கா [illegible], இணைந்து போராடுங்கள்" என்று அறிவிக்கவும் [illegible] நான்கு வீரர்களை அழைத்து போர் முறையை [illegible] சொல்லி போர் மும்முரமாக மூண்டிருந்த இடங் [illegible] அனுப்பினான்.

கிளேஸியஸின் புதிய உத்தரவுகளால் பிரிந்த யவனர் படையில், மீதியிருந்தவர்கள் மறுபடியும் சுவர் போல இணைந்தார்கள். அவர்கள் முரசும் சற்று மாறுதலாக ஒலிக்கவே அந்த ராணுவச் சுவர் மீண்டும் அசைந்து ஒரு பகுதி சுள்ளியாற்றை இரண்டாம் முறையாகக் கடந்தது. இன்னொரு பகுதி இக்கரையிலிருந்தே அம்புகளை எய்தன.

சற்று முன்பாகக் கை கலந்ததால் வாள்களுடன் வாள்கள் மோத ஏற்பட்ட மும்முரமான போரில் யவனர் பக்கத்தில் அதிகச்சேதமிருந்ததையும், தான் இக்கரையில் படைகளுக்குத் தலைமை தாங்கியதும் பாடலை நிறுத்திப் படகிலிருந்து இறங்கிவிட்ட நற்கிள்ளி வாளேந்தி சேரர் படைகளை இயக்க முற்பட்டதையும் கண்ட கிளேஸியஸ், அடுத்து நிலச் சண்டை மும்முரமாகிவிடுமென்று தீர்மானித்து, படை மத்திக்கு வந்து படைகளை இயக்கியது மட்டுமன்றி தானும் உக்கிரமாகப் போரிட்டான்.

அதன் விளைவாக இரண்டாம் முறை ஆற்றைக் கடந்து விட்ட யவனர் படையின் தாக்குதல் மிக உக்கிரமாக இருந்தது. கைகலந்த வாட்போர் மட்டுமின்றி இருபக்கத்துப் பின்பகுதி வீரர்கள் வீசிய அம்புகளும், துணிசுற்றி தீ வைக்கப்பட்ட எரிவேல்களும் பெரும் நாசத்தை விளைவிக்கலாயின. யவனர் படைகளுக்கு சுமார் மூன்று முறை பின்னடைந்து விட்ட யவனர் படை, நான்காம் முறை முன்னேற முயன்ற சமயத்தில் சேரர் படை மறுபடியும் முதலையாக வடிவெடுத்து யவனரைச் சூழவந்தது. ஆனால் கிளேஸியஸ் அதில் அகப்பட்டுக் கொள்ளவில்லை. தனது படையைச் சிறிது பின் வாங்கச் செய்து முதலை வியூகத்திலிருந்து தப்பி முதலையின் முதுகையும் தலையையும் மட்டும் தாக்கலானான்.

எங்கும் எரிவேல்களும், அம்புகளும் பறந்து கொண்டிருந்தன. வாட்களோடு வாட்கள் மோதும் ஒலிகளும், மாண்டு வீழ்ந்தவர்கள் மரணக் கூச்சலும் சுள்ளியாற்றில

[illegible]ந்தையும் பயங்கரமாக அடித்தன. போர் நுணுக்கங்களை அறிந்த கிளேஸியஸ் இரு முறை சேரர் படைகளைத் துண்டிக்கவே செய்தான். ஆனால் ஒரே குருவான கடல் வேந்தன் சீடர்களாதலால் நற்கிள்ளியும் கிளேஸியஸ் தனது வியூகத்தைத் துண்டிக்க முடியாதபடி பலபடி திருப்பியும் [illegible] வைத்தும் போரை நடத்தினான். தனது முயற்சி ஒவ்வொரு முறையும் நற்கிள்ளியால் தடுக்கப்பட்டதைக் கண்ட கிளேஸியஸ் அவனை உள்ளூரப் பாராட்டவே செய்தான். கிளேஸியஸின் போர் முறையைக் கண்ட நற்கிள்ளியும் கடல்வேந்தன் யவனனுக்கு அளித்த பயிற்சியைப் பற்றி உள்ளூரச் சிலாகித்தான். சுமார் கால் ஜாமம் தரைப்போர் நடந்து கொண்டிருக்கையிலேயே கடலிலும் போர் மூண்டது மும்முரமாக.

கடல்வேந்தன் தனது நான்கு மரக்கலங்களின் நங்கூரங்களையும் எடுத்து மரக்கலங்களைத் துடுப்புகளைக் கொண்டே முன்னேறச் செய்தான். இரண்டு போர்க்கலங்களை அவனும் மற்றுமிரு கலங்களை நிலக்கள்ளியும், பிரித்து நடத்தினார்கள். கடல்வேந்தன் செய்த சைகையால் [illegible] ஏதும் விரிக்கப்படவில்லை. ஒவ்வொரு போர்க்கலத்திலும் இரண்டு பந்தங்களுக்கு மேல் எரிய வைக்காமலும், அந்த இரண்டையும் மறைத்தும் மெதுவாக முன்னேறினான் கடல்வேந்தன். அவனைப்போலவே தனது இரண்டு மரக்கலங்களை அவனிடமிருந்து சிறிது தள்ளிச் செலுத்தினாள் நிலக்கள்ளி.

கடல்வேந்தன் கப்பல்கள் நான்கும் இயங்க முற்பட்டதைக் கண்ட யவன மரக்கலங்களை அசையாமல் [illegible] உத்தரவிட்ட யவனர் கடற்படைத் தலைவன் [illegible] முன்பாக சுவர்போல் நின்றபடியே போரிட்டான். [illegible] அது எவ்வளவு தவறென்பதைச் சில நாழிகைகளில் [illegible] கொண்டான்.

கடல்வேந்தனும், நிலக்கள்ளியும் இரண்டிரண்டு மரக் கலங்களைக் கொண்டு இரண்டிடங்களில் தான் சிருஷ்டித்த கடற்சுவரை இடித்து உட்புகுந்து விட்டதைக் கவனித்தான். அந்த நிலையில் நங்கூரமெடுக்காத தனது மரக்கலங்களும் நீரில் ஓடிச் சுழன்று போர் செய்யும் வசதியில்லாததாலும், கடல்வேந்தனும், நிலக்கள்ளியும் தனது படையை இரண்டு இடங்களில் ஊடுருவி விட்டதையும் கவனித்துத் தனது பொறிகளை இயக்கலானான். மூன்று யவன மரக்கலங்களி லிருந்து திடீரெனச் சீறிவந்த அம்புகளையும், தீப்பந்தங் களையும் கவனித்த கடல்வேந்தன் தனது மரக்கலங்களைச் சிறிது பின்னுக்கு வாங்கி எதிரி தீப்பந்தங்களிலிருந்து தப்பி, மீண்டும் அவர்களை நோக்கித் தனது கப்பல்களிலிருந்து பந்தங்களையும் அம்புகளையும் வீசிக்கொண்டே வந்தான். மீண்டும் தனது சுவர் இடிந்து ஊடுருவப்பட்டதால் யவனர் தலைவன் தனது கப்பல்களின் நங்கூரங்களை நீக்க சைகை செய்தான். அந்த ஐந்து கப்பல்களும் நங்கூரமெடுத்துத் திருப்பியதும் பாய்களை விரித்துக் காற்று அனுகூலத்தால் வேகமாக முன்னேறின.

கடல்வேந்தனும் தனது மரக்கலங்களை ஓரிடத்தில் நிற்கவைக்காமல் சுழன்ற வண்ணம் எதிரியின் மரக்கலங் களை வரவேற்றான். எதிரிக் கப்பல்கள் நேரில் அவனிடம் மோத முயன்ற சமயத்தில் தனது கப்பலை அவற்றுக்கு இடையில் செலுத்தி அம்புகளைப் பிரயோகித்தான். இரண்டு அம்புகள் யவனன் தலைமை மரக்கலத்தில் பாய்க் கயிற்றைத் துண்டித்தன. இன்னொரு பந்தம் நேராக அவன் பாய்களை அணைத்துக் கொண்டன. இதே மாதிரி நிலையைத் தன்னை எதிர்த்த இரு மரக்கலங்களிலும் ஏற் படுத்தவே கடற்பகுதியில் ஐந்து பெரிய ஜ்வாலைகள் உலாவி இருட்டைக் கிழித்துக்கொண்டிருந்தன. அது மட்டுமல்ல. பாய்களுக்குத் தீ வைத்ததோடு நில்லாமல் எதிரி மரக்கலங்கள் மீது தனது மாலுமிகளைத் தாவவும்

கத்தரவிட்ட கடல்வேந்தன், தானும் ஒரு வாளை ஏந்திப் பாய்மரமொன்றில் ஏறி வாளால் சைகை செய்ய, கடற் போர் மும்முரமாகியது.

கடலில் எதிரிகளுக்குப் பெருநாசத்தை விளைவித்தான் கடல்வேந்தன். இரண்டிரண்டு படகுகளாகக் கீழே இறங்கி எதிரி மரக்கலங்களின் அடிகளைப் பெயர்க்க வீரர் களை அனுப்பினான்; தளத்துக்குத் தளமும் போர் நடந்தது. நிலக்கள்ளி தன்னை எதிர்த்த இரு மரக்கலங் களையும் கடல்வேந்தன் சைகைப்படி நெருங்கித் தனது வீரர்களை ஏவினாள் அவற்றைத் தாக்க. மரக்கலங்களோடு இணைந்தும் பிரிந்தும் போரிட்டாள். கடல்வேந்தன் கப்பல் செய்த போர் முறைப்படி, கடலில் இப்படி பிரளயம் விளைந்து கொண்டிருந்த அதே சமயத்தில் தரையிலும் ஒரு புதுமை நிகழ்ந்தது.

எங்கிருந்தோ பல தாரைகள் ஊதப்பட்டன. வேற்றிச் சங்குகள் முழங்கின. யவனர் தரைப் படைகளை நோக்கிப் புரவிப் படையொன்று புயல் போல் தூரத்தே வந்து கொண்டிருந்தது. அதைச் சமாளிக்க கிளேஸியஸ் திரும்பியதும் உயர்த்திய வாளை நிலத்தில் தாழ்த்தி பிரமை பிடித்து நின்று விட்டான். அவனைச் சுற்றிலும் போர் நடந்து கொண்டிருந்தது. கடலை நோக்கித் திரும்பி னான் ஒரு முறை. அங்கு இரு கப்பல்கள் மறைந்து விட்ட தைக் கண்டு அவை கடலடிக்குச் சென்றுவிட்டதை உணர்ந் தான். கடல்வேந்தன் போர்க்கலம் அசுர வேகத்தில் விளைந்து போராடுவதைக் கண்டான். கடலில் யவனர் கப்பல் அஸ்தமித்து விட்டதைக் கண்டான்.

மீண்டும் திரும்பினான் கிளேஸியஸ், தாரைகள் முழங்கிய பகுதி நோக்கி. புரவிப் படையின் முகப்பில் வேகமாக சேரமன்னன் செங்குட்டுவன் வந்து கொண் டிருந்தான். தன்னைச் சுற்றிலும் யவனர் அடைந்த சேதத

தையும் கண்டு மன்னனையும் கண்ட கிளேஸியஸ் தனது கனவு முடிந்துவிட்டதைப் புரிந்து கொண்டான். நான்காம் ஜாமம் புகுந்து கொண்டிருந்தது. நாலா பக்கங்களிலும் யவனர் படை பின்வாங்கிக் கொண்டிருந்தது. கடலில் மூன்று மரக்கலங்களைக் காணோம்.

தூரத்தே சேரர் கொடி தாங்கி முன்னே ஒருவன் புரவியில் வர, அடுத்து பெரும் வெண் புரவியில் சேரர் பிரான் வருவதைக் கண்டதும் கிளேஸியஸ் தனது வாளைத் தூக்கி அந்தத் திசை நோக்கி வணங்கித் தரையில் மண்டியும் இட்டான். அதே சமயத்தில் எங்கிருந்தோ பறந்து வந்த ஓர் அம்பு அவன் வாட்கரத்தில் தைக்கவே வாளும் நிலத்தில் விழுந்தது. இன்னொரு வாள் அவன் அணிந்திருந்தகவசத்தை உடைத்து உள்புகவே நிலத்தில் சாய்ந்தான் கிளேஸியஸ்.

□

47. அர்த்தங்கள் ஆயிரம்

கள்ளியாற்றின் தென்கரையில் முதலை வியூகத்தில் இணைந்து போராடிக் கொண்டிருந்த அமைச்சர் அழும்பில் வேள், ஆற்றின் வடகரையில் நிகழ்ந்து கொண்டிருந்த அற்புதங்களைக் கண்டதால் வியப்பின் எல்லையை எய்தி மயானால் போரிட்ட வண்ணமே "சஞ்சயா! அதோ பார்" என்று பக்கத்திலிருந்த தூதுவனுக்குத் தூரத்தே வந்து கொண்டிருந்த மன்னன் செங்குட்டுவனின் புயல்வேக புரவிப் படையைக் கண்களின் அசைப்பால் சுட்டிக்காட்டினார். அதைப் பார்த்த சஞ்சயன் மிதமிஞ்சிய ஆச்சரியத்திற்கு ஆளாகி, "மன்னர் எப்பொழுது வந்தார் வஞ்சியிலிருந்து?" என்று வினவினான். "தவிர இந்தச் சிறு பொழுதில் மன்னர் நேரிடையாகக் கலந்து கொள்ள வேண்டிய அவசியமென்ன?" என்று மற்றொரு கேள்வியையும் வினவினான்.

அமைச்சர் அக்கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் அவரும் கேள்வி கேட்டார். "வஞ்சிப்பாதைப் பாசறையில் உள்ள படையில் பாதி தலைநகருக்கு போய் விட்டதாகச் சொன்னார்களே, அது எப்பொழுது திரும்பி வந்தது பாசறைக்கு?" என்று அவரும் வினாக்களைத் தொடுத்தார். மேற்கொண்டு கேள்வி பதில்களுக்கு அவகாசம் இல்லாமையால் இருவரும் போரிடவே முற்பட்டனர். அதே சமயத்தில் அராபியர்கள் குடியிருப்பிலிருந்து தலைநகருக்குக் கிளம்பி வஞ்சி நகர்ப் பாசறையை நோக்கிச் சென்ற யூசப்பின் படை சின்னாபின்னமாகி அலங்கோலப்பட்டுத் திரும்பிக் குடியிருப்புகளுள் புகுந்து கொள்ள ஓடி வருவதையும் அமைச்சர் கண்டார். தென்கரை நிலை இப்படி இருக்க வடகரையில் சேர

மன்னர் யவனர்களுக்குக் கடும் சேதம் விளைவித்துக் கொண்டு அக்கம் பக்கத்தில் வந்தவர்களைத் தமது பெரிய வாளால் வெட்டிப் போட்டுக்கொண்டு பிரளய கால ருத்திரன் போல் வருவதையும், அவர் பெரும் புரவி, கிளேஸியஸ் சாய்ந்துவிட்ட இடத்தை அணுக முயல் வதையும் கண்டார். அடுத்து நடப்பதைப் பார்க்க அவருக்கு ஆவலாக இருந்தாலும் போரின் மும்முரம் அதற்கு இடம் கொடுக்கவில்லையாகையால் போரிலேயே கவனம் செலுத்தினார்.

சேர மன்னன் தனது புரவிப் படையை இரண்டாகப் பிரித்துப் போராடும்படி கையிலிருந்த தனது வாளை உயர்த்தி சைகை செய்துவிட்டுத் தனக்கெதிரே ஒரு வழி யையும் செய்துகொண்டு கிளேஸியஸ் விழுந்து கிடந்த இடத்தை அணுகி சட்டென்று புரவியிலிருந்து தரையில் குதித்து வாளை இடைக் கச்சையில் இணைத்துவிட்டு, கிளேஸியஸைத் தமது இரு கைகளாலும் தூக்கிக் கொண் டார். அந்த வாய்ப்பை உபயோகப்படுத்தி அவரை வெட்டி விட முயன்று அங்கு குவிந்த யவன வீரர்கள் மன்னரைச் சுற்றி சக்கர வட்டமாக நின்றுவிட்ட புரவிப் படை வீரர்கள் தடுத்தார்கள். அந்த வட்டச் சுவரைத் தகர்த்து நுழைய முற்பட்ட யவனர்கள் தயவு தாட்சண்யமின்றி வெட்டப்பட்டார்கள்.

நான்காம் ஜாமம் முடிந்துகொண்டிருந்தது. யவனர் புரட்சியும் முடிந்து கொண்டிருந்தது. பெருவாரியான வீரர்களை இழந்ததின் காரணமாகப் பெரிதும் பலவீனப் பட்டுவிட்ட யவனர் படை கடலை நோக்கிப் பின்வாங்கிக் கொண்டிருந்தது. கள்ளியாற்றின் தென்கரை முதலை வாய்ப்பட்ட யவனர்களில் மிஞ்சியவர்கள் வடகரை யவனர்களைப் போலவே கடலை நோக்கிப் பின்வாங்க முற்பட்டார்கள், சிறிது தூரம் பின்வாங்கியதும் தென் கரை யவனர்கள் ஆற்றுப்படகுகளில் தாவி வடகரை

யைச் சேர்ந்து, குலைந்த தங்கள் படையுடன் இணைந் தனர். இணைந்து மீண்டும் திரும்பிப் போரிட முயன்ற போது மன்னரின் அகர வேகப் புரவிப்படை பலமாகத் தாக்கவே யவனர்கள் வரிசை குலைந்து அணி குலைந்து கடற்புறம் ஓடத் தொடங்கினார்கள். அவர்களைத் துரத்த ஏற்பட்ட சேர வீரர்கள் சட்டென்று நின்றார்கள். கடற் கரைக்கு ஓடிய யவனர்களைச் சந்திக்க அங்கிருந்த கடல் வேந்தன் கப்பலிலிருந்து இறங்கிய மாலுமிகள் படகு களில் வேகமாக வந்திருந்தார்கள். அவர்கள் தலைமையில் கடல்வேந்தன் வந்து கொண்டிருந்தான். படகுகள் கரையைத் தொட்டதும் மாலுமிகள் மணலில் மண்டி யிட்டு வில்களின் நாணைப் பூட்டி அம்புகளைப் பொருத்தி னார்கள். அந்தச் சமயத்தில் கடல்வேந்தன் மரக்கலத்தில் இருந்த டமாரம் டம டமவென ஒலிக்கவே அம்புகள் பறந்தன, யவனர்களை நோக்கி. ஆனால், சேர மன்னர் தமது கைகளில் தாங்கிய கிளேஸியஸை, பக்கத்தில் இருந்த ஒரு வீரனிடம் ஒப்படைத்துவிட்டு அவனிடம் ஏதோ செய்தி சொல்லி, இன்னொரு பக்கத்திலிருந்த வீரனிடம் சைகை காட்ட அவன் தன்னிடமிருந்த சங்கைப் பலமாக ஒருமுறை ஊதினான். அதைத் தொடர்ந்து கடற்கரையில் நின்ற கடல்வேந்தனும் ஊது தாரையை எடுத்து "பிழைக்க விருப்பமுள்ளவர்கள் ஆயுதங்களைக் கீழே போடுங்கள்" என்று முழங்கினான். இரண்டாவது சங்கு முழங்கியதும் "போர் முடிந்துவிட்டது" என்று அறிவித்தான். அவன் சொன்னதை அடுத்து பல இடங்களில் சேர படை வெற்றிச் சங்குகளை முழங்கியது. தாரைகளும் பேரிகை கோஷம் செய்தன. அந்த வெற்றியைக் காண ஆவலுடனும் கீழ்த் திசையிலிருந்து மெல்ல மேலே எழுந்தான்.

அருணோதயத்தில் போரை முடித்தான் சேர மன்னன். யவனர் அப்பொழுதும் கடலை நோக்கி ஓடிக் கொண் டிருந்தார்கள். போர் நடந்த நான்கு திசைகளுக்கும்

வெற்றிச் செய்தி எட்டச் சிறிது நேரமாகியதால் ஆங்காங்கு சிறுசிறு பகுதிகள் போரிட்டுக் கொண்டிருந்தன. அருணோதயமும் தனது செவ்விய கிரணங்களை ஆற்றில் ஆங்காங்கு சுரைத்துக் கொண்டிருந்த குருதியுடன் சேர்ந்து அவ்ற்றுக்கு ஒரு பளபளப்பையும் அளித்தது. முசிறியின் கரைகளைத் தாக்கிய மேற்குக் கடலும் வெற்றியைப் பாராட்டுவதற்குப் பெரிதாக இரண்டு அலைகளைக் கரையை நோக்கி அனுப்பலாயிற்று. அந்த அலைகளிலேயே கடல்வேந்தன் தனது நீண்ட வாளின் குருதியை அலம்பினான். பிறகு திருப்தியுடன் கடலையும் கரையையும் திரும்பத் திரும்ப நோக்கினான். பிறகு தனது மாலுமிகளில் ஒருவனை அழைத்துத் தப்ப முயலும் யவனர்களை ஒன்று திரட்டுமாறும் அவர்களைத் தான் உத்தரவிடும் வரையில் ஏதும் செய்ய வேண்டாமென்றும் உத்தரவிட்டான். அவன் உத்தரவை நிறைவேற்ற மாலுமிகள் நாலா பக்கமும் பறந்தார்கள்.

போரை முடித்து யவனர் புரட்சியை அடக்கிய சேர மன்னன், கிளேஸியஸை மீண்டும் தனது கைகளில் வாங்கிக் கொண்டு சுள்ளியாறீறுப் படகொன்றில் "அமைச்சர் அழும்பில்வேள் மாளிகைக்குப் போ" என்று உத்தரவிட, படகும் நகர்ந்தது. துடுப்புகளால் துழாவப்பட்டு அரசன் போகும் திக்கைப் பார்த்த அமைச்சர் அழும்பில்வேள் சஞ்சயனுடன் தமது மாளிகைக்கு விரைந்து மன்னனை வரவேற்க காவலரையும் துரிதப்படுத்தினார். கிளேஸியஸை ஏந்திய வண்ணம் மன்னன் வந்ததும் அவரை வாசலிலேயே வரவேற்றார் அழும்பில் வேள். "அந்த அறை எங்கே?" என்று செங்குட்டுவன் வினவினான். அவன் கேள்வியின் பொருளைப் புரிந்து கொண்ட அமைச்சர், "சித்தமாக இருக்கிறது மன்னவா" என்று கூறிப் படிகளில் அரசருக்கு முன்பாக ஏறிச் சென்றார். படிகளைக் கடந்து மாடிக்கு வந்ததும் தமது பள்ளி அறைக்கு மன்னனை அழைத்துச் சென்றார். அங்கிருந்த

[illegible]ணையில் கிளேஸியஸைக் கிடத்திய மன்னர், "மருத்துவருக்குச் சொல்லி அனுப்பும்" என்று அமைச்சருக்குப் [illegible]த்துவிட்டு, கிளேஸியஸின் கச்சையிலிருந்து குறு[illegible]ளை எடுத்து அவனது அங்கியைத் தோள் புறத்திலும் [illegible]ப் புறத்திலும் கிழித்தார். தோளிலிருந்த அம்பைப் [illegible] அதில் சீலை ஒன்றை அழுத்தி குருதியை நிறுத்[illegible]. அடுத்து மார்பில் தைத்து இருந்த அம்பைப் [illegible] "இது ஆழத்தைத்து இருக்கிறது. சிகிச்சை செய்ய [illegible]னால் முடியாது" என்றார்.

"என்னால் முடியும்" என்ற குரல் வாயிற்படியில் [illegible]கவே திரும்பிப் பார்த்த சேர மன்னன் அங்கு கடல் [illegible]ந்தன் நின்றிருப்பதைக் கண்டார். "நீ வீரனா, மருத்து[illegible]?" என்றும் வினவினார்.

"வீரன் மருத்துவனாக இருக்கக் கூடாது என்ற விதி [illegible]தும் கிடையாது. மன்னர் அனுமதி கொடுத்தால் [illegible]த்தை நான் பார்க்கிறேன்" என்றான்.

"பார், சிரத்தையுடன் பார். இவன் உயிருக்கு நீ [illegible]றுப்பாளி" என்று கூறிய வண்ணம் மன்னர் கட்டிலின் [illegible]பிலிருந்து எழுந்தார்.

"போகும் உயிரை யாரும் நிறுத்த முடியாது. உயி[illegible] ஆண்டவன் ஒருவன்தான் பொறுப்பாளி, என்னால் [illegible]றவரை இவனைக் காப்பாற்றப் பார்க்கிறேன்" [illegible] கூறிய கடல்வேந்தன் பின்னால் திரும்பி, "நிலக்[illegible] ஒரு பாத்திரத்தில் சுடுநீரும் பச்சிலைக் களிம்பையும் [illegible]துவா" என்று உத்தரவிட நிலக்கள்ளி உள்ளே [illegible]றாள். சிறிது நேரத்திற்கெல்லாம் சுடுநீரை ஒரு [illegible]த்திரத்தில் ஏந்தி வந்த நிலக்கள்ளி அப்படியே பாத்[illegible]தைப் பிடித்து நிற்க, ஒரு துணியைச் சுடுநீரில் [illegible]த்து மார்புக் காயத்தில் பிழிந்தான். பிறகு மார்பில் [illegible]து இருந்த அம்பை இருமுறை இலேசாக அசைத்[illegible]. "பாதகமில்லை. அம்பு ஆதமாகப் புதையவில்லை.

தவிர அது மார்பு எலும்பின் மேலேயே தைத்து நிற்கிறது'' என்று கூறிக்கொண்டு, ''நிலக்கள்ளி! களிம்பைக் கொடு'' என்றான். அவள் சுடுநீரைப் புக்கத்திலிருந்த மஞ்சத்தில் வைத்துவிட்டு இடையிலிருந்து, ஒரு மடித்த வாழைப்பட்டையை எடுத்து நீட்டினாள். பட்டையைப் பிரித்து அதிலிருந்த பச்சைக் களிம்பை அம்பு தைத்திருந்த இடத்தைச் சுற்றிப் பூசி கடல்வேந்தன் அம்பை லேசாக அசைத்து அசைத்துக் களிம்பை உள்ளே செலுத்தினான். பிறகு மெதுவாக அம்பைப் பிடுங்கினான். களிம்பையும் மீறி துளிர்க்கத் தொடங்கிய குருதியை அடக்க களிம்பை நிரம்பக் காயத்தில் கொட்டி பட்டையாகப் பூசவும் செய்தான். குருதி அதற்குமேல் சிறு சொட்டுகூடத் துளிர்க்கவில்லை. ''இந்தக் களிம்பைக் கட்ட வேண்டாம். காற்றில ஆறி இறுகட்டும்.'' என்றான் கடல்வேந்தன்.

''மன்னவா! இனி இவன் உயிருக்கு ஆபத்தில்லை. நீங்கள் செல்லலாம்'' என்றான்.

மன்னர் செல்ல மறுத்தார். ''அவன் கண் விழித்தபின் போகிறேன்'' என்றார்.

''கண் விழிக்க இரண்டு நாள்கள் ஆகும்'' என்றான் கடல்வேந்தன்.

''பாதகமில்லை'' என்றார் மன்னர்.

இரண்டு நாள் கழித்துக் கண் விழித்தான் கிளேஸியஸ். அவன் கண்கள் தன்னைப் பார்த்தவண்ணம் உட்கார்ந்திருந்த கடல்வேந்தனை நோக்கின. அவன் இதழ்களில் புன்முறுவல் நிலவியது ''தலைவரே!'' என அவன் இதழ்கள் முணுமுணுத்தன. அடுத்து ''தந்தை எங்கே'' என்றும் கேட்டான். செங்குட்டுவன் கிளேஸியஸை நோக்கிக் குனிந்து ''இதோ இருக்கிறேன் மகனே!'' என்று கூறி அவன் கையைப் பற்றினான். கிளேஸியஸின் கை மன்னன் கையை இறுகப் பற்றிக் கொண்டது, அப்படிப் பற்றியதில் அர்த்தங்கள் ஆயிரம் இருந்தன.

□

48. நீ, நான், கடல்

உணர்ச்சிகள் மேம்படும்போது, வாய் பேசும் சக்தியை இழந்தாலும் மற்ற அவயவங்கள் இழப்பதில்லை. மன்னன் கையை இறுகப் பற்றிய கிளேஸியஸின் கை ஏதோ செய்திகளைச் சொல்லியது. அவன் கையின் பிடியிலிருந்தும் லேசான துடிப்பிலிருந்தும் அவன் என்ன சொல்கிறானென்பதைப் புரிந்து கொண்ட மன்னர், ''மகனே! பேசுவதற்குக் காலமிருக்கிறது. முதலில் நீ பிழைத்தெழு'' என்று கூறினார்.

மன்னன் பேச்சில் குறுக்கிட்ட கடல்வேந்தன், கிளேஸியஸின் உயிருக்கு இனி எந்த ஆபத்துமில்லை. அம்பு ஆழமாகப் பதியவில்லை. இருதயத்தின் எந்தப் பாகத்தையும் தொடவில்லை. இன்னும் இரண்டே நாள்களில் கிளேஸியஸின் முழு பலம் திரும்பி விடும்'' என்று கூறினான்.

''அப்படியானால் இரண்டு நாள்கள் கழித்துப் பேசுகிறோம்'' என்ற மன்னர் கட்டிலின் முகப்பிலிருந்து எழுந்திருக்க முயன்றார்.

ஆனால், கிளேஸியஸின் கை அவர் கையிலிருந்து விலக மறுத்தது. அவன் முகத்தில் சிறிது சோகம் படிந்து கிடந்தது. ''தந்தையே! விசாரணை எப்போது?'' என்று வினவினான்.

செங்குட்டுவன், கிளேஸியஸை நோக்கிப் புன்முறுவல் செய்தான். ''இன்னும் இரண்டு நாளில்'' என்று கூறினான்.

கிளேஸியஸ் மன்னன் கையைச் சற்று அதிகமாகவே அழுத்திப் பிடித்தான். ''விசாரணை தேவையில்லை

தந்தையே! நான் செய்தது பகிரங்கமான குற்றம், அதற்குத் தாங்கள் தண்டனை விதித்தாலே போதும். நான் உட்படச் சித்தமாயிருக்கிறேன்" என்று கூறினான் கிளேனியஸ்.

அதுவரை வாளாவிருந்த அமைச்சர் அழும்பில் வேள், "மன்னவா! இந்த நாட்டில் விசாரணையில்லாமல் தண்டனை விதிக்கும் வழக்கம் இல்லை" என்று கூறினார். "எதற்கும் மன்னர் சித்தம்" என்று மன்னன் சினம் தன் மீது திரும்பாதிருக்க வழியும் செய்து கொண்டார்.

மன்னர் அமைச்சர் மீது வியப்பு நிரம்பிய விழிகளை நிலைக்க விட்டார். "சரி அமைச்சரே! உமது இஷ்டப் படியே செய்வோம். அப்படி விசாரணை நடக்குமானால், அதில் மற்றவர் யாராவது குற்றம் செய்ததாக வெளிப் பட்டால் அவர்களுக்கும் தண்டனை அளிக்கப்படும்' என்று கூறிவிட்டு கிளேனியஸின் கையிலிருந்த தனது கையை விடுவித்துக்கொண்டு, அவன் தலைமீது தனது கையை ஆறுதலாக வைத்துவிட்டு அந்த அறையை விட்டுக் கிளம்ப முயன்றவர், வாயிற்படியை அடைந்ததும் சற்றுத் திரும்பி "விசாரணையை எங்கு வைத்துக் கொள்ளலாம்?" என்று அமைச்சரை வினவினார்.

'முசிறியின் விசாரணை மண்டபத்தில் வைத்துக் கொள்ளலாம்" என்றார் அமைச்சர்.

"வேண்டாம்" என்றார் மன்னர்.

"ஏன் மன்னவா?" அமைச்சரின் வினாவில் வியப்பு இருந்தது.

"உண்மை முழுதும் அங்கு வெளி வராது" என்றார் மன்னர்.

இந்தப் பதில் அமைச்சருக்கு அதிக வியப்பை அளித் தாலும் அதை அவர் வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல்

"பிறகெங்கு விசாரணை நடத்தப் போகிறீர்கள்?" என்று வினவினார்.

"பரணர் இல்லத்தில். அங்கு தான் இந்தப் புரட்சிக்கு வித்திடப்பட்டது. அங்கேயே விசாரணை நடத்துவோம். விசாரணை ரகசியமாக நடத்தப்படும். இங்கிருப்பவர்களைத் தவிர நான் சொல்லும் சிலரை வரவழைத்தால் போதும்" என்று கூறிவிட்டு மன்னர் வெளியே சென்றார். அவரைத் தொடர்ந்து கடல்வேந்தனும் வெளியேறினான். சில விநாடிகள் கழித்துச் சாளரத்தின் மூலம் வெளியே எட்டிப் பார்த்த அமைச்சர் பெரும் பிரமிப்புக்கு உள் ளானார். வெளியே சுள்ளியாற்றுச் சங்கமப்பாதையில் மன்னர் கடல்வேந்தன் தோளில் கையைப் போட்ட வண்ணம் நடந்து கொண்டிருந்தார். அவர் சொல்வதை ஒப்புக் கொள்ளாதவன் போல் கடல்வேந்தனும் தலையை ஆட்டிக்கொண்டு அலட்சியமாக நடந்தான். "கொள்ளைக் காரனுக்கும் மன்னனுக்கும் அப்படி என்ன பேச்சிருக் கும்?" என்று சற்று இரைந்தே தன்னைக் கேட்டுக் கொண் டார் அமைச்சர்.

அவர் கண்ட காட்சியை அவருக்குப் பின்னாலிருந்து பார்த்த சேர தூதுவனான சஞ்சயனும், "இருவரும் பேசு வதைப் பார்த்தால் மன்னர், கடல்வேந்தனிடம் ஏதோ கெஞ்சுவது போல் தெரிகிறது" என்றான்.

சஞ்சயன் ஊகத்தில் உண்மை இருந்தது. அவ்விரு வரும் அடுத்து நடந்து கொண்ட விதத்தில் தெரிந்து மன்னர் சட்டென்று ஏதோ கூறிவிட்டுக் கடலவேந்தனிட மிருந்து பிரிந்து வேறு திசையில் சென்றார். கடல்வேந்தன் ஒரு படகில் ஏறி சுள்ளியாற்று முகத்துவாரத்தை நோக்கிப் படகைச் செலுத்தினான். படகைச் செலுத்திய போதும் அவன் பெரும் சிந்தனையிலிருந்தான். படகி லிருந்து நூலேணியில் ஏறி, தனது மரக்கலத் தளத்தை

அடைந்தபோதும் அவன் முகத்தில் ஆழ்ந்த சிந்தனையும் ஓரளவு கவலையும் இருந்ததை அவனைத் தளத்தில் எதிர் கொண்ட நிலக்கள்ளியும் கவனித்தாள். தளத்தை அடைந்த கடல் வேந்தன் நிலக்கள்ளியைப் பாராதவன் போலப் பெரும் கடற்பரப்பை நோக்கினான். பிறகு பெருமூச்சு விட்டான். நிலக்கள்ளி சொன்னாள். "இது சோகக் கட்டமல்ல, மகிழ்ச்சிக்குரிய சமயம்" என்று.

கடல்வேந்தன் அவளைத் திரும்பி நோக்கி, அவள் தோள்களைப் பிடித்து அவளைக் கடலை நோக்கித் திருப்பி "இந்தக் கடலைப் பார் நிலக்கள்ளி" என்றான்.

கடல்காற்று அவளுடைய மேனியைத் தழுவிச் சென்றது. "ஆம். மிக இன்பமாயிருக்கிறது" என்றாள்.

"நிலக்கள்ளி, இதிலுள்ள சுகம் நிலத்தில் கிடையாது. இதிலுள்ள சுதந்திரமும் நிலத்தில் கிடையாது. இந்தக் கடலை நான் பெரிதும் நேசிக்கிறேன்" என்றான் கடல் வேந்தன்.

அவன் எதற்காக இதைச் சொல்கிறானென்று நிலக்கள்ளிக்குப் புரியாததால், "அதுதான் தெரிந்த விஷயமாயிற்றே" என்றாள்.

"இந்தக் கடலை நாம் பிரியும் நிலை வரும் போலிருக்கிறது" என்ற கடல்வேந்தன், அவள் தோளைப் பிடித்த வண்ணம் தனது அறைக்கு அழைத்துச் சென்றான். கட்டிலில் அமர்ந்து 'நிலக்கள்ளி! நான் உறங்கி இரண்டு நாள்கள் ஆகின்றன. ஆகையால் சிறிது நேரம் உறங்குகிறேன். என்னை யாரும் தொந்தரவு செய்யவேண்டாம்" என்று கூறிப் படுத்துக்கொண்டு காலை நீட்டினான்.

"இரண்டு நாள்களாக ஏன் தூங்கவில்லை?" என்று கேட்டாள் நிலக்கள்ளி காரணம் புரியாமல்.

"கிளேஸியஸுக்கு சிகிச்சை செய்ய வேண்டியிருந்தது. அவன் மார்பில் அம்பு பாய்ந்திருந்தது" என்ற கடல்வேந்தன், "இனி பயமில்லை. பிழைத்து விடுவான்" என்று சொன்னான்.

கிளேஸியஸ் உயிருடனிருப்பதிலோ இறப்பதிலோ அக்கறை இல்லாத நிலக்கள்ளி, "நீங்கள் எதற்காக சிகிச்சை செய்ய வேண்டும்?" என்று வினவினாள்.

"மன்னருக்கு சாந்தியளிக்க" என்றான் கடல் வேந்தன்.

நிலக்கள்ளி வியப்புத் ததும்பிய விழிகளால் கடல் வேந்தனை நோக்கினாள். அந்த நோக்கில் வினாவொன்றும் தொக்கி நின்றதால் கடல்வேந்தன் அதற்குப் பதிலளித்தான். "மன்னர் கிளேஸியஸை தனது உயிர் போல் நேசிக்கிறார். ஆகையால் அவனுக்கு நானே சிகிச்சை செய்தேன்" என்று விளக்கிவிட்டு "இன்னும் இரண்டு நாள்களில் அவன் கதி நிர்ணயமாகும். பல உண்மைகள் அம்பலமாகும்" என்றான்.

"விசாரணை என்ன அவனுக்கு? பல கொடுமைகளைப் புரிந்திருக்கிறான். மன்னருக்கு எதிராகப் புரட்சி செய்திருக்கிறான்" என்றாள் நிலக்கள்ளி.

"ஆம் நிலக்கள்ளி! இருப்பினும் சேர நாட்டில் விசாரணை இல்லாமல் தண்டனை விதிக்க முடியாது" என்றான் கடல்வேந்தன். "விசாரணை இன்னும் இரண்டு நாள்களில் நமது குருநாதர் இல்லத்தில் நடக்கும்" என்று கூறினான்.

"பரணர் இல்லத்திலா?" ஆச்சரியம் ததும்பிய குரலில் கேட்டாள் நிலக்கள்ளி.

"ஆம்" என்றான் கடல்வேந்தன். அதற்கு மேல் அவன் பேசவில்லை. அவள் இடையில் தனது கையைச் செலுத்தி இழுத்துக்கொண்டு திரும்பப் படுத்து கண்களை மூடினான்.

அவன் குழலை வருடியவண்ணம் நிலக்கள்ளி பஞ்சணையில் உட்கார்ந்திருந்தாள். மெல்லத் தனது கையையும் முகக்களித்த அவன் உடலுக்குக் குறுக்கே போட்டு சற்று இறுக்கி அணைத்தாள். பிறகு அவன் கன்னத்தில் தனது கன்னத்தை வைத்து அவளும் கண்களை மூடினாள். நீண்டநேரம் அப்படியே இருந்த நிலக்கள்ளி மெல்ல

எழுந்திருக்க முயன்றாள். ஆனால் வலிய வேந்தன் கை அவள் இடையிலிருந்து அகல மறுத்ததல்லாமல் அந்த இடையை நெருக்கி நொறுக்கிவிடுவது போல் பிடித்து அவள் உடலைத் தன்னுடன் இணைத்துக் கொண்டது. இன்னொரு கை அவள் கால் சிலையைச் சற்று முழங் காலுக்கு மேல் தள்ளி வழவழத்த அவள் காலை இறுகப் பிடித்தது. "உம் உறங்குங்கள்" என்று அவள் அதட் டினாள்.

பதிலுக்கு அவன் தனது முகத்தை அவள் வயிற்றில் புதைத்தான் லேசாக. "உறக்கம் வரவில்லை கள்ளி" என்று அவள் வயிற்றுக்குச் சேதி சொன்னான்.

அவள் புன்முறுவல் செய்தாள். அவள் காதுக்கருகில் தனது உதடுகளைக் கொண்டுபோய், "உறங்குவதற்கு வழி இதுவல்ல" என்று அவள் முணுமுணுத்தாள்.

"நிலக்கள்ளி...." அவன் வயிற்றிடமே பேசினான்.

"உம்."

"நீ அருகிலிருக்கும்போது உறக்கம் எப்படி வரும்?"

"நான் போகட்டுமா?"

"போனால் உறக்கம் எப்படி வரும்?"

"ஏன் வராது?"

"உன்னைப்பற்றி நினைத்து மனம் அலையும்."

"உறக்கத்திற்கு வேறு என்னதான் வழி?"

"அணைப்பு."

"அணைப்பா?"

"ஆம்" என்ற கடல்வேந்தன் அவளைப் பக்கத்தில் இழுத்துக் கொண்டான். அவள் உடலைச் சுற்றி அவன் வலிய கைகள் ஓடின. அவள் உடலை அப்படியே தூக்கித் தன் மீது கிடத்திக் கொண்டான். அவன் கோர முகம் அவள் முகத்தில் இழைந்தது. "வேந்தரே!" என்றாள் அவள் அந்த நிலையில்.

"என்ன கள்ளி?" என்றான் அவன்.

"முகத்தை அதிகமாக என் முகத்தில் இழைக்காதீர்கள்" என்று அவள் சொன்னாள்.

"ஏன்"

"காரணம் உங்களுக்கே தெரியும்?"

"ஆம். ஆம் தெரியும்" என்ற கடல்வேந்தன் "இன்னும் இரண்டே நாள் நிலக்கள்ளி! பல உண்மைகள் வெளியில் வரும். அதற்குப் பிறகு...."

"அதற்குப் பிறகு!"

"நான் உன்னுடன் இந்தக் கடலில் ஓடிவிடுவேன்" என்ற கடல்வேந்தன் "நிலக்கள்ளி! அதற்குப் பிறகு நீ கடற்கள்ளி. நீயும் நானும் இந்த அகண்டமான நீர்ப் பரப்பில் செல்வோம். உலகத்தைப் பார்ப்போம். பிறகு நமக்கு இன்றுபோல் இந்தக் கடல் நிரந்தரமான சொர்க்கம். அப்போது நீ, நான், கடல் உண்டு. வேறெதுவும் கிடை யாது- அப்பொழுது மேலே நீலவானம், கீழே நீலக்கடல், இரண்டுக்கும் இடையில் எனது நீலவிழிக்கள்ளி, அந்த ஆனந்த சொர்க்கம் யாருக்கும் கிட்டாது நிலக்கள்ளி! இன்றிலிருந்து மூன்றாவது நாள், நமது வாழ்வின் புனரமைப்பு" என்று பேசிய கடல்வேந்தன், அந்தக் கலையில் லயித்து வர்ப்போகும் சொர்க்கக் கதைக்கு முன்னுரை அமைக்கலானான். அதற்கு இணைந்து கொடுத்தாளா அவள்? இழைந்து கொடுத்தாளா? இரண்டுந்தான்.

□

49. விசாரணையில் நிகழ்ந்த விசித்திரம்

முசிறியின் துறைமுகப் போர் நடந்து மூன்று நாள்கள் ஆகியுங்கூட துறைமுகப் பகுதிகளும், கடற்புறமும் போரின் காயங்களை முழுதும் துடைக்காமல் இருந்த படியால், இரண்டு நாள் சுத்திகரிப்பு வேலைக்குப் பிறகும் சிற்சில கேடயங்களும் வாள்களும் ஆங்காங்கு தரையில் கிடந்ததன்றி, மூழ்கடிக்கப்பட்ட இரண்டு யவன மரக் கலங்கள் அவற்றுக்குத் துணை புரியவந்த இரண்டு பக்கத்துக் குறுநில மன்னர்களின் கப்பல்கள், இவற்றின் பிளந்த பலகைகள் அவற்றில் அலைந்துகொண்டும், கரையில் ஒதுக்கப்பட்டும் கிடந்தன. உருப்படியாக விடப்பட்ட யவனர்களின் பிரதான மரக்கலங்கூட பாய்களை இழந்தும் சில இடங்களில் பக்கப் பலகைகள் மூளியாகவும் காட்சி யளிக்கவே செய்தன. மொத்தத்தில் அந்தத் துறைமுகம் சேர நாட்டைச் சீண்டுவது எத்தனை அபாயம் என்பதை நிரூபித்தது. போர் முடிந்துவிட்டதால் சுள்ளியாற்று சங்கமத் துறையில் மறுபடியும் உலாவத் தொடங்கி விட்ட படகுகளும், மக்களும் கிளப்பிய குதூகல ஒலிகள் எப்போப்பட்ட அச்சத்தையும் அவர்கள் சகிக்கக்கூடிய உரம் படைத்தவர்கள் என்பதைச் சுட்டிக்காட்டின. நான்காவது நாள் காலையில் முசிறியின் படைகள் தங்கள் பழைய இடங்களுக்குத் திரும்பிவிட்டதால் சாதாரண வாழ்க்கை அந்த மாநகரில் உலாவத் தொடங்கி னாலும், போரைப் பற்றிய மக்கள் பேச்சு மட்டும் முடிய வில்லை. கடல்வேந்தன் சிறப்பும், மன்னன் திடீரென்று தோன்றி யவனர்களையும் அவர்களுடன் புரட்சியில் சேர்ந்

தவர்களையும் கடற்புறம் விரட்டிவிட்ட சிறப்பையும் பற்றிப் பேசவே செய்தனர். இந்தப் போர் சிறியதாயினும் இதைப் பற்றிப் பெரும் புலவரான பரணர் பாடாதிருக்க மாட்டார் என்று நிச்சயமாக மக்கள் பேசிக் கொண் டார்கள். அப்படியொரு பாட்டை அவர் முன்னமே பாடியிருந்தார் என்பதும், அதன் மூலம் கவிவாக்கு பொய்க் காது என்ற உண்மையை நிலைநாட்டியிருந்தாரென்பதும் மக்களுக்குத் தெரியாவிட்டாலும் நிலக்கள்ளிக்குத் தெரிந்தே இருந்ததால் அவள் நான்காவது நாள் காலையில் பரணர் வீட்டில் பதிற்றுப்பத்தின் வரிகளைப் பாடவே செய்தாள். அவள் தேன் குரல் பரணர் இல்லத்தில் எதிரொலி செய்த போதுதான் பிசங்குட்டுவன் அங்கு வந்து சேர்ந்தான், அமைச்சர் அழும்பில்வேளுடனும், படைத்தலைவன் வில்லவன் கோதையுடனும்.

உள்ளே நுழைய முயன்ற சேரன் சட்டென்று வாயிற் படியில் தானும் நின்று மற்றவரையும் நிற்கச் சொல்லி, பரணரின் பதிற்றுப்பத்தின் ஐந்தாம்பத்தின் வரிகளையும் அவற்றைச் சிறப்புச் செய்த இசையையும் காதில் வாங்கி நின்றான் சிறிது நேரம். பிறகு உட்புகுந்து கூட்டத்தில் அமர்ந்திருந்த பரணரை அணுகி, "புலவர் பெருமானே! இந்தச் செய்யுள் எப்பொழுது எழுதப்பட்டது?" என்று விசாரித்தான்.

"இரண்டு—மூன்று மாதங்கள் இருக்கும்" என்றார் புலவர்.

"இப்பொழுது நடந்ததை முன்னமே எப்படி எழுத முடிந்தது?" மன்னன் குரலில் கனிவு தோன்ற விசாரித்தான்.

"சேரனை மண்ணில் எதிர்த்துப் பிழைத்தவர் இல்லை. கடலில் மட்டும் எப்படி வெல்ல முடியும்?" என்ற பரணர்

"சேரமன்னா! பிற்காலத்தில் பகைவரை, கடல் பிறகோட்டிய செங்குட்டுவன் என்று நீ அழைக்கப்படுவாய்" என்று உரைக்கவும் செய்தார்.

மன்னன் தலைவணங்கினான். "பரணர் பெருமானே! இந்தச் செய்யுள்களுக்கு என்ன கொடுப்பதென்று எனக்குத் தெரியவில்லை" என்றார்.

"ஏற்கெனவே உன் மகனை எனக்குப் பரிசாக வழங்கி விட்டாயே. வேறென்ன வேண்டும்? உன் ஒரே மகன் நாட்டை ஆள வேண்டிய இளவரசன், அந்தக் குட்டுவன் சேரனையே எனக்கு அளித்துவிட்டாயே மன்னா! இதை விடச்சிறந்த இன்னொரு பரிசு இருக்க முடியுமா?" என்று கேட்ட புலவர் "மன்னா! நீ எதற்கு வந்தாய் இத்தனை காலையில்?" என்றும் விசாரித்தார்.

மன்னன் பதில் சொல்லுமுன்பு அமைச்சர் அழும்பில் வேளே பதில் சொன்னார். "இங்கு இன்று மாலை விசாரணையை வைத்துக்கொள்ள மன்னர் முடிவு செய்திருக்கிறார்" என்று.

"இங்கா!" புலவர் கேள்வியில் வியப்பு இருந்தது.

"ஆம் பரணரே!" என்றான் மன்னன்.

"இங்கு இடம் போதுமா?"

"சங்கப் பலகையில் இடமா இருக்கிறது? புலவர்கள் அதிகமாவதற்குத் தக்கபடி அது பெரியதாகி இடம் கொடுக்கும்."

"இது சங்கப்பலகையா?"

"ஆம் பரணரே! இது சங்கப் பலகைதான். எனது புலவர்தான் சங்கத்தின் தலைவர். இன்று அவர் முன்னால் விசாரணை நடைபெறும். அவரும் சாட்சி சொல்ல வேண்டி

யிருக்கும்" என்ற மன்னன் அன்று காலையிலேயே அங்கு தங்கிவிட்டான். விசாரணைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய அமைச்சருக்கும் உத்தரவிட்டான்.

மாலையும் மெல்ல மெல்ல நெருங்கியது. அன்று முறியில் வெளிவரப்போகும் பல ரகசியங்களை மறைக்க முயலுபவன் போல பகலவனும் மலைவாயிலில் விழுந்து மெதுவாக இருளைப் பரப்ப முற்பட்டான். புலவர் இல்லம் அன்று மாலையில் பெரும் கோட்டை போல் காணப்பட்டது. வாயிலில் ஆயுதந்தாங்கிய வீரர்கள் பலர் காவல் செய்தனர். உள்ளே பரணரின் பெரும் கூடத்தில் தாலாபக்கங்களிலும் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. அந்தக் கூடத்தின் ஒரு பக்கத்தில் பெரும் அரியணையில் சேரமன்னன் கம்பீரமாக வீற்றிருந்தான். நீதி செலுத்தும் தண்டமாக செங்கோல் அவன் கையை அலங்கரித்திருந்தது. அரியணையின் ஒரு பக்கத்தில் வில்லவன் கோதையும், இன்னொரு பக்கத்தில் சஞ்சயனும் பொம்மைபோல் சிறிதும் அசையாமல் நின்றிருந்தனர். சஞ்சயன் கையில் மட்டும் நீளமான வெள்ளித்தடியொன்று பற்பல வைரங்கள் பதித்த பிடியுடன் விளக்கொளியில் பளபளத்தது. மன்னன் சஞ்சயனை நோக்கித் தலையை லேசாகத் திருப்பியதும், தூதனான சஞ்சயன் கட்டியம் கூறினான். "சேரர் குலப் பெருந்தகை, புலவருக்கும் புரவலன் இமயத்தில் இலச்சினை பொறித்த மாவீரர், கடல் பிறகோட்டிய செங்குட்டுவர் வாழி! அவர் அறம் வாழி! அவர் நீதி வாழி! விசாரணை தொடங்குகிறது. அமைதி! அமைதி! அழைத்தாலன்றி யாரும் பேச வேண்டாம்" என்று இரைந்து கூறினான். அடுத்து வில்லவன் கோதை அழைத்தான், "கிளேஸியஸ்! - கிளேஸியஸ்!" என்று.

அடுத்த அறையொன்றிலிருந்து முதலில் கிளேஸியஸ் இருவர் கையைப் பிடித்துத் தாங்க உள்ளே வந்தான். அவன் உட்கார ஓர் ஆசனம் கொடுக்கும்படி மன்னன்

சைகை காட்ட சற்று எட்ட ஓர் ஆசனம் போடப்பட்டது. அதில் அவன் அமர்ந்ததும் வில்லவன் கோதை கேட்டான். "கிளேஸியஸ்! முசிறித் துறையில் குடியிருந்த யவனர்களை நீ மன்னருக்கு எதிராகப் புரட்சிக்குத் தூண்டியதாகவும், சுள்ளியாற்றுத் தென்கரைக் குடியிருப்பிலிருந்து அராபியர்களையும் உன் புரட்சிக்கு இழுத்துக் கொண்டதாகவும் உன்மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. என்ன சொல்கிறாய்?" என்று கிளேஸியஸ் தனது தலையைத் தூக்கினான் கம்பீரமாக. "குற்றத்தை அமைச்சர் மாளிகையிலேயே ஒப்புக்கொண்டு விட்டேன். தண்டனை பெறக் காத்திருக்கிறேன்" என்றான் சிறிதும் அச்சமில்லாத குரலில்.

"புரட்சிக்குத் தண்டனை என்ன தெரியுமா?" என்று விசாரித்தான் வில்லவன் கோதை.

"தெரியும். மரணதண்டனை" என்றான் கிளேஸியஸ்.

"அதைப்பற்றி நீ கவலைப்படவில்லையா?"

"இல்லை."

"உயிரில் விரக்தி பிறந்துவிட்டதா?"

"இல்லை. உயிரைக் கொடுத்தவர் உயிரைத் திரும்பப் பெறுவதில் தவறில்லை."

"உனக்கு உயிரைக் கொடுத்தவர் யார்?" வில்லவன் கோதை இந்தக் கேள்வியைச் சற்று அழுத்தமான குரலில் கேட்டான்.

கிளேஸியஸ் அச்சமற்ற பரிதாபமான விழிகளை மன்னரை நோக்கி உயர்த்தினான். "மும்முறை என் உயிரைக் காப்பாற்றிய சேரமன்னர்; இன்று விசாரணை புரியும் மகாவீரர்; அன்பின் சிகரம்;" என்று சொன்னான் வருத்தம் தோய்ந்த குரலில்.

"மன்னரா உனக்கு மும்முறை உயிரளித்தவர்?" என்று மீண்டும் வினவினான் வில்லவன் கோதை.

"ஆம்"

"எப்படி, எவ்வெப்பொழுது காப்பாற்றினார்?" என்று விளக்கமாகக் கேட்டான் வில்லவன்கோதை.

"அது ஒரு பெரும் கதை. கேளுங்கள். அதைச் சொல்லி ஆறுதல் எனது நெஞ்சின் துன்பத்தை ஆற்றிக் கொள்கிறேன்" என்ற முகவுரையுடன் தனது கதையைச் சொல்லலானான் கிளேஸியஸ். "கிரேக்க நாட்டில் கலவரம் ஏற்பட்டதாலும், பிற நாடுகளை நாடி யவனர் குடும்பங்கள் கிளம்பிய காலக்கட்டம். அப்படிக் கிளம்பியவர்களில் எனது தாயும் ஒருத்தி. பல உறவினர்களுடன் ஒரு மரக்கலத்தில் அவள் இந்த முசிறியை அடைந்தாள். இந்த ஊரில் கடற்கரையோரமாக இருந்த யவனர் சேரியில் தங்கினாள். கிரேக்க நாட்டிலேயே ஓர் அயோக்கியனால் பல துன்பங்களுக்கு இலக்கான என் தாய் அமைதியான வாழ்க்கையை நாடி இங்கு வந்தாள். இங்கும் அந்த அயோக்கியன் என் தாயைத் தொடர்ந்து வந்தான். ஒருநாள் என் தாயைப் பலவந்தமாகக் கற்பழித்தான். என் தாய் கதறினாள். அப்பொழுது அவள் குடிசைக் கதவைத் திறந்து கொண்டு வந்த ஒரு வீரர் அந்த யவன அயோக்கியனைப் பிடித்து இழுத்துக் கொண்டு வெளியே சென்றார். அப்புறம் அந்த அயோக்கியனை என் தாய் சந்திக்கவில்லை. அவளைக் காப்பாற்றிய வீரர் மட்டும் அடிக்கடி வந்து அவளை விசாரித்துச் சென்றார். அந்த அயோக்கியனின் நடத்தையால் என் தாய் கருவுற்றிருந்தாள். அந்தக் கரு நான்தான். என் தாய் என்னை ஈன்ற சில நாள்களுக்குள் இறந்து விட்டாள். இறக்கும் தறுவாயில் என்னையும் ஒரு சீலை, ஒரு குறுவாள், இவற்றையும் அந்த வீரரிடம் ஒப்படைத்தாள். அவர் என்னை வளர்க்கச் சில யவனர்களுக்குக் கட்டளையிட்டார். நான்

வாலிபத்தை அடைந்தேன். சிறு வயதிலேயே எனக்கு வாட்போர் கற்றுத்தரப்பட்டது. வாலிபத்தை அடைந்ததும் பல யவனர்களை வாட்போரில் தோற்கடித்தேன். ஒரு முறை என்னிடம் தோல்வியடைந்த ஒருவன் நான் திரும்பிய சமயத்தில் என் முதுகில் கீழே கிடந்த எனது குறுவாளால் குத்திவிட்டான். அப்பொழுது அங்கு தோன்றிய அந்த மகா வீரர் என்னை எடுத்துத் தோள்மீது போட்டுக்கொண்டு, அதோ இருக்கும் அமைச்சர் வீட்டுக்கு அழைத்துப்போய்ச் சிகிச்சை செய்து மீண்டும் யவனர் சேரிக்கு என்னை அழைத்து வந்து அங்கு விட்டுப் போனார். அதற்குப் பிறகு என்னை யவனர்களின் தலைவனாகவும் நியமித்தார். அவர் செய்த தவறு அதுதான். தலைவனானதும் அதிகாரம் வந்தது. அதிகாரம் வந்ததும், ஆசை வந்தது. ஆசை பேராசையாகி இந்த முசிறியில் யவனர் ஆட்சியை நிறுவவும் தூண்டியது. இதற்கு எனக்குப் பலர் தூபம் போட்டார்கள். யவனர்கள் பெரிய வீர இனமென்றும் அவர்கள் பிற நாட்டில் அடிமைகளாக வாழ்வது தவறென்றும் குருமார்கள் சோதிடம் சொன்னார்கள். வெள்ளை, கறுப்பு நிறங்களும் இதில் தலைகாட்டின. உயர்ந்த இனத்தவரான வெள்ளையர் கறுப்பரிடம் அடிமையாக வாழ்வது தவறென்றும் எனக்குப் போதிக்கப்பட்டது. நான் மதியிழந்தேன். வணிகராக வந்த யவனர்களைச் சிறு படையாகத் திரட்டினேன். புரட்சிக்கும் வித்திட்டேன். வளர்த்தேன். அந்தப் பணியில் இன்னொரு மகாவீரனும் எனக்குக் கை கொடுத்தான். அவன்..'' வாசகத்தை முடிக்கவில்லை கிளேஸியஸ். சிறிது தயங்கினான். அந்த வாசகத்தை கிளேஸியஸ் வெளி வந்த அதே அறையிலிருந்து வெளி வந்த இன்னொருவன் முடித்தான். ''கடல் வேந்தன்'' என்ற சொற்கள் அந்த அறை வாயிற்படியிலிருந்து கணீரென ஒலித்தன. அங்கு கடல் வேந்தன் நின்றிருந்தான், முகத்தில் முறுவல் தவழ.

அவனைக் கண்டதும் வில்லவன் கோதை மன்னனைப் பார்த்தார். அமைச்சர் கண்களும் அரசரை நோக்கின.

கடல்வேந்தன் கண்களும், சேரவேந்தன் கண்களும் நீண்ட நேரம் நான்கு வேல்கள் உராய்வது போல் சந்தித்து நின்றன. கடைசியில் மன்னனே பேசினான். ''கடல் வேந்தனே! கிளேஸியஸ் செய்த துரோகம் அதிகமா? நீ செய்த துரோகம் அதிகமா?'' என்று வினவினான்.

''மன்னர்தான் தீர்மானிக்க வேண்டும்'' என்றான் கடல் வேந்தன்.

''நீ என்ன சொல்ல விரும்புகிறாய்?'' என்று மன்னன் வினவினான்.

''உண்மையை'' என்றான் கடல் வேந்தன்.

சேரமன்னன் சிறிது சிந்தித்தான். பிறகு ''நிலக்கள்ளி! நிலக்கள்ளி!'' என்று அழைக்க, நிலக்கள்ளி மற்றோர் அறையிலிருந்து தோன்றினாள், தலை வணங்கினாள்.

''நிலக்கள்ளி!'' என்று சற்றுக் கடுமையாக அழைத்தான் மன்னன்.

''மன்னவா!'' நிலக்கள்ளியின் குரலில் லேசான அச்சமிருந்தது.

''உன் கடமையைச் செய்'' என்றான் மன்னவன்.

நிலக்கள்ளி அங்கிருந்த அனைவரையும் ஒரு முறை சுற்றிப் பார்த்தாள். பிறகு மெதுவாக நடந்து கடல் வேந்தனை நெருங்கினாள். அடுத்து நிகழ்ந்தது அனைவரையும் உலுக்கிய ஒரு விசித்திரம். நம்ப முடியாத விளைவு. ஆனால் நிலக்கள்ளி அதை எத்தனை அலட்சியமாகச் செய்தாள்!

''தாமதிக்காதே! அவனை அழித்துவிடு'' என்றான் மன்னன்.

தனது இடையிலிருந்த குறுவாளை எடுத்துக்கொண்டாள் நிலக்கள்ளி.

□

50. அவன் ஆட்சி

'அவனை அழித்து விடு' என்று அரசன் கட்டளையிட்டதும் அசையவில்லை கடல்வேந்தன். அந்தக் கட்டளையை நிறைவேற்றத் தனது அருகில் வந்து முன்பாக நின்று கொண்டு நிலக்கள்ளி குறுவாளை எடுத்த போதும், அவன் உணர்ச்சிகளைச் சிறிதும் வெளியிடவில்லை. எந்தவிதக் கலக்கமுமில்லாமல் கல்லைப் போல் நின்று கொண்டிருந்தாள் நிலக்கள்ளி. குறுவாளை எடுத்துக் கொண்டதும் நிலக்கள்ளியின் உயரத்தை உத்தேசித்து தனது நெடிய உருவத்தை லேசாக வளைத்துக் குனிந்தான்.

அரசன் உத்தரவையும் நிலக்கள்ளியின் செய்கையையும் கண்ட வில்லவன் கோதையும், அமைச்சர் அழும்பில் வேளும், தூதுவனான சஞ்சயனும், கிளேலியனும் அடுத்து என்ன விபரீதம் நடக்கப் போகிறதோ என்று அச்சமுற்று நின்றாலும் பரணர் மட்டும் சிறிதும் அசையாமலும் ஏதும் பேசாமலும் மௌனமாக உட்கார்ந்திருந்தார். அடுத்து விபரீதத்துக்குப் பதில் விசித்திரம் ஏற்பட்டபோது மற்றவர்கள் பிரமித்தாலும்கூட பரணர் மட்டும் பழையபடியே உணர்ச்சிகளைச் சிறிதும் காட்டாமல் அமர்ந்திருந்தார்.

குறுவாளை எடுத்த நிலக்கள்ளி கடல்வேந்தனின் கழுத்தைச் சுற்றிலும் இருமுறை கீறினாள். பிறகு தலையின் குழலிருந்த பகுதியில் பாதி கீறி எடுத்தாள். அடுத்து அந்தக் குறுவாளின் உதவியாலேயே கீறிய பாகத்தை மெதுவாகவும், சாமர்த்தியமாகவும் குறுவாளின் நுனியால் கிண்டி எடுத்தாள். பிறகு மெதுவாக கீறிய பகுதிகளைப்

[illegible] தொடங்கியதும், கடல்வேந்தன் தலையின் முன் [illegible]யையும் முகம் பூராவையும் மூடிக்கிடந்த சருமம் மெல்ல [illegible] விலகவே அது பொய்ச் சருமம் என்பதை உணர்ந்த [illegible]வன் கோதை முதலானோர் பிரமிப்பின் எல்லையை [illegible]ந்தார்கள். எப்பேர்பட்ட முகமூடியும் சில சந்தர்ப்பங்[illegible] நழுவி விடுமென்பதையும் ஆனால் அந்த சரும மூடி [illegible]தோடு சருமமாய் இணைக்கப்பட்டு அசல் சருமத் [illegible]ும், அதற்கும் வித்தியாசம் லவலேசமும் தெரியாமல் [illegible]தையும் கண்ட தூதுவனான சஞ்சயன் கூட, தான் [illegible]னாய் எவ்வளவோ வேடங்கள் புனைந்திருந்தும், இந்த [illegible] அமைப்புக்கு ஒப்பான ஒரு வேடத்தை யாரும் புனைய [illegible]ும் என்பதைக் கனவிலும் நினைக்காததால், "அதிசயம்! இந்திரஜாலம்!" என்றும் வாய்விட்டு இரைந்தே [illegible]ான். அழும்பில்வேள் வாயைத் திறக்க முடியாமல் [illegible]யென நின்றுவிட்டார்.

ஆனால், அந்த சருமத்தை முழுதும் நீக்குவது அத்தனை [illegible]மாக இல்லாததால் நிலக்கள்ளி அதை மிக மெது[illegible] எடுத்தாள். அப்படி முகத்தில் செயற்கை அமைப்பு [illegible]க்கப்பட்ட பின்பு அந்த உறையிலிருந்து வெளிவந்த [illegible] மன்னன் மைந்தனும், பரணருக்கு மன்னனால் தானம் [illegible]யப்பட்டவனுமான குட்டுவன் சேரனுடைய முகம் [illegible]பதை அறிந்ததும் அந்த அறையில் சிறிது நிசப்தம் [illegible]லியது "வீரனான கடல்வேந்தன் மறைந்து விட்டான். [illegible]ழையான குட்டுவன் மீண்டும் தோன்றி விட்டான்" [illegible] கடல்வேந்தனின் சொற்கள் மற்றவர்களை இந்த [illegible]த்துக்கு இழுத்தன. புரியாத பலவிஷயங்களும் புரிந்தன. [illegible]கள் தோற்கடிக்கப்பட்டதற்கும் முசிறி, புரட்சியி[illegible] மீண்டதற்கும் கொள்ளைக்காரனான கடல் [illegible]ந்தன் மட்டுமன்றி கோழையான குட்டுவன் சேரலும் [illegible]மென்பதைப் புரிந்து கொண்ட வில்லவன் [illegible]க்குப் பல விஷயங்கள் புரிந்தன. கோழையும் வீரனும் [illegible]னே என்பது மன்னருக்கு முன்னமே தெரிந்திருக்க

வேண்டுமென்றும், அதனால்தான் கடல்வேந்தனை அவர் கடற்படைத் தலைவனாக நியமித்தாரென்றும் தீர்மானித்தான் சேரர் நிலப்படைத் தலைவனான வில்லவன் கோதை.

குட்டுவன் திடீரென்று முசிறியின் நிலப்படைத் தலைவனாகத் தோன்றிப் பிறகு மறைந்து விட்டதையும் எண்ணிப் பார்த்த அமைச்சர் அழும்பில்வேளும், சஞ்சயனும் ஓரளவு உண்மையைப் புரிந்து கொண்டார்கள். அழகிய குட்டுவன் முகத்தைத் தழும்புகள் உள்ள விகாரமான கடல்வேந்தன் முகமாக மாற்றியதும் ஒரு விசித்திரம் என்று அமைச்சர் எண்ணினார். அது மட்டும் வெறும் சரும முகமூடியாயிருந்தால் ஏதாவது ஒரு சண்டையில் வாள்வீச்சு அதைக் கிழித்து விட்டிருக்கும் என்று நினைத்தார். ஆனால், அது மிகக் கச்சிதமாக அசல் முகத்தைப் போலிருக்க என்ன செய்தார்கள்; யார் செய்திருக்க முடியும் என்று நினைத்து விடைகாணாமல் தவித்தார் அமைச்சர்.

அந்தச் சமயத்தில் ஒலித்தது அரசர் குரல், "இளவரசனான நீ ஏன் கொள்ளைக்காரனாக மாறினாய். என் அரசுப் பொக்கிஷ வண்டிகளைக் கொள்ளையடித்தாய். நீ கொள்ளையடித்த பொக்கிஷக் குவியல்கள் என்ன ஆயின?" என்று கேட்டார் மன்னர் நிதானமான குரலில். "நீ இளவரசனாக இருந்தாலும் நீபுரிந்துள்ள குற்றங்களிலிருந்து நீ தப்ப முடியாதென்பதைப் புரிந்துகொள். செங்குட்டுவன் ஆட்சியில் மகனுக்கு ஒரு நீதி, மக்களுக்கு ஒரு நீதி என்பது கிடையாதென்பதை நினைவில் வைத்துக் கொண்டு உன் குற்றங்களுக்குச் சமாதானம் சொல். நீ ஏன் கொள்ளைக்காரனானாய்?" என்று மன்னன் உறுதி மிகுந்த குரலில் கேட்டான்.

கடல்வேந்தனின் ஈட்டிக் கண்கள் நிர்ப்பயமாக மன்னரை நோக்கின, "நான் கொள்ளைக்காரனானால அதற்கு மன்னன் தான் பொறுப்பாளி" என்று சொன்ன

அவன் குரலில் அச்சமில்லை, பணிவில்லை, குற்றச்சாட்டுமிருந்தது.

இந்தச் சமயத்தில் பரணர் குறுக்கிட்டு "இளவரசனே! மன்னர் முன் பேசும் முறை இதுவல்ல" என்று கண்டித்தார்.

குட்டுவன் சேரலின் விழிகள் மறுபடியும் கடல்வேந்தனின் இரக்கமற்ற விழிகளாக மாறின. "குருநாதரே! இது மன்னர் அரண்மனையல்ல. இது நீதி ஸ்தலம். இங்கு சத்தியந்தான் பேசப்படவேண்டும். அங்கு வீற்றிருப்பதும் இங்கு நிற்பதும் தந்தையும் மகனும் அல்ல. மன்னனும் குற்றவாளியும். ஆகவே சத்தியத்தைச் சொல்கிறேன். கேளுங்கள்" என்று கூறிய கடல்வேந்தன் கண்களில் கனவு விரிந்தது கனவுக் கண்களுடன் உதடுகள் உண்மைக் கதையை, தெள்ளென எடுத்துக்காட்ட முற்பட்டன.

கடல்வேந்தன் சிறிதும் உணர்ச்சியற்ற குரலில் அமைதியாக முதலில் பேச்சைத் தொடங்கினான். "நான் பிறந்தது இந்த நாட்டை ஆள. ஆனால் எனது பிறப்புரிமையை மன்னர் எனது ஐந்தாவது வயதில் பறித்தார். பரணர் பாடிய தமிழ்க் கவிதைகளுக்குப் பரிசிலாக என்னைப் பரணருக்குத் தாரை வார்த்துக் கொடுத்தார். சிறுவனான என்னைக் கைப்பிடித்து அழைத்துக்கொண்டு தமது இல்லம் வந்தார் பரணர்; எனக்கு தமிழ் சொல்லிக் கொடுத்தார். இலக்கியம் கற்றேன். ஆனால் முழு நோக்கு அதில் செல்லவில்லை. புலியைப் பசுவாக்கப் பார்த்தார் புலவர். ஆனால் அது பலிக்கவில்லை. ஆகவே தமிழ்ப்பயிற்சியுடன் ஆயுதப் பயிற்சியும் பெற ஏற்பாடு செய்தார். ரத்தத்தில் ருசி கண்ட புலி போல் எனக்கு ஆயுதப் பயிற்சியில் ருசி அதிகமாயிற்று. எனக்கு வாட் பயிற்சியளித்த ஆசிரியரே என் முன்பாக வாளை எடுக்க அஞ்சினார். பிறகு குறுவாள் பயிற்சி, வில்லுதலை அனைத்தும் பயின்றேன். இந்த சேர நாட்டின் பயங்கர ஆயுதமான செண்டாயுதத்திலும் மிகுந்த தேர்ச்சி பெற்றேன். அதற்காக நான்

தமிழை அடியோடு புறக்கணிக்கவில்லை. தமிழ் வகுப்பிலும் உட்காரத் தொடங்கினேன். அதற்குக் காரணம் ஒரு பெண். இப்பொழுது என் முகத்திரையைக் கிழித்தாளே அந்த நிலக்கள்ளி பரணரிடம் தமிழ் படிக்க வந்தாள். அவள் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டாள். அவளுடன் நற்கிள்ளி என்பவனும் பாடம் படிக்க வந்தான். அவன் எனக்கு உற்ற நண்பனானான்.

நாங்கள் மூவரும் தமிழ் படித்த காலத்தில் நண்பர்களானோம். அடிக்கடி நற்கிள்ளியும் நானும் வெளியே போய் விடுவோம். நற்கிள்ளி யவனர் குடியிருப்புக்கு அருகிலிருந்தபடியால் அங்கு அடிக்கடி போய் வந்தோம். அங்குள்ள இரவு நிகழ்ச்சிகள், களியாட்டங்கள் எல்லாமே என்னைக் கவர்ந்தன. ஆனால் நற்கிள்ளி மட்டும் கவிதையில் ஆழ்ந்தான். இப்படி யவனர் சேரியில் பழகிய காலத்தில்தான் அங்குள்ள யவன மந்திரவாதியின் பரிச்சயம் ஏற்பட்டது. சில காலங்களில் யவனர் மாறுவேடங்களைப் போட்டுக்கொண்டு நடனமாடுவார்கள். அந்த நடனத்தில் நானும் பங்குகொள்ள நிச்சயித்தேன். அந்த யவன மந்திரவாதி எனக்குக் கடற்கொள்ளைக்காரன் வேடத்தைப் போட்டுவிட்டான். அன்று என்னை நற்கிள்ளியால் கூட அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. ஆகவே அந்த மாந்திரிகனை அணுகி "நிரந்தரமாக வைத்துக் கொள்ள ஒரு முகமூடி தரமுடியுமா?" என்று கேட்டேன். அப்படிச் செய்வதானால் மனித சருமத்தை இணைத்துத்தான் செய்ய முடியுமென்றும், அதற்கு எனது சருமத்தில் ஒரு பகுதி தேவைப்படும் என்றும் சொன்னான். நான் அதற்கு இணங்கியதன் மேல் என் தொடையில் இருந்து நீளமாக சிறிது சருமம் எடுத்துக்கொண்டான். என்னை, பல்லைக் கடித்துக் கொள்ளும்படி கூறி எனது தொடையை லேசாகக் கீறி சருமம் எடுத்தான். நான் பல்லைக் கடிக்கவுமில்லை, முகத்தைச் சுளிக்கவுமில்லை. அதைக் கண்ட அவன் எனது நெஞ்சுரத்தைப் பாராட்டினான்.

பிறகு சருமம் முகமூடி செய்து அவன் கையாலேயே அதைப் பொருத்தினான். அத்துடன் வேறு சருமத்தையும் தலைப் பகுதியில் இணைத்துச் செந்நிறக் குழலையும் அதில் பதித்தான்.

முதலில் என் முகத்தைக் கண்ணாடியில் பார்த்ததும் எனக்கே யாரென்று புரியவில்லை. கருமை நிறைந்த வடுக்கள் உள்ள பயங்கர முகம் கொள்ளைக்காரன் முகமாகவே தோன்றிற்று. பிறகு அதை அகற்றும் முறையையும் அவனிடம் தெரிந்து கொண்டேன். என் சிந்தனை முடிற்று. எனது அரசு உரிமையைப் பறித்த எனது தந்தையைப் பழி வாங்கினாலென்ன என்ற எண்ணம் வளர்ந்தது.

பிறகு நான் அடிக்கடி யவனர்களிடம் பழகினேன். அவர்கள் மரக்கலங்கள் வந்தபோதெல்லாம் அவற்றிலும் பயிற்சி பெற்றேன்! அவர்கள் மரக்கலங்களில் சென்று போரிலும் ஈடுபட்டு அரபிக் கடலில் வந்த கொள்ளைக்காரர்களைத் தாக்கினேன். அந்தக் கப்பல்களில் ஒன்றை எனது கப்பலாகவும் மாற்றிக் கொண்டேன். நற்கிள்ளியும், கிளேஸியஸும் என்னுடன் சேர்ந்து கொண்டார்கள். என் தலைமை அலுவலகத்தைத் துறைமுகப் பகுதியில் ஏற்படுத்தி அதற்கு வில்லம்பு இலச்சினை இல்லம் என்று பெயர் சூட்டினேன். அதன் மகிமை வளர்ந்தது. எனது கொள்ளைக்காரர்களின் உதவியால் அரசர் பொக்கிஷ வண்டிகளைக் கொள்ளையிட்டேன். என்னை அடக்கவும், பிடிக்கவும் முயன்றார் அழும்பில்வேள். முடியாததால் திணறினார். நான் மரக்கலங்களைக் கொள்ளையடித்தேன். பொக்கிஷ வண்டிகளைக் கொள்ளையடித்தேன். ஆனால் அமைச்சர் மகள் நிலக்கள்ளி என் மனத்தைக் கொள்ளையடித்தாள். அமைச்சர் மாளிகையில் அவர் கண்முன்பே நிலக்கள்ளியைத் தூக்கிச் சென்று என் கொள்ளைத் திறமையைக் காட்டினேன்...." இங்கு சிறிது நிதானித்தான் கடல்வேந்தன்.

"பிறகு ஏன் மாறினாய்?" என்று அரசர் கேட்டார்.

"தமிழ் ரத்தம் என் உடலில் ஓடும் காரணத்தால்" என்ற கடல் வேந்தன், மேலும் மௌனம் சாதித்தான். சில விநாடிகளுக்குப் பிறகு தானாகவே பேசினான். "இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒருவன் யவன நாட்டிலிருந்து வந்தான். அவனும் கிளேஸியஸும் தனிமையில் பேசியதைத் தற்செயலாகக் கேட்டான். அவன் கிளேஸியஸைப் புரட்சிக்குத் தூண்டினான், கிளேஸியஸ் யவன ராஜகுலமென்று சொல்லி அவனிடமிருந்த சீலை அடையாளத்தையும் காட்டினான். முசிறியில் யவனர் கால் ஊன்றி விட்டால் மற்ற பகுதிகளை ஆக்ரமிப்பது கஷ்டமல்ல என்று யோசனை சொன்னான். முதலில் கிளேஸியஸ் ஒப்பவில்லை. ஆனால் அவன் சொன்னான். "உனக்கு இங்குள்ள அக்கம்பக்க சிற்றரசர்களிடமிருந்து உதவி கிடைக்கும். இந்த பாரதத்தினர் சுயலாபத்துக்காக ஒருவரையொருவர் காட்டிக் கொடுக்கவோ எதிர்க்கவோ தயங்கமாட்டார்கள்" என்று.

கிளேஸியஸ் அன்றிலிருந்து மாற முற்பட்டான். சேர நாட்டில் வணிகர்களாக வந்த ஓர் இனம் சேர நாட்டை விழுங்கப் பார்க்க நினைக்கும் போது நானும் மாறினேன். சேர நாட்டை எப்படியும் யவனர்களிடமிருந்து காப்பது என்று உறுதி செய்துகொண்டேன். அந்த உறுதியுடன் என் மரக்கலத்தைப் போருக்கு சகலவசதிகளையும் உடையதாகச் செய்தேன். அதற்கு இணையான போர்க்கலம் இப்பொழுது மேலைக்கடலில் எங்குமே கிடையாது. அதை இப்பொழுது நடந்த போரே நிரூபித்திருக்கிறது. புரட்சியைப் பற்றி அறிந்த பின்பு மன்னரைச் சந்தித்து விஷயத்தை விளக்கவும் எண்ணினேன். ஆகவே அமைச்சர் வஞ்சி சென்றபோது நானும் சென்றேன். அதை அடைந்த இரவில் மன்னரைச் சந்தித்து எனது உண்மை சொரூபத்தைக் காட்டினேன். நடக்கப் போகும் புரட்சியையும் குறிப்பிட்டு என்னைக் கடற்படைத் தலைவனாக்கினால் யவனரை முறியடித்து விடுவதாகக் கூறினேன். மன்னர் பெரிதும் சிந்தித்தார். முடிவில் இசைந்து சொன்னார்.

'குட்டுவா! உன்னைக் கடற்படைத் தலைவனாக நியமிக்கிறேன். ஆனால் நீ முரணாக நடந்து கொண்டால் நீ என் மகனென்றும் பாராது மரண தண்டனை விதிக்கத் தவறமாட்டேன்' என்று. பிறகு நடந்தது எல்லாருக்கும் தெரியும். தொண்டியிலிருந்து சில கப்பல்களை என்னுடன் இணைத்துக் கொண்டேன். யவனர்களுடன் பழகி அவர்கள் புரட்சி தொடங்கும் நாளையும் நேரத்தையும் உணர்ந்தேன். அதைப் பற்றிப் புலவர் மூலம் தொண்டியிலிருக்கையிலேயே மன்னருக்கு ஓலை அனுப்பினேன்.

கிளேஸியஸ் திட்டப்படி புரட்சியை நடத்தினான். யூசப்பையும் சேர்த்துக்கொண்டான். சுள்ளியாற்றுக்கு அக்கரையிலிருந்தும் இக்கரையிலும் முசிறியைத் தாக்கிப் பிடிக்கத் தீர்மானித்தான். வாணிபத்துக்காக வந்த யவனர் மரக்கலங்களையும் புரட்சிக்காக நிறுத்திக் கொண்டான்.

நானும் சித்தமானேன். எனது யோசனைப்படி படைகளைக் குறைப்பது போல் சாதாரண மக்களை வெளியேற்றினோம். முசிறியிலிருந்தும். வஞ்சிப்பாதை பாசறையிலிருந்தும், அந்த இடத்தை சாதாரண மக்கள் உடையிலிருந்த மன்னரின் சூறாவளிப்படை நிரப்பியது. இது தெரியாமல் இயங்கிய யவனர், நிலத்தில் நற்கள்ளியால் முறியடிக்கப்பட்டனர். கடலில் நிலக்கள்ளி முறியடித்தாள். யவனர் மரக்கலங்களையும் துணை மரக்கலங்களையும், அவ்விருவரும் சேரநாட்டுக்குச் செய்திருக்கும் சேவை மகத்தானது. கடற்பிறகோட்டிய செங்குட்டுவருக்கு இந்த இருவரும் இரண்டு மகத்தான துணைக் கரங்கள். இப்படிச் சொல்லித் தனது கதையை முடித்தான் கடல் வேந்தன் எனும் குட்டுவன் சேரல்.

நீண்டநேரம் அந்தக் கூட்டத்தில் பெரும் மௌனம் நிலவியது. யாரும் பேச அஞ்சினார்கள். மன்னனே இறுதியில் பேசினான். "கிளேஸியஸ்! நீ சேரநாட்டுக்குப் புரிந்தது பெரும் துரோகம். உன்னை வெட்டுப்பாறைக்கு

அனுப்புவதுதான் நீதி. ஆனால் உன்னைக் காப்பதாக உன் தாய்க்கு வாக்குக் கொடுத்தேன். ஆகையால் உன்னை நாடு கடத்துகிறேன். நாளைக்கு மறுநாள் சேரநாட்டு எல்லையில் உன்னைக் கண்டால் உன்னை எனது படையினர் அழிக்கத் தயங்கமாட்டார்கள். இப்பொழுது முசிறி துறைமுகத்திலிருக்கும் யவனர் கப்பலில் உன் தாயகம் சென்றுவிடு'' என்று கிளேஸியஸை நோக்கிக் கூறிவிட்டு மன்னன் கடல்வேந்தனை நோக்கினான் ''குட்டுவன் சேரல்! இளவரசனாக முடிசூடவேண்டிய நீ இந்த நாட்டைக் கொள்ளையடித்தாய். அதற்கு மரண தண்டனை விதிக்க வேண்டும். அமைச்சர் பெண்ணை-இந்த நிலக்கள்ளியை, மாளிகையிலிருந்து அவர்கள் முன்பாகக் கடத்திச் சென்றிருக்கிறாய். அதற்குப் பல ஆண்டு சிறை வாசம் உண்டு. ஆனால் இந்த நாட்டைப் புரட்சியிலிருந்து காத்திருக்கிறாய். அதை முன்னிட்டு உன் தண்டனையைக் குறைக்கிறேன். நீயும் கிளேஸியஸைப் போல் நாடு கடத்தப்படுகிறாய்.'' இப்படி தண்டனை விதித்து விசாரணை முடிந்து விட்டதற்கறிகுறியாக எழுந்து நின்றான்.

அப்பொழுது பரணரும் எழுந்தார். ''மன்னா! ஒரு வேண்டுகோள்'' என்றார்.

எழுந்த மன்னன் நின்றான். ''என்ன பரணரே?'' என்று வினவினான்.

''இந்தக் குட்டுவன் சேரல் உனக்கு ஒரே மகன். இவனை நாடு கடத்தினால் சேர நாட்டு ஆட்சியில் கிளை மாறும். உன் தாயத்தாருக்குப் போய்ச் சேரும்'' என்றார். அவர் குரலில் எச்சரிக்கை இருந்தது.

''பரணரே! தாயத்தானும் சேரன்தானே? கிளை மாறட்டும். அதற்காக சேரன் நீதி மாறாது'' என்று கூறினான் செங்குட்டுவன்.

இங்கு கடல்வேந்தன் இடை புகுந்து ''நான் சுதந்தரப் பிறா. என்னை அரசுக் கூட்டுக்குள் அடைக்க முடியாது. முதலில் உங்களுக்குச் செய்யப்பட்ட தானத்தை மன்னர் திரும்பிப் பெறவும் முடியாது. யவனரை கடற்பிறகோட்டலாம் மன்னர். சத்தியத்தைப் பிறகோட்ட முடியாது. நான் அரசாள விரும்பவில்லை'' என்றான் திடமான குரலில்.

நான்கு நாள்களுக்குப் பிறகு கடல்வேந்தன் மரக்கலம் கடலில் பாய் விரித்து ஓடிக்கொண்டிருந்தது. அதன், தலைவன் அறையில் பஞ்சணையில் நிலக்கள்ளி படுத்துக் கிடந்தாள். குட்டுவன் சேரலாக மாறிய கடல்வேந்தன் அவளை வாரித் தூக்க முயன்றான். ''விடுங்கள்'' என்று அவள் பிணங்கினாள். திமிறினாள். அந்தத் திமிறலில் அவள் மார்புக் கச்சை கிழிந்தது. பெரிதாக நகைத்தான், சேர நாட்டு இளவல்.

''இன்னும் கொள்ளைக்காரன் புத்தி போகவில்லை'' என்றாள் நிலக்கள்ளி. சொன்னாளே தவிர, அவன் தூக்கிக் கொள்ள இரு கைகளையும் தூக்கி நீட்டினாள். அவளைத் தூக்கிக் கொண்ட குட்டுவன் சேரல் கிழிந்த கச்சையால வெளேரெனத் தொடங்கி விம்மிய அவள் மார்பு எழில் களைப் பார்த்தான். அவள் உணர்ச்சியால் தெளிந்தாள். அவன் கையொன்று அவள் ஆடையை நெகிழ்த்த இடையை நாடியது, ''வேண்டாம் வேண்டாம்'' என்றாள் நிலக்கள்ளி.

''நீ மட்டும் என் முகத்திரையைக் கிழிக்கலாமோ?'' என்று அவன் தன் அலுவலை நிறுத்தவில்லை.

''நாடாள வேண்டியவன் பெண்டாள முற்படுவது கேவலம்'' என்று முனகினாள் நிலக்கள்ளி.

''நாடு கிடைக்கவில்லை; பெண்கிடைத்தாள்'' என்றான் கடல்வேந்தன். ஆட்சி தொடங்கியது, கடல்வேந்தன் காமத்திலும் வேந்தன் என்பதை நிலக்கள்ளி புரிந்து கொண்டாள்.

வெளியே நீலக்கடல் விரிந்து கிடந்தது. நற்கிள்ளி மாலுமிகளை எச்சரித்துக் கொண்டிருந்தாள். அவன் கூச்சலைக் காதில் வாங்கிய நிலக்கள்ளி கேட்டாள், "ஆமாம். நீங்கள்தான் நாடு கடத்தப்பட்டீர்கள். நற்கிள்ளி ஏன் வந்தான் நம்முடன்?" என்று.

"நீ ஏன் வந்தாய்?" என்று கடல்வேந்தன் கேட்டான்....

"நான் ...நான்... உங்கள்..." வாசகத்தை முடிக்கவில்லை நிலக்கள்ளி.

"அவனும் உன்னைப் போலத்தான். என்னைவிட்டுப் பிரிந்திருக்க முடியாது அவனால்...." என்ற கடல்வேந்தன் மேலும் ஏதோ பேச முயன்ற அவள் வாயைப் பொத்தினான்.

"நிலக்கள்ளி! கடலில் ஊறிய மீன் நிலத்தில் பிழைக்காது. என்னைப் போலத்தான் அவனும்" என்றான் கடல் வேந்தன்.

பிறகு அவன் பேசவில்லை. வாய்ச் சொல் யாதும் பயனில்லாததால், சொல் நின்றது, செயல் தொடர்ந்தது

முற்றும்

0